சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்
முதற் காண்டம் (பன்னிரண்டாம் திருமுறை)
சருக்கம் 1 (திருமலைச் சருக்கம்) &
2 (தில்லை வாழ் அந்தணர் சருக்கம்)

periya purANam of cEkkizAr
Canto 1, Carukkam -1 & 2
In tamil script, TSCII format

Acknowledgements:

Our Sincere thanks go to Dr. Thomas Malten and Colleagues of the Univ. of Koeln, Germany for providing us with the transliterated/romanized version of the etext and giving us permission to release the TSCII version as part of Project Madurai etext collections.
TSCII proof reading by **tiruciRRampalam aRakaTTaLai, Kovilpatti, Tamilnadu.**
Preparation of HTML and PDF versions: **Dr. K. Kalyanasundaram** Lausanne, Switzerland.
This webpage presents the Etext in Tamil script but in Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:
i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages (Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil font chosen as the default font for the UTF-8 char-set/encoding view.
. In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

ன Project Madurai 1999 - 2004
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the

website

http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்
முதற் காண்டம்

உள்ளுறை

1. திருமலைச் சருக்கம்

1.00	பாயிரம்	(1-10)	மின்பதிப்பு
1.01	திருமலைச் சிறப்பு	(11-50)	மின்பதிப்பு
1.02	திரு நாட்டுச் சிறப்பு	(51-85)	மின்பதிப்பு
1.03	திருநகரச் சிறப்பு	(86-135)	மின்பதிப்பு
1.04	திருக்கூட்டச் சிறப்பு	(136-146)	மின்பதிப்பு
1.05	தடுத்தாட்கொண்ட புராணம்	(147-349)	மின்பதிப்பு

2. தில்லை வாழ் அந்தணர் சருக்கம்

2.01	தில்லை வாழ் அந்தணர் புராணம்	(350-359)	மின்பதிப்பு
2.02	திருநீலகண்ட நாயனார் புராணம்	(360-403)	மின்பதிப்பு
2.03	இயற்பகை நாயனார் புராணம்	(404-439)	மின்பதிப்பு
2.04	இளையான் குடி மாற நாயனார் புராணம்	(440 -466)	மின்பதிப்பு
2.05	மெய்ப் பொருள் நாயனார் புராணம்	(467-494)	மின்பதிப்பு
2.06	விறன்மிண்ட நாயனார் புராணம்	(495 - 505)	மின்பதிப்பு
2.07	அமர் நீதி நாயனார் புராணம்	(506-550)	மின்பதிப்பு

1.00 பாயிரம்

001 உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்;
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்; 1.0.1

மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

002 ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்;
தேன் அடைந்த மலர்ப் பொழில் தில்லையுள்
மா நடஞ் செய் வரதர் பொற்றாள் தொழ. 1.0.2

003 எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக் களிற்றைக் கருத்துள் இருத்து வாம். 1.0.3

004 மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்
துதி செயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதி நலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதி முறை உலகினில் விளங்கி வெல்கவே. 1.0.4

005 அளவிலாத பெருமையராகிய
அளவிலா அடியார் புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பது அரிது ஆயினும்
அளவிலாசை துரைப்ப அறைகுவேன். 1.0.5

006 தெரிவரும் பெருமைத் திருத் தொண்டர் தம்
பொருவரும் சீர் புகலலுற்றேன் முற்றப்
பெருகு தெண் கடல் ஊற்றுண் பெரு நசை
ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன். 1.0.6

007 செப்பலுற்ற பொருளின் சிறப்பினால்
அப் பொருட்கு உரை யாவரும் கொள்வர் ஆல்
இப் பொருட்கு என் உரை சிறிது ஆயினும்
மெய்ப் பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால். 1.0.7

008 மேய இவ் உரை கொண்டு விரும்புமாம்
சேயவன் திருப் பேர் அம்பலம் செய்ய
தூய பொன்னணி சோழன் நீடூழிபார்
ஆய சீர் அநபாயன் அரசவை. 1.0.8

009 அருளின் நீர்மைத் திருத் தொண்டறிவரும்
தெருளில் நீரிது செப்புதற்காம் எனின்
வெருளில் மெய் மொழி வான் நிழல் கூறிய
பொருளின் ஆகும் எனப் புகல்வாம் அன்றே. 1.0.9

010 இங்கிதன் நாமம் கூறின் இவ் உலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புற இருள் போக்கு கின்ற
செங் கதிரவன் போல் நீக்கும் திருத் தொண்டர் 1.0.10

புராணம் என்பாம்.

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

1. திருமலைச் சருக்கம்

1. 1 திருமலைச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

011 பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும்
மன்னிவாழ் கயிலைத் திரு மாமலை. 1.1.1

012 அண்ணல் வீற்றிருக்கப் பெற்றதாதலின்
நண்ணும் மூன்று உலகுந் நான்மறைகளும்
எண்ணில் மாதவம் செய்ய வந்தெய்திய
புண்ணியந் திரண்டு உள்ளது போல்வது. 1.1.2

013 நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளிர் ஆக எழுந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை. 1.1.3

014 மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் காரெதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில் சீர்
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கெலாம். 1.1.4

015 பனி விசும்பில் அமரர் பணிந்துசூழ்
அனித கோடி அணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்னரி மாலையும்
முனிவர் அஞ்சலி மாலையும் முன்னெனலாம். 1.1.5

016 நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின்
நாடும் ஐம் பெரும் பூதமும் நாட்டுவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம். 1.1.6

017 நாயகன் கழல் சேவிக்க நான்முகன்
மேய காலம் அலாமையின் மீண்டவன்
தூயமால்வரைச் சோதியில் மூழ்கியொன்று
ஆய அன்னமும் காணா தயர்க்குமால். 1.1.7

018 காதில் வெண்குழையோன் கழல் தொழ
நெடியோன் காலம் பார்த்திருந்தும் அறியான்
சோதி வெண் கயிலைத் தாழ்வரை முழையில்
துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செஞ் சுடர் இன்று
வெண்சுடர் ஆனது என்றதன் கீழ்
ஆதி ஏனமதாய் இடக்கலுற்றான்
என்றதனை வந்தணைதரும் கலுழன். 1.1.8

019 அரம்பையர் ஆடல் முழவுடன்
மருங்கில் அருவிகள் எதிர் எதிர் முழங்க
வரம் பெறு காதல் மனத்துடன் தெய்வ
மது மலர் இருகையும் ஏந்தி
நிரந்தரம் மிடைந்த விமான சோபான
நீடுயர் வழியினால் ஏறிப்
புரந்தரன் முதலாங் கடவுளர் போற்றப்
பொலிவதத் திருமலைப் புறம்பு. 1.1.9

020 வேத நான்முகன் மால் புரந்தரன் முதலாம்
விண்ணவர் எண்ணிலார் மற்றும்
காதலால் மிடைந்த முதல் பெருந்த் தடையாம் கதிர்
மணிக் கோபுரத்துள்ளார்
பூத வேதாளப் பெரும் கண நாதர் போற்றிடப்
பொதுவில் நின்று ஆடும்
நாதனார் ஆதி தேவனார் கோயில் நாயகன் நந்தி
எம்பெருமான். 1.1.10

022 நெற்றியின் கண்ணர் நாற் பெருந்தோளர் நீறணி
மேனியர் அநேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார் பிஞ்ஞகன்
தன் அருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலக்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான். 1.1.11

022 கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில் கதிரிளம்
பிறைநறுங் கண்ணி
ஐயர் வீற்றிருக்கும் தன்மையினாலும் அளப்பரும்
பெருமையினாலும்
மெய்யொளி தழைக்கும் தூய்மையினாலும் வென்றி
வெண்குடை அநபாயன்
செய்யகோல் அபயன் திருமனத்தோங்கும் 1.1.12

திருக்கயிலாய நீள்சிலம்பு.

023 அன்ன தன்திருத் தாழ்வரையின் இடத்து
இன்ன தன்மையன் என்றறியாச் சிவன்
தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான்
உன்னாரும் சீர் உபமன் னிய முனி. 1.1.13

024 யாதவன் துவரைக்கிறை யாகிய
மாதவன் முடிமேல் அடி வைத்தவன்
பூதநாதன் பொருவருந் தொண்டினுக்கு
ஆதி அந்தம் இலாமை அடைந்தவன். 1.1.14

025 அத்தர் தந்த அருட் பாற்கடல் உண்டு
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்
பத்தராய முனிவர் பல்லாயிரவர்
சுத்த யோகிகள் சூழ இருந்துழி. 1.1.15

026 அங்கண் ஓரொளி ஆயிர ஞாயிறு
பொங்கு பேரொளி போன்று முன் தோன்றிடத்
துங்க மாதவர் சூழ்ந்திருந்தாரெலாம்
இங்கி தென்கொல் அதிசயம் என்றலும். 1.1.16

027 அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்
சிந்தியா உணர்ந்தம் முனி தென் திசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்தொண்டன்
எந்தையார் அருளால் அணைவான் என. 1.1.17

028 கைகள் கூப்பித் தொழுதெழுந்து அத் திசை
மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர். 1.1.18

029 "சம்புவின் அடித் தாமரைப் போதலால்
எம்பிரான் இறைஞ்சாயிஃதென்" எனத்
"தம்பிரானைத் தன் உள்ளம் தழீயவன்
நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்". 1.1.19

030 என்றுகூற இறைஞ்சி இயம்புவார்
வென்ற பேரொளியார் செய் விழுத்தவம்
நன்று கேட்க விரும்பும் நசையினோம்
இன்றெமக்குரை செய்து அருள் என்றலும். 1.1.20

031 உள்ள வண்ணம் முனிவன் உரைசெய்வான்
" வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருளாகிய
வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும்
அள்ளும் நீறும் எடுத்தணை வானுளன். 1.1.21

032 அன்னவன் பெயர் ஆலால சுந்தரன்
முன்னம் ஆங்கு ஒருநாள் முதல்வன் தனக்கு
இன்ன ஆமெனும் நாண்மலர் கொய்திடத்
துன்னினான் நந்தவனச் சூழலில். 1.1.22

033 அங்கு முன்னரே ஆளுடை நாயகி
கொங்கு சேர் குழற்காம் மலர் கொய்திடத்
திங்கள் வாள்முகச் சேடியர் எய்தினார்
பொங்கு கின்ற கவினுடைப் பூவைமார். 1.1.23

034 அந்தமில் சீர் அனிந்திதை ஆய்குழல்
கந்த மாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் ஈசர் அருள் என. 1.1.24

035 மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீது இலாத் திருத் தொண்டத் தொகை தரப்
போதுவார் அவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார். 1.1.25

036 முன்னம் ஆங்கவன் மொய்ம்முகை நாண்மலர்
என்னை ஆட்கொண்ட ஈசனுக்கேய்வன
பன் மலர் கொய்து செல்லப் பனிமலர்
அன்னம் அன்னவருங் கொண்டகன்ற பின். 1.1.26

037 ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே
' மாதர் மேல் மனம் வைத்தனை தென்புவி
மீது தோன்றி அம் மெல்லியலார் உடன்
காதல் இன்பம் கலந்து அணைவாய்' என. 1.1.27

038 கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்
'செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையல் மானுடமாய் மயங்கும் வழி
ஐயனே தடுத்தாண்டருள் செய்' என. 1.1.28

039 அங்கணாளன் அதற்கருள் செய்த பின்
நங்கை மாருடன் நம்பிமற்றத் திசை
தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாறுமென்று
அங்கவன் செயல் எல்லாம் அறைந்தனன். 1.1.29

040 அந்தணாளரும் ஆங்கது கேட்டவர்
"பந்த மானிடப் பாற்படு தென்திசை
இந்த வான்திசை எட்டினும் மேற்பட
வந்த புண்ணியம் யாதெ"ன மாதவன். 1.1.30

041 "பொருவருந் தவத்தான் புலிக் காலனாம்
அரு முனி எந்தை அர்ச்சித்தும் உள்ளது 1.1.31

பெருமை சேர்பெரும் பற்றப்புலியூர் என்று
ஒருமையாளர் வைப்பாம் பதி ஓங்குமால்.

042 அத் திருப்பதியில் நமை ஆளுடை
மெய்த் தவக்கொடி காண விருப்புடன்
அத்தன் நீடிய அம்பலத்தாடும் மற்று
இத் திறம் பெறலாம் திசை எத்திசை.. 1.1.32

043 பூதம் யாவையின் உள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதல் மங்கை இதய கமலமாம்
மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால். 1.133

044 எம்பிராட்டி இவ்வேழுலகு ஈன்றவள்
தம்பிரானைத் தனித் தவத்தால் எய்திக்
கம்பை ஆற்றில் வழிபடு காஞ்சி என்று
உம்பர் போற்றும் பதியும் உடையது. 1.1.34

045 நங்கள் நாதனாம் நந்தி தவஞ்செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனல்மலர்
செங்கை யாளர் ஐயாறும் திகழ்வது. 1.1.35

046 தேசம் எல்லாம் விளக்கிய தென் திசை
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்
பூசனைக்குப் பொருந்தும் இடம் பல
பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை". 1.1.36

047 என்று மாமுனி வன்தொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
இன்று என் ஆதரவால் இங்கியம்புகேன். 1.1.37

048 மற்றிதற்குப் பதிகம் வன்தொண்டர் தாம்
புற்று இடத்து எம்புராணர் அருளினால்
சொற்ற மெய்த் திருத்தொண்டத்தொகை எனப்
பெற்ற நற்பதிகம் தொழப் பெற்றதாம். 1.1.38

049 அந்த மெய்ப் பதிகத்து அடியார்களை
நம்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம். 1.1.39

050 உலகம் உய்யவும் சைவம் நின்று ஓங்கவும்
அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம். 1.1.40

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

1.2 திருநாட்டுச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

051 பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர் புலிச் சோழர் காவிரி
நாட்டியல்பதனை யான் நவிலல் உற்றனன். 1.2.1

052 ஆதி மாதவமுனி அகத்தியன் தரு
பூத நீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர் மண் மடந்தை பொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால். 1.2.2

053 சையமால் வரை பயில் தலைமை சான்றது
செய்ய பூ மகட்கு நற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டும் நீரது. 1.2.3

054 மாலின் உந்திச்சுழி மலர் தன் மேல் வரும்
சால்பினால் பல்லுயிர் தரும் தன் மாண்பினால்
கோல நற்குண்டிகை தாங்குங் கொள்கையால்
போலும் நான்முகனையும் பொன்னி மாநதி. 1.2.41

055 திங்கள் சூடிய முடிச் சிகரத்து உச்சியில்
பொங்கு வெண் தலை நுரை பொருது போதலால்
எங்கள் நாயகன் முடிமிசை நின்றேயிழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்ததே. 1.2.5

056 வண்ண நீள் வரை தர வந்த மேன்மையால்
எண்ணில் பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல் பாகத்தை ஆளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது. 1.2.6

057 வம்புலா மலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து
எம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம் பொன்னி
உம்பர் நாயகர்க்கன்பரும் ஒக்குமால். 1.2.7

058 வாசநீர் குடை மங்கையர் கொங்கையில்
பூசும் குங்குமமும் புனை சாந்தமும்
வீசு தெண்டிரை மீதிழந்தோடும் நீர்
தேசுடைத் தெனினும் தெளிவில்லதே. 1.2.8

059 மாவிரைத் தெழுந்து ஆர்ப்ப வரை தரு
பூ விரித்த புதுமதுப் பொங்கிட
வாவியிற் பொலி நாடு வளம்தரக்
காவிரிப் புனல் கால்பரந்து ஓங்குமால். 1.2.9

060 ஒண் துறைத் தலை மாமத கூடு போய்
மண்டு நீர்வயலுட்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத் தகை ஓசைபோய்
அண்டர் வானத்தின் அப்புறஞ் சாருமால். 1.2.10

061 மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதையார் செய் உழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்ததே. 1.2.11

062 உழுத சால்மிக வூறித் தெளிந்த சேறு
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம். 1.2.12

063 மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின்
சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் களைகளையுங்
கடைசியர்கள்
தண்டரளஞ் சொரிபணிலம் இடறியிடை
தளர்ந்தசைவார்
வண்டலையும் குழல்அலைய மடநடையின்
வரம்பணைவார். 1.2.13

064 செங்குவளை பறித்தணிவார் கருங்குழல்மேல் சிறை
வண்டை
அங்கை மலர்களைக் கொடுகைத்தயல் வண்டும்
வரவழைப்பார்
திங்கள்நுதல் வெயர்வரும்பச் சிறுமுறுவல்
தளவரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய்
மடுத்தயர்வார். 1.2.14

065 கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்னச்
கரும்பல்லி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்
அரும்பல்ல முலையென்ன அமுதல்ல
மொழியென்ன
வரும்பல்லாயிரம் கடைசி மடந்தையர்கள்
வயல்எல்லாம். 1.2.15

066 கயல்பாய் பைந்தட நந்தூன் கழிந்த கருங்குழிசி
வியல்வாய் வெள்வளைத் தரள மலர்வேரி
உலைப்பெய்தங்
கயலாமை அடுப்பேற்றி அரக்காம்பல் நெருப்பூதும்
வயல்மாதர் சிறுமகளிர் விளையாட்டு
வரம்பெல்லாம். 1.2.16

067 காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம்
குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம்
நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம்
கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனை ஒவ்வா நலமெல்லாம். 1.2.17

068 ஆலை பாய்பவர் ஆர்ப்புறும் ஓலமும்
சோலை வாய்வண்டு இரைத்தெழு சும்மையும்
ஞாலம் ஓங்கிய நான்மறை ஓதையும்
வேலை ஓசையின் மிக்கு விரவுமால். 1.2.18

069 அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதிபடியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின் மேற்பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால். 1.2.19

070 காவினிற் பயிலுங்களி வண்டினம்
வாவியிற் படிந்து உண்ணும் மலர் மது
மேவி அத்தடம் மீதெழப் பாய்கயல்
தாவி அப்பொழிலிற் கனி சாடுமால் 1.2.20

071 சாலிநீள் வயலின் ஓங்கித் தந்நிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினாம்
வளத்தவாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு சுருல் விரித்தானுக்
கன்பர்
ஆலின சிந்தை போல அலர்ந்தன கதிர்களெல்லாம். 1.2.21

072 பத்தியின் பாலர் ஆகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமிற் கூடினார்கள் தலையினால் வணங்கு
மாபோல்
மொய்த்தநீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி
மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலியெல்லாம். 1.2.22

073 அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல்
சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப் பெரும் பொருப்பு
யாப்பர்
விரிமலர் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார். 1.2.23

074 சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்கும் கரும்பெரும் பாண்டில்
ஈட்டம்
ஆலிய முகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்
மேல் வலங் கொண்டு சூழுங் காட்சியின் மிக்கதன்றே. 1.2.24

075 வைதெரிந் தகற்றி ஆற்றி மழைப் பெயல் மானத்
தூற்றிச்
செய்ய பொற் குன்றும் வேறு நவமனிச் சிலம்பும்
என்னக்
கைவினை மள்ளர் வானம் கரக்கவாக்கிய நெல்
குன்றால்
மொய்வரை உலகம் போலும் முளரிநீர் மருத வைப்பு. 1.2.25

076 அரசுகொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண்டறங்கள்
பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும்
பண்பின்
விரவிய கிளையும் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம்நீடி மல்ர்ந்துள பதிகள் எங்கும். 1.2.26

077 கரும்படு களமர் ஆலைக் கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட தூபமோ யூப வேள்விப்
பெரும் பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ
வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ மாடமும் காவும் எங்கும். 1.2.27

078 நாளிகேரஞ் செருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளி சாலந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீலிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம்
எங்கும். 1.2.28

079 சூத பாடலங்கள் எங்கும் சூழ் வழை ஞாழல் எங்கும்
சாதி மாலதிகள் எங்கும் தண்தளிர் நறவம் எங்கும்
மாதவி சரளம் எங்கும் வகுள சண்பகங்கள் எங்கும்
போதவிழ் கைதை எங்கும் பூக புன்னாகம் எங்கும். 1.2.29

080 மங்கல வினைகள் எங்கும் மணஞ் செய் கம்பலைகள் எங்கும்
பங்கய வதனம் எங்கும் பண்களின் மழலை எங்கும்
பொங்கொளிக் கலன்கள் எங்கும் புது மலர்ப் பந்தர் எங்கும்
செங்கயல் பழனம் எங்கும் திருமகள் உறையுள் எங்கும். 1.2.30

081 மேகமும் களிறும் எங்கும் வேதமும் கிடையும் எங்கும்
யாகமும் சடங்கும் எங்கும் இன்பமும் மகிழ்வும் எங்கும்
யோகமும் தவமும் எங்கும் ஊசலும் மறுகும் எங்கும்
போகமும் பொலிவும் எங்கும் புண்ணிய முனிவர் எங்கும். 1.2.31

082 பண்தரு விபஞ்சி எங்கும் பாத செம்பஞ்சி எங்கும்
வண்டறை குழல்கள் எங்கும் வளர் இசைக் குழல்கள் எங்கும்
தொண்டர் தம் இருக்கை எங்கும் சொல்லுவ திருக்கை எங்கும்
தண்டலை பலவும் எங்கும் தாதகி பலவும் எங்கும். 1.2.32

083 மாடு போதகங்கள் எங்கும் வண்டு போதகங்கள் எங்கும்
பாடும் அம்மனைகள் எங்கும் பயிலும் அம்மனைகள் எங்கும்
நீடு கேதனங்கள் எங்கும் நிதி நிகேதனங்கள் எங்கும்
தோடு சூழ் மாலை எங்கும் துணைவர் சூழ் மாலை எங்கும். 1.2.33

084 வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா தனயரும் மனையில் தப்பா
நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப் புள்ளு மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத் தாம் அஞ்சும் 1.2.34

085 நற்றமிழ் வரைப்பின் ஓங்கு நாம்புகழ் திருநாடு என்றும்
பொற் தடந் தோளால் வையம் பொதுக் கடிந்து இனிது காக்கும்
கொற்றவன் அநபாயன் பொற் குடை நிழல் 1.2.35

குளிர்வதென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்பலாமோ.

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

1.3 திருநகரச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

086 சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமலராள் வழி பட்டது
வன்னியாறு மதி பொதி செஞ் சடைச்
சென்னியார் திருவாரூர்த் திருநகர். 1.3.1

087 வேத ஓசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் பாடல் மணி முழவோசையும்
கீத ஓசையும் மாய்க் கிளர்உற்றவே. 1.3.2

088 பல்லியங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை ஒலியுடன் மாவொலி
எல்லை இன்றி எழுந்துள எங்கணும். 1.3.3

089 மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாளர நீடரங்கு எங்கெணும்
ஆடல் மாதர் அணி சிலம் பார்ப்பன . 1.3.4

090 அங்குரைக்கென்ன அளவப் பதியிலார்
தங்கள் மாளிகையின் ஒன்று சம்புவின்
பங்கினாள் திருச் சேடி பரவையாம்
மங்கையார் அவதாரஞ் செய் மாளிகை. 1.3.5

091 படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிதான்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூது போய்
நடந்த செந்தாமரை அடி நாறுமால். 1.3.6

092 செங்கண் மாதர் தெருவில் தெளித்த செங்
குங்குமத்தின் குழம்பை அவர் குழல்
பொங்கு கோதையிற் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி அளறு புலர்த்துமால். 1.3.7

093 உள்ளம் ஆர் உருகாதவர் ஊர் விடை
வள்ளலார் திருவாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதிகங்கள் பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். 1.3.8

094 விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலியால் துன்னு பண்டங்கள்
வளத் தொடும் பலவாறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள். 1.3.9

095 ஆரணங்களே அல்ல மறுகிடை
வாரணங்களும் மாறி முழங்குமால்
சீரணங்கிய தேவர்களே அலால்
தோரணங்களில் தாமமும் சூழுமால். 1.3.10

096 தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வேறு இடத்தத் தொல் நகர். 1.3.11

097 நில மகட்கு அழகார் திரு நீள் நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர் மகட்கு வண்தாமரை போல்மலர்ந்(து)
அலகில் சீர்த்திருவாரூர் விளங்குமால். 1.3.12

098 அன்ன தொல் நகருக்கு அரசு ஆயினான்
துன்னு செங் கதிரோன் வழித் தோன்றினான்
மன்னு சீர் அநபாயன் வழி முதல்
மின்னும் மாமணிப் பூண்மனு வேந்தனே. 1.3.13

099 மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கு எல்லாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்
விண்ணுளார் மகிழ்வு எய்திட வேள்விகள்
எண்ணிலாதன் மாண இயற்றினான் . 1.3.14

100 கொற்ற ஆழிகுவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறை கடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம் மனுப்
பெற்ற நீதியும் தன்பெயர் ஆக்கினான். 1.3.15

101 பொங்கு மா மறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்கு
அங்கண் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்துளான்
துங்க ஆகமம் சொன்ன முறைமையால். 1.3.16

102 அறம் பொருள் இன்பம் ஆன அறநெறி வழாமற் புல்லி
மறங் கடிந்து அரசர் போற்ற வையகம் காக்கும் 1.3.17

நாளில்
சிறந்த நல் தவத்தால் தேவி திருமணி வயிற்றின்
மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப் பேர் அரிக் குருளை
அன்னான்.

103 தவமுயன்று அரிதில் பெற்ற தனி இளங் குமரன்
நாளும்
சிவ முயன்றடையுந் தெய்வக் கலை பல திருந்த
ஓதிக்
கவனவாம் புரவி யானை தேர்ப் படைத் தொழில்கள்
கற்றுப்
பவமுயன்றதுவும் பேறே எனவரும் பண்பின்
மிக்கான். 1.3.18

104 அளவில் தொல் கலைகள் முற்றி அரும் பெறல்
தந்தை மிக்க
உளமகிழ் காதல் கூர ஓங்கிய குணத்தால் நீடி
இளவரசு என்னும் தன்மை எய்துதற்கணியன் ஆகி
வளரிளம் பரிதி போன்று வாழுநாள் ஒருநாள்
மைந்தன். 1.3.19

105 திங்கள் வெண் கவிகை மன்னன் திரு வளர் கோயில்
நின்று
மங்குல் தோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமம் குலவு
தோளான்
பொங்கிய தானை சூழ்த் தேர்மிசைப் பொலிந்து
போந்தான். 1.3.20

106 பரசு வந்தியர் முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர்
விரை நறுங் குழலார் சிந்தும் வெள் வளை ஒருபால்
மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால்
வென்றி
அரசிளங் குமரன் போதும் அணி மணி மாட வீதி. 1.3.21

107 தனிப்பெருந் தருமம் தானோர் தயாஇன்றித் தானை
மன்னன்
பனிப்பில் சிந்தையினில் உண்மை பான்மை
சோதித்தால் என்ன
மனித்தர் தன் வரவு காணா வண்ணம் ஓர் வண்ணம்
நல் ஆன்

1.3.22

புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகினூடே.

108 அம்புனிற்றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால் மீது விசையினால் செல்லப் பட்டே
உம்பரின் அடையக் கண்டங்கு உருகுதாய் அலமந்தோடி
வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந் நடுக்குற்று வீழும். 1.3.23

109 மற்றுது கண்டு மைந்தன் "வந்ததிங்கு அபாயம்" என்று
சொற்றடுமாறி நெஞ்சில் துயருழந்து அறிவு அழிந்து
"பெற்றமும் கன்றும் இன்று என் உணர்வு எனும் பெருமை மாளச்
செற்ற, என் செய்கேன்" என்று தேரினின் இன்று இழிந்து வீழ்ந்தான். 1.3.4

110 அலறு பேர் ஆவை நோக்கி ஆருயிர் பதைத்துச் சோரும்
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த்து இரங்கி நிற்கும்
"மலர் தலை உலகங் காக்கும் மனுவெனும் என் கோமானுக்(கு)
உலகில் இப் பழி வந்து எய்தப் பிறந்தவா ஒருவன்" என்பான். 1.3.5

111 "வந்த இப் பழியை மாற்றும் வகையினை மறை நூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமே ஆகில்
எந்தை ஈது அறியா முன்னம் இயற்றுவன்" என்று மைந்தன்
சிந்தை வெந் துயரம் தீர்ப்பான்திரு மறையவர் முன் சென்றான். 1.3.26

112 தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்த ஆத் தரியாதாகி
முன் நெருப்புயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோல் மனுவின் பொற் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்தது அன்றே. 1.3.27

113 பழிப்பறை முழக்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ வேந்தன்
1.3.28

வழித்திரு மைந்தன் ஆவி கொளவரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ என்னத்தன் சடைமுன் கோளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்க போது.

114 ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை இழிந்து போந்து
பூங்கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி
"ஈங்கிதோர் பசுவந்தெய்தி இறைவ! நின் கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கியது" என்று சொன்னார். 1.3.29

115 மன்னவன் அதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி
"என் இதற்குற்றது" என்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்க
முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொல் நெறி அமைச்சன் மன்னன் தாளிணை தொழுது சொல்வான். 1.3.30

116 "வளவ! நின் புதல்வன் ஆங்கோர் மணி நெடுந் தேர்மேல் ஏறி
அளவில் தேர்த்தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால் இடைப் புகுந்து இறந்ததாக
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை" என்றான். 1.3.31

117 அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயரம் எய்தி
வெவ்விடந் தலைக் கொண்டாற் போல் வேதனை அகத்து மிக்"கிங்கு
இவ் வினை விளைந்தவாறு" என்று இடருறும் இரங்கும் ஏங்கும்
"செவ்விது என் செங்கோல்!" என்னும் தெருமரும் தெளியும் தேறான். 1.3.32

118 "மன்னுயிர் புரந்து வையம் பொதுக் கடிந்து அறத்தில் நீடும்
என்னெறி நன்றால்" என்னும் "என்செய்தால் தீரும்" என்னும்

1.3.33

தன்னிளங் கன்று காணாத் தாய்முகங் கண்டு சோரும்
அந் நிலை அரசன் உற்ற துயரம் ஓர் அளவிற்று
அன்றால்.

119 மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடி வணங்கிச்
"சிந்தை தளர்ந்து அருளுவது மற்று இதற்கு தீர்வு
அன்றால்
கொந்தலர்த்தார் மைந்தனை முன் கோவதை
செய்தார்க்கு மறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்"
என்றார். 1.3.34

120 "வழக்கு என்று நீர் மொழிந்தால் மற்றது தான்
வலிப்பட்டு
குழக்கன்றை இழந்தலறும் கோவுறு நோய்
மருந்தாமோ?
இழக்கின்றேன் மைந்தனை என்று எல்லீருஞ்
சொல்லிய இச்
சழக்கு இன்று நான் இசைந்தால் தருமந் தான்
சலியாதோ?" 1.3.35

121 மாநிலங் காவலன் ஆவான் மன்னுயிர் காக்குங்
காலைத்
தான தனக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊன மிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆன பயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் அல்லனோ? 1.3.36

122 "என் மகன் செய் பாதகத்துக்கு இருந்தவங்கள் செய
இசைந்தே
அன்னியன் ஓர் உயிர் கொன்றால் அவனைக்
கொல்வேன் ஆனால்
தொன் மனுநூல் தொடை மனுவால் துடைப்பு
உண்டது எனும் வார்த்தை
மன்னுலகில் பெற மொழிந்தீர்! மந்திரிகள்! வழக்கு"
என்றான். 1.3.37

123 என்று அரசன் இகழ்து உரைப்ப எதிர் நின்ற மதி
அமைச்சர்
"நின்ற நெறி உலகின் கண் இது போல் முன்
நிகழ்ந்ததால்
பொன்று வித்தல் மரபு அன்று மறை மொழிந்த அறம்
புரிதல்
தொன்று தொடு நெறி யன்றோ? தொல் நிலங் காவல!"
1.3.38

என்றார்.

124 அவ் வண்ணம் தொழுதுரைத்த அமைச்சர்களை முகம்
நோக்கி
மெய் வண்ணம் தெரிந்து உணர்ந்த மனு வென்னும்
விறல் வேந்தன்
இவ் வண்ணம் பழுது உரைத்தீர் என்று எரியின்
இடைத் தோய்ந்த
செவ் வண்ணக் கமலம் போல் முகம் புலந்து
செயிர்த்துரைப்பான். 1.3.39

125 "அவ்வுரையில் வருநெறிகள் அவை நிற்க
அறநெறியின்
செவ்விய உண்மைத் திறம் நீர் சிந்தை செயாது
உரைக்கின்றீர்
எவ் உலகில் எப் பெற்றம் இப்பெற்றித் தாம் இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறி மணி எறிந்து விழுந்தது?"
விளம்பீர். 1.3.40

126 "போற்றிசைத்துப் புரந்தரன் மால் அயன் முதலோர்
புகழ்ந்து இறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை உயிர் கொன்றான் ஆதலினால்
துணிபொருள் தான்
ஆற்றவுமற்று அவற் கொல்லும் அதுவேயாம் என
நினைமின்". 1.3.41

127 என மொழிந்து "மற்று இதனுக்கு இனி இதுவே செயல்
இவ் ஆன்
மனம் அழியுந் துயர் அகற்ற மாட்டாதேன் வருந்தும்
இது
தனதுறு பேர் இடர் யானும் தாங்குவதே கருமம்" என
அனகன் அரும் பொருள் துணிந்தான் அமைச்சரும்
அஞ்சினர் அகன்றார். 1.3.42

128 மன்னவன் தன் மைந்தனை அங்கு அழைத்தொரு
மந்திரி தன்னை
"முன்னிவனை அவ்வீதி முரண் தேர்க்கால் ஊர்க" என
அன்னவனும் அது செய்யாது அகன்று தன் ஆருயிர்
துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான் கொண்டு
மறுங்கணைந்தான். 1.3.43

129 ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதும்
உணரான்
தருமம் தன் வழிச்செல்கை கடன் என்று தன் மைந்தன்
மருமம் தன் தேராழி உறஊர்ந்தான் மனு வேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ? மற்று எளிதோ தான். 1.3.44

130 தண்ணளி வெண் குடை வேந்தன் செயல் கண்டு
தரியாது
மண்ணவர் கண்மழை பொழிந்தார் வானவர் பூ மழை
சொரிந்தார்
அண்ணல் அவன் கண் எதிரே அணி வீதி மழ விடை
மேல்
விண்ணவர்கள் தொழ நின்றான் வீதி விடங்கப்
பெருமான். 1.3.45

131 சடை மருங்கில் இளம் பிறையும் தனி விழிக்குந்
திருநுதலும்
இடம் மருங்கில் உமையாளும் எம் மருங்கும்
பூதகணம்
புடை நெருங்கும் பெருமையும் முன் கண்டு அரசன்
போற்றி இசைப்ப
விடை மருவும் பெருமானும் விறல் வேந்தற்கு அருள்
கொடுத்தான். 1.3.46

132 அந் நிலையே உயிர் பிரிந்த ஆன் கன்றும் அவ் அரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன்
எழலும்
இன்ன பரிசானான் என்று அறிந்திலன் வேந்தனும்
யார்க்கும்
முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள்
உளதோ? 1.3.47

133 அடி பணிந்த திருமகனை ஆகமுற எடுத்து அணைத்து
நெடிது மகிழ்ந்து அருந் துயரம் நீங்கினான்
நிலவேந்தன்
மடி சுரந்து பொழிதீம் பால் வருங் கன்று மகிழ்ந்துண்டு
படி நனைய வரும் பசுவும் பருவரல் நீங்கியது
அன்றே. 1.3.48

134 பொன் தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில்
அமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே
அருள்கொடுத்து

1.3.49

சென்று அருளும் பெரும் கருணைத் திறம் கண்டு தன்
அடியார்க்கு
என்றும் எளிவரும் பெருமை ஏழ் உலகும்
எடுத்தேத்தும்.

135 இனைய வகை அற நெறியில் எண்ணிறந்தோர்க்கு
அருள் புரிந்து
முனைவர் அவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்
மேல்
புனையும் உரை நம்மளவில் புகலலாந்
தகைமையதோ?
அனைய தனுக் ககமலராம் அறவனார் பூங்கோயில். 1.3.50

திருச்சிற்றம்பலம்
உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

1.4 திருக்கூட்டச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

136 பூத நாயகர் புற்று இடம் கொண்டவர்
ஆதி தேவர் அமர்ந்த பூங் கோயிலிற்
சோதி மாமணி நீள் சுடர் முன்றில் சூழ்
மூதெயில் திரு வாயில் முன்னாயது. 1.4.1

137 பூவார் திசை முகன் இந்திரன் பூ மிசை
மா வாழ் அகலத்து மால் முதல் வானவர்
ஓவாது எவரும் நிறைந்து உள்ளது
தேவா சிரியன் எனுந் திருக் காவணம். 1.4.2

138 அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்று ஒளியால் நிறை தூய்மையால்
புரந்த அஞ்சு எழுத்து ஓசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற் கடல் போல்வது. 1.4.3

139 அகில காரணர் தாள பணிவார்கள் தாம்
அகில லோகமும் ஆளற்கு உரியர் என்று
அகில லோகத்து உளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வத தனிடை. 1.4.4

140 அத்தர் வேண்டி முன் ஆண்டவர் அன்பினால்
மெய்த் தழைந்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத் திருத் தொண்டு செய்கடப் பாட்டினார் 1.4.5

இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார்.

141 மாசிலாத மணி திகழ் மேனி மேல்
பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத் திசையும் விளங்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார். 1.4.6

142 பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்
கோதிலாத குணப் பெருங் குன்றனார். 1.4.7

143 கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். 1.4.8

144 ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலாது ஒன்று இலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவு இலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ? 1.4.9

145 வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்
தாண்டவப் பெருமான் தனித் தொண்டர்கள்
நீண்ட தொல் புகழார் தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந்து ஏத்துகேன். 1.4.10

146 இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்
அந்தம் இல் புகழ் ஆலால சுந்தரன்
சுந்தரத் திருத் தொண்டத் தொகைத் தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரை செய்வாம். 1.4.11

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

1.5. தடுத்தாட்கொண்ட புராணம்

திருச்சிற்றம்பலம்

147 கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடி மேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதி இருமருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு . 1.5.1

148 பெருகிய நலத்தால் மிக்க பெரும் திரு நாடு தன்னில்
அரு மறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி வாய்மை
குன்றாத்
திரு மறையவர்கள் நீடும் திரு நாவலூராம் அன்றே. 1.5.2

149 மாதொ ஒரு பாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு
சடையனார்க்(கு)
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை
ஞானியார்பால்
தீதகன்று உலகம் உய்யத் திரு அவதாரம் செய்தார். 1.5.3

150 தம்பிரான் அருளினாலே தவத்தினால் மிக்கோர்
போற்றும்,
நம்பி ஆரூரர் என்றே நாமமும் சாற்றிமிக்க
ஐம் படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டிச் சாத்தி
செம் பொன் நாண் அரையில் மின்னத் தெருவில் தேர்
உருட்டு நாளில். 1.5.4

151 நர சிங்க முனையர் என்னும் நாடு வாழ் அரசர் கண்டு
பரவருங் காதல்கூரப் பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பினாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற்கு ஏற்ப அன்பினால் மகன்மை
கொண்டார். 1.5.5

152 பெருமைசால் அரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னும்
தங்கள்
வரு முறை மரபில் வைகி வளர்ந்து மங்கலம் செய்
கோலத்து
அரு மறை முந் நூல் சாத்தி அளவில் தொல் கலைகள்
ஆய்ந்து
திரு மலி சிறப்பின் ஓங்கிச் சீர் மணப் பருவஞ்
சேர்ந்தார். 1.5.6

153 தந்தையார் சடையனார் தம் தனித் திரு மகற்குச்
சைவ
அந்தணர் குலத்துள் தங்கள் அரும் பெரும் மரபுக்கு
ஏற்ப
வந்த தொல் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன்
தன்பால்
செந் திரு அனைய கன்னி மணத் திறஞ் செப்பி
விட்டார். 1.5.7

154 குல முதல் அறிவின் மிக்கோர் கோத்திர முறையும்
தேர்ந்தார்
நல மிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை
ஏற்று
மலர் தரு முகத்தன் ஆகி மணம் புரி செயலின்
வாய்மை
பலவுடன் பேசி ஒத்த பண்பினால் அன்பு நேர்ந்தான் 1.5.8

155 மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல்
தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று சொன்ன பின் பெருகு
சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மண வினை உவந்து
சாற்றிக்
கொற்றவர் திருவுக்கு ஏற்பக் குறித்து நாள் ஓலை
விட்டார். 1.5.9

156 மங்கலம் பொலியச் செய்த மண வினை ஓலை ஏந்தி
அங்கயற் கண்ணினாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து
கொண்டார். 1.5.10

157 மகிழ்ச்சி யால் மணம் மீக் கூறி மங்கல வினைகள்
எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய
தொழிலராகி
இகழ்ச்சி ஒன்றானும் இன்றி ஏந்து பூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள் முளை
சாத்தினார்கள். 1.5.11

158 மண வினைக்கு அமைந்த செய்கை மாதினைப்
பயந்தார் செய்யத்
துணர் மலர்க் கோதைத் தாமச் சுரும்பணை
தோளினானைப்
புணர் மணத் திருநாள் முன்னாட் பொருந்திய
விதியினாலே
பணை முரசு இயம்ப வாழ்த்தி பைம் பொன் நாண்
காப்புச் சேர்த்தார். 1.5.12

159 மா மறை விதி வழாமல் மணத்துறைக் கடன்கள்
ஆற்றித்
தூ மறை மூதூர்க் கங்குல் மங்கலந் துன்றி ஆர்ப்பத்
1.5.13

தேமரு தொடையல் மார்பன் திரு மணக் கோலம்
காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம்
செய்தான்.

160 காலை செய் வினைகள் முற்றிக் கணித நூல் புலவர்
சொன்ன
வேலை வந்து அணையும் முன்னர் விதி
மணக்கோலம் கொள்வான்
நூல் அசைந்து இலங்கு மார்பின் நுணங்கிய கேள்வி
மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான். 1.5.14

161 வாச நெய் ஊட்டி மிக்க மலர் விரை அடுத்த தூ நீர்ப்
பாசனத்து அமைந்த பாங்கர்ப் பருமணி பைம்பொன்
திண்கால்
ஆசனத்து அணி நீர் ஆட்டி அரிசனம் சாத்தி அன்பால்
ஈசனுக்கு இனியான் மேனி எழில் பெற
விளக்கினார்கள் 1.5.15

162 அகில் விரைத் தூபம் ஏய்ந்த அணி கொள் பட்டாடை
சாத்தி
முகில் நுழை மதியம் போலக் கைவலான் முன் கை
சூழ்ந்த
துகில் கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித் தன் தூய செங்கை
உகிர் நுதி முறையில் போக்கி ஒளிர் நறுஞ்சிகழி
ஆர்த்தான். 1.5.16

163 தூநறும் பசும் கர்ப்பூரச் சுண்ணத்தால் வண்ணப்
போதில்
ஆன தண் பனி நீர் கூட்டி அமைந்த சந்தனச் சேறாட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பான் மறை முந்நூல் மின்னப் பவித்திரஞ் சிறந்த
கையான். 1.5.17

164 தூமலர்ப் பிணையல் மாலை துணர் இணர்க் கண்ணிக்
கோதை
தாமம் என்று இனைய வேறு தகுதியால் அமையச்
சாத்தி
மா மணி அணிந்த தூய வளர் ஒளி இருள்கால் சீக்கும்
நாம நீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலம்
கொண்டான். 1.5.18

165 மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்நகர் விழவு கொள்ள நம்பி ஆரூரர் நாதன்
தன் அடி மனத்துள் கொண்டு தகும் திருநீறு சாத்திப்
பொன் அணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு
போந்தார். 1.5.19

166 இயம் பல துவைப்ப எங்கும் ஏத்தொலி எடுப்ப மாதர்
நயந்து பல்லாண்டு போற்ற நான்மறை ஒலியின் ஓங்க
வியந்துபார் விரும்ப வந்து விரவினர்க்கு இன்பஞ் செய்தே
உயர்ந்த வாகன யானங்கள் மிசை கொண்டார்
உழையரானார். 1.5.20

167 மங்கல கீத நாத மறையவர் குழாங்களோடு
தொங்கலும் விரையும் சூழ்ந்த மைந்தரும் துன்றிச் சூதும்
பங்கய முகையும் சாயத்துப் பணைத்து எழுந்
தணியில் மிக்க
குங்கும முலையினாரும் பரந்தெழு கொள்கைத் தாகி. 1.5.21

168 அருங்கடி எழுந்த போழ்தின் ஆர்த்த வெள்வளை களாலும்
இருங்குழை மகரத் தாலும் இலங்கொளி மணிகளாலும்
நெருங்கிய பீலிச் சோலை நீல நீர்த் தரங்கத் தாலும்
கருங்கடல் கிளர்ந்தது என்னக் காட்சியில் பொலிந்தது
அன்றே. 1.5.22

169 நெருங்கு தூரியங்கள் ஏங்க நிரைத்த சாமரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்கு பூங் கொடிகள் ஆட
அருங் கடி மணம் வந்து எய்த அன்று தொட்டு என்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம் வந்த
புத்தூராமால். 1.5.23

170 நிறை குடம் தூபம் தீபம் நெருங்கு பாலிகைகள் ஏந்தி
நறை மலர் அறுகு சுண்ணம் நறும் பொரி பலவும் வீசி
உறைமலி கலவை சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல் மணம் எதிர் கொள்ள
வந்தார். 1.5.24

171 கண்கள் எண்ணிலாத வேண்டுன்ங் காளையைக்
காண என்பார்
பெண்களில் உயர நோன் தாள் சடங்கவி பேதை
என்பார்
மண் களி கூர வந்த மணம் கண்டு வாழ்ந்தோம்
என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடுவார்கள். 1.5.25

172 "ஆண்டகை அருளின் நோக்கின் வெள்ளத்துள்
அலைந்தோம்" என்பார்
"தாண்டிய பரியும் நம்பால் தகுதியின் நடந்தது"
என்பார்
"பூண்டயங்கு இவனே காணும் புண்ணிய மூர்த்தி"
என்பார்
ஈண்டிய மடவார் கூட்டம் இன்னன இசைப்பச்
சென்றார். 1.5.26

173 வருமணக் கோலத்து எங்கள் வள்ளலார் தெள்ளும்
வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்று வெண் சங்கம் எங்கும்
பெருமழைக் குலத்தின் ஆர்ப்பப் பரிமிசை இழிந்து
பேணும்
ஒரு மணத் திறத்தின் அங்கு நிகழ்ந்தது மொழிவேன்
உய்ந்தேன். 1.5.27

174 ஆலுமறை சூழ்கயிலையின் கண் அருள் செய்த
சாலுமொழியால் வழி தடுத்து அடிமை கொள்வான்
மேலுற எழுந்து மிகு கீழுற அகழ்ந்து
மாலும் அயனுக்கும் அரியார் ஒருவர் வந்தார். 1.5.28

175 கண்ணிடை கரந்த கதிர் வெண்படம் எனச் சூழ்
புண்ணிய நுதல் புனித நீறு பொலிவு எய்தத்
தண்மதி முதிர்ந்து கதிர் சாய்வது என மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. 1.5.29

176 காதில் அணி கண்டிகை வடிந்த குழை தாழச்
சோதி மணி மார்பின் அசை நூலினொடு தோளின்
மீது புனை உத்தரிய வெண் துகில் நுடங்க
ஆதபம் மறைக் குடை அணிக்கரம் விளங்க. 1.5.30

177 பண்டிசரி கோவண உடைப் பழமை கூரக்
கொண்டதோர் சழங்கலுடை ஆர்ந்து அழகு கொள்ள
வெண் துகிலுடன் குசை முடிந்து விடு வேணுத்
தண்டொருகை கொண்டு கழல் தள்ளு நடை கொள்ள. 1.5.31

178 மொய்த்து வளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன் படிவ மேயோ
மெய்த்த நெறி வைதிகம் விளைந்த முத[illegible]ல்யோ
இத்தகைய வேடம் என ஐயமுற எய்தி . 1.5.32

179 வந்துதிரு மாமறை மணத் தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பி எதிர் பன்னு சபை முன் நின்று
"இந்த மொழி கேண்மின் எதிர் யாவர்களும்" என்றான்
முந்தை மறை ஆயிரம் மொழிந்த திரு வாயான். 1.5.33

180 என்றுரை செய் அந்தணனை எண்ணில் மறை
யோரும்
மன்றல் வினை மங்கல மடங்கல் அனை யானும்
"நன்று உமது நல்வரவு நங்கள் தவம் என்று ஏ
நின்றது இவண் நீர் மொழிமின் நீர்மொழிவது"
என்றார். 1.5.34

181 பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
என்னிடையும் நின்னிடையும் நின்ற இசை வால்யான்
முன்னுடையது ஓர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீ முயல்தி என்றான். 1.5.35

182 நெற்றி விழியான் மொழிய நின்ற நிகர் இல்லான்
" உற்றதோர் வழக்கு எனிடை நீ உடையது உண்டேல்
மற்றது முடித்தல் அலது யான் வதுவை செய்யேன்
முற்ற இது சொல்லுக" என எல்லை முடிவு இல்லான். 1.5.36

183 " ஆவதிது கேண்மின் மறையோர்! என் அடியான் இந்
நாவல் நகர் ஊரன் இது நான் மொழிவது" என்றான்
தேவரையும் மாலயன் முதன் திருவின் மிக்கோர்
யாவரையும் வேறு அடிமை யாவுடைய எம்மான். 1.5.37

184 என்றான் இறையோன் அது கேட்டவர் எம் மருங்கும்
நின்றார் இருந்தார் "இவன் என் நினைந்தான் கொல்"
என்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார் திரு நாவல் ஊரான்
"நன்றால் மறையோன் மொழி" என்று எதிர் நோக்கி
நக்கான். 1.5.38

185 . நக்கான் முகம் நோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத்தரியத் துகில் தாங்கி மேல் சென்று
"அக் காலம் உன் தந்தை தன் தந்தை ஆள்ஓலை
ஈதால்
இக் காரியத்தை நீ இன்று சிரித்தது என் ஏட" என்ன. 1.5.39

186 மாசிலா மரபில் வந்த வள்ளல் வேதியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி
"ஆசில் அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமை ஆதல்
பேச இன்று உன்னைக் கேட்டோ ம் பித்தனோ மறையோன்" என்றார் 1.5.40

187 "பித்தனும் ஆகப் பின்னும் பேயனும் ஆக நீ இன்று
எத்தனை தீங்கு சொன்னால் யாது மற்று அவற்றால் நாணேன்
அத்தனைக்கு என்னை ஒன்றும் அறிந்திலை ஆகில் நின்று
வித்தகம் பேச வேண்டாம் பணி செய வேண்டும்" என்றார் 1.5.41

188 "கண்டதோர் வடிவால் உள்ளம் காதல் செய்து உருகா நிற்கும்
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமும் உடனே ஆக்கும்
உண்டொராள் ஓலை என்னும் அதன் உண்மை அறிவேன்" என்று
தொண்டனார் "ஓலை காட்டுக" என்றனர் துணைவனாரை. 1.5.42

189 "ஓலை காட்டு" என்று நம்பி உரைக்க "நீ ஓலை காணல்
பாலையோ அவை முன் காட்டப் பணிசெயற் பாலை" என்ற
வேலையில் நாவலூரர் வெகுண்டு மேல் விரைந்து சென்று
மாலயன் தொடரா தானை வலிந்து பின்தொடரல் உற்றார். 1.5.43

190 ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்தணாளன்
காவணத்து இடையே ஓடக் கடிது பின்தொடர்ந்து நம்பி
பூவனத்து அவரை உற்றார் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையினாரை யார் தொடர்ந்து எட்ட வல்லார்? 1.5.44

191 மறைகள் ஆயின முன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி எழுதும்ஆள் ஓலை 1.5.45

வாங்கி
அறை கழல் அண்ணல் "ஆளாய் அந்தணர் செய்தல்
என்ன
முறை"S எனக் கீறியிட்டார் முறையிட்டான்
முடிவிலாதான்.

192 அருமறை முறையிட்டின்னும் அறிவதற்கு அறியான்
பற்றி
ஒரு முறை முறையோ என்ன உழை நின்றார்
விலக்கி "இந்தப்
பெரு முறை உலகில் இல்லா நெறி கொண்டு
பிணங்கு கின்ற
திரு மறை முனிவரே எங்குளீர் செப்பும்" என்றார். 1.5.46

193 என்றலும் நின்ற ஐயர் "இங்குளேன் இருப்புஞ் சேயது
அன்றிந்த வெண்ணெய் நல்லூர் அதுநிற்க அறத்தாறு
இன்றி
வன்றிறல் செய்து என் கையில் ஆவணம் வலிய
வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை"
என்றான். 1.5.47

194 குழை மறை காதினானை கோல் ஆரூரர் நோக்கிப்
பழைய மன்றாடி போலும் இவன் என்று பண்பின் மிக்க
விழைவுறு மனமும் பொங்க "வெண்ணெய்
நல்லூராயேல் உன்
பிழை நெறி வாழ்க்கை ஆங்கே பேச நீ போதாய்"
என்றார். 1.5.48

195 வேதியன் அதனைக் கேட்டு "வெண்ணெய்
நல்லூரிலே நீ
போதினும் நன்று மற்றப் புனித நான்மறையோர்
முன்னர்
ஆதியில் மூல ஓலை காட்டி நீ அடிமை ஆதல்
சாதிப்பன்" என்று முன்னே தண்டுமுன் தாங்கிச்
சென்றான். 1.5.49

196 செல்லு நான் மறையோன் தன்பின் திரிமுகக் காந்தஞ்
சேர்ந்த
வல்லிரும்பணையு மா போல் வள்ளலும் கடிது
சென்றான்
எல்லையில் சுற்றத்தாரும் "இது என்னாம்" என்று
செல்ல

1.5.50

நல்ல அந்தணர்கள் வாழும் வெண்ணெய் நல்லூரை
நண்ணி.

197 வேத பாரகரின் மிக்கார் விளங்கு பேர் அவை முன்
சென்று
நாதனாம் மறையோன் சொல்லும் "நாவலூர் ஆரூரன்
தன்
காதல் என் அடியான் என்னக் காட்டிய ஓலை கீறி
மூதறிவீர் முன் போந்தானிது மற்றென் முறைபாடு"
என்றான். 1.5.51

198 அந்தணர் அவையில் மிக்கார் "மறையவர் அடிமை
ஆதல்
இந்த மா நிலத்தில் இல்லை என் சொன்னாய் ஐயர்"
என்றார்
வந்தவாறிசைவே அன்றோ வழக்கு இவன் கிழித்த
ஓலை
தந்தை தன் தந்தை நேர்ந்தது என்றனன் தனியாய்
நின்றான். 1.5.52

199 "இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில்
இன்று
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி
ஆமோ?
தசையெலாம் ஒடுங்க மூத்தான் வழக்கினை சாரச்
சொன்னான்
அசைவில் ஆரூரர் எண்ணம் என்" என்றார்
அவையில்மிக்கார். 1.5.53

200 "அனைத்து நூல் உணர்ந்தீர்! ஆதி சைவன் என்று
அறிவீர்! என்னைத்
தனக்கு வேறு அடிமை என்று இவ் அந்தணன்
சாதித்தானேல்
மனத்தினால் உணர்தற்கு எட்டா மாயை என்
சொல்லுகேன் யான்
எனக்கு இது தெளிய ஒண்ணாது என்றனன்" எண்ணம்
மிக்கான். 1.5.54

201 அவ்வுரை அவையின் முன்பு நம்பி ஆரூரர் சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற திரு மறை முனியை
நோக்கி
"இவ்வுலகின் கண் நீ இன்று இவரை உன் அடிமை
என்ற

1.5.55

வெவ்வுரை எம்முன்பு ஏற்ற வேண்டும்" என்று
உரைத்து மீண்டும்.

202 ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்று அயலார்
தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன
"முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை படியோஓலை மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை
வல்லான். 1.5.56

203 வல்லையேல் காட்டிங்கு என்ன மறையவன் வலி
செய்யாமல்
சொல்ல நீர் வல்லீர் ஆகில் காட்டுவேன் என்று
சொல்லச்
செல்வ நான் மறையோய்! நாங்கள் தீங்குற ஒட்டோ ம்
என்றார்
அல்லல் தீர்த்து ஆள நின்றார் ஆவணம் கொண்டு
சென்றார். 1.5.57

204 இருள் மறை மிடறு ஒன் கையில் ஓலை கண்டு
அவையோர் ஏவ
அருள் பெறு காரணத்தானும் ஆவணம் தொழுது
வாங்கிச்
சுருள் பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை
நோக்கித்
தெருள் பெறு சபையோர் கேட்ப வாசகம் செப்பு
கின்றான். 1.5.58

205 அரு மறை நாவல் ஆதி சைவன் ஆரூரன்செய்கை
பெரு முனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கியானும் என்பால்
வரு முறை மரபுளோரும் வழித் தொண்டு செய்தற்கு
ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கு இவை என்
எழுத்து. 1.5.59

206 வாசகம் கேட்ட பின்னர் மற்று மேல் எழுத்து
இட்டார்கள்
ஆசிலா எழுத்தை நோக்கி அவையொக்கும் என்ற
பின்னர்
மாசிலா மறையோர் "ஐயா! மற்றுங்கள் பேரனார் தம்
தேசுடை எழுத்தே ஆகில் தெளியப் பார்த்து அறிமின்"
1.5.60

என்றார்.

207 அந்தணர் கூற "இன்னும் ஆள் ஓலை இவனே
காண்பான்
தந்தை தன் தந்தை தான் வேறு எழுதுகைச்
சாத்துண்டாகில்
இந்த ஆவணத்தினோடும் எழுத்து நீர் ஒப்பு நோக்கி
வந்தது மொழிமின்" என்றான் வலிய ஆட்கொள்ளும்
வள்ளல். 1.5.61

208 திரண்ட மா மறையோர் தாமும் திரு நாவலூரர் கோ
முன்
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால்
ஓலை
அரண் தரு காப்பில் வேறு ஒன்று அழைத்து உடன்
ஒப்பு நோக்கி
"இரண்டும் ஒத்திருந்தது என்னே! இனிச் செயல்
இல்லை" என்றார் 1.5.62

209 "நான் மறை முனிவ னார்க்கு நம்பி ஆரூரர் தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்" என்று பண்பில்
மிக்க
மேன்மையோர் விளம்ப நம்பி "விதி முறை இதுவே
ஆகில்
யான் இதற்கு இசையேன் என்ன இசையுமோ" என்று
நின்றார். 1.5.63

210 திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை
நோக்கி
"அருமுனி! நீமுன் காட்டும் ஆவணம் அதனில் எங்கள்
பெருமைசேர் பதியேயாகப் பேசியதுமக்கு இவ்வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக"
என்றார். 1.5.64

211 பெருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர்
என்னை
ஒருவரும் அறியீராகில் 'போதும்' என்றுரைத்துச்
சூழ்ந்த
பெருமறையவர் குழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் துறையே புக்கார் கண்டிலர் திகைத்து
நின்றார். 1.5.65

212 எம்பிரான் கோயில் நண்ண இலங்கு நூல் மார்பர்
"எங்கள்
1.5.66

நம்பர் தங்கோயில் புக்கது என்கொலோ" என்று நம்பி
தம்பெரு விருப்பினோடு தனித் தொடர்ந்து அழைப்ப
மாதோ(டு)
உம்பரின் விடை மேல் தோன்றி அவர் தமக்கு
உணர்த்தல் உற்றார்.

213 "முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை
கூரப்
பின்பு நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத்
தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம் தடுத்தாண்டோ ம்"
என்றார். 1.5.67

214 என்று எழும் ஓசை கேளா ஈன்றஆன் கனைப்புக்
கேட்ட
கன்று போல் கதறி நம்பி கரசரண் ஆதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுத கை தலை மேல் ஆக
"மன்றுளீர் செயலோ வந்து வலிய ஆட் கொண்டது"
என்றார். 1.5.68

215 எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழி பூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கி
ஆர்ப்ப
அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச்
செய்வார். 1.5.69

216 "மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும்
நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின்
மிக்க
அற்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண் மேல்
நம்மைச்
சொற் தமிழ் பாடுக என்றார்" தூமறை பாடும் வாயார். 1.5.70

217 . தேடிய அயனும் மாலும் தெளிவுறா ஐந்து எழுத்தும்
பாடிய பொருளாய் உள்ளான் "பாடுவாய் நம்மை"
என்ன
நாடிய மனத்தராகி நம்பி ஆரூரர் மன்றுள்
ஆடிய செய்ய தாளை அஞ்சலி கூப்பி நின்று. 1.5.71

218 வேதியன் ஆகி என்னை வழக்கினால் வெல்ல வந்த
ஊதியம் அறியாதேனுக்கு உணர்வு தந்து உய்யக்
1.5.72

கொண்ட
கோதிலா அமுதே! இன்று உன் குணப் பெருங் கடலை
நாயேன்
யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்" என
மொழிந்தார்

219 அன்பனை அருளின் நோக்கி அங்கணர் அருளிச்
செய்வார்
"முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை
ஆதலால்லே
என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றார் நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடல்
உற்றார். 1.5.73

220 கொத்தார் மலர்க் குழலாள் ஒரு கூறாய் அடியவர்
பால்
மெய்த் தாயினும் இனியானை அவ்வியன் நாவலர்
பெருமான்
"பித்தா பிறை சூடி எனப் பெரிதாம் திருப் பதிகம்
இத்தாரணி முதலாம் உலகு எல்லாம் உய்ய எடுத்தார். 1.5.74

221 முறையால் வரு மதுரத் துடன் மொழி இந்தள
முதலில்
குறையா நிலை மும்மைப்பாடிக் கூடுங் கிழமை
யினால்
நிறை பாணியின் இசை கோள்புணர் நீடும் புகழ்
வகையால்
இறையான் மகிழ் இசை பாடினன் எல்லாம் நிகர்
இல்லான். 1.5.75

222 சொல்லார் தமிழ் இசை பாடிய தொண்டன் தனை
இன்னும்
பல்லாறு உலகினில் நம் புகழ் பாடு" என்றுறு பரிவில்
நல்லார் வெண்ணெய் நல்லூர் அருள்துறை மேவிய
நம்பன்
எல்லா உலகும் உய்யப் புரம் எய்தான் அருள்
செய்தான். 1.5.76

223 அயலோர் தவம் முயல்வார் பிறர் அன்றே மணம்
அழியும்
செயலால் நிகழ் புத்தூர் வரு சிவ வேதியன் மகளும்
உயர் நாவலர் தனி நாதனை ஒழியாது உணர் வழியில்
பெயராது உயர் சிவலோகமும் எளிதாம் வகை
1.5.77

பெற்றாள்.

224 நாவலர் கோன் ஆரூரன் தனை வெண்ணெய் நல் ஊரில்
மேவும் அருள்துறை அமர்ந்த வேதியர் ஆட்கொண்டு அதற்பின்
பூ அலரும் தடம் பொய்கைத் திருநாவலூர் புகுந்து
தேவர் பிரான் தனைப் பணிந்து திருப் பதிகம் பாடினார். 1.5.78

225 சிவன் உறையுந் திருத்துறையூர் சென்றணைந்து தீவினையால்
அவ நெறியில் செல்லாமே தடுத்து ஆண்டாய் அடியேற்குத்
தவ நெறி தந்து அருள் என்று தம்பிரான் முன் நின்று
பவ நெறிக்கு விலக்கு ஆகுந் திருப்பதிகம் பாடினார். 1.5.79

226 புலன் ஒன்றும் படி தவத்திற் புரிந்த நெறி கொடுத்து அருள
அலர் கொண்ட நறுஞ் சோலைத் திருத் துறையூர் அமர்ந்து அருளும்
நிலவும் தண் புனலும் ஒளிர் நீள்சடையோன் திருப்பாதம்
மலர் கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன தொண்டர். 1.5.80

227 திருத் துறையூர் தனைப் பணிந்து சிவபெருமான் அமர்ந்து அருளும்
பொருத்தமாம் இடம் பலவும் புக்கிறைஞ்சி பொற்புலியூர்
நிருத்தனார் திருக் கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தம் மிகு காதலினால் வழிக் கொள்வான் மனங் கொண்டார் 1.5.81

228 மலை வளர் சந்து அகில் பீலி மலர் பரப்பி மணி கொழிக்கும்
அலை தருதண் புனல் பெண்ணை யாறு கடந்து ஏறிய பின்
நிலவு பசும் புரவிநெடும் தேர் இரவி மேல் கடலில்
செலவணையும் பொழுது அணையத் திருவதிகை புறத்து அணைந்தார் 1.5.82

229 "உடைய அரசு உலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்பு பெரும் 1.5.83

பதியை மிதித்து
அடையும் அதற்கு அஞ்சுவான" என்று அந் நகரில்
புகுதாதே
மடை வளர் தண் புறம் பணையிற் சித்தவட மடம்
புகுந்தார்

230 வரி வளர் பூஞ்சோலை சூழ் மடத்தின் கண்
வன்தொண்டர்
விரிதிரை நீர்க் கெடில வட வீரட்டானத்து இறை தாள்
புரிவுடைய மனத்தினராய்ப் புடை எங்கும் மிடைகின்ற
பரிசனமும் துயில் கொள்ளப் பள்ளி அமர்ந்து
அருளினார். 1.5.84

231 அது கண்டு வீரட்டத்து அமர்ந்து அருளும்
அங்கணரும்
முது வடிவின் மறையவராய் முன் ஒருவர் அறியாமே
பொது மடத்தின் உள்புகுந்து பூந் தாரான் திரு முடி
மேல்
பதும மலர்த் தாள் வைத்துப் பள்ளி கொள்வார் போல்
பயின்றார். 1.5.85

232 அந்நிலை ஆரூரன் உணர்ந்து அருமறையோய்
உன்னடி என்
சென்னியில் வைத்தனை என்னத் திசை அறியா
வகை செய்த(து)
என்னுடைய மூப்புக் காண் என்று அருள அதற்கு
இசைந்து
தன் முடி அப்பால் வைத்தே துயில் அமர்ந்தான் தமிழ்
நாதன். 1.5.86

233 அங்குமவன் திரு முடிமேல் மீட்டும் அவர் தாள் நீட்டச்
செங்கயல் பாய் தடம் புடை சூழ் திரு நாவலூராளி
இங்கு என்னைப் பலகாலும் மிதித்தனை நீ யார்
என்னக்
கங்கை சடைக் கரந்த பிரான் அறிந்திலையோ எனக்
கரந்தான். 1.5.87

234 செம்மாந்து இங்கு யான் அறியாது என் செய்தேன்
எனத் தெளிந்து
தம்மானை அறியாத சதியார் உளரே என்(று)
அம்மானைத் திருவதிகை வீரட்டா னத்து அமர்ந்த
கைம்மாவின் உரியானைக் கழல் பணிந்து பாடினார். 1.5.88

235 பொன் திரளும் மணித் திரளும் பொரு கரிவெண்
கோடுகளும்
மின்றிரண்ட வெண்முத்தும் விரைமலரும் நறுங்
குறடும்
வன்றிரைகளாற் கொணர்ந்து திருவதிகை
வழிபடலால்
தென் திசையில் கங்கை எனும் திருக் கெடிலம்
திளைத்தாடி. 1.5.89

236 அங்கணரை அடிபோற்றி அங்கு அகன்று மற்று அந்தப்
பொங்கு நதித் தென்கரை போய்ப் போர் வலித்தோள்
மாவலி தன்
மங்கல வேள்வியில் பண்டு வாமனனாய் மண் இரந்த
செங்கணவன் வழி பட்ட திரு மாணிக்குழி
அணைந்தார். 1.5.90

237 பரம் பொருளைப் பணிந்து தாள் பரவிப்போய்ப்
பணிந்தவர்க்கு
வரம் தருவான் தினை நகரை வணங்கினர் வண் தமிழ்
பாடி
நரம்புடை யாழ் ஒலி முழவின் நாத ஒலி வேத ஒலி
அரம்பையர் தம் கீத ஒலி அறாத் தில்லை மருங்கு
அணைந்தார். 1.5.91

238 தேம் அலங்கல் அணி மா மணி மார்பின் செம்மல்
அங்கயல்கள் செங்கமலத் தண்
பூ மலங்க எதிர் பாய்வன மாடே புள்ளலம்பு திரை
வெள் வளை வாவி
தா மலங்குகள் தடம் பணை சூழும் தண் மருங்கு
தொழுவார்கள் தம்மும்மை
மா மலங்களற வீடு அருள் தில்லை மல்லல்
அம்பதியின் எல்லை வணங்கி . 1.5.92

239 நாக சூத வகுளஞ் சரளஞ் சூழ் நாளிகேரம் இலவங்கம்
நரந்தம்
பூக ஞாழல் குளிர் வாழை மதூகம் பொதுளும் வஞ்சி
பல எங்கும் நெருங்கி
மேக சாலமலி சோலைகள் ஆகி மீது கோகிலம்
மிடைந்து மிழற்றப்
போக பூமியினும் மிக்கு விளங்கும் பூம்புறம்பணை
கடந்து புகுந்தார். 1.5.93

240 வன்னி கொன்றை வழை சண்பகம் ஆரம் மலர்ப்
பலாசொடு செருந்தி மந்தாரம்
கன்னி காரங் குரவங் கமழ் புன்னை கற்பு பாடலம்
கூவிளம் ஓங்கித்
துன்னு சாதி மரு மாலதி மௌவல் துதைந்த
நந்திகரம் வீரம் மிடைந்த
பன் மலர்ப் புனித நந்தவனங்கள் பணிந்து சென்றனன்
மணங்கமழ் தாரான். 1.5.94

241 இடம் மருங்கு தனி நாயகி காண ஏழ் பெரும் புவனம்
உய்ய எடுத்து
நடநவின்று அருள் சிலம்பொலி போற்றும் நான்
மறைப் பதியை நாளும் வணங்க
கடல் வலங் கொள்வது போல் புடை சூழுங் காட்சி
மேவி மிகு
சேட் செல ஓங்கும் தடமருங்கு வளர் மஞ்சிவர்
இஞ்சி தண் கிடங்கை எதிர் கண்டு மகிழ்ந்தார். 1.5.95

242 மன்றுளாடு மதுவின் நசையாலே மறைச் சுரும்பறை
புறத்தின் மருங்கே
குன்று போலுமணி மாமதில் சூழுங் குண்ட கழக்கமல
வண்டலர் கைதைத்
துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறு புனை
தொண்டர்கள் என்னச்
சென்று சென்று முரல்கின்றன கண்டு சிந்தை
அன்பொடு திளைத்து எதிர் சென்றார். 1.5.96

243 பார் விளங்க வளர் நான் மறை நாதம் பயின்ற
பண்புமிக வெண்கொடி ஆடும்
சீர் விளங்கு மணி நாவொலியாலும் திசைகள் நான்கு
எதிர் புறப்படலாலும்
தார் விளங்கு வரை மார்பின் அயன் பொன்
சதுர்முகங்கள் என ஆயின தில்லை
ஊர்விளங்கு திருவாயில்கள் நான்கின் உத்தரத் திசை
வாயில் முன் எய்தி. 1.5.97

244 அன்பின் வந்து எதிர் கொண்ட சீர் அடியார் அவர்களோ
நம்பி ஆரூரர் தாமோ
முன் பிறைஞ்சினரி யாவர் என்று அறியா
முறைமையால் எதிர் வணங்கி மகிழ்ந்து
பின்பு கும்பிடும் விருப்பில் நிறைந்து பெருகு நாவல்
நகரார் பெருமானும்
பொன் பிறங்கு மணி மாளிகை நீடும் பொருவிறந்த 1.5.98

திருவீதி புகுந்தார்

245 அங்கண் மாமறை முழங்கும் மருங்கே ஆடரம்பையர்
அரங்கு முழங்கும்
மங்குல் வானின்மிசை ஐந்தும் முழங்கும் வாச
மாலைகளில் வண்டு முழங்கும்
பொங்கும் அன்பருவி கண்பொழி தொண்டர்
போற்றிசைக்கும் ஒலி எங்கும் முழங்கும்
திங்கள் தங்கு சடை கங்கை முழங்கும் தேவ தேவர்
புரியும் திருவீதி. 1.5.99

246 போக நீடு நிதி மன்னவன் மன்னும் புரங்கள் ஒப்பன
வரம்பில ஓங்கி
மாகம் முன் பருகுகின்றன போலும் மாளிகைக் குலம்
மிடைந்த பதாகை
யோக சிந்தை மறையோர்கள் வளர்க்கும் ஓமதூமம்
உயர்வானில் அடுப்ப
மேக பந்திகளின் மீதிடைஎங்கும் மின் நுடங்குவன
என்ன விளங்கும். 1.5.100

247 ஆடு தோகை புடை நாசிகள் தோறும் அரணி தந்த சுடர்
ஆகுதி தோறும்
மாடுதாமமணி வாயில்கள் தோறும் மங்கலக் கலசம்
வேதிகை தோறும்
சேடு கொண்ட ஒளி தேர் நிரை தோறும் செந்நெல்
அன்னமலை சாலைகள் தோறும்
நீடு தண்புனல்கள் பந்தர்கள் தோறும் நிறைந்த தேவர்
கணம் நீளிடை தோறும். 1.5.101

248 எண்ணில் பேர் உலகு அனைத்தினும் உள்ள
எல்லையில் அழகு சொல்லிய எல்லாம்
மண்ணில் இப்பதியில் வந்தன என்ன மங்கலம் பொலி
வளத்தன ஆகிப்
புண்ணியப் புனித அன்பர்கள் முன்பு புகழ்ந்து பாடல்
புரி பொற்பின் விளங்கும்
அண்ணல் ஆடு திருஅம்பலம் சூழ்ந்த அம்பொன்
வீதியினை நம்பி வணங்கி . 1.5.102

249 மால் அயன் சதமகன் பெரும் தேவர் மற்றும்
உள்ளவர்கள் முற்றும் நெருங்கி
சீல மாமுனிவர் சென்று முன் துன்னித் திருப்
பிரம்பின் அடி கொண்டு திளைத்துக்
காலம் நேர் படுதல் பார்த்தயல் நிற்பக் காதல் அன்பர்
1.5.103

கணநாதர் புகும்பொற்
கோல நீடு திருவாயில் இறைஞ்சிக் குவித்த செங்கை
தலை மேற்கொடு புக்கார்.

250 பெரு மதில் சிறந்த செம் பொன் மாளிகை மின்
பிறங்கும் பேரம்பலம் மேரு
வருமுறை வலம் கொண்டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர் தம்
சிந்தையில் அலர்ந்த
திரு வளர் ஒளி சூழ் திருச்சிற்றம்பலம் முன் திரு
அணுக்கன் திரு வாயில். 1.5.104

251 வையகம் பொலிய மறைச் சிலம்பு ஆர்ப்ப மன்றுளே
மால் அயன் தேட
ஐயர் தாம் வெளியே ஆடுகின்றாரை அஞ்சலி
மலர்த்தி முன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக் கரணமோ
கலந்த அன்புந்தச்
செய் தவப் பெரியோன் சென்று தாழ்ந்து எழுந்தான்
திருக் களிற்றுப்படி மருங்கு. 1.5.105

252 ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பரும்
கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்து
விகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில்
தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா
மகிழ்ச்சியின் மலர்ந்தார். 1.5.106

253 "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம்
கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம்
இன்பம் ஆம்" என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக் கைம்மலர்
உச்சி மேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார்
பரவினார் பணிந்தார். 1.5.107

254 தடுத்து முன் ஆண்ட தொண்டனார் முன்பு தனிப்
பெருந் தாண்டவம் புரிய
எடுத்த சேவடியார் அருளினால் "தரளம் எறிபுனல் மறி
1.5.108

திரைப் பொன்னி
மடுத்த நீள் வண்ணப் பண்ணை ஆரூரில் வருக
நம்பால்" என வானில்
அடுத்த போதினில் வந்து எழுந்தது ஓர் நாதம்
கேட்டலும் அது உணர்ந்து எழுந்தார்.

255 ஆடு கின்றவர் பேர் அருளினால் நிகழ்ந்த அப் பணி
சென்னி மேற் கொண்டு
சூடு தங்கரங்கள் அஞ்சலி கொண்டு தொழுந் தொறும்
புறவிடை கொண்டு
மாடு பேரொளியின் வளரும் அம்பலத்தை வலங்
கொண்டு வணங்கினர் போந்து
நீடுவான் பணிய உயர்ந்த பொன் வரை போல் நிலை
எழு கோபுரங் கடந்து. 1.5.109

256 நின்று கோபுரத்தை நிலமுறப் பணிந்து நெடுந்
திருவீதியை வணங்கி
மன்றலார் செல்வ மறுகினூடேகி மன்னிய திருப்பதி
அதனில்
தென்திசை வாயில் கடந்து முன் போந்து சேட்படுந்
திரு எல்லை இறைஞ்சிக்
கொன்றை வார் சடையான் அருளையே நினைவார்
கொள்ளிடத் திருநதி கடந்தார். 1.5.110

257 புறந் தருவார் போற்றி இசைப்ப புரி முந்நூல்
அணிமார்பர்
அறம் பயந்தாள் திருமுலைப் பால் அமுதுண்டு
வளர்ந்தவர் தாம்
பிறந்து அருளும் பெரும்பேறு பெற்றது என
முற்றுலகில்
சிறந்த புகழ்க் கழுமலமாம் திருப்பதியைச் சென்று
அணைந்தார். 1.5.111

258 பிள்ளையார் திரு அவதாரம் செய்த பெரும் புகலி
உள்ளூர் நான் மிதியேன் என்றூர் எல்லைப் புறம்
வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழுதின் மங்கை இடங்
கொள்ளுமால் விடையானும் எதிர் காட்சி கொடுத்து
அருள. 1.5.112

259 மண்டிய பேரன்பினால் வன்தொண்டர் நின்று
இறைஞ்சித்
தெண் திரை வேலையில் மிதந்த திருத் தேணி புரத்
1.5.113

தாரைக்
கண்டு கொண்டேன் கயிலையினில் வீற்று இருந்த
படி என்று
பண்டரும் இன்னிசை பயின்ற திருப் பதிகம் பாடினார்.

260 இருக்கோலம் இடும்பெருமான் எதிர் நின்றும் எழுந்து
அருள
வெருக் கோளுற்றது நீங்க ஆரூர் மேற் செல
விரும்பிப்
பெருக்கோதம் சூழ்புறவப் பெரும் பதியை வணங்கிப்
போய்த்
திருக்கோலக்கா வணங்கி செந்தமிழ் மாலைகள் பாடி. 1.5.114

261 தேன் ஆர்க்கும் மலர்ச் சோலைத் திருப் புன்கூர் நம்பர்
பால்
ஆனாப் பேரன்பு மிக அடி பணிந்து தமிழ் பாடி
மானார்க்கும் கரதலத்தார் மகிழ்த இடம் பல
வணங்கிக்
கானார்க்கும் மலர்த் தடஞ் சூழ் காவிரியின் கரை
அணைந்தார். 1.5.115

262 வம்புலா மலர் அலை மணிகொழித்து வந்திழியும்
பைம் பொன் வார் கரைப் பொன்னிப் பயில் தீர்த்தம்
படிந்தாடி
தம்பிரான் மயிலாடுதுறை வணங்கித் தாவில் சீர்
அம்பர் மாகாளத்தின் அமர்ந்த பிரான் அடி பணிந்தார். 1.5.116

263 மின்னார் செஞ்சடை அண்ணல் விரும்பு
திருப்புகலூரை
முன்னாகப் பணிந்தேத்தி முதல்வன் தன் அருள்
நினைந்து
பொன்னாரும் உத்தரியம் புரி முந்நூல் அணி மார்பர்
தென் நாவலூராளி திருவாரூர் சென்று அணைந்தார். 1.5.117

264 தேர் ஆரும் நெடு வீதித் திருவாரூர் வாழ்வார்க்கு
"ஆராத காதலின் நம் ஆரூரன் நாம் அழைக்க
வாரா நின்றான் அவனை மகிழ்ந்து எதிர் கொள்வீர்"
என்று
நீராரும் சடை முடிமேல் நிலவணிந்தார் அருள்
செய்தார். 1.5.118

265 தம்பிரான் அருள் செய்த திருத் தொண்டர் அது சாற்றி
"எம் பிரானார் அருள் தான் இருந்த பரிசு இதுவானால்
நம் பிரானார் ஆவார் அவரன்றே" எனும் நலத்தால்
1.5.119

உம்பர் நாடு இழிந்தது என எதிர் கொள்ள உடன்
எழுந்தார்.

266 மாளிகைகள் மண்டபங்கள் மருங்கு பெருங் கொடி
நெருங்கத்
தாளின் நெடுந் தோரணமும் தழைக் கமுகும் குழைத்
தொடையும்
நீள் இலைய கதலிகளும் நிறைந்த பசும்
பொற்றசும்பும்
ஒளி நெடு மணிவிளக்கும் உயர் வாயில் தொறும்
நிரைத்தார். 1.5.120

267 சோதி மணி வேதிகைகள் தூ நறுஞ் சாந்து அணி நீவிக்
கோதில் பொரி பொற் சுண்ணங் குளிர் தரள மணி
பரப்பி
தாதிவர் பூந் தொடை மாலைத் தண் பந்தர்களுஞ்
சமைத்து
வீதிகள் நுண் துகள் அடங்க விரைப் பனிநீர்
மிகத்தெளித்தார். 1.5.121

268 மங்கல கீதம் பாட மழை நிகர் தூரியம் முழங்கச்
செங் கயற் கண் முற்றிழையார் தெற்றி தொறும் நடம்
பயில
நங்கள் பிரான் திருவாரூர் நகர் வாழ்வார் நம்பியை
முன்
பொங்கெயில் நீள் திருவாயில் புறம் உறவந்து
எதிர்கொண்டார். 1.5.122

269 வந்து எதிர் கொண்டு வணங்குவார் முன்
வன்தொண்டர் அஞ்சலி கூப்பி வந்து
சிந்தை களிப்புற வீதியூடு செல்வார் திருத் தொண்டர்
தம்மை நோக்கி
"எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும்
ஆள்வரோ கேளீர்" என்னும்
சந்த இசைப் பதிகங்கள் பாடித் தம் பெருமான்
திருவாயில் சார்ந்தார். 1.5.123

270 வானுற நீள் திரு வாயில் நோக்கி மண்ணுற ஐந்து
உறுப்பால் வணங்கித்
தேனுறை கற்பக வாசமாலைத் தேவாசிரியன்
தொழுது இறைஞ்சி
ஊனும் உயிரும் உருக்கும் அன்பால் உச்சி குவித்த
செங்கைகள்டும்

1.5.124

தூநறுங் கொன்றையான் மூலட்டானம் சூழ் திரு
மாளிகை வாயில் புக்கார்.

271 புற்றிடங் கொண்ட புராதனனைப் பூங்கோயில் மேய
பிரானையார்க்கும்
பற்று இடம் ஆய பரம் பொருளைப் பார்ப்பதி பாகனை
பங்கயத்தாள்
அர்ச்சனை செய்ய அருள் புரிந்த அண்ணலை
மண்மிசை வீழ்ந்து இறைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோன் உடம்பால் நன்மையின்
தன்மையை மெய்ம்மை பெற்றார். 1.5.125

272 அன்பு பெருக உருகி உள்ளம் அலைய அட்டாங்க
பஞ்சாங்கம் ஆக
முன்பு முறைமை யினால் வணங்கி முடிவு இலாக்
காதல் முதிர ஓங்கி
நன் புலன் ஆகிய ஐந்தும் ஒன்றி நாயகன் சேவடி
எய்தப் பெற்ற
இன்ப வெள்ளத்திடை மூழ்கி நின்றே இன்னிசை
வண்டமிழ் மாலை பாட . 1.5.126

273 வாழிய மா மறைப் புற்றிடங்கொள் மன்னவனார்
அருளாலோர் வாக்கு
"தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம் நாம்
முன்பு தொண்டு கொண்ட
வேள்வியில் அன்று நீ கொண்ட கோலம் என்றும்
புனைந்து நின் வேட்கை தீர
வாழி மண் மேல் விளையாடுவாய்" என்று ஆரூரர்
கேட்க எழுந்தது அன்றே. 1.5.127

274 கேட்க விரும்பி வன்றொண்டர் என்றும் கேடு
இலாதானை இறைஞ்சி நின்றே
ஆட்கொள வந்த மறையவனே ஆரூர் அமர்ந்த
அருமணியே
வாட்கயல் கொண்ட கண்மங்கை பங்கா! மற்று உன்
பெரிய கருணை அன்றே
நாட்கமலப் பதம் தந்தது இன்று நாயினேனை
பொருளாக என்றார். 1.5.128

275 என்று பல முறையால் வணங்கி எய்திய உள்ளக்
களிப்பினொடும்
வென்றி அடல் விடைபோல் நடந்து வீதி விடங்கப்
பெருமான் முன்பு

1.5.129

சென்று தொழுது துதித்து வாழ்ந்து திருமாளிகை
வலம் செய்து போந்தார்
அன்று முதல் அடியார்கள் எல்லாம் தம்பிரான் தோழர்
என்றே அழைத்தார்.

276 மைவளர் கண்டர் அருளினாலே வண்டமிழ் நாவலர்
தம் பெருமான்
சைவ விடங்கின் அணிபுனைந்து சாந்தமும்
மாலையும் தாரும் ஆகி
மெய் வளர் கோலம் எல்லாம் பொலிய மிக்க
விழுத்தவ வேந்தர் என்னத்
தெய்வ மணிப் புற்றுளாரைப் பாடித்திளைத்து
மகிழ்வொடுஞ் செல்லா நின்றார். 1.5.130

277 இதற்கு முன் எல்லை இல்லாத் திரு நகர் இதனுள்
வந்து
முதல் பெருங் கயிலை ஆதி முதல்வர் தம்
பங்கினாட்குப்
பொதுக் கடிந்து உரிமை செய்யும் பூங்குழற்
சேடிமாரில்
கதிர்த்த பூண் ஏந்து கொங்கை கமலினி அவதரித்தாள். 1.5.131

278 கதிர் மணி பிறந்தது என்ன உருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும்
நாமம்
விதியுளி விளக்கத்தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதியணி புனிதன் நன்னாள் மங்கல அணியால்
சாற்றி. 1.5.132

279 பரவினர் காப்புப் போற்றிப் பயில் பெருஞ் சுற்றம்
திங்கள்
விரவிய பருவம் தோறும் விழா அணி எடுப்ப
மிக்கோர்
"வர மலர் மங்கை இங்கு வந்தனள்" என்று சிந்தை
தர வரு மகிழ்ச்சி பொங்கத் தளர் நடைப் பருவஞ்
சேர்ந்தார். 1.5.133

280 மானிளம் பிணையோ? தெய்வ வளரிள முகையோ?
வாசத்
தேனிளம் பதமோ? வேலைத் திரை இளம் பவள
வல்லிக்
கானிளம் கொடியோ? திங்கள் கதிரிளங் கொழுந்தோ?
காமன்

1.5.134

தானிளம் பருவம் கற்கும் தனி இளந் தனுவோ என்ன.

281 நாடும் இன் பொற்பு வாய்ப்பு நாளும் நாள் வளர்ந்து பொங்க
ஆடும் மென் கழங்கும் பந்தும் அம்மானை ஊசல் இன்ன
பாடும் இன்னிசையும் தங்கள் பனிமலை வல்லி பாதம்
கூடும் அன்பு உருகப் பாடும் கொள்கையோர் குறிப்புத் தோன்ற.. 1.5.135

282 பிள்ளைமைப் பருவம் மீதாம் பேதைமைப் பருவம் நீங்கி
அள்ளூதற்கு அமைந்த பொற் பால் அநங்கன் மெய்த் தனங்கள் ஈட்டம்
கெள்ள மிக்குயர்வ போன்ற கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
உள்ள மெய்த் தன்மை முன்னை உண்மையும் தோன்ற உய்ப்பார் . 1.5.136

283 பாங்கியர் மருங்கு சூழப் படரொளி மறுகு சூழத்
தேங்கமழ் குழலின் வாசம் திசையெலாம் சென்று சூழ
ஓங்கு பூங் கோயில் உள்ளார் ஒருவரை அன்பி னோடும்
பூங்கழல் வணங்க என்றும் போதுவார் ஒருநாட் போந்தார். 1.5.137

284 அணி சிலம்பு அடிகள் பார் வென்றடிப் படுத்தனம் என்று ஆர்ப்ப
மணி கிளர் காஞ்சி அல்குல் வரி அர உலகை வென்ற
துணிவு கொண்டு ஆர்ப்ப மஞ்சு சுரி குழற் கழிய விண்ணும்
பணியும் என்றின வண்டு ஆர்ப்ப பரவையார் போதும் போதில். 1.5.138

285 புற்றிடம் விரும்பினாரைப் போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிசனங்கள் சூழ ஆளுடை நம்பி
நற் பெரும் பான்மை கூட்ட நகைபொதிந்து இலங்கு செவ்வாய்
விற் புரை நுதலின் வேற்கண் விளங்கு இழையவரைக் கண்டார். 1.5.139

286 கற்பகத்தின் பூங் கொம்போ? காமன் தன் பெரு
வாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்
சுமந்து
விற் குவளை பவள மலர் மதிபூத்த விரைக்
கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன் என்று
அதிசயித்தார் 1.5.140

287 ஓவிய நான்முகன் எழுத ஒண்ணாமை உள்ளத்தால்
மேவிய தன் வருத்தமுற விதித்ததொரு மணி
விளக்கோ
மூவுலகின் பயனாகி முன் நின்றது என நினைந்து
நாவலர் காவலர் நின்றார் நடு நின்றார் படை மதனார். 1.5.141

288 தண்டரள மணித் தோடும் தகைத்தோடும் கடை
பிறழும்
கெண்டை நெடுங் கண் வியப்பப் கிளர் ஒளிப் பூண்
உரவோனை
அண்டர் பிரான் திருவருளால் அயல் அறியா மனம்
விரும்பப்
பண்டை விதி கடை கூட்டப் பரவையாருங் கண்டார். 1.5.142

289 கண் கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர்
விரிப்ப
விண் கொள்ளாப் பேரொளியான் எதிர் நோக்கும்
மெல்லியலுக்கு
எண் கொள்ளா காதலின் முன்பு எய்தாத ஒரு வேட்கை
மண் கொள்ளா நாண் மடம் அச்சம் பயிர்ப்பை வலிந்து
எழலும் . 1.5.143

290 முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ? பெருகு
ஒளியால்
தன்னேரில் மாரனோ? தார் மார்பின் விஞ்சையனோ?
மின் நேர் செஞ் சடை அண்ணல் மெய்யருள் பெற்று
உடையவனோ?
என்னே என் மனம் திரித்த இவன் யாரோ என
நினைந்தார். 1.5.144

291 அண்ணல் அவன் தன் மருங்கே அளவு இறந்த
காதலினால்
உண்ணிறையும் குணம் நான்கும் ஒரு புடைச்
சாய்ந்தன எனினும்

1.5.145

வண்ண மலர்க் கரும் கூந்தல் மடக் கொடியை
வலிதாக்கிக்
கண் நுதலைத் தொழும் அன்பே கைக் கொண்டு
செலவுய்ப்ப.

292 பாங்கு ஓடிச் சிலை வளைத்துப் படை அநங்கன் விடு
பாணம்
தாங்கோலி எம் மருங்கும் தடை செய்ய மடவரலும்
தேங்கோதை மலர்க் குழல் மேல் சிறை வண்டு
கலந்து ஆர்ப்பப்
பூங்கோயில் அமர்ந்த பிரான் பொற் கோயில் போய்ப்
புகுந்தான். 1.5.146

293 வன்தொண்டர் அது கண்டு "என் மனம் கொண்ட
மயில் இயலின்
இன் தொண்டைச் செங்கனி வாய் இளங் கொடி தான்
யார்" என்ன
அன்றங்கு முன் நின்றார் அவர் நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கும் சேர்வு அரியார் எனச்
செப்ப. 1.5.147

294 "பேர் பரவை பெண்மையினில் பெரும் பரவை
விரும்பல்குல்
ஆர்பரவை அணி திகழும் மணி முறுவல் அரும்
பரவை
சீர் பரவை ஆயினாள் திரு உருவின் மென் சாயல்
ஏர் பரவை இடைப் பட்ட என் ஆசை எழு பரவை". 1.5.148

295 என்றினைய பலவும் நினைந்து எம்பெருமான் அருள்
வகையான்
முன் தொடர்ந்து வருங் காதல் முறைமை யினால்
தொடக்குண்டு
"நன்று எனை ஆட் கொண்டவர் பால் நண்ணுவன்"
என்றுள் மகிழ்ந்து
சென்றுடைய நம்பியும் போய்த் தேவர் பிரான்
கோயில் புக. 1.5.149

296 பரவையார் வலங் கொண்டு பணிந்து ஏத்தி முன்னரே
புரவலனார் கோயிலின் நின்று ஒரு மருங்கு
புறப்பட்டார்
விரவு பெருங் காதலினால் மெல்லியலார் தமை
வேண்டி
அரவின் ஆரம் புனைந்தார் அடி பணிந்தார் ஆரூரர். 1.5.150

297 அவ்வாறு பணிந்து ஏத்தி அணி ஆரூர் மணிப் புற்றின்
மை வாழும் திரு மிடற்று வானவர் பால் நின்றும்
போந்து
எவ்வாறு சென்றாள் என் இன்னுயிராம் அன்னம் எனச்
செவ்வாய் வெண் நகைக் கொடியைத் தேடுவார்
ஆயினார். 1.5.151

298 "பாசமாம் வினைப் பற்று அறுப்பான் மிகும்
ஆசை மேலும் ஓர் ஆசை அளிப்பதோர்
தேசின் மன்னி என் சிந்தை மயக்கிய
ஈசனார் அருள் என் நெறிச் சென்றதே". 1.5.152

299 "உம்பர் நாயகர் தங்கழல் அல்லது
நம்புமாறு அறியேனை நடுக்குற
வம்பு மால் செய்து வல்லியின் ஒல்கியின்று
எம் பிரான் அருள் எந்நெறிச் சென்றதே". 1.5.153

300 "பந்தம் வீடு தரும் பரமன் கழல்
சிந்தை ஆரவும் உன்னும் என் சிந்தையை
வந்து மால் செய்து மான் எனவே விழித்து
எந்தையார் அருள் எந் நெறிச் சென்றதே 1.5.154

301 என்று சாலவும் ஆற்றலர்" என்னுயிர்
நின்றது எங்கு என நித்திலப் பூண் முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவ ஆசிரியனைச் சேர்ந்த பின். 1.5.155

302 காவி நேர் வரும் கண்ணியை நண்ணுவான்
யாவரோடும் உரையியம்பாது இருந்து
"ஆவி நல்குவார் ஆரூரை ஆண்டவர்
பூவின் மங்கையைத் தந்து" எனும் போழ்தினில் . 1.5.156

303 நாட்டு நல்லிசை நாவலூரன் சிந்தை
வேட்ட மின்னிடை இன் அமுதத்தினைக்
காட்டுவன் கடலை கடைந்தது என்ப போல்
பூட்டும் ஏழ் பரித் தேரோன் கடல் புக. 1.5.157

304 எய்து மென் பெடையோடும் இரை தேர்ந்து உண்டு
பொய்கையிற் பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கை கண் மேற்செல வந்தது
பையுள் மாலை தமியோர் புனிப்புற. 1.5.158

305 பஞ்சின் மெல் அடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள் தம் வல் வினையும் அரன்
அஞ்சு எழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்ட வான். 1.5.159

306 "மறுவில் சிந்தை வன்தொண்டர் வருந்தினால்
இறு மருங்குலார்க்கு யார் பிழைப்பார்" என்று
நறு மலர்க் கங்குல் நங்கை முன் கொண்ட புன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெண் நிலா . 1.5.160

307 அரந்தை செய்வார்க்கு அழுங்கித் தம் ஆருயிர்
வரன் கை தீண்ட மலர் குலமாதர் போல்
பரந்த வெம் பகற்கொல்கிப் பனி மதிக்
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிரவம். 1.5.161

308 தோற்றும் மன் உயிர்கட்கு எலாம் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்து போய்
ஆற்ற அண்டம் எலாம் பரந்து அண்ணல் வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள் நிலா. 1.5.162

309 வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவலூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர் பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினார். 1.5.163

310 "தந்திருக் கண் எரிதழலிற் பட்டு
வெந்த காமன் வெளியே உருச் செய்து
வந்து என் முன் நின்று வாளி தொடுப்பதே
எந்தையார் அருள் இவ் வண்ணமோ?" என்பார். 1.5.164

311 ஆர்த்தி கண்டும் என் மேல் நின்று அழல் கதிர்
தூர்ப்பதே! எனைத் தொண்டு கொண்டு ஆண்டவர்
நீர்த் தரங்க நெடுங் கங்கை நீள் முடிச்
சாத்தும் வெண் மதி போன்றிலை தண் மதி!. 1.5.165

312 "அடுத்து மேன் மேல் அலைத்து எழும் ஆழியே
தடுத்து முன் எனை ஆண்டவர் தாம் உணக்
கடுத்த நஞ்சுன் தரங்கக் கரங்களால்
எடுத்து நீட்டு நீ என்னை இன்று என் செயாய் ?" 1.5.166

313 "பிறந்தது எங்கள் பிரான் மலயத்து இடைச்
சிறந்து அணைந்தது தெய்வ நீர் நாட்டினில்
புறம் பணைத் தடம் பொங்கழல் வீசிட
மறம் பயின்றது எங்கோ? தமிழ் மாருதம்!" 1.5.167

314 இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்
மன்னு காதலன் ஆகிய வள்ளல் பால்
தன் அரும் பெறல் நெஞ்சு தயங்கப் போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம். 1.5.168

315 கனங்கொண்ட மணி கண்டர் கழல்
வணங்கிக் கணவனை முன் பெறுவாள் போல 1.5.169

இனங் கொண்ட சேடியர்கள் புடை சூழ எய்து பெருங்
காதலோடும்
தனங் கொண்டு தளர் மருங்குற் பரவையும்
வன்தொண்டர் பால்
தனித்துச் சென்ற மனங்கொண்டு வரும் பெரிய மயல்
கொண்டு தன்மணிமாளிகையைச் சார்ந்தாள்.

316 சீறடி மேல் நூபுரங்கள் அறிந்தன போல் சிறிதளவே
ஒலிப்ப முன்னர்
வேறொருவர் உடன் பேசாள் மெல்ல அடி ஒதுங்கி
மாளிகையின் மேலால்
ஏறி மரகதத் தூணத்து இலங்கு மணி வேதிகையில்
நலங் கொள் பொற் கால்
மாறில் மலர்ச் சேக்கை மிசை மணி நிலா முன்றில்
மருங்கிருந்தாள் வந்து. 1.5.170

317 அவ்வளவில் அருகிருந்த சேடிதனை முகநோக்கி
"ஆரூர் ஆண்ட
மைவிரவு கண்டாரை நாம் வணங்கப் போம்
மறுகெதிர் வந்தவரார்?" என்ன
"இவ்வுலகில் அந்தணராய் இருவர் தேடொருவர் தாம்
எதிர் நின்று ஆண்ட
சைவ முதல் திருத் தொண்டர் தம்பிரான் தோழனார்
நம்பி" என்றாள். 1.5.171

318 என்றவுரை கேட்டலுமே "எம் பிரான் தமரேயோ"
என்னா முன்னம்
வன் தொண்டர் பால் வைத்த மனக் காதல் அளவு
இன்றி வளர்ந்து பொங்க
நின்ற நிறை நாண்முதலாங் குணங்களுடன் நீங்க
உயிர் ஒன்றும் தாங்கி
மின் தயங்கு நுண் இடையாள் வெவ்வுயிர்த்து மெல்
அணை மேல் வீழ்ந்த போது. 1.5.172

319 ஆர நறுஞ் சேறு ஆட்டி அரும் பனி நீர் நறுந்திவலை
அருகு வீசி
ஈர இளந் தளிர்க்குளிரி படுத்து மடவார் செய்த
இவையும் எல்லாம்
பேரழலின் நெய் சொரிந்தால் ஒத்தன மற்று அதன் மீது
சமிதை என்ன
மாரனும் தன் பெருஞ் சிலையின் வலிகாட்டி மலர்
வாளி சொரிந்தான் வந்து. 1.5.173

320 மலரமளித் துயில் ஆற்றாள் வரும் தென்றல் மருங்கு
ஆற்றாள் மங்குல் வானில்
நிலவுமிழும் தழல் ஆற்றாள் நிறை ஆற்றும் பொறை
ஆற்றா நீர்மை யோடும்
கலவ மயில் என எழுந்து கருங் குழலின் பரமாற்றாக்
கையள் ஆகி
இலவ இதழ்ச் செந்துவர் வாய் நெகிழ்ந்து
ஆற்றாமையின் வறிதே இன்ன சொன்னாள். 1.5.174

321 கந்தம் கமழ் மென் குழலீர்! இது என்? கலை வாண்
மதியம் கனல்வான் எனை இச்
சந்தின் தழலைப் பனி நீர் அளவித் தடவுங் கொடியீர்!
தவிரீர்! தவிரீர்!
வந்து இங்கு உலவும் நிலவும் விரையார்
மலையானிலமும் எரியாய் வருமால்
அந்தண் புனலும் அரவும் விரவும் சடையான் அருள்
பெற்றுடையார் அருளார்". 1.5.175

322 "புலரும் படி யன்றி இரவென்னளவும்; பொறையும்
நிறையும் இறையும் தரியா,
உலரும் தனமும் மனமும் வினையேன் ஒருவேன்
அளவோ? பெரு வாழ்வுரையீர்
பலரும் புரியும் துயர்தான் இதுவோ படை மன்
மதனார் புடை நின்று அகலார்!
அலரும் நிலவும் மலரும் முடியார் அருள் பெற்று
உடையார் அவரோ அறியார் 1.5.176

323 "தேரும் கொடியும் மிடையும் மறுகில் திருவா ரூரிர்!
நீரே அல்லால்
ஆரென் துயரம் அறிவார்? அடிகேள் அடியேன் அயரும்
படியோ இதுதான்?
நீரும் பிறையும் பொறிவாள் அரவின் நிரையும் நிரை
வெண்டலையின் புடையே
ஊரும் சடையீர்! விடைமேல் வருவீர்! உமது
அன்பிலர் போல் யானோ உறுவேன்? 1.5.177

324 என்றின்னவெ பலவும் புகலும் இருளார் அளகச் சுருள்
ஓதியையும்
வன் தொண்டரையும் படிமேல் வர முன்பு
அருளுவான் அருளும் வகையார் நினைவார்
சென்று உம்பர்களும் பணியும் செல்வத் திருவாரூர்
வாழ் பெருமான் அடிகள்
அன்று அங்கு அவர் மன்றலை நீர் செயும் என்று 1.5.178

அடியார் அறியும் படியால் அருளி.

325 மன்னும் புகழ் நாவலர் கோன் மகிழ "மங்கை பரவை
தன்னைத் தந்தோம்
இன்னவ்வகை நம் அடியார் அறியும் படியே உரை
செய்தனம்" என்று அருளிப்
பொன்னின் புரி புன் சடையன் விடையன் பொருமா
கரியின் உரிவை புனைவான்
அன்னந் நடையாள் பரவைக்கு "அணியது ஆரூரன்
பால் மணம்" என்று அருள. 1.5.179

326 காமத் துயரில் கவல்வார் நெஞ்சிற் கரையில்
இருளும் கங்குல் கழி போம்
யாமத்து இருளும் புலரக் கதிரோன் எழுகாலையில்
வந்து அடியார் கூடிச்
சேமத் துணையாம் அவர் பேர் அருளைத் தொழுதே
திரு நாவலர் கோன் மகிழத்
தாமக் குழலாள் பரவை வதுவை தகு நீர்மை யினால்
நிகழச் செய்தார். 1.5.180

327 தென் நாவலூர் மன்னன் தேவர் பிரான் திருவருளால்
மின்னாருங் கொடி மருங்குல் பரவை எனும்
மெல்லியல் தன்
பொன் ஆரும் முலை ஓங்கல் புணர் குவடே
சார்வாகப்
பன்னாளும் பயில் யோக பரம்பரையின் விரும்பினார். 1.5.181

328 தன்னையாளுடைய பிரான் சரணர விந்த மலர்
சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்
பதிகம்
பன்னு தமிழ்த் தொடை மாலை பல சாத்திப் பரவை
எனும்
மின்னிடையாள் உடன் கூடி விளையாடிச்
செல்கின்றார். 1.5.182

329 மாது உடன் கூட வைகி மாளிகை மருங்கு சோலை
போதலர் வாவி மாடு செய் குன்றின் புடையோர்
தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச் செழுந் தவிசி இழிந்து தங்கள்
நாதர் பூங் கோயில் நண்ணிக் கும்பிடும் விருப்பால்
நம்பி. 1.5.183

330 அந்தரத்து அமரர் போற்றும் அணி கிளர் ஆடை
சாத்திச்
1.5.184

சந்தனத்து அளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியஞ் சாத்திச் சுடர் மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின் மேலாம் எழில் மிக விளங்கித்
தோன்ற

331 கையினிற் புனை பொற்கோலும் காதினில் இலங்கு
தோடும்
மெய்யினில் துவளு நூலும் நெற்றியில் விளங்கும்
நீறும்
ஐயனுக்கு அழகு இதாம் என்று ஆயிழை மகளிர்
போற்றச்
சைவ மெய்த் திருவின் கோலம் தழைப்ப வீதியினைச்
சார்ந்தார் 1.5.185

332 "நாவலூர் வந்த சைவ நற் தவக் களிறே" என்றும்
"மேலவர் புரங்கள் செற்ற விடையவர்க்கு அன்பர்"
என்றும்
"தாவில் சீர்ப் பெருமை ஆரூர் மறையவர் தலைவ"
என்றும்
மேவினர் இரண்டு பாலும் வேறு வேறாயம் போற்ற. 1.5.186

333 கைக் கிடா குரங்கு கோழி சிவல் கவுதாரி பற்றிப்
பக்கம் முன் போதுவார்கள் பயில் மொழி பயிற்றிச்
செல்ல
மிக்க பூம் பிடகை கொள்வோர் விரையடைப்பையோர்
சூழ
மைக்கருங் கண்ணினார்கள் மறுக நீள் மறுகில்
வந்தார். 1.5.187

334 பொலங் கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்பு போத
இலங்கொளி வலயப் பொற்தோள் இடை
இடைமிடைந்து தொங்கல்
நலங் கிளர் நீழல் சூழ நான்மறை முனிவரோடும்
அலங்கலந் தோளினான் வந்து அணைந்தான்
அண்ணல் கோயில். 1.5.188

335 கண் நுதல் கோயில் தேவ ஆசிரியன் ஆம் காவணத்து
விண்ணவர் ஒழிய மண் மேல் மிக்க சீர் அடியார் கூடி
எண் இலார் இருந்த போதில் இவர்க்கு யான் அடியேன்
ஆகப்
பண்ணு நாள் எந்நாள் என்று பரமர் தாள் பரவிச்
சென்றார். 1.5.189

336 "அடியவர்க்கு அடியன் ஆவேன்" என்னும் ஆதரவு கூரக்
கொடி நெடும் கொற்ற வாயில் பணிந்து கை குவித்துப் புக்கார்
கடி கொள்பூங் கொன்றை வேய்ந்தார் அவர்க்கு எதிர் காணக் காட்டும்
படி எதிர் தோன்றி நிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு. 1.5.190

337 மன் பெருந் திருமா மறை வண்டு சூழ்ந்(து)
அன்பர் சிந்தை அலர்ந்த செந் தாமரை
நன் பெரும் பரம ஆனந்த நன் மது
என் தரத்தும் அளித்து எதிர் நின்றன. 1.5.191

338 ஞாலம் உய்ய நடம் மன்றுள் ஆடின;
காலன் ஆருயிர் மாளக் கருத்தன;
மாலை தாழ் குழல் மாமலையாள் செங் கை
சீலம் ஆக வருடச் சிவந்தன. 1.5.192

339 நீதி மாதவர் நெஞ்சில் பொலிந்தன;
வேதி யாதவர் தம்மை வேதிப்பன;
சோதியாய் எழுஞ் சோதியுட் சோதிய ;
ஆதி மால் அயன் காணா அளவின . 1.5.193

340 வேதம் ஆரணம் மேல் கொண்டு இருந்தன;
பேதையேன் செய் பிழை பொறுத்து ஆண்டன;
ஏதம் ஆனவை தீர்க்க இசைந்தன;
பூத நாத! நின் புண்டரீகப் பதம் . 1.5.194

341 இன்னவாறு ஏத்து நம்பிக் கேறு சேவகனார் தாமும்
அந் நிலை அவர்தாம் வேண்டும் அதனையே அருள வேண்டி
மன்னு சீர் அடியார் தங்கள் வழித் தொண்டை உணர நல்கிப்
பின்னையும் அவர்கள் தங்கள் பெருமையை அருளிச் செய்வார். 1.5.195

342 "பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்; ஊனம் மேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்; இவரை நீ அடைவாய்" என்று 1.5.196

343 நாதனார் அருளிச் செய்ய நம்பி ஆரூரர்" நான் இங்கு
ஏதந் தீர் நெறியைப் பெற்றேன்" என்றெதிர் வணங்கிப்
போற்ற
" நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்து நீ நிறை சொன்
மாலை
கோதிலா வாய்மையாலே பா"டென அண்ணல் கூற. 1.5.197

344 தன்னை ஆளுடைய நாதன் தான் அருள் செய்யக்
கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப்பாடி நாடர்
"இன்னவாறு இன்ன பண்பு என்று ஏத்துகேன் அதற்கு
யான் யார்
பன்னுபா மாலை பாடும் பரிசு எனக்கு அருள் செய்"
என்ன. 1.5.198

345 தொல்லை மால் வரை பயந்த தூய் ஆள் தன் திருப்
பாகன்
அல்லல் தீர்ந்து உலகு உய்ய மறை அளித்த திரு
வாக்கால்
" தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும்
அடியேன்" என்று
"எல்லையில் வண் புகழாரை எடுத்து இசைப்பா
மொழி" என்றார். 1.5.199

346 மன்னு சீர் வயல் ஆரூர் மன்னவரை வன் தொண்டர்
சென்னியுற அடி வணங்கித் திருவருள் மேல் கொள்
பொழுதில்
முன்னம் மால் அயன் அறியா முதல்வர் தாம் எழுந்து
அருள
அந் நிலை கண்டு அடியவர் பால் சார்வதனுக்கு
அணைகின்றார். 1.5.200

347 தூரத்தே திருக் கூட்டம் பல முறையால் தொழுது
அன்பு
சேரத் தாழ்ந்து எழுந்து அருகு சென்று எய்தி நின்று
அழியா
வீரத்தார் எல்லார்க்கும் தனித் தனி வேறு அடியேன்
என்று
ஆர்வத்தால் திருத் தொண்டத் தொகைப் பதிகம்
அருள் செய்வார். 1.5.201

348 தம் பெருமான் கொடுத்த மொழி முதல் ஆகத் தமிழ்
மாலைச்

1.5.202

செம் பொருளால் திருத் தொண்டத் தொகை ஆன
திருப் பதிகம்
உம்பர் பிரான் தான் அருளும் உணர்வு பெற உலகேத்த
எம் பெருமான் வன் தொண்டர் பாடி அவர் எதிர்
பணிந்தார்.

349 உம்பர் நாயகர் அடியார் பேர் உவகை தாம் எய்த
நம்பி ஆரூரர் திருக் கூட்டத்தின் நடுவணைந்தார்
தம்பிரான் தோழர் அவர் தாம் மொழிந்த தமிழ்
முறையே
எம்பிரான் தமர்கள் திருத் தொண்டு ஏத்தல்
உறுகின்றேன். 1.5.203

திருமலைச் சருக்கம் முற்றிற்று.
சருக்கம் ஒன்றுக்குத் திருவிருத்தம் - 349

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

---

2. தில்லை வாழ் அந்தணர் சருக்கம்

2. 1 தில்லை வாழ் அந்தணர் புராணம்

திருச்சிற்றம்பலம்

350 ஆதியாய் நடுவுமாகி அளவு இலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி
போற்றி 2.1.1

351 கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அரு மறைச் சிறத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச் சிற்றம்பலத்துள்
நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங் கழல் போற்றி
போற்றி 2.1.2

352 போற்றி நீள் தில்லை வாழ் அந்தணர் திறம் புகலல்
உற்றேன்
நீற்றினால் நிறைந்த கோல நிருத்தனுக்கு உரிய
தொண்டாம் 2.1.3

போற்றினார் பெருமைக்கு எல்லை ஆயினார் பேணி வாழும்
ஆற்றினார் பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார்

353 பொங்கிய திருவில் நீடும் பொற்புடைப் பணிகள் ஏந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்து மற்றும்
தங்களுக்கு ஏற்ற பண்பில் தரும் பணித் தலை நின்று உய்த்தே
அங்கணர் கோயில் உள்ளா அகம் படித் தொண்டு செய்வார் 2.1.4

354 வரு முறை எரி மூன்று ஓம்பி மன்னுயிர் அருளால் மல்க
தருமமே பொருளாக் கொண்டு தத்துவ நெறியில் செல்லும்
அருமறை நான்கினோடு ஆறு அங்கமும் பயின்று வல்லார்
திரு நடம் புரிவார்க்கு ஆளாம் திருவினால் சிறந்த சீரார் 2.1.5

355 மறுவிலா மரபின் வந்து மாறிலா ஒழுக்கம் பூண்டார்
அறு தொழில் ஆட்சியாலே அருங்கலி நீக்கி உள்ளார்
உறுவது நீற்றின் செல்வம் எனக் கொளும் உள்ளம் மிக்கார்
பெறுவது சிவன் பால் அன்பாம் பேறு எனப் பெருகி வாழ்வார் 2.1.6

356 ஞானமே முதலாம் நான்கும் நவை அறத் தெரிந்து மிக்கார்
தானமும் தவமும் வல்லார் தகுதியின் பகுதி சார்ந்தார்
ஊனமேல் ஒன்றும் இல்லார் உலகெலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி மனை அறம் புரிந்து வாழ்வார் 2.1.7

357 செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வ வேதியர்கள் ஆனார்
மும்மை ஆயிரவர் தாங்கள் போற்றிட முதல்வனாரை
இம்மையே பெற்று வாழ்வார் இனிப் பெறும் பேறு 2.1.8

ஒன்று இல்லார்
தம்மையே தமக்கு ஒப்பான நிலைமையால்
தலைமை சார்ந்தார்

358 இன்றிவர் பெருமை எம்மால் இயம்பலாம்
எல்லைத்தாமோ
தென் தமிழ்ப் பயனாய் உள்ள திருத் தொண்டத்
தொகை முன் பாட
அன்று வன் தொண்டர் தம்மை அருளிய ஆரூர்
அண்ணல்
முன் திரு வாக்கால் கோத்த முதல் பொருள் ஆனார்
என்றால் 2.1.9

359 அகல் இடத்து உயர்ந்த தில்லை அந்தணர் அகிலம்
எல்லாம்
புகழ் திரு மறையோர் என்றும் பொது நடம் போற்றி
வாழ
நிகழ் திரு நீல கண்டக் குயவனார் நீடு வாய்மை
திகழும் அன்புடைய தொண்டர் செய் தவம் கூறல்
உற்றாம் 2.1.10

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

2.2. திருநீலகண்ட நாயனார் புராணம்

திருச்சிற்றம்பலம்

360 வேதியர் தில்லை மூதூர் வேட் கோவர் குலத்து
வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்து
ஆடும்
நாதனார் கழல்கள் வாழ்தி வழிபடும் நலத்தின் மிக்கார் 2.2.1

361 பொய் கடிந்து அறத்தின் வாழ்வார் புனற் சடை
முடியார்க்கு அன்பர்
மெய் அடியார் கட்கு ஆன செயும் விருப்பில் நின்றார்
வையகம் போற்றும் செய்கை மனை அறம் புரிந்து
வாழ்வார்
சைவ மெய்த் திருவின் சார்வே பொருள் எனச் சாரு
நீரார் 2.2.2

362 அளவிலா மரபின் வாழ்க்கை மண் கலம் அமுதுக்கு ஆக்கி
வளரிளம் திங்கள் கண்ணி மன்றுளார் அடியார்க்கு என்றும்
உள மகிழ் சிறப்பின் மல்க ஓடு அளித்து ஒழுகும் நாளில்
இளமை மீது ஊர இன்பத் துறையினில் எளியர் ஆனார் 2.2.3

363 அவர் தம் கண் மனைவியாரும் அருந்ததி கற்பின் மிக்கார்
புவனங்கள் உய்ய ஐயர் பொங்கு நஞ்சு உண்ண யாம் செய்
தவ நின்று அடுத்தது என்னத் தகைந்து தான் தரித்தது என்று
சிவன் எந்தை கண்டம் தன்னைத் திரு நீல கண்டம் என்பார் 2.2.4

364 ஆன தம் கேள்வர் அங்கோர் பரத்தை பால் அணைந்து நண்ண
மானமுன் பொறாது வந்த ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாஞ் செய்தே உடன் உறைவு இசையார் ஆனார்
தேனலர் கமலப் போதில் திருவினும் உருவம் மிக்கார் 2.2.5

365 மூண்ட அப் புலவி தீர்க்க அன்பனார் முன்பு சென்று
பூண்டயங்கு இளமென் சாயல் பொன் கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும் போதில்
தீண்டுவீர் ஆயின் எம்மைத் திரு நீல கண்டம் என்றார் 2.2.6

366 ஆதியார் நீல கண்டத்து அளவு தாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி எம்மை என்றதனால் மற்றை
மாதரார் தமையும் என் தன் மனத்தினும் தீண்டேன் என்றார் 2.2.7

367 கற்புறு மனைவியாரும் கணவனார்க்கு ஆன எல்லாம்
பொற்புற மெய் உறாமல் பொருந்துவ போற்றிச் செய்ய
இல் புறம்பு ஒழியாது அங் கண் இருவரும் வேறு வைகி
2.2.8

அன்புறு புணர்ச்சி இன்மை அயலறியாமை வாழ்ந்தார்

368 இளமையின் மிக்குளார்கள் இருவரும் அறிய நின்ற
அளவில் சீர் ஆணை போற்றி ஆண்டுகள் பலவும் செல்ல
வள மலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயார் 2.2.9

369 இந் நெறி ஒழுகும் நாளில் எரி தளர்ந்தது என்ன நீண்ட
மின்னொளிர் சடையோன் தானுந் தொண்டரை விளக்கங் காண
நன்னெறி இதுவாம் என்று ஞாலத்தார் விரும்பி உய்யும்
அந் நெறி காட்டும் ஆற்றல் அருள் சிவ யோகி ஆகி 2.2.10

370 கீள் ஒடு கோவணம் சாத்திக் கேடு இலா
வாள் விடு நீற்று ஒளி மலர்ந்த மேனி மெல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர் திரு முண்ட நெற்றியும் 2.2.11

371 நெடுஞ் சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங் கதிர் முறுவல் வெண்ணிலவும் மேம்பட
இடும் பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்து வேட்கோவர் தம் மனையில் நண்ணினார் 2.2.12

372 நண்ணிய தவச் சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர் தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றி செய்து
எண்ணிய வகையினால் எதிர் கொண்டு ஏத்தினார் 2.2.13

373 பிறை வளர் சடை முடிப் பிரானைத் தொண்டர் என்று
உறை உளில் அணைந்து பேர் உவகை கூர்ந்திட
முறைமையின் வழி பட மொழிந்த பூசைகள்
நிறை பெரு விருப்பொடு செய்து நின்ற பின் 2.2.14

374 எம்பிரான் யான் செயும் பணி எது என்றனர்
வம்புலா மலர்ச் சடை வள்ளல் தொண்டனார்
உம்பர் நாயகனும் இவ்வோடு நின்பால் வைத்து
நம்பி நீ தருக நாம் வேண்டும் போது என்று 2.2.15

375 தன்னை ஒப்பு அரியது தலத்துத் தன் உழைத்
துன்னிய யாவையும் தூய்மை செய்வது
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது
இன்ன தன்மையது இது வாங்கு நீ என 2.2.16

376 தொல்லை வேட்கோவர் தம் குலத்துள் தோன்றிய
மல்கு சீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக் கொண்டு
ஒல்லையின் மனையில் ஓர் மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்து வந்து இறையை எய்தினார் 2.2.17

377 வைத்த பின் மறையவர் ஆகி வந்து அருள்
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்து உடன் போய் விடை கொண்டு மீண்டனர்
அத்தர் தாம் அம்பலம் அணைய மேவினார் 2.2.18

378 சால நாள் கழிந்த பின்பு தலைவனார் தாம் முன்
வைத்த
கோலமார் ஓடு தன்னைக் குறி இடத்து அகலப்
போக்கிச்
சீலமார் கொள்கை என்றும் திருந்து வேட்கோவர்
தம்பால்
வாலி தாம் நிலைமை காட்ட முன்பு போல் மனையில்
வந்தார் 2.2.19

379 வந்த பின் தொண்டனாரும் எதிர் வழி பாடு செய்து
சிந்தை செய்து அருளில் எங்கள் செய்தவம் என்று
நிற்ப
முந்தை நாள் உன்பால் வைத்த மெய்யொளி
விளங்கும் ஓடு
தந்து நில் என்றான் எல்லாம் தான் வைத்து வாங்க
வல்லான் 2.2.20

380 என்றவர் விரைந்து கூற இருந்தவர் ஈந்த ஓடு
சென்று முன் கொணர்வான் புக்கார் கண்டிலர்
திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார் தேடியும் காணார் மாயை
ஒன்றும் அங்கு அறிந்திலார் தாம் உரைப்பது ஒன்று
இன்றி நின்றார் 2.2.21

381 மறையவன் ஆகி நின்ற மலைமகள் கேள்வன் தானும்
உறை உளில் புக்கு நின்ற ஒரு பெருந் தொண்டர்
கேட்ட
இறையில் இங்கு எய்தப் புக்காய் தாழ்த்தது என் என்ன
வந்து
கறை மறை மிடற்றினானைக் கை தொழுது
உரைக்கல் உற்றார் 2.2.22

380 இழையணி முந்நூல் மார்பின் எந்தை நீர் தந்து போன
விழை தகும் ஓடு வைத்த வேறு இடம் தேடிக் 2.2.23

காணேன்
பழைய மற்று அதனில் நல்ல பாத்திரம் தருவன்
கொண்டு இப்
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெருமை என்று
இறைஞ்சி நின்றார்

383 சென்னியால் வணங்கி நின்ற தொண்டரைச்
செயிர்த்து நோக்கி
என்னிது மொழிந்தவா நீ யான் வைத்த மண் ஓடு
அன்றிப்
பொன்னினால் அமைத்துத் தந்தாய் ஆயினுங்
கொள்ளேன் போற்ற
முன்னை நான் வைத்த ஓடே கொண்டு வா என்றான்
முன்னோன் 2.2.24

384 கேடு இலாப் பெரியோய் என்பால் வைத்தது
கெடுதலாலே
நாடியும் காணேன் வேறு நல்லது ஓர் ஓடு சால
நீடு செல்வது தான் ஒன்று தருகிறேன் எனவும்
கொள்ளாது
ஊடி நின்று உரைத்தது என் தன் உணர்வு எலாம்
ஒழித்தது என்ன 2.2.25

385 ஆவதென் உன்பால் வைத்த அடைக்கலப் பொருளை
வெளவிப்
பாவகம் பலவும் செய்து பழிக்கு நீ ஒன்றும் நாணாய்
யாவரும் காண உன்னை வளைத்து நான் கொண்டே
அன்றிப்
போவதும் செய்யேன் என்றான் புண்ணியப்
பொருளாய் நின்றான் 2.2.26

386 வளத்தினால் மிக்க ஓடு வெளவினேன் அல்லேன்
ஒல்லை
உளத்தினும் களவிலாமைக்கு என் செய்கேன்
உரையும் என்ன
களத்து நஞ்சு ஒளித்து நின்றான் காதல் உன் மகனைப்
பற்றிக்
குளத்தினில் மூழ்கிப் போ என்று அருளினான்
கொடுமை இல்லான் 2.2.27

387 ஐயர் நீர் அருளிச் செய்த வண்ணம் யான்
செய்வதற்குப்
பொய்யில் சீர்ப் புதல்வன் இல்லை என் செய்கேன்
2.2.28

புகலும் என்ன
மையறு சிறப்பின் மிக்க மனையவள் தன்னைப் பற்றி
மொய் அலர் வாவி புக்கு மூழ்குவாய் என மொழிந்தார்

388 கங்கை நதி கரந்த சடை கரந்து அருளி எதிர் நின்ற
வெங் கண் விடையவர் அருள வேட்கோவர்
உரைசெய்வார்
எங்களில் ஓர் சபதத்தால் உடன் மூழ்க இசைவு
இல்லை
பொங்கு புனல் யான்மூழ்கித் தருகின்றேன் போதும்
என 2.2.29

389 தந்தது முன் தாராதே கொள்ளாமைக்கு உன் மனைவி
அந் தளிர்ச் செங் கைப்பற்றி அலை புனலில்
மூழ்காதே
சிந்தை வலித்து இருக்கின்றாய் தில்லை வாழ்
அந்தணர்கள்
வந்து இருந்த பேர் அவையில் மன்னுவன் யான் எனச்
சென்றார் 2.2.30

390 நல் ஒழுக்கம் தலை நின்றார் நான் மறையின் துறை
போனார்
தில்லை வாழ் அந்தணர்கள் வந்து இருந்த
திருந்தவையில்
எல்லை இலான் முன் செல்ல இருந்தொண்டர் அவர்
தாமும்
மல்கு பெரும் காதலினால் வழக்கு மேலிட்டு
அணைந்தார் 2.2.31

391 அந்தணன் ஆம் எந்தை பிரான் அரு மறையோர் முன்
பகர்வான்
இந்த வேட்கோவன்பால் யான் வைத்த பாத்திரத்தைத்
தந்து ஒழியான் கெடுத்தானேல் தன் மனைவி
கைப்பற்றி
வந்து மூழ்கியும் தாரான் வலி செய்கின்றான் என்றார் 2.2.32

392 நறை கமழும் சடை முடியும் நாற்றோளும் முக்
கண்ணும்
கறை மருவும் திரு மிடரும் கரந்து அருளி எழுந்து
அருளும்
மறையவன் இத்திறம் மொழிய மா மறையோர் உரை
செய்வார்
நிறையுடைய வேட்கோவர் நீர் மொழியும் புகுந்தது
2.2.33

என

393 நீணிதியாம் இது என்று நின்ற இவர் தரும் ஓடு
பேணி நான் வைத்த இடம் பெயர்ந்து கரந்தது
காணேன்
பூண் அணி நூல் மணி மார்பீர் புகுந்த பரிசு இது என்று
சேணிடையும் தீங்கு அடையாத் திருத்தொண்டர்
உரைசெய்தார் 2.2.34

394 திருவுடை அந்தணாளர் செப்புவார் திகழ்ந்த நீற்றின்
உருவுடை இவர் தாம் வைத்த ஓட்டினைக் கொடுத்தீர்
ஆனால்
தருமிவர் குளத்தில் மூழ்கித் தருக என்று உரைத்தார்
ஆகில்
மருவிய மனைவியொடு மூழ்குதல் வழக்கே என்றார் 2.2.35

395 அருந் தவத் தொண்டர் தாமும் அந்தணர் மொழியக்
கேட்டுத்
திருந்திய மனைவியாரைத் தீண்டாமை செப்ப
மாட்டார்
பொருந்திய வகையால் மூழ்கித் தருகின்றேன்
போதும் என்று
பெருந் தவ முனிவரோடும் பெயர்ந்து தம் மனையைச்
சார்ந்தார் 2.2.36

396 மனைவியார் தம்மைக் கொண்டு மறைச் சிவ
யோகியார் முன்
சினவிடைப் பாகர் மேவும் திருப்புலீச் சுரத்து முன்னர்
நனை மலர்ச் சோலை வாவி நண்ணித் தம் உண்மை
காப்பார்
புனை மணி வேணுத் தண்டின் இரு தலை பிடித்துப்
புக்கார் 2.2.37

397 தண்டிரு தலையும் பற்றிப் புகும் அவர் தம்மை
நோக்கி
வெண் திரு நீற்று முண்ட வேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டு உடன் மூழ்கீர் என்னக் கூடாமை பாரோர்
கேட்கப்
பண்டு தம் செய்கை சொல்லி மூழ்கினார் பழுது
இலாதார் 2.2.38

398 வாவியின் மூழ்கி ஏறும் கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும் சிறப்பொடு பொழியுந்
2.2.39

தெய்வப்
பூவின் மா மழையின் மீள மூழ்குவார் போன்று
தோன்ற

399 அந்நிலை அவரைக் காணும் அதிசயம் கண்டார்
எல்லாம்
முன்நிலை நின்ற வேத முதல் வரைக் கண்டார்
இல்லை
இந்நிலை இருந்த வண்ணம் என் என மருண்டு
நின்றார்
துன்னிய விசும்பின் ஊடு துணையுடன் விடை மேல்
கொண்டார் 2.2.40

400 கண்டனர் கைகளாரத் தொழுதனர் கலந்த காதல்
அண்டரும் ஏத்தினார்கள் அன்பர்தம் பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி விடையின் மேல்
வருவார் தம்மைத்
தொண்டரும் மனைவியாரும் தொழுது உடன்
போற்றி நின்றார் 2.2.41

401 மன்றுளே திருக் கூத்து ஆடி அடியவர் மனைகள்
தோறும்
சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர்
தாமும்
வென்ற ஐம் புலனால் மிக்கீர் விருப்புடன் இருக்க
நம்பால்
என்றும் இவ் இளமை நீங்காது என்று எழுந்து
அருளினாரே 2.2.42

402 விறலுடைத் தொண்டனாரும் வெண்ணகைச்
செவ்வாய் மென் தோள்
அறல் இயல் கூந்தல் ஆளாம் மனைவியும் அருளின்
ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து சிவலோகம் அதனை
எய்திப்
பெறல் அரும் இளமை பெற்றுப் பேர் இன்பம் உற்றார்
அன்றே 2.2.43

403 அயல் அறியாத வண்ணம் அண்ணலார் ஆணை
உய்த்த
மயலில் சீர்த் தொண்டனாரை யான் அறிவகையால்
வாழ்த்திப்
புயல் வளர் மாடம் நீடும் பூம்புகார் வணிகர் பொய்யில்
2.2.44

செயல் இயற் பகையார் செய்த திருத் தொண்டு
செப்பல் உற்றேன்.

திருச்சிற்றம்பலம்
உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

2.3 இயற்பகை நாயனார் புராணம்

திருச்சிற்றம்பலம்

404 சென்னி வெண்குடை நீடு அநபாயன் திருக் குலம் புகழ்
பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல் புகழ் மருத நீர் நாட்டு வயல் வளம் தர
இயல்பினில் அளித்துப்
பொன்னி நல் நதி மிக்க நீர் பாய்ந்து புணரி தன்னையும்
புனித மாக்குவதோர்
நன்னெடும் பெரும் தீர்த்த முன்னுடைய நலம்
சிறந்தது வளம் புகார் நகரம் 2.3.1

405 அக் குலப் பதிக் குடி முதல் வணிகர் அளவில்
செல்வத்து வளமையின் அமைந்தார்
செக்கர் வெண் பிறைச் சடையவர் அடிமைத் திறத்தின்
மிக்கவர் மறைச் சிலம்படியார்
மிக்க சீர் அடியார்கள் யார் எனினும் வேண்டும்
யாவையும் இல்லை என்னாதே
இக் கடல் படி நிகழ முன் கொடுக்கும் இயல்பின்
நின்றவர் உலகு இயற் பகையார் 2.3.2

406 ஆறு சூடிய ஐயர் மெய் அடிமை அளவிலாத ஓர் உளம்
நிறை அருளால்
நீறு சேர் திரு மேனியார் மனத்து நினைத்த
யாவையும் வினைப்பட முடித்து
மாறு இலாத நன்னெறியினில் விளங்கும் மனை
அறம் புரி மகிழ்ச்சியின் வந்த
பேறெலாம் அவர் ஏவின செய்யும் பெருமையே எனப்
பேணி வாழ் நாளில் 2.3.3

407 ஆயும் நுண் பொருள் ஆகியும் வெளியே அம்பலத்துள்
நின்று ஆடுவார் உம்பர்
நாயகிக்கும் அஃது அறியவோ பிரியா நங்கைதான்
அறியாமையோ அறியோம்
தூய நீறு பொன் மேனியில் விளங்கத் தூர்த்த 2.3.4

வேடமும் தோன்ற வேதியராய்
மாய வண்ணமே கொண்டு தம் தொண்டர் மாறாத
வண்ணமும் காட்டுவான் வந்தார்

408 வந்து தண்புகார் வணிகர் தம் மறுகின் மருங்கு இயற்
பகையார் மனை புகுந்த
எந்தை எம்பிரான் அடியவர் அணைந்தார் என்று
நின்றதோர் இன்ப ஆதரவால்
சிந்தை அன்பொடு சென்று எதிர் வணங்கிச் சிறப்பின்
மிக்க அர்ச்சனைகள் முன் செய்து
முந்தை எம் பெரும் தவத்தினாலென்கோ முனிவர்
இங்கு எழுந்து அருளியது என்றார் 2.3.5

409 என்று கூறிய இயற்பகையார் முன் எய்தி நின்ற அக்
கைதவ மறையோர்
கொன்ற வார்சடையார் அடியார்கள் குறித்து
வேண்டின குணம் எனக் கொண்டே
ஒன்றும் நீர் எதிர் மறாது உவந்து அளிக்கும் உண்மை
கேட்டு நும் பாலொன்று வேண்டி
இன்று நான் இங்கு வந்தனன் அதனுக்கு இசையலாம்
எனில் இயம்பலாம் என்றார் 2.3.6

410 என்ன அவ்வுரை கேட்டு இயற்பகையார் யாதும்
ஒன்றும் என் பக்கல் உண்டாகில்
அன்னது எம்பிரான் அடியவர் உடைமை ஐயம்
இல்லை நீர் அருள் செயும் என்ன
மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்தது
இங்கு என அங்கணர் எதிரே
சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து தூய
தொண்டனார் தொழுது உரை செய்வார் 2.3.7

411 இது எனக்கு முன்பு உள்ளதே வேண்டி எம் பிரான்
செய்த பேறு எனக்கு என்னாக்
கதுமெனச் சென்று தம் மனைவாழ் வாழ்க்கை கற்பின்
மேம்படு காதலி யாரை
விதி மணக் குல மடந்தை இன்றுனை இம் மெய்த்
தவர்க்கு நான் கொடுத்தனன் என்ன
மது மலர்க் குழலாள் மனைவியார் கலங்கி மனம்
தெளிந்த பின் மற்று இது மொழிவார் 2.3.8

412 இன்று நீர் எனக்கு அருள் செய்தது இதுவேல் என
உயிர்க்கு ஒரு நாத நீர் உரைத்தது
ஒன்றை நான் செயும் அத்தனை அல்லால் உரிமை

2.3.9

வேறு உளதோ எனக்கு என்று
தன் தனிப்பெருங் கணவரை வணங்கத் தாழ்ந்து
தொண்டனார் தாம் எதிர் வணங்க
சென்று மாதவன் சேவடி பணிந்து திகைத்து நின்றனள்
திருவினும் பெரியாள்

413 மாது தன்னை முன் கொடுத்த மாதவர் தாம் மனம்
மகிழ்ந்து பேர் உவகையின் மலர்ந்தே
யாது நான் இனிச் செய் பணி என்றே இறைஞ்சி
நின்றவர் தம் எதிர் நோக்கி
சாதி வேதியர் ஆகிய தலைவர் தையல் தன்னை யான்
தனிக் கொடு போகக்
காதல் மேவிய சுற்றமும் பதியும் கடக்க நீ துணை
போதுக என்றார் 2.3.10

414 என்று அவர் அருளிச் செய்ய யானே முன் செய்
குற்றேவல்
ஒன்றியது தன்னை என்னை உடையவர் அருளிச்
செய்ய
நின்றது பிழையாம் என்று நினைந்து வேறு இடத்துப்
புக்குப்
பொன் திகழ் அறுவை சாத்தி பூங்கச்சுப் பொலிய வீக்கி 2.3.11

415 வாளொடு பலகை ஏந்தி வந்து எதிர் வணங்கி மிக்க
ஆளரி ஏறு போல்வார் அவரை முன் போக்கிப் பின்னே
தோளிணை துணையே ஆகப் போயினார்
துன்னினாரை
நீளிடைப் பட முன் கூடி நிலத்திடை வீழ்த்த நேர்வார் 2.3.12

416 மனைவியார் சுற்றத்தாரும் வள்ளலார் சுற்றத்தாரும்
இனையது ஒன்றி யாரே செய்தார் இயற்பகை பித்தன்
ஆனால்
புனை இழை தன்னைக் கொண்டு போவதாம் ஒருவன்
என்று
துனை பெரும் பழியை மீட்பான் தொடர்வதற்கு
எழுந்து சூழ்வார் 2.3.13

417 வேலொடு வில்லும் வாளும் சுரிகையும் எடுத்து மிக்க
காலென விசையில் சென்று கடிநகர் புறத்துப் போகிப்
பாலிரு மருங்கும் ஈண்டிப் பரந்த ஆர்வம் பொங்க
மால் கடல் கிளர்ந்தது என்ன வந்து எதிர் வளைத்துக்
கொண்டார் 2.3.14

418 வழி விடும் துணை பின் போத வழித்துணை ஆகி
உள்ளார்
கழி பெரும் காதல் காட்டிக் காரிகை உடன் போம்
போதில்
அழிதகன் போகேல் ஈண்டவ் வருங் குலக் கொடியை
விட்டுப்
பழிவிட நீ போ என்று பகர்ந்து எதிர் நிரந்து வந்தார் 2.3.15

419 . மறை முனி அஞ்சினான் போல் மாதினைப் பார்க்க
மாதும்
இறைவனே அஞ்ச வேண்டாம் இயற்பகை வெல்லும்
என்ன
அறை கழல் அண்ணல் கேளா அடியனேன் அவரை
எல்லாம்
தறை இடைப் படுத்துகின்றேன் தளர்ந்து அருள்
செய்யேல் என்று 2.3.16

420 பெரு விறல் ஆளி என்னப் பிறங்கு எரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த படர் பெருஞ் சுற்றத் தாரை
ஒருவரும் எதிர் நில்லாமே ஓடிப் போய்ப் பிழையும்
அன்றேல்
எரி சுடர் வாளில் கூறாய்த் துடிக்கின்றீர் என்று
நேர்ந்தார் 2.3.17

421 ஏட! நீ என் செய்தாயால்? இத்திறம் இயம்பு கின்றாய்
நாடுறு பழியும் ஒன்னார் நகையையும் நாணாய்
இன்று
பாடவம் உரைப்பது உன்றன் மனைவியைப் பனவற்கு
ஈந்தோ
கூடவே மடிவது அன்றிக் கொடுக்க யாம் ஓட்டோ ம்
என்றார் 2.3.18

422 மற்றவர் சொன்ன மாற்றம் கேட்டலும் மனத்தின்
வந்த
செற்ற முன் பொங்க உங்கள் உடல் துணி எங்கும்
சிந்தி
முற்று நும் உயிரை எல்லாம் முதல் விசும்பு ஏற்றிக்
கொண்டு
நற்றவர் தம்மைப் போக விடுவேன் என்று எழுந்தார்
நல்லோர் 2.3.19

423 நேர்ந்தவர் எதிர்ந்த போது நிறைந்த அச் சுற்றத்தாரும்
சார்ந்தவர் தம் முன் செல்லார் தையலைக் கொண்டு
2.3.20

பெற்றம்
ஊர்ந்தவர் படிமேற் செல்ல உற்று எதிர் உடன்று
பொங்கி
ஆர்ந்த வெஞ் சினத்தால் மேல் சென்று அடர்ந்து எதிர்
தடுத்தார் (அன்றே.

424 சென்று அவர் தடுத்த போதில் இயற்பகையார் முன்
சீறி
வன்றுணை வாளே யாகச் சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளும் தாளும் தலைகளும் துணித்து
வீழ்த்து
வென்றடு புலியேறு அன்ன அமர் விளையாட்டில்
மிக்கார் 2.3.21

425 மூண்டு முன் பலராய் வந்தார் தனி வந்து
முட்டினார்கள்
வேண்டிய திசைகள் தோறும் வேறு வேறு அமர் செய்
போழ்தில்
ஆண்டகை வீரர் தாமே அனைவர்க்கும் அனைவர்
ஆகிக்
காண்டகு விசையில் பாய்ந்து கலந்து முன் துணித்து
வீழ்த்தார் 2.3.22

426 சொரிந்தன குடல்கள் எங்கும் துணிந்தன உடல்கள்
எங்கும்
விரிந்தன தலைகள் எங்கும் மிடைந்தன கழுகும்
எங்கும்
எரிந்தன விழிகள் எங்கும் எதிர்ப்பவர் ஒருவர் இன்றித்
திரிந்தனர் களனில் எங்கும் சிவன் கழல் புனைந்த வீரர் 2.3.23

427 மாடலை குருதி பொங்க மடிந்த செங் களத்தின்
நின்றும்
ஆடுறு செயலின் வந்த கிளைஞரோடு அணைந்தார்
தம்மில்
ஓடினார் உள்ளார் உய்ந்தார் ஒழிந்தவர் ஒழிந்தே
மாண்டார்
நீடிய வாளும் தாமும் நின்றவர் தாமே நின்றார் 2.3.24

428 திருவுடை மனைவியாரைக் கொடுத்து இடைச்
செறுத்து முன்பு
வரு பெரும் சுற்றம் எல்லாம் வாளினால் துணித்து
மாட்டி
அருமறை முனியை நோக்கி அடிகள் நீர் அஞ்சா
2.3.25

வண்ணம்
பொருவருங் கானம் நீங்க விடுவன் என்று உடனே
போந்தார்

429 இருவரால் அறிய ஒண்ணா ஒருவர் பின் செல்லும்
ஏழை
பொரு திறல் வீரர் பின்பு போக முன் போகும் போதில்
அருமறை முனிவன் சாய்க்காடு அதன் மருங்கு
அணைய மேவித்
திரு மலி தோளினானை மீள் எனச் செப்பினானே 2.3.26

430 தவ முனி தன்னை மீளச் சொன்ன பின் தலையால்
ஆர
அவன் மலர்ப் பதங்கள் சூடி அஞ்சலி கூப்பி நின்று
புவனம் மூன்று உய்ய வந்த பூசுரன் தன்னை ஏத்தி
இவன் அருள் பெறப் பெற்றேன் என்று
இயற்பகையாரும் மீண்டார் 2.3.27

431 செய்வதற்கு அரிய செய்கை செய்த நல் தொண்டர்
போக
மை திகழ் கண்டன் எண்தோள் மறையவன் மகிழ்ந்து
நோக்கிப்
பொய் தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான்
என்று
மெய் தரு சிந்தையாரை மீளவும் அழைக்கல் உற்றான் 2.3.28

432 இயற்பகை முனிவா ஓலம் ஈண்டு நீ வருவாய் ஓலம்
அயர்ப்பு இலாதானே ஓலம் அன்பனே ஓலம் ஓலம்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம் என்றான்
மயக்கறு மறை ஓலிட்டு மால் அயன் தேட நின்றான் 2.3.29

433 அழைத்த பேர் ஓசை கேளா அடியனேன் வந்தேன்
வந்தேன்
பிழைத்தவர் உளரேல் இன்னும் பெருவலி தடக்கை
வாளின்
இழைத்தவர் ஆகின்றார் என்று இயற்பகையார் வந்து
எய்தக்
குழைப் பொலி காதினானும் மறைந்தனன் கோலம்
கொள்வான் 2.3.30

434 சென்றவர் முனியைக் காணார் சேயிழை தன்னைக்
கண்டார்
பொன்திகழ் குன்று வெள்ளிப் பொருப்பின் மேல்
பொலிந்தது என்ன

2.3.31

தன்துணை உடனே வானில் தலைவனை விடை
மேல் கண்டார்
நின்றிலர் தொழுது வீழ்ந்தார் நிலத்தினின்று எழுந்தார்
நேர்ந்தார்

435 சொல்லுவது அறியேன் வாழி தோற்றிய தோற்றம்
போற்றி
வல்லை வந்து அருளி என்னை வழித்தொண்டு
கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கு அருள் செய்தாய்
போற்றி
தில்லை அம்பலத்துள் ஆடும் சேவடி போற்றி என்ன 2.3.32

436 விண்ணிடை நின்ற வெள்ளை விடையவர் அடியார்
தம்மை
எண்ணிய உலகு தன்னில் இப்படி நம்பால் அன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம் பழுது இலாதாய்
நண்ணிய மனைவி யோடு நம்முடன் போதுக என்று 2.3.33

437 திருவளர் சிறப்பின் மிக்க திருத் தொண்டர் தமக்குந்
தேற்றம்
மருவிய தெய்வக் கற்பின் மனைவியார் தமக்குந் தக்க
பெருகிய அருளின் நீடு பேறு அளித்து இமையோர்
ஏத்தப்
பொரு விடைப் பாகர் மன்னும் பொற் பொது அதனுள்
புக்கார் 2.3.34

438 வானவர் பூவின் மாரி பொழிய மா மறைகள் ஆர்ப்ப
ஞான மா முனிவர் போற்ற நல மிகு சிவலோகத்தில்
ஊனமில் தொண்டர் கும்பிட்டு உடன் உறை பெருமை
பெற்றார்
ஏனைய சுற்றத்தாரும் வானிடை இன்பம் பெற்றார் 2.3.35

439 இன்புறு தாரம் தன்னை ஈசனுக்கு அன்பர் என்றே
துன்புறாது உதவும் தொண்டர் பெருமையைத்
தொழுது வாழ்த்தி
அன்புறு மனத்தால் நாதன் அடியவர்க்கு அன்பு நீடு
மன்புகழ் இளைசை மாறன் வளத்தினை வழுத்தல்
உற்றேன் 2.3.36

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

2.4 இளையான் குடி மாற நாயனார் புராணம்

திருச்சிற்றம்பலம்

440 அம் பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுவார் அடி
சூடுவார்
தம்பிரான் அடிமைத் திறத்து உயர் சால்பின் மேன்மை
தரித்துளார்
நம்பு வாய்மையில் நீடு சூத்திர நற் குலம் செய்
தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கினார் இளையான் குடிப் பதி
மாறனார் 2.4.1

441 ஏரின் மல்கு வளத்தினால் வரும் எல்லை இல்லதொர்
செல்வமும்
நீரின் மல்கிய வேணியார் அடியார் திறத்து
நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய
சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன்
கொள்வார் 2.4.2

442 ஆரம் என்பு புனைந்த ஐயர் தம் அன்பர் என்பதோர்
தன்மையால்
நேர வந்தவர் யாவர் ஆயினும் நித்தம் ஆகிய பத்தி
முன்
கூர வந்து எதிர் கொண்டு கைகள் குவித்து நின்று
செவிப் புலத்து
ஈரம் மென் மதுரப் பதம் பரிவு எய்த முன்னுரை
செய்தபின் 2.4.3

443 கொண்டு வந்து மனைப் புகுந்து குலாவு பாதம்
விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்து இடைவைத்து
அருச்சனை செய்த பின்
உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத் திறத்தினில்
ஒப்பு இலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய
அளித்துளார் 2.4.4

444 ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவு இலார் உளம்
மகிழவே
நாளும் நாளும் நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையின்
2.4.5

நன்மையால்
நீளும் மா நிதியின் பரப்பு நெருங்கு செல்வம் நிலாவி எண்
தோளினார் அளகைக்கு இருத்திய தோழனார் என வாழும் நாள்

445 செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வது அன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆன போதினும் வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நாள் தொறும் மாறி வந்து
ஒல்லையில் வறுமைப் பதம் புக உன்னினார் தில்லை மன்னினார் 2.4.6

446 இன்னவாறு வளம் சுருங்கவும் எம்பிரான் இளையான் குடி
மன்னன் மாறன் மனம் சுருங்குதல் இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டு பின்
முன்னை மாறில் திருப்பணிக் கண் முதிர்ந்த கொள்கையர் ஆயினார் 2.4.7

447 மற்று அவர் செயல் இன்ன தன்மையது ஆக மால் அயனான அக்
கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர் ஆயினர்
பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய பேதையாளுடன் இன்றி ஓர்
நற்றவத்தவர் வேடமே கொடு ஞாலம் உய்ந்திட நண்ணினார் 2.4.8

448 மாரிக் காலத்து இரவினில் வைகியோர் தாரிப்பு இன்றிப் பசி தலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைந்த பின் பண்புற வேரித்து ஆரான் விருந்து எதிர் கொண்டனன் 2.4.9

449 ஈர மேனியை நீக்கி இடங் கொடுத்து ஆர இன்னமுது ஊட்டுதற்கு ஆசையால்
தார மாதரை நோக்கித் தபோதனர் தீரவே பசித்தார் செய்வது என் என்று 2.4.10

450 . நமக்கு முன்பு இங்கு உணவிலை ஆயினும்
இமக் குலக்கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம் இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறு எங்ஙனே அணங்கே என 2.4.11

451 . மாது கூறுவாள் மற்று ஒன்றுங் காண்கிலேன்
ஏதிலாரும் இனித் தருவார் இல்லை
போதும் வைகிற்றுப் போம் இடம் வேறில்லை
தீது செய்வினை யேற்கு என் செயல் 2.4.12

452 .செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர் முளை வாரிக் கொடு வந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று
அல்லது ஒன்று அறியேன் என்று அயர்வுற 2.4.13

453 . மற்ற மாற்றம் மனைவியார் கூற முன்
பெற்ற செல்வம் எனப் பெரிது உள் மகிழ்ந்து
உற்ற காதலினால் ஒருப் பட்டனர்
சுற்று நீர் வயல் செல்லத் தொடங்குவார் 2.4.14

454 .பெருகு வானம் பிறங்க மழை பொழிந்து
அருகு நாப்பண் அறிவருங் கங்குல் தான்
கருகு மை இருளின் கணம் கட்டு விட்டு
உருகு கின்றது போன்றது உலகு எலாம் 2.4.15

455 .எண்ணும் இவ் உலகத்தவர் யாவரும்
துண்ணெனும்படி தோன்ற முன் தோன்றிடில்
வண்ண நீடிய மைக்குழம்பாம் என்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து 2.4.16

456 .உள்ளம் அன்பு கொண்டு ஊக்கவோர் பேரிடாக்
கொள்ள முன் கவித்துக் குறியின் வழிப்
புள்ளும் உறங்கும் வயல் புகப் போயினார்
வள்ளலார் இளையான் குடி மாறனார் 2.4.17

457 .காலினால் தடவிச் சென்று கைகளால்
சாலி வெண் முளை நீர் வழிச் சார்ந்தன
கோலி வாரி இடா நிறையக் கொண்டு
மேல் எடுத்துச் சுமந்து ஒல்லை மீண்டார் 2.4.18

458 .வந்த பின் மனைவியாரும் வாய்தலின் நின்று
வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி
ஊற்றி
வெம் தழல் அடுப்பின் மூட்ட விறகு இல்லை என்ன
மேலோர் 2.4.19

அந்தமில் மனையில் நீடும் அலகினை அறுத்து
வீழ்த்தார்

459 . முறித்து அவை அடுப்பின் மாட்டி முளை வித்துப்
பதம் முன் கொள்ள
வறுத்த பின் அரிசியாக்கி வாக்கிய உலையில் பெய்து
வெறுப்பில் இன் அடிசில் ஆக்கிமேம் படு கற்பின்
மிக்கார்
கறிக்கு இனி என் செய்கோம் என்று இறைஞ்சினார்
கணவனாரை 2.4.20

460 .வழி வரும் இளைப்பின் ஓடும் வருத்திய பசியினாலே
அழிவுறும் ஐயன் என்னும் அன்பினில் பொலிந்து
சென்று
குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழி முதல் பறிப்பார் போலப் பறித்து அவை கறிக்கு
நல்க 2.4.21

461 மனைவியார் கொழுநர் தந்த மனம் மகிழ் கறிகள்
ஆய்ந்து
புனல் இடைக் கழுவித் தக்க புனித பாத்திரத்துக்
கைம்மை
வினையினால் வேறு வேறு கறி அமுது ஆக்கிப்
பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து திருவமுது
அமைத்து நின்று 2.4.22

462 கணவனார் தம்மை நோக்கிக் கறி அமுது ஆன காட்டி
இணை இலாதாரை ஈண்ட அமுது செய்விப்போம்
என்ன
உணவினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்த்த
வேண்டி
அணைய முன் சென்று நின்று அங்கு அவர் துயில்
அகற்றல் உற்றார் 2.4.23

463 அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்டு அமுது செய்து அருள்க
என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்துத்
தோன்றச்
செழுந் திரு மனைவியாரும் தொண்டரும் திகைத்து
நின்றார் 2.4.24

464 மாலயற்கு அரிய நாதன் வடிவு ஒரு சோதி ஆகச்
சாலவே மயங்குவார்க்குச் சங்கரன் தான் மகிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோடு இடப வாகனனாய்
தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத் தொண்டர் தம்மை
நோக்கி 2.4.25

465 அன்பனே அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்
என் பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன் பெரு நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பம் ஆர்ந்து இருக்க என்றே செய்தான் எவர்க்கும்
மிக்கான் 2.4.26

466 இப்பரிசு இவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி
முப்புரம் செற்றார் அன்பர் முன்பு எழுந்து அருளிப்
போனார்
அப் பெரியவர் தம் தூய அடி இணை தலை மேல்
கொண்டு
மெய்ப் பொருள் சோதி வேந்தன் செயலினை
விளம்பல் உற்றேன் 2.4.27

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

2.5. மெய்ப் பொருள் நாயனார் புராணம்

திருச்சிற்றம்பலம்

467 சேதி நன்னாட்டு நீடு திருக் கோவலூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின் வழி வரு மலாடர் கோமான்
வேத நல் நெறியின் வாய்மை விளங்கிட மேன்மை
பூண்டு
காதலால் ஈசர்க்கு அன்பர் கருத்து அறிந்து ஏவல்
செய்வார் 2.5.1

468 அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமல் காத்து
வரை நெடும்தோளால் வென்று மாற்றலர்
முனைகள் மாற்றி
உரை திறம்பாத நீதி ஓங்கு நீர்மையினின் மிக்கார்
திரை செய் நீர்ச்சடையான் அன்பர் வேடமே சிந்தை
செய்வார் 2.5.2

469 மங்கையைப் பாகமாக உடையவர் மன்னும் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நாயகருக்கு அன்பர் தாளலால் சார்பு ஒன்று இல்லார் 2.5.3

470 தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும் என்று
நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவு அறக் கொடுத்து வந்தார் 2.5.4

471 இன்னவாறு ஒழுகும் நாளில் இகல் திறம் புரிந்து ஓர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர் மேற்கொண்டு
பொன் அணி ஓடை யானைப் பொரு பரி காலாள் மற்றும்
பன் முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனான் 2.5.5

472 இப்படி இழந்த மாற்றான் இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப் பொருள் வேந்தன் சீலம் அறிந்து வெண் நீறு சாத்தும்
அப்பெரு வேடம் கொண்டே அற்றத்தில் வெல்வான் ஆகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக் கோவலூரில் சேர்வான் 2.5.6

473 மெய் எல்லாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி
மை பொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய் தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்த நாதன் 2.5.7

474 மா தவ வேடம் கொண்ட வன்கணான் மாடம் தோறும்
கோதை சூழ் அளக பாரக் குழைக் கொடி ஆட மீது
சோதி வெண் கொடிகள் ஆடுஞ் சுடர் நெடு மறுகில் போகிச்
சேயதிர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான் 2.5.8

475 கடை உடைக் காவலாளர் கை தொழுது ஏற நின்றே
உடையவர் தாமே வந்தார் உள் எழுந்து அருளும்
என்னத்
தடை பல புக்க பின்பு தனித் தடை நின்ற தத்தன்
இடை தெரிந்து அருள வேண்டும் துயில் கொள்ளும்
இறைவன் என்றான் 2.5.9

476 என்று அவன் கூறக் கேட்டே யான் அவற்கு உறுதி கூற
நின்றிடு நீயும் என்றே அவனையும் நீக்கிப் புக்குப்
பொன் திகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே
மன்றலங் குழல் மென் சாயல் மா தேவி இருப்பக்
கண்டான் 2.5.10

477 கண்டு சென்று அணையும் போது கதும் என இழிந்து
தேவி
வண்டலர் மாலையானை எழுப்பிட உணர்ந்து
மன்னன்
அண்டர் நாயகனார் தொண்டராம் எனக் குவித்த
செங்கை
கொண்டு எழுந்து எதிரே சென்று கொள்கையின்
வணங்கி நின்று 2.5.11

478 மங்கலம் பெருக மற்று என் வாழ்வு வந்து
அணைந்தது என்ன
இங்கு எழுந்து அருளப் பெற்றது என் கொலோ என்று
கூற
உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல்
மண்மேல்
எங்கும் இலாதது ஒன்று கொடு வந்தேன் இயம்ப
என்றான் 2.5.12

479 பேறு எனக்கு இதன் மேல் உண்டோ பிரான் அருள்
செய்த இந்த
மாறிலா ஆகமத்தை வாசித்து அருள வேண்டும்
என்ன
நாறு பூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறு இடத்து இருக்க வேண்டும் என்று அவன்
விளம்ப வேந்தன் 2.5.13

480 திருமகள் என்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப்புரத்திடைப் போக ஏவித்
தரு தவ வேடத்தானைத் தவிசின் மேல் இருத்தித்
தாமும்

2.5.14

இரு நிலத்து இருந்து போற்றி இனி அருள் செய்யும்
என்றான்

481 கைத் தலத்து இருந்த வஞ்சக் கவளிகை மடி மேல்
வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்த அவர்
வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான் முன் நினைத்த அப் பரிசே
செய்ய
மெய்த் தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது
வென்றார் 2.5.15

482 மறைத்தவன் புகுந்த போதே மனம் அங்கு வைத்த
தத்தன்
இறைப் பொழுதின் கண் கூடி வாளினால் எறியல்
உற்றான்
நிறைத்த செங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட
கையால்
தறைப் படும் அளவில் தத்தா நமர் எனத் தடுத்து
வீழ்ந்தார் 2.5.16

483 வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனாந் தத்தன் தானும் தலையினால் வணங்கித்
தாங்கி
யாது நான் செய்கேன் என்ன எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடு நீ
என்றார் 2.5.17

484 அத் திறம் அறிந்தார் எல்லாம் அரசனைத் தீங்கு
செய்த
பொய்த் தவன் தன்னைக் கொல்வோம் எனப் புடை
சூழ்ந்த போது
தத்தனும் அவரை எல்லாம் தடுத்து உடன் கொண்டு
போவான்
இத் தவன் போகப் பெற்றது இறைவனது ஆணை
என்றான் 2.5.18

485 அவ்வழி அவர்கள் எல்லாம் அஞ்சியே அகன்று நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து
கை வடி நெடுவாள் ஏந்தி ஆளுறாக் கானஞ் சேர
வெவ் வினைக் கொடியோன் தன்னை விட்ட பின்
மீண்டு போந்தான் 2.5.19

486 மற்று அவன் கொண்டு போன வஞ்சனை வேடத்தான் மேல்
செற்றவர் தம்மை நீக்கித் தீது இலா நெறியில் விட்ட
சொல் திறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன் குறிப்பில் நின்றான் 2.5.20

487 சென்று அடி வணங்கி நின்று செய் தவ வேடம் கொண்டு
வென்றவற்கு இடையூறு இன்றி விட்டனன் என்று கூற
இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய வல்லார் என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறை பெரும் கருணை கூர்ந்தார் 2.5.21

488 அரசியல் ஆயத்தார்க்கும் அழிவுறும் காதலார்க்கும்
விரவிய செய்கை தன்னை விளம்புவார் விதியினாலே
பரவிய திரு நீற்று அன்பு பாது காத்து உய்ப்பீர் என்று
புரவலர் மன்றுள் ஆடும் பூங் கழல் சிந்தை செய்தார் 2.5.22

489 தொண்டனார்க்கு இமயப் பாவை துணைவனார் அவர் முன் தம்மைக்
கண்டவாறு எதிரே நின்று காட்சி தந்தருளி மிக்க
அண்ட வானவர் கட்கு எட்டா அருள் கழல் நீழல் சேரக்
கொண்டவாறு இடை அறாமல் கும்பிடும் கொள்கை ஈந்தார் 2.5.23

490 இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே
நன் நெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என் உரை செய்தேன் ஆக இகல் விறன் மிண்டர் பொற் தாள்
சென்னி வைத்து அவர் முன் செய்த திருத் தொண்டு செப்பல் உற்றேன் 2.5.24

திருச்சிற்றம்பலம்

உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

2.6. விறன்மிண்ட நாயனார் புராணம்

திருச்சிற்றம்பலம்

491 விரை செய் நறும் பூந் தொடை இதழி வேணியார் தம்
கழல் பரவிப்
பரசுபெறு மா தவ முனிவன் பரசு ராமன் பெறு நாடு
திரை செய் கடலின் பெருவளவனும் திருந்து நிலனின்
செழு வளனும்
வரையின் வளனும் உடன் பெருகி மல்கு நாடு மலை
நாடு 2.6.1

492 வாரி சொரியும் கதிர் முத்தும் வயல்மென் கரும்பில்
படு முத்தும்
வேரல் விளையும் குளிர் முத்தும் வேழ மருப்பின்
ஒளிர் முத்தும்
மூரல் எனச் சொல் வெண் முத்த நகையார் தெரிந்து
முறை கோக்கும்
சேரர் திரு நாட்டு ஊர்களின் முன் சிறந்த மூதூர்
செங்குன்றூர் 2.6.2

493 என்னும் பெயரின் விளங்கி உலகேறும் பெருமை
உடையது தான்
அன்னம் பயிலும் வயல் உழவின் அமைந்த வளத்தால்
ஆய்ந்த மறை
சொன்ன நெறியின் வழி ஒழுகும் தூய குடிமைத் தலை
நின்றார்
மன்னும் குலத்தின் மா மறை நூல் மரபிற் பெரியோர்
வாழ் பதியாம் 2.6.3

494 அப் பொன் பதியின் இடை வேளாண் குலத்தை
விளக்க அவதரித்தார்
செப்பற்கு அரிய பெரும் சீர்த்திச் சிவனார் செய்ய கழல்
பற்றி
எப் பற்றினையும் அற எறிவார் எல்லை தெரிய
ஒண்ணாதார்
மெய்ப் பத்தர்கள் பால் பரிவுடையார் எம்பிரானார்
விறன் மிண்டர் 2.6.4

495 நதியும் மதியும் புனைந்த சடை நம்பர் விரும்பி நலம்
சிறந்த
பதிகள் எங்கும் கும்பிட்டுப் படரும் காதல் வழிச்
செல்வார்
முதிரும் அன்பில் பெரும் தொண்டர் முறைமை நீடு
திருக் கூட்டத்து 2.6.5

எதிர் முன் பரவும் அருள் பெற்றே இறைவர் பாதம்
தொழப் பெற்றார்

496 பொன் தாழ் அருவி மலைநாடு கடந்து கடல் சூழ் புவி
எங்கும்
சென்று ஆள் உடையார் அடியவர் தம் திண்மை
ஒழுக்க நடை செலுத்தி
வன் தாள் மேருச் சிலை வளைத்துப் புரங்கள் செற்ற
வைதிகத் தேர்
நின்றார் இருந்த திருவாரூர் பணிந்தார் நிகர் ஒன்று
இல்லாதார் 2.6.6

497 திருவார் பெருமை திகழ்கின்ற தேவ ஆசிரியன்
இடைப் பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்து
அணையாது
ஒருவாறு ஒதுங்கும் வன் தொண்டன் புறகென்று
உரைப்பச் சிவன் அருளால்
பெருகா நின்ற பெரும் பேறு பெற்றார் மற்றும் பெற
நின்றார் 2.6.7

498 சேண் ஆர் மேருச் சிலை வளைத்த சிவனார் அடியார்
திருக்கூட்டம்
பேணாது ஏகும் ஊரனுக்கும் பிரானாம் தன்மைப்
பிறை சூடிப்
பூணார் அரவம் புனைந்தார்க்கும் புறகு என்று உரைக்க
மற்றவர் பால்
கோணா அருளைப் பெற்றார் மற்று இனியார்
பெருமை கூறுவார் 2.6.8

499 ஞாலம் உய்ய நாம் உய்ய நம்பி சைவ நன் னெறியின்
சீலம் உய்யத் திருத் தொண்டத் தொகை முன் பாடச்
செழு மறைகள்
ஓலம் இடவும் உணர்வு அரியார் உடனாம் உளது
என்றால்
ஆலம் அமுது செய்த பிரான் அடியார் பெருமை
அறிந்தாரார் 2.6.9

500 ஒக்க நெடு நாள் இவ் உலகில் உயர்ந்த சைவப் பெருந்
தன்மை
தொக்க நிலைமை நெறி போற்றித் தொண்டு பெற்ற
விறன் மிண்டர்
தக்க வகையால் தம் பெருமான் அருளினாலே தாள்
2.6.10

நிழல்ற்கீழ்
மிக்க கண நாயகர் ஆகும் தன்மை பெற்று
விளங்கினார்

501 வேறு பிரிதென் திருத் தொண்டத் தொகையால் உலகு
விளங்க வரும்
பேறு தனக்குக் காரணராம் பிரானார் விறன்
மிண்டரின் பெருமை
கூறும் அளவு என் அளவிற்றே அவர் தாள் சென்னி
மேற் கொண்டே
ஆறை வணிகர் அமர் நீதி அன்பர் திருத் தொண்டு
அறைகுவாம் 2.6.11

திருச்சிற்றம்பலம்
உள்ளுறை அட்டவணைக்குத் திரும்ப

2.7. அமர் நீதி நாயனார் புராணம்

திருச்சிற்றம்பலம்

502 சீரில் நீடிய செம்பியர் பொன்னி நன்னாட்டுக்
காரின் மேவிய களி அளி மலர்ப் பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழு மணிவீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமை சேர் பதி பழையாறை 2.7.1

503 மன்னும் அப் பதி வணிகர் தம் குலத்தினில் வந்தார்
பொன்னும் முத்தும் நல் மணிகளும் பூந்துகில்
முதலா
எந் நிலத்தினும் உள்ளன வரு வளத்து இயல்பால்
அந் நிலைக்கண் மிக்கவர் அமர் நீதியார் என்பார் 2.7.2

504 சிந்தை செய்வது சிவன் கழல் அல்லது ஒன்று
இல்லார்
அந்தி வண்ணர் தம் அடியவர்க்கு அமுது செய்வித்துக்
கந்தை கீள் உடை கோவணம் கருத்து அறிந்து உதவி
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும் பயன்
கொள்வார் 2.7.3

505 முக்கண் நக்கராம் முதல்வனார் அவர் திரு நலூர்
மிக்க சீர் வளர் திருவிழா விருப்புடன் வணங்கித்
தக்க அன்பர்கள் அமுது செய் திருமடம் சமைத்தார்
தொக்க சுற்றமும் தாமும் வந்து அணைந்தனர்
2.7.4

தூயோர்

506 மருவும் அன்பொடு வணங்கினர் மணி கண்டர்
நல்லூர்த்
திரு விழா அணி சேவித்துத் திரு மடத்து அடியார்
பெருகும் இன்பமோடு அமுது செய்திட அருள் பேணி
உருகு சிந்தையின் மகிழ்ந்து உறை நாள் இடை
ஒருநாள் 2.7.5

507 பிறைத் தளிர் சடைப் பெருந்தகைப் பெரும் திரு
நல்லூர்க்
கறைக் களத்து இறை கோவணப் பெருமை முன்
காட்டி
நிறைத்த அன்புடைத் தொண்டர்க்கு நீடருள்
கொடுப்பான்
மறைக் குலத்தொரு பிரமசாரியின் வடிவு ஆகி 2.7.6

508 செய்ய புன் சடை கரந்தது ஓர் திருமுடிச் சிகையும்
சைவ வெண் திரு நீற்று முண்டகத்து ஒளித்
தழைப்பும்
மெய்யின் வெண் புரி நூலுடன் விளங்கும் மான்
தோலும்
கையில் மன்னிய பவித்திர மரகதக் கதிரும் 2.7.7

509 முஞ்சி நாணுற முடிந்தது சாத்திய அரையில்
தஞ்ச மா மறைக் கோவண ஆடையின் அசைவும்
வஞ்ச வல் வினைக் கறுப்பறும் மனத்து அடியார்கள்
நெஞ்சில் நீங்கிடா அடி மலர் நீணிலம் பொலிய 2.7.8

510 கண்டவர்க்கு உறு காதலின் மனம் கரைந்து உருகத்
தொண்டர் அன்பு எனும் தூ நெறி வெளிப் படுப்பார்
ஆய்த்
தண்டின் மீது திரு கோவணம் நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்து அமர் நீதியார் திரு மடம் குறுக 2.7.9

511 வடிவு காண்டலும் மனத்தினும் மிக முகம் மலர்ந்து
கடிது வந்து எதிர் வணங்கி இம் மடத்தினில் காணும்
படி இலாத நீர் அணைய முன் பயில் தவம் என்னோ
அடியனேன் செய்தது என்றனர் அமர்நீதி அன்பர் 2.7.10

512 பேணும் அன்பரை நோக்கி நீர் பெருகிய அடியார்க்கு
ஊணும் மேன்மையில் ஊட்டி நற் கந்தை கீள்
உடைகள்
யாணர் வெண் கிழிக் கோவணம் ஈதல் கேட்டு
உம்மைக் 2.7.11

காண வந்தனம் என்றனன் கண் நுதல் கரந்தோன்

513 என்று தம்பிரான் அருள் செய இத் திரு மடத்தே
நன்று நான் மறை நற்றவர் அமுது செய்து அருளத்
துன்று வேதியர் தூய்மையின் அமைப்பதும் உளதால்
இன்று நீரும் இங்கு அமுது செய்து அருளும் என்று
இறைஞ்ச 2.7.12

514 வணங்கும் அன்பரை நோக்கி அம் மறையவர் இசைந்தே
அணங்கு நீர்ப் பொன்னி ஆடி நான் வர மழை வரினும்
உணங்கு கோவணம் வைத்து நீர் தாரும் என்று ஒரு வெண்
குணங் கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்துக் கொடுப்பார் 2.7.13

515 ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவாறு உமக்கே
ஈங்கு நான் சொல்ல வேண்டுவது இல்லை நீர் இதனை
வாங்கி நான் வரும் அளவும் உம்மிடத்து இகழாதே
ஆங்கு வைத்து நீர் தாரும் என்று அவர் கையில் கொடுத்தார் 2.7.14

516 கொடுத்த கோவணம் கைக் கொண்டு கோது இலா அன்பர்
கடுப்பில் இங்கு எழுந்து அருளும் நீர் குளித்து எனக் கங்கை
மடுத்த தும்பிய வளர் சடை மறைத்த அம் மறையோர்
அடுத்த தெண்டிரைப் பொன்னி நீர் ஆட என்று அகன்றார் 2.7.15

517 தந்த கோவணம் வாங்கிய தனிப் பெருந் தொண்டர்
முந்தை அந்தணர் மொழி கொண்டு முன்பு தாம் கொடுக்கும்
கந்தை கீள் உடை கோவணம் அன்றி ஓர் காப்புச்
சிந்தை செய்து வேறு இடத்து ஒரு சேமத்தின் வைத்தார் 2.7.16

518 போன வேதியர் வைத்த கோவணத்தினைப் போக்கிப்
பானலந்துறைப் பொன்னி நீர் படிந்து வந்தாரோ
தூநறுஞ் சடைக் கங்கை நீர் தோய்ந்து வந்தாரோ
வானம் நீர் மழை பொழிந்திட நனைந்து வந்து அணைந்தார் 2.7.17

519 கதிர் இளம் பிறைக் கண்ணியர் நண்ணிய பொழுதில்
முதிரும் அன்பு உடைத் தொண்டர் தாம்
முறைமையின் முன்னே
அதிக நன்மையின் அறு சுவைத் திருவமுது ஆக்கி
எதிர் எழுந்து சென்று இறைஞ்சிட நிறைந்த நூல்
மார்பர் 2.7.18

520 தொண்டர் அன்பு எனும் தூய நீர் ஆடுதல் வேண்டி
மண்டு தண் புனல் மூழ்கிய ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலதும் ஈரம் நான் தந்த கோவணத்தைக்
கொண்டு வாரும் என்று உரைத்தனர் கோவணக்
கள்வர் 2.7.19

521 ஐயர் கைதவம் அறிவுறாது அவர் கடிது அணுகி
எய்தி நோக்குறக் கோவணம் இருந்த வேறு இடத்தில்
மை இல் சிந்தையர் கண்டிலர் வைத்த கோவணம்
முன்
செய்தது என் என்று திகைத்தனர் தேடுவார் ஆனார் 2.7.20

522 பொங்கு வெண் கிழிக் கோவணம் போயின நெறி மேல்
சங்கை இன்றியே தப்பினது என்று தம் சரக்கில்
எங்கு நாடியும் கண்டிலர் என் செய்வார் நின்றார்
அங்கண் வேதியர் பெரும் தொடக்கினில் அகப் பட்டார் 2.7.21

523 மனைவி யாரொடு மன்னிய கிளைஞரும் தாமும்
இனையது ஒன்று வந்து எய்தியது என இடர் கூர்ந்து
நினைவது ஒன்று இலர் வருந்தினர் நிற்கவும்
மாட்டார்
புனைய வேறு ஒரு கோவணம் கொடு புறப்பட்டார் 2.7.22

524 அத்தர் முன்பு சென்று அடிகள் நீர் தந்த கோவணத்தை
வைத்த இடத்து நான் கண்டிலேன் மற்றும் ஓர்
இடத்தில்
உய்த்து ஒளித்தனர் இல்லை அஃது ஒழிந்தவாறு
அறியேன்
இத்தகைத்த வேறு அதிசயம் கண்டிலேன் என்று 2.7.23

525 வேறு நல்லது ஓர் கோவணம் விரும்பி முன்
கொணர்ந்தேன்
கீறு கோவணம் அன்று நெய்தமைத்தது கிளர் கொள்
நீறு சாத்திய நெற்றியீர் மற்றுது களைந்து
மாறு சாத்தி என் பிழை பொறுப்பீர் என வணங்க 2.7.24

526 நின்ற வேதியர் வெகுண்டு அமர் நீதியார் நிலைமை
நன்று சாலவும் நாள் இடை கழிந்ததும் அன்றால்
2.7.25

இன்று நான் வைத்த கோவணம் கொண்டு அதற்கு
எதிர் வேறு
ஒன்று கொள்க என உரைப்பதே நீர் என உரையா

527 நல்ல கோவணம் கொடுப்பன் என்று உலகின் மேல்
நாளும்
சொல்லும் விதத்தது என் கோவணம் கொள்வது
துணிந்தோ
ஒல்லை ஈங்கு உறு வாணிபம் அழகிதே உமக்கு என்று
எல்லை இல்லவன் எரி துள்ளினால் என
வெகுண்டான் 2.7.26

528 மறி கரந்து தண்டு ஏந்திய மறைவர் வெகுளப்
பொறி கலங்கிய உணர்வினர் ஆய் முகம் புலர்ந்து
சிறிய என் பெரும் பிழை பொறுத்து அருள் செய்வீர்
அடியேன்
அறிய வந்தது ஒன்று என அடி பணிந்து அயர்வார் 2.7.27

529 செயத்தகும் பணி செய்வன் இக் கோவணம் அன்றி
நயத் தகுந்தன நல்ல பட்டு ஆடைகள் மணிகள்
உயர்த்த கோடி கொண்டு அருளும் என்று உடம்பினில்
அடங்காப்
பயத்தொடுங்குலைந்து அடி மிசைப் பல முறை
பணிந்தார் 2.7.28

530 பணியும் அன்பரை நோக்கி அப் பரம் பொருளானார்
தணியும் உள்ளத்தார் ஆயினார் போன்று நீர் தந்த
மணியும் பொன்னும் நல் ஆடையும் மற்றும் என்
செய்ய
அணியும் கோவணம் நேர் தர அமையும் என்றான் 2.7.29

531 மலர்ந்த சிந்தையர் ஆகிய வணிகர் ஏறு அனையார்
அலர்ந்த வெண்ணிறக் கோவணம் அதற்கு நேராக
இலங்கு பூந் துகில் கொள்வதற்கு இசைந்து அருள்
செய்யீர்
நலங் கொள் கோவணம் தரும் பரிசு யாதென நம்பர் 2.7.30

532 உடுத்த கோவணம் ஒழிய நாம் உம் கையில் தர நீர்
கொடுத்ததாக முன் சொல்லும் அக் கிழிந்த
கோவணநேர்
அடுத்த கோவணம் இது என்று தண்டினில் அவிழாது
எடுத்து மற்று இதன் எடையிடும் கோவணம் என்றார் 2.7.31

533 நன்று சால என்று அன்பரும் ஒரு துலை நாட்டக்
குன்ற வில்லியார் கோவணம் ஒரு தட்டில் இட்டார்
2.7.32

நின்ற தொண்டரும் கையினில் நெய்த கோவணத்
தட்டு
ஒன்றிலே இட நிறை நிலாது ஒழிந்தமை கண்டார்

534 நாடும் அன்பொடு நாயன்மார்க் களிக்க முன் வைத்த
நீடு கோவணம் அடைய நேராக ஒன்று ஒன்றாக்
கோடு தட்டின் மீது இடக் கொண்டு எழுந்தது கண்டு
ஆடு சேவடிக்கு அயரும் அற்புதம் எய்தி 2.7.33

535 உலகில் இல்லதோர் மாயை இக் கோவணம்
ஒன்றுக்கு
அலகில் கோவணம் ஒத்தில என்று அதிசயத்துப்
பலவும் மென் துகில் பட்டுடன் இட இட உயர
இலகு பூந்துகிற் பொதிகளை எடுத்து மேல் இட்டார் 2.7.34

536 முட்டில் அன்பர் தம் அன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்ற தட்டு அருளொடு தாழ்வு உறும் வழக்கால்
பட்டொடும் துகில் அநேக கோடிகளிடும் பத்தர்
தட்டு மேற் படத் தாழ்ந்தது கோவணத் தட்டு 2.7.35

537 ஆன தன்மை கண்டு அடியவர் அஞ்சி அந்தணர் முன்
தூ நறுந் துகில் வர்க்க நூல் வர்க்கமே முதலா
மானம் இல்லன குவிக்கவும் தட்டின் மட்டு இதுவால்
ஏனை என் தனம் இடப்பெற வேண்டும் என்று
இறைஞ்ச 2.7.36

538 மங்கை பாகராம் மறையவர் மற்று அதற்கு இசைந்தே
இங்கு நாம் இனி வேறு ஒன்று சொல்வது என் கொல்
அங்கு மற்று உங்கள் தனங்களினாகிலும் இடுவீர்
எங்கள் கோவணம் நேர் நிற்க வேண்டுவது என்றார் 2.7.37

539 நல்ல பொன்னொடும் வெள்ளியும் நவ மணித் திரளும்
பல் வகைத் திறத்து உலோகமும் புணர்ச்சிகள்
பலவும்
எல்லை இல் பொருள் சுமந்து அவர் இட இடக்
கொண்டே
மல்கு தட்டு மீது எழுந்தது வியந்தனர் மண்ணோர் 2.7.38

540 தவம் நிறைந்த நான் மறைப் பொருள் நூல்களால்
சமைந்த
சிவன் விரும்பிய கோவணம் இடும் செழுந்தட்டுக்கு
அவனி மேலமர் நீதியார் தனமெலாம் அன்றிப்
புவனம் யாவையும் நேர் நிலா என்பது புகழோ 2.7.39

541 நிலைமை மற்றது நோக்கிய நிகர் இலார் நேர் நின்று
உலைவில் ப◌ுறனம் ஒன்று ஒழியாமை உய்த்து 2.7.40

ஒழிந்தேன்
தலைவ யானும் என் மனைவியும் சிறுவனும்
தகுமேல்
துலையில் ஏறிடப் பெறுவது உன் அருள் எனத்
தொழுதார்

542 பொச்சமில்ல அடிமைத் திறம் புரிந்தவர் எதிர்நின்று
அச்ச முன்புற உரைத்தலும் அங்கணர் அருளால்
நிச்சயித்தவர் நிலையினைத் துலை எனுஞ்
சலத்தால்
இச் சழக்கினின்று ஏற்றுவார் ஏறுதற்கு இசைந்தார் 2.7.41

543 மனம் மகிழ்ந்து அவர் மலர்க்கழல் சென்னியால்
வணங்கிப்
புனை மலர்க் குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்
தனை உடன் கொடு தனித் துலை வலம் கொண்டு
தகவால்
இனைய செய்கையில் ஏறுவார் கூறுவார் எடுத்து 2.7.42

544 இழைத்த அன்பினில் இறை திருநீற்று மெய் அடிமை
பிழைத்திலோம் எனில் பெருந்துலை நேர் நிற்க என்று
மழைத் தடம் பொழில் திரு நல்லூர் இறைவரை
வணங்கித்
தழைத்த அஞ்செழுத்து ஓதினார் ஏறினார் தட்டில் 2.7.43

545 மண்டு காதலின் மற்றவர் மகிழ்ந்து உடன் ஏற
அண்டர் தம்பிரான் திரு அரைக் கோவணம் அதுவும்
கொண்ட அன்பினில் குறைபடா அடியவர் அடிமைத்
தொண்டும் ஒத்தலால் ஒத்து நேர் நின்றது அத்
துலைதான் 2.7.44

546 மதி விளங்கிய தொண்டர் தம் பெருமையை
மண்ணோர்
துதி செய்து எங்கணும் அதிசயம் உற எதிர் தொழுதார்
கதிர் விசும்பு இடை கரந்திட நிரந்த கற்பகத்தின்
புதிய பூ மழை இமையவர் மகிழ்வுடன் பொழிந்தார் 2.7.45

547 அண்டர் பூ மழை பொழிய மற்று அதனிடை ஒளித்த
முண்ட வேதியர் ஒரு வழியான் முதல் நல்லூர்ப்
பண்டு தாம் பயில் கோலமே விசும்பினிற் பாகங்
கொண்ட பேதையும் தாமுமாய்க் காட்சி முன்
கொடுத்தார் 2.7.46

548 தொழுது போற்றி அத் துலை மிசை நின்று நேர்
துதிக்கும் 2.7.47

வழுவில் அன்பரும் மைந்தரும் மனைவியார் தாமும்
முழுதும் இன்னருள் பெற்றுத் தம் முன் தொழுது
இருக்கும்
அழிவில் வான் பதங் கொடுத்து எழுந்து அருளினார்
ஐயர்

549 நாதர் தம் திரு அருளினால் நல் பெருந் துலையே
மீது கொண்டெழு விமானம் அதுவாகி மேல் செல்லக்
கோதில் அன்பரும் குடும்பமும் குறைவு அறக்
கொடுத்த
ஆதி மூர்த்தியார் உடன் சிவ புரியினை அணைந்தார் 2.7.48

550 மலர் மிசை அயனும் மாலும் காணுதற்கு அரிய
வள்ளல்
பலர் புகழ் வெண்ணெய் நல்லூர் அவணப் பழமை
காட்டி
உலகு உய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாதம்
உன்னித்
தலை மிசை வைத்து வாழும் தலைமை நம்
தலைமை ஆகும் 2.7.49

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர் சருக்கம் முற்றிற்று.
சருக்கம் இரண்டுக்குத் திருவிருத்தம் - 550

This webpage was last updated on 28 July 2004
Please send your comments to the webmasters of this website.

சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்
முதற் காண்டம் (பன்னிரண்டாம் திருமுறை)
சருக்கம் 3 (இலை மலிந்த சருக்கம்)

periya purANam of cEkkizAr
Canto 1, Carukkam -3 (ilai malinta carukkam)
In tamil script, TSCII format

Acknowledgements:

Our Sincere thanks go to Dr. Thomas Malten and Colleagues of the Univ. of Koeln, Germany for providing us with the transliterated/romanized version of the etext and giving us permission to release the TSCII version as part of Project Madurai etext collections.
TSCII proof reading by **tiruciRRampalam aRakaTTaLai, Kovilpatti, Tamilnadu.**
Preparation of HTML and PDF versions: **Dr. K. Kalyanasundaram** Lausanne, Switzerland.
This webpage presents the Etext in Tamil script but in Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:
i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages (Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil fontchosen as the default font for the UTF-8 char-set/encoding view.
. In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

ன Project Madurai 1999 - 2004
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website

http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம் -முதற் காண்டம்
3. இலை மலிந்த சருக்கம்

உள்ளுறை

3.1	எறி பத்த நாயனார் புராணம்	(551-607)	மின்பதிப்பு
3.2	ஏனாதிநாத நாயனார் புராணம்	(608- 649)	மின்பதிப்பு
3.3	கண்ணப்ப நாயனார் புராணம்	(650 -835)	மின்பதிப்பு
3.4	குங்குலியக் கலய நாயனார் புராணம்	(836-870)	மின்பதிப்பு
3.5	மானக்கஞ்சாற நாயனார் புராணம்	(871-907)	மின்பதிப்பு
3.6	அரிவாட்டாய நாயனார் புராணம்	(908-930)	மின்பதிப்பு
3.7	ஆனாய நாயனார் புராணம்	(931 - 972)	மின்பதிப்பு

3.1 எறி பத்த நாயனார் புராணம் (551-607)

திருச்சிற்றம்பலம்

551 மல்லல் நீர் ஞாலந் தன்னுள் மழவிடை உடையான் அன்பர்க்கு
ஒல்லை வந்து உற்ற செய்கை உற்று இடத்து உதவும் நீரார்
எல்லையில் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை எம்மால்
சொல்லலாம் படித்து அன்றேனும் ஆசையால் சொல்லல் உற்றாம் 3.1.1

552 பொன் மலைப் புலி வென்று ஓங்கப் புதுமலை இடித்துப் போற்றும்
அந் நெறி வழியே ஆக அயல் வழி அடைத்த சோழன்
மன்னிய அநபாயன் சீர் மரபின் மா நகரமாகும்
தொன் நெடுங் கருவூர் என்னுஞ்சுடர் மணி வீதி மூதூர் 3.1.2

553 மா மதில் மஞ்சு சூழும் மாளிகை நிரை விண் சூழும்
தூ மணி வாயில் சூழும் சோலையில் வாசம் சூழும்
தேமலர் அளகஞ் சூழும் சில மதி தெருவிற் சூழும்
தாம் மகிழ்ந்து அமரர் சூழும் சதமகன் நகரம் தாழ 3.1.3

554 கட கரி துறையில் ஆடும் களி மயில் புறவில் ஆடும்
அடர் மணி அரங்கில் ஆடும் அரிவையர் குழல் வண்டு ஆடும்
படரொளி மறுகில் ஆடும் பயில் கொடி கதிர் மீது ஆடும்
தடம் நெடும் புவி கொண்டாடும் தனி நகர் வளமை ஈதால் 3.1.4

555 மன்னிய சிறப்பின் மிக்க வள நகர் அதனில் மல்கும்
பொன்னியல் புரிசை சூழ்ந்து சுரர்களும் போற்றும் பொற்பால்
துன்னிய அன்பின் மிக்க தொண்டர் தம் சிந்தை நீங்கா
அந்நிலை அரனார் வாழ்வது ஆனிலை என்னும் கோயில் 3.1.5

556 பொருட்டிரு மறை கடந்த புனிதரை இனிது அக் கோயில்
மருட்டுறை மாற்றும் ஆற்றால் வழி படும் தொழிலர் ஆகி
இருட்கடு ஒடுங்கு கண்டத்து இறையவர்க்கு உரிமை பூண்டார்க்கு
அருட் பெரும் தொண்டு செய்வார் அவர் எறிபத்தர் ஆவார் 3.1.6

557 மழை வளர் உலகில் எங்கும் மன்னிய சைவம் ஓங்க
அழலவிர் சடையான் அன்பர்க்கு அடாதன அடுத்த போது
முழையரி என்னத் தோன்றி முரண் கெட எறிந்து தீர்க்கும்
பழ மறை பரசும் தூய பரசு முன் எடுக்கப் பெற்றார் 3.1.7

558 அண்ணலார் நிகழும் நாளில் ஆனிலை அடிகளார்க்குத்
திண்ணிய அன்பு கூர்ந்த சிவகாமி ஆண்டார் என்னும்
புண்ணிய முனிவனார் தாம் பூப் பறித்து அலங்கல் சாத்தி
உண்ணிறை காதலோடும் ஒழுகுவார் ஒரு நாள் முன் போல் 3.1.8

559 வைகறை உணர்ந்து போந்து புனல் மூழ்கி வாயும் கட்டி
மெய்ம் மலர் நெருங்கு வாச நந்த வனத்து முன்னிக்
கையினில் தெரிந்து நல்ல கமழ் முகை அலரும் வேலைத்
தெய்வ நாயகருக்குச் சாத்தும் திருப் பள்ளித் தாமம் கொய்து 3.1.9

560 கோலப் பூங் கூடை தன்னை நிறைத்தனர் கொண்டு நெஞ்சில்
வாலிய நேசம் கொண்டு மலர்க் கையில் தண்டும் கொண்டு அங்கு
ஆலயம் அதனை நோக்கி அங்கணர் அமைத்துச் சாத்தும்
காலை வந்து உதவ வேண்டிக் கடிதினில் வாரா நின்றார் 3.1.10

561 மற்றவர் அணைய இப்பால் வளநகர் அதனில் மன்னும்
கொற்றவர் வளவர் தங்கள் குலப் புகழ்ச் சோழனார் தம்
பற்றலர் முனைகள் சாய்க்கும் பட்ட வர்த்தனமாம் பண்பு
பெற்ற வெங் களிறு கோலம் பெருகு மா நவமி முன்னாள் 3.1.11

562 மங்கல விழைவு கொண்டு வரு நதித் துறை நீராடிப்
பொங்கிய களிப்பினோடும் பொழி மதம் சொரிய நின்றார்
எங்கணும் இரியல் போக எதிர் பரிக் காரர் ஓடத்
துங்க மால் வரை போல் தோன்றித் துண்ணென அணைந்தது அன்றே 3.1.12

563 வென்றிமால் யானை தன்னை மேல் கொண்ட பாகரோடும் 1
சென்று ஒரு தெருவின் முட்டிச் சிவகாமியார் முன் செல்ல
வன் தனித் தண்டில் தூங்கும் மலர் கொள் பூக் கூடை தன்னைப்
பின் தொடர்ந்து ஓடிச் சென்று பிடித்து முன் பறித்துச் சிந்த 3.1.13

564 மேல் கொண்ட பாகர் கண்டு விசை கொண்ட களிறு சண்டக்
கால் கொண்டு போவார் போலக் கடிது கொண்டு அகலப் போக
நூல் கொண்ட மார்பின் தொண்டர் நோக்கினர் பதைத்துப் பொங்கி
மால் கொண்ட களிற்றின் பின்பு தண்டு கொண்டு அடிக்க வந்தார் 3.1.14

565 அப்பொழுது அணைய ஒட்டாது அடற் களிறு அகன்று போக 1
மெய்ப் பொருள் தொண்டர் மூப்பால் விரைந்து பின் செல்ல மாட்டார்
தப்பினர் விழுந்து கையால் தரை அடித்து எழுந்து நின்று
செப்பு அரும் துயரம் நீடிச் செயிர்த்து முன் சிவதா என்பார் 3.1.15

566 களி யானையின் ஈர் உரியாய் சிவதா!
எளியார் வலியாம் இறைவா! சிவதா!
அளியார் அடியார் அறிவே! சிவதா!
தெளிவார் அமுதே! சிவதா! சிவதா! 3.1.16

567 ஆறும் மதியும் அணியும் சடை மேல்
ஏறும் மலரைக் கரி சிந்துவதே
வேறுள் நினைவார் புரம் வெந்து அவியச்
சீறும் சிலையாய்! சிவதா! சிவதா! 3.1.17

568 தஞ்சே சரணம் புகுதுந் தமியோர்
நெஞ்சேய் துயரம் கெட நேர் தொடரும்
மஞ்சே என வீழ் மறலிக்கு இறை நீள்
செஞ் சேவடியாய்! சிவதா! சிவதா! 3.1.18

569 நெடியோன் அறியா நெறியார் அறியும்
படியால் அடிமைப் பணி செய்து ஒழுகும்
அடியார்களில் யான் ஆரா அணைவாய்
முடியா முதலாய் எனவே மொழிய 3.1.19

570 என்று அவர் உரைத்த மாற்றம் எறி பத்தர் எதிரே வாரா
நின்றவர் கேளா மூளும் நெருப்பு உயிர்த்து அழன்று பொங்கி
மன்றவர் அடியார்க்கு என்றும் வழிப் பகை களிறே அன்றோ
கொன்று அது வீழ்ப்பன் என்று கொலை மழு எடுத்து 3.1.20

வந்தார்

571 வந்தவர் அழைத்த தொண்டர் தமைக் கண்டு வணங்கி
உம்மை
இந்த வல் இடும்பை செய்த யானை எங்கு உற்றது
என்ன
எந்தையார் சாத்தும் பூவை என் கையில் பறித்து மண்
மேல்
சிந்தி முன் பிழைத்துப் போகா நின்றது இத் தெருவே
என்றார் 3.1.21

572 இங்கு அது பிழைப்பது எங்கே இனி என எரிவாய்
சிந்தும்
அங்கையின் மழுவும் தாமும் அனலும் வெங்காலும்
என்னப்
பொங்கிய விசையில் சென்று பொரு கரி தொடர்ந்து
பற்றும்
செங்கண் வாள் அரியிற் கூடிக் கிடைத்தனர் சீற்ற
மிக்கார் 3.1.22

573. கண்டவர் இது முன்பு அண்ணல் உரித்த அக் களிறே
போலும்
அண்டரும் மண் உளோரும் தடுக்கினும் அடர்த்துச்
சிந்தத்
துண்டித்துக் கொல்வேன் என்று சுடர் மழு வலத்தில்
வீசிக்
கொண்டு எழுந்து ஆர்த்துச் சென்று காலினால்
குலுங்கப் பாய்ந்தார் 3.1.23

574. பாய்தலும் மிசை கொண்டு உய்க்கும் பாகரைக்
கொண்டு சீறிக்
காய் தழல் உமிழ் கண் வேழம் திரிந்து மேற் கதுவ
அச்சம்
தாய் தலை அன்பின் முன் நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய் தனித் தடக்கை வீழ மழுவினால் துணித்தார்
தொண்டர் 3.1.24

575. கையினைத் துணித்த போது கடல் எனக் கதறி வீழ்ந்து
மை வரை அனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த
வெய்ய கோல் பாகர் பாகர் மூவர் மிசை கொண்டார்
இருவர் ஆக
ஐவரைக் கொன்று நின்றார் அருவரை அனைய
தோளார் 3.1.25

576 வெட்டுண்டு பட்டு வீழ்ந்தார் ஒழிய மற்று உள்ளார் ஓடி
மட்டு அவிழ் தொங்கல் மன்னன் வாயில் காவலரை நோக்கி
பட்ட வர்த்தனமும் பட்டுப் பாகரும் பட்டார் என்று
முட்ட நீர் கடிது புக்கு முதல்வனுக்கு உரையும் என்றார் 3.1.26

577 மற்று அவர் மொழிந்த மாற்றம் மணிக் கடை காப்போர் கேளாக்
கொற்றவன் தன்பால் எய்திக் குரை கழல் பணிந்து போற்றிப்
பற்றலர் இலாதாய் நின் பொற் பட்டமால் யானை வீழச்
செற்றனர் சிலராம் என்று செப்பினார் பாகர் என்றார் 3.1.27

578 வளவனும் கேட்ட போதில் மாறின்றி மண் காக்கின்ற
கிளர் மணித் தோள் அலங்கல் சுரும்பு இனம் கிளர்ந்து பொங்க
அளவில் சீற்றத்தினாலே யார் செய்தார் என்றும் கேளான்
இள அரி ஏறு போல எழில் மணி வாயில் நீங்க 3.1.28

579 தந்திரத் தலைவர் தாமும் தலைவன் தன் நிலைமை கண்டு
வந்துறச் சேனை தன்னை வல் விரைந்து எழ முன் சாற்ற
அந்தரத்து அகலம் எல்லாம் அணி துகில் பதாகை தூர்ப்ப
எந்திரத் தேரும் மாவும் இடை இடை களிறும் ஆகி 3.1.29

580 வில்லொடு வேல் வாள் தண்டு பிண்டி பாலங்கள் மிக்க
வல்லெழும் உசலம் நேமி மழுக் கழுக் கடை முன் ஆன
பல் படைக் கலன்கள் பற்றிப் பைங்கழல் வரிந்த வன் கண்
எல்லையில் படைஞர் கொட்புற்று எழுந்தனர் எங்கும் எங்கும் 3.1.30

581 சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன் துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்னம் எல்லாம் பொரு படை 3.1.31

மிடைந்த பொற்பின்
மங்குல் வான் கிளர்ச்சி நாண மருங்கு எழுந்து இயம்பி மல்க

582 தூரியத் துவைப்பும் முட்டுஞ் சுடர்ப் படை ஒலியும் மாவின்
தார் மணி இசைப்பும் வேழ முழக்கமும் தடந்தேர்ச் சீரும்
வீரர் தஞ்செருக்கின் ஆர்ப்பும் மிக்கு எழுந்து ஒன்றாம் எல்லைக்
காருடன் கடைநாள் பொங்கும் கடல் எனக் கலித்த அன்றே 3.1.32

583 பண்ணுறும் உறுப்பு நான்கில் பரந்து எழு சேனை எல்லாம்
மண்ணிடை இறு கால் மேல் மேல் வந்து எழுந்தது போல் தோன்ற
தண்ணளிக் கவிகை மன்னன் தானை பின் தொடரத் தானோர்
அண்ணலம் புரவி மேற்கொண்டு அரச மா வீதி சென்றான் 3.1.33

584 கடு விசை முடுகிப் போகிக் களிற் றொடும் பாகர் வீழ்ந்த
படு களம் குறுகச் சென்றான் பகை புலத்து அவரைக் காணான்
விடு சுடர் மழு ஒன்று ஏந்தி வேறு இரு தடக் கைத்தாய
அடு களிறு என்ன நின்ற அன்பரை முன்பு கண்டான் 3.1.34

585 பொன் தவழ் அருவிக் குன்றம் எனப் புரள் களிற்றின் முன்பு
நின்றவர் மன்றுள் என்றும் நிருத்தமே பயிலும் வெள்ளிக்
குன்றவர் அடியார் ஆனார் கொற்றவர் இவர் என்று ஓரான்
வென்றவர் இவர் யாவர் என்றான் வெடிபட முழங்கும் சொல்லான் 3.1.35

586 அரசன் ஆங்கு அருளிச் செய்ய அருகு சென்று அணைந்து பாகர்
விரை செய்தார் மாலையோய் நின் விறற் களிற்று எதிரே நிற்கும்
திரை செய் நீர் உலகின் மன்னர் யாருளார் தீங்கு 3.1.36

செய்தார்
பரசு முன் கொண்டு நின்ற இவர் எனப் பணிந்து
சொன்னார்

587 குழையணி காதினானுக்கு அன்பராம் குணத்தின்
மிக்கார்
பிழை படின் அன்றிக் கொல்லார் பிழைத்தது உண்டு
என்று உட்கொண்டு
மழை மத யானைச் சேனை வரவினை மாற்றி மற்ற
உழை வயப் புரவி மேல் நின்று இழிந்தனன் உலக
மன்னன் 3.1.37

588 மைத் தடம் குன்று போலும் மதக் களிற்று எதிரே இந்த
மெய்த்தவர் சென்ற போது வேறு ஒன்றும் புகுதா
விட்ட
அத் தவம் உடையேன் ஆனேன் அம்பல வாணர்
அன்பர்
இத்தனை முனியக் கெட்டேன் என் கொலோ பிழை
என்று அஞ்சி 3.1.38

589 செறிந்தவர் தம்மை நீக்கி அன்பர் முன் தொழுது
சென்று ஈது
அறிந்திலேன் அடியேன் அங்கு கேட்டது ஒன்று
அதுதான் நிற்க
மறிந்த இக் களிற்றின் குற்றம் பாகரோடு இதனை
மாள
எறிந்ததே போதுமோதான் அருள் செய்யும் என்று
நின்றார் 3.1.39

590 மன்னவன் தன்னை நோக்கி வானவர் ஈசர் நேசர்
சென்னி இத் துங்க வேழம் சிவகாமி ஆண்டார்
கொய்து
பன்னக ஆபரணர் சாத்தக் கொடுவரும் பள்ளித் தாமம்
தன்னை முன் பறித்துச் சிந்தத் தரை படத் துணித்து
வீழ்த்தேன் 3.1.40

591 மாதங்கம் தீங்கு செய்ய வரு பரிக்காரர் தாமும்
மீதங்கு கடாவுவாரும் விலக்கிடாது ஒழிந்து பட்டார்
ஈதங்கு நிகழ்ந்தது என்றார் எறி பத்தர் என்ன அஞ்சிப்
பாதங்கள் முறையால் தாழ்ந்து பருவரைத் தடந்தோள்
மன்னன் 3.1.41

592 அங்கணர் அடியார் தம்மைச் செய்த இவ்
அபராதத்துக்கு
3.1.42

இங்கு இது தன்னால் போதாது என்னையும் கொல்ல
வேண்டும்
மங்கல மழுவால் கொல்கை வழக்கும் அன்று
இதுவாம் என்று
செங்கையால் உடைவாள் வாங்கிக் கொடுத்தனர்
தீர்வு நேர்வார்

593 வெந்தழல் சுடர் வாள் நீட்டும் வேந்தனை நோக்கிக
கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்கு அளவின்மை கண்டேன்
என்று
தந்த வாள் வாங்க மாட்டார் தன்னைத் தான் துறக்கும்
என்று
சிந்தையால் உணர்வுற்று அஞ்சி வாங்கினார் தீங்கு
தீர்ப்பார் 3.1.43

594 வாங்கிய தொண்டர் முன்பு மன்னனார் தொழுது
நின்றே
ஈங்கு எனை வாளினால் கொன்று என் பிழை தீர்க்க
வேண்டி
ஓங்கிய உதவி செய்யப் பெற்றனன் இவர் பால் என்றே
ஆங்கு அவர் உவப்பக் கண்ட எறிபத்தர் அதனுக்கு
அஞ்சி 3.1.44

595 வன் பெருங் களிறு பாகர் மடியவும் உடை வாளைத்
தந்து
என் பெரும் பிழையினாலே என்னையும் கொல்லும்
என்னும்
அன்பனார் தமக்குத் தீங்கு நினைந்தனன் என்று
கொண்டு
முன்பு எனது உயிர் செகுத்து முடிப்பதே முடிவு என்று
எண்ணி 3.1.45

596 புரிந்தவர் கொடுத்த வாளை அன்பர் தம் கழுத்தில்
பூட்டி
அரிந்திடல் உற்ற போதில் அரசனும் பெரியோர்
செய்கை
இருந்தவாறு என்? கெட்டேன்? என்று எதிர் கடிதிற்
சென்று
பெருந்தடந் தோளால் கூடிப் பிடித்தனன் வாளும்
கையும் 3.1.46

597 வளவனார் விடாது பற்ற மாதவர் வருந்து கின்ற
அளவு இலாப் பரிவில் வந்த இடுக்கணை அகற்ற வேண்டிக்
கள மணி களத்துச் செய்ய கண்ணுதல் அருளால் வாக்குக்
கிளர் ஒளி விசும்பின் மேல் வந்து எழுந்தது பலரும் கேட்ப 3.1.47

598 தொழும் தகை அன்பின் மிக்கீர்! தொண்டினை மண் மேற்காட்டச்
செழுந் திருமலரை இன்று சினக்கரி சிந்தத் திங்கள்
கொழுந்து அணி வேணிக் கூத்தர் அருளினால் கூடிற்று என்று அங்கு
எழுந்தது பாகரோடும் யானையும் எழுந்தது அன்றே 3.1.48

599 ஈரவே பூட்டும் வாள் விட்டு எறிபத்தர் தாமும் அந்த
நேரியர் பெருமான் தாள் மேல் விழுந்தனர் நிருபர் கோனும்
போர் வடி வாளைப் போக எறிந்து அவர் கழல்கள் போற்றிப்
பார்மிசை பணிந்தான் விண்ணோர் பனிமலர் மாரி தூர்த்தார் 3.1.49

600 இருவரும் எழுந்து வானில் எழுந்த பேரொலியைப் போற்ற
அருமறை பொருளாய் உள்ளார் அணிகொள் பூங்கூடை தன்னில்
மருவிய பள்ளித் தாமம் நிறைந்திட அருள மற்று அத்
திருவருள் கண்டு வாழ்ந்து சிவகாமியாரும் நின்றார் 3.1.50

601 மட்டவிழ் அலங்கல் வென்றி மன்னவர் பெருமான் முன்னர்
உட்டரு களிப்பினோடும் உறங்கி மீது எழுந்தது ஒத்து
முட்ட வெங்கடங்கள் பாய்ந்து முகில் என முழங்கிப் பொங்கும்
பட்ட வர்த்தனத்தைக் கொண்டு பாகரும் அணைய வந்தார் 3.1.51

602 ஆன சீர்த் தொண்டர் கும்பிட்டு அடியனேன் களிப்ப இந்த
மான வெங் களிற்றில் ஏறி மகிழ்ந்து எழுந்து அருளும் என்ன
மேன்மையப் பணி மேற் கொண்டு வணங்கி வெண் 3.1.52

குடையின் நீழல்
யானை மேற் கொண்டு சென்றார் இவுளிமேற்
கொண்டு வந்தார்

603 அந்நிலை எழுந்த சேனை ஆர்கலி ஏழும் ஒன்றாய்
மன்னிய ஒலியின் ஆர்ப்ப மண் எலாம் மகிழ்ந்து
வாழ்த்தப்
பொன்னெடும் பொதுவில் ஆடல் நீடிய புனிதர்
பொற்றாள்
சென்னியிற் கொண்டு சென்னி திருவளர் கோயில்
புக்கான் 3.1.53

604 தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமியாரும் சார
எம்பிரான் அன்பரான எறிபத்தர் தாமும் என்னே
அம்பலம் நிறைந்தார் தொண்டர் அறிவதற்கு அரியார்
என்று
செம்பியன் பெருமை உன்னித் திருப்பணி நோக்கிச்
சென்றார் 3.1.54

605 மற்றவர் இனையவான வன்பெரும் தொண்டு
மண்மேல்
உற்றிடத்து அடியார் முன் சென்று உதவியே நாளும்
நாளும்
நல்தவக் கொள்கை தாங்கி நலமிகு கயிலை வெற்பில்
கொற்றவர் கணத்தின் முன்னாம் கோ முதல்
தலைமை பெற்றார் 3.1.55

606 ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக்
கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை
தானும்
நாளும் மற்றவர்க்கு நல்கும் நம்பர் தாம்
அளக்கிலன்றி
நீளும் இத் தொண்டின் நீர்மை நினைக்கில் ஆர் அளக்க
வல்லார்? 3.1.56

607 தேனாரும் தண் பூங் கொன்றைச் செஞ்சடையவர்
பொற்றாளில்
ஆனாத காதல் அன்பர் எறிபத்தர் அடிகள் சூடி
வானாளும் தேவர் போற்றும் மன்றுளார் நீறு
போற்றும்
ஏனாதி நாதர் செய்த திருத் தொழில் இயம்பலுற்றேன் 3.1.57

திருச்சிற்றம்பலம்

3.2 ஏனாதிநாத நாயனார் புராணம் (608-649)

திருச்சிற்றம்பலம்

608 புண்டரிகம் பொன் வரை மேல் ஏற்றிப் புவி அளிக்கும்
தண்டரள வெண்கவிகைத் தார் வளவர் சோணாட்டில்
வண்டறை பூஞ் சோலை வயல் மருதத் தண் பணை சூழ்ந்து
எண் திசையும் ஏறிய சீர் எயின் மூதூர் எயினனூர் 3.2.1

609 வேழக் கரும்பினோடு மென் கரும்பு தண்வயலில்
தாழக் கதிர்ச்சாலி தான் ஓங்கும் தன்மையதாய்
வாழக் குடி தழைத்து மன்னிய அப் பொற் பதியில்
ஈழக் குலச் சான்றார் ஏனாதி நாதனார் 3.2.2

610 தொன்மைத் திரு நீற்றுத் தொண்டின் வழிபாட்டின்
நன்மைக் கண் நின்ற நலம் என்றும் குன்றாதார்
மன்னர்க்கு வென்றி வடிவாட் படை பயிற்றும்
தன்மைத் தொழில் விஞ்சையில் தலைமை சார்ந்து உள்ளார் 3.2.3

611 வாளின் படை பயிற்றி வந்த வளம் எல்லாம்
நாளும் பெரு விருப்பால் நண்ணுங் கடப் பாட்டில்
தாளும் தட முடியும் காணாதார் தம்மையுந் தொண்டு
ஆளும் பெருமான் அடித் தொண்டர்க்கு ஆக்குவார் 3.2.4

612 நள்ளார்களும் போற்றும் நன்மைத் துறையின் கண்
எள்ளாத செய்கை இயல்பின் ஒழுகு நாள்
தள்ளாத தங்கள் தொழில் உரிமைத் தாயத்தின்
உள்ளான் அதிசூரன் என்பான் உளன் ஆனான் 3.2.5

613 மற்ற அவனும் கொற்ற வடிவாட் படைத் தொழில்கள்
கற்றவர்கள் தன்னில் கடந்துள்ளார் இல்லை எனும்
பெற்றிமையான் மா நிலத்து மிக்க பெருமிதம் வந்து
உற்றுலகில் தன்னையே சால மதித்து உள்ளான் 3.2.6

614 தானாள் விருத்தி கெடத் தங்கள் குலத் தாயத்தின்
ஆனாத செய் தொழிலாம் ஆசிரியத் தன்மை வளம்
மேனாளும் குறைந்து மற்றவர்க்கே மேம்படலால்
ஏனாதி நாதர் திறத்து ஏலா இகல் புரிந்தான் 3.2.7

615 கதிரோன் எழ மழுங்கிக் கால்சாயுங்காலை
மதி போல் அழிந்து பொறா மற்றவனுஞ் சுற்றப்
பதியோர் உடன் கூடப் பண்ணி அமர் மேல் சென்று
எதிர் போர் விளைப்பதற்கே எண்ணித் துணிந்து 3.2.8

எழுந்தான்

616 தோள் கொண்ட வல் ஆண்மைச் சுற்றத்தொடும்
துணையாம்
கோள் கொண்ட போர் மள்ளர் கூட்டத்தொடுஞ்
சென்று
வாள் கொண்ட தாயம் வலியாரே கொள்வது என
மூள்கின்ற செற்றத்தான் முன் கடையில் நின்று
அழைத்தான் 3.2.9

617 வெங்கட் புலி கிடந்த வெம் முழையில் சென்று
அழைக்கும்
பைங்கண் குறுநரியே போல்வான் படை கொண்டு
பொங்கிப் புறம் சூழ்ந்து போர் குறித்து நேர் நின்றே
அங்கட் கடை நின்று அழைத்தான் ஒலி கேளா 3.2.10

618 ஆர் கொல் பொர அழைத்தார்? என்றரி ஏற்றின்
கிளர்ந்து
சேர்வு பெறக் கச்சில் செறிந்த உடை மேல் வீக்கி
வார் கழலுங் கட்டி வடிவாட் பலகைகொடு
போர் முனையில் ஏனாதி நாதர் புறப்பட்டார் 3.2.11

619 புறப்பட்ட போதின் கட் போர்த் தொழில்கள் கற்கும்
விறல் பெருஞ் சீர்க் காளையர்கள் வேறு இடத்து
நின்றார்
மறப் படை வாள் சுற்றத்தார் கேட்டு ஓடி வந்து
செறற்கரும் போர் வீரர்க்கு இரு மருங்கும்
சேர்ந்தார்கள் 3.2.12

620 வந்தழைத்த மாற்றான் வயப் புலி போத்து அன்னார்
முன்
நம் தமது வாள் பயிற்று நற்றாயம் கொள்ளுங்கால்
இந்த வெளி மேற்கை வகுத்து இருவேம் பொரு
படையும்
சந்தித்து அமர் விளைத்தால் சாயாதார் கொள்வதென் 3.2.13

621 என்று பகைத்தோன் உரைப்ப ஏனாதி நாதர் அது
நன்று உனக்கு வேண்டுமேல் நண்ணுவன் என்று உள்
மகிழ்ந்து
சென்றவன் முன் சொன்ன செருக் களத்துப் போர்
குறிப்பக்
கன்றி இரு படையும் கை வகுத்து நேர் மலைவார் 3.2.14

622 மேக ஒழுங்குகள் முன் கொடு மின்னிரை
தம்மிடையே கொடு

3.2.15

மாக மருங்கினும் மண்ணினும் வல்லுரு மேல் எதிர்
செல்வன
வாக நெடும் பல கைக்குல மாள் வினை வாளுடை
ஆடவர்
காக மிடைந்த களத்திரு கைகளின் வந்து கலந்தனர்
623 கால் கழல் கட்டிய மள்ளர்கள் கைகளின் மெய்கள்
அடக்கிய
வாளொளி வட்ட முளைத்திட வந்து இரு கைகளின்
முந்தினர்
வேலொடு வேல் எதிர் நீள்வன மேவிய பாதலம்
விட்டுயர்
ஞாலமுறும் பணி வீரர்கள் நா நிமிர்கின்றன ஒத்தன 3.2.16
624 வெங்கண் விறற் சிலை வீரர்கள் வேறு இரு
கையிலும் நேர்பவர்
தங்கள் சிலைக்குலம் உந்தின தாவில் சரங்கள்
நெருங்குவ
பொங்கு சினத்து எரியிற் புகை போகு கொடிக்கள்
வளைத்து எதிர்
செங்கண் விழிக் கனல் சிந்திய சீறு பொறிச் செலவு
ஒத்தன 3.2.17
625 வாளொடு நீள் கை துடித்தன மார்பொடு வேல்கள்
குளித்தன
தோளொடு வாளி நிலத்தன தோலொடு தோல்கள்
தகைத்தன
தாளொடு வார் கழல் இற்றன தாரொடு சூழ் சிரம்
அற்றன
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர் செய்
களத்தினில் 3.2.18
626 குருதியின் நதிகள் பரந்தன குறை உடல் ஓடி
அலைந்தன
பொரு படை அறு துணி சிந்தின புடை சொரி குடர்
உடல் பம்பின
வெருவர எருவை நெருங்கின வீசியறு துடிகள்
புரண்டன
இரு படை தனினும் எதிர்ந்தவர் எதிர் எதிர் அமர் செய்
பறந்தலை 3.2.19
627 நீள் இடை முடுகி நடந்து எதிர் நேர் இருவரில் ஒரு
வன்றொடர்
3.2.20

தாளிரு தொடை அற முன் பெயர் சாரிகை முறைமை
தடிந்தனன்
வாளொடு விழுடல் வென்றவன் மார்பிடை அறமுன்
எறிந்திட
ஆளியின் அவனும் அறிந்தனன் ஆயினர் பலர் உளர்
எங்கணும்

628 கூர் முனை அயில் கொடு முட்டினர் கூடி முன்
உருவிய தட்டுடன்
நேருரம் உருவ உரப்புடன் நேர்பட எதிர் எதிர் குத்தினர்
ஆருயிர் கழியவும் நிற்பவர் ஆண்மையில் இருவரும்
ஒத்தமை
போரடு படைகொடு அளப்பவர் போல்பவர் அளவிலர்
பட்டனர் 3.2.21

629 பொற்சிலை வளைய எதிர்ந்தவர் புற்றரவு அனைய
சரம்பட
விற்படை துணியவும் நின்றிலர் வெற்றி கொள்
சுரிகை வழங்கினர்
முற்றிய பெருவளன் இன்றியும் முற்படு கொடை
நிலை நின்றிட
உற்றன உதவிய பண்பினர் ஒத்தனர் உளர் சில
கண்டகர் 3.2.22

630 அடல்முனை மறவர் மடிந்தவர் அலர் முகம் உயிருள
வென்றுறு
படர் சிறை சுலவு கருங்கொடி படர்வன சுழல்வன
துன்றலில்
விடு சுடர் விழிகள் இரும்பு செய் வினைஞர் தம்
உலையின் முகம் பொதி
புடை மிடை கரியிடை தங்கிய புகை விடு தழலை
நிகர்த்தன 3.2.23

631 திண் படை வயவர் பிணம்படு செங்களம் அதனிடை
முன் சிலர்
புண்படு வழி சொரியும் குடர் பொங்கிய கழுகு
பருந்தொடு
கொண்டெழு பொழுதினும் முன் செயல் குன்றுதல்
இலர் தலை நின்றனர்
விண்படர் கொடி விடு பண் பயில் விஞ்சையர்
குமரரை வென்றனர் 3.2.24

632 இம் முனைய வெம் போரில் இரு படையின் வாள் வீரர்
வெம் முனையில் வீடியபின் வீடாது மிக்கு ஒழிந்த
தம்முடைய பல் படைஞர் பின்னாகத் தாம் முன்பு
தெம்முனையில் ஏனாதி நாதர் செயிர்த்து எழுந்தார் 3.2.25

633 வெஞ்சினவாள் தீ உமிழ வீரக் கழல் கலிப்ப
நஞ்சணி கண்டர்க்கு அன்பர் தாம் எதிர்ந்த ஞாட்பின் கண்
எஞ்சி எதிர் நின்ற இகல் முனையில் வேலுழவர்
தஞ்சிரமும் தோளுரமும் தாளுரமும் தாந்துணித்தார் 3.2.26

634 தலைப்பட்டார் எல்லாரும் தனி வீரர் வாளில்
கொலைப் பட்டார் முட்டாதார் கொல் களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய் உணர்வு நேர் பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதல் குற்றம் போல் ஆயினார் 3.2.27

635 இந் நிலைய வெங்களத்தில் ஏற்றழிந்த மானத்தால்
தன்னுடைய பல் படைஞர் மீண்டார் தமைக் கொண்டு
மின்னொளி வாள் வீசி விறல் வீரர் வெம் புலி யேறு
அன்னவர் தம் முன் சென்று அதி சூரன் நேர்
அடர்ந்தான் 3.2.28

636 மற்றவர் தம் செய்கை வடி வாள் ஒளி காணச்
சுற்றி வரும் வட்ட அணையில் தோன்றா வகை கலந்து
பற்றி அடர்க்கும் பொழுதில் தானும் படை பிழைத்துப்
பொற்றடந் தோள் வீரர்க்கு உடைந்து புறகிட்டான் 3.2.29

637 போன அதிசூரன் போரில் அவர்க் கழிந்த
மான மிக மீதூர மண் படுவான் கண் படான்
ஆன செயல் ஓர் இரவும் சிந்தித்து அலமந்தே
ஈன மிகு வஞ்சனையால் வெல்வன் என எண்ணினான் 3.2.30

638 கேட்டாரும் கங்குல் புலர்காலைத் தீயோனும்
நாட்டாரைக் கொல்லாதே நாம் இருவேம் வேறு இடத்து
வாட்டாயங் கொள் போர் மலைக்க வருக எனத்
தோட்டார் பூந்தாரார்க்குச் சொல்லிச் செலவிட்டான் 3.2.31

639 இவ்வாறு கேட்டலுமே ஏனாதி நாதனார்
அவ்வாறு செய்தல் அழகிதென அமைந்து
கை வாள் அமர் விளைக்கத் தான் கருதும் அக் களத்தில்
3.2.32

வெவ்வாள் உரவோன் வருக என மேற் கொள்வார்

640 சுற்றத்தார் யாரும் அறியா வகை சுடர் வாள்
பொற் பலகையும் தாமே கொண்டு புறம் போந்து
மற்றவன் முன் சொல்லி வரக்குறித்தே அக் களத்தே
பற்றலனை முன் வரவு பார்த்துத் தனி நின்றார் 3.2.33

641 தீங்கு குறித்து அழைத்த தீயோன் திரு நீறு 1
தாங்கிய நெற்றியினார் தங்களையே எவ்விடத்தும் 2
ஆங்கு அவரும் தீங்கு இழையார் என்பது
அறிந்தானாய்ப்
பாங்கில் திரு நீறு பண்டு பயிலாதான் 3.2.34

642 வெண்ணீறு நெற்றி விரவப் புறம் பூசி
உள் நெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன் கொண்டு
வண்ணச் சுடர் வாள் மணிப் பலகை கைக் கொண்டு
புண்ணியப் போர் வீரர்க்குச் சொன்ன இடம் புகுந்தான் 3.2.35

643 வென்றி மடங்கல் விடக்கு வர முன் பார்த்து
நின்றாற் போல் நின்ற நிலை கண்டு தன் நெற்றி
சென்று கிடப்பளவுந் திண் பலகையான் மறைத்தே
முன் தன் வீரர்க்கு எதிரே மூண்டான் மறம் பூண்டான் 3.2.36

644 அடல் விடையேறு என்ன அடத்தவனைக் கொல்லும்
இடை தெரிந்து தாள் பெயர்க்கும் ஏனாதி நாதர்
புடை பெயர்ந்த மாற்றான் பலகை புறம் போக்கக்
கடையவன் தன் நெற்றியின் மேல் வெண்ணீறு தாம்
கண்டார் 3.2.37

645 கண்ட பொழுதே கெட்டேன் முன்பு இவர் மேல்
காணாத
வெண் திரு நீற்றின் பொலிவு மேற்கண்டேன் வேறு
இனி என்
அண்டர் பிரான் சீர் அடியார் ஆயினார் என்று மனம்
கொண்டு இவர் தம் கொள்கைக் குறி வழி நிற்பேன்
என்று 3.2.38

646 கை வாளுடன் பலகை நீக்கக் கருதியது
செய்யார் நிராயுதரைக் கொன்றார் எனும் தீமை
எய்தாமை வேண்டும் இவர்க்கு என்று இரும் பலகை
நெய் வாளுடன் அடர்த்து நேர்வார் போல் நின்றார் 3.2.39

647 அந்நின்ற தொண்டர் திரு உள்ளம் ஆர் அறிவார்
முன் நின்ற பாதகனும் தன் கருத்தே முற்று வித்தான்
இந் நின்ற தன்மை அறிவார் அவர்க்கு அருள
மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளி நின்றார் 3.2.40

648 மற்றினி நாம் போற்றுவது என் வானோர் பிரான் அருளைப்
பற்றலர் தம் கை வாளால் பாசம் அறுத்து அருளி
உற்றவரை என்றும் உடன் பிரியா அன்பு அருளிப்
பொற்றொடியாள் பாகனார் பொன்னம்பலம் அணைந்தார் 3.2.41

649 தம் பெருமான் சாத்தும் திரு நீற்றுச் சார்புடைய
எம் பெருமான் ஏனாதி நாதர் கழல் இறைஞ்சி
உம்பர் பிரான் காளத்தி உத்தமர்க்குக் கண்ணப்பும்
நம் பெருமான் செய்த பணி நாம் தெரிந்தவாறு உரைப்பாம் 3.2.42

திருச்சிற்றம்பலம்

3.3. கண்ணப்ப நாயனார் புராணம் (650-835)

திருச்சிற்றம்பலம்

650 மேலவர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக் காளத்திக் கண்ணப்பர் திரு நாடு என்பர்
நாவலர் புகழ்ந்து போற்றும் நல் வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்த பொத்தப்பி நாடு 3.3.1

651 இத் திரு நாடு தன்னில் இவர் திருப் பதியாதென்னில்
நித்தில அருவிச் சாரல் நீள் வரை சூழ்ந்த பாங்கர்
மத்த வெம் களிற்றுக் கோட்டு வன் தொடர் வேலி கோலி
ஒத்த பேர் அரணம் சூழ்ந்த முது பதி உடுப்பூர் ஆகும் 3.3.2

652 குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ் செவி ஞமலி யாத்த
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும் 3.3.3

653 வன் புலிக் குருளையோடும் வயக் கரி கன்றினோடும்
புன்றலைச் சிறு மகார்கள் புரிந்து உடன் ஆடல் அன்றி
அன்புறு காதல் கூற அணையும் மான் 3.3.4

பிணைகளோடும்
இன்புற மருவி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும்
654 வெல் படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர்
கூட்டம் தோறும்
கொல் எறி குத்து என்று ஆர்த்துக் குழுமிய ஓசை
அன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும் சிறு கண் ஆகுளியும் கூடி
கல் எனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி
எங்கும் 3.3.5

655 ஆறலைத்து உண்ணும் வேடர் அயற் புலங் கவர்ந்து
கொண்ட
வேறு பல் உருவின் மிக்கு விரவும் ஆன் நிரைகள்
அன்றி
ஏறுடை வானம் தன்னில் இடிக் குரல் எழிலி யோடு
மாறுகொள் முழக்கங் காட்டும் மதக்கை மாநிரைகள்
எங்கும் 3.3.6

656 மைச் செறிந்தனைய மேனி வன் தொழில் மறவர்
தம்பால்
அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடை வன்
தோலார்
பொச்சை யின் நறவும் ஊனின் புழுக்கலும் உணவு
கொள்ளும்
நச்சழற்பகழி வேடர்க்கு அதிபதி நாகன் என்பான் 3.3.7

657 பெற்றியால் தவமுன் செய்தான் ஆயினும் பிறப்பின்
சார்பால்
குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலை
நின்றுள்ளான்
வில் தொழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல்
போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியும் தத்தை
என்பாள் 3.3.8

658 அரும் பெறல் மறவர் தாயத்தான்ற தொல் குடியில்
வந்தாள்
இரும் புலி எயிற்றுத் தாலி இடை இடை மனவு
கோத்துப்
பெரும் புறம் அலையப் பூண்டான் பீலியும் குழையும்
தட்டச்
சுரும்புறு படலை முச்சிச் சூர் அரிப் பிணவு
3.3.9

போல்வான்

659 பொருவரும் சிறப்பின் மிக்கார் இவர்க்கு இனிப்
புதல்வர் பேறே
அரியது என்று எவரும் கூற அதற்படு காதலாலே
முருகலர் அலங்கல் செவ்வேள் முருகவேள்
முன்றில் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க் கடன் நெறியில்
நிற்பார் 3.3.10

660 வாரணச் சேவலோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவேலோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங்கு ஆடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை 3.3.11

661 பயில் வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியாம்
நாகற்கு
எயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்தர் ஆன
மயிலுடைக் கொற்ற ஊர்தி வரையுரங் கிழித்த
திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார்
அருளினாலே 3.3.12

662 கானவர் குலம் விளங்கத் தத்தைபால் கருப்பம் நீட
ஊனமில் பலிகள் போக்கி உறுகடன் வெறி ஆட்டோ
டும்
ஆன அத் திங்கள் செல்ல அளவில் செய்
தவத்தினாலே
பான்மதி உவரி ஈன்றால் என மகப் பயந்த போது 3.3.13

663 கரிப்பரு மருப்பின் முத்தும் கழை விளை செழுநீர்
முத்தும்
பொருப்பின் மணியும் வேடர் பொழி தரு மழையே
அன்றி
வரிச் சுரும்பு அலைய வானின் மலர் மழை
பொழிந்தது எங்கும்
அரிக்குறுந் துடியே அன்றி அமரர் துந்துபியும் ஆர்த்த 3.3.14

664 அருவரைக் குறவர் தங்கள் அகன் குடிச் சீறூர் ஆயம்
பெரு விழா எடுத்து மிக்க பெருங்களி கூறும் காலைக்
கருவரை காள மேகம் ஏந்தியது என்னத் தாதை
பொருவரைத் தோள்களாரப் புதல்வனை எடுத்துக்
கொண்டான் 3.3.15

665 கருங் கதிர் விரிக்கும் மேனி காமரு குழவி தானும்
இரும்புலி பறழின் ஓங்கி இறவுளர் அளவே அன்றி
அரும் பெறல் உலகமெல்லாம் அளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவும் சாற்றும் தன்மையிற் பொலிந்து தோன்ற 3.3.16

666 அண்ணலைக் கையில் ஏந்தற்கு அருமையால் உரிமைப் பேரும்
திண்ணன் என்றியம்பும் என்னத் திண்சிலை வேடர் ஆர்த்தார்
புண்ணியப் பொருளாய் உள்ள பொருவில் சீர் உருவினானைக்
கண்ணினுக்கு அணியாத் தங்கள் கலன்பல அணிந்தார் அன்றே 3.3.17

667 வரையுறை கடவுட் காப்பு மறகுடி மரபில் தங்கள்
புரையில் தொல் முறைமைக்கு ஏற்பப் பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பு இழைத்து இடையே கோத்த
அரை மணிக் கவடி கட்டி அழகுற வளர்க்கும் நாளில் 3.3.18

668 வருமுறைப் பருவம் தோறும் வளமிகு சிறப்பில் தெய்வப்
பெருமடை கொடுத்துத் தொக்க பெருவிறல் வேடர்க்கெல்லாம்
திருமலி துழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே
அருமையில் புதல்வர் பெற்ற ஆர்வமும் தோன்ற உய்த்தார் 3.3.19

669 ஆண்டு எதிர் அணைந்து செல்ல விடும் அடித் தளர்வு நீங்கிப்
பூண் திகழ் சிறு புன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண் முளவு முள் அரிந்து கோத்த
நாண்டரும் எயிற்றுத் தாலி நலங்கிளர் மார்பில் தூங்க 3.3.20

670 பாசொளி மணியோடு ஆர்த்த பன் மணிச் சதங்கை ஏங்க
காசொடு தொடுத்த காப்புக் கலன் புனை அரைஞாண் சேர்த்தித்
3.3.21

தேசுடை மருப்பில் தண்டை செறிமணிக் குதம்பை
மின்ன
மாசறு கோலம் காட்டி மறுகிடை ஆடும் நாளில்

671 தண் மலர் அலங்கல் தாதை தாய் மனம் களிப்ப வந்து
புண்ணிய கங்கை நீரில் புனிதமாம் திருவாய் நீரில்
உண்ணனைந்து அமுதம் ஊறி ஒழுகிய மழலைத் தீஞ்
சொல்
வண்ண மென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா
நின்றார் 3.3.22

672 பொரு புலிப் பார்வைப் பேழ்வாய் முழை எனப்
பொற்கை நீட்டப்
பரிஉடைத் தந்தை கண்டு பைந்தழை கைக்
கொண்டோ ச்ச
இரு சுடர்க் குறு கண் தீர்க்கும் எழில் வளர் கண்ணீர்
மல்கி
வருதுளி முத்தம் அத்தாய் வாய் முத்தம் கொள்ள
மாற்றி 3.3.23

673 துடிக் குறடு உருட்டி ஓடித் தொடக்கு நாய்ப் பாசம்
சுற்றிப்
பிடித்து அறுத்து எயினப் பிள்ளைப் பேதையர்
இழைத்த வண்டல்
அடிச் சிறு தளிரால் சிந்தி அருகுறு சிறுவரோடும்
குடிச் செறு குரம்பை எங்கும் குறு நடை குறும்பு
செய்து 3.3.24

674 அனையன பலவும் செய்தே ஐந்தின் மேல் ஆன
ஆண்டின்
வனை தரு வடிவார் கண்ணி மறச் சிறு மைந்த
ரோடும்
சினை மலர்க் காவுகள் ஆடி செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனை மருப் புழலை வேலிப் புறச்சிறு கானிற் போகி 3.3.25

675 கடு முயல் பறழினோடுங் கான ஏனத்தின் குட்டி
கொடு வரிக் குருளை செந்நாய் கொடுஞ் செவிச் சாபம்
ஆன
முடுகிய விசையில் ஓடித் தொடர்ந்து உடன் பற்றி
முற்றத்து
இடு மரத் திரளில் கட்டி வளப்பன எண்ணிலாத 3.3.26

676 அலர் பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையும் ஆட்டிக்
குலமுது குறத்தி ஊட்டிக் கொண்டு கண் துயிற்றிக்
3.3.27

கங்குல்
புலர ஊன் உணவு நல்கிப் புரி விளையாட்டின் விட்டுச்
சில முறை ஆண்டு செல்ல சிலை பயில் பருவம்
சேர்ந்தார்

677 தந்தையும் மைந்தனாரை நோக்கித் தன் தடித்த
தோளால்
சிந்தை உள் மகிழப் புல்லிச் சிலைத் தொழில் பயிற்ற
வேண்டி
முந்தை அத் துறையில் மிக்க முதியரை அழைத்துக்
கூட்டி
வந்த நாள் குறித்தது எல்லாம் மறவர்க்குச் சொல்லி
விட்டான் 3.3.28

678 வேடர் தம் கோமான் நாதன் வென்றி வேள் அருளால்
பெற்ற
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன் வில்
பிடிக்கின்றான் என்று
ஆடியல் துடியும் சாற்றி அறைந்த பேர் ஓசை கேட்டு
மாடுயர் மலைகள் ஆளும் மறக் குலத் தலைவர்
எல்லாம் 3.3.29

679 மலை படு மணியும் பொன்னும் தரளமும் வரியின்
தோலும்
கொலை புரி களிற்றுக் கோடும் பீலியின் குவையும்
தேனும்
தொலைவில் பல் நறவும் ஊனும் பலங்களும்
கிழங்கும் துன்றச்
சிலை பயில் வேடர் கொண்டு திசை தொறும்
நெருங்க வந்தார் 3.3.30

680 . மல்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திட மாறில் சீறூர்
எல்லையில் அடங்கா வண்ணம் ஈண்டினர்
கொணர்ந்தா எங்கும்
பல்பெருங் கிளைஞர் போற்றப் பராய்க் கடன் பலவும்
செய்து
வில் விழா எடுக்க என்று விளம்பினான் வேடர்
கோமன் 3.3.31

681 பான்மையில் சமைத்துக் கொண்டு படைக்கலம்
வினைஞர் ஏந்த
தேனலர் கொன்றையார் தம் திருச்சிலைச் செம்பொன்
மேரு

3.3.32

வானது கடலின் நஞ்சும் ஆக்கிட அவர்க்கே பின்னும்
கான ஊன் அமுதம் ஆக்கும் சிலையினைக் காப்புச்
செய்தார்

682 சிலையினைக் காப்புக் கட்டும் திண் புலி நரம்பில்
செய்த
நலமிகு காப்பு நன்னாண் நாகனார் பயந்த நாகர்
குலம் விளங்கு கரிய குன்றின் கோலம் முன்கையில்
சேர்த்தி
மலை உறை மாக்கள் எல்லாம் வாழ்த்த எடுத்து
இயம்பினார்கள் 3.3.33

683 ஐவன அடிசில் வெவ்வேறு அமைந்தன புற்பாற்
சொன்றி
மெய் வரைத் தினை மென் சோறு மூங்கில் வன்
பதங்கள் மற்றும்
கைவினை எயினர் ஆக்கிக் கலந்த ஊன் கிழங்கு
துன்றச்
செய் வரை உய்ப்ப எங்கும் கலந்தனர் சினவில் வேடர் 3.3.34

684 செம் தினை இடியும் தேனும் அருந்துவார் தேனில்
தோய்த்து
வெந்த ஊன் அயில்வார் வேரி விளங்கனி கவளம்
கொள்வார்
நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார்
வெவ்வேறு
அந்தமில் உணவின் மேலோர் ஆயினர்
அளவிலார்கள் 3.3.35

685 அயல் வரைப் புலத்தின் வந்தார் அருங்குடி இருப்பின்
உள்ளார்
இயல் வகை உணவில் ஆர்ந்த எயிற்றியர் எயினர்
எல்லாம்
உயர் கதிர் உச்சி நீங்க ஒழிவில் பல் நறவு மாந்தி
மயலுறு களிப்பின் நீடி வரிசிலை விழவு கொள்வார் 3.3.36

686 பாசிலைப் படலைச் சுற்றிப் பன் மலர்த் தொடையல்
சூடிக்
காசுடை வடத் தோல் கட்டி கவடி மெய்க் கலன்கள்
பூண்டார்
மாசில் சீர் வெட்சி முன்னா வருதுறைக் கண்ணி சூடி
ஆசில் ஆசிரியன் ஏந்தும் அடற் சிலை மருங்கு
சூழ்ந்தார் 3.3.37

687 தொண்டக முரசும் கொம்பும் துடிகளும் துளை கொள்
வேயும்
எண்டிசை நிறைந்து விம்ம எழுந்த பேர்
ஒலியினோடும்
திண்டிறல் மறவர் ஆர்ப்புச் சேண் விசும்பு இடித்துச்
செல்லக்
கொண்ட சீர் விழவு பொங்கக் குறிச்சியை வலம்
கொண்டார்கள் 3.3.38

688 குன்றவர் களி கொண்டாடக் கொடிச்சியர் துணங்கை
ஆட
துன்றிய மகிழ்ச்சியோடும் சூர் அரமகளிர் ஆட
வென்றி வில் விழவினோடும் விருப்புடை ஏழாம்
நாளாம்
அன்றிரு மடங்கு செய்கை அழகுற அமைத்த பின்னர் 3.3.39

689 வெங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில்
எங்கும்
மங்கல வாழ்த்து மல்க மருங்கு பல்லியங்கள் ஆர்ப்பத்
தங்கள் தொல் மரபின் விஞ்சைத் தனுத் தொழில்
வலவர் தம்பால்
பொங்கொளிக் கரும் போர் ஏற்றைப் பொருசிலை
பிடிப்பித்தார்கள் 3.3.40

690 பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன் முன்
செய்த
வில் தொழில் களத்தில் நண்ணி விதிமுறை வணங்கி
மேவும்
அற்றை நாள் தொடங்கி நாளும் அடல் சிலை
ஆண்மை முற்றக்
கற்றனர் என்னை ஆளும் கானவர்க்கு அரிய சிங்கம் 3.3.41

691 வண்ணவெஞ் சிலையும் மற்றப் படைகளும் மலரக்
கற்று
கண்ணகல் சாயல் பொங்கக் கலை வளர் திங்களே
போல்
எண்ணிரண்டு ஆண்டின் செவ்வி எய்தினார் எல்லை
இல்லாப்
புண்ணியம் தோன்றி மேல் மேல் வளர் அதன்
பொலிவு போல்வார் 3.3.42

692 இவ் வண்ணம் திண்ணனார் நிரம்பு நாளில்
இருங் குறவர் பெருங்குறிச்சிக்கு இறைவன் ஆய
3.3.43

மை வண்ண வரை நெடுந் தோள் நாகன் தானும்
மலை எங்கும்
வனம் எங்கும் வரம்பில் காலம்
கை வண்ணச் சிலை வேட்டை ஆடித் தெவ்வர் கண
நிரைகள் பல கவர்ந்து கானம் காத்து
மெய் வண்ணந்தளர் மூப்பின் பருவம் எய்தி
வில்லுழவின்
பெரு முயற்சி மெலிவன் ஆனான்

693 அங்கண் மலைத் தடஞ்சாரல் புனங்கள் எங்கும்
அடலேனம் புலி கரடி கடமை ஆமா
வெங் கண் மரை கலையொடு மான் முதலாய் உள்ள
மிருகங்கள்
மிக நெருங்கி மீதூர் காலைத்
திங்கள் முறை வேட்டை வினை தாழ்தது என்று
சிலை
வேடர் தாம் எல்லாம் திரண்டு சென்று
தங்கள் குல முதல் தலைவன் ஆகி உள்ள தண்
தெரியல்
நாகன் பால் சார்ந்து சொன்னார் 3.3.44

694 சொன்ன உரை கேட்டலுமே நாகன் தானும் சூழ்ந்து
வரும் தன் மூப்பின் தொடர்வு நோக்கி
முன் அவர்கட்கு உரை செய்வான் மூப்பினாலே
முன்பு போல்
வேட்டையினில் முயல கில்லேன்
என் மகனை உங்களுக்கு நாதனாக எல்லீரும் கைக்
கொண்மின் என்ற போதின்
அன்னவரும் இரங்கிப் பின் மகிழ்ந்து தம் கோன் அடி
வணங்கி
இம் மாற்றம் அரைகின்றார்கள் 3.3.45

695 இத்தனை காலமும் நினது சிலைக் கீழ் தங்கி இனிது
உண்டு தீங்கு இன்றி இருந்தோம் இன்னும்
அத்த! நினது அருள் வழியே நிற்பது அல்லால் அடுத்த
நெறி
வேறு உளதோ அதுவே அன்றி
மெய்த்த விறல் திண்ணனை உன் மரபில் சால மேம்
படவே
பெற்று அளித்தாய் விளங்கு மேன்மை
வைத்த சிலை மைந்தனை ஈண்டு அழைத்து நுங்கள்
வரை
3.3.46

ஆட்சி அருள் என்றார் மகிழ்ந்து வேடர்

696 சிலை மறவர் உரை செய்ய நாகன் தானும்
திண்ணனை
முன் கொண்டுவரச் செப்பி விட்டு
மலை மருவு நெடும் கானில் கன்னி வேட்டை மகன்
போகக்
காடு பலி மகிழ்வு ஊட்ட
தலை மரபின் வழி வந்த தேவராட்டிதனை அழைமின்
என
அங்குச் சார்ந்தோர் சென்று
நிலைமை அவள் தனக்கு உரைப்ப நரை மூதாட்டி
நெடிது வந்து
விருப்பினோடும் கடிது வந்தாள் 3.3.47

697 கானில் வரித்தளிர் துதைந்த கண்ணி சூடிக் கலை
மருப்பின் அரிந்த குழை காதில் பெய்து
மானின் வயிற்று அரிதாரத் திலகம் இட்டு மயில்
கழுத்து
மனவு மணி வடமும் பூண்டு
தான் இழிந்து இரங்கி முலை சரிந்து தாழத்
தாழைப்பீலி
மரவுரி மேல் சார எய்திப்
பூ நெருங்கு தோரை மலி சேடை நல்கிப் போர் வேடர்
கோமானைப் போற்றி நின்றாள் 3.3.48

698 நின்ற முதுகுறக்கோலப் படிமத்தாளை நேர் நோக்கி
அன்னை நீ நிரப்பு நீங்கி
நன்று இனிதின் இருந்தனையோ என்று கூறும் நாகன்
எதிர் நலம் பெருக வாழ்த்தி நல்ல
மென் தசையும் ஈயலொடு நறவும் வெற்பில் விளை
வளனும் வேண்டிற்று எல்லாம்
அன்று நீ வைத்தபடி பெற்று வாழ்வேன் அழைத்த பணி
என் என்றாள் அணங்கு சார்ந்தாள் 3.3.49

699 கோட்டமில் என்குல மைந்தன் திண்ணன் எங்கள்
குலத் தலைமை யான் கொடுப்பக்கொண்டு
பூண்டு
பூட்டுறு வெஞ் சிலை வேடர் தம்மைக் காக்கும்
பொருப்புரிமை
புகுகின்றான் அவனுக்கு என்றும்
வேட்டை வினை எனக்கு மேலாக வாய்த்து வேறு
புலங் கவர் வென்றி மேவு மாறு 3.3.50

காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக் காடு
பலி
ஊட்டு என்றான் கவலை இல்லான்
700 மற்று அவன்தன் மொழி கேட்ட வரைச் சூராட்டி
மனமகிழ்ந்து
இங்கு அன்போடு வருகின்றேனுக்கு
எற்றையினுங் குறிகள் மிக நல்ல ஆன இதனாலே
உன்
மைந்தன் திண்ணனான வெற்றி வரிச்
சிலையோன் நின் அளவில் அன்றி மேம்படுகின்றான்
என்று விரும்பி வாழ்த்திக்
கொற்றவன் தெய்வங்கள் மகிழ ஊட்ட வேண்டுவன
குறைவின்றிக் கொண்டு போனாள் 3.3.51
701 தெய்வ நிகழ் குற முதியாள் சென்ற பின்பு திண்ணனார்
சிலைத் தாதை அழைப்பச் சீர்கொள்
மைவிரவு நறுங் குஞ்சி வாசக் கண்ணி மணி நீல
ஒன்று வந்தது என்னக்
கைவிரவு சிலை வேடர் போற்ற வந்து காதல் புரி
தாதை கழல் வணங்கும் போதில்
செய்வரை போல் புயம் இரண்டும் செறியப் புல்லிச்
செழும் புலித்தோல் இருக்கையின் முன்சேர
வைத்தான் 3.3.52
702 முன் இருந்த மைந்தன் முகம் நோக்கி நாகன்
மூப்பு எனை வந்து அடைந்தலினால்
முன்புபோல
என்னுடைய முயற்சியினால் வேட்டை ஆட இனி
எனக்குக் கருத்து இல்லை எனக்கு மேலாய்
மன்னு சிலை மலையர் குலக் காவல் பூண்டு மாறு
எறிந்து மா வேட்டை ஆடி என்றும்
உன்னுடைய மரபு உரிமை தாங்குவாய் என்றுடைய
தோலும் சுரிகையும் கைக் கொடுத்தான் அன்றே 3.3.53
703 தந்தை நிலை உள்கொண்டு தளர்வு கொண்டு தங்கள்
குலத் தலைமைக்குச் சார்வு தோன்ற
வந்த குறைபாடு அதனை நிரப்புமாறு மனம் கொண்ட
குறிப்பினால் மறாமை கொண்டு
முந்தையவன் கழல் வணங்கி முறைமை தந்த முதல்
சுரிகை
உடை தோலும் வாங்கிக் கொண்டு
சிந்தை பரங்கொள நின்ற திண்ணனார்க்குத் திருத் 3.3.54

தாதை முகம் மலர்ந்து செப்புகின்றான்

704 நம்முடைய குல மறவர் சுற்றத்தாரை நான் கொண்டு
பரித்து அதன் மேல் நலமே செய்து
தெம் முனையில் அயற் புலங்கள் கவர்ந்து கொண்ட
திண்
சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்
வெம் முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும்
விரைந்து நீ தாழாதே வேட்டை ஆட
இம் முரண் வெஞ் சிலை வேடர் தங்களோடும் எழுக
என
விடை கொடுத்தான் இயல்பில் நின்றான் 3.3.55

705 செங்கண் வயக் கோளரியேறு அன்ன திண்மை
திண்ணனார் செய் தவத்தின் பெருமை பெற்ற
வெங்கண் விறல் தாதை கழல் வணங்கி நின்று விடை
கொண்டு புறம் போந்து வேடரோடும்
மங்கல நீர்ச் சுனை படிந்து மனையின் வைகி
வைகிருளின்
புலர் காலை வரிவிற் சாலைப்
பொங்கு சிலை அடல் வேட்டைக் கோலம் கொள்ளப்
புனை
தொழில் கை வினைஞரோடும் பொலிந்து புக்கார் 3.3.56

706 நெறி கொண்ட குஞ்சிச் சுருள் துஞ்சி நிமிர்ந்து பொங்க
முறி கொண்ட கண்ணிக்கு இடை மொய்யொளிப் பீலி
சேர்த்தி
வெறி கொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி
வெட்சி
செறி கொண்ட வண்டின் குலம் சீர் கொளப் பின்பு
செய்து 3.3.57

707 முன் நெற்றியின் மீது முருந்திடை வைத்த குன்றி
தன்னில் புரி கொண்ட மயிர் கயிறாரச் சாத்தி
மின்னல் திகழ் சங்கு விளங்கு வெண் தோடு காதின்
மன்னிப் புடை நின்றன மா மதி போல வைக 3.3.58

708 கண்டத்திடை வெண் கவடிக் கதிர் மாலை சேர
கொண்டக் கொடு பன் மணி கோத்திடை ஏனக் கோடு
துண்டப் பிறை போல்வன தூங்கிட வேங்கை
வன்தோல்
தண்டைச் செயல் பொங்கிய சன்ன வீரம் தயங்க 3.3.59

709 மார்பில் சிறு தந்த மணித்திரள் மாலைத் தாழத்
தாரிற் பொலி தோள் வலயங்கள் தழைத்து மின்னச்
சேர்விற் பொலி கங்கண மீது திகழ்த முன் கைக்
கார்விற் செறி நாண் எறி கைச் செறி கட்டி கட்டி 3.3.60

710 அரையில் சரணத்து உரி ஆடையின் மீது பௌவத்து
திரையில் படு வெள்ளலகு ஆர்த்து விளிம்பு சேர்த்தி
நிரையில் பொலி நீளுடை தோல்கரி கைப்புறம் சூழ்
விரையில் துவர் வார் விசி போக்கி அமைத்து வீக்கி 3.3.61

711 வீரக் கழல் காலின் விளங்க அணிந்து பாதம்
சேரத் தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப் பெரு வில் வலம் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத் திருத்தாள் மடித்து ஏற்றி வியந்து தாங்கி 3.3.62

712 அங்கு அப்பொழுதில் புவனத்து இடர் வாங்க ஓங்கித்
துங்கப் பெரு மா மழை போன்று துண் என்று ஒலிப்ப
வெங்கண் சின நீடு விலங்கு விலங்கி நீங்கச்
செங்கைத் தலத்தால் தடவிச் சிறு நாண் எறிந்தார் 3.3.63

713 பல்வேறு வாளி புதை பார்த்து உடன் போத ஏவி
வில் வேடர் ஆயத் துடி மேவி ஒலிக்கு முன்றில்
சொல் வேறு வாழ்த்துத் திசைதோறும் துதைந்து விம்ம
வல்லேறு போல்வார் அடல் வாளி தெரிந்து நின்றார் 3.3.64

714 மானச் சிலை வேடர் மருங்கு நெருங்கும் போதில்
பானற்குல மாமலரில் படர் சோதியார் முன்
தேனற்றசை தேறல் சருப் பொரி மற்றும் உள்ள
கானப் பலி நேர் கடவுள் பொறையாட்டி வந்தாள் 3.3.65

715 நின்று எங்கும் மொய்க்கும் சிலை வேடர்கள் நீங்கப் புக்குச்
சென்று அங்கு வள்ளல் திரு நெற்றியில் சேடை சாத்தி
உன் தந்தை தந்தைக்கும் இந் நன்மைகள் உள்ள வல்ல
நன்றும் பெரிது விறல் நம்மளவு அன்று இது என்றாள் 3.3.66

716 அப் பெற்றியில் வாழ்த்தும் அணங்குடை ஆட்டி தன்னைச்
செப்பற்கு அரிதாய சிறப்பு எதிர் செய்து போக்கிக் கைப்
பற்றிய
திண் சிலை கார் மழை மேகம் என்ன
மெய்ப் பொற்புடை வேட்டையின் மேல் கொண்டு
எழுந்து போந்தார் 3.3.67

717 தாளில் வாழ் செருப்பர் தோல் தழைத்த நீடு தானையர்
வாளியோடு சாபம் மேவு கையர் வெய்ய வன் கணார்
ஆளி ஏறு போல ஏகும் அண்ணலார் முன் எண்ணிலார்
மீளி வேடர் நீடு கூட்டம் மிக்கு மேல் எழுந்ததே 3.3.68

718 வன் தொடர் பிணித்த பாசம் வன் கை மள்ளர் கொள்ளவே
வென்றி மங்கை வேடர் வில்லின் மீது மேவு பாதமுன்
சென்று நீளுமாறு போல்வ செய்ய நாவின் வாய வாய்
ஒன்றோடு ஒன்று நேர் படாமல் ஓடு நாய்கள் மாடெலாம் 3.3.69

719 போர் வலைச் சிலைத் தொழில் புறத்திலே விளைப்பச்
சார் வலைத் தொடக்கு அறுக்க ஏகும் ஐயர் தம் முன்னே
கார் வலைப் படுத்த குன்று கானமா வளைக்க நீள்
வார் வலைத் திறம் சுமந்து வந்த வெற்பர் முந்தினார் 3.3.70

720 நண்ணி மா மறைக் குலங்கள் நாட என்று நீடும் அத்
தண்ணிலா அடம்பு கொன்றை தங்கு வேணியார் தமைக்
கண்ணில் நீடு பார்வை ஒன்று கொண்டு காணும் அன்பர் முன்
எண்ணில் பார்வை கொண்டு வேடர் எம் மருங்கும் ஏகினார் 3.3.71

721 கோடுமுன் பொலிக்கவும் குறுங் கணா குளிக்குலம்
மாடு சென்று இசைப்பவும் மருங்கு பம்பை கொட்டவும்
சேடு கொண்டகை விளிச் சிறந்த ஓசை செல்லவும்
காடு கொண்டு எழுந்த வேடு கை வளைந்து சென்றதே 3.3.72

722 நெருங்கு பைந்தருக் குலங்கள் நீடு காடு கூட நேர்
வருங்கருஞ் சிலைத் தடக்கை மான வேடர் சேனை தான்
பொருந் தடந் திரைக்கடல் பரப்பு இடைப் புகும் பெருங்
கருந்தரங்க நீள் புனல் களிந்தி கன்னி ஒத்ததே 3.3.73

723 தென் திசைப் பொருப்புடன் செறிந்த கானின் மான் இனம்
பன்றி வெம் மரைக் கணங்கள் ஆதியான பல் குலம்
துன்றி நின்ற என்றடிச் சுவட்டின் ஒற்றர் சொல்லவே
வன் தடக்கை வார்கொடு எம் மருங்கும் வேடர் ஓடினார் 3.3.74

724 ஓடி எறிந்து வாரொழுக்கி யோசனைப் பரப்பு எலாம்
நெடிய திண் வலைத் தொடக்கு நீளிடைப் பிணித்து
நேர்
கடி கொளப் பரந்த காடு காவல் செய்து அமைத்த பின்
செடி தலைச் சிலைக்கை வேடர் திண்ணனார் முன்
நண்ணினார் 3.3.75

725 வெஞ்சிலைக்கை வீரனாரும் வேடரோடு கூடி முன்
மஞ்சலைக்கு மாமலை சரிப் புறத்து வந்த மா
அஞ்சுவித்து அடர்க்கும் நாய்கள் அட்டமாக விட்டு நீள்
செஞ்சரத்தினோடு குழல் செய்த கானுள் எய்தினர் 3.3.76

726 வெய்ய மா எழுப்ப ஏவி வெற்பராயம் ஓடி நேர்
எய்யும் வாளி முன் தெரிந்து கொண்டு செல்ல
எங்கணும்
மொய் குரல் துடிக் குலங்கள் பம்பை முன் சிலைத்து
எழக்
கை விளித்து அதிர்த்து மா எழுப்பினார்கள்
கானெலாம் 3.3.77

727 ஏனமோடு மான் இனங்கள் எண்கு திண் கலைக் குலம்
கான மேதி யானை வெம் புலிக் கணங்கள் கான் மரை
ஆன மா அநேக மா வெருண்டு எழுந்து பாய முன்
சேனை வேடர் மேல் அடர்ந்து சீறி அம்பில் நூறினார் 3.3.78

728 தாளறுவன் இடை துணிவன தலை துமிவன கலைமா
வாளிகளொடு குடல் சொரிதர மறிவன சில மரை மா
நீளுடல் விடு சரம் உருவிட நிமிர்வன மிடை கட மா
மீளிகொள் கணை படும் உடல் எழ விழுவன பல
உழையே 3.3.79

729 வெங்கணை படு பிடர் கிழிபட விசை உருவிய
கயவாய்
செங் கனல் விட அதனொடு கணை செறிய முன் இரு
கருமா
அங்கு எழும் சிரம் உருவிய பொழுது அடல் எயிறு உற
அதனைப்
பொங்கிய சினமொடு கவர்வன புரைவன சில புலிகள் 3.3.80

730 பின் மறவர்கள் விடு பகழிகள் பிற குற வயிறிடை
போய்
முன் நடுமுக மிசை உருவிட முடுகிய விசையுடன்
அக்
கொன் முனை அடு சரம் இனம் எதிர் குறுகிய முகம்
3.3.81

உருவத்
தன் எதிர் எதிர் பொருவன நிகர் தலையன பல
கலைகள்

731 கரு வரை ஒரு தனுவொடு விசை கடுகியது என
முனை நேர்
குரிசில் முன் விடும் அடுசரம் எதிர் கொலை பயில்
பொழுது அவையே
பொரு கரி யொடு சின அரியிடை புரையறவுடல்
புகலால்
வரும் இரவொடு பகல் அணைவன என மிடையும்
அவ்வனமே 3.3.82

732 நீளிடை விசை மிசை குதிகொள நெடு முகில் தொட
எழு மான்
தாளுறு கழல் மறவர்கள் விடு சரம் நிரை தொடர்வன
தாம்
வாள் விடுகதிர் மதி பிரிவுற வருமென விழும்
உழையைக்
கோளொடு பயில் பணி தொடர் நிலை கொளவுள எதிர்
பலவே 3.3.83

733 கடல் விரி புனல் கொள விழுவன கரு முகிலென
நிரையே
படர்வொடு செறி தழை பொதுளிய பயில் புதல் வனம்
அதன் மேல்
அடலுறு சரம் உடலுற வரை அடியிடம் அலமரலால்
மிடை கரு மரை கரடிகள் ஓடு விழுவன வன மேதி 3.3.84

734 பல துறைகளின் வெருவரலொடு பயில் வலையற
நுழை மா
உலமொடு படர்வன தகையுற உறு சினமொடு கவர்
நாய்
நிலவிய இரு வினை வலை இடை நிலை சுழல் பவர்
நெறி சேர்
புலனுறு மனனிடை தடைசெய்த பொறிகளின்
அலவுளவே 3.3.85

735 துடியடியன மடி செவியன துறுகய முனி தொடரார்
வெடி பட விரி சிறு குருளைகள் மிசை படு கொலை
விரவார்
அடி தளர்வுறு கரு உடையன அணை உறு பிணை
அலையார்

3.3.86

கொடியன எதிர் முடுகியும் உறு கொலை புரி சிலை
மறவர்

736 இவ்வகை வரு கொலை மறவினை எதிர் நிகழ்வுழி
அதிரக்
கைவரைகலும் வெருவுற இடை கான் எழுவதோர்
ஏனம்
பெய் கருமுகில் என இடியொடு பிதிர் கனல் விழி
சிதறி
மொய் வலைகளை அற நிமிர் முடுகிய கடு
விசையில் 3.3.87

737 போமது தணை அடுதிறலொடு பொரு மறவர்கள்
அரியேறு
ஆமவர் தொடர்வுறும் விசையுடன் அடி வழி செலும்
அளவில்
தாம் ஒருவரும் அறிகிலரவர் தனி தொடர்வுழி
அதன்மேல்
ஏமுனை அடு சிலை விடலைகள் இருவர்கள் அடி
பிரியார் 3.3.88

738 நாடிய கழல் வயவர்கள் அவர் நாணனும் நெடு
வரிவில்
காடனும் எனும் இருவரும் மலை காவலரொடு
கடிதில்
கூடினர் விடு பகழிகளொடு கொலை ஞமலிகள்
வழுவி
நீடிய சரி படர்வது தரு நீழலின் விரை கேழல் 3.3.89

739 குன்றியை நிகர் முன் செற எரி கொடு விழி இடக் குரல்
நீள்
பன்றியும் அடல் வன் திறலொடு படர் நெறி
நெடிதோடித்
துன்றியது ஒரு குன்று அடி வரை சுலவிய நெறி குழல்
சென்று அதனிடை நின்றது வலிது தெருமர நிரையில் 3.3.90

740 அத் தரு வளர் சுழல் இடை அடை அதன் நிலை
அறிபவர் முன்
கைத் தெரி கணையினில் அடுவது கருதலர் விசை
கடுகி
மொய்த்தெழு சுடர் விடு சுரிகையை முனை பெற எதிர்
உருவி
குத்தினர் உடல் முறிபட வெறி குல மறவர்கள்
3.3.91

தலைவர்

741 வேடர் தங்கரிய செங்கண் வில்லியார் விசையில்
குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டு
நாணன்
காடனே இதன் பின் இன்று காதங்கள் பல வந்து
எய்த்தோம்
ஆடவன் கொன்றான் அச்சோ என்று அடியில்
தாழ்ந்தார் 3.3.92

742 மற்றவர் திண்ணனார்க்கு மொழிகின்றார் வழி வந்து
ஆற்ற
உற்றது பசி வந்து எம்மை உதவிய இதனைக்
காய்ச்சிச்
சற்று நீ அருந்தி யாமும் தின்று தண்ணீர் குடித்து
வெற்றி கொள் வேட்டைக் காடு குருகுவோம் மெல்ல
என்றார் 3.3.93

743 என்று அவர் கூற நோக்கித் திண்ணனார் தண்ணீர்
எங்கே
நன்றும் இவ் வனத்தில் உள்ளது என்று உரை செய்ய
நாணன்
நின்ற இப் பெரிய தேக்கின் அப்புறம் சென்றால் நீண்ட
குன்றினுக்கு அயலே ஓடும் குளிர்ந்த பொன் முகலி
என்றான் 3.3.94

744 பொங்கிய சின வில் வேடன் சொன்னபின் போவோம்
அங்கே
இங்கிது தன்னைக் கொண்டு போதுமின் என்று தாமும்
அங்கது நோக்கிச் சென்றார் காவதம் அரையில்
கண்டார்
செங்கண் ஏறு உடையார் வைகும் திருமலைச் சாரல்
சோலை 3.3.95

745 நாணனே தோன்றும் குன்றில் நாணுவோம் என்ன
நாணன்
காண நீ போதின் நல்ல காட்சியே காணும் இந்தச்
சேணுயர் திருக் காளத்தி மலை மிசை எழுந்து
செவ்வே
கோணமில் குடுமித் தேவர் இருப்பர் கும்பிடலாம்
என்றான் 3.3.96

746 ஆவதென் இதனைக் கண்டு இங்கு அணை தொறும்
என் மேல் பாரம்
போவது ஒன்று உளது போலும் ஆசையும் பொங்கி
மேல் மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா
நிற்கும்
தேவர் அங்கு இருப்பது எங்கே போகென்றார்
திண்ணனார் தாம் 3.3.97

747 உரை செய்து விரைந்து செல்ல அவர்களும் உடனே
போந்து
கரை வளர் கழையின் முத்தும் கார் அகில் குறடும்
சந்தும்
வரை தரு மணியும் பொன்னும் வயிரமும் புளினம்
தோறும்
திரைகள் முன் திரட்டி வைத்த திரு முகலியினைச்
சார்ந்தார் 3.3.98

748 ஆங்கு அதன் கரையின் பாங்கோர் அணி நிழல் கேழல்
இட்டு
வாங்கு வில் காடன் தன்னை மரக் கடை தீக் கோல்
பண்ணி
ஈங்கு நீ நெருப்புக் காண்பாய் இம்மலை ஏறிக் கண்டு
நாங்கள் வந்து அணைவோம் என்று நாணனும்
தாமும் போந்தார் 3.3.99

749 அளி மிடை கரை சூழ் சோலை அலர்கள் கொண்டு
அணைந்த ஆற்றின்
தெளி புனல் இழிந்து சிந்தை தெளிவுறும் திண்ணனார்
தாம்
களி வரும் மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு
கொண்டு
குளிர் வரு நதி ஊடு ஏகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார் 3.3.100

750 கதிரவன் உச்சி நண்ணக் கடவுள் மால் வரையின்
உச்சி
அதிர் தரும் ஓசை ஐந்தும் ஆர் கலி முழக்கம் காட்ட
இது என் கொல் நாணா என்றார்க்கு இம் மலைப்
பெருந்தேன் சூழ்ந்து
மது மலர் ஈக்கள் மொய்த்து மருங்கு எழும் ஒலி
கொல் என்றான் 3.3.101

751 முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பம் ஆன
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம்
பொங்கி
மன் பெரும் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்கு உருகி உள்ளத்து எழு பெரு வேட்கை
யோடும் 3.3.102

752 நாணனும் அன்பும் முன்பு நளிர் வரை ஏறத் தாமும்
பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சாரா அணைபவர் போல
ஐயர்
நீணிலை மலையை ஏறி நேர் படச் செல்லும் போதில் 3.3.103

753 திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா
முன்னே
அம் கண்ணர் கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம்
எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல
நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்பு உருவம்
ஆனார் 3.3.104

754 மாகமார் திருக் காளத்தி மலை எழு கொழுந்தாய்
உள்ள
ஏக நாயகரைக் கண்டார் எழுந்த பேர் உவகை அன்பின்
வேகம் ஆனது மேல் செல்ல மிக்கது ஓர் விரைவின்
ஓடும்
மோகமாய் ஓடிச் சென்றார் தழுவினார் மோந்து
நின்றார் 3.3.105

755 நெடிது போது உயிர்த்து நின்று நிறைந்து எழு
மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க் கண்ணீர் அருவி
பாய
அடியனேற்கு இவர் தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ
என்று
படி இலாப் பரிவு தான் ஓர் படிவமாம் பரிசு தோன்ற 3.3.106

756 வெம் மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார் போல்
கைம் மலை கரடி வேங்கை அரி திரி கானம் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக்
கெட்டேன்
இம் மலைத் தனியே நீர் இங்கு இருப்பதே என்று
3.3.107

நைந்தார்

757 கைச்சிலை விழுந்தது ஓரார் காளையார் மீளா இந்தப்
பச்சிலையோடும் பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ என்றலும் மருங்கு நின்ற
அச்சிலை நாணன் தானும் நான் இது அறிந்தேன்
என்பான் 3.3.108

758 வன்றிறல் உந்தை யோடு மா வேட்டை ஆடிப் பண்டிக்
குன்று இடை வந்தோம் ஆகக் குளிர்ந்த நீர் இவரை
ஆட்டி
ஒன்றிய இலைப் பூச்சூட்டி ஊட்டி முன்பு அறைந்த
தேர் பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும் அவன் செய்தது ஆகும்
என்றான் 3.3.109

759 உண்ணிறைந்து எழுந்த தேனும் ஒழிவின்றி ஆரா
அன்பில்
திண்ணனார் திருக் காளத்தி நாயனார்க்கு இனிய
செய்கை
எண்ணிய இவைகொலாம் என்று இது கடைப்
பிடித்துக் கொண்டு அவ்
அண்ணலைப் பிரிய மாட்டா அளவில் ஆதரவு நீட 3.3.110

760 இவர் தமைக் கண்டேனுக்குத் தனியராய் இருந்தார்
என்னே
இவர் தமக்கு அமுது செய்ய இறைச்சியும் இடுவார்
இல்லை
இவர் தமைப் பிரிய ஒண்ணாது என்செய்கேன் இனி
யான் சால
இவர் தமக்கு இறைச்சி கொண்டிங்கு எய்தவும்
வேண்டும் என்று 3.3.111

761 போதுவர் மீண்டும் செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலின் நோக்கி நிற்பர் கன்று அகல் புனிற்று ஆப்
போல்வர்
நாதனே அமுது செய்ய நல்ல மெல் இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டு இங்கு வருவேன்
என்பார் 3.3.112

762 ஆர்தமராக நீர் இங்கு இருப்பது என்று அகலமாட்டேன்
நீர் பசித்து இருக்க இங்கு நிற்கவும் இல்லேன் என்று
சோர் தரு கண்ணீர் வாரப் போய் வரத் துணிந்தார் ஆகி
வார் சிலை எடுத்துக் கொண்டு மலர்க் கையால்
3.3.113

தொழுது போந்தார்

763 முன்பு நின்று அரிதில் நீங்கி மொய் வரை இழிந்து நாணன்
பின்பு வந்து அணைய முன்னைப் பிற துறை வேட்கை நீங்கி
அன்பு கொண்டு உய்ப்பச் செல்லும் அவர் திரு முகலி ஆற்றின்
பொன் புனை கரையில் ஏறிப் புது மலர்க் காவில் புக்கார் 3.3.114

764 காடனும் எதிரே சென்று தொழுது தீக் கடைந்து வைத்தேன்
கோடுடை ஏனம் உங்கள் குறிப்படி உறுப்பை எல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளும் மறித்து நாம் போகைக்கு இன்று
நீட நீர் தாழ்த்தது என்னோ என்றலும் நின்ற நாணன் 3.3.115

765 அங்கிவர் மலையில் தேவர் தம்மைக் கண்டு அணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதாவல்லுடும்பு என்ன நீங்கான்
இங்கும் அத் தேவர் தின்ன இறைச்சி கொண்டு ஏகப் போந்தான்
நம்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்கு என்றான் 3.3.116

766 என் செய்தாய் திண்ணா நீ தான் என்ன மால் கொண்டாய் எங்கள்
முன் பெரு முதலி அல்லையோ என முகத்தை நோக்கார்
வன் பெரும் பன்றி தன்னை எரியினில் வதக்கி மிக்க
இன்புறு தசைகள் வெவ்வேறு அம்பினால் ஈர்ந்து கொண்டு 3.3.117

767 கோலினில் கோத்துக் காய்ச்சி கொழும் தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமுன் காண்பான் வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவும் இனிய எல்லாம் சருகு இலை இணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட அதன் மிசை இடுவார் ஆனார் 3.3.118

768 மருங்கு நின்றவர்கள் பின்னும் மயல் மிக
முதிர்ந்தான் என்னே
அரும் பெறல் இறைச்சி காய்ச்சி அதுக்கி வேறு
உமிழா நின்றான்
பெரும் பசி உடையன் ஏனும் பேச்சிலன் எமக்கும்
பேறு
தரும் பரிசு உணரான் மற்றைத் தசை புறத்து எறியா
நின்றான் 3.3.119

769 தேவுமால் கொண்டான் இந்தத் திண்ணன் மற்று
இதனைத் தீர்க்கல்
ஆவது ஒன்று அறியோம் தேவராட்டியை நாகனோடு
மேவி நாம் கொணர்ந்து தீர்க்க வேண்டும் அவ்
வேட்டைக் கானில்
ஏவல் ஆட்களையும் கொண்டு போதும் என்று
எண்ணிப் போனார் 3.3.120

770 கானவர் போனது ஓரார் கடிதினில் கல்லையின் கண்
ஊன் அமுது அமைத்துக் கொண்டு மஞ்சனம் ஆட்ட
உன்னி
மா நதி நன்னீர் தூய வாயினில் கொண்டு கொய்த
தூ நறும் பள்ளித் தாமங் குஞ்சி மேல் துதையக்
கொண்டார் 3.3.121

771 தனு ஒரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக்
கல்லைப்
புனித மெல் இறைச்சி நல்ல போனகம் ஒரு கை ஏந்தி
இனிய எம்பிரானார் சாலப் பசிப்பர் என்று இரங்கி
ஏங்கி
நனி விரைந்து இறைவர் வெற்பை நண்ணினார்
திண்ணனார்தாம் 3.3.122

772 இளைத்தனர் நாயனார் என்று ஈண்டச் சென்று எய்தி
வெற்பின்
முளைத்து எழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக்
காலில்
வளைத்த பொற் செருப்பால் மாற்றி வாயின் மஞ்சன
நீர் தன்னை
விளைத்த அன்பு உமிழ்வார் போன்று விமலனார்
முடிமேல் விட்டார் 3.3.123

773 தலை மிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்
காளத்தி

3.3.124

மலை மிசைத் தம்பிரானார் முடி மிசை வணங்கிச்
சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார்
சேர்த்த கல்லை
இலை மிசைப் படைத்த ஊனின் திரு அமுது எதிரே
வைத்து

774 கொழுவிய தசைகள் எல்லாம் கோலினில் தெரிந்து
கோத்து அங்கு
அழலுறு பதத்தில் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி
நாவில்
பழகிய இனிமை பார்த்துப் படைத்த இவ் இறைச்சி
சால
அழகிது நாயனீரே அமுது செய்து அருளும் என்றார் 3.3.125

775 அன்ன இம் மொழிகள் சொல்லி அமுது செய்வித்த
வேடர்
மன்னனார் திருக் காளத்தி மலையினார்க்கு இனிய
நல் ஊன்
இன்னமும் வேண்டும் என்னும் எழு பெரும் காதல்
கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையில்
தாழ்ந்தான் 3.3.126

776 அவ்வழி அந்தி மாலை அணைதலும் இரவு சேரும்
வெவ்விலங்கு உள என்று அஞ்சி மெய்மையின் வேறு
கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித் திருக் கையில் சிலையும்
தாங்கி
மைவரை என்ன ஐயர் மருங்கு நின்று அகலா நின்றார் 3.3.127

777 சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர்
தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும் காணுதற்கு அரியார்
தம்மை
ஆர்வம் முன் பெருக ஆரா அன்பினில் கண்டு
கொண்டே
நேர் பெற நோக்கி நின்றார் நீள் இருள் நீங்க நின்றார் 3.3.128

778 கழை சொரி தரளக் குன்றில் கதிர் நிலவு ஒருபால்
பொங்க
முழை அரவு உமிழ்ந்த செய்ய மணி வெயில் ஒருபால்
மொய்ப்பத்

3.3.129

தழை கதிர்ப் பரிதியோடும் சந்திரன் தலை உவாவில்
குழையணி காதர் வெற்பைக் கும்பிடச் சென்றால்
ஒக்கும்

779 விரவு பன்மணிகள் கான்ற விரிகதிர்ப் படலை பொங்க
மரகதம் ஒளி கொள் நீல மணிகளும் இமைக்கும்
சோதி
பொர இரு சுடருக்கு அஞ்சிப் போயின புடைகள்
தோறும்
இரவு இருள் ஒதுங்கினாலே போன்று உளது எங்கும்
எங்கும் 3.3.130

780 செந்தழல் ஒளியில் பொங்கும் தீப மா மரங்களாலும்
மந்திகள் முழையில் வைத்த மணி விளக்கு
ஒளிகளாலும்
ஐந்தும் ஆறடக்கி உள்ளார் அரும் பெரும்
சோதியாலும்
எந்தையார் திருக்காளத்தி மலையினில் இரவு ஒன்று
இல்லை 3.3.131

781 வரும் கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
சுருங்கிட அறிந்த புள்ளின் சூழ் சிலம்பு ஓசை கேட்டுக்
கருங்கடல் என்ன நின்ற கண் துயிலாத வீரர்
அரும் பெறல் தம்பிரனார்க்கு அமுது கொண்டு
அணைய வேண்டி 3.3.132

782 ஏறுகாற்பன்றியோடும் இருங்கலை புனமான் மற்றும்
வேறு வேறு இனங்கள் வேட்டை வினைத் தொழில்
விரகினாலே
ஊறுசெய் காலம் சிந்தித்து உருமிகத் தெரியாப்
போதின்
மாறடு சிலையும் கொண்டு வள்ளலைத் தொழுது
போந்தார் 3.3.133

783 மொய் காட்டும் இருள் வாங்கி முகம் காட்டும் தேர்
இரவி
மெய் காட்டும் அன்புடைய வில்லியர் தனி வேட்டை
எய்காட்டின் மாவளைக்க இட்ட கரும் திரை எடுத்துக்
கை காட்டும் வான் போலக் கதிர் காட்டி எழும் போதில் 3.3.134

784 எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கு ஏற்பக்
கொய்த மலரும் புனலும் முதலான கொண்டு
அணைந்தார்
மை தழையும் கண்டத்து மலை மருந்தை வழி பாடு
3.3.135

செய்து வரும் தவம் உடைய முனிவர் சிவ
கோசரியார்

785 வந்து திருமலையின் கண் வானவர் நாயகர் மருங்கு
சிந்தை நியமத்தோடும் செல் கின்றார் திரு முன்பு
வெந்த இறைச்சியும் எலும்பும் கண்டு அகல மிதித்து
ஓடி
இந்த அனுசிதம் கெட்டேன் யார் செய்தார் என்று
அழிவார் 3.3.136

786 மேவநேர் வர அஞ்சா வேடுவரே இது செய்தார்
தேவ தேவ ஈசனே திருமுன்பே இது செய்து
போவதே இவ் வண்ணம் புகுத நீர் திரு உள்ளம்
ஆவதோ எனப் பதறி அழுது விழுந்து அலமந்தார் 3.3.137

787 பொருப்பில் எழுஞ் சுடர்க் கொழுந்தின் பூசனையும்
தாழ்க்க நான்
இருப்பது இனி ஏன் என்று அவ் இறைச்சி எலும்புடன்
இலையும்
செருப்பு அடியும் நாய் அடியும் திரு அலகால் மாற்றிய
பின்
விருப்பின் ஒடும் திருமுகலிப் புனல் மூழ்கி விரைந்து
அணைந்தார் 3.3.138

788 பழுது புகுந்தது அது தீரப் பவித்திரமாம் செயல் புரிந்து
தொழுது பெறுவன கொண்டு தூய பூசனை தொடங்கி
வழுவில் திரு மஞ்சனமே வரும் முதலாக வரும்
பூசை
முழுது முறைமையின் முடித்து முதல்வனார் கழல்
பணிந்தார் 3.3.139

789 பணிந்து எழுந்து தனி முதலாம் பரன் என்று பன்
முறையால்
துணிந்த மறை மொழியாலே துடி செய்து சுடர்த்
திங்கள்
அணிந்த சடை முடிக் கற்றை அங்கணரை விடை
கொண்டு
தணிந்த மனத் திருமுனிவர் தபோ வனத்திடை
சார்ந்தார் 3.3.140

790 இவ் வண்ணம் பெருமுனிவர் ஏகினார் இனி இப்பால்
மைவண்ணக் கருங் குஞ்சி வன வேடர் பெருமானார்
கைவண்ணச் சிலை வளைத்துக் கான் வேட்டை தனி
ஆடிச்
3.3.141

செய்வண்ணத் திறம் மொழிவேன் தீவினையின் திறம்
ஒழிவேன

791 திரு மலையின் புறம் போன திண்ணனார் செறி
துறுகல்
பெருமலைகள் இடைச் சரிவில் பெரும் பன்றி புனம்
மேய்ந்து
வருவனவும் துணி படுத்து மான் இனங்கள் கான்
இடை நின்று
ஒரு வழிச் சென்று ஏறு துறை ஒளி நின்று கொன்று
அருளி 3.3.142

792 பயில் விளியால் கலை அழைத்துப் பாடு பெற
ஊடுருவும்
அயில் முகவெங் கணை போக்கி அடி ஒற்றி மரை
இனங்கள்
துயில் இடையில் கிடை செய்து தொடர்ந்து
கடமைகள் எய்து
வெயில் படு வெங்கதிர் முதிரத் தனி வேட்டை வினை
முடித்தார் 3.3.143

793 பட்ட வன விலங்கு எல்லாம் படர் வனத்தில் ஒரு
சூழல்
இட்டு அருகு தீக் கடை கோல் இரும் சுரிகை தனை
உருவி
வெட்டி நறுங் கோல் தேனும் மிக முறித்துத் தேக்கு
இலையால்
வட்டமுறு பெருங் கல்லை மருங்கு புடை பட
அமைத்தார் 3.3.144

794 இந்தனத்தை முறித்து அடுக்கி எரி கடையும்
அரணியினில்
வெம் தழலைப் பிறப்பித்து மிக வளர்த்து மிருகங்கள்
கொந்தி அயில் அலகம்பால் குட்டம் இட்டுக்
கொழுப்பரிந்து
வந்தன கொண்டு எழும் தழலில் வக்குன வக்குவித்து 3.3.145

795 வாய் அம்பால் அழிப்பதுவும் வகுப்பதுவும் செய்து
அவற்றின்
ஆய உறுப்பு இறைச்சி யெலாம் அரிந்து ஒருகல்
இலையில் இட்டு
காய நெடும் கோல் கோத்துக் கனலின் கண்
உறக்காய்ச்சி

3.3.146

தூய திரு அமுது அமைக்கச் சுவை காணல் உறுகின்றார்

796 எண்ணிறைந்த கடவுளருக்கு இடும் உணவு கொண்டு ஊட்டும்
வண்ண எரி வாயின் கண் வைத்தது எனக் காளத்தி அண்ணலார்க்கு ஆம் பரிசு தாம் சோதித்து அமைப்பதற்குத்
திண்ணனார் திருவாயில் அமைத்தார் ஊன் திரு அமுது 3.3.147

797 நல்ல பதமுற வெந்து நாவின் கண் இடும் இறைச்சி கல்லையினிற் படைத்துத் தேன் பிழிந்து கலந்து கொண்டு
வல் விரைந்து திருப் பள்ளித் தாமமும் உந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினின் முன்பு போல் உடன் கொண்டு வந்து அணைந்தார் 3.3.148

798 வந்து திருக் காளத்தி மலை ஏறி வனசரர்கள் தந்தலைவனார் இமையோர் தலைவனார் தமை எய்தி
அந்தணனார் பூசையினை முன்பு போல் அகற்றிய பின்
முந்தை முறை தம்முடைய பூசனையின் செயல் முடிப்பார் 3.3.149

799 ஊனமுது கல்லை உடன் வைத்து இது முன்னையின் நன்றால்
ஏனமொடு மான் கலைகள் மரை கடமை இவையிற்றில்
ஆன உறுப்பு இறைச்சி அமுது அடியேனும் சுவை கண்டேன்
தேனும் உடன் கலந்து இதுதித்திக்கும் என மொழிந்தார் 3.3.150

800 இப் பரிசு திரு அமுது செய்வித்துத் தம்முடைய ஒப்பரிய பூசனை செய்து அந்நெறியில் ஒழுகுவார்
எப்பொழுதும் மேன்மேல்வந்து எழும் அன்பால் காளத்தி
அப்பர் எதிர் அல்லுறங்கார் பகல் வேட்டை ஆடுவார் 3.3.151

801 மாமுனிவர் நாள் தோறும் வந்து அணைந்து வன வேந்தர்

3.3.152

தாம் முயலும் பூசனைக்குச் சால மிகத் தளர்வு எய்தித்
தீமை என அது நீக்கிச் செப்பிய ஆகம விதியால்
ஆமுறையில் அர்ச்சனை செய்து அந் நெறியில்
ஒழுவாரால்

802 நாணனொடு காடனும் போய் நாகனுக்குச்
சொல்லியபின்
ஊணும் உறக்கமும் இன்றி அணங்கு
உறைவாளையும் கொண்டு
பேணு மகனார் தம் பால் வந்து எல்லாம் பேதித்துக்
காணு நெறி தங்கள் குறி வாராமல் கை விட்டார் 3.3.153

803 முன்பு திருக் காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்
இன்புறு வேதகத்து இரும்பு பொன் ஆனால் போல்
யாக்கைத்
தன் பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும்
அற
அன்பு பிழம் பாய்த் திரிவார் அவர் கருத்தின்
அளவினரோ? 3.3.154

804 அந்நிலையில் அன்பனார் அறிந்த நெறி பூசிப்ப
மன்னிய ஆகமப் படியால் மாமுனிவர் அருச்சித்து
இங்கு
என்னுடைய நாயகனே இது செய்தார் தமைக்
காணேன்
உன்னுடைய திருவருளால் ஒழித்து அருள வேண்டும்
என 3.3.155

805 அன்று இரவு கனவின் கண் அருள் முனிவர் தம்பாலே
மின் திகழும் சடை மவுலி வேதியர் தாம் எழுந்து
அருளி
வன்திறல் வேடுவன் என்று மற்று அவனை நீ
நினையேல்
நன்றவன் தன் செயல் தன்னை நாம் உரைப்பக் கேள்
என்று 3.3.156

806 அவனுடைய வடிவு எல்லாம் நம் பக்கல் அன்பு
என்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு
என்றும்
அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியவாம்
என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ என்று அருள்
3.3.157

செய்வார்

807 பொருட்பினில் வந்தவன் செய்யும் பூசனைக்கு
முன்பென்மேல்
அருப்புறுமென் மலர்முன்னை அவை நீக்கும்
ஆதரவால்
விருப்புரும் அன்பெனும் வெள்ளக்கால் பெருகிற்
றெனவீழ்ந்த
செருப்படி அவ்விளம்பருவச் சேயடியிற்
சிறப்புடைத்தால். 3.3.158

808 உருகிய அன்பொழிவின்றி நிறைந்த அவன்
உருவென்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கியினி
தொழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை
முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கவன்தன் வாயுமிழும்
புனல்புனிதம். 3.3.159

809 இம்மலைவந் தெனையடைந்த கானவன்தன்
இயல்பாலே
மெய்மலரும் அன்புமேல் விரிந்தனபோல்
விழுதலால்
செம்மலர்மேல் அயனொடுமால் முதல்தேவர்
வந்துபுனை
எம்மலரும் அவன் தலையால் இடுமலர்போல்
எனக்கொல்வா 3.3.160

810 வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ எனும்
அன்பால்
நையுமனத் தினிமையினால் நையமிக
மென்றிடலால்
செய்யுமறை வேள்வியோர் முன்புதருந்
திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவந்தான் இட்டஊன் எனக்கினிய. 3.3.161

811 மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர்
மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள்
மந்திரங்களியாவையினும்
முன்பிருந்து மற்றவன்தன்முகமலர அகநெகிழ
அன்பில்நினைந் தெனையல்லால் அறிவுறா

3.3.162

மொழிநல்ல.

812 உனக்கவன் தன் செயல் காட்ட நாளை நீ ஒளித்து
இருந்தால்
எனக்கு அவன் தன் பரிவு இருக்கும் பரிசு எல்லாம்
காண்கின்றாய்
மனக் கவலை ஒழிக என்று மறை முனிவர்க்கு அருள்
செய்து
புனல் சடிலத் திரு முடியார் எழுந்து அருளிப் போனார் 3.3.163

813 கனவு நிலை நீங்கிய பின் விழித்து உணர்ந்து கங்குல்
இடைப்
புனை தவத்து மாமுனிவர் புலர் அளவும் கண்
துயிலார்
மனம் உறும் அற்புதமாகி வரும் பயமும் உடன் ஆகித்
துனை புரவித் தனித் தேர் மேல் தோன்றுவான் கதிர்
தோன்ற 3.3.164

814 முன்னை நாள் போல் வந்து திருமுகலிப் புனல்
மூழ்கிப்
பன் முறையும் தம்பிரான் அருள் செய்த படி நினைந்து
மன்னு திருக் காளத்தி மலை ஏறி முன்பு போல்
பிஞ்ஞுகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார் 3.3.165

815 கருமுகில் என்ன நின்ற கண் படா வில்லியார் தாம்
வருமுறை ஆறாம் நாளில் வரும் இரவு ஒழிந்த
காலை
அருமறை முனிவனார் வந்தணை வதன் முன்னம்
போகித்
தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை ஆடி 3.3.166

816 மாறில் ஊன் அமுதும் நல்ல மஞ்சனப் புனலும்
சென்னி
ஏறு நாண் மலரும் வெவ்வேறு இயல்பினில்
அமைத்துக் கொண்டு
தேறுவார்க்கு அமுதம் ஆன செல்வனார்
திருக்காளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை அணுக வந்து அணையா
நின்றார் 3.3.167

817 இத்தனை பொழுது தாழ்த்தேன் என விரைந்து ஏகுவார்
முன்
மொய்த்த பல்சகுனம் எல்லாம் முறை முறை தீங்கு
செய்ய
3.3.168

இத் தகு தீய புட்கள் ஈண்ட முன் உதிரங் காட்டும்
அதனுக்கு என் கொல் கெட்டேன் அடுத்தது என்று
அணையும் போதில்

818 அண்ணலார் திருக் காளத்தி அடிகளார்
முனிவனார்க்கு
திண்ணனார் பரிவு காட்டத் திரு நயனத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய இருந்தனர் தூரத்தே அவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல் விரைந்து ஓடி
வந்தார் 3.3.169

819 வந்தவர் குருதி கண்டார் மயங்கினார் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனும் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தவர் பள்ளித் தாமம் குஞ்சி நின்று அலைந்து
சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர் நிலத்து இடைப்
பதைத்து வீழ்ந்தார் 3.3.170

820 விழுந்தவர் எழுந்து சென்று துடைத்தனர் குருதி
வீழ்வது
ஒழிந்திடக் காணார் செய்வது அறிந்திலர் உயிர்த்து
மீள
அழிந்து போய் வீழ்ந்தார் தேறி யாரிது செய்தார்
என்னா
எழுந்தனர் திசைகள் எங்கும் பார்த்தனர் எடுத்தார்
வில்லும் 3.3.171

821 வாளியுந் தெரிந்து கொண்டு இம் மலையிடை எனக்கு
மாறா
மீளி வெம் மறவர் செய்தார் உளர் கொலோ?
விலங்கின் சாதி
ஆளி முன்னாகி யுள்ள விளைத்தவோ? அறியேன்
என்று
நீளிருங் குன்றைச் சாரல் நெடிதிடை நேடிச் சென்றார் 3.3.172

822 வேடரைக் காணார் தீய விலங்குகள் மருங்கு எங்கும்
நாடியுங் காணார் மீண்டும் நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத்தோடு நிறை மலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினார் கண்ணீர் வார 3.3.173

823 பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க்கு அடுத்தது
என்னோ?
ஆவியின் இனிய எங்கள் அத்தனார்க்கு அடுத்தது
என்னோ ?
3.3.174

மேவினார் பிரிய மாட்டா விமலனார்க்கு அடுத்தது
என்னோ?
ஆவது ஒன்று அறிகிலேன் யான் என் செய்கேன் என்று
பின்னும்

824 என் செய்தால் தீருமோதான்? எம்பிரான் திறத்துத்
தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் மொய் கழல் வேடர்
என்றும்
மின்செய்வார் பகழிப் புண்கள் தீர்க்கும் மெய் மருந்து
தேடிப்
பொன்செய் தாழ் வரையிற் கொண்டு வருவன் நான்
என்று போனார் 3.3.175

825 நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்கள்
எங்கும்
இனத்திடை பிரிந்த செங்கணேறு என வெருக்
கொண்டு எய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூத நாயகன்பால்
வைத்த
மனத்தினும் கடிது வந்து தம் மருந்துகள் பிழிந்து
வார்த்தார் 3.3.176

826 மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக்
காளத்திக்
கொற்றவர் கண்ணில் புண்ணீர் குறை படாது இழியக்
கண்டும்
இற்றையின் நிலைமைக்கு என்னோ இனிச் செயல்
என்று பார்ப்பார்
உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன் எனும் உரைமுன்
கண்டார் 3.3.177

827 இதற்கினி என்கண் அம்பால் இடந்து அப்பின்
எந்தையார் கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும்
என்று
மதர்த்து எழும் உள்ளத்தோடு மகிழ்ந்து முன் இருந்து
தங்கண்
முதற்சரம் அடுத்து வாங்கி முதல்வர் தம் கண்ணில்
அப்ப 3.3.178

828 நின்ற செங்குருதி கண்டார் நிலத்தின் நின்றேப்
பாய்ந்தார்

3.3.179

குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்தும்
ஆடி
நன்று நான் செய்த இந்த மதி என நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பினாலே உன் மத்தர் போல மிக்கார்

829 வலத்திரு கண்ணில் தம் கண் அப்பிய வள்ளலார் தம்
நலத்தினைப் பின்னும் காட்ட நாயனார் மற்றைக்
கண்ணில்
உலப்பில் செம் குருதி பாயக் கண்டனர் உலகில்
வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கையின் உம்பர்
மேலார் 3.3.180

830 கண்டபின் கெட்டேன் எங்கள் காளத்தியார் கண் ஒன்று
புண்டரு குருதி நிற்க மற்றைக் கண் குருதி பொங்கி
மண்டுமற்று இதனுக்கு அஞ்சேன் மருந்து கை
கண்டேன் இன்னும்
உண்டொரு கண் அக்கண்ணை இடந்து அப்பி
ஒழிப்பேன் என்று 3.3.181

831 கண்ணுதல் கண்ணில் தம் கண் இடந்து அப்பிற்
காணும் நேர்பாடு
எண்ணுவர் தம்பிரான் தன் திருக் கண்ணில் இடக்கால்
ஊன்றி
உண்ணிறை விருப்பினோடும் ஒரு தனிப் பகழி
கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ
தேவர் 3.3.182

832 செங்கண் வெள்விடையின் பாகர் திண்ணனார்
தம்மை ஆண்ட
அங்கணர் திருக் காளத்தி அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண் முன் இடக்குங் கையைத் தடுக்க மூன்று
அடுக்கு நாக
கங்கணர் அமுதவாக்குக் கண்ணப்ப நிற்க என்ற 3.3.183

833 கானவர் பெருமானார் தங்கண் இடந்து அப்பும் போதும்
ஊனமும் உகந்த ஐயர் உற்று முன் பிடிக்கும் போதும்
ஞான மாமுனிவர் கண்டார் நான்முகன் முதலாய்
உள்ள
வானவர் வளர் பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப 3.3.184

834 பேறினி இதன் மேல் உண்டோ ? பிரான் திருக்
கண்ணில் வந்த
3.3.185

ஊறு கண்டு அஞ்சித் தம் கண் இடந்தப்ப உதவும்
கையை
ஏறுயர்த்தவர் தம் கையால் பிடித்துக் கொண்டு என்
வலத்தில்
மாறிலாய் நிற்க என்று மன்னு பேர் அருள் புரிந்தார்
835 மங்குல் வாழ் திருக் காளத்தி மன்னனார் கண்ணில்
புண்ணீர்
தங்கணால் மாற்றப் பெற்ற தலைவர் தாள் தலைமேற்
கொண்டே
கங்கை வாழ் சடையார் வாழும் கடவூரில்
கலயனாராம்
பொங்கிய புகழின் மிக்கார் திருத் தொண்டு புகலல்
உற்றேன் 3.3.186

திருச்சிற்றம்பலம்

3.4. குங்குலியக் கலய நாயனார் புராணம் (836 - 870)

திருச்சிற்றம்பலம்

836 வாய்ந்த நீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி
நாட்டின்
ஏய்ந்த சீர் மறையோர் வாழும் எயிற் பதி எறி நீர்க்
கங்கை
தோய்ந்த நீள் சடையார் பண்டு தொண்டர் மேல் வந்த
கூற்றைக்
காய்ந்த சேவடியார் நீடி இருப்பது கடவூர் ஆகும் 3.4.1

837 வயல் எலாம் விளை செஞ் சாலி வரம்பு எலாம்
வளையின் முத்தம்
அயல் எலாம் வேள்விச் சாலை அணை எலாம்
கழுநீர்க் கற்றை
புயல் எலாம் கமுகின் காடு அப்புறமெலாம் அதன் சீர்
போற்றல்
செயல் எலாம் தொழில்கள் ஆறே செழுந் திருக்
கடவூர் என்றும் 3.4.2

838 குடங் கையின் அகன்ற உண் கண் கடைசியர் குழுமி
ஆடும்
இடம் படு பண்ணை தோறும் எழுவன மருதம் பாடல்
வடம் புரி முந்நூல் மார்பின் வைதிக மறையோர்
3.4.3

செய்கைச்
சடங்குடை இடங்கள் தோறும் எழுவன சாமம் பாடல்

839 துங்க நீள் மருப்பின் மேதி படிந்து பால் சொரிந்த வாவி
செங்கயல் பாய்ந்து வாசக் கமலமும் தீம் பால் நாறும்
மங்குல் தோய் மாடச் சாலை மருங்கு இறை
ஒதுங்கும் மஞ்சும்
அங்கவை பொழிந்த நீரும் ஆகுதி புகைப்பால் நாறும் 3.4.4

840 மருவிய திருவின் மிக்க வளம்பதி அதனில் வாழ்வார்
அருமறை முந்நூல் மார்பின் அந்தணர் கலயர் என்பார்
பெருநதி அணியும் வேணிப் பிரான் கழல் பேணி
நாளும்
உருகிய அன்பு கூர்ந்த சிந்தையார் ஒழுக்கம் மிக்கார் 3.4.5

841 பாலனாம் மறையோன் பற்றப் பயங்கொடுத்து
அருளும் ஆற்றால்
மாலும் நான் முகனும் காணா வடிவு கொண்டு எதிரே
வந்து
காலனார் உயிர் செற்றார்க்குக் கமழ்ந்த குங்குலியத்
தூபம்
சாலவே நிறைந்து விம்ம இடும் பணி தலை
நின்றுள்ளார் 3.4.6

842 கங்கை நீர் கலிக்கும் சென்னிக் கண்ணுதல்
எம்பிரார்க்கு
பொங்கு குங்குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச்
செல்ல
அங்கவர் அருளினாலே வறுமை வந்து அடைந்த
பின்னும்
தங்கள் நாயகர்க்குத் தாம் முன்செய் பணி தவாமை
உய்த்தார் 3.4.7

843 இந்நெறி ஒழுகு நாளில் இலம்பாடு நீடு செல்ல
நன்னிலம் முற்றும் விற்றும் நாடிய அடிமை விற்றும்
பன்னெடுந் தனங்கள் மாளப் பயில் மனை வாழ்க்கை
தன்னில்
மன்னிய சுற்றத்தோடு மக்களும் வருந்தினார்கள் 3.4.8

844 யாதொன்றும் இல்லையாகி இரு பகல் உணவு மாறிப்
பேதுறு மைந்தரோடும் பெருகு சுற்றத்தை நோக்கி
காதல்செய் மனைவியார் தம் கணவனார் கலயனார்
கைக்
கோதில் மங்கல நூல் தாலி கொடுத்து நெல்
3.4.9

கொள்ளும் என்றார்

845 அப்பொழுது அதனைக் கொண்டு நெல் கொள்வான்
அவரும் போக
ஒப்பில் குங்குலியம் கொண்டு ஓர் வணிகனும் எதிர்
வந்து உற்றான்
இப்பொதி என் கொல்? என்றார்க்கு உள்ளவாறு
இயம்பக் கேட்டு
முப்புரி வெண்நூல் மார்பர் முகம் மலர்ந்து இதனைச்
சொன்னார் 3.4.10

846 ஆறு செஞ் சடைமேல் வைத்த அங்கணர் பூசைக்கான
நாறுகுங்குலியம் ஈதேல் நன்று இன்று பெற்றேன்
நல்ல
பேறு மற்றிதன் மேல் உண்டோ பெறாப்பேறு பெற்று
வைத்து
வேறினிக் கொள்வது என் என்று உரைத்தெழும்
விருப்பின் மிக்கார் 3.4.11

847 பொன் தரத் தாரும் என்று புகன்றிட வணிகன் தானும்
என் தர இசைந்தது என்னத் தாலியைக் கலயர் ஈந்தார்
அன்றவன் அதனை வாங்கி அப்பொதி கொடுப்பக்
கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றார் நிறைந்து
எழுகளிப்பினோடும் 3.4.12

848 விடையவர் வீரட் டானம் விரைந்து சென்று எய்தி
என்னை
உடையவர் எம்மை ஆளும் ஒருவர் தம்
பண்டாரத்தில்
அடைவுற ஒடுக்கி எல்லாம் அயர்த்து எழும் அன்பு
பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி இருந்தனர் தமக்கு
ஒப்பு இல்லார் 3.4.13

849 அன்பர் அங்கு இருப்ப நம்பர் அருளினால் அளகை
வேந்தன்
தன் பெரு நிதியந் தூர்த்துத் தரணி மேல் நெருங்க
எங்கும்
பொன்பயில் குவையும் நெல்லும் பொருவில் பல்
வளனும் பொங்க
மல்பெருஞ் செல்வம் ஆக்கி வைத்தனன் மனையில்
நீட 3.4.14

850 மற்றவர் மனைவியாரும் மக்களும் பசியால் வாடி
அற்றை நாள் இரவு தன்னில் அயர்வுறத் துயிலும்
போதில்
நல்தவக் கொடியனார்க்கு கனவிடை நாதன் நல்கத்
தெற்றென உணர்ந்து செல்வம் கண்ட பின் சிந்தை
செய்வார் 3.4.15

851 கொம்பனார் இல்லம் எங்கும் குறைவு இலா
நிறைவில் காணும்
அம் பொனின் குவையும் நெல்லும் அரிசியும்
முதலாய் உள்ள
எம்பிரான் அருளாம் என்றே இருகரங் குவித்துப்
போற்றித்
தம் பெரும் கணவனார்க்குத் திரு அமுது அமைக்கச்
சார்ந்தார் 3.4.16

852 காலனைக் காய்ந்த செய்ய காலனார் கலயனாராம்
ஆலும் அன்புடைய சிந்தை அடியவர் அறியும்
ஆற்றால்
சாலநீ பசித்தாய் உன் தன் தட நெடு மனையில்
நண்ணிப்
பாலின் அடிசில் உண்டு பருவரல் ஒழிக என்றார் 3.4.17

853 கலையனார் அதனைக் கேளாக் கை தொழுது
இறைஞ்சிக் கங்கை
அலைபுனல் சென்னியார் தம் அருள் மறுத்து இருக்க
அஞ்சித்
தலை மிசைப் பணிமேற் கொண்டு சங்கரன் கோயில்
நின்று
மலை நிகர் மாட வீதி மருங்கு தம் மனையைச்
சார்ந்தார் 3.4.18

854 இல்லத்தில் சென்று புக்கார் இருநிதிக் குவைகள்
ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று திரு மனையாரை
நோக்கி
வில்லொத்த நுதலாய் இந்த விளைவு எல்லாம்
என்கொல் என்ன
அல்லொத்த கண்டன் எம்மான் அருள் தர வந்தது
என்றார் 3.4.19

855 மின்னிடை மடவார் கூற மிக்க சீர் கலயனார் தாம்
மன்னிய பெரும் செல்வத்து வளமலி சிறப்பை
3.4.20

நோக்கி
என்னையும் ஆளும் தன்மைத்து எந்தை எம்பெருமான்
ஈசன்
தன்னருள் இருந்த வண்ணம் என்று கைதலைமேல்
கொண்டார்

856 பதும நற்திருவின் மிக்கார் பரிகலந் திருத்திக்
கொண்டு
கது மெனக் கணவனாரைக் கண்ணுதற்கு
அன்பரோடும்
விதிமுறை தீபம் ஏந்தி மேவும் இன் அடிசில் ஊட்ட
அது நுகர்ந்து இன்பம் ஆர்ந்தார் அருமறைக் கலயனார்
தாம் 3.4.21

857 ஊர் தொறும் பலி கொண்டு உய்க்கும் ஒருவனது
அருளினாலே
பாரினில் ஆர்ந்த செல்வம் உடையராம் பண்பில் நீடிச்
சீருடை அடிசில் நல்ல செழுங்கறி தயிர் நெய் பாலால்
ஆர்தரு காதல் கூர அடியவர்க்கு உதவும் நாளில் 3.4.22

858 செங்கண் வெள் ஏற்றின் பாகன் திருப் பனந் தாளில்
மேவும்
அங்கணன் செம்மை கண்டு கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித் தன் வேழம் எல்லாம் பூட்டவும் நேர்
நில்லாமைக்
கங்குலும் பகலும் தீராக் கவலை உற்று அழுங்கிச்
செல்ல 3.4.23

859 மன்னவன் வருத்தங் கேட்டு மாசறு புகழின் மிக்க
நன்னேறி கலயனார் தாம் நாதனை நேரே காணும்
அந்நெறி தலை நின்றான் என்று அரசனை விரும்பித்
தாமும்
மின்னெறித்து அனைய வேணி விகிர்தனை வணங்க
வந்தார் 3.4.24

860 மழுவுடைச் செய்ய கையர் கோயில்கள் மருங்கு
சென்று
தொழுது போந்து அன்பினோடும் தொன்மறை நெறி
வழாமை
முழுதுலகினையும் போற்ற மூன்று எரிபுரப் போர்
வாழும்
செழு மலர்ச் சோலை வேலித் திருப் பனந் தாளில்
சேர்ந்தார் 3.4.25

861 காதலால் அரசன் உற்ற வருத்தமும் களிற்றினோடும்
தீதிலாச் சேனை செய்யும் திருப்பணி நேர் படாமை
மேதினி மிசையே எய்த்து வீழ்ந்து இளைப்பதுவும்
நோக்கி
மாதவக் கலயர் தாமும் மனத்தினில் வருத்தம் எய்தி 3.4.26

862 சேனையும் ஆனை பூண்ட திரளும் எய்த்து எழாமை
நோக்கி
யானும் இவ் இளைப் புற்று எய்க்கும் இது பெற
வேண்டும் என்று
தேனலர் கொன்றையார் தம் திருமேனிப் பூங்கச்
சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்தல்
உற்றார் 3.4.27

863 நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்த பின் திறம்பி
நிற்க
ஒண்ணுமோ? கலயனார் தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில்
ஆர்த்தார் 3.4.28

864 பார்மிசை நெருங்க எங்கும் பரப்பினர் பயில் பூ மாரி
தேர்மலி தானை மன்னன் சேனையும் களிறும்
எல்லாம்
கார்பெறு கானம் போலக் களித்தன கைகள் கூப்பி
வார்கழல் வேந்தன் தொண்டர் மலர் அடி தலைமேல்
வைத்து 3.4.29

865 விண் பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரில் மேருத்
திண்சிலை குனிய நின்றார் செந்நிலைக் காணச்
செய்தீர்
மண்பகிர்ந்தவனும் காணா மலரடி இரண்டும் யாரே
பண்புடை அடியார் அல்லால் பரிந்து நேர் காண
வல்லார் 3.4.30

866 என்றுமெய்த் தொண்டர் தம்மை ஏத்தி அங்கு
எம்பிரானுக்கு
ஒன்றிய பணிகள் மற்றும் உள்ளன பலவும் செய்து
நின்ற வெண் கவிகை மன்னன் நீங்கவும் நிகரில்
அன்பர்
மன்றிடை ஆடல் செய்யும் மலர்க் கழல் வாழ்த்தி
வைகி 3.4.31

867 சிலபகல் கழிந்த பின்பு திருக்கடவூரில் நண்ணி
நிலவுதம் பணியில் தங்கி நிகழும் நாள் நிகரில் காழித்
தலைவராம் பிள்ளையாரும் தாண்டகச் சதுரராகும்
அலர்புகழ் அரசுங்கூட அங்கு எழுந்து அருளக் கண்டு 3.4.32

868 மாறிலா மகிழ்ச்சி பொங்க எதிர் கொண்டு மனையில் எய்தி
ஈறிலா அன்பின் மிக்கார்க்கு இன் அமுது ஏற்கும் ஆற்றால்
ஆறு நற்சுவைகள் ஓங்க அமைத்து அவர் அருளே அன்றி
நாறு பூங்கொன்றை வேணி நம்பர் தம் அருளும் பெற்றார் 3.4.33

869 கருப்பு வில்லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேல் மிக்கு எழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த
திருப்பணி பலவுஞ் செய்து சிவ பத நிழலில் சேர்ந்தார் 3.4.34

870 தேனக்க கோதை மாதர் திருநெடுந் தாலி மாறிக்
கூனல்தண் பிறையினார்க்கு குங்குலியம் கொண்டு உய்த்த
பான்மைத்திண் கலயனாரைப் பணிந்து அவர் அருளினாலே
மானக்கஞ் சாறர் மிக்க வண்புகழ் வழுத்தல் உற்றேன் 3.4.35

திருச்சிற்றம்பலம்

3.5. மானக்கஞ்சாற நாயனார் புராணம் (871-902)

திருச்சிற்றம்பலம்

871 மேலாறு செஞ்சடை மேல் வைத்தவர் தாம் விரும்பியது
நூலாறு நன்கு உணர்வார் தாம் பாடும் நோன்மையது
கோலாறு தேன் பொழியக் கொழுங் கனியின் சாறு ஒழுகும்
காலாறு வயல் கரும்பின் கழஞ் சாறூர் கஞ்சாறூர் 3.5.1

872 கண்ணீலக் கடைசியர்கள் கடுங்களையிற் பிழைத்து ஒதுங்கி
உண்ணீர்மைப் புணர்ச்சிக் கண் உறைத்து மலர்க்கண் சிவக்கும்
தண்ணீர் மென் கழுநீர்க்குத் தடஞ்சாலி தலை வணங்கும்
மண்ணீர்மை நலஞ்சிறந்த வள வயல்கள் உள அயல்கள் 3.5.2

873 புயல் காட்டுங் கூந்தல் சிறு புறங்காட்டப் புன மயிலின்
இயல் காட்டி இடை ஒதுங்க இனங்காட்டும் உழத்தியர்கண்
முயல் காட்டும் மதி தோற்கும் முகம் காட்டக் கண் மூரிக்
கல் காட்டுந் தடங்கள் பல கதிர்காட்டுந் தடம் பணைகள் 3.5.3

874 சேர் அணி தண் பழன வயல் செழுநெல்லின் கொழுங் கதிர் போய்
வேறருகு மிடை வேலிப் பைங்கமுகின் மிடறுரிஞ்சி மாறெழுதிண் குலை வளைப்ப வண்டலை தண்டலை உழவர்
தாறிரியும் நெடுங்கொடுவாள் அனையயுள தனி இடங்கள் 3.5.4

875 பாங்கு மணிப்பல வெயிலும் சுலவெயிலும் உள மாடம்
ஞாங்கரணி துகிற் கொடியும் நகிற் கொடியும் உள அரங்கம்
ஓங்கு நிலைத் தோரணமும் பூரண கும்பமும் உளவால்
பூம் கணை வீதியில் அணைவோர் புலமறுகுஞ் சிலமறுகு 3.5.5

876 மனை சாலும் நிலை அறத்தின் வழிவந்த வளம் பெருகும்
வினை சாலும் உழவு தொழில் மிக்க பெரும் குடி துவன்றிப்
புனை சாயல் மயில் அனையார் நடம் புரியப் புகல் முழவம்
கனை சாறு மிடை வீதிக் கஞ்சாறு விளங்கியதால் 3.5.6

877 அப் பதியில் குலப் பதியாய் அரசர் சேனா பதியாம்
செப்பவருங் குடி விளங்க திரு அவதாரம் செய்தார்
மெய்ப் பொருளை அறிந்து உணர்ந்தார் விழுமிய
வேளாண் குடிமை
வைப்பனைய மேன்மையினார் மானக்கஞ் சாறனார் 3.5.7

878 பணிவுடைய வடிவுடையார் பணியினொடும் பனி
மதியின்
அணிவுடைய சடை முடியார்க்கு ஆளாகும் பதம்
பெற்ற
தணிவில் பெரும் பேறுடையார் தம் பெருமான் கழல்
சார்ந்த
துணிவுடைய தொண்டர்க்கே ஏவல் செயும் தொழில்
பூண்டார் 3.5.8

879 மாறில் பெருஞ்செல்வத்தின் வளம் பெருக
மற்றதெலாம்
ஆறுலவுஞ் சடைக் கற்றை அந்தணர் தம் அடியாராம்
ஈறில் பெருந் திருவுடையார் உடையார்
என்றியாவையுநேர்
கூறுவதன்முன் அவர் தங்குறிப்பு அறிந்து
கொடுத்துள்ளார் 3.5.9

880 விரிகடல் சூழ் மண்ணுலகை விளக்கிய இத்
தன்மையராம்
பெரியவர்க்கு முன் சில நாள் பிள்ளைப் பேறு
இன்மையினால்
அரியறியா மலர்க் கழல்கள் அறியாமை அரியாதார்
வரு மகவு பெறல் பொருட்டு மனத்தருளால்
வழுத்தினார் 3.5.10

881 குழைக் கலையும் வடி காதில் கூத்தனார் அருளாலே
மழைக்கு உதவும் பெருங்கற்பின் மனைக் கிழத்தியார்
தம்பால்
இழைக்கும் வினைப் பயன் சூழ்ந்த இப் பிறவிக்கு
கொடுஞ்சூழல்
பிழைக்கும் நெறி தமக்கு உதவப் பெண் கொடியைப்
பெற்று எடுத்தார் 3.5.11

882 பிறந்த பெரு மகிழ்ச்சியினால் பெரு மூதூர் களி
சிறப்பச்
சிறந்த நிறை மங்கல தூரியம் முழங்கத் தேவர் பிரான்
அறந்தலை நின்று அவர்க்கெல்லாம் அளவில் வளத்து
3.5.12

அருள் பெருக்கிப்
புறந்தருவார் போற்றி இசைப்ப பொன் கொடியை
வளர்க்கின்றார்

883 காப்பணியும் இளங்குழவிப் பதநீக்கிக் கமழ் சுரும்பின்
பூப்பயிலுஞ் சுருள் குழலும் பொலங்குழையும் உடன்
தாழ
யாப்புறு மென் சிறுமணிமேகலை அணி
சிற்றாடையுடன்
கோப்புமை கிண்கிணி அசையக் குறுந்தளிர் மெல்லடி
ஒதுங்கி 3.5.13

884 புனை மலர்மென் கரங்களினால் போற்றிய தாதியர்
நடுவண்
மனையகத்து மணிமூன்றில் மணல் சிற்றில்
இழைத்து மணிக்
கனை குரல் நூபுரம் அலையக் கழன்முதலாய்
பயின்று முலை
நனை முகஞ்செய் முதல் பருவம் நண்ணினள்
அப்பெண் அமுதம் 3.5.14

885 உறுகவின் மெய்ப் புறம் பொலிய ஒளி நுசுப்பை
முலை வருத்த
முறுவல் புற மலராத முகிண்முத்த நகை என்னும்
நறுமுகை மென் கொடி மருங்குல் நளிர்ச் சுருள்
அந்தளிர் செங்கை
மறுவில் கொழுந்தினுக்கு மணப் பருவம் வந்தணைய 3.5.15

886 திருமகட்கு மேல் விளங்கும் செம்மணியின் தீபம்
எனும்
ஒரு மகளை மண் உலகில் ஓங்கு குல மரபினராய்க்
கரு மிடற்று மறையவனார் தமர் ஆய கழல் ஏயர்
பெரு மகற்கு மகள் பேச வந்து அணைந்தார் பெரு
முதியோர் 3.5.16

887 வந்த மூது அறிவோரை மானக்கஞ் சாறனார்
முந்தை முறைமையின் விரும்பி மொழிந்த மணத்
திறம் கேட்டே
எந்தமது மரபினுக்குத் தரும் பரிசால் ஏயும் எனச்
சிந்தை மகிழ்வுற உரைத்து மணநேர்ந்து செலவிட்டார் 3.5.17

888 சென்றவரும் கஞ்சாறர் மணம் இசைந்தபடி செப்பக்
குன்றனைய புயத்தேயர் கோனாரும் மிக விரும்பி
நின்ற நிலைமையின் இரண்டு திறத்தார்க்கும்
3.5.18

நேர்வாய
மன்றல் வினை மங்கல நாள் மதிநூல் வல்லவர்
வகுத்தார்

889 மங்கலமாஞ் செயல் விரும்பி மகள் பயந்த வள்ளலார்
தங்குல நீள் சுற்றம் எலாம் தயங்கு பெருங்களி
சிறப்பப்
பொங்கிய வெண் முளைப் பெய்து பொலங்
கலங்களிடை நெருங்கக்
கொங்கலர் தண் பொழில் மூதூர் வதுவை முகங்
கோடித்தார் 3.5.19

890 கஞ்சாறர் மகள் கொடுப்பக் கைப் பிடிக்க வருகின்ற
எஞ்சாத புகழ்ப் பெருமை ஏயர் குலப் பெருமானும்
தஞ்சால்பு நிறை சுற்றம் தலை நிறைய முரசு இயம்ப
மஞ்சாலும் மலர்ச் சோலைக் கஞ்சாற்றின்
மருங்கணைய 3.5.20

891 வள்ளலார் மணம் அவ்வூர் மருங்கு அணையா முன்
மலர்க்கண்
ஒள்ளிழையைப் பயந்தார் தந் திருமனையில் ஒரு
வழியே
தெள்ளுதிரை நீர் உலகம் உய்வதற்கு மற்றவர்தம்
உள்ள நிலைப் பொருளாய உம்பர் பிரான் தாம்
அணைவார் 3.5.21

892 முண்டநிறை நெற்றியின் மேல் முண்டித்த
திருமுடியில்
கொண்டசிகை முச்சியின் கண் கோத்தணிந்த எற்பு
மணி
பண்டொருவன் உடல் அங்கம் பரித்த நாள் அது
கடைந்த
வெண்டரளம் எனக் காதின் மிசை அசையும்
குண்டலமும் 3.5.22

893 அவ்வென்பின் ஒளிமணி கோத்து அணிந்த திருத்
தாழ்வடமும்
பைவன்பேர் அரவு ஒழியத் தோளில் இடும்
பட்டிகையும்
மைவந்த நிறக் கேச வடப் பூண் நூலும் மனச்
செவ்வன்பர் பவமாற்றுந் திரு நீற்றுப் பொக்கணமும் 3.5.23

894 ஒரு முன் கைத்தனி மணிகோத்து அணிந்த ஒளிர்
சூத்திரமும்
3.5.24

அருமறை நூல் கோவணத்தின் மிசை அசையும்
திருவுடையும்
இரு நிலத்தின் மிசை தோய்ந்த எழுதரிய திருவடியும்
திருவடியில் திருப் பஞ்ச முத்திரையும் திகழ்ந்து
இலங்க

895 பொடி மூடு தழல் என்னத் திரு மேனி தனிற்பொலிந்த
படி நீடு திருநீற்றின் பரப்பணிந்த பான்மையராய்க்
கொடு நீடு மறுகு அணைந்து தம்முடைய குளிர்
கமலத்து
அடி நீடும் மனத்து அன்பர் தம் மனையின் அகம்
புகுந்தார் 3.5.25

896 வந்து அணைந்த மா விரத முனிவரைக் கண்டு எதிர்
எழுந்து
சிந்தை களி கூர்ந்து மகிழ் சிறந்த பெருந் தொண்டனார்
எந்தை பிரான் புரி தவத்தோர் இவ் இடத்தே எழுந்து
அருள
உய்ந்து ஒழிந்தேன் அடியேன் என்று உருகிய
அன்பொடு பணிந்தார் 3.5.26

897 நற்றவராம் பெருமானார் நலமிகும் அன்பரை நோக்கி
உற்ற செயல் மங்கலம் இங்கு ஒழுகுவது என் என
அடியேன்
பெற்றது ஒரு பெண்கொடி தன் வதுவை எனப்
பெருந்தவம்
மற்று உமக்குச் சோபனம் ஆகுவது என்று வாய்
மொழிந்தார் 3.5.27

898 ஞானம் செய்தவர் அடி மேல் பணிந்து மனை அகம்
நண்ணி
மானக்கம் சாறனார் மணக் கோலம் புனைந்து இருந்த
தேனக்க மலர்க் கூந்தல் திரு மகளைக் கொண்டு
அணைந்து
பானற்கந் தர மறைத்து வரும் அவரைப் பணிவித்தார் 3.5.28

899 தம் சரணத்து இடைப் பணிந்து தாழ்ந்து எழுந்த மடக்
கொடி தன்
மஞ்சு தழைத்து என வளர்ந்த மலர்க் கூந்தல் புறம்
நோக்கி
அஞ்சலி மெய்த் தொண்டரைப் பார்த்து அணங்கு
இவள் தன் மயிர் நமக்குப்
பஞ்ச வடிக்காம் என்றார் பரவ அடித் தலங்கொடுப்பார் 3.5.29

900 அருள் செய்த மொழி கேளா அடல் சுரிகைதனை
உருவிப்
பொருள் செய்தாம் எனப் பெற்றேன் எனக் கொண்டு
பூங்கொடி தன்
இருள் செய்த கருங்கூந்தல் அடியில் அரிந்து எதிர்
நின்ற
மருள் செய்த பிறப்பு அறுப்பார் மலர்க் கரத்தினிடை
நீட்ட 3.5.30

901 வாங்குவார் போல் நின்ற மறைப் பொருளாம் அவர்
மறைந்து
பாங்கின் மலை வல்லியுடன் பழைய மழவிடை யேறி
ஓங்கிய விண் மிசை வந்தார் ஒளி விசும்பின் நிலன்
நெருங்கத்
தூங்கிய பொன்மலர் மாரி தொழும்பர் தொழுது எதிர்
விழுந்தார் 3.5.310

902 விழுந்து எழுந்து மெய்ம் மறந்த மெய் அன்பர் தமக்கு
மதிக்
கொழுந்து அலைய விழுங் கங்கை குதித்த சடைக்
கூத்தனார்
எழும் பரிவு நம் பக்கல் உனக்கு இருந்த பரிசிந்தச்
செழும் புவனங்களில் ஏறச் செய்தோம் என்று அருள்
செய்தார் 3.5.32

903 மருங்கு பெருங்கண நாதர் போற்றிசைப்ப
வானவர்கள்
நெருங்க விடை மேல் கொண்டு நின்றவர் முன்
நின்றவர்தாம்
ஒருங்கிய நெஞ்சொடு கரங்கள் உச்சியின் மேல்
குவித்தையர்
பெருங் கருணைத் திறம் போற்றும் பெரும் பேறு நேர்
பெற்றார் 3.5.33

904 தொண்டனார் தமக்கு அருளிச் சூழ்ந்து இமையோர்
துதி செய்ய
இண்டை வார் சடை முடியார் எழுந்து அருளிப்
போயினார்
வண்டுவார் குழற் கொடியைக் கைப் பிடிக்க மணக்
கோலம்
கண்டவர்கள் கண் களிப்பக் கலிக் காமனார் புகுந்தார் 3.5.34

905 வந்தணைந்த ஏயர் குல மன்னவனார் மற்றந்தச்
சிந்தை நினைவு அரிய செயல் செறிந்தவர் பால்
கேட்டருளிப்
புந்தியினில் மிக உவந்து புனிதனார் அருள் போற்றிச்
சிந்தை தளர்ந்து அருள் செய்த திருவாக்கின் திறம்
கேட்டு 3.5.35

906 மனந்தளரும் இடர் நீங்கி வானவர் நாயகர் அருளால்
புனைந்த மலர்க் குழல் பெற்ற பூங்கொடியை மணம்
புரிந்து
தனம் பொழிந்து பெருவதுவை உலகெலாம் தலை
சிறப்ப
இனம்பெருகத் தம்முடைய எயின் மூதூர்
சென்றணைந்தார் 3.5.36

907 ஒரு மகள் கூந்தல் தன்னை வதுவை நாள் ஒருவர்க்கு
ஈந்த
பெருமையார் தன்மை போற்றும் பெருமை என்
அளவிற்றாமே
மருவிய கமரிற் புக்க மா வடு விடேல் என் ஓசை
உரிமையால் கேட்க வல்லார் திறம் இனி உரைக்கல்
உற்றேன் 3.5.37

திருச்சிற்றம்பலம்

3.6. அரிவாட்டாய நாயனார் புராணம் (908-930)

திருச்சிற்றம்பலம்

908 வரும் புனற்பொன்னி நாட்டு ஒரு வாழ்பதி
கரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென்கண் உடையவாய் விட்டு நீள்
கரும்பு தேன் பொழியும் கணமங்கலம் 3.6.1

909 செந்நெல்லார் வயல் காட்ட செந்தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தம் சொரிந்திடத்
துன்னு மள்ளர் கைம் மேற் கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுள்ளார் 3.6.2

910 வளத்தில் நீடும் பதியதன் கண்வரி
உளர்த்தும் ஐம்பால் உடையோர் முகத்தினும்
களத்தின் மீதும் கயல்பாய் வயல் அயல் 3.6.3

குளத்தும் நீளும் குழையுடை நீலங்கள்

911 அக்குல பதி தன்னில் அறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்
தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய
மிக்க செல்வத்து வேளாண் தலைமையார் 3.6.4

912 தாயனார் எனும் நாமம் தரித்துள்ளார்
சேய காலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாயனார் மண் கிளைத்து அறியாத அத்
தூய நாண் மலர்ப் பாதம் தொடர்ந்துளார் 3.6.5

913 மின்னும் செஞ்சடை வேதியர்க்காம் என்று
செந் நெல் இன்னமுதோடு செங்கீரையும்
மன்னு பைந்துணர் மாவடுவும் கொணர்ந்து
அன்ன என்றும் அமுது செய்விப்பாரால் 3.6.6

914 இந்த நன்னிலை இன்னல் வந்து எய்தினும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வர் அவர் வழி
வந்த செல்வம் அறியாமை மாற்றினார் 3.6.7

915 மேவு செல்வம் களிறு உண் விளங்கனி
ஆவதாகி அழியவும் அன்பினால்
பாவை பங்கர்க்கு முன்பு பயின்ற அத்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனார் 3.6.8

916 அல்லல் நல்குரவு ஆயிடக் கூலிக்கு
நெல் அறுத்து மெய்ந் நீடிய அன்பினால்
நல்ல செந்நெலிற் பெற்றன நாயனார்க்கு
ஒல்லை இன்னமுதாக் கொண்டு ஒழுகுவார் 3.6.9

917 சாலி தேடி அறுத்தவை தாம் பெறும்
கூலி எல்லாம் திரு அமுதாக் கொண்டு
நீல நெல்லரி கூலி கொண்டு உண்ணும் நாள்
மால் அயற்கு அரியார் அது மாற்றுவார் 3.6.10

918 நண்ணிய வயல்கள் எல்லாம் நாள் தொறும் முன்னம்
காண
வண்ணவார் கதிர்ச் செஞ்சாலி ஆக்கிட மகிழ்ந்து
சிந்தை
அண்ணலார் அறுத்த கூலி கொண்டு இ◌ஃது அடியேன்
செய்த
புண்ணியம் என்று போத அமுது செய்விப்பார் ஆனார் 3.6.11

919 வைகலும் உணவு இலாமை மனைப் படப்பையினிற்
புக்கு 3.6.12

நைகரம் இல்லா அன்பின் நங்கை கைஅடகு கொய்து
பெய்கலத்து அமைத்து வைக்கப் பெருந்தகை
அருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணந் திருப்பணி செய்யும்
நாளில்

920 மனை மருங்கு அடகு மாள வட நெடு வான மீனே
அனையவர் தண்ணீர் வார்க்க அமுது செய்து
அன்பனாரும்
வினை செயல் முடித்துச் செல்ல மேவு நாள் ஒருநாள்
மிக்க
முனைவனார் தொண்டர்க்கு அங்கு நிகழ்ந்தது
மொழியப் பெற்றேன் 3.6.13

921 முன்பு போல் முதல்வனாரை அமுது செய்விக்க
மூளும்
அன்பு போல் தூய செந்நெல் அரிசி மாவடு மென் கீரை
துன்புபோம் மனத்துத் தொண்டர் கூடையில் சுமந்து
போகப்
பின்புபோம் மனைவியார் ஆன் பெற்ற அஞ்சு ஏந்திச்
சென்றார் 3.6.14

922 போதரா நின்ற போது புலர்ந்து கால் தளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கல மூடுகையால்
காதலால் அணைத்தும் எல்லாம் கமரிடைச் சிந்தக்
கண்டு
பூதநாயகர் தம் தொண்டர் போவது அங்கு இனி ஏன்
என்று 3.6.15

922 நல்ல செங்கீரை தூய மாவடு அரிசி சிந்த
அல்லல் தீர்த்தாள வல்லார் அமுது செய்து அருளும்
அப்பேறு
எல்லையில் தீமையேன் இங்கு எய்திடப் பெற்றிலேன்
என்று
ஒல்லையில் அரிவாள் பூட்டி ஊட்டியை அரியல்
உற்றார் 3.6.16

924 ஆட் கொள்ளும் ஐயர் தாம் இங்கு அமுது செய்திலர்
கொல் என்னாப்
பூட்டிய அரிவாள் பற்றிப் புரையற விரவும் அன்பு
காட்டிய நெறியின் உள்ளந் தண்டு அறக்
கழுத்தினோடே
ஊட்டியும் அரிய நின்றார் உறுபிறப் பரிவார் ஒத்தார் 3.6.17

925 மாசறு சிந்தை அன்பர் கழுத்து அரி அரிவாள் பற்றும்
ஆசில்வண் கையை மாற்ற அம்பலத்து ஆடும் ஐயர்
வீசிய செய்ய கையும் மாவடு விடேல் விடேல் என்
ஓசையும் கமரில் நின்றும் ஒக்கவே எழுந்த அன்றே 3.6.18

926 திருக்கை சென்று அரிவாள் பற்றும் திண் கையைப்
பிடித்த போது
வெருக்கொடு தம் கூறு நீங்க வெவ் வினை விட்டு
நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த
அருட் பெரும் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்று 3.6.19

927 அடியனேன் அறிவு இலாமை கண்டும் என் அடிமை
வேண்டிப்
படி மிசைக் கமரில் வந்து இங்கு அமுது செய் பரனே
போற்றி
துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி
பொடியணி பவள மேனிப் புரி சடைப் புராண போற்றி 3.6.20

928 என்றவர் போற்றி செய்ய இடப வாகனராய்த் தோன்றி
நன்று நீ புரிந்த செய்கை நன்னுதல் உடனே கூட
என்றும் நம் உலகில் வாழ்வாய் என்று அவர் உடனே
நண்ண
மன்றுளே ஆடும் ஐயர் மழ விடை உகைத்துச்
சென்றார் 3.6.21

929 பரிவு உறு சிந்தை அன்பர் பரம் பொருளாகி உள்ள
பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன் என்று
மாவின்
வரிவடு விடேலெனா முன் வன் கழுத்து அரிவாள்
பூட்டி
அரிதலால் அரிவாட்டாயர் ஆயினார் தூய நாமம் 3.6.22

930 முன்னிலை கமரே யாக முதல்வனார் அமுது
செய்யச்
செந்நெலின் அரிசி சிந்தச் செவியுற வடுவின் ஓசை
அந் நிலை கேட்ட தொண்டர் அடி இணை தொழுது
வாழ்த்தி
மன்னும் ஆனாயர் செய்கை அறிந்தவாறு வழுத்தல்
உற்றேன் 3.6.23

திருச்சிற்றம்பலம்

3.7. ஆனாய நாயனார் புராணம் (931 -972)

திருச்சிற்றம்பலம்

931 மாடு விரைப் பொலி சோலையின் வான் மதிவந்து ஏறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனும் நீர் நாடு 3.7.1

932 நீவி நிதம்ப உழத்தியர் நெய்க் குழல் மைச் சூழல்
மேவி உறங்குவ மென் சிறை வண்டு விரைக் கஞ்சப்
பூவில் உறங்குவ நீள் கயல் பூமலி தேமாவின்
காவின் நறுங் குளிர் நீழல் உறங்குவ கார் மேதி 3.7.2

933 வன்னிலை மள்ளர் உகைப்ப எழுந்த மரக்கோவை
பன் முறை வந்து எழும் ஓசை பயின்ற முழக்கத்தால்
அன்னம் மருங்குறை தண் துறை வாவி அதன் பாலைக்
கன்னல் அடும் புகையால் முகில் செய்வ கருப்பாலை 3.7.3

934 பொங்கிய மாநதி நீடலை உந்து புனற் சங்கம்
துங்க இலைக் கதலிப் புதல் மீது தொடங்கிப் போய்
தங்கிய பாசடை சூழ் கொடி யூடு தவழ்ந்தேறிப்
பைங்கமுகின் தலை முத்தம் உதிர்க்குவ பாளையென 3.7.4

935 அல்லி மலர்ப் பழனத்து அயல் நாகிள ஆன் ஈனும்
ஒல்லை முழுப்பை உகைப்பின் உழக்கு குழக்கன்று
கொல்லை மடக்குல மான் மறியோடு குதித்து ஓடும்
மல்கு வளத்தது முல்லை உடுத்த மருங்கோர்பால் 3.7.5

936 கண் மலர் காவிகள் பாய இருப்பன கார் முல்லைத்
தண் நகை வெண் முகை மேவும் சுரும்பு தடஞ் சாலிப்
பண்ணை எழுங்கயல் பாய இருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய வன் சிறை வண்டானம் 3.7.6

937 பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேல் ஓடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன்மழ நன்னாடாம்
அங்கது மண்ணின் அருங்கலமாக அதற்கேயோர்
மங்கல மானது மங்கலம் ஆகிய வாழ் மூதூர் 3.7.7

938 ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையில் ஓவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி அறம்புரி சால்போடும்
செப்ப உயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர் மேவும் 3.7.8

அப்பதி மன்னிய ஆயர் குலத்தவர் ஆனாயர்

939 ஆயர் குலத்தை விளக்கிட வந்து உதயம் செய்தார்
தூய சுடர்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்
பாலில்
பேயுடன் ஆடு பிரான் அடி அல்லது பேணாதார் 3.7.9

940 ஆனிரை கூட அகன் புற வில் கொடு சென்று ஏறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்து எங்கும்
தூநறு மென்புல் அருந்தி விரும்பிய தூ நீறுண்டு
ஊனமில் ஆயம் உலப்பில பல்க அளித்து உள்ளார் 3.7.10

941 கன்றொடு பால் மறை நாகு கறப்பன பாலாவும்
புன்றலை மென்சிலை ஆனொடு நீடு புனிற்றாவும்
வென்றி விடைக் குலமோடும் இனந்தொறும்
வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழல் உடன் பல தோழங்கள் 3.7.11

942 ஆவின் நிரைக் குலம் அப்படி பல்க அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம் பேணும்
காவலர் தம் பெருமான் அடி அன்புறு கானத்தின்
மேவு துளைக் கருவிக் குழல் வாசனை
மேற்கொண்டார் 3.7.12

943 முந்தை மறை நூன்மரபின் மொழிந்த முறை
எழுந்தவேய்
அந்த முதல் நாலிரண்டில் அரிந்து நரம்புறு தானம்
வந்ததுளை நிரையாக்கி வாயு முதல் வழங்கு துளை
அந்தமில் சீர் இடை ஈட்டின் அங்குலி எண் களின்
அமைத்து 3.7.13

944 எடுத்த குழற் கருவியினில் எம்பிரான் எழுத்து அஞ்சும்
தொடுத்த முறை ஏழ் இசையின் சுருதி பெற வாசித்து
அடுத்தசரா சரங்களெலாம் தங்கவருந் தங்கருணை
அடுத்த இசை அமுது அளித்துச் செல்கின்றார் அங்கு
ஒரு நாள் 3.7.14

945 வாச மலர்ப் பிணை பொங்க மயிர் நுழுதி மருங்கு
உயர்ந்த
தேசுடைய சிகழிகையிற் செறி கண்ணித் தொடை
செருகிப்
பாசிலை மென் கொடியின் வடம் பயில நறு விலி
புனைந்து
காசுடை நாண் அதற்கயலே கருஞ்சுருளின்
3.7.15

புறங்காட்டி

946 வெண் கோடல் இலைச் சுருளிற் பைந்தோட்டு
விரைத் தோன்றித்
தண் கோல மலர் புனைந்த வடி காதின் ஒளி தயங்கத்
திண் கோல நெற்றியின் மேல் திரு நீற்றின் ஒளி
கண்டோ ர்
கண் கோடல் நிறைந்தாராக் கவின் விளங்க மிசை
அணிந்து 3.7.16

947 நிறைந்த நீறு அணி மார்பின் நிரை முல்லை முகை
சுருக்கிச்
செறிந்த புனை வடம் தாழத் திரள் தோளின் புடை
அலங்கல்
அறைந்த சுரும்பு இசை அரும்ப அரையுடுத்த
மரவுரியின்
புறந்தழையின் மலி தானைப் பூம் பட்டுப் பொலிந்து
அசைய 3.7.17

948 சேவடியில் தொடு தோலும் செங்கையினில் வெண்
கோலும்
மேவும் இசை வேய்ங்குழலும் மிக விளங்க வினை
செய்யும்
காவல்புரி வல்லாயர் கன்றுடை ஆன் நிரை சூழப்
பூவலர் தார்க் கோவலனார் நிரை காக்கப் புறம்
போந்தார் 3.7.18

949 நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக் கொடிப் புறவம் பாடக்
கோல வெண் முகையேர் முல்லை கோபம் வாய்
முறுவல் காட்ட
ஆலு மின்னிடைச் சூழ் மாலைப் பயோதரம் அசைய
வந்தாள்
ஞால நீடு அரங்கில் ஆடக் கார் எனும் பருவ நல்லாள் 3.7.19

950 எம்மருங்கு நிரை பரப்ப எடுத்த கோலுடைப் பொதுவர்
தம்மருங்கு தொழுது அணையத் தண் புறவில்
வருந்தலைவர்
அம்மருங்கு தாழ்ந்த சினை அலர் மருங்கு மதுவுண்டு
செம்மருந்தண் சுரும்பு சுழல் செழுங் கொன்றை
மருங்கு அணைந்தார் 3.7.20

951 சென்றணைந்த ஆனாயர் செய்த விரைத் தாமம் என
மன்றல் மலர்த்துனர் தூக்கி மருங்குதாழ் சடையார்
போல்

3.7.21

நின்ற நறுங் கொன்றையினை நேர் நோக்கி நின்று உருகி
ஒன்றிய சிந்தையில் அன்பை உடையவர் பால் மடை திறந்தார்

952 அன்பூறி மிசைப் பொங்கும் அமுத இசைக் குழல் ஒலியால்
வன்பூதப் படையாளி எழுத்து ஐந்தும் வழுத்தித் தாம்
முன்பூதி வரும் அளவின் முறைமையே எவ்வுயிரும்
என்பூடு கரைந்து உருக்கும் இன்னிசை வேய்ங் கருவிகளில் 3.7.22

953 ஏழு விரல் இடை இட்ட இன்னிசை வங்கியம் எடுத்துத்
தாழுமலர் வரிவண்டு தாது பிடிப்பன போலச்
சூழுமுரன்று எழ நின்று தூய பெரும் தனித் துளையில்
வாழிய நந்தோன்றலார் மணி அதரம் வைத்தூத 3.7.23

954 முத்திரையே முதல் அனைத்தும் முறைத் தானம் சோதித்து
வைத்த துளை ஆராய்ச்சி வக்கரனை வழி போக்கி
ஒத்த நிலை உணர்ந்து அதற்பின் ஒன்று முதல்படி முறையாம்
அத்தகைமை ஆரோசை அமரோசைகளின் அமைத்தார் 3.7.24

955 மாறுமுதற் பண்ணின் பின் வளர் முல்லைப் பண்ணாக்கி
ஏறிய தாரமும் உழையும் கிழமை கொள இடுந்தானம்
ஆறுலவுஞ் சடை முடியார் அஞ்செழுத்தின் இசை பெருகக்
கூறிய பட்டடைக் குரலாங் கொடிப் பாலையினில் நிறுத்தி 3.7.25

956 ஆய இசைப் புகல் நான்கின் அமைந்த புகல் வகை எடுத்து
மேய துளை பற்றுவன விடுபனவாம் விரல் நிரையிற்
சேய வொளியிடை அலையத் திருவாளன் எழுத்தஞ்சும்
தூய இசைக் கிளை கொள்ளுந் துறையஞ்சின் முறை விளைத்தார் 3.7.26

957 மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன் முறையால்
தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும் 3.7.27

அந்தரத்து விரல் தொழில்கள் அளவு பெற
அசைத்தியக்கிச்
சுந்தரச் செங்கனிவாயும் துளைவாயும்
தொடக்குண்ண

958 எண்ணிய நூல் பெருவண்ணம் இடை வண்ணம்
வனப்பென்னும்
வண்ண இசை வகை எல்லாம் மா துரிய நாதத்தில்
நண்ணிய பாணியும் இயலும் தூக்கு நடை
முதற்கதியில்
பண்ணமைய எழும் ஓசை எம் மருங்கும் பரப்பினார் 3.7.28

959 வள்ளலார் வாசிக்கும் மணித் துளைவாய் வேய்ங்
குழலின்
உள்ளுறை அஞ்செழுத்தாக ஒழுகி மதுர ஒலி
வெள்ளநிறைந்து எவ்வுயிர்க்கும் மேல் அமரர்
தருவிளை தேன்
தெள்ளமுதின் உடன் கலந்து செவி வார்ப்பது எனத்
தேக்க 3.7.29

960 ஆனிரைகள் அறுகருந்தி அசை விடாது அணைந்து
அயரப்
பால் நுரை வாய்த் தாய் முலைப் பால் பற்றும்
இளங்கன்று இனமும்
தான் உணவு மறந்து ஒழியத் தட மருப்பின் விடைக்
குலமும்
மான் முதலாம் கான் விலங்கும் மயிர் முகிழ்த்து
வந்து அணைய 3.7.30

961 ஆடு மயில் இனங்களும் அங்கு அசைவு அயர்ந்து
மருங்கணுக
ஊடுசெவி இசை நிறைந்த உள்ளம் ஒடு புள்ளினமும்
மாடுபடிந்து உணர்வு ஒழிய மருங்கு தொழில் புரிந்து
ஒழுகும்
கூடியவண் கோவலரும் குறை வினையின் துறை
நின்றார் 3.7.31

962 பணி புவனங்களில் உள்ளார் பயில் பிலங்கள் வழி
அணைந்தார்
மணிவரை வாழ் அரமகளிர் மருங்கு மயங்கினர்
மலிந்தார்
தணிவில் ஒளி விஞ்சையர்கள் சாரணர் கின்னரர்
அமரர்

3.7.32

அணிவிசும்பில் அயர்வு எய்தி விமானங்கள் மிசை
அணைந்தார்

963 சுரமகளிர் கற்பகப் பூஞ்சோலைகளின் மருங்கிருந்து
கர மலரின் அமுது ஊட்டும் கனி வாய் மென்
கிள்ளையுடன்
விரவு நறுங்குழல் அலைய விமானங்கள் விரைந்து
ஏறிப்
பரவிய ஏழிசை அமுதம் செவி மடுத்துப் பருகினார் 3.7.32

964 நலிவாரும் மெலிவாரும் உணர்வு ஒன்றாய்
நயத்திலினால்
மலிவாய்வெள் எயிற்று அரவம் மயில் மீது மருண்டு
விழும்
சலியாத நிலை அரியும் தடம் கரியும் உடன் சாரும்
புலி வாயின் மருங்கு அணையும் புல்வாய புல்வாயும் 3.7.34

965 மருவிய கால் விசைத்து அசையா மரங்கள் மலர்ச்
சினை சலியா
கருவரை வீழ் அருவிகளும் கான்யாறும் கலித்து ஓடா
பெரு முகிலின் குலங்கள் புடை பெயர்வு ஒழியப்
புனல் சோரா
இரு விசும்பின் இடை முழங்கா எழுகடலும் இடை
துளும்பா 3.7.35

966 இவ்வாறு நிற்பனமும் சரிப்பனவும் இசை மயமாய்
மெய் வாழும் புலன் கரண மேவிய ஒன்று
ஆயினவால்
மொய்வாச நறுங்கொன்றை முடிச் சடையார் அடித்
தொண்டர்
செவ்வாயின் மிசை வைத்த திருக்குழல் வாசனை
உருக்க 3.7.36

967 மெய்யன்பர் மனத்து அன்பின் விளைந்த இசைக் குழல்
ஓசை
வையம் தன்னையும் நிறைத்து வானம் தன்
வயமாக்கிப்
பொய் அன்புக்கு எட்டாத பொற் பொதுவில் நடம்
புரியும்
ஐயன் தன் திருச் செவியின் அருகணைய
பெருகியதால் 3.7.37

968 ஆனாயர் குழல் ஓசை கேட்டு அருளி அருள் கருணை
தானாய திரு உள்ளம் உடைய தவ வல்லியுடன்
3.7.38

கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதி நாறுஞ் சடை தாழ

969 திசை முழுதுங் கணநாதர் தேவர்கட்கு முன் நெருங்கி
மிசை மிடைந்து வரும் பொழுது வேற்று ஒலிகள் விரவாமே
அசைய எழுங்குழல் நாதத்து அஞ்செழுத்தால் தமைப் பரவும்
இசை விரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர் நின்றார் 3.7.39

970 முன் நின்ற மழவிடை மேல் முதல்வனார் எப்பொழுதும்
செந்நின்ற மனப் பெரியோர் திருக் குழல் வாசனை கேட்க
இந்நின்ற நிலையே நம்பால் அணைவாய் என அவரும்
அந்நின்ற நிலை பெயர்ப்பார் ஐயர் திரு மருங்கு அணைந்தார் 3.7.40

971 விண்ணவர்கள் மலர் மாரி மிடைந்து உலகமிசை விளங்க
எண்ணில் அருமுனிவர் குழாம் இருக்கு மொழி எடுத்து ஏத்த
அண்ணலார் குழல் கருவி அருகு இசைத்து அங்கு உடன் செல்லப்
புண்ணியனார் எழுந்து அருளிப் பொற் பொதுவின் இடைப் புக்கார் 3.7.41

972 **சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி**
தீது கொள் வினைக்கு வாரோம் செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காது கொள் குழைகள் வீசும் கதிர் நிலவு இருள் கால் சீப்ப
மாது கொள் புலவி நீக்க மனையிடை இரு கால் செல்லத்
தூது கொள்பவராம் நம்மைத் தொழும்பு கொண்டு உரிமை கொள்வார் 3.7.42

திருச்சிற்றம்பலம்

இலை மலிந்த சருக்கம் முற்றிற்று.
சருக்கம் 3-க்குத் திருவிருத்தம் - 972

This webpage was last updated on 24 September 2004
Please send your comments to the webmasters of this website.

சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம்
என்ற பெரிய புராணம் - முதற் காண்டம்
சருக்கம் 4 (மும்மையால் உலகாண்ட சருக்கம்) &
சருக்கம் 5 (திருநின்ற சருக்கம்)

periya purANam of cEkkizAr - Canto 1
carukkam -4 (mummaiyAl ulakANTa carukkam)
& carukkam 5 (tiruninRa carukkam)
In tamil script, TSCII format

Acknowledgements:

Our Sincere thanks go to Dr. Thomas Malten and Colleagues of the Univ. of Koeln, Germany for providing us with the transliterated/romanized version of the etext and giving us permission to release the TSCII version as part of Project Madurai etext collections.
TSCII proof reading by **tiruciRRampalam aRakaTTaLai, Kovilpatti, Tamilnadu.**
Preparation of HTML and PDF versions: **Dr. K. Kalyanasundaram** Lausanne, Switzerland.
This webpage presents the Etext in Tamil script but in Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:
i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages (Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil fontchosen as the default font for the UTF-8 char-set/encoding view.
. In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

ன Project Madurai 1999 - 2004

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website

http://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம் -முதற் காண்டம்

4 மும்மையால் உலகாண்ட சருக்கம்

4.1	மூர்த்தி நாயனார் புராணம்	(973- 1021)	மின்பதிப்பு
4.2	முருக நாயனார் புராணம்	(1022-1035)	மின்பதிப்பு
4.3	உருத்திர பசுபதி நாயனார் புராணம்	(1036-1045)	மின்பதிப்பு
4.4	திரு நாளைப் போவர் நாயனார் புராணம்	(1046 -1082)	மின்பதிப்பு
4.5	திருக் குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்	(1083 - 1210)	மின்பதிப்பு
4.6	சண்டேசுர நாயனார் புராணம்	(1211- 1270)	மின்பதிப்பு

5. திருநின்ற சருக்கம்

5.1	திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்	(1271- 1699)	மின்பதிப்பு
5.2	குலச்சிறை நாயனார் புராணம்	(1700-1710)	மின்பதிப்பு
5.3	பெரு மிழலைக் குறும்ப நாயனார் புராணம்	(1711 -1721)	மின்பதிப்பு
5.4	காரைக்கால் அம்மையார் புராணம்	(1722-1787)	மின்பதிப்பு
5.5	அப்பூதி அடிகள் நாயனார் புராணம்	(1788-1832)	மின்பதிப்பு
5.6	திரு நீல நக்க நாயனார் புராணம்	(1833-1870)	மின்பதிப்பு
5.7	நமிநந்தி அடிகள் நாயனார் புராணம்	(1871 -1903)	மின்பதிப்பு

திருச்சிற்றம்பலம்

4.1 மூர்த்தி நாயனார் புராணம் (973- 1021)

திருச்சிற்றம்பலம்

973 சீர் மன்னு செல்வக்குடி மல்கு சிறப்பின் ஓங்கும்
கார் மன்னு சென்னிக் கதிர் மாமணி மாட வைப்பு
நார் மன்னு சிந்தைப் பல நற்றுறை மாந்தர் போற்றும்
பார் மன்னு தொன்மைப் புகழ் பூண்டது பாண்டி நாடு 4.1.1

974 சாயுந்தளிர் வல்லி மருங்குல் நெடுந் தடங்கண்
வேயும் படு தோளியர் பண்படும் இன்சொல் செய்ய
வாயும் படும் நீள் கரை மண் பொருந்தண் பொருந்தம்
பாயுங் கடலும் படும் நீர்மை பணித்த முத்தம் 4.1.2

975 மொய்வைத்த வண்டின் செறிகுழல் முரன்ற சந்தின்
மை வைத்த சோலை மலயந்தர வந்த மந்த
மெய் வைத்த காலுந் தரும் ஞாலம் அளந்த
மேன்மைத்
தெய்வத் தமிழும் தரும் செவ்வி மணஞ்செயீரம் 4.1.3

976 சூழும்தழ்ப் பங்கயமாக அத் தோட்டின் மேலாள்
தாழ்வு இன்றி என்றும் தனி வாழ்வது அத் தையல்
ஒப்பார்
யாழின் மொழியில் குழல் இன்னிசையும் சுரும்பும்
வாழும் நகரம் மதுராபுரி என்பது ஆகும் 4.1.4

977 சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய அங்கண் மூதூர்
நூல் பாய் இடத்தும் உள நோன்றலை மேதி பாயப்
பால் பாய் முலை தோய் மதுப் பங்கயம் பாய எங்கும்
சேல் பாய் தடத்தும் உள செய்யுள் மிக்கேறு சங்கம் 4.1.5

978 மந்தா நிலம் வந்து அசை பந்தரின் மாடம் முன்றில்
பந்தாடிய மங்கையர் பங்கயச் செங்கை தாங்கும்
சந்தார் முலை மேலன தாழ் குழை வாள் முகப்பொற்
செந்தாமரை மேலன நித்திலஞ் சேர்ந்த கோவை 4.1.6

979 மும்மைப் புவனங்களின் மிக்கது அன்றே அம் மூதூர்
மெய்ய்ம்மைப் பொருளாந் தமிழ் நூலின் விளங்கு
வாய்மை
செம்மைப் பொருளுந் தருவார் திருஆலவாயில்
எம்மைப் பவந் தீர்ப்பவர் சங்கம் இருந்தது என்றால் 4.1.7

980 அப் பொற் பதிவாழ் வணிகக் குலத்து ஆன்ற
தொன்மைச்
செப்பத் தகு சீர்க் குடி செய்தவஞ் செய்ய வந்தார் 4.1.8

எப்பற்றினையும் அறுத்து ஏறுகைத்து ஏறுவார் தாள்
மெய்ப் பற்று எனப் பற்றி விடாத விருப்பின் மிக்கார்

981 நாளும் பெருங் காதல் நயப்புறும் வேட்கை யாலே
கேளும் துணையும் முதல் கேடில் பதங்கள் எல்லாம்
ஆளும் பெருமான் அடித் தாமரை அல்லது இல்லார்
மூளும் பெருக்கு அன்பு எனும் மூர்த்தியார்
மூர்த்தியார்தாம் 4.1.9

982 அந்திப் பிறை செஞ்சடை மேல் அணி ஆலவாயில்
எந்தைக்கு அணி சந்தனக் காப்பிட என்றும் முட்டா
அந்தச் செயலின் நிலை நின்று அடியார் உவப்பச்
சிந்தைக்கு இனிதாய திருப்பணி செய்யும் நாளில் 4.1.10

983 கானக் கடி சூழ் வடுகக் கரு நாடர் காவல்
மானப் படை மன்னன் வலிந்து நிலம் கொள்வானாய்
யானைக் குதிரைக் கருவிப் படை வீரர் திண்டேர்
சேனைக் கடலுங் கொடு தென் திசை நோக்கி வந்தான் 4.1.11

984 வந்துற்ற பெரும் படை மண் புதையப் பரப்பிச்
சந்தப் பொதியில் தமிழ் நாடு உடை மன்னன் வீரம்
சிந்தச் செரு வென்று தன் ஆணை செலுத்தும்
ஆற்றால்
கந்தப் பொழில் சூழ் மதுரா புரி காவல் கொண்டான் 4.1.12

985 வல்லாண்மையின் வண் தமிழ் நாடு வளம் படுத்தி
நில்லா நிலை ஒன்றிய இன்மையின் நீண்ட மேரு
வில்லான் அடிமைத் திறம் மேவிய நீற்றின் சார்பு
செல்லாதரு கந்தர் திறத்தினில் சிந்தை தாழ்ந்தான் 4.1.13

986 தாழும் சமண் கையர் தவத்தை மெய் என்று சார்ந்து
வீழும் கொடியோன் அது அன்றியும் வெய்ய
முன்னைச்
சூழும் வினையால் அரவம் சுடர்த் திங்களோடும்
வாழும் சடையான் அடியாரையும் வன்மை செய்வான் 4.1.14

987 செக்கர்ச் சடையார் விடையார் திரு ஆல வாயுள்
முக்கட் பரனார் திருத் தொண்டரை மூர்த்தியாரை
மைக்கற்புரை நெஞ்சுடை வஞ்சகன் வெஞ்ச மண்
போர்
எக்கர்க்குடனாக இகழ்தன செய்ய எண்ணி 4.1.15

988 அந்தம் இலவாம் இறை செய்யவும் அன்பனார் தாம்
முந்தை தம் முறைமைப் பணி முட்டலர் செய்து
வந்தார்
தம் தம் பெருமைக்கு அளவாகிய சார்பில் நிற்கும் 4.1.16

எம் தம் பெரு மக்களை யாவர் தடுக்க வல்லார்

989 எள்ளும் செயல் வன்மைகள் எல்லை இல்லாத செய்யத்
தள்ளுஞ் செயல் இல்லார் சந்தனக் காப்புத் தேடிக்
கொள்ளுந் துறையும் அடைத்தான் கொடும் கோன்மை செய்வான்
தெள்ளும் புனல் வேணியர்க்கு அன்பரும் சிந்தை நொந்து 4.1.17

990 புன்மைச் செயல்வல் அமண்குண்டரிற் போது போக்கும்
வன்மைக் கொடும் பாதகன் மாய்திட வாய்மை வேத
நன்மைத் திரு நீற்று உயர் நன்னெறி தாங்கு மேன்மைத்
தன்மைப் புவி மன்னரைச் சார்வதென்(று)?" என்று சார்வார் 4.1.18

991 காய்வுற்ற செற்றங் கொடு கண்டகன் காப்பவும் சென்று
ஆய்வுற்ற கொட்பில் பகல் எல்லை அடங்க நாடி
ஏய்வுற்ற நற்சந்தனம் எங்கும் பெறாது சிந்தை
சாய் உற்றிட வந்தனர் தம்பிரான் கோயில் தன்னில் 4.1.19

992 நட்டம் புரிவார் அணி நற்றிரு மெய்ப் பூச்சு இன்று
முட்டும் பரிசு ஆயினும் தேய்க்கும் கைமுட்டாது என்று
வட்டம் திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்
கட்டும் புறந்தோல் நரம்பு என்பு கரைந்து தேய 4.1.20

993 கல்லின் புறந் தேய்ந்த முழங்கை கலுழ்ந்து சோரி
செல்லும் பரப்பு எங்கணும் என்பு திறந்து முளை
புல்லும்படி கண்டு பொறுத்திலர் தம்பிரான் ஆனார்
அல்லின் கண் எழுந்தது உவந்து அருள் செய்த வாக்கு 4.1.21

994 அன்பின் துணிவால் இது செய்திடல் ஐய! உன்பால்
வன் புன்கண் விளைத்தவன் கொண்ட மண் எல்லாம் கொண்டு
முன் பின்னல் புகுந்தன முற்றவும் நீத்துக் காத்துப்
பின்பு உன் பணி செய்து நம் பேர் உலகு எய்துக என்ன 4.1.22

995 இவ் வண்ணம் எழுந்தது கேட்டு எழுந்து அஞ்சி முன்பு
செய் வண்ணம் ஒழிந்திடத் தேய்ந்த புண் ஊறு தீர்ந்து
கை வண்ணம் நிரம்பின வாசம் எல்லாம் கலந்து 4.1.23

மொய் வண்ண விளங்கு ஒளி எய்தினர் மூர்த்தியார் தாம்

996 அந் நாள் இரவின் கண் அமண் புகல் சார்ந்து வாழும்
மன் ஆகிய போர் வடுகக் கருநாடர் மன்னன்
தன்னாளும் முடிந்தது சங்கரன் சார்பு இலோர்க்கு
மின்னாம் என நீடிய மெய்ந் நிலையாமை வெல்ல 4.1.24

997 இவ்வாறு உலகத்தின் இறப்ப உயர்ந்த நல்லோர்
மெய் வாழ் உலகத்து விரைந்து அணைவார்களே போல்
அவ்வாறு அரனார் அடியாரை அலைத்த தீயோன்
வெவ்வாய் நிரயத்து இடை விரைந்து வீந்தான் 4.1.25

998 முழுதும் பழுதே புரி மூர்க்கன் உலந்த போதின்
எழுதும் கொடி போல்பவர் உட்பட ஏங்கு சுற்றம்
முழுதும் புலர்வுற்றது மற்று அவன் அன்ன மாலைப்
பொழுதும் புலர்வுற்றது செங்கதிர் மீது மோத 4.1.26

999 அவ் வேலையில் அங்கண் அமைச்சர்கள் கூடித் தங்கள்
கை வேறு கொள் ஈம அருங்கடன் காலை முற்றி
வை வேலவன் தன் குல மைந்தரும் இன்மை யாலே
செய் வேறு வினைத் திறம் சிந்தனை செய்து தேர்வார் 4.1.27

1000 தாழும் செயலின்று ஒரு மன்னவன் தாங்க வேண்டும்
கூழும் குடியும் முதலாயின கொள்கைத்தேனும்
சூழும் படை மன்னவன் தோள் இணைக் காவல் இன்றி
வாழும் தகைத்து அன்றி இந்த வையகம் என்று சொன்னார் 4.1.28

1001 பல் முறை உயிர்கள் எல்லாம் பாலித்து ஞாலம் காப்பான்
தன் நெடும் குடைக் கீழ்த் தம் தம் நெறிகளில் சரிந்து வாழும்
மன்னரை இன்றி வைகும் மண்ணுலகு எண்ணுங் காலை
இன்னுயிர் இன்றி வாழும் யாக்கையை ஒக்கும் என்பார் 4.1.29

1002 இவ் வகை பலவும் எண்ணி இங்கு இனி அரசர் இல்லை
செய்வகை இதுவே என்று தெளிபவர் சிறப்பின் மிக்க
மை வரை அனைய வேழம் கண் கட்டி விட்டால் மற்றக் 4.1.30

கை வரை கைக் கொண்டார் மண் காவல் கைக்
கொள்வார் என்று

1003 செம் மாண் வினை அர்ச்சனை நூல் முறை செய்து
தோளால்
இம் மாநிலம் ஏந்த ஓர் ஏந்தலை ஏந்துக என்று
பெய்ம் மா முகில் போல் மதம் பாய் பெருகோடை
நெற்றிக்
கைம்மாவை நறுந் துகில் கொண்டு கண் கட்டி
விட்டார் 4.1.31

1004 கண் கட்டி விடுங்களி யானை அக் காவல் மூதூர்
மண் கொள் புற வீதி மருங்கு திரிந்து போகித்
திண் பொன் தட மாமதில் சூழ் திரு ஆல வாயின்
விண் பிற்பட ஓங்கிய கோபுரம் முன்பு மேவி 4.1.32

1005 நீங்கும் இரவின் கண் நிகழ்ந்தது கண்ட தொண்டர்
ஈங்கு எம் பெருமான் அருளாம் எனில் இந்த வையம்
தாங்கும் செயல் பூண்பன் என்று உள்ளம் தளர்வு
நீங்கிப்
பூங்கொன்றை மிலைந்தவர் கோயில் புறத்து நிற்ப 4.1.33

1006 வேழத்து அரசு அங்கண் விரைந்து நடந்து சென்று
வாழ்வுற்று உலகம் செய்தவத்தினின் வள்ளலாரைச்
சூழ் பொற் சுடர் மாமணி மாநிலம் தோய முன்பு
தாழ்வுற்று எடுத்துப் பிடர் மீது தரித்தது அன்றே 4.1.34

1007 மாதங்கம் எருத்தினில் வைத்தவர் தம்மைக் காணா
ஏதங்கெட எண்ணிய திண்மை அமைச்சர் எல்லாம்
பாதங்களின் மீது பணிந்து எழுந்தார்கள் அப்போது
ஓதங்கிளர் வேலையை ஒத்து ஒலி மிக்கது அவ்வூர் 4.1.35

1008 சங்கங்கள் முரன்றன தாரைகள் பேரி யோடும்
எங்கு எங்கும் இயம்பின பல்லியம் எல்லையில்ல
அங்கு அங்கு மலிந்தன வாழ்த்தொலி அம்பொற்
கொம்பின்
பங்கன் அருளால் உலகு ஆள்பவர் பாங்கர் எங்கும் 4.1.36

1009 வெங்கட் களிற்றின் மிசை நின்றும் இழிச்சி வேரித்து
தொங்கல் சுடர் மாலைகள் சூழ் முடி சூடு சாலை
அங்கண் கொடு புக்கரி ஆசனத்து ஏற்றி ஒற்றைத்
திங்கட்குடைக் கீழ் உரிமைச் செயல் சூழ்ந்து செய்வார் 4.1.37

1010 மன்னுந் திசை வேதியில் மங்கல ஆகுதிக் கண்
துன்னுஞ் சுடர் வன்னி வளர்த்துத் துதைந்த நூல் சூழ்
பொன்னின் கலசங்கள் குடங்கள் பூரித்த தூ நீர்
4.1.38

உன்னுஞ் செயல் மந்திர யோகர் நிறுத்தினார்கள்

1011 வந்துற்றெழு மங்கல மாந்தர்கள் தம்மை நோக்கிச்
சிந்தைச் சிவமே தெளியும் திரு மூர்த்தியார் தாம்
முந்தைச் செயலாம் அமண் போய் முதல் சைவம்
ஓங்கில்
இந்தப் புவி தாங்கி இவ் வின்னரசு ஆள்வான் என்றார் 4.1.39

1012 அவ்வாறு மொழிந்தது கேட்ட அமைச்சரோடு
மெய் வாழ் தரு நூல் அறிவின் மிகு மாந்தர் தாமும்
எவ்வாறு அருள் செய்தனை மற்று அவை அன்றி
யாவர்
செய்வார் பெரியோய் எனச் சேவடி தாழ்ந்து செப்ப 4.1.40

1013 வையம் முறை செய்வென் ஆகில் வயங்கு நீறே
செய்யும் அபிடேகமும் ஆக செழுங்கலன்கள்
ஐயன் அடையாளமும் ஆக அணிந்து தாங்கும்
மொய் புன் சடைமாமுடியே முடி ஆவது என்றார் 4.1.41

1014 என்று இவ்வுரை கேட்டலும் எல்லையில் கல்வி
யோரும்
வன் திண் மதி நூல் வளர் வாய்மை அமைச்சர் தாமும்
நன்றிங்கு அருள் தான் என நற்தவ வேந்தர் சிந்தை
ஒன்றும் அரசாள் உரிமைச் செயலான உய்த்தார் 4.1.42

1015 மாடு எங்கும் நெருங்கிய மங்கல ஓசை மல்கச்
சூடும் சடை மௌலி அணிந்தவர் தொல்லை ஏனம்
தேடுங் கழலார் திருஆல வாய் சென்று தாழ்ந்து
நீடுங்களிற்றின் மிசை நீள் மறுகூடு போந்தார் 4.1.43

1016 மின்னும் மணி மாளிகை வாயிலின் வேழ மீது
தன்னின்றும் இழிந்து தயங்கு ஒளி மண்டபத்தில்
பொன்னின் அரி மெல்லணைச் சாமரைக் காமர்
பூங்கால்
மன்னும் குடை நீழல் இருந்தனர் வையம் தாங்கி 4.1.44

1017 குலவுந் துறை நீதி அமைச்சர் குறிப்பின் வைகக்
கலகம் செய் அமண்செயல் ஆயின கட்டு நீங்கி
நிலவும் திரு நீற்று நெறித் துறை நீடு வாழ
உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து மன்ன 4.1.45

1018 நுதலின் கண் விழித்தவர் வாய்மை நுணங்கு நூலின்
பதம் எங்கும் நிறைந்து விளங்கப் பவங்கள் மாற
உதவும் திருநீறு உயர் கண்டிகை கொண்ட வேணி
முதன் மும்மையினால் உலகு ஆண்டனர்
மூர்த்தியார் தாம் 4.1.46

1019 ஏலம் கமழ் கோதையர் தம் திறம் என்றும் நீங்கும்
சீலங்கொடு வெம் புலன் தெவ்வுடன் வென்று நீக்கி
ஞாலந் தனி நேமி நடாத்தி நலம் கொள் ஊழிக்
காலம் உயிர்கட்கு இடர் ஆன கடிந்து காத்து 4.1.47

1020 பாதம் பர மன்னவர் சூழ்ந்து பணிந்து போற்ற
ஏதம் பிணியா வகை இவ் உலகு ஆண்டு தொண்டின்
பேதம் புரியா அருள் பேர் அரசாளப் பெற்று
நாதன் கழல் சேவடி நண்ணினர் அண்ணலாரே 4.1.48

1021 அகல் பாறையின் வைத்து முழங் கையை அன்று
தேய்த்த
இகலார் களிற்று அன்பரை ஏத்தி முருகனாராம்
முகில் சூழ் நறுஞ் சோலையின் மொய் ஒளி மாட
வீதிப்
புகலூர் வரும் அந்தணர் தம் திறம் போற்றல் உற்றாம் 4.1.49

திருச்சிற்றம்பலம்

4.2 முருக நாயனார் புராணம் (1022 -1035)

திருச்சிற்றம்பலம்

1022 தாது சூழும் குழல் மலையாள் தளிக்கை சூழும்
திருமேனி
மீது சூழும் புனல் கற்றை வேணி நம்பர் விரும்பு பதி
சோதி சூழும் மணி மௌலிச் சோழர் பொன்னி திரு
நாட்டுப்
போது சூழும் தடஞ்சோலைப் பொய்கை சூழும் பூம்
புகலூர் 4.2.1

1023 நாம மூதூர் மற்றதனுள் நல்லோர் மனம் போல் அரவு
அணிந்த
சேம நிலவு திரு நீற்றின் சிறந்த வெண்மைத்
திருந்தொளியால்
யாம இருளும் வெளி ஆக்கும் இரவே அல்ல விரை
மலர் மேல்
காமர் மதுவுண் சிறை வண்டும் களங்கம் இன்றி
விளங்குமால் 4.2.2

1024 நண்ணும் இசை தேர் மது கரங்கள் நனை மென்
சினையின் மருங்கலைய
வண்ண மதுரத் தேன் பொழிவ வாச மலர் வாயே 4.2.3

அல்ல
தண்ணென் சோலை எம் மருங்கும் சாரும் மடமென்
சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச் செழுந் தேன்
பொழியுமால்
1025 வண்டு பாடப் புனல் தடத்து மலர்ந்து கண்ணீர்
அரும்புவன
கொண்ட வாச முகை அவிழ்ந்த குளிர் பங்கயங்களே
அல்ல
அண்டர் பெருமான் திருப் பாட்டின் அமுதம் பெருகச்
செவி மடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும் துளித்த கண்ணீர்
அரும்புமால் 4.2.4
1026 ஆன பெருமை வளஞ்சிறந்த அந்தண் புகலூர் அது
தன்னில்
மான மறையோர் குல மரபின் வந்தார் முந்தை
முதல்வர்
ஞான வரம்பின் தலை நின்றார் நாகம் புளை வார்
சேவடிக் கீழ்
ஊனம் இன்றி நிறை அன்பால் உருகு மனத்தார்
முருகனார் 4.2.5
1027 அடை மேல் அலவன் துயில் உணர அலர் செங் கமல
வயல் கயல்கள்
மடை மேல் உகளும் திருப்புகலூர் மன்னி வாழுந்
தன்மையராய்
விடை மேல் வருவார்க்கு ஆளான மெய்ம்மை
தவத்தால் அவர் கற்றைச்
சடை மேல் அணியத் திருப் பள்ளித் தாமம் பறித்துச்
சாத்துவார் 4.2.6
1028 புலரும் பொழுதின் முன் எழுந்து புனித நீரில் மூழ்கிப்
போய்
மலரும் செவ்வித் தம் பெருமான் முடிமேல் வான் நீர்
ஆறுமதி
உலவும் மருங்கு முருகு உயிர்க்க நகைக்கும் பதத்தின்
உடன் பறித்த
அலகில் மலர்கள் வெவ் வேறு திருப்பூம் கூடைகளில்
அமைப்பார் 4.2.7

1029 கோட்டு மலரும் நில மலரும் நீர் மலரும் கொழுங்
கொடியின்
தோட்டு மலரும் மா மலரும் சுருதி மலருந்
திருவாயில்
காட்டு முறுவல் நிலவு அலரக் கனக வரையிற்
பன்னக நாண்
பூட்டும் ஒருவர் திரு முடி மேல் புனையலாகும் மலர்
தெரிந்து 4.2.8

1030 கொண்டு வந்து தனி இடத்தில் இருந்து கோக்கும்
கோவைகளும்
இண்டைச் சுருக்கும் தாமம் உடன் இணைக்கும் வாச
மாலைகளும்
தண்டில் கட்டும் கண்ணிகளும் தாளில் பிணைக்கும்
பிணையல்களும்
நுண்டாது இறைக்கும் தொடையல்களும் சமைத்து
நுடங்கு நூன்மார்பர் 4.2.9

1031 ஆங்கப் பணிகள் ஆனவற்றுக்கு அமைத்த
காலங்களின் அமைத்துத்
தாங்கிக் கொடு சென்று அன்பினொடும் சாத்தி
வாய்ந்த அர்ச்சனைகள்
பாங்கில் புரிந்து பரிந்துள்ளார் பரமர் பதிகப் பற்றான
ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும் ஓவா நாவின்
உணர்வினார் 4.2.10

1032 தள்ளும் முறைமை ஒழிந்திட இத் தகுதி ஒழுகும்
மறையவர் தாம்
தெள்ளு மறைகள் முதலான ஞானம் செம் பொன்
வள்ளத்தில்
அள்ளி அகிலம் ஈன்று அளித்த அம்மை முலைப்பால்
உடன் உண்ட
பிள்ளையார்க்கு நண்பரும் ஆம் பெருமை உடையார்
ஆயினார் 4.2.11

1033 அன்ன வடிவும் ஏனமுமாய் அறிவார் இருவர்
அறியாமல்
மன்னும் புகலூர் உறைவாரை வர்த்த மான வீச்சுரத்து
நன்னர் மகிழ்ச்சி மனம் கொள்ள நாளும் பூசை
வழுவாமே
பன்னும் பெருமை அஞ்செழுத்தும் பயின்றே பணிந்து
பரவினார் 4.2.12

1034 அங்கண் அமருந் திருமுருகர் அழகார் புகலிப்
பிள்ளையார்
பொங்கு மணத்தின் முன் செய்த பூசை அதனால்
புக்கருளிச்
செங்கண் அடலேறு உடையவர் தாஞ்சிறந்த அருளின்
பொருள் அளிக்கத்
தங்கள் பெருமான் அடி நீழல் தலையாம் நிலைமை
சார்வு உற்றார் 4.2.13

1035 அரவம் அணிந்த அரையாரை அருச்சித்து அவர் தம்
கழல் நிழல் கீழ்
விரவு புகலூர் முருகனார் மெய்மைத் தொண்டின்
திறம் போற்றிக்
கரவில் அவர் பால் வருவாரைக் கருத்தில் உருத்திரம்
கொண்டு
பரவும் அன்பர் பசுபதியார் பணிந்த பெருமை பகர்
உற்றேன் 4.2.14

திருச்சிற்றம்பலம்

4.3 உருத்திர பசுபதி நாயனார் புராணம் (1036 -1045)

திருச்சிற்றம்பலம்

1036 நிலத்தின் ஓங்கிய நிவந்தெழும் பெரும் புனல் நீத்தம்
மலர்த் தடம் பணை வயல் புகு பொன்னி நன்னாட்டுக்
குலத்தின் ஓங்கிய குறைவு இலா நிறை குடி குழுமித்
தலத்தின் மேம் படு நலத்தது பெருந் திருத் தலையூர் 4.3.1

1037 வான் அளிப்பன மறையவர் வேள்வியின் வளர் தீ
தேன் அளிப்பன நறுமலர் செறி செழுஞ் சோலை
ஆன் அளிப்பன அம் சுகந்து ஆடுவார்க்கு அவ்வூர்
தான் அளிப்பன தருமமும் நீதியுஞ் சால்பும் 4.3.2

1038 அங்கண் மா நகர் அதன் இடை அருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர்
செங்கண் மால் விடையார் செழும் பொன் மலை
வல்லி
பங்கனார் அடிமைத் திறம் புரி பசுபதியார் 4.3.3

1039 ஆய அந்தணர் அருமறை உருத்திரம் கொண்டு
மாயனார் அறியா மலர்ச் சேவடி வழுத்தும்
4.3.4

தூய அன்பொடு தொடர்பினில் இடையறாச் சுருதி
நேய நெஞ்சினர் ஆகி அத் தொழில் தலை நின்றார்

1040 கரையில் கம்பலை புள் ஒலி கறங்கிட மருங்கு
பிரச மென் சுரும்பு அறைந்திடக் கரு வரால் பிறழும்
நிரை நெடுங் கயல் நீரிடை நெருப்பு எழுந்தது அனைய
விரை நெகிழ்ந்த செங் கமலம் என் பொய்கையுள்
மேவி 4.3.5

1041 தெள்ளு தண் புனல் கழுத்தளவு ஆயிடைச் செறிய
உள்ளுறப் புக்கு நின்று கை உச்சி மேல் குவித்துத்
தள்ளு வெண்டிரைக் கங்கை நீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் உருத்திரம் குறிப்பொடு
பயின்றார் 4.3.6

1042 அரு மறைப் பயன் ஆகிய உருத்திரம் அதனை
வரு முறைப் பெரும் பகலும் எல்லியும் வழுவாமே
திருமலர்ப் பொருட்டு இருந்தவன் அனையவர் சில
நாள்
ஒருமை உய்ந்திட உமை இடம் மகிழ்ந்தவர் உவந்தார் 4.3.7

1043 காதல் அன்பர் தம் அரும் தவப் பெருமையும் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயகர் அமர்ந்து அருள் செய்ய மற்றவர் தாம்
தீது இலா நிலைச் சிவபுரி எல்லையில் சேர்ந்தார் 4.3.8

1044 நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தனர் அவர்க்குப்
பாடு பெற்ற சீர் உருத்திர பசுபதியாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற 4.3.9

1045 அயில் கொள் முக்குடுமிப் படையார் மருங்கு
அருளால்
பயில் உருத்திர பசுபதியார் திறம் பரசி
எயில் உடைத் தில்லை எல்லையில் நாளைப்
போவாராம்
செயலுடைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை
மொழிவாம் 4.3.10

திருச்சிற்றம்பலம்

4.4 திரு நாளைப் போவர் நாயனார் புராணம் (1046- 1082)

திருச்சிற்றம்பலம்

1046 பகர்ந்துலகு சீர் போற்றும் பழை வளம் பதியாகும்
திகழ்ந்த புனற் கொள்ளிடம் பொன் செழுமணிகள்
திரைக் கரத்தால்
முகந்து தர இரு மருங்கும் முளரி மலர்க் கையேற்கும்
அகல் பணை நீர் நன்னாட்டு மேற்காநாட்டு ஆதனூர் 4.4.1

1047 நீற்றலர் பேர் ஒளி நெருங்கும் அப்பதியின் நிறை
கரும்பின்
சாற்று அலைவன் குலை வயலில் தகட்டு வரால்
எழப் பகட்டேர்
ஆற்றலவன் கொழுக் கிழித்த சால் வழி போய்
அசைந்து ஏறிச்
சேற்றலவன் கரு உயிர்க்க முருகுயிர்க்கும் செழுங்
கமலம் 4.4.2

1048 நனை மருவுஞ் சினை பொதுளி நறு விரை சூழ் செறி
தளிரில்
தினகர மண்டலம் வருடுஞ் செழுந் தருவின் குலம்
பெருகிக்
கனமருவி அசைந்து அலையக் களி வண்டு புடை
சூழப்
புனல் மழையோ மதுமழையோ பொழிவு ஒழியா
பூஞ்சோலை 4.4.3

1049 பாளை விரி மணங் கமழும் பைங்காய் வன்
குலைத்தெங்கின்
தாளதிர மிசை முட்டித் தடம் கிடங்கின் எழப்பாய்ந்த
வாளை புதையச் சொரிந்த பழமிதப்ப வண் பலவின்
நீளமுதிர் கனி கிழி தேன் நீத்தத்தில் எழுந்துகளும் 4.4.4

1050 வயல் வளமும் செயல் படு பைந் துடவையிடை
வருவளமும்
வியலிடம் எங்கணும் நிறைய மிக்க பெரும்
திருவினாம்
புயலடையும் மாடங்கள் பொலிவு எய்த
மலியுடைத்தாய்
அயலிடை வேறு அடி நெருங்கக் குடி நெருங்கி உளது
அவ்வூர் 4.4.5

1051 மற்றவ்வூர் புறம் பணையின் வயல் மருங்கு பெரும்
குலையில்
சுற்றம் விரும்பிய கிழமைத் தொழில் உழவர் கிளை
துவன்றிப்
4.4.6

பற்றிய பைங் கொடிச் சுரை மேல் படர்ந்த பழம்
கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில் பல நிறைந்து உளதோர்
புலைப்பாடி

1052 கூருகிர் மெல்லடி அலகின் குறும் பார்ப்புக் குழுச்
சுழலும்
வார் பயில் முன்றிலில் நின்ற வள்ளுகிர் நாய் துள்ளு
பறழ்
கார் இரும்பின் சரி செறிகைக் கரும் சிறார் கவர்ந்து
ஓட
ஆர் சிறு மென் குரைப்படக்கும் அரைக்கு அசைத்த
இருப்பு மணி 4.4.7

1053 வன் சிறு தோல்மிசை உழத்தி மகவு உறக்கும் நிழல்
மருதும்
தன் சினை மென் பெடையொடுங்குந் தடங்குழிசிப்
புதை நீழல்
மென் சினைய வஞ்சிகளும் விசிப் பறை தூங்கின
மாவும்
புன்றலை நாய்ப் புனிற்று முழைப் புடைத்து எங்கும்
உடைத்து எங்கும் 4.4.8

1054 செறிவலித் திண் கடைஞர் வினைச் செயல்புரிவை
கறை யாமக்
குறி அளக்க உளைக்கும் செங் குடுமி வாரணச்
சேக்கை
வெறி மலர்த் தண் சினைக் காஞ்சி விரி நீழல் மருங்கு
எல்லாம்
நெறி குழல் புன் புலை மகளிர் நெற் குறு பாட்டு ஒலி
பரக்கும் 4.4.9

1055 புள்ளும் தண் புனல் கலிக்கும் பொய்கையுடைப் புடை
எங்கும்
தள்ளும் தாள் நடை அசையத் தளை அவிழ்
பூங்குவளை மது
விள்ளும் பைங் குழல் கதிர் நெல் மிலைச்சிய புன்
புலைச்சியர்கள்
கள்ளுண்டு களி தூங்கக் கறங்கு பறையும் கலிக்கும் 4.4.10

1056 இப்படித்து ஆகிய கடைஞர் இருப்பின் வரைப்பினின்
வாழ்வார்
மெய்ப்பரிவு சிவன் கழற்கே விளைத்த உணர்வொடும்
4.4.11

வந்தார்
அப்பதியில் ஊர் புலைமை ஆன்ற தொழில் தாயத்தார்
ஒப்பிலவர் நந்தனார் என ஒருவர் உளர் ஆனார்

1057 பிறந்து உணர்வு தொடங்கிய பின் பிறைக் கண்ணிப்
பெருந்தகைபால்
சிறந்த பெரும் காதலினால் செம்மை புரி
சிந்தையராய்
மறந்தும் அயல் நினைவு இன்றி வரு பிறப்பின் வழி
வந்த
அறம் புரி கொள்கையராயே அடித்தொண்டின் நெறி
நின்றார் 4.4.12

1058 ஊரில் விடும் பறைத் துடைவை
உணவுரிமையாக்கொண்டு
சார்பில் வரும் தொழில் செய்வார் தலை நின்றார்
தொண்டினால்
கூரிலைய முக் குடுமிப் படை அண்ணல் கோயில்
தொறும்
பேரிகை முதலாய முகக் கருவி பிறவினுக்கும் 4.4.13

1059 போர்வைத் தோல் விசி வார் என்று இனையனவும்
புகலும் இசை
நேர் வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலை
வகையில்
சேர்வுற்ற தந்திரியும் தேவர் பிரான் அர்ச்சனை கட்கு
ஆர்வத்தின் உடன் கோரோசனையும் இவை அளித்து
உள்ளார் 4.4.14

1060 இவ் வகையில் தந்தொழிலின் இயன்ற வெலாம்
எவ்விடத்தும்
செய்வனவும் கோயில்களில் திரு வாயில் புறம்
நின்று
மெய் விரவு பேரன்பு மிகுதியினால் ஆடுதலும்
அவ்வியல்பில் பாடுதலுமாய் நிகழ்வார் அந்நாளில் 4.4.15

1061 திருப் புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிக நினைந்து
விருப்பினோடும் தம் பணிகள் வேண்டுவன
செய்வதற்கே
அருத்தியினால் ஒருப்பட்டு அங்கு ஆதனூர் தனில்
நின்றும்
வருத்தமுறுங் காதலினால் வந்து அவ்வூர்
மருங்கணைந்தார் 4.4.16

1062 சீர் ஏறும் இசை பாடித் திருத் தொண்டர் திரு வாயில்
நேரே கும்பிட வேண்டும் என நினைந்தார்க்கு அது
நேர்வார்
கார் ஏறும் எயில் புன் கூர்க் கண்ணுதலார் திரு முன்பு
போரேற்றை விலங்க அருள் புரிந்து அருளிப்
புலப்படுத்தார் 4.4.17

1063 சிவலோகம் உடையவர் தம் திரு வாயில் முன்னின்று
பவ லோகம் கடப்பவர் தம் பணிவிட்டுப் பணிந்து
எழுந்து
சுவலோடுவார் அலையப் போவார் பின் பொரு சூழல்
அவலோடும் அடுத்தது கண்டு ஆதரித்துக் குளம்
தொட்டார் 4.4.18

1064 வடம் கொண்ட பொன் இதழி மணி முடியார் திரு
அருளால்
தடம் கொண்ட குளத்து அளவு சமைத்து அதற்பின் தம்
பெருமான்
இடம் கொண்ட கோயில் புறம் வலம் கொண்டு
பணிந்து எழுந்து
நடம் கொண்டு விடை கொண்டு தம் பதியில்
நண்ணினார் 4.4.19

1065 இத் தன்மை ஈசர் மகிழ் பதி பலவும் சென்று இறைஞ்சி
மெய்த் திருத் தொண்டு செய்து விரவுவார் மிக்கு
எழுந்த
சித்தமொடுந் திருத் தில்லைத் திரு மன்று சென்று
இறைஞ்ச
உய்த்த பெருங் காதல் உணர்வு ஒழியாது வந்து
உதிப்ப 4.4.20

1066 அன்று இரவு கண் துயிலார் புலர்ந்து அதற்பின் அங்கு
எய்த
ஒன்றியணை தரு தன்மை உறு குலத்தோடு இசைவு
இல்லை
என்று இதுவும் எம்பெருமான் ஏவல் எனப் போக்கு
ஒழிவார்
நன்றுமெழுங் காதல் மிக நாளைப் போவேன் என்பார் 4.4.21

1067 . நாளைப் போவேன் என்று நாள்கள் செலத் தரியாது
பூளைப் பூவாம் பிறவிப் பிணிப்பு ஒழியப் போவாராய்
பாளைப் பூங்கமுகுடுத்த பழம் பதியின் நின்றும் போய்
வாளைப் போத்து எழும் பழனஞ் சூழ் தில்லை
4.4.22

மருங்கணைவார்

1068 செல்கின்ற போழ்து அந்தத் திரு எல்லை பணிந்து
எழுந்து
பல்கும் செந்தீ வளர்த்த பயில் வேள்வி எழும் புகையும்
மல்கு பெரும் இடையோதும் மடங்கள்
நெருங்கினவும் கண்டு
அல்கும் தம் குலம் நினைந்தே அஞ்சி அணைந்திலர்
நின்றார் 4.4.23

1069 நின்றவர் அங்கு எய்தற்கு அரிய பெருமையினை
நினைப்பார் முன்
சென்று இவையும் கடந்து ஊர் சூழ் எயில்
திருவாயிலைப் புக்கார்
குன்று அனைய மாளிகைகள் தொறும் குலவும்
வேதிகைகள்
ஒன்றிய மூவாயிரம் அங்கு உள என்பார் ஆகுகள் 4.4.24

1070 இப்பரிசாய் இருக்க எனக்கு எய்தல் அரிது என்று
அஞ்சி
அப்பதியின் மதில் புறத்தின் ஆராத பெருங் காதல்
ஒப்ப அரிதாய் வளர்ந்து ஓங்க உள் உருகிக் கை
தொழுதே
செப்ப அரிய திரு எல்லை வலங் கொண்டு
செல்கின்றார் 4.4.25

1071 இவ் வண்ணம் இரவு பகல் வலம் செய்து அங்கு எய்து
அரிய
அவ் வண்ணம் நினைந்து அழிந்த அடித் தொண்டர்
அயர்வு எய்தி
மை வண்ணத்து திரு மிடற்றார் மன்றில் நடம்
கும்பிடுவது
எவ் வண்ணம் என நினைந்தே ஏசறவினெடுந்
துயில்வார் 4.4.26

1072 இன்னல் தரும் இழி பிறவி இது தடை என்றே
துயில்வார்
அந் நிலைமை அம்பலத்துள் ஆடுவார் அறிந்து அருளி
மன்னு திருத் தொண்டர் அவர் வருத்தம் எல்லாம்
தீர்ப்பதற்கு
முன் அணைந்து கனவின் கண் முறுவலோடும் அருள்
செய்வார் 4.4.27

1073 இப் பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி
முப்புரி நூல் மார்பர் உடன் முன் அணைவாய் என்ன
மொழிந்து
அப் பரிசே தில்லை வாய் அந்தணர்க்கும் எரி அமைக்க
மெய்ப் பொருள் ஆனார் அருளி அம்பலத்தே
மேவினார் 4.4.28

1074 தம் பெருமான் பணி கேட்ட தவ மறையோர்
எல்லாரும்
அம்பலவர் திருவாயின் முன்பு அச்சமுடன் ஈண்டி
எம்பெருமான் அருள் செய்த பணி செய்வோம் என்று
ஏத்தித்
தம் பரிவு பெருக வரும் திருத் தொண்டர் பால்
சார்ந்தார் 4.4.29

1075 ஐயரே அம்பலவர் அருளால் இப் பொழுது
அணைந்தோம்
வெய்ய அழல் அமைத்து உமக்குத் தர வேண்டி என
விளம்ப
நையும் மனத் திருத் தொண்டர் நான் உய்ந்தேன் எனத்
தொழுதார்
தெய்வ மறை முனிவர்களும் தீ அமைத்த படி
மொழிந்தார் 4.4.30

1076 மறையவர்கள் மொழிந்து அதன் பின் தென் திசையின்
மதில் புறத்துப்
பிறை உரிஞ்சும் திருவாயில் முன்பாக பிஞ்ஞகர் தம்
நிறை அருளால் மறையவர்கள் நெருப்பு அமைத்த
குழி எய்தி
இறையவர் தாள் மனம் கொண்டே எரி சூழ வலம்
கொண்டார் 4.4.31

1077 கை தொழுது நடமாடுங் கழலுன்னி அழல் புக்கார்
எய்திய அப் பொழுதின் கண் எரியின் கண் இம்மாயப்
பொய் தகையும் உருவொழித்துப் புண்ணிய மா முனி
வடிவாய்
மெய் திகழ் வெண்ணூல் விளங்க வேணி முடி
கொண்டு எழுந்தார் 4.4.32

1078 செந்தீ மேல் எழும் பொழுது செம்மலர் மேல் வந்து
எழுந்த
அந்தணன் போல் தோன்றினார் அந்தரத்து துந்துபி
நாதம்

4.4.33

வந்து எழுந்தது இரு விசும்பில் வானவர்கள் மகிழ்ந்து
ஆர்த்துப்
பைந்துணர் மந்தாரத்தின் பனி மலர்மாரிகள்
பொழிந்தார்

1079 திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கை
தொழுதார்
பரவரிய தொண்டர்களும் பணிந்து மனம் களிப்
பயின்றார்
அருமறை சூழ் திரு மன்றில் ஆடுகின்ற கழல் வணங்க
வருகின்றார் திரு நாளைப் போவாராம் மறை
முனிவர் 4.4.34

1080 தில்லை வாழ் அந்தணரும் உடன் செல்லச் சென்று
எய்தி
ஒல்லை மான் மறிக் கரத்தார் கோபுரத்தைத் தொழுது
இறைஞ்சி
ஒல்லை போய் உட்புகுந்தார் உலகு உய்ய நடம் ஆடும்
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர் களும்
கண்டிலரால் 4.4.35

1081 அந்தணர்கள் அதிசயத்தார் அருமுனிவர் துதி
செய்தார்
வந்தணைந்த திருத் தொண்டர் தம்மை வினை மாசு
அறுத்து
சுந்தரத் தாமரை புரையும் துணை அடிகள் தொழுது
இருக்க
அந்தம் இலா ஆனந்தப் பெரும் கூத்தர் அருள் புரிந்தார் 4.4.36

1082 மாசு உடம்பு விடத் தீயின் மஞ்சனம் செய்து அருளி
எழுந்து
ஆசில் மறை முனியாகி அம்பலவர் தாள் அடைந்தார்
தேசுடைய கழல் வாழ்த்தித் திருக் குறிப்புத்
தொண்டவிளைப்
பாசம் உற முயன்றவர்தம் திருத் தொண்டின் பரிசு
உரைப்பாம் 4.4.37

திருச்சிற்றம்பலம்

4.5 திருக் குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் (1083 - 1210)

திருச்சிற்றம்பலம்

1083 ஏயுமாறு பல் உயிர்களுக்கு எல்லையில் கருணைத்
தாய் ஆனாள் தனி ஆயின தலைவரைத் தழுவ
ஆயு நான்மறை போற்ற நின்று அரும் தவம் புரியத்
தூய மாதவம் செய்தது தொண்டை நல் நாடு 4.5.1

1084. நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமை சால் பெருங்குடி தழைப்ப
வன்மை ஓங்கு எயில் வளம் பதி பயின்றது வரம்பின்
தொன்மை மேன்மையில் நிகழ் பெரும் தொண்டை
நல் நாடு 4.5.2

1085. நற்றிறம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவை
வந்து
உற்ற போது தம் உயிரையும் வணிகனுக்கு ஒரு கால்
சொற்ற மெய்ம்மையும் தூக்கி அச் சொல்லையே
காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெரும் தொண்டை
நாடு 4.5.3

1086. ஆணையாம் என நீறு கண்டு அடிச்சேரன் என்னும்
சேண் உலாவு சீர்ச் சேரனார் திருமலை நாட்டு
வாண் நிலாவு பூண் வயவர்கள் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெரும் தொண்டை நாடு 4.5.4

1087. கறை விளங்கிய கண்டர் பாற் காதல் செய் முறைமை
நிறை புரிந்திட நேர் இழை அறம் புரிந்த அதனால்
பிறை உரிஞ்சு எயில் பதியில் பெரும் தொண்டை
நாட்டு
முறைமையாம் என உலகினில் மிகு மொழி
உடைத்தால் 4.5.5

1088. தாவில் செம்மணி அருவியாறு இழிவன சாரல்
பூவில் வண்டு இனம் புது நறவு அருந்துவ புறவம்
வாவி நீள் கயல் வரம்பு இற உகைப்பன மருதம்
நீவி நித்திலம் பரத்தியர் உணக்குவ நெய்தல் 4.5.6

1089. குறவர் பல் மணி அரித்து இதை விதைப்பன குறிஞ்சி
கறவை ஆன் நிரை மான் உடன் பயில்வன கானம்
பறவை தாமரை இருந்து இற வருந்துவ பழனம்
சுறவ முள் மருப்பு அணங்கு அயர்வன கழிச் சூழல் 4.5.7

1090. கொண்டல் வானத்தின் மணி சொரிவன குல
வரைப்பால்

4.5.8

தண்டு உணர்க் கொன்றை பொன் சொரி தள
வயற்பால்
வண்டல் முத்த நீர் மண்டு கால் சொரிவன வயற்பால்
கண்டல் முன் துறைக் கரி சொரி வனகலங் கடற்பால்

1091. தேன் நிறைந்த செந்தினை இடி தரு மலைச் சீறூர்
பால் நிறைந்த புல் பதத்தன முல்லை நீள் பாடி
தூ நெல் அன்னம் நெய் கன்னலின் கனிய தண்
துறையூர்
மீன் நிறைந்த பேர் உணவின வேலை வைப்பு
இடங்கள் 4.5.9

1092. குழல் செய் வண்டு இனம் குறிஞ்சி யாழ் முரல்வன
குறிஞ்சி
முழவு கார் கொள முல்லைகள் முகைப்பன முல்லை
மழலை மென் கிளி மருதமர் சேக்கைய மருதம்
நிழல் செய் கைதை சூழ் நெய்தலங் கழியன நெய்தல் 4.5.10

1093. மல்கும் அப்பெரு நிலங்களில் வரை புணர் குறிஞ்சி
எல்லை எங்கணும் இறவுளர் ஏனல் முன் விளைக்கும்
பல் பெரும் புனம் பயில்வன படர் சிறைத் தோகை
சொல்லும் அப்புனங் காப்பவும் சுரி குழல் தோகை 4.5.11

1094. அங்கண் வான்மிசை அரம்பையர் கரும் குழல் சுரும்பு
பொங்கு பூண்முலைக் கொடிச்சியர் குழல் மூழ்கிப்
போகாச்
செம் கண் மால் விடையார் திருக்காளத்தி என்னும்
மங்குல் சூழ் வரை நிலவிய வாழ்வினால் மல்கும் 4.5.12

1095. பேறு வேறுசூழ் இமையவர் அரம்பையர் பிறந்து
மாறில் வேடரும் மாதரும் ஆகவே வணங்கும்
ஆறுசூழ் சடை அண்ணலார் திரு விடைச் சுரமும்
கூறு மேன்மையின் மிக்க தம் நாட்டு வண் குறிஞ்சி 4.5.13

1096 அம்பொன் வார் குழல் கொடிச்சியர் உடன் அர மகளிர்
வம்புலா மலர்ச் சுனை படிந்து ஆடு நீள் வரைப்பின்
உம்பர் நாயகர் திருக் கழுக் குன்றமும் உடைத்தால்
கொம்பர் வண்டு சூழ் குறிஞ்சி செய் தவங்குறை
உளதோ? 4.5.14

1097. கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்த
சில்லிடங்கள்
நீல வாள் படை நீல கோட்டங்களும் நிரந்து
கால வேனிலில் கடும் பகல் பொழுதினைப் பற்றிப்
பாலையும் சொலல் ஆவன உள பரல் முரம்பு 4.5.15

1098. சொல்லும் எல்லையின் புறத்தன துணர்ச் சுரும்பு
அலைக்கும்
பல் பெரும் புனல் கானியாறிடை இடை பரந்து
கொல்லை மெல் இணர்க் குருந்தின் மேற் படர்ந்த
பூம்பந்தர்
முல்லை மென் புதல் முயல் உகைத்து தடங்கு நீள்
முல்லை 4.5.16

1099. பிளவு கொண்ட தண் மதி நுதல் பேதையர் எயிற்றைக்
களவு கொண்டது அளவு எனக் களவலர் தூற்றும்
அளவு கண்டவர் குழல் நிறம் கனியும் அக் களவைத்
தளவு கண்டு எதிர் சிரிப்பன தமக்கும் உண்டு என்று 4.5.17

1100. மங்கையர்க்கு வாள் விழியிணை தோற்ற மான்
குலங்கள்
எங்கும் மற்றவர் இடைக்கு இடை மலர்க் கொடி
எங்கும்
அங்கண் முல்லையின் தெய்வம் என்று அருந் தமிழ்
உரைக்கும்
செங்கண் மால் தொழும் சிவன் மகிழ் திரு முல்லை
வாயில் 4.5.18

1101. நீறு சேர் திரு மேனியர் நிலாத் திகழ் முடிமேல்
மாறில் கங்கை தான் அவர்க்கு மஞ்சனந்தர
அணைந்தே
ஊறு நீர் தரும் ஒளி மலர்க் கலிகை மா நகரை
வேறு தன் பெரு வைப்பு என விளங்கு மாமுல்லை 4.5.19

1102. வாச மென் மலர் மல்கிய முல்லை சூழ் மருதம்
வீசு தெண்டிரை நதி பல மிக்கு உயர்ந்து ஓடி
பாசடைத் தடந் தாமரைப் பழனங்கள் மருங்கும்
பூசல் வன் கரைக் குளங்களும் ஏரியும் புகுவ 4.5.20

1103. துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரி பால்
பொங்கும் தீர்த்தமாய் நந்தி மால் வரை மிசைப்
போந்தே
அங்கண் நித்திலம் சந்தனம் அகிலொடு மணிகள்
பங்கயத் தடம் நிறைப்ப வந்து இழிவது பாலி 4.5.21

1104. பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்
போல்
மள்ளர் வேனிலின் மணல் திடர் பிசைந்து கை வருட
வெள்ள நீர் இரு மருங்கு கால் வழி மிதந்து ஏறிப்
பள்ள நீள் வயல் பருமடை உடைப்பது பாலி 4.5.22

1105. அனையவாகிய நதி பரந்து அகன் பணை மருங்கில்
கனை நெடும் புனல் நிறைந்து திண் கரைப்
பெருங்குளங்கள்
புனை இருங்கடி மதகுவாய் திறந்திடப் புறம் போய்
வினைஞர் ஆர்ப்பொலி எடுப்ப நீர் வழங்குவ
வியன்கால் 4.5.23

1106. மாறில் வண் பகட்டேர் பல நெருங்கிட வயல்கள்
சேறு செய்பவர் செந்நெலின் வெண் முளை சிதறி
நாறு வார்ப்பவர் பறிப்பவர் நடுபவர் ஆன
வேறு பல் வினை உடைப் பெரும் கம்பலை மிகுமால் 4.5.24

1107. வரும் புனல் பெரும் கால்களை மறித்திட வாளை
பெருங்குலைப்பட விலங்குவ பிறங்கு நீர்ப் பழனம்
நெருங்கு சேற்குலம் உயர்த்துவ நீள் கரைப் படுத்துச்
சுருங்கை நீர் வழக்கு அறுப்பன பரு வரால் தொகுதி 4.5.25

1108. தளைத்த தடம் பணை எழுந்த செந்தாமரைத் தவிசின்
இளைத்த சூல் வளை கண் படுப்பன இடை எங்கும்
விளைத்த பாசொளி விளங்கு நீள் விசும்படை ஊர்
கோள்
வளைந்த மா மதி போன்று உள மருத நீர் வைப்பு 4.5.26

1109. ஓங்கு செந்நெலின் புடையன உயர் கழைக் கரும்பு
பூங்கரும்பு அயல் மிடைவன பூகம் அப்பூகப்
பாங்கு நீள் குலைத் தெங்கு பைங்கதலி வண் பலவு
தூங்கு தீங்கனிச் சூத நீள் வேலிய சோலை 4.5.27

1110. நீடு தண் பணை உடுத்த நீள் மருங்கின நெல்லின்
கூடு துன்றிய இருக்கைய விருந்து எதிர் கொள்ளும்
பீடு தங்கிய பெருங் குடி மனை அறம் பிறங்கும்
மாடம் ஓங்கிய மறுகின மல்லல் மூதூர்கள் 4.5.28

1111 தொல்லை நான்மறை முதல் பெரும் கலையொலி
துவன்றி
இல்லறம் புரிந்து ஆகுதி வேள்வியில் எழுந்த
மல்கு தண் புகை மழை தரும் முகில் குலம் பரப்பும்
செல்வம் ஓங்கிய திருமறையவர் செழும் பதிகள் 4.5.29

1112 தீது நீங்கிடத் தீக் கலியாம் அவுணற்கு
நதார் தாம் அருள் புரிந்தது நல்வினைப் பயன் செய்
மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம்
பூதி சாதனம் போற்றிய பொற்பினால் விளங்கும் 4.5.30

1113. அருவி தந்த செம் மணிகளும் புறவில் ஆய் மலரும்
பருவி ஓடைகள் நிறைந்திழி பாலியின் கரையின் 4.5.31

மருவு கங்கை வாழ் சடையவர் மகிழ்ந்த மாற் பேறாம்
பொருவில் கோயிலும் சூழ்ந்தப் பூம்பணை மருதம்

1114. விரும்பு மேன்மையென் பகர்வது விரி திரை நதிகள்
அருங்கரைப் பயில் சிவாலயம் அனேகமும்
அணைந்து
பருங்கை யானையை உரித்தவர் இருந்த அப் பாசூர்
மருங்கு சூழ் தவம் புரிந்தது அன்றோ மற்ற மருதம் 4.5.32

1115 . பூ மரும் புனல் வயல் களம் பாடிய பொருநர்
தாமருங் கிளையுடன் தட மென் மலர் மிலைந்து
மா மருங்கு தண்ணீழலின் மருத யாழ் முரலும்
காமர் தண் பணைப் புறத்தது கருங்கழி நெய்தல் 4.5.33

1116 . தூய வெண் துறைப் பரதவர் தொடுப்பன வலைகள்
சேய நீள் விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி
ஆய பேர் அளத் தளவர்கள் அளப்பன உப்பு
சாயன் மெல்லிடை அளத்தியர் அளப்பன தரளம் 4.5.34

1117 .கொடு வினைத் தொழில் நுளையர்கள் கொடுப்பன
கொழுமீன்
படு மணற் கரை நுளைச்சியர் கொடுப்பன பவளம்
தொடு கடல் சங்கு துறையவர் குளிப்பன அவர் தம்
வடு வகிர்க் கண்மங்கையர் குளிப்பன மணற்கேணி 4.5.35

1118 .கழிப் புனல் கடல் ஓதமுன் சூழ்ந்து கொண்டு அணிய
வழிக் கரைப் பொதி பொன்னவிழ்ப்பன மலர்ப் புன்னை
விழிக்கு நெய்தலின் விரை மலர்க் கட்சுரும்பு
உண்ணக்
கழிக்கரைப் பொதி சோறு அவிழ்ப்பன மடற்கைதை 4.5.36

1119 . காயல் வண் கரைப் புரை நெறி அடைப்பன கனி முட்
சேய தண்ணறுஞ் செழுமுகை செறியும்
முண்டகங்கள்
ஆய நுண் மணல் வெண்மையை மறைப்பன அன்னம்
தாய முன்றுறைச் சூழல் சூழ் ஞாழலின் தாது 4.5.37

1120 . வாம் பெருந் திரைவளாக முன் குடி பயில்
வரைப்பில்
தாம் பரப்பிய கயல்களின் விழிக் கயல் தவிரக்
காம்பி நேர் வருந் தோளியர் கழிக் கயல் விலை செய்
தேம் பொதிந்த சின் மழலை மென் மொழிய செவ்வழி
யாழ் 4.5.38

1121 .மருட்கொடுந் தொழில் மன்னவன் இறக்கிய வரியை
நெருக்கி முன் திருவொற்றியூர் நீங்க என்று எழுதும் 4.5.39

ஒருத்தர் தம் பெரும் கோயிலின் ஒரு புறம் சூழ்ந்த
திருப் பரப்பையும் உடைய அத் திரைக் கடல் வரைப்பு

1122 .மெய் தரும் புகழ்த் திரு மயிலா புரி விரை சூழ்
மொய் தயங்கு தண் பொழில் திருவான்மியூர்
முதலாப்
பை தரும் பணி அணிந்தவர் பதி எனைப் பலவால்
நெய்தல் எய்த முன் செய்த அம் நிறை தவம் சிறிதோ 4.5.40

1123 . கோடு கொண்டு எழும் திரைக் கடல் பவள மென்
கொழுந்து
மாடு மொய் வரைச் சந்தனச் சினை மிசை வளரும்
நீடு நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்
ஆடு நீள் கொடி மாட மா மல்லையே அனைய 4.5.41

1124 .மலை விழிப்பன என வயல் சேல் வரைப் பாறைத்
தலையுகைப்பவும் தளைச் செறு விடை நெடுங்
கருமான்
குதிப்பன கரும் பகட்டோர் நிகர்ப்பவுமாய்
அலை புனல் பணை குறிஞ்சியோடு அனைவன
அனேகம் 4.5.42

1125 .புணர்ந்த ஆனிரை புற விடைக் குறு முயல்
பொருப்பின்
அணைந்த வான் மதி முயலினை இனம் என
அணைந்து
மணங்கொள் கொல்லையில் வரகு போர் மஞ்சனம்
வரைக்கார்
இணைந்து முல்லையும் குறிஞ்சியும் கலப்பன
எங்கும் 4.5.43

1126 .கவரும் மீன் குவை கழியவர் கானவர்க்கு அளித்து
சிவலும் சேவலும் மாறியும் சிறு கழிச்சியர்கள்
அவரை ஏனலுக்கு எயிற்றியர் பவள முத்து அளந்தும்
உவரி நெய்தலும் கானமும் கலந்துள ஒழுக்கம் 4.5.44

1127 .அயல் நறும் புறவினில் இடைச்சியர் அணி நடையும்
வியன் நெடும் பணை உழத்தியர் சாயலும் விரும்பி
இயலும் அன்னமும் தோகையும் எதிர் எதிர் பயில
வயலும் முல்லையும் இயைவன பலவுள மருங்கு 4.5.40

1128 .மீளும் ஓதமுன் கொழித்த வெண் தரளமும் கமுகின்
பாளை உக்கவும் விரவலில் பரத்தியர் பணை மென்
தோளும் உழத்தியர் மகளிர் மாறாடி முன் தொகுக்கும்
நீளும் நெய்தலும் மருதமும் கலந்துள நிலங்கள் 4.5.46

1129 .ஆய நானிலத்து அமைதியில் தத்தமக்கு அடுத்த
மேய செய் தொழில் வேறு பல் குலங்களின் விளங்கித்
தீய என்பன கனவிலும் நினைவு இலாச் சிந்தைத்
தூய மாந்தர் வாழ் தொண்டை நாட்டு இயல்பு சொல்
வரைத்ததோ? 4.5.47

1130 . இவ் வளம் தரு பெரும் திருநாட்டிடை என்றும்
மெய் வளந் தரு சிறப்பினால் உலகெலாம் வியப்ப
எவ்வுகங்களும் உள்ளது என்று யாவரும் ஏத்தும்
கை விளங்கிய நிலையது காஞ்சி மா நகரம் 4.5.48

1131 .ஆன தொல் நகர் அம்பிகை தம் பெருமானை
மான அர்ச்சனை யால் ஒரு காலத்து வழிபட்டு
ஊனமில் அறம் அனேகமும் உலகுய்ய வைத்த
மேன்மை பூண்ட அப் பெருமையை அறிந்தவா
விளம்பில் 4.5.49

1132 .வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்று இருந்து
அருளித்
துள்ளு வார் புனல் வேணியர் அருள் செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறன் எலாம் தெரிய
உள்ளவாறு கேட்டு அருளினான் உலகை
ஆளுடையாள் 4.5.50

1133 . எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம்
விரும்பும்
உண்மை ஆவது பூசனை என உரைத்து அருள
அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவள் ஆயின பெருந் தவக் கொழுந்து 4.5.51

1134 . நங்கை உள் நிறை காதலை
நோக்கி நாயகன் திரு உள்ளத்து மகிழ்ந்தே
அங்கண் எய்திய முறுவலும் தோன்ற அடுத்தது
என் கொல் நின் பால் என வினவ
இங்கு நாத நீ மொழிந்த ஆகமத்தின்
இயல்பினால் உனை அர்ச்சனை புரியப்
பொங்குகின்றது என் ஆசை என்று இறைஞ்சி
போகமார்த்த பூண் முலையினாள் போற்ற 4.5.52

1135 . தேவ தேவனும் அது திருவுள்ளஞ்
செய்து தென் திசை மிக்க செய் தவத்தால்
யாவரும் தனை அடைவது மண் மேல்
என்றும் உள்ளது காஞ்சி மற்று அதனுள்
மா அமர்ந்த நம் இருக்கையில் அணைந்து
4.5.53

மன்னு பூசனை மகிழ்ந்து செய்வாய் என்று
ஏவ எம் பெருமாட்டியும் பிரியா இசைவு
கொண்டு எழுந்து அருளுதற்கு இசைந்தாள்

1136 . ஏதமில் பலயோனி எண் பத்து
நான்கு நூறு ஆயிரத்து அதனுள்
பேதமும் புரந்து அருளும் அக் கருணைப்
பிரான் மொழிந்த ஆகம வழி பேணிப்
போது நீர்மையில் தொழுதனள் போதப்
பொருப்பில் வேந்தனும் விருப்பில் வந்து எய்தி
மா தவம் புரிந்து அருளுதற்கு அமைந்த
வளத்தொடும் பரிசனங்களை விடுத்தான் 4.5.54

1137 . துன்னு பல்லுயிர் வானவர் முதலாச்
சூழ்ந்து உடன் செலக் காஞ்சியில் அணையத்
தன்னை நேர் வரும் பதும மா நாகம் தம்பிராட்டி
தாள் தலைமிசை வைத்தே
அன்னையாய் உலகு அனைத்தையும்
ஈன்றாய் அடியனேன் உறை பிலம் அதன்
இடையே
மன்னு கோயில் கொண்டு அருளுவாய்
என்ன மலை மடந்தை மற்று அதற்கு அருள்
புரிந்து 4.5.55

1138 . அங்கு மண் உலகத்து உயிர் தழைப்ப
அளவில் இன்பத்தின் அருட் கரு விருத்தித்
திங்கள் தங்கிய புரி சடையார்க்குத்
திருந்து பூசனை விரும்பினள் செய்ய
எங்கும் நாடவும் திரு விளையாட்டால்
ஏக மா முதல் எதிர்ப்படாது ஒழியப்
பொங்கு மா தவம் செய்து காண்பதற்கே
புரிவு செய்தனள் பொன் மலை வல்லி 4.5.56

1139 . நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி
நிரந்தரம் திரு வாக்கினில் நிகழ்வது
அஞ்செழுத்துமே ஆக ஆளுடைய
அம்மை செம்மலர்க் கை குவித்து அருளித்
தஞ்சம் ஆகிய அரும் தவம் புரியத்
தரிப்பரே அவள் தனிப் பெருங் கணவர்
வஞ்சம் நீக்கிய மாவின் மூலத்தில்
வந்து தோன்றினார் மலை மகள் காண 4.5.57

1140 . கண்ட போதில் அப்பெரும் தவப்
பயனாம் கம்பம் மேவிய தம் பெருமானை
வண்டு உலாங் குழல் கற்றை முன் தாழ
வணங்கி வந்து எழும் ஆசை முன் பொங்கக்
கொண்ட காதலின் விருப்பளவு இன்றிக்
குறித்த பூசனை கொள்கை மேற் கொண்டு
தொண்டையங்கனி வாய் உமை நங்கை
தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாள் 4.5.58

1141 . உம்பர் நாயகர் பூசனைக்கு அவர் தாம்
உரைத்த ஆகமத்து உண்மையே தலை நின்று
எம் பிராட்டி அர்ச்சனை புரிவதனுக்கு
இயல்பில் வாழ் திருச் சேடியரான
கொம்பனார்கள் பூம் பிடகை கொண்டு
அணையக் குலவு மென் தளிர் அடி இணை
ஒதுங்கி
அம்பிகாவன மாந்திருவனத்தில் ஆன
தூ நறும் புது மலர் கொய்தாள் 4.5.59

1142 . கொய்த பன்மலர் கம்பை மா நதியில்
குலவு மஞ்சனம் நிலவு மெய்ப் பூச
நெய் தரும் கொழும் தூப தீபங்கள்
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்
மெய் தரும்படி வேண்டின எல்லாம்
வேண்டும் போதினில் உதவ மெய்ப் பூச
எய்த ஆகம விதி எலாம் செய்தாள்
உயிர்கள் யாவையும் ஈன்ற எம் பிராட்டி 4.5.60

1143 . கரந்தரும் பயன் இது என உணர்ந்து
கம்பம் மேவிய உம்பர் நாயகர்பால்
நிரந்த காதல் செய் உள்ளத்தளாகி நீடு
நன்மைகள் யாவையும் பெருக
வரம் தரும் பொருளாம் மலை வல்லி
மாறிலா வகை மலர்ந்த பேர் அன்பால்
சிரம் பணிந்து எழு பூசை நாள் தோறும்
திரு உளம் கொளப் பெருகியது அன்றே 4.5.61

1144 . நாதரும் பெரு விருப்பொடு நயந்து
நங்கை அர்ச்சனை செய்யும் அப்பொழுதில்
காதல் மிக்கவோர் திரு விளையாட்டில்
கனங்குழைக்கு அருள் புரிந்திட வேண்டி
ஓத மார் கடல் ஏழும் ஒன்று ஆகி ஓங்கி
வானமும் உட்படப் பரந்து 4.5.62

மீது செல்வது போல் வரக் கம்பை
வெள்ளம் ஆம் திரு உள்ளமும் செய்தார்

1145 . அண்ணலார் அருள் வெள்ளத்தை
நோக்கி அம் கயல் கண்ணி தம் பெருமான் மேல்
விண் எலாம் கொள வரும் பெரு வெள்ளம்
மீது வந்துறும் என வெருக் கொண்டே
உண்ணிலாவிய பதைப்புறு காதலுடன்
திருக் கையால் தடுத்தும் நில்லாமை
தண்ணிலா மலர் வேணியினாரைத்
தழுவி கொண்டனள் தன்னையே ஒப்பாள் 4.5.63

1146 . மலைக் குலக் கொடி பரிவுறு பயத்தால்
மாவின் மேவிய தேவ நாயகரை
முலைக்குவட்டொடு வளைக் கையால்
நெருக்கி முறுகு காதலால் இறுகிடத் தழுவச்
சிலைத் தனித் திருநுதல் திரு முலைக்கும்
செந் தளிர்க் கரங்களுக்கும் மெத்தெனவே
கொலைக் களிற்றுரி புனைந்த தம் மேனி
குழைந்து காட்டினார் விழைந்த கொள்கையினார் 4.5.64

1147 . கம்பர் காதலி தழுவ மெய் குழைய
கண்டு நிற்பவும் சரிப்பவும் ஆன
உம்பரே முதல் யோனிகள் எல்லாம்
உயிரும் யாக்கையும் உருகி ஒன்றாகி
எம் பிராட்டிக்கு மெல்லியர் ஆனார்
என்றும் ஏகம்பர் என்று எடுத்து ஏத்த
வம்புலா மலர் நிறைய விண் பொழியக்
கம்பையாறு முன் வணங்கியது அன்றே 4.5.65

1148 . பூதியாகிய புனித நீர் ஆடிப் பொங்கு
கங்கை தோய் முடிச் சடை புனைந்து
காதில் வெண் குழை கண்டிகை தாழக்
கலந்த யோகத்தின் மருவிய கருத்தால்
ஆதி தேவனாராயுமாதவஞ் செய் அவ்
வரங்கொலோ அகிலம் ஈன்று அளித்த
மாது மெய்ப் பயன் கொடுப்பவே கொண்டு
வளைத் தழும்புடன் முலைச் சுவடு அணிந்தார் 4.5.66

1149 . கோதிலா அமுது அனையவள் முலைக்
குழைந்த தம் மணவாள நல் கோலம்
மாது வாழவே காட்டி முன் நின்று வரங்கள்
வேண்டுவ கொள்க என்று அருள

4.5.67

வேத காரணராய ஏகம்பர் விரை மலர்ச்
செய்ய தாமரை கழல் கீழ்
ஏதம் நீங்கிய பூசனை முடிந்த தின்மை
தான் அறிவிப்பதற்கு இறைஞ்சி

1150 . அண்டர் நாயகர் எதிர் நின்று கூறும்
அளவினால் அஞ்சி அஞ்சலி கூப்பிக்
கொண்ட இற்றை என் பூசனை இன்னும்
குறை நிரம்பிடக் கொள்க என்று அருள
வண்டு வார் குழல் மலை மகள் கமல வதனம்
நோக்கி அம்மலர்க் கண் நெற்றியின் மேல்
முண்ட நீற்றர் நின் பூசனை என்றும்
முடிவதில்லை நம் பால் என மொழிய 4.5.68

1151 . மாறிலாத இப் பூசனை என்றும் மன்ன
எம்பிரான் மகிழ்ந்து கொண்டு அருளி
ஈறிலாத இப்பதியினுள் எல்லா அறமும்
யான் செய அருள் செய வேண்டும்
வேறு செய் வினை திருவடிப் பிழைத்தல்
ஒழிய இங்கு உளார் வேண்டின செயினும்
பேறு மாதவப் பயன் கொடுத்து அருளப்
பெறவும் வேண்டும் என்றனள் பிறப்பு ஒழிப்பாள் 4.5.69

1152 . விடையின் மேலவர் மலைமகள் வேண்ட
விரும்பு பூசனை மேவி வீற்று இருந்தே
இடையறா அறம் வளர்க்கும் வித்தாக
இக பர திரு நாழி நெல் அளித்துக்
கடையர் ஆகியும் உயர்ந்தவர் ஆகியும்
காஞ்சி வாழ்பவர் தாம் செய் தீவினையும்
தடைபடாது மெய்ந் நெறி அடைவதற்காம்
தவங்களாகவும் உவந்து அருள் செய்தார் 4.5.70

1153 . எண்ண அரும் பெரும் வரங்கள் முன்
பெற்ற அங்கு எம் பிராட்டி தம்பிரான் மகிழ்ந்து
அருள
மண்ணின் மேல் வழிபாடு செய்து அருளி
மனை அறம் பெருக்கும் கருணையினால்
நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலின் நீடிய வாழ்க்கைப்
புண்ணிய திருக் காம கோட்டத்துப்
பொலிய முப்பதோடு இரண்டு அறம் புரக்கும் 4.5.71

1154 . அலகில் நீள் தவத்து அறப் பெரும்
செல்வி அண்டமாம் திரு மனைக்கு இடும் தீபம்
உலகில் வந்து உறு பயன் அறிவிக்க
ஓங்கும் நாள் மலர் மூன்றுடன் ஒன்று
நிலவ ஆண்டினுக்கு ஒரு முறை செய்யும்
நீடு தொன்மையால் நிறந்த பேர் உலகம்
மலர் பெரும் திருக் காம கோட்டத்து
வைத்த நல்லறம் மன்னவே மன்னும் 4.5.72

1155 . தீங்கு தீர்க்கும் நல் தீர்த்தங்கள் போற்றும்
சிறப்பினால் திருக் காமக் கோட்டத்தின்
பாங்கு மூன்றுலகத்தில் உள்ளோரும்
பரவு தீர்த்தமாம் பைம் புனற்கேணி
வாங்கு தெண் திரை வேல்கை மேகலை
சூழ் வையகம் தனக்கு எய்திய படியாய்
ஓங்கு தன் வடிவாய் நிகழ்ந்து என்றும்
உள்ளது ஒன்று உலகாணி என்று உளதால் 4.5.73

1156 . அந்தம் இன்றி நல் அறம் புரிந்து
அளிக்கும் அன்னை தன் திருக் காமக்
கோட்டத்தில்
வந்து சந்திர சூரியர் மீது வழிக் கொள்ளாத
தன் மருங்கு போலினால்
சந்த மாதிர மயங்கி எம் மருங்கும்
சாயை மாறிய தன் திசை மயக்கும்
இந்த மாநிலத்தவர் எலாம் காண என்றும்
உள்ளது ஒன்று இன்றும் அங்கு உளதால் 4.5.74

1157 . கன்னி நன்னெடுங் காப்புடை வரைப்பில்
காஞ்சியாம் திரு நதிக் கரை மருங்கு
சென்னியிற் பிறை அணிந்தவர் விரும்பும்
திருப் பெரும் பெயர் இருக்கையில் திகழ்ந்து
மன்னு வெங் கதிர் மீது எழும் போதும்
மறித்து மேற் கடல் தலை விழும் போதும்
தன்னிழல் பிரியாத வண் காஞ்சித் தானம்
மேவிய மேன்மையும் உடைத்தால் 4.5.75

1158 . மறைகளால் துதித்து அரும் தவம் புரிந்து
மாறுறிலா நியமம் தலை நின்று
முறைமையால் வரும் பூசனை செய்ய
முனிவர் வானவர் முதல் உயிர் எல்லாம்
நிறையும் அன்பினால் அர்ச்சனை செய்ய நீடு
ஆகமங்கள் அவர் அவர்க்கு அருளி 4.5.76

இறைவர் தாம் மகிழ்ந்து அருளிய பதிகள்
எண்ணிறந்த அத் திரு நகர் எல்லை

1159 . மன்னு கின்ற அத் திருநகர் வரைப் பின்
மண்ணில் மிக்கதோர் நன்மை யினாலே
துன்னும் யானையைத் தூற்றில் வாழ் முயல்
முன் துரக்க எய்திய தொலைவு இல்
ஊக்கத்தால்
தன்னிலத்து நின்று அகற்றுதல் செய்யும்
தானம் அன்றியும் தனு எழும் தரணி
எந் நிலைத்தினும் காண்பரும் இறவாத்
தானம் என்று இவை இயல்பினில் உடைத்தால் 4.5.77

1160 . ஈண்டு தீவினை யாவையும் நீக்கி
இன்பமே தரும் புண்ணிய தீர்த்தம்
வேண்டினார் தமக்கு இட்ட சித்தியதாய்
விளங்கு தீர்த்தம் நன் மங்கல தீர்த்தம்
நீண்ட காப்புடைத் தீர்த்தம் மூன்று உலகில்
நிகழ்ந்த சாருவ தீர்த்தமு முதலா
ஆண்டு நீடிய தீர்த்தம் எண்ணிலவும் அமரர்
நாட்டவர் ஆடுதல் ஒழியார் 4.5.78

1161 . தாளது ஒன்றினில் மூன்று பூ மலரும்
தமனியச் செழும் தாமரைத் தடமும்
நீள வார் புனல் குடதிசை ஓடி நீர்
கரக்கு மா நதியுடன் நீடு
நாள் அலர்ந்து செங்குவளை பைங் கமலம்
நண்பகல் பகல் தரும் பாடலம் அன்றிக்
காள மேகம் ஒப்பாள் உறை வரைப்பில்
கண் படாத காயாப் புளி உளதால் 4.5.79

1162 . சாயை முன் பிணிக்கும் கிணறு
ஒன்று தஞ்சம் உண்ணின் நஞ்சாந்தடம் ஒன்று
மாயை இன்றி வந்துள்ளடைந்தார்கள்
வானரத்து உருவாம் பிலம் ஒன்று
மேய அவ்வுரு நீங்கிடக் குளிக்கும்
விளங்க பொய்கையும் ஒன்று விண்ணவரோடு
ஆய இன்பம் உய்க்கும் பிலம் ஒன்றோடு
அனைய ஆகிய அதிசயம் பலவால் 4.5.80

1163 . அஞ்சு வான் கரத்தாறு இழி மதத்தோர்
ஆனை நிற்கவும் அரை இருள் திரியும்
மஞ்சு நீள்வது போலும் மா மேனி மலர்ப்
4.5.81

பதங்களில் வண் சிலம்பு ஒலிப்ப
நஞ்சு பில்க எயிற்று அரவ வெற்றுத் தரையின்
நாம மூன்றிலை படை உடைப் பிள்ளை
எஞ்சல் இன்றி முன் திரியவும் குன்றம்
எறிந்த வேலவன் காக்கவும் இசையும்

1164 . சத்தி தற் பரசித்தி யோகிகளும்
சாதகத் தனி தலைவரும் முதலா
நித்தம் எய்திய ஆயுள் மெய்த் தவர்கள்
நீடுவாழ் திருப் பாடியும் அனேகம்
சித்தர் விஞ்சையர் இயக்கர் கந்தருவர்
திகழ்ந்து மன்னுவார் செண்டுகை ஏந்தி
வித்தகக் கரி மேற் கொளும் காரி மேவும்
செண்டு அணை வெளியும் ஒன்று உளதால் 4.5.82

1165 . வந்து அடைந்தவர் தம் உரு மாய மற்று
உளாரைத் தாம் காண்பிடம் உளது
சிந்தை யோகத்து முனிவர் யோகினிகள்
சேரும் யோக பீடமும் உளது என்றும்
அந்தமில் அறம் புரப்பவள் கோயில்
ஆன போக பீடமும் உளதாகும்
எந்தையார் மகிழ் காஞ்சி நீடு எல்லை
எல்லை இல்லன உள்ள ஆர் அறிவார் 4.5.83

1166 .தூண்டு சோதி ஒன்று எழுந்து இருள்
துரக்கும் சுரர்கள் வந்து சூழ் உருத்திர சோலை
வேண்டினார்கள் தம் பிறப்பினை ஒழிக்கும்
மெய்ந் நெறிக் கணின்றார்கள் தாம் விரும்பித்
தீண்டில் யாவையும் செம் பொன்
ஆக்குவது ஓர் சிலையும் உண்டு உரை
செய்வதற்கு அரிதால்
ஆண்ட நாயகி சமயங்கள் ஆறும்
அகில யோனியும் அளிக்கும் அந் நகரம் 4.5.84

1167 .என்றும் உள்ள இந் நகர் கலியுகத்தில்
இலங்கு வேற்கரிகால் பெருவளத்தோன்
வன் திறற்புலி இமயமால் வரை மேல்
வைக்க ஏகுவேன் தனக்கு இதன் வளமை
சென்று வேடன் முன் கண்டு உரை செய்யது
இருந்து காத நான்கு உட்பட வகுத்துக்
குன்று போலும் மா மதில் புடை போக்கிக்
குடி இருத்தின கொள்கையின் விளங்கும் 4.5.85

1168 . தண் காஞ்சி மென் சினைப் பூம் கொம்பர்
ஆடல் சார்ந்து அசைய அதன் மருங்கு சுரும்பு
தாழ்ந்து
பண் காஞ்சி இசை பாடும் பழன வேலிப்
பணை மருதம் புடை உடைத்தாய்ப் பாரில் நீடும்
திண் காஞ்சி நகர் நொச்சி இஞ்சி சூழ்ந்த
செழும் கிடங்கு திரு மறைகள் ஒலிக்கும் தெய்வ
வண் காஞ்சி அல்குல் மலை வல்லி காக்க வளர்
கருணைக் கடல் உலகம் சூழ்ந்தால் மானும் 4.5.86

1169 . கொந்தலர் பூங் குழல் இமயக் கொம்பு
கம்பர் கொள்ளும் பூசனைக் குறித்த தானம்
காக்க
மந்திர மா மதில் அகழி அவர் தாம் தந்த
வாய்மை ஆகம விதியின் வகுப்புப் போலும்
அந்தமில் சீர்க் காஞ்சியை வந்து அடைந்தார்க்கு
அன்றி அடைகளங்கம் அறுப்பர் என்றுஅறிந்து
சூழ
வந்து அணைந்து தன் கறுப்பும் உவர்ப்பும் நீக்கும்
மா கடலும் போலும் மலர்க் கிடங்கு மாதோ 4.5.87

1170 .ஆங்கு வளர் எயிலினுடன் விளங்கும்
வாயில் அப்பதியில் வாழ் பெரியோர் உள்ளம்
போல
ஓங்கு நிலைத் தன்மையவாய் அகிலம் உய்ய
உமைபாகர் அருள் செய்த ஒழுக்கம் அல்லால்
தீங்கு நெறி அடையாத தடையும் ஆகிச்செந்
நெறிக்கண் நிகழ் வாய்மை திருந்து மார்க்கம்
தாங்குலவ நிலவி வளர் ஒளியால் என்றும் தட
நெடுவான் அளப்பன வாம் தகைய வாகும் 4.5.88

1171 .மாறு பெறல் அரும் கனக மாடம் நீடு மணி
மறுகும் நெடும் தெருவும் வளத்தில் வந்த
ஆறு பயில் ஆவண வீதிகளும் மற்றும் அமைந்த
நகர் அணி வரைகள் நடுவு போக்கிக்
கூறுபடு நவ கண்டம் அன்றி மல்கக் கொண்ட
அனேகம் கண்டம் ஆகி அன்ன
வேறு ஒரு மண் உலகு தனில் உளதாம் என்ன
விளங்கிய மா லோக நிலை மேவிற்று அன்றே 4.5.89

1172. பாகம் மருங்கு இரு புடையும் உயர்ந்து
நீண்ட படர் ஒளி மாளிகை நிரைகள் பயில் மென்
கூந்தல் 4.5.90

தோகையர் தம் குழாம் அலையத் தூக்கு முத்தின்
சுடர்க் கோவைக் குளிர் நீர்மை துதைந்த வீதி
மாகமிடை ஒளி தழைப்ப மன்னி நீடு மருங்கு
தாரகை அலைய வரம்பில் வண்ண
மேகமிடை கிழித்து ஒழுகும் தெய்வக் கங்கை
மேல் நதிகள் பல மண் மேல் விளங்கி ஒக்கும்

1173. . கிளர் ஒளிச் செங்கனக மயந்தானாய்
மாடு கீழ் நிலையோர் நீலச் சோபனம் பூணக்
கொள அமைத்து மீது ஒருபால் அன்ன சாலை
குல வயிரத்தால் அமைத்த கொள்கையாலே
அளவில் சுடர்ப் பிழம்பு ஆனார் தம்மைத் தேடி
அகழ்ந்து ஏனம் ஆனானும் அன்னம் ஆகி
வளர் விசும்பில் எழுந்தானும் போல நீடு
மாளிகையும் உள மற்று மறுகு தோறும் 4.5.91

1174. மின் பொலி பன் மணி மிடைந்த தவள
மாடம் மிசைப் பயில் சந்திர காந்தம் விசும்பின் மீது
பொன் புரையும் செக்கர் நிறப் பொழுது தோன்றும்
புனிற்றி மதி கண்டு உருகிப் பொழிந்த நீரால்
வன் புலியின் உரியாடைத் திரு ஏகம்பர் வளர்சடையும்
இளம் பிறையும் கண்டு கும்பிட்டு
அன்பு உருகி மெய் பொழியக் கண்ணீர் வாரும்
அடியவரும் அனையவுள அலகிலாத 4.5.92

1175. முகில் உரிஞ்சும் கொடி தொடுத்த முடிய
ஆகும் முழுப் பளிங்கின் மாளிகைகள் முற்றும் சுற்றும்
நிகரில் சரா சரங்கள் எல்லாம் நிழலினாலே
நிறைதலின் ஆல் நிறை தவஞ்செய் இமயப் பாவை
நகில் உழுத சுவடும் வளைத் தழும்பும் பூண்ட
நாயகனார் நான்கு முகற்குப் படைக்க நல்கும்
அகிலயோனிகள் எல்லாம் அமைத்து வைத்த
அரும் பெரும் பண்டார நிலை அனைய ஆகும் 4.5.93

1176. பொன் களப மாளிகை மேல் முன்றில்
நின்று பூம் கழங்கு மணிப் பந்தும் போற்றி ஆடும்
வில் புருவக் கொடி மடவார் கலன்கள் சிந்தி
விழுவனவும் கெழுவு துணை மேவு மாதர்
அற்பு முதிர் கலவியினில் பரிந்து சிந்தும் 4.5.94

அணிமணி சேடியர் தொகுக்கும் அவையும் ஆகி
நற்கனக மழை அன்றிக் காஞ்சி எல்லை
நவமணி மாரியும் பொழியும் நாளும் நாளும்

1177. பூ மகளுக்கு உறையுள் எனும்
தகைய ஆன பொன் மாடத் தரமியங்கள் பொலிய
நின்று
மா மகரக் குழை மகளிர் மைந்தர் அங்கண்
வந்து ஏறுமுன் நறு நீர் வண்டல் ஆடத்
தூமணிப் பொன் புனை நாளத்துருத்தி வீசும்
சுடர்விடு செங்குங்கும நீர்த் துவலை தோய்ந்த
காமர் மணி நாசிகையின் மருங்கு தங்கும்
கருமுகில்கள் செம்முகில் களாகிக் காட்டும் 4.5.95

1178. இமம் மலிய எடுத்த நெடு வரைகள்
போல இலங்கு சுதைத் தவள மாளிகை நீள்
கோட்டுச்
சிமை அடையும் சோபான நிரையும் விண்ணும்
தெரிவு அரிய தூய்மையினால் அவற்றுள்
சேர்ந்து
தமர் களுடன் இழிந்து ஏறும் மைந்தர் மாதர்
தங்களையும் விசும்பிடை நின்று இழியா நிற்கும்
அமரரையும் அரமகளிர் தமையும் வெவ்வேறு
அறிவரிதாம் தகைமையன அனேகம் அங்கண் 4.5.96

1179. அரவ நெடுந் தேர் வீதி அருகு மாடத்து
அணிமணிக் கோபுரத்து அயலே வியல் வாய்
நீண்ட
விரவு மரகதச் சோதி வேதித் திண்ணை
விளிம்பின் ஒளி துளும்பு முறைப் படி மீது ஏறும்
குரவலரும் குழல் மடவார் அடியில் ஊட்டும்
குழம்பு அடுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம்
பரவை நெடும் தரங்கம் மிசை விளங்கித் தோன்றும்
பவள நறும் தளிர் அனைய பலவும் பரங்கர் 4.5.97

1180. வேம்பு சினக் களிற்று அதிர்வும் மாவின்
ஆர்ப்பும் வியன் நெடுந் தேர்க் கால் இசைப்பும்
விழவுஅறாத
அம் பொன் மணி வீதிகளில் அரங்கில் ஆடும்
அரிவையர் நூபுர ஒலியோடு அமையும் இம்பர்
உம்பரின் இந்திரன் களிற்றின் முழக்குந்
தெய்வ உயர் இரவி மாக் கலிப்பும் அயன் ஊர்தித்
தேர் 4.5.98

பம்பிசையும் விமானத்துள் ஆடுந் தெய்வப்
பாவையர் நூபுர அரவத்துடனே பல்கும்

1181. அருமறை அந்தணர் மன்னும்
இருக்கையான ஆகுதியின் புகை அடுத்த அம்
பொன் மாடப்
பெரு மறுகு தொறும் வேள்விச் சாலை
எங்கும் பெறும் அவிப் பாகம் கொடுக்கும் பெற்றி
மேலோர்
வருமுறைமை அழைக்க விடு மந்திரம் எம்
மருங்கும் வானவர் நாயகர் திரு ஏகம்பர்
முன்றில்
திருமலி பொன் கோபுரத்து நெருங்கும்
எல்லாத் தேவரையும் அணித்தாகக் கொண்டு
செல்லும் 4.5.99

1182. அரசர் குலப் பெரும் தெருவும்
தெற்றி முற்றத்து ஆயுதங்கள் பயிலும் வியல்
இடமும் அங்கண்
புரசை மதக் கரிகளொடு புரவி ஏறும்
பொற்புடைய வீதிகளும் பொலிய எங்கும்
விரை செய் நறுந்தொடை அலங்கல் குமரர்
செய்யும் வியப்புறு செய் தொழில் கண்டு
விஞ்சை விண்ணோர்
நிரை செறியும் விமான ஊர்திகளின் மேலும்
நிலமிசையும் பல முறையும் நிரந்து நீங்கார் 4.5.100

1183. வெயில் உமிழும் பன்மணிப்
பூண் வணிக மாக்கள் விரவு நிதி வளம்
பெருக்கும் வெறுக்கை மிக்க
வயின் நிலவு மணிக் கடை மா நகர்கள்
எல்லாம் வனப்பு உடைய பொருட்குலங்கள்
மலிதலாலே
கயிலை மலையார் கச்சி ஆலயங்கள்
பலவும் கம்பமுமேவிய தன்மை கண்டு போற்றப்
பயிலும் உருப்பல கொண்டு நிதிக் கோன்
தங்கப் பயில் அளகாபுரி வகுத்த பரிசு காட்டும் 4.5.101

1184. விழவு மலி திருக் காஞ்சி வரைப்பின்
வேளாண் விழுக் குடிமை பெரும் செல்வர்
விளங்கும் வேணி
மழ இள வெண் திங்கள் புனை கம்பர் செம்
பொன் மலைவல்லிக் களித் தவளர் உணவின் 4.5.102

மூலம்
தொழ உலகு பெறும் அவள் தான் அருள
பெற்றுத் தொன்னிலத்து மன்னு பயிர் வேத
வாய்மை
உழவுத் தொழிலால் பெருக்கி உயிர்கள் எல்லாம்
ஓங்க வரும் தரும வினைக்கு உளரால் என்றும்

1185. ஓங்கிய நால் குலத்து ஒவ்வாப்
புணர்வில் தம்மில் உயர்ந்தனவும் இழிந்தனவும்
ஆன சாதி
தாம் குழுமிப் பிறந்த குல பேதம் எல்லாம் தம்
தகைமைக்கு ஏற்ற தனி இடங்கள் மேவி
ஆங்கு நிறை கிளை பயின்று மரபின் ஆற்ற அடுத்த
வினைத் தொழிலின் முறைமை வழாமை நீடு
பாங்கு வளர் இருக்கை நிலை பலவும் எல்லாம்
பண்பு நீடிய உரிமைப் பால அன்றே 4.5.103

1186. ஆதி மூதெயில் அந் நகர் மன்னிய
சோதி நீள் மணித் தூபமும் தீபமும்
கோதில் பல்லியமும் கொடியும் பயில்
வீதி நாளும் ஒழியா விழா வணி 4.5.104

1187. வாயில் எங்கணும் தோரணம் மாமதில்
ஞாயில் எங்கணுஞ் சூழ் முகில் நாள்மதி
தோயில் எங்கணும் மங்கலம் தொண்டர் சூழ்
கோயில் எங்கணும் உம்பர் குலக் குழாம் 4.5.105

1188. வேத வேதியர் வேள்வியே தீயன
மாதர் ஓதி மலரே பிணியன
காதல் வீதி விலக்கே கவலைய
சூத மாதவியே புறம் சூழ்வன 4.5.106

1189. சாயலார்கள் நுசுப்பே தளர்வன
ஆய மாடக் கொடியே அசைவன
சேய ஓடைக் களிறே திகைப்பன
பாய சோலைத் தருவே பயத்தன 4.5.107

1190. அண்ணலார் அன்பர் அன்பே முன் ஆர்த்தன
தண்ணறுஞ் செழுந்தாதே துகள்வன
வண்ண நீள் மணி மாலையே தாழ்வன
எண்ணில் குங்குமச் சேறே இழுக்கின 4.5.108

1191. வென்றி வானவர் தாம் விளையாடலும்
என்றும் உள்ளவர் வாழும் இயற்கையும்
நன்றும் உள்ளத்து நண்ணினர் வேட்கைகள்
4.5.109

ஒன்றும் அங்கு ஒழியா வகை உய்ப்பது

1192. புரம் கடந்தவர் காஞ்சி புரம் புகழ்
பரம்பு நீள் புவனம் பதி நான்கினும்
வரம்பில் போக வனப்பின் வளமெல்லாம்
நிரம்பு கொள்கலம் என்ன நிறைந்தலால் 4.5.110

1193. அவ்வகைய திருநகரம் அதன் கண் ஒரு
மருங்குறைவார்
இவ்வுலகில் பிறப்பினால் ஏகாலிக் குலத்துள்ளார்
செவ்விய அன்புடை மனத்தார் சீலத்தின் நெறி
நின்றார்
மை விரவு கண்டரடி வழித் தொண்டர் உளர் ஆனார் 4.5.111

1194. மண்ணின் மிசை வந்த அதற்பின் மனம் முதல் ஆயின
மூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவிப்பார்
புண்ணிய மெய்த் தொண்டர் திருக் குறிப்பு அறிந்து
போற்று நிலைத்
திண்மையினால் திருக் குறிப்புத் தொண்டர் எனும்
சிறப்பினார் 4.5.112

1195. தேர் ஒலிக்க மா ஒலிக்கத் திசை ஒலிக்கும் புகழ்க்
காஞ்சி
ஊரொலிக்கும் பெரு வண்ணார் எனவொண்ணா
உண்மையினார்
நீரொலிக்க அரா இரைக்க நிலா முகிழ்க்கும்
திருமுடியார்
பேரொலிக்க உருகும் அவர்க்கு ஒலிப்பர் பெரு
விருப்பி னொடும் 4.5.113

1196. தேசுடைய மலர்க் கமலச் சேவடியார் அடியார்தம்
தூசுடைய துகள் மாசு கழிப்பார் போல் தொல்லை
வினை
ஆசுடைய மல மூன்றும் அணைய வரும் பெரும்
பிறவி
மாசு தனை விடக் கழித்து வரும் நாளில் அங்கு ஒரு
நாள் 4.5.114

1197 பொன் இமயப் பொருப் பரையன் பயந்து அருளும்
பூங்கொடிதன்
நன்னிலைமை அன்று அளக்க எழுந்து அருளும் நம்
பெருமான்
தன்னுடைய அடியவர் தம் தனித் தொண்டர்
4.5.115

தம்முடைய
அந்நிலைமை கண்டு அன்பர்க்கு அருள் புரிவான்
வந்து அணைவார்

1198. சீதமலி காலத்துத் திருக் குறிப்புத் தொண்டர்பால்
ஆதுலராய் மெலிந்து மிக அழுக்கு அடைந்த
கந்தையுடன்
மாதவ வேடம் தாங்கி மால் அறியா மலர் அடிகள்
கோதடையா மனத்தவர் முன் குறு நடைகள் கொளக்
குறுகி 4.5.116

1199. . திருமேனி வெண்ணீறு திகழ்ந்து ஒளிரும் கோலத்துக்
கரு மேகம் என அழுக்குக் கந்தையுடன் எழுந்து அருளி
வருமேனி அருந் தவரைக் கண்டு மனம் மகிழ்ந்து
எதிர் கொண்டு
உருமேவும் மயிர்ப் புளகம் உளவாகப் பணிந்து
எழுந்தார் 4.5.117

1200. எய்தும் அவர் குறிப்பு அறிந்தே இன் மொழிகள் பல
மொழிந்து
செய் தவத்தீர் திருமேனி இளைத்து இருந்தது என்
என்று
கை தொழுது கந்தையினைத் தந்து அருளும் கழுவ
என
மை திகழ் கண்டம் கரந்த மாதவத்தோர் அருள்
செய்வார் 4.5.118

1201. இக் கந்தை அழுக்கு ஏறி எடுக்க ஒணாது எனினும்
யான்
மெய்க் கொண்ட குளிர்க் குடைந்து விட மாட்டேன்
மேல் கடல் பால்
அக் குன்றம் வெங்கதிரோன் அணைவதன் முன்
தருவீரேல்
கைக் கொண்டு போய் ஒலித்துக் கொடுவாரும் கடிது
என்றார் 4.5.119

1202. தந்து அருளும் இக் கந்தை தாழாதே ஒலித்து உமக்கு
இன்று
அந்தி படுவதன் முன்னம் தருகின்றேன் என அவரும்
கந்தை இது ஒலித்து உணக்கிக் கடிது இன்றே
தாரீரேல்
இந்த உடற்கு இடர் செய்தீர் என்று கொடுத்து ஏகினார் 4.5.120

1203. குறித்த பொழுதே ஒலித்துக் கொடுப்பதற்குக் கொடு போந்து
வெறித் தடநீர்த் துறையின் கண் மா செறிந்து மிகப் புழுக்கிப்
பிறித்து ஒலிக்கப் புகும் அளவில் பெரும் பகல் போய்ப் பின்பகலாய்
மறிக்கரத்தார் திரு அருளால் மழை எழுந்து பொழிந்திமால் 4.5.121

1204. திசை மயங்க வெளியடைத்த செறி முகிலின் குழாம் மிடைந்து
மிசை சொரியும் புனல் தாரை விழி நுழையா வகை மிடைய
அசையுடைய மனத்து அன்பர் அறிவு மறந்து அருந்தவர் பால்
இசைவு நினைந்து அழிந்து இனி யான் என் செய்கேன் என நின்றார் 4.5.122

1205 ஓவாதே பொழியு மழை ஒரு கால் விட்டு ஒழியும் எனக்
காவாலி திருத் தொண்டர் தனி நின்றார் விடக் காணார்
மேவார் போல் கங்குல் வர மெய் குளிரும் விழுந்தவர் பால்
ஆ! ஆ! என் குற்றேவல் அழிந்த வா என விழுந்தார் 4.5.123

1206 விழுந்த மழை ஒழியாது மெய்த்தவர் சொல்லிய எல்லை
கழிந்தது முன்பு ஒலித்து மனைக்கு ஆற்று ஏற்க அறிந்திலேன்
செழும் தவர் தம் திருமேனி குளிர் கணும் தீங்கு இழைத்த
தொழும்பனேற்கு இனி இதுவே செயல் என்று துணிந்து எழுவார் 4.5.124

1207. கந்தை புடைத்திட எற்றும் கல்பாறை மிசைத் தலையைச்
சிந்த எடுத்து எற்றுவான் என்று அணைந்து செழும் பாறை மிசைத்
தந்தலையைப் புடைத்து எற்ற அப்பாறை தன் மருங்கு வந்து எழுந்து பிடித்தது அணி வளைத் தழும்பர் மலர்ச் செங்கை 4.5.125

1208. வான் நிறைந்த புனல் மழை போய் மலர் மழையாய்
இட மருங்கு
தேன் நிறைந்த மலர் இதழித் திருமுடியார்
பொருவிடையின்
மேல் நிறைந்த துணைவி யொடும் வெளி நின்றார்
மெய்த் தொண்டர்
தான் நிறைந்த அன்பு உருகக் கை தொழுது தனி
நின்றார் 4.5.126

1209. முன் அவரை நேர் நோக்கி முக் கண்ணர் மூவுலகும்
நின் நிலைமை அறிவித்தோம் நீயும் இனி நீடிய நம்
மன்னுலகு பிரியாது வைகுவாய் என அருளி
அந் நிலையே எழுந்து அருளி அணி ஏகாம்பரம்
அணைந்தார் 4.5.127

1210. சீர் நிலவு திருக் குறிப்புத் தொண்டர் திருத்தொழில்
போற்றிப்
பார் குலவத் தந்தை தாள் அற எறிந்தார் பரிசு
உரைக்கேன்
பேர் அருளின் மெய்த் தொண்டர் பித்தன் எனப்
பிதற்றுதலால்
ஆருலகில் இதன் உண்மை அறிந்து உரைக்க
இசைந்து எழுவார் 4.5.128

திருச்சிற்றம்பலம்

4.6 சண்டேசுர நாயனார் புராணம் (1211 - 1270)

திருச்சிற்றம்பலம்

1211 பூந்தண் பொன்னி எந் நாளும் பொய்யாது அளிக்கும்
புனல் நாட்டு
வாய்ந்த மண்ணித் தென் கரையில் மன்ன முன் நாள்
வரை கிழிய
ஏந்தும் அயில் வேல் நிலை காட்டி இமையோர் இகல்
வெம் பகை கடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச்
சேய்ஞ்ஞலூர் 4.6.1

1212. செம்மை வெண்ணீற்று ஒருமையினார் இரண்டு
பிறப்பின் சிறப்பினார் 4.6.2

மும்மைத் தழலோம்பிய நெறியார் நான்கு வேதம்
முறை பயின்றார்
தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகையார்
அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழு உலகும் போற்றும்
மறையோர் விளங்குவது

1213. கோதில் மான் தோல் புரி முந்நூல் குலவு மார்பில்
குழைக் குடுமி
ஓதுகிடை சூழ் சிறுவர்களும் உதவும் பெருமை
ஆசானும்
போதின் விளங்கும் தாரகையும் மதியும் போலப் புணர்
மாடங்கள்
மீது முழங்கு முகில் ஒதுங்க வேத ஒலிகள்
முழங்குவன 4.6.3

1214. யாகம் நிலவும் சாலை தொறும் மறையோர் ஈந்த
அவியுணவின்
பாகம் நுகர வரும் மாலும் அயனும் ஊரும் படர்
சிறைப்புள்
மாகம் இகந்து வந்து இருக்கும் சேக்கை எனவும்
வானவர் கோன்
நாகம் அணையும் கந்து எனவும் நாட்டும் யூப
ஈட்டமுள 4.6.4

1215 தீம் பால் ஒழுகப் பொழுது தொறும் ஓம தேனுச்
செல்வனவும்
தாம் பாடிய சாமம் கணிப்போர் சமிதை இடம்
கொண்டு அனைவனவும்
பூம் பாசடைநீர்த் தடம் மூழ்கி மறையோர் மகளிர்
புகுவனவும்
ஆம் பான்மையினில் விளங்குவன அணி நீள் மறுகு
பலவுமுள 4.6.5

1216 வாழ் பொன் பதி மற்று அதன் மருங்கு மண்ணித்
திரைகள் வயல் வரம்பின்
தாழ்வில் தரளம் சொரி குலைப்பால் சமைத்த யாகத்
தடம் சாலை
சூழ் வைப்பு இடங்கள் நெருங்கியுள தொடங்கு சடங்கு
முடித்து ஏறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள் விண்ணோர் ஏறும்
விமானங்கள் 4.6.6

1217 மடையில் கழுநீர் செழுநீர் சூழ்வயலில் சாலிக்
கதிர்க்கற்றைப்
புடையில் சுரும்பு மிடை கமுகு புனலில் பரம்பு
பூம்பாளை
அடையில் பயிலுந் தாமரை நீள் அலரில் துயிலும்
கயல்கள் வழி
நடையில் படர்மென் கொடி மௌவல் நனையில்
திகழும் சினைக் காஞ்சி 4.6.7

1218 சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத்
திரு எல்லை
பொன்னின் மயம் ஆக்கிய வளவர் போர் ஏறு என்றும்
புவி காக்கும்
மன்னர் பெருமான் அநபாயன் வருந் தொல் மரபின்
முடி சூட்டும்
தன்மை நிலவு பதி ஐந்தின் ஒன்றாய் நீடும் தகைத்தது
அவ்வூர் 4.6.8

1219 பண்ணின் பயனாம் நல் இசையும் பாலி பயனாம் இண்
சுவையும்
கண்ணின் பயனாம் பெருகு ஒளியும் கருத்தின்
பயனும் எழுத்து ஐந்தும்
விண்ணின் பயனாம் பொழி மழையும் வேதப் பயனாம்
சைவமும் போல்
மண்ணின் பயனாம் அப்பதியின் வளத்தின் பெருமை
வரம்பு உடைத்தோ 4.6.9

1220 பெருமை பிறங்கும் அப்பதியின் மறையோர் தம்முள்
பெருமனை வாழ்
தருமம் நிலவு காசிய கோத்திரத்துத் தலைமை சால்
மரபில்
அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும்
அரவு போல்
இருமை வினைக்கும் ஒரு வடிவு ஆம் எச்ச தத்தன்
உளனானான் 4.6.10

1221 மற்றை மறையோன் திரு மனைவி வாய்ந்த மரபின்
வந்து உதித்தாள்
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள்
உலகில் துணைப் புதல்வர்
பெற்று விளங்கும் தவம் செய்தாள் பெறும் பேறு
எல்லைப் பயன் பெறுவாள்
பற்றை எறியும் பற்றுவார் சார்பாய் உள்ள 4.6.11

பவித்திரையாம்

1222 . நன்றி புரியும் அவர் தம் பால் நன்மை மறையின்
துறை விளங்க
என்றும் மறையோர் குலம் பெருக ஏழு புவனங்களும்
உய்ய
மன்றில் நடம் செய்பவர் சைவ வாய்மை வளர மா
தவத்தோர்
வென்றிவிளங்க வந்து உதயம் செய்தார் விசார
சருமனார் 4.6.12

1223 ஐந்து வருடம் அவர்க்கு அணைய அங்கம் ஆறும்
உடன் நிறைந்த
சந்த மறைகள் உட்பட முன் தலைவர் மொழிந்த
ஆகமங்கள்
முந்தை அறிவின் தொடர்ச்சியினால் முகைக்கு
மலரின் வாசம் போல்
சிந்தை மலர உடன் மலரும் செவ்வி உணர்வு
சிறந்ததால் 4.6.13

1224 நிகழும் முறைமை ஆண்டு ஏழும் நிரம்பும் பருவம்
வந்து எய்தப்
புகழும் பெருமை உப நயனப் பொருவில் சடங்கு
முடித்து அறிவின்
இகழு நெறிய அல்லாத எல்லாம் இயந்த எனினும் தம்
திகழு மரபின் ஓது விக்கும் செய்கை பயந்தார்
செய்வித்தார் 4.6.14

1225 குலவு மறையும் பல கலையும் கொளுத்துவதன் முன்
கொண்டு அமைந்த
நிலவும் உணர்வின் திறம் கண்டு நிறுவும் மறையோர்
அதிசயித்தார்
அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடும் கழலே
எனக் கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில் தெளிந்தார் சிறிய
பெருந் தகையார் 4.6.15

1226 நடமே புரியும் சேவடியார் நம்மை உடையார் என்றும்
மெய்ம்மை
உடனே தோன்றும் உணர்வின் கண் ஒழியாது ஊறும்
வழி அன்பின்
கடனே இயல்பாய் முயற்றி வரும் காதல் மேல்மேல்
எழும் கருத்தின்

4.6.16

திடம் நேர் நிற்கும் செம்மலார் திகழும் நாளில் ஆங்கு
ஒரு நாள்

1227 ஓது கிடையின் உடன் போவார் ஊர் ஆன் நிரையின்
உடன் புக்க
போது மற்று அங்கு ஒரு புனிற்றா போற்றும் அவன்
மேல் மருப்பு ஓச்ச
யாதும் ஒன்றும் கூசாதே எடுத்த கோல் கொண்டு
அவன் புடைப்ப
மீது சென்று மிகும் பரிவால் வெகுண்டு விலக்கி மெய்
உணர்ந்து 4.6.17

1228 பாவும் கலைகள் ஆகமநூல் பரப்பின் தொகுதிப்
பான்மையினால்
மேவும் பெருமை அரு மறைகள் மூலமாக விளங்கு
உலகில்
யாவும் தெளிந்த பொருள் நிலையே எய்த உணர்ந்த
உள்ளத்தால்
ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற்கு அருள்
செய்வார் 4.6.18

1229 தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத்
தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும்
பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாமுடைய அல்லவோ? நல்
ஆனினங்கள் 4.6.19

1230 ஆய சிறப்பினால் பெற்ற அன்றே மன்றுள் நடம்
புரியும்
நாயனார்க்கு வளர் மதியும் நதியும் நகு வெண்டலைத்
தொடையும்
மேய வேணித் திரு முடிமேல் விரும்பி ஆடி
அருளுதற்குத்
தூய திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் உரிமைச்
சுரபிகள் தாம் 4.6.20

1231 சீலமுடைய கோக்குலங்கள் சிறக்கும் தகைமைத்
தேவருடன்
காலம் முழுதும் உலகனைத்தும் காக்கும் முதல்
காரணர் ஆகும்
நீலகண்டர் செய்ய சடை நிருத்தர் சாத்து நீறுதரும்
4.6.21

மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் என்றால் முடிவு என்னோ

1232 உள்ளும் தகைமை இனிப் பிறவேறுளவே உழை மான் மறிக்கன்று
துள்ளும் கரத்தார் அணி பணியின் சுடர் சூழ் மணிகள் சுரநதி நீர்
தெள்ளும் சடையார் தேவர்கள் தம்பிராட்டி உடனே சேரமிசைக்
கொள்ளும் சின மால் விடைத் தேவர் குலம் அன்றோ? இச் சுரபி குலம் 4.6.22

1233 என்றின்னனவே பலவும் நினைந்து இதத்தின் வழியே மேய்த்து இந்தக்
கன்று பயில் ஆன் நிரை காக்கும் இதன் மேல் இல்லை கடன் இதுவே
மன்றுள் ஆடும் சேவடிகள் வழுத்து நெறியாவதும் என்று
நின்ற ஆயன் தனை நோக்கி நிரை மேய்ப்பு ஒழிக நீ என்பார் 4.6.23

1234 யானே இனி இந்நிரை மேய்ப்பன் என்றார் அஞ்சி இடை மகனும்
தானேர் இறைஞ்சி விட்டு அகன்றான் தாமும் மறையோர் இசைவினால்
ஆனே நெருங்கும் பேராயம் அளிப்பார் ஆகிப் பைங்கூழ்க்கு
வானே என்ன நிரை காக்க வந்தார் தெய்வ மறைச் சிறுவர் 4.6.24

1235 கோலும் கயிறும் கொண்டு குழைக் குடுமி அலையக் குலவு மான்
தோலும் நூலும் சிறு மார்பில் துவள அரைக் கோவணம் சுடரப்
பாலும் பயனும் பெருக வரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையினால்
சாலும் புல்லின் அவை வேண்டுந் தனையும் மிசையும் தலைச் சென்று 4.6.25

1236 பதவு காலங்களில் மேய்த்தும் பறித்தும் அளித்தும் பரிவு அகற்றி
இதம் உண் துறையுள் நற்றண்ணீர் ஊட்டி அச்சம் எதிர் நீக்கி

4.6.26

அதர் நல்லன முன் செல நீழல் அமர் வித்து அமுத
மதுரப்பால்
உதவும் பொழுது பிழையாமல் உடையோர் இல்லம்
தொறும் உய்த்தார்

1237 மண்ணிக் கரையின் வளர் புறவின் மாடும் படுகர்
மருங்கினிலும்
தண்ணித்தில நீர் மருதத் தண்தலை சூழ் குலையின்
சார்பினிலும்
எண்ணிற் பெருகு நிரை மேய்த்துச் சமிதை உடன்
மேல் ஏரிகொண்டு
நண்ணில் கங்குல் முன் புகுந்தும் நன்னாள் பலவாம்
அந் நாளில் 4.6.27

1238 ஆய நிரையின் குலம் எல்லாம் அழகின் விளங்கி மிகப்
பல்கி
மேய இனிய புல் உணவும் விரும்பு புனலும்
ஆர்தலினால்
ஏய மனங்கொள் பெரு மகிழ்ச்சி எய்தி இரவும்
நண்பகலும்
தூய தீம்பால் மடி பெருகிச் சொரிய முலைகள்
சொரிந்தனவால் 4.6.28

1239 பூணும் தொழில் வேள்விச் சடங்கு புரிய ஓம
தேனுக்கள்
காணும் பொலிவின் முன்னையினும் அனேக மடங்கு
கறப்பனவாய்
பேணுந் தகுதி அன்பால் இப் பிரம சாரி மேய்த்த
அதற்பின்
மாணுந் திறத்தவான என மறையோர் எல்லாம் மனம்
மகிழ்ந்தார் 4.6.29

1240 அனைத்துத் திறத்தும் ஆனினங்கள் அணைந்த
மகிழ்ச்சி அளவு இன்றி
மனைக் கண் கன்று பிரிந்தாலும் மருவுஞ் சிறிய
மறைக் கன்று
தனைக் கண்டு அருகு சார்ந்து உருகித் தாயாந் தன்மை
நிலைமையவாய்க்
கணைத்துச் சுரந்து முலைக் கண்கள் கறவாமே பால்
பொழிந்தனவால் 4.6.30

1241 தம்மை அணைந்த ஆன் முலைப்பால் தாமே
பொழியக் கண்டு வந்து

4.6.31

செம்மை நெறியே உறுமனத்தில் திரு மஞ்சனமாம்
குறிப்பு உணர்ந்தே
எம்மையுடைய வள்ளலார் எய்த நினைந்து தெளிந்து
அதனில்
மெய்மைச் சிவனார் பூசனையை விரும்பும் வேட்கை
விரைந்து எழலும்

1242 அங்கண் முன்னை அர்ச்சனையின் அளவின்
தொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கும் அன்பால் மண்ணி மணற் புளினக்
குறையில் ஆத்தியின் கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச்
சிவ ஆலயமும்
துங்க நீடு கோபுரமும் சுற்றாலயமும் வகுத்து
அமைத்தார் 4.6.32

1243 ஆத்தி மலரும் செழுந்தளிரும் முதலா அருகு வளர்
புறவில்
பூத்த மலர்கள் தாந்தெரிந்து புனிதர் சடிலத் திரு
முடிமேல்
சாத்தல் ஆகும் திருப் பள்ளித் தாமம் பலவும் தாம்
கொய்து
கோத்த இலைப் பூங்கூடையினில் கொணர்ந்து மணம்
தங்கிட வைத்தார் 4.6.33

1244 நல்ல நவ கும்பங்கள் பெற நாடிக் கொண்டு நாணல்
பூங்
கொல்லை இடத்தும் குறை மறைவும் மேவுங்
கோக்கள் உடன் கூட
ஒல்லை அணைந்து பாலாக்கள் ஒன்றுக்கு ஒரு
காலாக எதிர்
செல்ல அவையும் கனைத்து முலை தீண்டச்
செழும்பால் பொழிந்தனவால் 4.6.34

1245 கொண்ட மடுத்த குட நிறையக் கொணர்ந்து விரும்பும்
கொள்கையினால்
அண்டர் பெருமான் வெண்மணல் ஆலயத்துள் அவை
முன் தாபித்து
வண்டு மருவுந் திருப் பள்ளித் தாமம் கொண்டு வரன்
முறையே
பண்டைப் பரிவால் அருச்சித்துப் பாலின் திரு
மஞ்சனம் ஆட்டி 4.6.35

1246 மீள மீள இவ்வண்ணம் வெண் பால் சொரி மஞ்சனம்
ஆட்ட ஆள் உடையார்
தம்முடைய அன்பர் அன்பின்பால் உளதாய் மூள
அமர்ந்த
நயப் பாடு முதிர்ந்த பற்று முற்றச் சூழ்
கோளம் அதனில் உள் நிறைந்து குறித்த பூசை
கொள்கின்றார் 4.6.36

1247 பெருமை பிறங்கும் சேய்ஞலூர் பிள்ளையார் தம்
உள்ளத்தில்
ஒருமை நினைவால் உம்பர்பிரான் உவக்கும் பூசை
உறுப்பான
திரு மஞ்சனமே முதல் அவற்றில் தேடாதன
அன்பினில் நிரம்பி
வரும் அந் நெறியே அர்ச்சனை செய்து அருளி
வணங்கி மகிழ்கின்றார் 4.6.37

1248 இறையோன் அடிக் கீழ் மறையவனார் எடுத்துத்
திருமஞ்சனம் ஆட்டும்
நிறை பூசனைக்குக் குடங்கள் பால் நிரம்பச் சொரிந்து
நிரைக் குலங்கள்
குறைபாடு இன்றி மடி பெருகக் குவிந்த முலைப்பால்
குறைவு இன்றி
மறையோர் மனையின் முன்பு தரும் வளங்கள்
பொலிய வைகுமால் 4.6.38

1249 செயல் இப்படியே பல நாளும் சிறந்த பூசை
செய்வதற்கு
முயல்வுற்று அதுவே திருவிளையாட்டாக முந்நூல்
அணிமார்பர்
இயல்பில் புரியும் மற்று இதனைக் கண்டித் திறத்தை
அறியாத
அயல் மற்று ஒருவன் அப் பதியில் அந்தணாளர்க்கு
அறிவித்தான் 4.6.39

1250 அச் சொல் கேட்ட அருமறையோர் ஆயன் அறியான்
என்று அவற்றின்
இச்சை வழியே யான் மேய்ப்பேன் என்று எம் பசுக்கள்
தமைக் கறந்து
பொச்சம் ஒழுகு மாணவகன் பொல்லாங்கு உரைக்க
அவன் தாதை
எச்ச தத்தன் தனை அழைமின் என்றார் அவையில்
இருந்தார்கள் 4.6.40

1251 ஆங்கு மருங்கு நின்றார்கள் அவ் அந்தணன் தன்
திருமனையின்
பாங்கு சென்று மற்றவனை அழைத்துக் கொண்டு வரப்
பரந்த
ஓங்கு சபையோர் அவனைப் பார்த்து ஊர் ஆனிரை
மேய்த்து உன் மகன் செய்
தீங்கு தன்னைக் கேள் என்று புகுந்த பரிசு செப்புவார் 4.6.41

1252 அந்தண் மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பசுக்களான
எலாம்
சிந்தை மகிழ்ந்து பரிவினால் திரளக் கொடுபோய்
மேய்பான் போல்
கந்தம் மலிபூம் புனல் மண்ணி மணலில் கறந்து பால்
உகுத்து
வந்த பரிசே செய்கின்றான் என்றான் என்று வாய்
மொழிந்தார் 4.6.42

1253 மறையோர் மொழியக் கேட்டு அஞ்சி சிறு மாணவகன்
செய்த இது
இறையும் நான் முன் பறிந்திலேன் இதற்கு முன்பு
புகுந்து அதனை
நிறையும் பெருமை அந்தணர்காள் பொறுக்க
வேண்டும் நீங்கள்
எனக் குறை கொண்டு இறைஞ்சி இனிப் புகுதில்
குற்றம் எனதேயாம் என்றான் 4.6.43

1254 அந்தணாளர் தமை விடை கொண்டு அந்தி தொழுது
மனை புகுந்து
வந்த பழி ஒன்று என நினைந்தே மகனார் தமக்கு வாய்
நேரான்
இந்த நிலைமை அறிவேன் என்று இரவு கழிந்து நிரை
மேய்க்க
மைந்தனார் தாம் போயின பின் மறைந்து சென்றான்
மறை முதியோன் 4.6.44

1255 சென்ற மறையோன் திருமகனார் சிறந்த ஊர் ஆன்
நிரை கொடு போய்
மன்றல் மருவும் புறவின் கண் மேய்ப்பார் மண்ணி
மணற் குறையில்
அன்று திரளக் கொடு சென்ற அதனை அறிந்து
மறைந்தப் பால்
நின்ற குரவின் மிசை ஏறி நிகழ்வது அறிய ஒளித்து
இருந்தான் 4.6.45

1256 அன்பு புரியும் பிரம சாரிகளும் மூழ்கி அரனார்க்கு
முன்பு போல மணல் கோயில் ஆக்கி முகை மென்
மலர் கொய்து
பின்பு வரும் ஆன் முலை பொழிபால் பெருகும்
குடங்கள் பேணும் இடம்
தன்பால் கொணர்ந்து தாபித்துப் பிறவும் வேண்டுவன
சமைத்தார் 4.6.46

1257 நின்ற விதியின் விளையாட்டால் நிறைந்த அரும்
பூசனை தொடங்கி
ஒன்றும் உள்ளத்து உண்மையினால் உடைய நாதன்
திரு முடிமேல்
மன்றல் விரவும் திருப் பள்ளித் தாமம் சாத்தி
மஞ்சனமா
நன்று நிறை தீம் பால் குடங்கள் எடுத்து நயப்பு உற்று
ஆட்டுதலும் 4.6.47

1258 பரவ மேல் மேல் எழும் பரிவும் பழைய பான்மை
மிகும் பண்பும்
விரவ மேதக்கவர் பால் மேவும் பெருமை வெளிப்
படுப்பான்
அரவம் மேவும் சடைமுடியார் அருளாம் என்ன அறிவு
அழிந்து
குரவ மேவு முது மறையோன் கோப மேவும் படி
கண்டான் 4.6.48

1259 கண்ட போதே விரைந்து இழிந்து கடிது சென்று கைத்
தண்டு
கொண்டு மகனார் திரு முதுகில் புடைத்துக்
கொடிதாம் மொழி கூறத்
தொண்டு புரியும் சிறிய பெரும் தொன்றலார் தம்
பெருமான் மேல்
மண்டு காதல் அருச்சனையின் வைத்தார் மற்று
ஒன்று அறிந்திலரால் 4.6.49

1260 மேலாம் பெரியோர் பலகாலும் வெகுண்டோ ன்
அடிக்க வேறு உணரார்
பாலார் திருமஞ்சனம் ஆட்டும் பணியில் சலியாதது
கண்டு
மாலா மறையோன் மிகச் செயிர்த்து வைத்த
திருமஞ்சனக் குடப்பால்
காலால் இடறிச் சிந்தினான் கையால் கடமைத் தலை
நின்றான் 4.6.50

1261 சிந்தும் பொழுதில் அது நோக்கும் சிறுவர் இறையில்
தீயோனைத்
தந்தை எனவே அறிந்தவன் தன் தாள்கள் சிந்தும்
தகுதியினால்
முந்தை மருங்கு கிடந்த கோல் எடுத்தார்க்கு அதுவே
முறைமை யினால்
வந்து மழுவாயிட எறிந்தார் மண் மேல் வீழ்ந்தான்
மறையோனும் 4.6.51

1262 எறிந்த அதுவே அர்ச்சனையில் இடையூறு அகற்றும்
படையாக
மறிந்த தாதை இருதாளும் துணித்த மைந்தர்
பூசனையில்
அறிந்த இடையூறு அகற்றினர் ஆய் முன் போல்
அருச்சித்திடப்புகலும்
செறிந்த சடை நீள் முடியாரும் தேவியோடும் விடை
ஏறி 4.6.52

1263 பூத கணங்கள் புடை சூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்து ஏத்த விமல மூர்த்தி திரு
உள்ளம்
காதல் கூர வெளிப் படலும் கண்டு தொழுது மனம்
களித்துப்
பாத மலர்கள் மேல் விழுந்தார் பத்தி முதிர்ந்த
பாலகனார் 4.6.53

1264 தொடுத்த இதழி சூழ் சடையார் துணைத் தாள் நிழல்
கீழ் விழுந்தவரை
எடுத்து நோக்கி நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ
எறிந்தாய்
அடுத்த தாதை இனி உனக்கு நாம் என்று அருள்
செய்து அணைத்து அருளி
மடுத்த கருணையால் தடவி உச்சி மோந்து மகிழ்ந்து
அருள 4.6.54

1265 செங்கண் விடையார் திரு மலர்க்கை தீண்டப் பெற்ற
சிறுவனார்
அங்கண் மாயை யாக்கையின் மேல் அளவின்று
உயர்ந்த சிவமயமாய்
பொங்கி எழுந்த திரு அருளின் மூழ்கிப் பூ மேல் அயன்
முதலாம்
துங்க அமரர் துதி செய்யச் சூழ்ந்த ஒளியில்
தோன்றினார் 4.6.55

1266 அண்டர் பிரானும் தொண்டர் தமக்கு அதிபன் ஆக்கி
அனைத்து நாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும்
உனக்காகச்
சண்டீசனும் ஆம் பதம் தந்தோம் என்று அங்கு அவர்
பொன் தட முடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச்
சூட்டினார் 4.6.56

1267 எல்லா உலகும் ஆர்ப்பு எடுப்ப எங்கும் மலர் மாரிகள்
பொழியப்
பல்லாயிரவர் கண நாதர் படி ஆடிக் களி பயிலச்
சொல்லார் மறைகள் துதி செய்யச் சூழ் பல்லியங்கள்
எழச் சைவ
நல்லாறு ஓங்க நாயகமாம் நங்கள் பெருமான்
தொழுது அணைந்தார் 4.6.57

1268 ஞாலம் அறியப் பிழை புரிந்து நம்பர் அருளால் நால்
மறையின்
சீலம் திகழும் சேய்ஞலூர்ப் பிள்ளையார் தம்
திருக்கையில்
கோல மழுவால் ஏறுண்டு குற்றம் நீங்கிச் சுற்றம்
உடன்
மூல முதல்வர் சிவ லோகம் எய்தப் பெற்றான் முது
மறையோன் 4.6.58

1269 வந்து மிகை செய் தாதை தாள் மழுவால் துணித்த
மறைச் சிறுவர்
அந்த உடம்பு தன் உடனே அரனார் மகனார் ஆயினார்
இந்த நிலைமை அறிந்தாரார்? ஈறிலாதார் தமக்கு
அன்பு
தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றோ சாற்றும்
கால் 4.6.59

சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி

1270 நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணி
கண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும்
தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத் தொண்டத் தொகை முன்
பணித்த திருவாளன்
வாச மலர் மென் கழல் வணங்க வந்த பிறப்பை
வணங்குவாம் 4.6.60

சருக்கம் 4-க்குத் திருவிருத்தம் - 1270
திருச்சிற்றம்பலம்

மும்மையால் உலகாண்ட சருக்கம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

5. திருநின்ற சருக்கம்

5.1	திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்	(1271 - 1699)	மின்பதிப்பு
5.2	குலச்சிறை நாயனார் புராணம்	(1700-1710)	மின்பதிப்பு
5.3	பெரு மிழலைக் குறும்ப நாயனார் புராணம்	(1711 -1721)	மின்பதிப்பு
5.4	காரைக்கால் அம்மையார் புராணம்	(1722-1787)	மின்பதிப்பு
5.5	அப்பூதி அடிகள் நாயனார் புராணம்	(1788-1832)	மின்பதிப்பு
5.6	திரு நீல நக்க நாயனார் புராணம்	(1833 -1870)	மின்பதிப்பு
5.7	நமிநந்தி அடிகள் நாயனார் புராணம்	(1871 -1902)	மின்பதிப்பு

5.1 திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் (1271 - 1699)

திருச்சிற்றம்பலம்

1271 திரு நாவுக்கு அரசர் வளர் திருத் தொண்டின் நெறி
வாழ
வரு ஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்
பெரு நாமச் சீர் பரவல் உறுகின்றேன் பேர் உலகில்
ஒரு நாவுக்கு உரை செய்ய ஒண்ணாமை உணராதேன் 5.1.1

1272 தொன்மை முறை வரு மண்ணின் துகள் அன்றித்
துகள் இல்லா
நன்மை நிலை ஒழுக்கத்து நலம் சிறந்த குடி மல்கிச்
சென்னி மதி புனையவளர் மணி மாடச் செழும் பதிகள்
மன்னி நிறைந்து உளது திரு முனைப்பாடி வளநாடு 5.1.2

1273 புனப் பண்ணை மணியினோடும் புறவின் நறும்
புதுமலரின்
கனப்பெண்ணில் திரை சுமந்து கரை மருங்கு பெரும்
5.1.3

பகட்டேர்
இனப் பண்ணை உழும் பண்ணை எறிந்து உலவி
எவ்வுலகும்
வனப்பெண்ண வரும் பெண்ணை மா நதி பாய் வளம்
பெருகும்
1274 காலெல்லாம் தகட்டு வரால் கரும்பு எல்லாம் கண்
பொழி தேன்
பாலெல்லாம் கதிர்ச் சாலி பரப்பு எல்லாம் குலைக்
கமுகு
சாலெல்லாம் தரள நிரை தடம் எல்லாம் செங்கழுநீர்
மேலெல்லா ம் அகில் தூபம் விருந்து எல்லாம்
திருந்து மனை 5.1.4
1275 கடைஞர் மிடை வயல் குறைத்த கரும்பு குறை பொழி
கொழும் சாறு
இடை தொடுத்த தேன் கிழிய இழிந்து ஒழுகு நீத்தம்
உடன்
புடை பரந்து ஞி மிறொலிப்பப் புதுப் புனல் போல்
மடை உடைப்ப
உடை மடையக் கரும்படு கட்டியின் அடைப்ப ஊர்கள்
தொறும் 5.1.5
1276 கரும் கதலிப் பெருங்குலைகள் களிற்றுக் கைம் முகம்
காட்ட
மருங்கு வளர் கதிர்ச் செந்நெல் வயப் புரவி முகம்
காட்டப்
பெருஞ்சகடு தேர் காட்ட வினைஞர் ஆர்ப்பொலி
பிறங்க
நெருங்கிய சாதுரங்க பல நிகர்பனவாம் நிறை மருதம் 5.1.6
1277 நறையாற்றுங் கமுகு நவ மணிக் கழுத்தின் உடன்
கூந்தல்
பொறை ஆற்றா மகளிர் எனப் புறம்பு அலை
தண்டலை வேலித்
துறை ஆற்ற மணி வண்ணச் சுரும்பு இரைக்கும்
பெரும் பண்ணை
நிறை ஆற்று நீர்க் கொழுந்து படர்ந்தேறும்
நிலைமையதால் 5.1.7
1278 மரு மேவு மலர் மேய மா கடலினுட் படியும்
உரு மேகம் என மண்டி உகைத்த கரும் கன்று போல்
வரு மேனிச் செங்கண் வரால் மட முட்டப் பால்

5.1.8

சொரியும்
கரு மேதி தனைக் கொண்டு கரை புரள்வ திரை வாவி
1279 மொய்யளி சூழ் நிரைநீல முழு வலயங்களின்
அலையச்
செய்ய தளிர் நறு விரலில் செழு முகையின் நகம்
சிறப்ப
மெய்யொளியின் நிழல் காணும் ஆடி என வெண்
மதியை
வைய மகள் கை அணைத்தால் போல் உயர்வ மலர்ச்
சோலை 5.1.9
1280 எயில் குலவும் வளம் பதிகள் எங்கும் மணம் தங்கும்
வயல்
பயிர்க் கண்வியல் இடங்கள் பல பரந்து உயர் நெற்
கூடுகளும்
வெயில் கதிர்மென் குழை மகளிர் விரவிய மாடமும்
மேவி
மயில் குலமும் முகல் குலமும் மாறாட மருங்கு
ஆடும் 5.1.10
1281 மறம் தரு தீ நெறி மாற மணிகண்டர் வாய்மை நெறி
அறம் தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்து அருள உளதானால் நம் அளவோ பேர் உலகில்
சிறந்த திருமுனைப் பாடித் திறம் பாடும் சீர்ப் பாடு 5.1.11
1282 இவ் வகைய திரு நாட்டில் எனைப் பல ஊர்களும்
என்றும்
மெய் வளங்கள் ஓங்க வரும் மேன்மையன ஆங்கு
அவற்றுள்
சைவ நெறி ஏழ் உலகும் பாலிக்கும் தன்மையினால்
தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருவாமூர்
திருவாமூர் 5.1.12
1283 ஆங்கு வன முலைகள் சுமந்து அணங்குவன மகளிர்
இடை
ஏங்குவன நூபுரங்கள் இரங்குவன மணிக் காஞ்சி
ஓங்குவன மாட நிரை ஒழுகுவன வழுவில் அறம்
நீங்குவன தீங்கு நெறி நெருங்குவன பெரும் குடிகள் 5.1.13
1284 மலர் நீலம் வயல் காட்டும் மைஞ் ஞீலம் மதி காட்டும்
அலர் நீடு மறு காட்டும் அணி ஊசல் பல காட்டும்
புலர் நீலம் இருள் காட்டும் பொழுது உழவர் ஒலி
காட்டும்
5.1.14

கல நீடு மனை காட்டும் கரை காட்டாப் பெருவளங்கள்
1285 தலத்தின் கண் விளங்கிய அத் தனிப் பதியில்
அனைத்து வித
நலத்தின் கண் வழுவாத நடை மரபில் குடி நாப்பண்
விலங்கின் மனை ஒழுக்கத்தின் மேதக்க
ந்லைவேளாண்
குலத்தின் கண் வரும் பெருமைக் குறுக்கையர் தம்
குடி விளங்கும் 5.1.15

1286 அக் குடியின் மேல் தோன்றலாய பெரும்
தன்மையினார்
மிக்க மனை அறம் புரிந்து விருந்து அளிக்கும்
மேன்மையினார்
ஒக்கல் வளர் பெரும் சிறப்பின் உளர் ஆனார் உளர்
ஆனார்
திக்கு நிலவும் பெருமை திகழ வரும் புகழனார் 5.1.16

1287 புகழனார் தமக்கு உரிமைப் பொருவில் குலக்குடியின்
கண்
மகிழவரு மணம் புணர்ந்த மாதினியார் மணி
வயிற்றில்
நிகழும் மலர்ச் செங்கமல நிரை இதழின் அகவயினில்
திகழ வருந் திரு அனைய திலகவதியார் பிறந்தார் 5.1.17

1288 திலகவதியார் பிறந்து சில முறை ஆண்டு அகன்றதன்
பின்
அலகில் கலைத் துறை தழைப்ப அரும் தவத்தோர்
நெறிவாழ
உலகில் வரும் இருள் நீக்கி ஒளி விளங்கு கதிர் போல்
பின்
மலரும் மருள் நீக்கியார் வந்து அவதாரம் செய்தார் 5.1.18

1289 மாதினியார் திரு வயிற்றின் மன்னிய சீர்ப் புகனார்
காதலனார் உதித்த தற்பின் கடன் முறைமை
மங்கலங்கள்
மேதகு நல் வினை சிறப்ப விரும்பிய பாராட்டினுடன்
ஏதமில் பல் கிளை போற்ற இளங் குழவிப் பதம்
கடந்தார் 5.1.19

1290 மருள் நீக்கியார் சென்னி மயிர் நீக்கும் மணவினையும்
தெருண் நீர்ப்பன் மாந்தர் எலாம் மகிழ் சிறப்பச் செய்து
அதற்பின்
பொருள் நீத்தம் கொள வீசிப் புலன் கொளுவ மன
5.1.20

முகிழ்த்த
சுருள் நீக்கி மலர் விக்கும் கலை பயிலத் தொடங்கு
வித்தார்

1291 தந்தையார் களி மகிழ்ச்சி தலை சிறக்க
முறைமையினால்
சிந்தை மலர்ந்து எழும் உணர்வில் செழும் கலையின்
திறங்கள் எல்லாம்
முந்தை முறைமையில் பயின்று முதிர அறிவு
எதிரும் வகை
மைந்தனார் மறு ஒழித்த இளம் பிறை போல் வளர்
கின்றார் 5.1.21

1292 அந்நாளில் திலகவதியாருக்கு ஆண்டு ஆறு
இரண்டின்
முன்னாக ஒத்த குல முதல் வேளாண் குடித் தலைவர்
மின்னார் செஞ்சடை அண்ணல் மெய் அடிமை
விருப்புடையார்
பொன்னாரும் மணி மௌலிப் புரவலன் பால் அருள்
உடையார் 5.1.22

1293 ஆண் தகைமைத் தொழிலின் கண் அடல் அரியேறு
என உள்ளார்
காண் தகைய பெருவனப்பில் கலிப்பகையார் எனும்
பெயரார்
பூண்ட கொடைப் புகழனார் பால் பொருவின் மகள்
கொள்ள
வேண்டி எழுங் காதலினால் மேலோரைச்
செலவிட்டார் 5.1.23

1294 அணங்கு அனைய திலகவதியார் தம்மை ஆங்கு
அவர்க்கு
மணம் பேசி வந்தவரும் வந்தபடி அறிவிப்பக்
குணம் பேசிக் குலம் பேசிக் கோதில் சீர்ப் புகழனார்
பணம் கொள் அரவு அகல் அல்குல் பைந் தொடியை
மணம் நேர்ந்தார் 5.1.24

1295 கன்னித் திருத் தாதையார் மணம் இசைவு
கலிப்பகையார்
முன் அணைந்தார் அறிவிப்ப வதுவை வினை
முடிப்பதன் முன்
மன்னவற்கு வடபுலத்து ஓர் மாறு ஏற்க மற்றவர்மேல்
அன்னவர்க்கு விடை கொடுத்தான் அவ்வினை மேல்
5.1.25

அவர் அகன்றார்

1296 வேந்தற்கு உற்று உழி வினை மேல் வெஞ்சமத்தில்
விடை கொண்டு
போந்த வரும் பொரு படையும் உடன் கொண்டு சில
நாளில்
காய்ந்த சினப் பகைப் புலத்தைக் கலந்து கடும் சமர்க்
கடலை
நீந்துவார் நெடு நாள்கள் நிறை வெம் போர்த் துறை
விளைத்தார் 5.1.26

1297 ஆய நாள் இடை இப்பால் அணங்கு அனையாள்
தனைப் பயந்த
தூயகுலப் புகழனார் தொன்று தொடு நிலையாமை
மேய வினைப் பயத்தாலே இவ் உலகை விட்டு
அகலத்
தீய அரும் பிணி உழந்து விண் உலகில் சென்று
அடைந்தார் 5.1.27

1298 மற்றவர் தாம் உயிர் நீப்ப மனைவியார் மாதினியார்
சுற்றம் உடன் மக்களையும் துகளாவே நீத்துப்
பெற்றிமையால் உடன் என்றும் பிரியாத உலகு
எய்தும்
கற்பு நெறி வழுவாமல் கணவனார் உடன் சென்றார் 5.1.28

1299 தாதையாரும் பயந்த தாயாரும் இறந்த அதன் பின்
மாதரார் திலகவதியாரும் அவர் பின் வந்த
காதலனார் மருண் நீக்கியாரும் மனக் கவலையினால்
பேது உறு நல் சுற்றமொடும் பெரும் துயரில்
அழுந்தினார் 5.1.29

1300 ஒருவாறு பெரும் கிளைஞர் மனம் தேற்றத் துயர்
ஒழிந்து
பெரு வானம் அடைந்தவர்க்குச் செய் கடன்கள்
பெருக்கினார்
மருவார்மேல் மன்னவற்காய் மலையப் போம்
கலிப்பகையார்
பொருவாரும் போர்க் களத்தில் உயிர் கொடுத்துப்
புகழ் கொண்டார் 5.1.30

1301 வெம் முனை மேல் கலிப்பகையார் வேல் வேந்தன்
ஏவப் போய்
அம் முனையில் பகை முருக்கி அமர் உலகம்
ஆள்வதற்குத்
5.1.31

தம் உடைய கடன் கழித்த பெரு வார்த்தை தலம்
சாற்றச்
செம்மலர் மேல் திரு அனைய திலகவதியார் கேட்டார்

1302 எந்தையும் எம் அனையும் அவர்க்கு எனக் கொடுக்க
இசைந்தார்கள்
அந்த முறையால் அவர்க்கே உரியது நான்
ஆதலினால்
இந்த உயிர் அவர் உயிரோடு இசைவிப்பன் எனத்
துணிய
வந்தவர் தம் அடி இணை மேல் மருண் நீக்கியார்
விழுந்தார் 5.1.32

1303 அந் நிலையில் மிகப் புலம்பி அன்னையும் அத்தனும்
அகன்ற
பின்னையும் நான் உமை வணங்கப் பெறுதலின் உயிர்
தரித்தேன்
என்னை இனித் தனிக் கைவிட்டு ஏகுவீர் எனில்
யானும்
முன்னம் உயிர் நீப்பன் என மொழிந்து இடரின்
அழுந்தினார் 5.1.33

1304 தம்பியார் உளர் ஆக வேண்டும் என வைத்த தயா
உம்பர் உலகு அணைய உறு நிலை விலக்க உயிர்
தாங்கி
அம் பொன் மணி நூல் தாங்காது அனைத்து
உயிர்க்கும் அருள் தாங்கி
இம்பர் மனைத் தவம் புரிந்து திலகவதியார் இருந்தார் 5.1.34

1305 மாசின் மனத் துயர் ஒழிய மருண் நீக்கியார் நிரம்பித்
தேச நெறி நிலையாமை கண்டு அறங்கள் செய்வார்
ஆய்க்
காசினி மேல் புகழ் விளங்க நிதி அளித்துக்
கருணையினால்
ஆசில் அறச் சாலைகளும் தண்ணீர்ப் பந்தரும்
அமைப்பார் 5.1.35

1306 கா வளர்த்தும் குளம் தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்து அளித்தும்
விருந்து அளித்தும்
நாவலர்க்கு வளம் பெருக நல்கியும் நால் நிலத்து
உள்ளோர்
யாவர்க்கும் தவிராத ஈகை வினைத் துறை நின்றார் 5.1.36

1307 நில்லாத உலகு இயல்பு கண்டு நிலையா வாழ்க்கை
அல்லேன் என்று அறத் துறந்து சமயங்களான
வற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமை யினால்
கொல்லாமை மறைந்து உறையும் அமண் சமயம்
குறுகுவார் 5.1.37

1308 பாடலி புத்திரம் என்னும் பதி அணைந்து சமண் பள்ளி
மாடணைந்தார் வல்லமணர் மருங்கு அணைந்து
மற்றவர்க்கு
வீடு அறியும் நெறி இதுவே என மெய் போல்
தங்களுடன்
கூடவரும் உணர்வு கொளக் குறி பலவும்
கொளுவினார் 5.1.38

1309 அங்கு அவரும் அமண் சமயத்து அரும் கலை நூல்
ஆன எலாம்
பொங்கும் உணர்வுறப் பயின்றே அந் நெறியில் புலன்
சிறப்பத்
துங்க முழு உடல் சமணர் சூழ்ந்து மகிழ்வார்
அவர்க்குத்
தங்களில்ன் மேலாம் தரும சேனர் எனும் பெயர்
கொடுத்தார் 5.1.39

1310 அத்துறையின் மீக் கூரும் அமைதியினால் அகல்
இடத்தில்
சித்த நிலை அறியாதாரையும் வாதின் கண்
உய்த்த உணர்வினில் வென்றே உலகின் கண் ஒளி
உடைய
வித்தகராய் அமண் சமயத் தலைமையினில் மேம்
பட்டார் 5.1.40

1311 அந் நெறியின் மிக்கார் அவர் ஒழுக ஆன்ற தவச்
செந்நெறியின் வைகும் திலகவதியார் தாமும்
தொன்னெறியின் சுற்றத் தொடர்பு ஒழியத் தூய சிவ
நன்னெறியே சேர்வதற்கு நாதன் தாள் நண்ணுவார் 5.1.41

1312 பேராத பாசப் பிணிப்பு ஒழியப் பிஞ்ஞகன் பால்
ஆராத அன்பு பெற ஆதரித்த அம் மடவார்
நீரார் கெடில வட நீள் கரையில் நீடு பெரும்
சீரார் திருவதிகை வீரட்டானம் சேர்ந்தார் 5.1.42

1313 சென்று திரு வீரட்டானத்து இருந்த செம் பவளக்
குன்றை அடி பணிந்து கோதில் சிவ சின்னம்
5.1.43

அன்று முதல் தாங்கி ஆர்வம் உறத் தம் கையால்
துன்று திருப் பணிகள் செய்யத் தொடங்கினார்

1314 புலர்வதன் முன் திருவலகு பணி மாறிப் புனி அகன்ற
நலம் மலி ஆன் சாணத்தால் நன்கு திரு மெழுக்கிட்டு
மலர் கொய்து கொடு வந்து மாலைகளும் தொடுத்து
அமைத்துப்
பலர் புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்தார் 5.1.44

1315 நாளும் மிகும் பணி செய்து குறைந்து அடையும்
நன்னாளில்
கேளுறும் அன்புற ஒழுகும் கேண்மையினார் பின்
பிறந்தார்
கோளுறு தீவினை முந்தப் பர சமயம் குறித்து அதற்கு
மூளும் மனக் கவலையினால் முற்ற வரும் துயர்
உழந்து 5.1.45

1316 தூண்டு தவ விளக்கு அனையார் சுடர் ஒளியைத்
தொழுது என்னை
ஆண்டு அருளும் நீராகில் அடியேன் பின் வந்தவனை
ஈண்டு வினைப் பர சமயக் குழி நின்றும் எடுத்து ஆள
வேண்டும் எனப் பல முறையும் விண்ணப்பம்
செய்தனரால் 5.1.46

1317 தவம் என்று பாய் இடுக்கி தலை பறித்து நின்று
உண்ணும்
அவம் ஒன்று நெறி வீழ்வான் வீழாமே அருளும் எனச்
சிவம் ஒன்று நெறி நின்ற திலகவதியார் பரவப்
பவம் ஒன்றும் வினை தீர்ப்பார் திரு உள்ளம்
பற்றுவார் 5.1.47

1318 மன்னு தபோ தனியார்க்குக் கனவின் கண் மழ
விடையார்
உன்னுடைய மனக் கவலை ஒழி நீ உன் உடன்
பிறந்தான்
முன்னமே முனியாகி எனை அடையத் தவம்
முயன்றான்
அன்னவனை இனிச் சூலை மடுத்து ஆள்வான் என
அருளி 5.1.48

1319 பண்டு புரி நல் தவத்துப் பழுதின் அளவில் இறை
வழுவும்
தொண்டரை ஆளத் தொடங்கும் சூலை வேதனை
தன்னைக் 5.1.49

கண் தரு நெற்றியர் அருளக் கடும் கனல் போல் அடும்
கொடிய
மண்டு பெரும் சூலை அவர் வயிற்றின் இடைப்
புக்கதால்

1320 அடைவில் அமண் புரி தரும சேனர் வயிற்று
அடையும் அது
வட அனலும் கொடு விடமும் வச்சிரவும் பிறவுமாம்
கொடிய எலாம் ஒன்றாகும் எனக் குடரின் அகம்
குடையப்
படர் உழந்து நடுங்கி அமண் பாழியறை இடை
விழுந்தார் 5.1.50

1321 அச் சமயத்து இடைத் தாம் முன் அதிகரித்து வாய்த்து
வரும்
விச்சைகளால் தடுத்திடவும் மேல் மேலும் மிக முடுகி
உச்சம் உற வேதனை நோய் ஓங்கி எழ ஆங்கு அவர்
தாம்
நச்சரவின் விடம் தலைக் கொண்டு என மயங்கி
நவையுற்றார் 5.1.51

1322 அவர் நிலைமை கண்ட அதற்பின் அமண் கையர் பலர்
ஈண்டிக்
கவர் கின்ற விடம் போல் முன் கண்டு அறியாக்
கொடும் சூலை
இவர் தமக்கு வந்தது இனி யாது செயல் என்று
அழிந்தார்
தவம் என்று வினைப் பெருக்கிச் சார்பு அல்லா
நெறிசார்வார் 5.1.52

1323 புண் தலைவன் முருட்டு அமணர் புலர்ந்து செயல்
அறியாது
குண்டிகை நீர் மந்திரித்துக் குடிப்பித்தும் தணியாமை
கண்டு மிகப் பீலி கொடு கால் அளவும் தடவி இடவும்
பண்டையினும் நோவு மிகப் பரிபவத்தால் இடர்
உழந்தார் 5.1.53

1324 தாவாத புகழ்த் தரும சேனருக்கு வந்த பிணி
ஓவாது நின்று இடலும் ஒழியாமை உணர்ந்தாராய்
ஆ! ஆ! நாம் என் செய்கோம் என்று அழிந்த
மனத்தினராய்ப்
போவார்கள் இது நம்மால் போக்க அரிதாம் எனப்
புகன்று 5.1.54

1325 குண்டர்களும் கை விட்டார் கொடும் சூலை மிசைக் கொண்டு
மண்டி மிக மேல் மேலும் பெருகுதலால் மதி மயங்கிப்
பண்டை உறவு உணர்ந்தார்க்குத் திலகவதியார் உளராகக்
கொண்டு அவர்பால் ஊட்டுவான் தனைவிட்டார் குறிப்பு உணர்த்த 5.1.55

1326 ஆங்கு அவன் போய்த் திருவதிகை தணை அடைய அரும் தவத்தார்
பூங்கமழ் நந்தனவனத்தின் புறம்பு அணையக் கண்டு இறைஞ்சி
ஈங்கு யான் உமக்கு இளையார் ஏவலினால் வந்தது எனத்
தீங்கு உளவோ என வினவ மற்றவனும் செப்புவான் 5.1.56

1327 கொல்லாது சூலை நோய் குடர் முடக்கித் தீராமை
எல்லாரும் கை விட்டார் இது செயல் என் முன் பிறந்த
நல்லாள் பால் சென்று இயம்பி நான் உய்யும்படி கேட்டு இங்கு
அல்லாகும் பொழுது அணைவாய் என்றார் என்று அறிவித்தான் 5.1.57

1328 என்று அவன் முன் கூறுதலும் யான் அங்கு உன் உடன் போந்து
நன்று அறியா அமண் பாழி நண்ணுகிலேன் எனும் மாற்றம்
சென்று அவனுக்கு உரை என்று திலகவதியார் மொழிய
அன்று அவனும் மீண்டு போய்ப் புகுந்தபடி அவர்க்கு உரைத்தான் 5.1.58

1329 அவ் வார்த்தை கேட்டலுமே அயர்வு எய்தி இதற்கு இனி யான்
எவ்வாறு செய்வன் என ஈசர் அருள் கூடுதலால்
ஒவ்வா இப் புன் சமயத்து ஒழியா இத்துயர் ஒழியச்
செவ்வாறு சேர் திலக வதியார் தாள் சேர்வன் என 5.1.59

1330 எடுத்த மனக் கருத்து உய்ய எழுதலால் எழு முயற்சி
அடுத்தலுமே அயர்வு ஒதுங்கத் திருவதிகை அணைவதனுக்கு
உடுத்து உழலும் பாய் ஒழிய உறி உறு குண்டிகை ஒழியத்
5.1.60

தொடுத்த பீலியும் ஒழியப் போவதற்குத் துணிந்து
எழுந்தார்

1331 பொய் தரும் மால் உள்ளத்துப் புன் சமணர் இடம்
கழிந்து
மெய் தருவான் நெறி அடைவார் வெண் புடைவை
மெய் சூழ்ந்து
கை தருவார் தமை ஊன்றிக் காணாமே இரவின் கண்
செய் தவ மாதவர் வாழும் திருவதிகை சென்று
அடைவார் 5.1.61

1332 சுலவி வயிற்று அகம் கனலும் சூலை நோயுடன்
தொடரக்
குலவி எழும் பெருவிருப்புக் கொண்டு அணையக்
குலவரை போன்று
இலகு மணி மதில் சோதி எதிர் கொள்
திருவதிகையினில்
திலக வதியார் இருந்த திரு மடத்தைச் சென்று
அணைந்தார் 5.1.62

1333 வந்து அணைந்து திலகவதியார் அடிமேல் உற
வணங்கி
நம் தமது குலம் செய்த நல் தவத்தின் பயன் அனையீர்
இந்த உடல் கொடும் சூலைக் கிடைந்து அடைந்தேன்
இனி மயங்காது
உய்ந்து கரை ஏறுநெறி உரைத்து அருளும் என
உரைத்து 5.1.63

1334 தாள் இணை மேல் விழுந்து அயரும் தம்பியார் தமை
நோக்கி
ஆள் உடைய தம் பெருமான் அருள் நினைந்து கை
தொழுது
கோளில் பரசமய நெறிக் குழியில் விழுந்து அறியாது
மூளும் அரும் துயர் உழந்தீர்! எழுந்தீர்! என
மொழிந்தார் 5.1.64

1335 மற்ற வுரை கேட்டலும் ஏ மருண் நீக்கியார் தாமும்
உற்ற பிணி உடல் நடுங்கி எழுந்து தொழ உயர்
தவத்தோர்
கற்றை வேணியர் அருளே காணும் இது கழல்
அடைந்தோர்
பற்று அறுப்பார் தமைப் பணிந்து பணி செய்வீர் எனப்
பணித்தார் 5.1.65

1336 என்ற பொழுது அவர் அருளை எதிர் ஏற்றுக் கொண்டு
இறைஞ்ச
நின்ற தபோதனியாரும் நின்மலன் பேர் அருள்
நினைந்து
சென்று திரு வீரட்டம் புகுவதற்குத் திருக் கயிலைக்
குன்று உடையார் திரு நீற்றை அஞ்சு எழுத்து ஓதிக்
கொடுத்தார் 5.1.66

1337 திரு வாளன் திரு நீறு திலகவதியார் அளிப்ப
பெரு வாழ்வு வந்தது எனப் பெருந்தகையார் பணிந்து
ஏற்ற அங்கு
உருவார அணிந்து தமக்குற்ற இடத்து உய்யும் நெறி
தருவாராய்த் தம் முன்பு வந்தார் பின் தாம் வந்தார் 5.1.67

1338 நீறு அணிந்தார் அகத்து இருளும் நிறை கங்குல்
புறத்து இருளும்
மாற வரும் திருப் பள்ளி எழுச்சியினில் மாதவம் செய்
சீர் அடியார் திரு அலகும் திரு மெழுக்கும்
தோண்டியும் கொண்டு
ஆறு அணிந்தார் கோயிலின் உள் அடைந்தவரைக்
கொடு புக்கார் 5.1.68

1339 திரைக் கெடில வீரட்டானத்து இருந்த செங்கனக
வரைச் சிலையார் பெரும் கோயில் தொழுது வலம்
கொண்டு இறைஞ்சித்
தரைத் தலத்தின் மிசை வீழ்ந்து தம்பிரான் திரு
அருளால்
உரைத் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற
உணர்ந்து உரைப்பார் 5.1.69

1340 நீற்றால் நிறைவு ஆகிய மேனியுடன்
நிறை அன்பு உறு சிந்தையில் நேசம் மிக
மாற்றார் புரம் மாற்றிய வேதியரை மருளும்
பிணி மாயை அறுத்திடுவான்
கூற்று ஆயினவாறு விலக்ககிலீர் என
நீடிய கோதில் திருப்பதிகம்
போற்றால் உலகு ஏழின் வரும் துயரம்
போமாறு எதிர் நின்று புகன்றனரால் 5.1.70

1341 மன்னும் பதிகம் அது பாடியபின்
வயிறு உற்று அடு சூலை மறப்பிணிதான்
அந் நின்ற நிலைக் கண் அகன்றிடலும்
அடியேன் உயிரோடு அருள் தந்தது எனாச்
5.1.71

செந் நின்ற பரம் பொருள் ஆனவர் தம்
திருவாரருள் பெற்ற சிறப்பு உடையோர்
முன் நின்ற தெருட்சி மருட்சியினால்
முதல்வன் கருணைக் கடல் மூழ்கினாரே

1342 அங்கங்கள் அடங்க உரோமம்
எலாம் அடையப் புளகம் கண் முகிழ்த்து அலரப்
பொங்கும் புனல் கண்கள் பொழிந்து
இழியப் புவி மீது விழுந்து புரண்டு அயர்வார்
இங்கு என் செயல் உற்ற பிழைப்பு
அதனால் ஏறாத பெருந்திடர் ஏறிட நின்
தங்கும் கருணைப் பெரு வெள்ளம்
இடத் தகுமோ என இன்னன தாம் மொழிவார் 5.1.72

1343 பொய் வாய்மை பெருக்கிய
புன் சமயப் பொறியில் சமண் நீசர் புறத்
துறையாம்
அவ்வாழ் குழியின் கண் விழுந்து
எழுமாறு அறியாது மயங்கி அவம் புரிவேன்
மை வாச நறும் குழல் மா மலையாள்
மணவாளன் மலர்க்கழல் வந்து அடையும்
இவ் வாழ்வு பெறத் தரு சூலையினுக்கு
எதிர்செய் குறை என் கொல் எனத் தொழுவார் 5.1.73

1344 மேவுற்ற இவ் வேலையில்
நீடிய சீர் வீரட்டம் அமர்ந்த பிரான் அருளால்
பாவுற்று அலர் செந்தமிழின் சொல் வளப்
பதிகத் தொடைபாடிய பான்மையினால்
நாவுக்கு அரசு என்று உலகு ஏழினும்
நின் நன்நாமம் நயப்புற மன்னுக என்று
யாவர்க்கும் வியப்புற மஞ்சு உறைவான்
இடையே ஒருவாய்மை எழுந்ததுவே 5.1.74

1345 இத் தன்மை நிகழ்ந்துழி
நாவின் மொழிக்கு இறை ஆகிய அன்பரும் இந்
நெடுநாள்
சித்தம் திகழ் தீவினையேன் அடையும்
திருவோ இது என்று தெருண்டு அறியா
அத்தன்மையன் ஆகிய இராவணனுக்கு
அருளும் கருணைத் திறமான அதன்
மெய்த் தன்மை அறிந்து துதிப்பதுவே
மேல் கொண்டு வணங்கினர் மெய்யுறவே 5.1.75

1346 பரசும் கருணைப் பெரியோன்
அருளப் பறி புன் தலையோர் நெறி பாழ்பட வந்து
அரசு இங்கு அருள் பெற்று உலகு
உய்ந்தது எனா அடியார் புடை சூழ் அதிகைப் பதி தான்
முரசம் பட கந்துடி தண்ணுமை யாழ்
முழவம் கிளை துந்துபி கண்டை உடன்
நிரை சங்கு ஒலி எங்கும் முழங்குதலால்
நெடு மா கடல் என்ன நிறைந்துளதே 5.1.76

1347 மையல் துறை ஏறி மகிழ்ந்து
அலர் சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய் உற்ற திருப்பணி செய்பவராய்
விரவும் சிவ சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அறா உணர்வும்
ஈறு இன்றி எழும் திருவாசகமும்
கையில் திகழும் உழவாரமுடன் கைக்
கொண்டு கலந்து கசிந்தனரே 5.1.77

1348 மெய்ம்மைப் பணி செய்த
விருப்பு அதனால் விண்ணோர் தனி நாயகனார் கழலில்
தம் இச்சை நிரம்ப வரம் பெறும்
அத் தன்மைப் பதி மேவியதா பதியார்
பொய்மைச் சமயப் பிணி விட்டவர்
முன் போதும் பிணி விட்டருளிப் பொருளா
எம்மைப் பணிகொள் கருணைத் திறம்
இங்கு யார் பெற்றனர் என்ன இறைஞ்சினரே 5.1.78

1349 இன்ன தன்மையில் இவர் சிவ நெறியினை எய்தி
மன்னு பேர் அருள் பெற்று இடர் நீங்கைய வண்ணம்
பன்னு தொன்மையில் பாடலி புத்திர நகரில்
புன்மை யே புரி அமணர் தாம் கேட்டு அது பொறாராய் 5.1.79

1350 தரும சேனர்க்கு வந்த அத் தடுப்ப அரும் சூலை
ஒருவராலும் இங்கு ஒழிந்திடாமையின் அவர் உய்யப் போய்ப்
பெருகு சைவராய்ப் பெயர்ந்து தம் பிணி ஒழித்து உய்ந்தார்
மருவு நம் பெரும் சமயம் வீழ்ந்தது என மருள்வார் 5.1.80

1351 மலையும் பல் சமயங்களும் வென்று மற்றவரால்
நிலையும் பெற்ற இந்நெறி இனி அழிந்தது என்று 5.1.81

அழுங்கிக்
கொலையும் பொய்மையும் இலம் என்று
கொடுமையே புரிவோர்
தலையும் பீலியும் தாழ வந்து ஒரு சிறை சார்ந்தார்

1352 இவ்வகைப் பல அமணர்கள் துயருன் ஈண்டி
மெய் வகைத் திறம் அறிந்திடில் வேந்தனும்
வெகுண்டு
சைவனாகி நம் விருத்தியும் தவிர்க்கும் மற்று இனி
நாம்
செய்வது என் என வஞ்சனை தெரிந்து சித்திரிப்பார் 5.1.82

1353 தவ்வை கைவத்து நிற்றலின் தரும சேனரும் தாம்
பொய் வகுத்தது ஓர் சூலை தீர்ந்திலது எனப் போய்
இங்கு
எவ்வ மாக அங்கு எய்தி நம் சமய அங்கனமும்
தெய்வ நிந்தையும் செய்தனர் எனச் சொலத்
தெளிந்தார் 5.1.83

1354 சொன்ன வண்ணமே செய்வது துணிந்த துன்
மதியோர்
முன்னம் நாம் சென்று முறைப்படுவோம் என
முயன்றே
இன்ன தன்மையில் இருள் குழாம் செல்வது போல
மன்னன் ஆகிய பல்லவன் நகரில் வந்து அணைந்தார் 5.1.84

1355 உடை ஒழிந்து ஒரு பேச்சு இடை இன்றி நின்று
உண்போர்
கடை அணைந்தவன் வாயில் காவலருக்கு நாங்கள்
அடைய வந்தமை அரசனுக்கு அறிவியும் என்ன
இடை அறிந்து புக்க வரும் தம் இறைவனுக்கு
இசைப்பார் 5.1.85

1356 அடிகண்மார் எல்லாரும் ஆகுலமாய் மிக அழிந்து
கொடி நுடங்கு திருவாயில் புறத்து அணைந்தார் எனக்
கூற
வடி நெடுவேல் மன்னவனும் மற்றவர் சார்பு
ஆதலினால்
கடிது அணைவான் அவர்க்கு உற்றது என் கொல் எனக்
கவன்று உரைத்தான் 5.1.86

1357 கடை காவல் உடையார்கள் புகுத விடக் காவலன்
பால்
நடை ஆடும் தொழில் உடையார் நண்ணித் தாம்
5.1.87

எண்ணியவாறு
உடையார் ஆகிய தரும சேனர் பிணி உற்றாராய்ச்
சடையானுக்கு ஆளாய் நின் சமயம் ஒழித்தார் என்றார்

1358 விரை அலங்கல் பல்லவனும் அது கேட்டு வெகுண்டு
எழுந்து
புரை உடைய மனத்தினராய் போவதற்குப் பொய்ப்
பிணி கொண்டு
உரை சிறந்த சமயத்தை அழித்து ஒழியப் பெறுவதே
கரையில் தவத்தீர் இதனுக்கு என் செய்வது எனக்
கனன்றான் 5.1.88

1359 தலை நெறி ஆகிய சமயம் தன்னை அழித்து
உன்னுடைய
நிலை நின்ற தொல் வரம்பின் நெறி அழித்த பொறி
இலியை
அலை புரிவாய் எனப் பரவி வாயால் அஞ்சாது
உரைத்தார்
கொலை புரியா நிலை கொண்டு பொய் ஒழுகும்
அமண் குண்டர் 5.1.89

1360 அருள் கொண்ட உணர்வு இன்றி நெறிகோடி
அறிவென்று
மருள் கொண்ட மன்னவனும் மந்திரிகள் தமை
நோக்கித்
தெருள் கொண்டோ ர் இவர் சொன்ன தீயோனைச்
செறுவதற்குப்
பொருள் கொண்டு விடாது என் பால் கொடுவாரும்
எனப் புகன்றான் 5.1.90

1361 அரசனது பணிதலை நின்ற அமைச்சர்களும்
அந்நிலையே
முரசு அதிரும் தானையொடு முன் சென்று முகில்
சூழ்ந்து
விரை செறியும் சோலை சூழ் திருவதிகை தனை
மேவி
பரசமயப் பற்று அறுத்த பான்மையினார் பால்
சென்றார் 5.1.91

1362 சென்று அணைந்த அமைச்சர் உடன் சேனை வீரரும்
சூழ்ந்து
மின் தயங்கு புரிவேணி வேதியனார் அடியவரை
இன்று நுமை அரசன் அழைக்க எமை விடுத்தான்
5.1.92

போதும் என
நின்றவரை நேர் நோக்கி நிறை தவத்தோர் உரை
செய்வார்

1363 நாம் ஆர்க்கும் குடி அல்லோம் என்று எடுத்து
நான்மறையின்
கோமானை நதியின் உடன் குளிர் மதி வாழ் சடை
யானைத்
தேமாலைச் செந்தமிழின் செழும் திருத் தாண்டகம்
பாடி
ஆமாறு நீர் அழைக்கும் அடைவிலம் என்று அருள்
செய்தார் 5.1.93

1364 ஆண்ட அரசருள் செய்யக் கேட்ட வரும் அடி வணங்கி
வேண்டியவர்க் கொண்டு ஏக விடை உகைத்தார்
திருத்தொண்டர்
ஈண்டு வரும் வினைகளுக்கு எம்பிரான் உளன் என்று
இசைந்து இருந்தார்
மூண்ட சினப் போர் மன்னன் முன் அணைந்து அங்கு
அறிவித்தார் 5.1.94

1365 பல்லவனும் அது கேட்டுப் பாங்கு இருந்த பாய்
உடுக்கை
வல் அமணர் தமை நோக்கி மற்று அவனைச்
செய்வது இனிச்
சொல்லும் என அறம் துறந்து தமக்கு உறுதி அறியாத
புல் அறிவோர் அஞ்சாது நீற்று அறையில் இடப்
புகன்றார் 5.1.95

1366 அருகு அணைந்தார் தமை நோக்கி அவ் வண்ணம்
செய்க எனப்
பெருகு சினக் கொடுங் கோலான் மொழிந்திடலும்
பெருந் தகையை
உருகு பெரும் தழல் வெம்மை நீற்று அறையின் உள்
இருத்தித்
திருகு கரும் தாள் கொளுவிச் சேமங்கள் செய்து
அமைத்தார் 5.1.96

1367 ஆண்ட அரசு அதன் அகத்துள் அணைந்த பொழுது
அம்பலத்துத்
தாண்டவம் முன் புரிந்து அருளும் தாள் நிழலைத்
தலைக் கொண்டே
ஈண்டு வரும் துயர் உளவோ ஈசன் அடியார்க்கு என்று
5.1.97

மூண்டமனம் நேர் நோக்கி முதல்வனையே தொழுது
இருந்தார்

1368 வெய்ய நீற்று அறையது தான் வீங்கு இளவேனில் பருவம்
தை வரும் தண் தென்றல் அணை தண் கழுநீர்த் தடம் போன்று
மொய் ஒளி வெண் நிலவு அலர்ந்து முரன்ற யாழ் ஒலியினதாய்
ஐயர் திருவடி நீழல் அருள் ஆகி குளிர்ந்ததே 5.1.98

1369 மாசு இல் மதி நீடுபுனல் மன்னி வளர் சென்னியனைப்
பேச இனியானை உலக ஆளுடைய பிஞ்ஞகனை
ஈசனை எம்பெருமானை எவ் உயிரும் தருவானை
ஆசை இல் ஆரா அமுதை அடி வணங்கி இனிது
இருந்தார் 5.1.99

1370 ஓர் எழுநாள் கழிந்து அதன்பின் உணர்வில் அமணரை அழைத்துப்
பாரும் இனி நீற்று அறையை என உரைத்தான் பல்லவனும்
கார் இருண்ட குழாம் போலும் உரு உடைய கார் அமணர்
தேரும் நிலை இல்லாதார் நீற்று அறையைத் திறந்தார்கள் 5.1.100

1371 ஆனந்த வெள்ளத்தின் இடை மூழ்கி அம்பலவர்
தேன் உந்து மலர் பாதத்து அமுது உண்டு தெளிவு எய்தி
ஊனம் தான் இலர் ஆகி உவந்து இருந்தார் தமைக் கண்டே
ஈனம் தங்கியது இலதாம் என்ன அதிசயம் என்றார் 5.1.101

1372 அதிசயம் அன்றிது முன்னை அமண் சமயச் சாதகத்தால்
இது செய்து பிழைத்து இருந்தான் என வேந்தற்கு உரை செய்து
மதி செய்வது இனிக் கொடிய வல் விடம் ஊட்டுவது என்று
முதிர வரும் பாதகத்தோர் முடை வாயால் மொழிந்தார்கள் 5.1.102

1373 ஆங்கு அது கேட்டலும் கொடிய அமண் சார்பால் கெடு மன்னன்
5.1.103

ஓங்கு பெருமையினால் நஞ்சு ஊட்டும் என உரைப்பத்
தேங்காதார் திருநாவுக்கரையரை அத் தீய விடப்
பாங்கு உடைய பால் அடிசில் அமுது செயப்
பண்ணினார்

1374 நஞ்சும் அமுது ஆம் எங்கள் நாதன் அடியார்க்கு என்று
வஞ்சம் மிகு நெஞ்சு உடையார் வஞ்சனையாம் படி
அறிந்தே
செஞ்சடையார் சீர் விளக்கும் திறல் உடையார் தீ
விடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த பால் அடிசில் மிசைந்து
இருந்தார் 5.1.104

1375 பொடி ஆர்க்கும் திருமேனிப் புனிதர்க்குப் புவனம்கள்
முடிவாக்கும் துயர் நீங்க முன்னை விடம்
அமுதானால்
படியார்க்கும் அறி அரிய பசுபதியார் தம் உடைய
அடியார்க்கு நஞ்சு அமுதம் ஆவது தான் அற்புதமோ 5.1.105

1376 அவ் விடத்தை ஆண்ட அரசு அமுது செய்து முன்
இருப்ப
வெவ் விடமும் அமுது ஆயிற்று என அமணர் வெருக்
கொண்டே
இவ் விடத்தில் இவன் பிழைக்கில் எமக்கு எல்லாம்
இறுதி எனத்
தெவ் விடத்துச் செயல் புரியும் காவலற்குச் செப்புவார் 5.1.106

1377 நஞ்சு கலந்து ஊட்டிடவும் நம் சமயத்தினில் விடம் தீர்
தஞ்சமுடை மந்திரத்தால் சாதியா வகை தடுத்தான்
எஞ்சும் வகை அவற்கு இலதேல் எம் உயிரும் நின்
முறையும்
துஞ்சுவது திடம் என்றார் சூழ் வினையின் துறை
நின்றார் 5.1.107

1378 மற்றவர் தம் மொழி கேட்டு மதி கெட்ட மன்னவனும்
செற்ற அவனை இனிக் கடியும் திறம் எவ்வாறு எனச்
செப்ப
உற்றவரும் மந்திர சாதகம் நாங்கள் ஒழித்திட நின்
கொற்ற வயக் களிற்று எதிரே விடுவது எனக்
கூறினார் 5.1.108

1379 மா பாவிக் கடை அமணர் வாகீசத் திருவடியாம்
கா பாலி அடியவர் பால் கடக் களிற்றை விடுக என்னப்
பூ பாலர் செயல் மேற்கொள் புலைத் தொழிலோன்
5.1.109

அவர் தம் மேல்
கோ பாதி சயமான கொலைக் களிற்றை விடச்
சொன்னான்

1380 கூடத்தைக் குத்தி ஒரு குன்றம் எனப் புறப்பட்டு
மாடத்தை மறத்திட்டு மண்டபங்கள் எடுத்து எற்றித்
தாடத்தில் பரிக்காரர் தலை இடறிக் கடக் களிற்றின்
வேடத்தால் வரும் கூற்றின் மிக்கது ஒரு விறல்
வேழம் 5.1.110

1377 பாசத் தொடை நிகளத் தொடர்பறியத் தறி முறியா
மீ சுற்றிய பறவைக் குலம் வெருவத் துணிவிலகா
ஊசல் கரம் எதிர் சுற்றிட உரறிப் பரி உழறா
வாசக் கட மழை முற்பட மதவெற்பு எதிர் வருமால் 5.1.111

1378 . இடி உற்று எழும் ஒலியில் திசை இப உட்கிட
அடியில்
படி புக்கு உற நெளியப் படர் பவனக் கதி விசையில்
கடிது உற்று அடு செயலில் கிளர் கடலில் படு
கடையின்
முடிவில் கனல் என முன் சினம் முடுகிக் கடுகியதே 5.1.112

1379 மாடு உற்று அணை இவுளிக் குலம் மறியச் செறி
வயிரக்
கோடுற்று இரு பிளவிட்டு அறு குறை கைக்கொடு
முறியச்
சாடுற்றிடு மதில் தெற்றிகள் சரியப் புடை அணி
செற்று
ஆடுற்று அகல் வெளியுற்று அது அவ்வடர் கைக்குல
வரையே 5.1.113

1380 பாவக் கொடு வினை முற்றிய படிறுற்று அடு
கொடியோர்
நாவுக்கரசர் எதிர் முற்கொடு நணுகிக் கருவரை போல்
ஏவிச் செறு பொருகைக் கரியினை உய்த்திட
வெருளார்
சேவிற்று திகழ்பவர் பொன் கழல் தெளிவு உற்றனர்
பெரியோர் 5.1.114

1381 அண்ணல் அருந் தவ வேந்தர் ஆணை தம் மேல் வரக்
கண்டு
விண்ணவர் தம் பெருமானை விடை உகந்து ஏறும்
பிரானைச்
சுண்ண வெண் சந்தனச் சாந்து தொடுத்த திருப்
5.1.115

பதிகத்தை
மண் உலகு உய்ய எடுத்து மகிழ் உடனே பாடுகின்றார்

1382 வஞ்சகர் விட்ட சினப் போர் மதவெங் களிற்றினை நோக்கிச்
செஞ்சடை நீள் முடிக் கூத்தர் தேவர்க்கும் தேவர் பிரானார்
வெம்ஞ்சுடர் மூவிலைச் சுல வீரட்டர் தம் அடியோம் நாம்
அஞ்சுவது இல்லை என்று என்றே அருந்தமிழ் பாடி உறைந்தார் 5.1.116

1383 தண் தமிழ் மாலைகள் பாடித் தம் பெருமான் சரணாகக் கொண்ட கருத்தில் இருந்து குலாவிய அன்புறு கொள்கைத்
தொண்டரை முன் வலமாகச் சூழ்ந்து எதிர் தாழ்ந்து நிலத்தில்
எண் திசையோர்களும் காண இறைஞ்சி எழுந்தது வேழம் 5.1.117

1384 ஆண்ட அரசை வணங்கி அஞ்சி அவ் வேழம் பெயரத் தூண்டிய மேல் மறப் பாகர் தொடக்கி அடத்துத் திரிந்து
மீண்டும் அதனை அவர் மேல் மிறை செய்து காட்டிட வீசி
ஈண்டு அவர் தங்களையே கொன்று அமணர் மேல் ஓடிற்று எதிர்ந்தே 5.1.118

1385 ஓடி அருகர்கள் தம்மை உழறி மிதித்துப் பிளந்து நாடிப் பலரையும் கொன்று நகரம் கலங்கி மறுக
நீடிய வேலை கலக்கும் நெடும் மந்தரகிரி போல
ஆடி அவ் யானையும் மன்னற்கு ஆகுலம் ஆக்கியது அன்றே 5.1.119

1386 யானையின் கையில் பிழைத்த வினை அமண் கையர்கள் எல்லாம்
மானம் அழிந்து மயங்கு வருந்திய சிந்தையர் ஆகித் தானை நில மன்னன் தாளில் தனித் தனி வீழ்ந்து புலம்ப
மேன்மை நெறி விட்ட வேந்தன் வெகுண்டு இனிச் செய்வது என் என்றான் 5.1.120

1387 நங்கள் சமயத்தின் நின்றே நாடிய முட்டி நிலையால்
எங்கள் எதிர் ஏறு அழிய யானையால் இவ் வண்ணம் 5.1.121

நின் சீர்
பங்கப் படுத்தவன் போகப் பரிபவம் தீரும் உனக்குப்
பொங்கழல் போக அதன் பின் புகை அகன்றால் என
என்றார்

1388 அல்லிருள் அன்னவர் கூற அரும் பெரும் பாவத்தவன்
தான்
தொல்லைச் சமயம் அழித்துத் துயரம்
விளைவித்தவன் தன்னைச்
சொல்லும் இனிச் செய்வது என்னச் சூழ்ச்சி முடிக்கும்
தொழிலோர்
கல்லுடன் பாசம் பிணித்துக் கடல் இடைப் பாய்ச்சுவது
என்றார் 5.1.122

1389 ஆங்கு அது கேட்ட அரசன் அவ்வினை மாக்களை
நோக்கித்
தீங்கு புரிந்தவன் தன்னைச் சேமம் உறக் கொடு
போகிப்
பாங்கு ஒரு கல்லில் அணைத்துப் பாசம் பிணித்து ஓர்
படகில்
வீங்கு ஒலி வேலையில் எற்றி வீழ்த்துமின் என்று
விடுத்தான் 5.1.123

1390 அவ் வினை செய்திடப் போகும் அவருடன் போயர்
உகந்த
வெவ்வினை யாளரும் சென்று மேவிட நாவுக்கரசர்
செவ்விய தம் திரு உள்ளம் சிறப்ப அவருடன்
சென்றார்
பவ்வத்தில் மன்னவன் சொன்னபடி முடித்தார்
அப்பாதகர் 5.1.124

1391 அப்பரிசு அவ்வினை முற்றி அவர் அகன்று ஏகிய
பின்னர்
ஒப்பரும் ஆழ் கடல் புக்க உறைப்பு உடை
மெய்த்தொண்டர் தாமும்
எப்பரிசு ஆயினும் ஆக ஏத்துவன் எந்தையை என்று
செப்பிய வண் தமிழ் தன்னால் சிவன் அஞ்செழுத்தும்
துதிப்பார் 5.1.125

1392 சொல் துணை வேதியன் என்னும் தூய் மொழி
நல் தமிழ் மாலை ஆம் நமச்சிவாய என்று
அற்ற முன் காக்கும் அஞ்சு எழுத்தை அன்பொடு
பற்றி உணர்வினால் பதிகம் பாடினார் 5.1.126

1393 பெருகிய அன்பினர் பிடித்த பெற்றியால்
அருமலரோன் முதல் அமரர் வாழ்த்துதற்கு
அரிய அஞ்சு எழுத்தையும் அரசு போற்றிடக்
கரு நெடுங்கடலின் உட் கல் மிதந்ததே 5.1.127

1394 அப் பெருங்கல்லும் அங்கு அரசு மேல் கொளத்
தெப்ப மாய் மிதத்தலில் செறிந்த பாசமும்
தப்பியது அதன் மிசை இருந்த தாவில் சீர்
மெய்ப் பெரும் தொண்டனார் விளங்கித் தோன்றினார் 5.1.128

1395 இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளும் மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்
ஒரு கல் மேல் ஏற்று இடல் உரைக்க வேண்டுமோ 5.1.129

1396 அருள் நயந்து அஞ்செழுத்து ஏத்தப் பெற்ற அக்
கருணை நாவரசினைத் திரைக் கரங்களால்
தெருள் நெறி நீர்மையின் சிரத்தில் தாங்கிட
வருணனும் செய்தனன் முன்பு மா தவம் 5.1.130

1397 வாய்ந்த சீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட
ஏந்தியே கொண்டு எழுந்து அருள் வித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில் 5.1.131

1398 அத் திருப் பதியினில் அணைந்த அன்பரை
மெய்த் தவக் குழாம் எலாம் மேவி ஆர்த்தெழ
எத் திசையெனும் அர என்னும் ஓசைபோல்
தத்து நீர்ப் பெருங்கடல் தானும் ஆர்த்ததே 5.1.132

1399 தொழும் தகை நாவினுக்கு அரசும் தொண்டர் முன்
செழும் திருப் பாதிரிப் புலியூர்த் திங்கள் வெண்
கொழுந்து அணி சடையாரைக் கும்பிட்டு அன்புற
விழுந்து எழுந்து அருள் நெறி விளங்கப் பாடுவார் 5.1.133

1400 ஈன்றாளும் ஆய் எனக்கு எந்தையும் ஆகி என
எடுத்துத்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்
கட்கு என்று
வான் தாழ் புனல் கங்கை வாழ் சடையானை மற்று
எவ் உயிர்க்கும்
சான்றாம் ஒருவனைத் தண் தமிழ் மாலைகள்
சாத்தினாரே 5.1.134

1401 மற்றும் இணையன வண் தமிழ் மாலைகள் பாடி
வைகி 5.1.135

வெற்றி மழவிடை வீரட்டர் பாதம் மிக நினைவால்
உற்றதொர் காதலின் அங்கு நின்று ஏகி ஒன்னார் புரங்கள்
செற்றவர் வாழும் திருவதிகைப் பதி சென்று அடைவார்

1402 தேவர் பிரான் திரு மாணிக் குழியும் தினை நகரும்
மேவினர் சென்று விரும்பிய சொல் மலர் கொண்டு இறைஞ்சிப்
பூவலர் சோலை மணமடி புல்லப் பொருள் மொழியின்
காவலர் செல்வத் திருக் கெடிலத்தைக் கடந்து அணைந்தார் 5.1.136

1403 வெஞ்சமண் குண்டர்கள் செய்வித்த தீயம் இறைகள் எல்லாம்
எஞ்ச வென்று ஏறிய இன் தமிழ் ஈசர் எழுந்து அருள
மஞ்சிவர் மாடத் திருவதிகைப் பதி வாணர் எல்லாம்
தம் செயல் பொங்கத் தழங்கு ஒலி மங்கலம் சாற்றல் உற்றார் 5.1.137

1404 மணி நெடுந் தோரணம் வண் குலைப் பூகம் மடற் கதலி
இணையுற நாட்டி எழு நிலைக் கோபுரம் தெற்றி எங்கும்
தணிவில் பெருகொளித் தாமங்கள் நாற்றிச் செஞ் சாந்து நீவி
அணி நகர் முன்னை அணி மேல் அணி செய்து அலங்கரித்தார் 5.1.138

1405 மன்னிய அன்பின் வள நகர் மாந்தர் வயங்கு இழையார்
இன்னிய நாதமும் ஏழ் இசை ஓசையும் எங்கும் விம்மப்
பொன் இயல் சுண்ணமும் பூவும் பொரிகளும் தூவி எங்கும்
தொல் நகரின் புறம் சூழ்ந்து எதிர் கொண்டனர் தொண்டரையே 5.1.139

1406 தூய வெண் நீறு துதைந்த பொன் மேனியும் தாழ் வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்து உருகிப்
பாய்வது போல் அன்பு நீர் பொழி கண்ணும் பதிகச் செஞ் சொல்
5.1.140

மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதி உள்ளே

1407 கண்டார்கள் கை தலைமேல் குவித்து இந்தக் கருணை கண்டால்
மிண்டாய செங்கை அமண்கையர் தீங்கு விளைக்கச் செற்றம்
உண்டாய்ன வண்ணம் எவ் வண்ணம் என்று உரைப்பார்கள் பின்னும்
தொண்டு ஆண்டு கொண்ட பிரானைத் தொழுது துதித்தனரே 5.1.141

1408 இவ் வண்ணம் போல எனைப் பல மாக்கள் இயம்பி ஏத்த
மெய் வண்ண நீற்று ஒளி மேவும் குழாங்கள் விரவிச் செல்ல
அவ் வண்ணம் நண்ணிய அன்பரும் வந்து எய்தி அம்பவளச்
செவ் வண்ணர் கோயில் திரு வீரட்டானத்தைச் சேர்ந்தனரே 5.1.142

1409 உம்பர் தம் கோனை உடைய பிரானை உள் புக்கு இறைஞ்சி
நம்புறும் அன்பின் நயப்புறு காதலினால் திளைத்தே
எம் பெருமான் தனை ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தது என்று
தம் பரிவால் திருத் தாண்டகச் செந்தமிழ் சாற்றி வாழ்ந்தார் 5.1.143

1410 அரி அயனுக்கு அரியானை அடியவருக்கு எளியானை
விரி புனல் சூழ் திருவதிகை வீரட்டானத்து அமுதைத்
தெரிவரிய பெரும் தன்மைத் திருநாவுக் கரசு மனம்
பரிவுறு செந்தமிழ்ப் பாட்டுப் பலபாடிப் பணி செயும் நாள் 5.1.144

1411 புல் அறிவில் சமணர்க்காப் பொல்லாங்கு புரிந்து ஒழுகும்
பல்லவனும் தன்னுடைய பழவினைப் பாசம் பறிய
அல்லல் ஒழிந்து அங்கு எய்தி ஆண்ட அரசினைப் பணிந்து
வல்லமணர் தமை நீத்து மழவிடையோன் தாள் அடைந்தான் 5.1.145

1412 வீடு அறியாச் சமணர் மொழி பொய் என்று மெய் உணர்ந்த

5.1.146

காடவனும் திருவதிகை நகரின் கண் கண் நுதற்குப்
பாடலி புத்திரத்தில் அமண் பள்ளியொடு பாழிகளும்
கூட இடித்துக் கொணர்ந்து குண பரவீச்சரம் எடுத்தான்

1413 இந் நாளில் திருப்பணிகள் செய்கின்ற இன் தமிழுக்கு
மன்னான வாகீசத் திருமுனியும் மதிச் சடைமேல்
பன்னாகம் அணிந்தவர் தம் பதி பலவும் சென்று
இறைஞ்சிச்
சொன்னாமத் தமிழ் புனைந்து தொண்டு செய்வான்
தொடர்ந்து எழுவார் 5.1.147

1414 திருவதிகைப் பதி மருங்கு திரு வெண்ணெய்
நல்லூரும்
அருளும் திரு ஆமாத்தூர் திருக்கோவலூர் முதலா
மருவு திருப்பதி பிறவும் வணங்கி வளத் தமிழ் பாடிப்
பெருகு விருப்புடன் விடையார் மகிழ் பெண்ணாகிடம்
அணைந்தார் 5.1.148

1415 கார் வளரும் மாடங்கள் கலந்த மறை ஒலி வளர்க்கும்
சீர் உடை அந்தணர் வாழும் செழும் பதியின் அகத்து
எய்தி
வார் சடையார் மன்னு திருத் தூங்கானை மாடத்தைப்
பார் பரவும் திருமுனிவர் பணிந்து ஏத்திப் பரவினார் 5.1.149

1416 புன் நெறியாம் அமண் சமயத் தொடக்குண்டு
போந்தவுடன்
தன்னுடனே உயிர்வாழத் தரியேன் நான்
தரிப்பதனுக்கு
என்னுடைய நாயக நின் இலச்சினை இட்டு அருள்
என்று
பன்னு செழுந்தமிழ் மாலை முன் நின்று பாடுவார் 5.1.150

1417 . பொன் ஆர்ந்த திருவடிக்கு என் விண்ணப்பம் என்று
எடுத்து
முன் ஆகி எப் பொருட்கும் முடிவாகி நின்றானைத்
தன் ஆகத்து உமை பாகம் கொண்டானைச் சங்கரனை
நல் நாமத் திருவிருத்தம் நலம் சிறக்கப் பாடுதலும் 5.1.151

1418 நீடு திருத் தூங்கானை மாடத்து நிலவு கின்ற
ஆடக மேருச் சிலையான் அருளால் ஓர் சிவபூதம்
மாடொருவர் அறியாமே வாகீசர் திருத் தோலில்
சேடுயர் மூவிலைச் சூலம் சின விடையின் உடன்
சாத்த 5.1.152

1419 ஆங்கவர் தம் திருத் தோளில் ஆர்ந்த திரு
இலச்சினையைத்
தாம் கண்டு மனம் களித்துத் தம் பெருமான் அருள்
நினைந்து
தூங்கருவி கண் பொழியத் தொழுது விழுந்து
ஆர்வத்தால்
ஓங்கிய சிந்தையர் ஆகி உய்ந்து ஒழிந்தேன் என
எழுந்தார் 5.1.153

1420 தூங்கானை மாடத்துச் சுடர்க் கொழுந்தின் அடிபரவிப்
பாங்காகத் திருத் தொண்டு செய்து பயின்று அமரும்
நாள்
பூங்கானம் மணம் கமழும் பொருவில் திரு அரத்
துறையும்
தேங்காவின் முகில் உறங்கும் திருமுது குன்றமும்
பணிந்து 5.1.154

1421 வண்தமிழ் மென் மலர் மாலை புனைந்தருளி
மருங்குள்ள
தண் துறை நீர்ப் பதிகளிலும் தனி விடையார்
மேவிடம்
கொண்டருளும் தானங்கள் கும்பிட்டுக் குண திசை
மேல்
புண்டரிகத் தடம் சூழ்ந்த நிவாக் கரையே போதுவார் 5.1.155

1422 ஆனாத சீர்த் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
வானாறு புடை பரக்கும் மலர்ச் சடையார் அடி
வணங்கி
ஊனாலும் உயிராலும் உள்ள பயன் கொள நினைந்து
தேனாரும் மலர்ச் சோலைத் திருப்புலியூர் மருங்கு
அணைந்தார் 5.1.156

1423 நாவுக் கரசரும் இருவர்க்கு
அரியவர் நடம் ஆடிய திரு எல்லை பால்
மேவித் தலம் உற மெய்யில் தொழுத
பின் மேல் மேல் எழுதரும் விரைவோடும்
காவில் களி மயில் மகிழ் உற்று எதிர்
எதிர் ஆடக் கடி கமழ் கமலம் சூழ்
வாவித் தடமலர் வதனம் பொலிவுறு
மருதத் தண்பணை வழி வந்தார் 5.1.157

1424 முருகில் செறி இதழ் முளரிப்
படுகரில் முது மேதிகள் புதுமலர் மேயும்
5.1.158

அருகில் செறிவனம் என மிக்குயர்
கழை அளவில் பெருகிட வளர் இக்குப்
பெருகிப் புடை முதிர் தரளம் சொரிவன
பெரியோர் அவர் திருவடிக் கண்டு
உருகிப் பரிவுறு புனல் கண் பொழிவன
என முன்புள வயல் எங்கும்

1425 அறிவில் பெரியவர் அயல்
நெல் பணை வயல் அவை பிற்படும் வகை
அணைகின்றார்
பிறவிப் பகை நெறி விடுவீர் இருவினை
பெருகித் தொடர்பிணி உறுபாசம்
பறிவுற்றிட அணையுமின் என்று இருபுடை
பயில் சூழ் சினை மிசை குயில் கூவும்
செறிவில் பலதரு நிலையில் பொலிவுறு
திரு நந்தன வனம் எதிர் கண்டார் 5.1.159

1426 அவர் முன் பணிவொடு தொழுது
அங்கு அணைவுற அணி கொம்பரின் மிசை
அருகு எங்கும்
தவம் முன் புரிதலில் வரு தொண்டு
எனும் நிலைதலை நின்று உயர் தமிழ்
இறையோராம்
இவர் தம் திருவடிவது கண்டு அதிசயம்
என வந்து எதிர் அரகர என்றே
சிவ முன் பயில் மொழி பகர் கின்றன
வளர் சிறை மென் கிளியொடு சிறு பூவை 5.1.160

1427 அஞ்சொல் திருமறை அவர்
முன் பகர்தலும் அவரும் தொழுது முன்
அளிகூரும்
நெஞ்சில் பெருகிய மகிழ்வும் காதலும்
நிறை அன்பொடும் உரை தடுமாறச்
செஞ்சொல் திருமறை மொழி அந்தணர்
பயில் தில்லைத் திரு நகர் எல்லைப்பால்
மஞ்சில்
பொலி நெடு மதில் சூழ் குடதிசை
மணி வாயில் புறம் வந்துற்றார் 5.1.161

1428 அல்லல் பவம் அற அருளும்
தவ முதல் அடியார் எதிர் கொள அவரோடும்
மல்லல் புனல் கமழ் மாடே வாயிலின்
வழிபுக்கு எதிர் தொழுது அணை உற்றார் 5.1.162

கல்வித் துறை பல வரு மா மறை முதல்
கரை கண்டு உடையவர் கழல் பேணும்
செல்வக் குடி நிறை நல் வைப்பு இடை
வளர் சிவமே நிலவிய திருவீதி

1429 நவ மின் சுடர் மணி நெடு
மாலையும் நறு மலர் மாலையும் நிறை
திருவீதிப்
புவனங்களின் முதல் இமையோர்
தடமுடி பொருந்திய மணி போகட்டிப்
பவனன் பணி செய வருணன் புனல்
கொடு பணி மாறவும் அவை பழுதாம் என்று
எவரும் தொழுது எழும் அடியார் திரு
அலகு இடுவார் குளிர்புனல் விடுவார்கள் 5.1.163

1430 மேலம் பரதலம் நிறையும்
கொடிகளில் விரி வெங்கதிர் நுழைவது
அரிதாகும்
கோலம் பெருகிய திருவீதியை முறை
குலவும் பெருமையர் பணிவுற்றே
ஞாலம் திகழ் திரு மறையின் பெருகு
ஒலி நலமார் முனிவர்கள் துதியோடும்
ஓலம் பெருகிய நிலை ஏழ் கோபுரம்
உறமெய் கொடு தொழுதுள்புக்கார் 5.1.164

1431 வளர் பொன் கனக மணி
திரு மாளிகையினை வலம் வந்து அலமரு
வரை நில்லா
அளவில் பெருகிய ஆர்வத்து இடை
எழும் அன்பின் கடல் நிறை உடல் எங்கும்
புளகச் செறி நிரை விரவத் திருமலி
பொன் கோபுரம் அது புகுவார் முன்
களனில் பொலிவிடம் உடையார் நடநவில்
கனகப் பொது எதிர் கண்ணுற்றார் 5.1.165

1432 நீடும் திருவுடன் நிகழும்
பெருகு ஒளி நிறை அம்பலம் நினைவுற நேரே
கூடும் படி வரும் அன்பால் இன்புறு
குணம் முன் பெறவரு நிலை கூடத்
தேடும் பிரமனும் மாலும் தேவரும்
முதலாம் யோனிகள் தெளிவு ஒன்றா
ஆடுங்கழல் புரி அமுதத் திரு நடம்
ஆரா வகை தொழுது ஆர்கின்றார் 5.1.166

1433 கையும் தலை மிசை புனை
அஞ்சலியன கண்ணும் பொழி மழை ஒழியாதே
பெய்யும் தகையன கரணங்களும்
உடன் உருகும் பரிவின
பேறு எய்தும் மெய்யும் தரைமிசை
விழுமுன் பெழுதரும் மின்தாழ் சடையொடு
ஐயன் திருநடம் எதிர் கும்பிடும் அவர்
ஆர்வம் பெருகுதல் அளவு இன்றால் 5.1.167

1434 இத் தன்மையர் பல முறையும்
தொழுது எழ என்று எய்தினை என மன்றாடும்
அத்தன் திரு அருள் பொழியும்
கருணையின் அருள் பெற்றிட வரும் ஆனந்தம்
மெய்த் தன்மை யினில் விருத்தத்
திருமொழி பாடிப் பின்னையும் மேல் மேலும்
சித்தம் பெருகிய பரிவால் இன்புறு
திரு நேரிசை மொழி பகர்கின்றார் 5.1.168

1435 பத்தனாய்ப் பாட
மாட்டேன் என்று முன் எடுத்துப் பண்ணால்
அத்தா உன் ஆடல் காண்பான்
அடியனேன் வந்தவாறு என்று
இத்திறம் போற்றி நின்றே
இன் தமிழ் மாலைப் பாடி
கைத் திருத் தொண்டு செய்யும்
காதலில் பணிந்து போந்தார் 5.1.169

1436 நீடிய மணியின்
சோதி நிறை திரு முன்றின் மாடும்
ஆடு உயர் கொடி சூழ் பொன்
தேர் அணி திரு வீதி உள்ளும்
கூடிய பணிகள் செய்து
கும்பிடும் தொழிலர் ஆகிப்
பாடிய புனித வாக்கின்
பணிகளும் பயிலச் செய்வார் 5.1.170

1437 அருள் பெரு மகிழ்ச்சி
பொங்க அன்னம் பாலிக்கும் என்னும்
திருக் குறுந் தொகைகள் பாடித்
திரு உழவாரங் கொண்டு
பெருத்து எழு காதலோடும் பெரும்
திருத் தொண்டு செய்து
விருப்புறு மேனி கண்ணீர் 5.1.171

வெண்ணீற்று வண்டலாட

1438 மேவிய பணிகள் செய்து
விளங்குநாள் வேட்களத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச்
சென்று முன் வணங்கிப் பாடிக்
காவியம் கண்டார் மன்னும்
திருக்கழிப் பாலை தன்னில்
நாவினுக்கு அரசர் சென்று
நண்ணினார் மண்ணோர் வாழ 5.1.172

1439 சின விடை யேறுகைத்
தோறும் மணவாள நம்பிகழல் சென்று தாழ்ந்து
வன பவள வாய்திறந்து வானவர்க்கும்
தான் அவனே என்கின்றாள் என்று
அனைய திருப்பதிகம் உடன்
அன்புறு வண் தமிழ் பாடி அங்கு வைகி
நினைவரியார் தமைப் போற்றி நீடு
திருப்புலியூரை நினைந்து மீள்வார் 5.1.173

1440 மனைப் படப்பில் கடல்
கொழுந்து வளை சொரியும் கழிப் பாலை
மழுங்கு நீங்கி
நனைச்சினை மென் குளிஞாழல்
பொழில் ஊடு வழி கொண்டு நண்ணும் போதில்
நினைப்பவர் தம் மனம் கோயில்
கொண்டு அருளும் அம்பலத்து நிருத்தனாரைத்
தினைத்தனையாம் பொழுது மறந்து
உய்வேனோ எனப் பாடி தில்லை சார்ந்தார் 5.1.174

1441 அரியானை என்று எடுத்தே
அடியவருக்கு எளியானை அவர்தம் சிந்தை
பிரியாத பெரிய திருத் தாண்டகச்
செந்தமிழ் பாடிப் பிறங்கு சோதி
விரியா நின்று எவ் உலகும் விளங்கிய
பொன் அம்பலத்து மேலி ஆடல்
புரியா நின்றவர் தம்மைப் பணிந்து
தமிழால் பின்னும் போற்றல் செய்வார் 5.1.175

1442 செஞ்சடைக் கற்றை
முற்றத்து இளநிலா எறிக்கும் எனும் சிறந்த
வாய்மை
அருஞ்சொல் வளத் தமிழ் மாலை

5.1.176

அதிசயமாம் படி பாடி அன்பு சூழ்ந்த
நெஞ்சு உருகப் பொழி புனல்வார்
கண் இணையும் பரவிய சொல் நிறைந்த வாயும்
தம் செயலின் ஒழியாத திருப்பணியும்
மாறாது சாரும் நாளில்

1443 கடையுகத்தில் ஆழியின்
மேல் மிதந்த கழு மலத்தின் இருந்த செம்கண்
விடை உகைத்தார் திரு அருளால்
வெற்பரையன் பாவை திருமுலைப் பாலோடும்
அடைய நிறை சிவம் பெருக வளர்
ஞானம் குழைத்து ஊட்ட அமுது செய்த
உடை மறைப் பிள்ளையார் திருவார்த்தை
அடியார்கள் உரைப்பக் கேட்டார் 5.1.177

1444 ஆழிவிடம் உண்ட வரை
அம்மை திருப்பால் அமுதம் உண்ட போதே
ஏழ் இசை வண் தமிழ் மாலை இவன்
எம்மான் எனக் காட்டி இயம்பவல்ல
காழி வரும் பெரும் தகை சீர்
கேட்டலுமே அதிசயமாம் காதல் கூர
வாழி அவர் மலர்க் கழல்கள் வணங்குவதற்கு
மனத்து எழுந்த விருப்பு வாய்ந்த 5.1.178

1445 அப்பொழுதே அம்பலத்துள்
ஆடுகின்ற கழல் வணங்கி அருள் முன் பெற்றுப்
பொய்ப் பிறவிப் பிணி ஓட்டும் திருவீதி
புரண்டு வலம் கொண்டு போந்தே
எப் புவனங்களும் நிறைந்த திருப்பதியின்
எல்லையினை இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினார் திரு நாரையூர்
பணிந்து பாடிச் செல்வார் 5.1.179

1446 தொண்டர் குழாம் புடை சூழத்
தொழுத கரத்தொடு நீறு துதைந்த கோலம்
கண்டவர் தம் மனம் கசிந்து கரைந்து
உருகும் கருணை புறம் பொழிந்து காட்டத்
தெண் திரைவாய்க் கல் மிதப்பில்
உகைத்து ஏறும் திருநாவுக்கரசர் தாமும்
வண் தமிழால் எழுது மறை மொழிந்த
பிரான் திருப்புகலி மருங்கு சார்ந்தார் 5.1.180

1447 நீண்ட வரை வில்லியார்
வெஞ்சூலை மடுத்து அருளி நேரே முன்னாள்
ஆண்ட அரசு எழுந்து அருளக்
கேட்டருளி ஆளுடைய பிள்ளையாரும்
காண்டகைய பெரு விருப்புக் கைம்
மிக்க திரு உள்ளக் கருத்தினோடு
மூண்ட அருள் மனத்து அன்பர் புடை சூழ
எழுந்து அருளி முன்னே வந்தார் 5.1.181

1448 தொழுது அணை உற்று ஆண்ட
அரசு அன்பு உருகத் தொண்டர் குழாத்திடையே
சென்று
பழுதில் பெரும் காதலுடன் அடிபணியப்
பணிந்தவர்தம் கரங்கள் பற்றி
எழுதரிய மலக்கையால் எடுத்து
இறைஞ்சி விடையின் மேல் வருவார்தம்மை
அழுது அழைத்துக் கொண்டவர்தாம்
அப்பரே என அவரும் அடியேன் என்றார் 5.1.182

1449 அம்பிகை செம் பொன்
கிண்ணத்து அமுத ஞானம் கொடுப்ப அழுகை
தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக்கு
அரசர் எனச் சிறந்த சீர்த்தி
எம் பெரு மக்களும் இயைந்த
கூட்டத்தில் அரன் அடியார் இன்பம் எய்தி
உம்பர்களும் போற்றி இசைப்பச் சிவம்
பெருகும் ஒலிநிறைத்தார் உலகம் எல்லாம் 5.1.183

1450 பிள்ளையார் கழல் வணங்கப்
பெற்றேன் என்று அரசு உவப்பப் பெருகு ஞான
வள்ளலார் வாகீசர் தமை வணங்கப்
பெற்றதற்கு மகிழ்ச்சி பொங்க
உள்ளம் நிறை காதலினால் ஒருவர்
ஒருவரில் கலந்த உண்மை யோடும்
வெள்ள நீர் திருத்தோணி வீற்று இருந்தார்
கழல் வணங்கும் விருப்பின் மிக்கார் 5.1.184

1451 அருள் பெருகு தனிக் கடலும்
உலகுக்கு எல்லாம் அன்பு செறி கடலுமாம்
எனவும் ஓங்கும்
பொருள் சமய முதல் சைவ நெறி தான்
பெற்ற புண்ணியக் கண் இரண்டு எனவும் புவனம் 5.1.185

உய்ய
இருள் கடு உண்டவர் அருளும் உலகம்
எல்லாம் ஈன்றாள் தன் திரு அருளும் எனவும்
கூடித்
தெருள் கலை ஞானக் கன்றும் அரசும்
சென்று செம் சடை வானவர் கோயில் சேர்ந்தார்
அன்றே

1452 பண் பயில் வண்டு அறை
சோலை சூழும் காழிப் பரமர் திருக் கோபுரத்தைப்
பணிந்துள்புக்கு
விண் பணிய ஓங்கு பெரு விமானம்
தன்னை வலம் கொண்டு தொழுது விழுந்த
எல்லைச்
சண்பை வரு பிள்ளையார் அப்பர்
உங்கள் தம்பிரானாரை நீர் பாடீர் என்னக்
கண் பயிலும் புனல் பொழிய அரசும் வாய்மை
கலை பயிலும் மொழி பொழியக் கசிந்து பாடி 5.1.186

1453 பெரிய பெருமாட்டியுடன் தோணி
மீது பேணி வீற்று இருந்து அருளும் பிரான் முன்
நின்று
பரிவுறு செந்தமிழ் மாலை பத்தி யோடும்
பார் கொண்டு மூடி எனும் பதிகம் போற்றி
அரிய வகை புறம் போந்து பிள்ளையார்
திருமடத்தில் எழுந்து அருளி அமுது செய்து
மருவிய நண்புறு கேண்மை அற்றை நாள்
போல் வளர்ந்து ஓங்க உடன் பல நாள் வைகும்
நாளில் 5.1.187

1454 அத்தன்மையினில் அரசும்
பிள்ளையாரும் அளவளாவிய மகிழ்ச்சி அளவு
இலாத
சித்த நெகிழ்ச்சியினோடு செல்லும் நாளில்
திருநாவுக்கரசு திரு உள்ளம் தன்னில்
மைத் தழையும் மணி மிடற்றர் பொன்னி
மன்னிய தானங்கள் எல்லாம் வணங்கிப் போற்ற
மெய்த்து எழுந்த பெரும் காதல் பிள்ளையார்க்கு
விளம்புதலும் அவரும் அது மேவி நேர்வார் 5.1.188

1455 ஆண்ட அரசு எழுந்து அருளக்
கோலக் காவை அவரோடும் சென்று இறைஞ்சி
அன்புகொண்டு 5.1.189

மீண்ட அருளினார் அவரும் விடை கொண்டு
இப்பால் வேத நாயகர் விரும்பும் பதிகளான
நீண்ட கருப் பறியலூர் புன்கூர் நீடு
திருக் குறுக்கை திரு நின்றி யூரும்
காண் தகைய நனிபள்ளி முதலா நண்ணிக்
கண்ணுதலார் கழல் தொழுது கலந்து செல்வார்

1456 மேவு புனல் பொன்னி இரு
கரையும் சார்ந்து விடை உயர்த்தார் திருச் செம்
பொன் பள்ளிபாடிக்
காவுயரும் மயிலாடுதுறை நீள் பொன்னிக்
கரைத் துருத்தி வேள்விக்குடி எதிர் கொள் பாடி
பாவுறு செந்தமிழ் மாலை பாடிப் போற்றிப்
பரமர் திருப்பதி பலவும் பணிந்து போந்தே
ஆவுறும் அஞ்சு ஆடுவார் கோடிகாவில் அணைந்து
பணைந்து ஆவடு தண் துறையைச் சார்ந்தார் 5.1.190

1457 ஆவடு தண் துறையாரை அடைந்து
உய்ந்தேன் என்ற அளவில் திருத் தாண்டகம்
முன்அருளிச் செய்து
மேவு திருக் குறுந்தொகை நேர் இசையும்
சந்த விருத்தங்கள் ஆனவையும் வேறு வேறு
1456-2
பாவலர் செந்தமிழ்த் தொடையால் பள்ளித்
தாமம் பல சாத்தி மிக்கு எழுந்த பரிவின் ஓடும்
பூ வயலத்தவர் பரவப் பல நாள் தங்கிப் புரிஉறு
கைத் தொண்டு போற்றிச் செய்வார் 5.1.191

1458 எறி புனல் பொன் மணி சிதறும்
திரை நீர்ப் பொன்னி இடை மருதைச் சென்று
எய்திஅன்பினோடு
மறி விரவு கரத்தாரை வணங்கி வைகி வண்
தமிழ்ப் பாமாலை பல மகிழச் சாத்திப்
பொறி அரவம் புனைந்தாரைத் திரு நாகேச்சுரத்துப்
போற்றி அரும் தமிழ் மாலை புனைந்துபோந்து
செறி விரை நன்மலர்ச் சோலைப் பழையாறு
எய்தித் திருச்சத்தி முற்றத்திற் சென்று சேர்ந்தார் 5.1.192

1459 சென்று சேர்ந்து திருச்
சத்தி முற்றத்து இருந்த சிவக் கொழுந்தை
குன்ற மகள் தன் மனக் காதல் குலவும்
பூசை கொண்டு அருளும்
என்றும் இனிய பெருமானை இறைஞ்சி
5.1.193

இயல்பில் திருப்பணிகள்
முன்றில் அணைந்து செய்து தமிழ்
மொழி மாலைகளும் சாத்துவார்
1460 கோவாய் முடுகி என்று
எடுத்துக் கூற்றம் வந்து குமைப்பதன் முன்
பூவார் அடிகள் என்று அலைமேல்
பொறித்து வைப்பாய் எனப் புகன்று
நாவார் பதிகம் பாடுதலும் நாதன் தானும் நல்லூரில்
வா வா என்றே அருள் செய்ய வணங்கி மகிழ்ந்து
வாகீசர் 5.1.194
1461 நன்மை பெருகஅருள்
நெறியே வந்து அணைந்து நல்லூரின்
மன்னு திருத் தொண்டனார் வணங்கி
மகிழ்ந்து எழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிகின்றோம் என்று அவர்தம்
சென்னி மிசைப் பாத மலர்
சூட்டினான் சிவபெருமான் 5.1.195
1462 நனைந்தனைய
திருவடி என்தலைமேல் வைத்தார் என்று
புனையும் திருத்தாண்டகத்தால்
போற்றி இசைத்துப் புனிதர் அருள்
நினைந்து உருகி விழுந்து எழுந்து
நிறைந்து மலர்ந்து ஒழியாத
தனம் பெரிதும் பெற்று வந்த
வறியோன் போல் மனம் தழைத்தார் 5.1.196
1463 நாவுக்கு மன்னர் திரு நல்லூரில் நம்பர் பால்
மேவுற்ற திருப் பணிகள் மேவுற நாளும் செய்து
பாவுற்ற தமிழ் மாலை பாடிப் பணிந்து ஏத்தித்
தேவுற்ற திருத்தொண்டு செய்து ஒழுகி செல்லு நாள் 5.1.197
1464 கருகாவூர் முதலாகக்
கண்ணுதலோன் அமர்ந்து அருளும்
திருவாவூர் திருப் பாலைத்துறை
பிறவும் சென்று இறைஞ்சிப்
பெருகு ஆர்வத் திருத் தொண்டு
செய்து பெருந்திரு நல்லூர்
ஒரு காலும் பிரியாதே உள்
உருகிப் பணிகின்றார் 5.1.198

1465 ஆளுடைய நாயகன்
தன் அருள் பெற்று அங்கு அகன்று போய்
வாளை பாய் புனல் பழனத்
திருப் பழனம் மருங்கு அணைந்து
காளவிடம் உண்டு இருண்ட
கண்டர் பணிக் கலன் பூண்டு
நீள் இரவில் ஆடுவார் கழல்
வணங்க நேர் பெற்றார் 5.1.199

1466 அப்பதியைச் சூழ்ந்த திருப்பதியில் அரனார் மகிழும்
ஒப்பரிய தானங்கள் உள் உருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருள்தேர் நாவினுக்கு வேந்தர் தாம்
மேவினார்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகள் ஊர் திங்களூர் 5.1.200

1467 அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார்
தம் தனயருடன் சாலை கூவல் குளம் தரு தண்ணீர்ப்
பந்தர் பல ஆண்ட அரசு எனும் பெயரால்
பண்ணினமை
வந்து அணைந்த வாகீசர் கேட்டு அவர் தம் மனை
நண்ண 5.1.201

1468 மற்றவரும் மனம் மகிழ்ந்து மனைவியார் மைந்தர்
பெரும்
சுற்றமுடன் களி கூரத் தொழுது எழுந்து சூழ்ந்து
மொழிக்
கொற்றவரை அமுது செயக் குறை கொள்வார்
இறைகொள்ளப்
பெற்ற பெரும் தவத் தொண்டர் திரு உள்ளம் பெறப்
பெற்றார் 5.1.202

1469 காண்டகைமை இன்றியுமுன் கலந்த பெருங்
கேண்மையினார்
பூண்ட பெரும் காதலுடன் போனகமும் கறி அமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள் பெற
விருப்பினால்
ஆண்ட அரசு அமுது செயத் திரு அமுதாம் படி
அமைத்து 5.1.203

1470 திருநாவுக்கரசு அமுது செய்து அருள மற்றவர் தம்
பெருநாமம் சாத்திய அப்பிள்ளைதனை அழைத்து
அன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின்
5.1.204

வண்கதலிக்
குரு நாளக் குருத்து அரிந்து கொண்டு வர
தனிவிட்டார்

1471 ஆங்கு அவனும் விரைந்து எய்தி அம்மருங்கு தாழாதே
பூங் கதலிக் குருத்து அரியப் புகும் அளவில் ஒரு நாகம்
தீங்கு இழைக்க அது பேணான் திரு அமுது செய்து
அருள
ஓங்கு கதலிக் குருத்துக் கொண்டு ஒல்லை வந்து
அணைந்தான் 5.1.205

1472 தீய விடம் தலைக் கொள்ளத் தெருமந்து செழும்
குருத்தைத்
தாயகரத்தினில் நீட்டித் தளர்ந்து தனைத் தழல் நாகம்
மேயபடி உரை செய்யான் விழக் கண்டு கெட்டு
ஒழிந்தோம்
தூயவர் இங்கு அமுது செயத் தொடங்கார் என்று அது
ஒளித்தார் 5.1.206

1473 தம் புதல்வன் சவம் மறைத்துத் தடுமாற்றம் இலராகி
எம் பெருமான் அமுது செய வேண்டும் என வந்து
இறைஞ்ச
உம்பர் பிரான் திருத்தொண்டர் உள்ளத்தில்
தடுமாற்றம்
நம்பர் திருவருளாலே அறிந்து அருளி நவை தீர்ப்பார் 5.1.207

1474 அன்று அவர்கள் மறைத்த அதனுக்கு அளவு இறந்த
கருணையராய்க்
கொன்றை நறும் சடையார் தம் கோயிலின் முன்
கொணர்வித்தே
ஒன்று கொலாம் எனப் பதிகம் எடுத்து உடையான் சீர்
பாடப்
பின்றைவிடம் போய் நீங்கிப் பிள்ளை உணர்ந்து
எழுந்து இருந்தான் 5.1.208

1475 அரும் தனயன் உயிர் பெற்ற அது கண்டும் அமுது
செயாது
இருந்ததற்குத் தளர்வு எய்தி இடர் உழந்தார் துயர் நீங்க
வருந்தும் அவர் மனைப் புகுந்து வாகீசத் திருமுனிவர்
விருந்து அமுது செய்து அருளி விருப்பினுடன்
மேவும் நாள் 5.1.209

1476 திங்களூர் தனில் நின்றும் திருமறையோர் பின்
செல்லப்
5.1.210

பைங்கண் விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதி
புகுந்து
தங்கு பெரும் காதலொடும் தம் பெருமான் கழல்
சார்ந்து
பொங்கிய அன்புற வணங்கி முன் நின்று போற்றி
இசைப்பார்

1477 புடை மாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொன்
கழல் கீழ்
அடை மாலைச் சீலம் உடை அப்பூதி அடிகள் தமை
நடைமாணச் சிறப்பித்து நன்மை புரி தீந்தமிழின்
தொடைமாலைத் திருப்பதிகச் சொன்மாலை
பாடினார் 5.1.211

1478 எழும் பணியும் இளம்பிறையும் அணிந்தவரை எம்
மருங்கும்
தொழும்பணி மேற் கொண்டு அருளி திருச்சோற்றுத்
துறை முதலாத்
தழும்புறு கேண்மையில் நண்ணித் தானங்கள் பல
பாடிச்
செம்பழனத்து இறை கோயில் திருத் தொண்டு செய்து
இருந்தார் 5.1.212

1479 சால நாள் அங்கு அமர்ந்து தம் தலைமேல் தாள்
வைத்த
ஆலமார் மணி மிடற்றார் அணி மலர்ச் சேவடி
நினைந்து
சேலுலாம் புனல் பொன்னித் தென்கரை ஏறிச் சென்று
கோல நீள் மணி மாடத் திரு நல்லூர் குறுகினார் 5.1.213

1480 அங்கு அணைந்து தம் பெருமான் அடி வணங்கி
ஆராது
பொங்கிய அன்பொடு திளைத்துப் போற்றி இசைத்துப்
பணி செயும் நாள்
தங்கு பெரும் காதலினால் தாமரை மேல்
விரிஞ்சனொடு
செங்கண் மால் அறிவரியார் திருவாரூர் தொழ
நினைந்தார் 5.1.214

1481 நல்லூரில் நம்பர் அருள் பெற்றுப் போய்ப் பழையாறை
பல்லூர் வெண்டலைக் கரத்தார் பயிலும் இடம் பல
பணிந்து
சொல்லூர் வண்தமிழ் பாடி வலஞ் சுழியைத் தொழுது
5.1.215

ஏத்தி
அல்லூர் வெண் பிறை அணிந்தார் திருக் குடமூக்கு
அணைந்து இறைஞ்சி

1482 நாலூர் தென் திருச்சேறை குடவாயில் நறையூர் சேர்
பாலூரும் இன் மொழியாள் பாகனார் கழல் பரவி
மேலூர்தி விடைக் கொடியார் மேவும் இடம் பல பாடிக்
சேலூர் தண் பணை சூழ்ந்த தென் திரு வாஞ்சியம்
அணைந்தார் 5.1.216

1483 பெருவாச மலர்ச் சோலைப் பெரு வேளூர் பணிந்து
ஏத்தி
முருகாரும் மலர்க் கொன்றை முதல்வனார் பதி
பிறவும்
திருவாரும் விளமருடன் சென்று இறைஞ்சி வாகீசர்
மருவாரூர் எரித்தவர் தம் திருவாரூர் வந்து
அடைந்தார் 5.1.217

1484 ஆண்ட அரசு எழுந்தருள ஆரூரில் அன்பர்கள் தாம்
நீண்ட சடை முடியார் பால் நிறைந்த அருள்
பெற்றுடையார்
காண் தகு மாளிகை மாடம் கவின் சிறந்து ஓங்கிட
எங்கும்
சேண் திகழ் வீதிகள் பொலியத் திரு மலி மங்கலம்
செய்தார் 5.1.218

1485 வல் அமண் குண்டர் தம் மாயை கடந்து மறி கடலில்
கல்லே மிதப்பாகப் போந்தவர் வந்தார் எனும்
களிப்பால்
எல்லையில் தொண்டர் எயில்புறம் சென்று எதிர்
கொண்டபோது
சொல்லின் அரசர் வணங்கித் தொழுது உரைசெய்து
அணைவார் 5.1.219

1486 பற்று ஒன்று இலாவரும் பாதகர் ஆகும் அமணர் தம்
பால்
உற்ற பிணி ஒழிந்து உய்யப் போந்தேன் பெறல் ஆவது
ஒன்றே
புற்றிடம் கொண்டான் தன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியம் என்று
அற்ற உணர்வொடும் ஆரூர்த் திருவீதி உள்
அணைந்தார் 5.1.220

1487 சூழும் திருத்தொண்டர் தம்முடன் தோரண வாயில் நண்ணி
வாழி திரு நெடும் தேவாசிரியன் முன் வந்து இறைஞ்சி
ஆழி வரைத் திரு மாளிகை வாயில் அவை புகுந்து
நீள் சுடர் மா மணிப் புற்று உகந்தாரை நேர் கண்டு கொண்டார் 5.1.221

1488 கண்டு தொழுது விழுந்து கர சரண் ஆதி அங்கம் கொண்ட புளகங்களாக எழுந்து அன்பு கூரக் கண்கள்
தண்துளி மாரி பொழியத் திரு மூலட்டானர் தம்மைப்
புண்டரிகக் கழல் போற்றித் திருத்தாண்டகம் புனைந்து 5.1.222

1489 காண்டலே கருத்தாய் நினைந்து என்னும் கலைப் பதிகம்
தூண்டா விளக்கு அன்ன சோதி முன் நின்று துதித்து உருகி
ஈண்டு மணிக் கோயில் சூழ வலம் செய்து இறைஞ்சி அன்பு
பூண்ட மனத்தொடு நீள் திருவாயில் புறத்து அணைந்தார் 5.1.223

1490 செய்ய மா மணி ஒளி சூழ் திரு முன்றின் முன் தேவ ஆசிரியன் சார்ந்து
கொய்யுமா மலர்ச் சோலைக் குயில் கூவ மயில் ஆலும் ஆரூராரைக்
கையினால் தொழாது ஒழிந்து கனி இருக்கக் காய் கவர்ந்த கள்வனேன் என்று
எய்து அரிய கை யறவால் திருப்பதிகம் அருள் செய்து அங்கு இருந்தார் அன்றே 5.1.224

1491 மார் பாரப் பொழி கண்ணீர் மழை வாரும் திருவடிவும் மதுரவாக்கில்
சேர் வாகும் திருவாயில் தீம் தமிழின் மாலைகளும் செம் பொன் தாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார் வாழத் திரு வீதிப் பணி செய்து பணிந்து ஏத்திப் பரவிச் செல்வார் 5.1.225

1492 நீடு புகழ்த் திருவாரூர் நிலவு மணிப் புற்றிடம் கொள் நிருத்தர் தம்மைக்
கூடிய அன்பொடு காலங்களில் அணைந்து கும்பிட்டுக் 5.1.226

கோதில் வாய்மைப்
பாடு இளம் பூதத்தினான் எனும் பதிகம் முதலான
பலவும் பாடி
நாடிய ஆர்வம் பெருக நைந்து மனம் கரைந்து உருகி
நயந்து செல்வார்

1493 நான் மறைநூல் பெருமை நமி நந்தி அடிகள்
திருத்தொண்டின் நன்மை
பான்மை நிலையால் அவரைப் பரமர் திருவிருத்ததுள்
வைத்துப் பாடி
தேன் மருவும் கொன்றையார் திருவாரூர் அரன்
நெறியில் நிகழும் தன்மை
ஆன திறமும் போற்றி அணி வீதிப் பணி செய்து அங்கு
அமரும் நாளில் 5.1.227

1494 நீர் ஆரும் சடை முடியார் நிலவு திரு வலி வலமும்
நினைந்து சென்று
வார் ஆரும் முலை மங்கை உமை பங்கர் கழல்
பணிந்து மகிழ்ந்து பாடிக்
கார் ஆரும் கறைக் கண்டர் கீழ் வேளூர் கன்றாப் பூர்
கலந்து பாடி
ஆராத காதலினால் திருவாரூர் தனில் மீண்டும்
அணைந்தார் அன்றே 5.1.228

1495 மேவு திருவாதிரை நாள் வீதிவிடங்கப் பெருமாள்
பவனி தன்னில்
தேவருடன் முனிவர்கள் முன் சேவிக்கும்
அடியார்களுடன் சேவித்து
மூவுலகும் களி கூர வரும் பெருமை முறைமை
யெலாம் கண்டு போற்றி
நாவினுக்குத் தனி அரசர் நயக்கு நாள் நம்பர் திரு
அருளினாலே 5.1.229

1496 திருப்புகலூர் அமர்ந்து அருளும் சிவ பெருமான்
சேவடிகள் கும்பிட்டு ஏத்தும்
விருப்புடைய உள்ளத்து மேவி எழும் காதல் புரி
வேட்கை கூர
ஒருப்படுவார் திருவாரூர் ஒருவாறு தொழுது அகன்று
அங்கு உள்ளம் வைத்துப்
பொருப்பரையன் மடப் பாவை இடப் பாகர் பதி பிறவும்
பணிந்து போந்தார் 5.1.230

1497 அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் திருப்புகலி அதன்
கண் நின்றும்
பன்னாகப் பூண் அணிவார் பயின்ற திருப்பதி பலவும்
பணிந்து செல்வார்
புன்னாக மணம் கமழும் பூம் புகலூர் வந்து இறைஞ்சிப்
பொருவு இல் சீர்த்தி
மின் ஆரும் புரி முந்நூல் முருகனார் திருமடத்தில்
மேவும் காளை 5.1.231

1498 ஆண்ட அரசு எழுந்து அருளி அணி ஆரூர் மணிப்
புற்றில் அமர்ந்து வாழும்
நீண்ட சுடர் மா மணியைக் கும்பிட்டு நீடு திருப்புகலூர்
நோக்கி
மீண்டு அருளினார் என்று கேட்டு அருளி
எதிர்கொள்ளும் விருப்பி னோடும்
ஈண்டு பெரும் தொண்டர் குழாம் புடை சூழ எழுந்து
அருளி எதிரே சென்றார் 5.1.232

1499 கரண்டமலி தடம் பொய்கைக் காழியர் கோன் எதிர்
அணையும் காதல் கேட்டு
வரன்று மணிப் புனற்புகலூர் நோக்கி வரும் வாகீசர்
மகிழ்ந்து வந்தார்
திரண்டு வரும் திரு நீற்றுத் தொண்டர் குழாம் இரு
திறமும் சேர்ந்த போதில்
இரண்டு நிலவின் கடல்கள் ஒன்றாகி அணைந்த
போல் இசைந்த அன்றே 5.1.233

1500 திருநாவுக்கரசர் எதிர் சென்று இறைஞ்சச் சிரபுரத்துத்
தெய்வ வாய்மை
பெரு ஞான சம்பந்தப் பிள்ளையார் எதிர் வணங்கி
அப்பரே நீர்
வரு நாளில் திருவாரூர் நிகழ் பெருமை வகுத்து
உரைப்பீர் என்று கூற
அரு நாமத்து அஞ்செழுத்தும் பயில் வாய்மை
அவரும் எதிர் அருளிச் செய்தார் 5.1.234

1501 சித்தம் நிலாவும் தென் திரு ஆரூர் நகராளும்
மைத் தழை கண்டர் ஆதிரை நாளின் மகிழ் செல்வம்
இத் தகைமைத்து என்று என் மொழிகேன்? என்று
அருள் செய்தார்
முத்து விதான மணிப் பொன் கவரி மொழி மாலை 5.1.235

1502 அம்மொழி மாலைச் செந்தமிழ் கேளா அணி சண்பை
மைம் மலர் கண்டத்து அண்டர் பிரானார் மகனாரும்
கொய்ம் மலர் வாவித் தென் திரு ஆரூர் கும்பிட்டே
உம்முடன் வந்து இங்கு உடன் அமர்வேன் என்று
உரை செய்தார் 5.1.236

1503 மா மதில் ஆரூர் மன்னரை அங்கு வணங்கச் செந்
தாமரை ஓடைச் சண்பையர் நாதன் தான் ஏக
நாமரு சொல்லின் நாதரும் ஆர்வத்தொடு புக்கார்
பூ மலர் வாசம் தண் பணை சூழும் புகலூரில் 5.1.237

1504 அத் திரு மூதூர் மேவிய நாவுக் கரசுந்தம்
சித்தம் நிறைந்தே அன்பு தெவிட்டும் தெளிவெள்ளம்
மொய்த்து இழி தாரைக் கண் பொழி நீர் மெய்ம்
முழுதாரப்
பைத் தலை நாகப் பூண் அணிவாரைப் பணி உற்றார் 5.1.238

1505 தேவர் பிரானைத் தென் புகலூர் மன்னிய தேனைப்
பா இயல் மாலைச் செந்தமிழ் பாடிப் பரிவோடு
மேவிய காலம் தோறும் விருப்பில் கும்பிட்டே
ஓவுதல் ஓவு திருப்பணி செய்து அங்கு உறைகின்றார் 5.1.239

1506 சீர் தரு செங்காட்டங் குடி நீடும் திருநள்ளாறு
ஆர் தரு சோலை சூழ்தரு சாந்தை அயவந்தி
வார் திகழ் மென் முலையான் ஒரு பாகன் திருமருகல்
ஏர் தரும் அன்பால் சென்று வணங்கி இன்புற்றார் 5.1.240

1507 அப்படிச் சின்னாள் சென்ற பின் ஆரூர் நகர் ஆளும்
துப்பு உறழ் வேணிக் கண் நுதலாரைத் தொழுது
இப்பால்
மெய்ப் பொருள் ஞானம் பெற்றவர் வேணு புரத்து
எங்கள்
பொன் புரி முந்நூல் மார்பரும் வந்தார் புகலூரில் 5.1.241

1508 பிள்ளையார் எழுந்து அருளப் பெரு விருப்பால்
வாகீசர்
உள்ளம் மகிழ்ந்து எதிர் கொண்டு அங்கு உடன்
உறையும் நாளின்கண்
வள்ளலார் சிறுத் தொண்டர் மற்று அவர் பால் எழுந்து
அருள
எள் அரும் சீர் நீல நக்கர் தாமும் எழுந்து அருளினார் 5.1.242

1509 ஆங்கு அணையும் அவர்களுடன் அப்பதியில்
அந்தணராம்
ஓங்கு புகழ் முருகனார் திரு மடத்தில் உடனாகப்
5.1.243

பாங்கில் வரும் சீர் அடியார் பலரும் உடன் பயில்
கேண்மை
நீங்கரிய திருத் தொண்டின் நிலை உணர்ந்து
நிகழ்கின்றார்

1510 திருப் பதிகச் செழுந்தமிழின் திறம் போற்றி
மகிழ்வுற்றுப்
பொருப்பு அரையன் மடப்பாவை இடப் பாகர் பொன்
தாளில்
விருப்பு உடைய திருத் தொண்டர் பெருமையினை
விரித்து உரைத்து அங்கு
ஒருப்படும் சிந்தையினார்கள் உடன் உறைவின் பயன்
பெற்றார் 5.1.244

1511 அந் நாளில் தமக்கு ஏற்ற திருத் தொண்டின் நெறி
ஆற்ற
மின்னார் செஞ்சடை அண்ணல் மேவும் பதி எனைப்
பலவும்
முன்னாகச் சென்று ஏத்தி முதல்வன் தாள்
தொழுவதற்குப்
பொன்னாரும் மணி மாடப் பூம் புகலூர் தொழுது
அகன்றார் 5.1.245

1512 திரு நீல நக்க அடிகள் சிறுத்தொண்டர் முருகனார்
பெருநீர்மை அடியார்கள் பிறரும் விடை கொண்டு ஏக
ஒரு நீர்மை மனத்து உடைய பிள்ளையாருடன் அரசும்
வரும் சீர் செஞ்சடைக் கரந்தார் திரு அம்பர்
வணங்கினார் 5.1.246

1513 செங்குமுத மலர் வாவித் திருக்கடவூர் அணைந்து
அருளிப்
பொங்கிய வெங்கூற்று அடர்த்த பொன் அடிகள்
தொழுது ஏத்திக்
குங்குலியக் கலயனார் திருமத்தில் குறை அறுப்ப
அங்கு அவர்பால் சிவன் அடியாருடன் அமுது
செய்தார்கள் 5.1.247

1514 சீர் மன்னும் திருக் கடவூர்த் திருமயானமும் வணங்கி
ஏர் மன்னும் இன்னிசைப்பாப் பல பாடி இனிது
அமர்ந்து
கார் மன்னும் கறைக் கண்டர் கழல் இணைகள்
தொழுது அகன்று
தேர் மன்னும் மணி வீதித் திரு ஆக்கூர் சென்று
5.1.248

அணைந்தார்

1515 சார்ந்தார் தம் புகல் இடத்தைத் தான் தோன்றி
மாடத்துக்
கூர்ந்து ஆர்வம் உறப் பணிந்து கோதில்
தமிழ்த்தொடை புனைந்து
வார்த்து ஆடும் சடையார் தம் பதி பலவும் வணங்கி
உடன்
சேர்ந்தார்கள் தம் பெருமான் திரு வீழி மிழலையினை 5.1.249

1516 வீழி மிழலை வந்து அணைய மேவும் நாவுக்கு
அரசினையும்
காழி ஞானப் பிள்ளையையும் கலந்த உள்ளக்
காதலினால்
ஆழி வலவன் அறியாத அடியார் அடியார்
அவர்களுடன்
வாழி மறையோர் எதிர் கொண்டு வணங்க வணங்கி
உள்புக்கார் 5.1.250

1517 மாட வீதி அலங்கரித்து மறையோர் வாயின் மணி
விளக்கு
நீடு கதலி தழைப் பூதம் நிரைத்து நிறை பொன் குடம்
எடுத்துப்
பீடு பெருகும் வாகீசர் பிள்ளையாரும் தொண்டர்களும்
கூட மகிழ்ந்து விண் இழிந்த கோயில் வாயில் சென்று
அணைந்தார் 5.1.251

1518 சென்று உள் புகுந்து திருவீழி மிழலை அமர்ந்த
செங்கனகக்
குன்ற வில்லியார் மகிழ்ந்த கோயில் வலமா வந்து
திரு
முன்றில் வணங்கி முன் எய்தி முக்கண் செக்கர் சடை
மவுலி
வென்றி விடையார் சேவடிக் கீழ் விழுந்தார் எழுந்தார்
விம்மினார் 5.1.252

1519 கைகள் குவித்துக் கழல் போற்றிக் கலந்த அன்பு
கரைந்து உருக
மெய்யில் வழியும் கண் அருவி விரவப் பரவும் சொல்
மாலை
செய்ய சடையார் தமைச் சேரார் தீங்கு நெறி
சேர்கின்றார் என்று
உய்யும் நெறித் தாண்ட தம் மொழிந்து அங்கு ஒழியாக்
5.1.253

காதல் சிறந்து ஓங்க
1520 முன்னாள் அயனும் திருமாலும் முடிவும் முதலும்
காணாத
பொன்னார் மேனி மணி வெற்பைப் பூ நீர்
மிழலையினில் போற்றிப்
பல் நாள் பிரியா நிலைமையினால் பயிலக் கும்பிட்டு
இருப்பாராய்
அந்நாள் மறையோர் திருப்பதியில் இருந்தார்
மெய்ம்மை அருந்தவர்கள் 5.1.254

1521 சீரின் விளங்கும் திருத்தொண்டர் இருந்து சில நாள்
சென்று அதன் பின்
மாரி சுருங்கி வளம் பொன்னி நதியும் பருவம்
மாறுதலும்
நீரின் இயன்ற உணவு அருகி நிலவும் பல மன்
உயிர்கள் எல்லாம்
பாரின் மலிந்த இலம் பாட்டில் படர் கூர் வறுமை
பரந்ததால் 5.1.255

1522 வையம் எங்கும் வற்கடம் ஆய்ச் செல்ல உலகோர்
வருத்தமுற
நையும் நாளில் பிள்ளையார் தமக்கும் நாவுக்கு
அரசருக்கும்
கையில் மானும் மழுவும் உடன் காணக் கனவில்
எழுந்து அருளிச்
செய்ய சடையார் திருவீழி மிழலை உடையார் அருள்
செய்வார் 5.1.256

1523 கால நிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டம் உறீர்
எனினும்
ஏல உம்மை வழி படுவார்க்கு அளிக்க
அளிக்கின்றோம் என்று
கோலம் காண எழுந்து அருளிக் குலவும் பெருமை
இருவர்க்கும்
ஞாலம் அறியப் படிக்காசு வைத்தார் மிழலை
நாயகனார் 5.1.257

1524 விண்ணின் நின்று இழிந்த விமானத்தின் கிழக்கும்
மேற்கும் பீடத்தில்
அண்ணல் புகலி ஆண் தகையார் தமக்கும் ஆண்ட
அரசினுக்கும்
நண்ணும் நாள்கள் தொறும் காசு படிவைத்து அருள
5.1.258

நானிலத்தில்
எண்ணில் அடியார் உடன் அமுது செய்து அங்கு
இருந்தார் இருவர்களும்
1525 அல்லார் கண்டத்து அண்டர் பிரான் அருளால் பெற்ற
படிக்காசு
பல்லாறு இயன்ற வளம் பெருகப் பரமன் அடியார்
ஆனார்கள்
எல்லாம் எய்தி உண்கஎன இரண்டு பொழுதும் பறை
நிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறு இட்டார் துயர் கூர்
வறுமை தொலைத்திட்டார் 5.1.259
1526 ஈசர் மிழலை இறையவர் பால் இமையப் பாவை
திருமுலைப் பால்
தேசம் உய்ய உண்டவர் தாம் திருமா மகனார்
ஆதலினால்
காசு வாசியுடன் பெற்றார் கைத் தொண்டு ஆகும்
படிமையினால்
வாசி இல்லாக் காசு படி பெற்று வந்தார் வாகீசர் 5.1.260
1527 ஆறு சடை மேல் அணிந்து அருளும் அண்ணல்
வைத்த படிக் காசால்
ஈறு இலாத பொருள் உடைய இருவர் உடைய
திருமடங்கள்
சோறு நாளும் தொண்டர் மகிழ்ந்து உண்ண உண்ணத்
தொலையாதே
ஏறு பெருமை புவி போற்ற இன்புற்று இருக்கும் அந்
நாளில் 5.1.261
1528 காலம் தவறு தீர்ந்து எங்கும் கலி வான் பொழிந்த
புனல் கலந்து
ஞாலம் எல்லாம் குளிர் தூங்கி உணவு பெருகி நலம்
சிறப்ப
மூல அன்பர் இருவர்களும் மொழி மாலைகளும் பல
சாத்தி
நீல கண்டர் உறை பதிகள் பிறவும் வணங்க
நினைவுற்றார் 5.1.262
1529 வாய்ந்த மிழலை மா மணியை வணங்கிப் பிரியா
விடை கொண்டு
பூந்தண் புனல் சூழ் வாஞ்சியத்தைப் போற்றிப் புனிதர்
வாழ்பதிகள்
5.1.263

ஏய்ந்த அன்பினால் இறைஞ்சி இசை வண் தமிழ்கள்
புனைந்து போய்ச்
சேர்ந்தார் செல்வத் திருமறைக்காடு எல்லை
இல்லாச் சீர்த்தியினார்

1530 மன்றல் விரவு மலர்ப் புன்னை மணம் சூழ் சோலை
உப்பளத்தின்
முன்றில் தோறும் சிறு மடவார் முத்தம் கொழிக்கும்
மறைக் காட்டுக்
குன்ற வில்லியார் மகிழ்ந்த கோயில் புகுந்து வலம்
கொண்டு
சென்று சேர்ந்தார் தென் புகலிக் கோவும் அரசும் திரு
முன்பு 5.1.264

1531 பரவை ஓதக் கழிக்கானல் பாங்கு நெருங்கும் அப்
பதியில்
அரவச் சடை அந்தணனாரை அகில மறைகள்
அர்ச்சனை செய்து
உரவக் கதவம் திருக் காப்புச் செய்த அந்நாள் முதல்
இந்நாள்
வரையும் அடைத்தே நிற்கின்ற மணி நீள வாயில்
வணங்குவார் 5.1.265

1532 தொல்லை வேதம் திருக் காப்புச் செய்த வாயில்
தொடர் அகற்ற
வல்ல அன்பர் அணையாமை மருங்கு ஓர் வாயில்
வழி எய்தி
அல்லல் தீர்ப்பார் தமை அருச்சிப்பார்கள் தொழுவார்
ஆம்படி கண்டு
எல்லை இல்லாப் பெரும் புகழார் இதனை அங்குக்
கேட்டு அறிந்தார் 5.1.266

1533 ஆங்கு அப் பரிசை அறிந்து அருளி ஆழித் தோணி
புரத்து அரசர்
ஓங்கு வேதம் அருச்சனை செய் உம்பர் பிரானை உள்
புக்குத்
தேம்கா திருவோம் நேர் இறைஞ்சத் திருமுன் கதவம்
திருக்காப்பு
நீங்கப் பாடும் அப்பர் என நீடும் திருநாவுக்கு அரசர் 5.1.267

1534 உண்ணீர்மையினால் பிள்ளையார் உரை செய்து
அருள அதனாலே
பண்ணினேரு மொழியாள் என்று எடுத்துப் பாடப்
5.1.268

பயன் துய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்கத்
திருக் கடைக்காப்பு
எண்ணீர் இரக்கம் ஒன்று இல்லீர் என்று பாடி
இறைஞ்சுதலும்

1535 வேத வளத்தின் மெய்ப் பொருளின் அருளால்
விளங்கும் மணிக் கதவம்
காதல் அன்பர் முன்பு திருக் காப்பு நீங்கக் கலை
மொழிக்கு
நாதர் ஞான முனிவருடன் தொழுது விழுந்தார்
ஞாலத்துள்
ஓத ஒலியின் மிக்கு எழுந்த தும்பர் ஆர்ப்பும் மறை
ஒலியும் 5.1.269

1536 அன்பர் ஈட்டம் களி சிறப்ப ஆண்ட அரசும் சிவக்
கன்றும்
இன்ப வெள்ளத்து இடை மூழ்கி எழுந்து உள் புகுந்து
தம் பெருமான்
முன்பு பணிந்து போற்றி இசைத்துப் பரவி மொழி
மாலைகள் பாடி
என்பு கரைய உள் உருகி இறைஞ்சி அரிதில் புறத்து
அணைந்தார் 5.1.270

1537 புறம்பு நின்று வாகீசர் புனிதர் அருளால் இக் கதவம்
திறந்தும் அடைத்தும் செல்லும் நெறி திருந்த
மலையாள் திருமுலையில்
கறந்த ஞானம் குழைத்த அமுது செய்த புகலிக்
கவுணியரை
நிறைந்த கதவம் அடைக்கும் வகை நீரும் பாடி
அருளும் என 5.1.271

1538 சண்பை ஆளும் தமிழ் விரகர் தாமும் திரு நாவுக்கரசர்
பண்பின் மொழிந்த உரை கொண்டு பதிகம் பாடும்
அவ்வளவில்
கண் பொற்பமைந்த நுதல் காளகண்டர் அருளால்
கடிதுடனே
திண் பொன் கதவம் திருக் காப்புச் செய்து எடுத்த
திருப் பாட்டில் 5.1.272

1539 அது கண்டு உடைய பிள்ளையார் தாமும் ஆண்ட
அரசும் மகிழ்ந்து
இது நம் பெருமான் அருள் செய்யப் பெற்றோம் என்று
5.1.273

அங்கு இறைஞ்சிய பின்
பதிகம் நிரம்பப் பிள்ளையார் பாடித் தொழுது பணிவு உற்றார்
எதிர் பொன் திருவாயிலின் வழக்கம் என்றும் நிகழ்ச்சி எய்தியது ஆல்

1540 அங்கு நிகழ்ந்த அச் செயல் கண்டு அடியார் எல்லாம் அதிசயித்துப்
பொங்கு புளகம் எய்திட மெய் பொழியும் கண்ணீர் பரந்து இழிய
எங்கும் நிகர் ஒன்று இல்லாத இருவர் பாதம் இறைஞ்சினார்
நங்கள் புகலிப் பெரும் தகையும் அரசும் மடத்தில் நண்ணிய பின் 5.1.274

1541 அரிதில் திறக்கத் தாம் பாட அடைக்க அவர் பாடிய எளிமை
கருதி நம்பர் திருவுள்ளம் அறியாது அயர்ந்தேன் எனக் கவன்று
பெரிதும் அஞ்சித் திருமடத்தில் ஒருபால் அணைந்து பேழ் கணித்து
மருவும் உணர்வில் துயில் கொண்டார் வாய்மை திறம்பா வாகீசர் 5.1.275

1542 மன்னும் செல்வ மறைக்காட்டு மணியின் பாதம் மனத்தின் கண்
உன்னித் துயிலும் பொழுதின் கண் உமை ஓர் பாகம் உடையவர் தாம்
பொன்னின் மேனி வெண் நீறு புனைந்த கோலப் பொலிவினொடும்
துன்னி அவர்க்கு வாய் மூரில் இருப்போம் தொடர வா என்றார் 5.1.276

1543 போதம் நிகழ வா என்று போனார் என் கொல் எனப் பாடி
ஈது எம்பெருமான் அருளாகில் யானும் போவேன் என்று எழுந்து
வேத வனத்தைப் புறகிட்டு விரைந்து போக அவர் முன்னே
ஆதி மூர்த்தி முன் காட்டும் அவ் வேடத்தால் எழுந்து அருள 5.1.277

1544 சீரார் பதியின் நின்று எழுந்து செல்லும் திருநாவுக்கு அரசர்
ஆரா அன்பில் ஆரமுதம் உண்ண எய்தா வாறே போல்
நீரார் சடையார் எழுந்து அருள நெடிது பின்பு செல்லும் அவர்
பேராளரை முன் தொடர்ந்து அணையப் பெறுவார்
எய்தப் பெற்று இலரால் 5.1.278

1545 அன்ன வண்ணம் எழுந்து அருளி அணித்தே காட்சி கொடுப்பார் போல்
பொன்னின் கோயில் ஒன்று எதிரே காட்டி அதனுள் புக்கு அருளத்
துன்னும் தொண்டர் அம் மருங்கு விரைந்து தொடரப் போந்த படி
மன்னும் புகலி வள்ளலார் தாமும் கேட்டு வந்து அணைந்தார் 5.1.279

1546 அழைத்துக் கொடு போந்து அணியார் போல் காட்டி மறைந்தார் என அயர்ந்து
பிழைத்துச் செவ்வி அறியாதே திறப்பித் தேனுக்கே அல்லால்
உழைத்தாம் ஒளித்தால் கதவம் தொண்டு உறைக்கப் பாடி அடைப்பித்த
தழைத்த மொழியார் உப்பாலார் தாம் இங்கு எப்பால் மறைவது என 5.1.280

1547 மாட நீடு திருப்புகலி மன்னர் அவர்க்கு மால் அயனும்
நேடி இன்னங் காணாதார் நேரே காட்சி கொடுத்து அருள
ஆடல் கண்டு பணிந்து ஏத்தி அரசும் காணக் காட்டுதலும்
பாட அடியார் என்று எடுத்துப் பரமர் தம்மைப் பாடினார் 5.1.281

1548 பாடும் தமிழ் மாலைகள் கொண்டு பரமர் தாமும் எழுந்து அருள
நீடும் திருவாய்மூர் அடைந்து நிலவும் கோயில் வலம் செய்து
சூடும் பிறையார் பெரும் தொண்டர் தொழுது போற்றித் துதி செய்து
நாடும் காதல் வளர்ந்து ஓங்க நயந்து அந் நகரில் உடன் உறைந்தார் 5.1.282

1549 ஆண்ட அரசும் பிள்ளையார் உடனே அங்கண் இனிது அமர்ந்து
பூண்ட காதல் பொங்கி எழ வாய் மூர் அடிகள் போற்றி
மூண்ட அன்பின் மொழிமாலை சாத்தி ஞான முனிவர் ஒடு
மீண்டு வந்து திருமறைக் காடு எய்தி விமலர் தாள் பணிந்தார் 5.1.283

1550 ஆதி முதல்வர் தமைப் பணிந்து அங்கு ஆன பணி செய்து அமரும் நாள்
சீத மதி வெண் குடை வளவர் மகளார் தென்னன் தேவியாம்
கோதில் குணத்துப் பாண்டி மா தேவியார் முன் குலச்சிறையார்
போத விட்டார் சிலர் வந்தார் புகலி வேந்தர் தமைக் காண 5.1.284

1551 வந்து சிவனார் திருமறைக் காடு எய்தி மன்னு வேணுபுரி
அந்தணாளர் தமக்கு அறிவித்து அவர் பால் எய்தி அடி வணங்க
சிந்தை மகிழ்ந்து தீது இன்மை வனவத் தீங்கும் உளவாமோ
இந்த உலகம் உய வந்தீர் இரு தாள் நினைவார்க்கு என்று உரைப்பார் 5.1.285

1552 சைவ நெறி வைதிகம் நிற்கச் சழக்கு நெறியைத் தவம் என்னும்
பொய் வல் அமணர் செயல் தன்னைப் பொறுக்க கில்லோம் எனக் கேட்டே
அவ் வன் தொழிலோர் செயல் மாற்றி ஆதிசைவ நெறி விளங்கத்
தெய்வ நீறு நினைந்து எழுந்தார் சீர் கொள் சண்பைத் திரு மறையோர் 5.1.286

1553 ஆய பொழுது திரு நாவுக்கரசு புகலி ஆண் தகைக்குக்
காய மாசு பெருக்கி உழல் கலதி அமணர் கடுவினை செய்
மாயை சாலம் மிக வல்லார் அவர் மற்று என்னை முன் செய்த
தீய தொழிலும் பல கெட்டேன் சொல்ல இசையேன் யான் என்றார் 5.1.287

1554 என்று கூற எல்லை இலா நீறு போற்றும்
இருவரையும்
சென்று காணும் கருத்து உடையேன் அங்குத் தீங்கு
புரி அமணர்
நின்ற நிலைமை அழிவித்துச் சைவ நெறி பாரித்து
அன்றி
ஒன்றும் செய்யேன் ஆணை உமது என்றார் உடைய
பிள்ளையார் 5.1.288

1555 போமா துணிந்து நீர் அங்குப் போகப் போதா அவ்
அமணர்
தீ மாயையினை யானே போய்ச் சிதைத்து
வருகின்றேன் என்ன
ஆமாறு எல்லாம் உரைத்து அவரை மறுக்க மாட்டது
அரசு இருப்பத்
தாம் ஆதரவால் தமிழ் நாட்டில் போனார் ஞானத்
தலைவனார் 5.1.289

1556 வேணு புரக்கோன் எழுந்து அருள விடைகொண்டு
இருந்த வாகீசர்
பூணும் அன்பால் மறைக்காட்டில் புனிதர் தம்மைப்
போற்றி இசைத்துப்
பேணி இருந்து அங்கு உறையும் நாள் பெயர்வார்
வீழிமிழலை அமர்
தாணுவின் தன் செய்ய கழல் மீண்டும் சார
நினைக்கின்றார் 5.1.290

1557 சோலை மறைக் காட்டு அமர்ந்து அருளும் சோதி
அருள் பெற்று அகன்று போய்
வேலை விடம் உண்டவர் வீழி மிழலை மீண்டும்
செல்வன் என
ஞாலம் நிகழ்ந்த நாகைக் காரோணம் பிறவும் தாம்
பணிந்து
சாலு மொழி வண் தமிழ்ப் பாடித் தலைவர் மிழலை
வந்து அடைந்தார் 5.1.291

1558 வீழி மிழலை தனிப் பணிந்து வேத முதல்வர் தாம்
இருப்ப
ஆழி வலம் ஏந்திய அரியால் ஆகாசத்தின் நின்று
இழிந்த
வாழி மலர்ந்த கோயில்தனில் மன்னும் பொருளை
போற்றிசைத்துத்
தாழும் நாளில் பிறபதியும் பணியும் காதல் தலை 5.1.292

நிற்பார்

1559 பூவில் பொலியும் புனல் பொன்னிக் கரை போய்ப்
பணிவார் பொற்பு அமைந்த
ஆவுக்கு அருளும் ஆவடு தண் துறையார் பாதம்
அணைந்து இறைஞ்சி
நாவுக் கரசர் ஞானப் போன கர்க்குச் செம் பொன்
ஆயிரமும்
பாவுக்கு அளித்த திறம் போற்றிப் போந்து பிறவும்
பணிகின்றார் 5.1.293

1560 செய்ய சடையார் பழையாறை எய்த அதனில் செல்
பொழுதில்
மையல் அமணர் மறைத்த வடதளியின் மன்னும்
சிவனாரைக்
கைகள் கூப்பித் தொழுது அருளக் கண்டவாற்றால்
அமணர்கள் தம்
பொய் கொள் விமானம் எனக் கேட்டுப் பொறாத
உள்ளம் மிகப் புழுங்கி 5.1.294

1561 அந்த விமானம் தனக்கு அருகா ஆங்கு ஓர் இடத்தின்
பாங்கு எய்திக்
கந்தம் மலரும் கடிக் கொன்றை முடியார் செய்ய கழல்
உன்னி
மந்த அமணர் வஞ்சனையால் மறைத்த வஞ்சம்
ஒழித்தருளிப்
பந்தம் கொண்ட குண்டர் திறம் பாற்றும் என்று
பணிந்து இருந்தார் 5.1.295

1562 வண்ணம் கண்டு நான் உம்மை வணங்கி அன்றிப்
போகேன் என்று
எண்ண முடிக்கும் வாகீசர் இருந்தார் அமுது
செய்யாதே
அண்ணலாரும் அது உணர்ந்து அங்கு அரசு தம்மைப்
பணிவதற்குத்
திண்ணமாக மன்னனுக்குக் கனவில் அருளிச்
செய்கின்றார் 5.1.296

1563 அறிவில் அமணர் நமை மறைப்ப இருந்தோம் என்று
அங்கு அடையாளக்
குறிகள் அறியச் செய்து அருளி நம்மை அரசு
கும்பிடுவான்
நெறியில் அமணர் தமை அழித்து நீக்கிப் போக்கு
5.1.297

என்று அருள் புரிய
செறிவில் அறிவுற்று எழுந்து அவனும் செங்கை
தலைமேல் குவித்து இறைஞ்சி

1564 கண்ட வியப்பு மந்திரிகட்கு இயம்பிக் கூடக் கடிது
எய்தி
அண்டர் பெருமான் அருள் செய்த அடையாளத்தின்
வழி கண்டு
குண்டர் செய்த வஞ்சணையைக் குறித்து வேந்தன்
குலவு பெரும்
தொண்டர் தம்மை அடி வணங்கித் தொக்க அமணர்
தூர் அறுத்தான் 5.1.298

1565 ஆனை இனத்தில் துகைப்புண்ட அமண் ஆயிரமும்
மாய்ந்தற் பின்
மேன்மை அரசன் ஈசர்க்கு விமானம் ஆக்கி
விளக்கியபின்
ஆன வழி பாட்டு அர்ச்சனைக்கு நிபந்தம் எல்லாம்
அமைத்து இறைஞ்ச
ஞான அரசும் புக்கு இறைஞ்சி நாதர் முன்பு
போற்றுவார் 5.1.299

1566 தலையின் மயிரைப் பறித்து உண்ணும் சாதி அமணர்
மறைத்தாலும்
நிலை இலாதார் நிலைமையினால் மறைக்க
ஒண்ணுமோ என்னும்
விலை இல் வாய்மைக்குறும் தொகைகள் விளம்பிப்
புறம் போந்து அங்கு அமர்ந்தே
இலை கொள் சூலப் படையார் சேர் இடங்கள் பிறவும்
தொழ அணைவார் 5.1.300

1571 பொங்கு புனலார் பொன்னியில் இரண்டு கரையும்
பொருவிடையார்
தங்கும் இடங்கள் புக்கு இறைஞ்சித் தமிழ்
மாலைகளும் சாத்திப் போய்
எங்கும் நிறைந்த புகழ் ஆளர் ஈறில் தொண்டர் எதிர்
கொள்ளச்
செங்கண் விடையார் திருவானைக் காவின் மருங்கு
சென்று அணைந்தார் 5.1.301

1572 சிலந்திக்கு அருளும் கழல் வணங்கிச் செஞ்சொல்
மாலை பல பாடி
இலங்கு சடையார் எறும்பியூர் மலையும் இறைஞ்சி
5.1.302

பாடியபின்
சோதித் திருச்சிராப்பள்ளி மலையும் கற்குடியும்
நலம் கொள் செல்வத் திருப்பராய்த் துறையும்
தொழுவான் நண்ணினார்

1573 மற்றப் பதிகள் முதலான மருங்கு உள்ளனவும் கை
தொழுது
பொன் புற்று அமைந்த திருப்பணிகள் செய்து பதிகம்
கொடு போற்றி
உற்ற அருளால் காவிரியை ஏறி ஒன்னார் புரம் எரியச்
செற்ற சிலையார் திருப்பைஞ்ஞீலியினைச் சென்று
சேர்கின்றார் 5.1.303

1574 வழி போம் பொழுது மிக இளைத்து வருத்தம் உற நீர்
வேட்கையொடும்
அழிவாம் பசி வந்து அணைந்திடவும் அதற்குச் சித்தம்
அலையாதே
மொழி வேந்தரும் முன் எழுந்து அருள முருகு ஆர்
சோலைப் பைஞ்ஞீலி
விழி ஏந்திய நெற்றியினார் தம் தொண்டர் வருத்தம்
மீட்பாராய் 5.1.304

1575 காவும் குளமும் முன் சமைத்துக் காட்டி வழி போம்
கருத்தினால்
மேவும் திருநீற்று அந்தணராய் விரும்பும் பொதி
சோறும் கொண்டு
நாவின் தனி மன்னவர்க்கு எதிரே நண்ணி இருந்தார்
விண்ணின் மேல்
தாவும் புள்ளும் மண் கிழிக்கும் தனி ஏனமும் காண்பு
அரியவர் தாம் 5.1.305

1576 அங்கண் இருந்த மறையவர் பால் ஆண்ட அரசும்
எழுந்து அருள
வெங்கண் விடை வேதியர் நோக்கி மிகவும் வழி வந்து
இளைத்து இருந்தீர்
இங்கு என் பாலே பொதி சோறு உண்டு இதனை
உண்டு தண்ணீர் இப்
பொங்கு குளத்தில் குடித்து இளைப்புப் போக்கிப்
போவீர் எனப் புகன்றார் 5.1.306

1577 நண்ணும் திருநாவுக்கு அரசர் நம்பர் அருள் என்று
அறிந்தார் போல்
உண்ணும் என்று திருமறையோர் உரைத்துப் பொதி
5.1.307

சோறு அளித்தலுமே
எண்ண நினையாது எதிர் வாங்கி இனிதாம் அமுது
செய்து இனிய
தண்ணீர் அமுது செய்து அருளித் தூய்மை செய்து
தளர்வு ஒழிந்தார்

1578 எய்ப்பு நீங்கி நின்றவரை நோக்கி இருந்த
மறையவனார்
அப்பால் எங்கு நீர் போவது என்றார் அரசும் அவர்க்கு
எதிரே
செப்புவார் யான் திருப்பைஞ் ஞீலிக்குப் போவ என்று
உரைப்ப
ஒப்பு இலாரும் யான் அங்குப் போகின்றேன் என்று
உடன் போந்தார் 5.1.308

1579 கூட வந்து மறையவனார் திருப்பைஞ்ஞீலி குறுகியிட
வேடம் அவர் முன் மறைத்தலுமே மெய்ம்மைத்
தவத்து மேலவர் தாம்
ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளாய் அளித்த
கருணை எனப்
பாடல் புரிந்து விழுந்து எழுந்து கண்ணீர் மாரிபயில்
வித்தார் 5.1.309

1580 பைஞ் ஞீலியினில் அமர்ந்து அருளும் பரமர் கோயில்
சென்று எய்தி
மைஞ் ஞீலத்து மணி கண்டர் தம்மை வணங்கி மகிழ்
சிறந்து
மெய்ஞ் ஞீலிர் மையினில் அன்புருக விரும்பும் தமிழ்
மாலைகள் பாடிக்
கைஞ்ஞீடிய தம் திருத்தொண்டு செய்து காதலுடன்
இருந்தார் 5.1.310

1581 நாதர் மருவும் திருமலைகள் நாடும் பதிகள் பல
மிகவும்
காதல் கூரச் சென்று இறைஞ்சிக் கலந்த இசை வண்
தமிழ் பாடி
மாதோர் பாகர் அருளாலே வடபால் நோக்கி வாகீசர்
ஆதி தேவர் அமர்ந்த திரு அண்ணாமலையை
நண்ணினார் 5.1.311

1582 செங்கண் விடையார் திரு அண்ணா மலையைத்
தொழுது வலம் கொண்டு
துங்க வரையின் மிசை ஏறி தொண்டர் தொழும்புக்கு
5.1.312

எதிர் நிற்கும்
அங்கண் அரசைத் தொழுது எழுந்து திளைத்துத்
திருநாவுக்கரசர்
தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை
சாதித்தார்

1583 அண்ணாமலை மலை மேல் அணிமலையை ஆரா
அன்பின் அடியவர் தம்
கண்ணார் அமுதை விண்ணோரைக் காக்கக் கடலில்
வந்து எழுந்த
உண்ணா நஞ்சம் உண்டானைக் கும்பிட்டு உருகும்
சிந்தை உடன்
பண்ணார் பதிகத் தமிழ் பாடிப் பணிந்து பரவிப் பணி
செய்தார் 5.1.313

1584 பணியார் வேணிச் சிவ பெருமான் பாதம் போற்றிப்
பணி செயும் நாள்
மணியார் கண்டத்து எம் பெருமான் மண் மேல்
மகிழும் இடம் எங்கும்
தணியாக் காதலுடன் சென்று வணங்கித் தக்க பணி
செய்வார்
அணியார் தொண்டைத் திருநாட்டில் அருளால்
அணைவார் ஆயினார் 5.1.314

1585 காதல் செய்யும் கருத்தின் உடன் காடும் மலையும்
கான் ஆறும்
சூதமலி தண் பணைப் பதிகன் பலவும் கடந்து
சொல்லிக்கு
நாதர் போந்து பெரும் தொண்டை நன்னாடு எய்தி
முன் ஆகச்
சீத மலர் மென் சோலை சூழ் திரு ஒத்தூரில் சென்று
அடைந்தார் 5.1.315

1586 செக்கர் சடையார் திரு ஒத்துத்தூர் தேவர் பிரானார்
தம் கோயில்
புக்கு வலம் கொண்டு எதிர் இறைஞ்சிப் போற்றிக்
கண்கள் புனல் பொழிய
முக் கண் பிரானை விரும்பும் மொழித் திருத்
தாண்டகங்கள் முதலாகத்
தக்க மொழி மாலைகள் சாத்திச் சார்ந்து பணி செய்து
ஒழுகுவார் 5.1.316

1587 செய்ய ஐயர் திரு ஒத்தூர் ஏத்திப் போந்து செழும்
புவனம்
உய்ய நஞ்சு உண்டு அருளும் அவர் உறையும் பதிகள்
பல வணங்கித்
தையல் தழுவக் குழைந்த பிரான் தங்கும் தெய்வப் பதி
என்று
வையம் முழுதும் தொழுது ஏத்தும் மதில் சூழ் காஞ்சி
மருங்கு அணைந்தார் 5.1.317

1588 ஞாலம் உய்யத் திருவதிகை நம்பர் தம் பேர்
அருளினால்
சூலை மடுத்து முன் ஆண்ட தொண்டர்
வரப்பெற்றோம் என்று
காலை மலரும் கமலம் போல் காஞ்சி வாணர் முகம்
எல்லாம்
சால மலர்ந்து களி சிறப்பத் தழைத்த மனங்கள்
தாங்குவார் 5.1.318

1589 மாட வீதி மருங்கு எல்லாம் மணி வாயில்களில்
தோரணங்கள்
நீடு கதலியுடன் கமுகு நிறைத்து நிறை பொற்குடம்
தீபம்
தோடு குலவு மலர் மாலை சூழ்ந்த வாசப் பந்தர்களும்
ஆடு கொடியும் உடன் எடுத்து அங்கு அணிந்ணள்
காஞ்சி அலங்கரித்தார் 5.1.319

1590 தொண்டர் ஈண்டி எதிர்கொள்ள எழுந்து சொல்லுக்கு
அரசர் பால்
கொண்ட வேடப் பொலிவினொடும் குலவும் வீதி பணி
செய்யும்
அண்டர் அறிதற்கு அரிய திரு அலகு முதல் ஆம்
அவை ஏந்தி
இண்டை புனைந்த சடை முடியார்க்கு அன்பர் தம்மை
எதிர் கொண்டார் 5.1.320

1591 எதிர் கொண்டு இறைஞ்சும் சீர் அடியார் தம்மை
இறைஞ்சி எழுந்து அருளி
மதில் கொண்டு அணிந்த காஞ்சி நகர் மறுகு உள்
போந்து வானநதி
குதி கொண்டு இழிந்த சடைக் கம்பர் செம் பொன்
கோயில் குறுகினார்
அதிர் கொண்டு அலை நேர் மணி மிடற்றார் ஆண்ட
திருநாவுக்கரசர் 5.1.321

1592 திரு வாயிலினைப் பணிந்து எழுந்து செல்வத் திரு
முன்றிலை அணைந்து
கருவார் கச்சி ஏகம்பர் கனக மணி மாளிகை சூழ்ந்து
வருவார் செம் பொன் மலை வல்லி தழுவக் குழைந்த
மணி மேனிப்
பெரு வாழ்வினை முன் கண்டு இறைஞ்சிப் பேரா
அன்பு பெருக்கினார் 5.1.322

1593 வார்ந்து சொரியும் கண் அருவி மயிர்க் கால் தோறும்
வரும் புளகம்
ஆர்ந்த மேனிப் புறம்பு அலைப்ப அன்பு கரைந்து புள்
அலைப்பச்
சேர்ந்த நயனப் பயன் பெற்றுத் திளைப்பத்
திருவேகம்பர் தமை
நேர்ந்த மனத்தில் உற வைத்து நீடும் பதிகம் பாடுவார் 5.1.323

1594 கரவாடும் வன் நெஞ்சர்க்கு அரியானை என்று
எடுத்துப்
பரவாய சொல் மாலைத் திருப் பதிகம் பாடிய பின்
விரிவார் தம் புரம் எரித்த விடையவனார் வெள்
எயிற்றின்
அரவு ஆரம் புனைந்தவர் தம் திருமுன்றில் புறத்து
அணைந்தார் 5.1.324

1595 கையார்ந்த திருத்தொண்டு கழிய மிகும் காதலோடும்
செய்யா நின்றே எல்லாச் செந்தமிழ் மாலையும் பாடி
மையார்ந்த மிடற்றர் திரு மயானத்தை வலம்
கொண்டு
மெய்யார்வம் உறத் தொழுது விருப்பினோடு மேவு
நாள் 5.1.325

1596 சீர் வளரும் மதில் கச்சி நகர்த் திரு மேல் தளி
முதலாம்
நீர் வளரும் சடையவர் தாம் நிலவி உறை
ஆலயங்கள்
ஆர்வம் உறப் பணிந்து ஏத்தி ஆய்ந்த தமிழ்ச் சொல்
மலரால்
சார்வுறு மாலைகள் சாத்தித் தகும் தொண்டு
செய்திருந்தார் 5.1.326

1597 அந்நகரில் அவ் வண்ணம் அமர்ந்து உறையும் நாளின்
கண்
மன்னு திரு மாற் பேறு வந்து அணைந்து தமிழ் பாடிச்
5.1.327

சென்னி மிசை மதி புனைவார் பதி பலவும் சென்று
இறைஞ்சித்
துன்னினார் காஞ்சியினைத் தொடர்ந்த பெரும்
காதலினால்

1598 ஏகம்பன் காண் அவன் என் எண்ணத்தான் எனப்
போற்றிப்
பாகம் பெண் உருவானைப் பைங் கண் விடை
உயர்த்தானை
நாகம் பூண் உகந்தானை நலம் பெருகும் திரு நீற்றின்
ஆகந்தோய் அணியானை அணைந்து பணிந்து
இன்புற்றார் 5.1.328

1599 திருக்கச்சி ஏகம்பம் பணிந்து ஏத்தித் திங்களார்
நெருக்கச் செஞ்சடைக்கு அணிந்தார் நீடு பதி தொழ
நினைவார்
வருக்கைச் செஞ்சுளை பொழி தேன் வயல்
விளைக்கும் நாட்டு இடை போய்ப்
பருக்கைத் திண் களிற்று உரியார் கழுக் குன்றின்
பாங்கு அணைந்தார் 5.1.329

1600 நீடு திருக் கழுக் குன்றில் நிருத்தனார் கழல் வணங்கிப்
பாடு தமிழ்த் தொடை புனைந்து பாங்கு பல
பதிகளிலும்
சூடும் இனம் பிறை முடியார் தமைத் தொழுது
போற்றிப் போய்
மாடு பெரும் கடல் உடுத்த வான்மியூர் மருங்கு
அணைந்தார் 5.1.330

1601 திருவான்மியூர் மருந்தைச் சேர்ந்து பணிந்த
அன்பினொடும்
பெரு வாய்மைத் தமிழ்பாடி அம் மருங்கு பிறப்பு
அறுத்துத்
தருவார் தம் கோயில் பல சார்ந்து இறைஞ்சித் தமிழ்
வேந்தர்
மருவாரும் மலர்ச் சோலை மயிலாப்பூர் வந்து
அடைந்தார் 5.1.331

1602 வரை வளர் மா மயில் என்ன மாடமிசை மஞ்சாடும்
தரை வளர் சீர்த் திருமயிலைச் சங்கரனார் தாள்
வணங்கி
உரை வளர் மாலைகள் அணிவித்து உழவாரப் படை
ஆளி

5.1.332

திரை வளர் வேலைக் கரை போய் திரு ஒற்றியூர்
சேர்ந்தார்

1603 ஒற்றியூர் வள நகரத்து ஒளி மணி வீதிகள் விளக்கி
நற்கொடி மாலைகள் பூகம் நறும் கதலி நிரை நாட்டிப்
பொற்குடங்கள் தூபங்கள் தீபங்கள் பொலிவித்து
மற்றவரை எதிர் கொண்டு கொடு புக்கார் வழித்
தொண்டர் 5.1.333

1604 திரு நாவுக் கரசரும் அத் திரு ஒற்றியூர் அமர்ந்த
பெரு நாகத்தின் சிலையார் கோபுரத்தை இறைஞ்சிப்
புக்கு
ஒரு ஞானத் தொண்டர் உடன் உருகி வலம் கொண்டு
அடியார்
கரு நாமம் தவிர்ப்பாரைக் கை தொழுது முன்
வீழ்ந்தார் 5.1.334

1605 எழுதாத மறை அளித்த எழுத்து அறியும்
பெருமானைத்
தொழுத ஆர்வம் உற நிலத்தில் தோய்ந்து எழுந்தே
அங்கம் எல்லாம்
முழுது ஆய பரவசத்தின் முகிழ்த்த மயிர்க்கால் மூழ்க
விழுதாரை கண் பொழிய விதிர்ப்பு உற்று விம்மினார் 5.1.335

1606 வண்டு ஓங்கும் செங் கமலம் என எடுத்து மனம்
உருகப்
பண் தோய்ந்த சொல் திருத் தாண்டகம் பாடிப்
பரவுவார்
விண் தோய்ந்த புனல் கங்கை வேணியார் திரு
உருவம்
கண்டு ஓங்கு களிச் சிறப்பக் கை தொழுது புறத்து
அணைந்தார் 5.1.336

1607 விளங்கு பெருந் திருமுன்றில் மேவும் திருப்பணி
செய்தே
உளங்கொள் திரு விருத்தங்கள் ஓங்கு திருக் குறுந்
தொகைகள்
களங்கொள் திரு நேரிசைகள் பல பாடிக் கை தொழுது
வளங்கொள் திருப் பதியம் தனில் பல நாள்கள்
வைகினார் 5.1.337

1608 அங்குறையும் நாளின்கண் அருகுளவாம்
சிவாலயங்கள்
எங்கும் சென்று இனிது இறைஞ்சி ஏத்தும் அவர் இறை
5.1.338

அருளால்
பொங்கு புனல் திரு ஒற்றியூர் தொழுது போந்து
உமையாள்
பங்குடையார் அமர்ந்திருப் பாசூராம் பதி அணைந்தார்

1609 திருப்பாசூர் நகர் எய்திச் சிந்தையினில் வந்து ஊறும்
விருப்பு ஆர்வம் மேற் கொள்ள வேய் இடம் கொண்டு
உலகு உய்ய
இருப்பாரைப் புரம் மூன்றும் எரித்து அருள எடுத்த
தனிப்
பொருப்பார் வெஞ்சிலையாரைத் தொழுது எழுந்து
போற்றுவார் 5.1.339

1610 முந்தி மூவெயில் எய்த முதல்வனார் என எடுத்துச்
சிந்தை கரைந்து உருகு திருக் குறுந் தொகையும்
தாண்டகமும்
சந்தம் நிறை நேர் இசையும் முதலான தமிழ் பாடி
எந்தையார் திரு அருள் பெற்று ஏகுவார் வாகீசர் 5.1.340

1611 அம் மலர்ச் சீர்ப் பதியை அகன்று அயல் உளவாம் பதி
அனைத்தின்
மைம் மலரும் களத்தாரை வணங்கி மகிழ்வொடும்
போற்றி
மெய்ம்மை நிலை வழுவாத வேளாள விழுக்
குடிமைச்
செம்மையினால் பழையனூர்த் திரு ஆல வனம்
பணிந்தார் 5.1.341

1612 திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாம் எனச்
சிறப்பின்
ஒருவாத பெரும் திருத் தாண்டகம் முதலாம் ஓங்கு
தமிழ்ப்
பெரு வாய்மைத் தொடை மாலை பல பாடிப் பிற
பதியும்
மருஆர்வம் பெற வணங்கி வடதிசை மேல் வழிக்
கொள்வார் 5.1.342

1613 பல் பதியும் நெடும் கிரியும் படர் வனமும் சென்று
அடைவார்
செல் கதி முன் அளிப்பார் தம் திருக்காரிக் கரை
பணிந்து
தொல் கலையின் பெருவேந்தர் தொண்டர்கள் பின்
உம்பர் குழாம்

5.1.343

மல்கு திருக் காளத்தி மா மலை வந்து எய்தினார்

1614 பொன் முகலித் திருநதியின் புனித நெடும் தீர்த்தத்தில்
முன் முழுகிக் காளத்தி மொய் வரையின்
தாழ்வரையில்
சென்னி உறப் பணிந்து எழுந்து செம் கண் விடைத்
தனிப்பாகர்
மன்னும் மலை மிசை ஏறி வலம் கொண்டு
வணங்குவார் 5.1.344

1611 காதணி வெண் குழையானைக் காளத்தி மலைக்
கொழுந்தை
வேத மொழி மூலத்தை விழுந்து இறைஞ்சி எழுந்து
பெரும்
காதல் புரி மனம் களிப்பக் கண் களிப்பப் பரவசமாய்
நாதனை என்கண்ணுளான் என்னும் திருத்தாண்டகம்
நவின்றார் 5.1.345

1612 மலைச் சிகரச் சிகா மணியின் மருங்கு உற முன்னே
நிற்கும்
சிலைத் தடக்கைக் கண்ணப்பர் திருப்பாதம் சேர்ந்து
இறைஞ்சி
அலைத்து விழும் கண் அருவி ஆகத்துப் பாய்ந்து
இழியத்
தலைக் குவித்த கையினராய்த் தாழ்ந்து புறம் போந்து
அணைந்தார் 5.1.346

1613 சேண் நிலவு திருமலையில் திருப்பணி ஆயின
செய்து
தாணுவினை அம்மலை மேல் தாள் பணிந்த
குறிப்பினால்
பேணிதிருக் கயிலை மலை வீற்று இருந்த பெருங்
கோலம்
காணுமது காதலித்தார் கலை வாய்மைக் காவலனார் 5.1.347

1614 அங்கண் மா மலைமேல் மருந்தை வணங்கியார்
அருளால் மிகப்
பொங்கு காதலின் உத்தரத் திசை மேல் விருப்போடு
போதுவார்
துங்க மால் வரை கானியாறு தொடர்ந்த நாடு
கடந்தபின்
செங்கண் மால் விடை அண்ணல் மேவும் திருப்
பருப்பதம் எய்தினார் 5.1.348

1615 மான விஞ்சையர் வான நாடர்கள் வான் இயக்கர்கள் சித்தர்கள்
கான கின்னரர் பன்னகாதிபர் காம சாரிகளே முதல்
ஞான மோனிகள் நாளும் நம்பரை வந்து இறைஞ்சி நலம் பெறும்
தானம் ஆன திருச்சிலம்பை வணங்கி வண் தமிழ் சாற்றினார் 5.1.349

1616 அம் மருங்கு கடந்து போம் அவர் ஆர் கொள் சூல அயில் படைச்
செம்மல் வெண் கயிலைப் பொருப்பை நினைந்து எழுந்த ஓர் சிந்தையால்
எம் மருங்கும் ஓர் காதல் இன்றி இரண்டு பாலும் வியந்து உளோர்
கைம் மருங்கு அணையும் தெலுங்கு கடந்து கன்னடம் எய்தினார் 5.1.350

1617 கரு நடம் கழிவாக ஏகிய பின் கலந்த வனங்களும்
திரு நதித் துறை யாவையும் பயில் சேண் நெடும் கிரி வட்டையும்
பெரு நலம் கிளர் நாடும் எண்ணில பின்படப் பொற்பினால்
வரு நெடும் கதிர் கோலு சோலைய மாளவத்தினை நண்ணினார் 5.1.351

1618 அங்கு முற்றி அகன்று போகி அரும் சுரங்கள் கடந்து சென்று
எங்கும் மிக்க அறங்கள் நீடும் இலாட பூமி இகந்து போய்
மங்குல் சுற்றிய வெற்பினோடு வனங்கள் ஆறு கடந்து அயல்
பங்கயப் பழனத்து மத்திய பை திரத்தினை எய்தினார் 5.1.352

1619 அன்ன நாடு கடந்து கங்கை அணைந்து சென்று வலம் கொளும்
மின்னு வேணியர் வாரணாசி விருப்பினோடு பணிந்து உடன்
பின் அணைந்தவர் தம்மை அங்கண் ஒழிந்து கங்கை கடந்து போய்
மன்னு காதல் செய் நாவின் மன்னவர் வந்து கற்சுரம் முந்தினார் 5.1.353

1620 மாகம் மீது வளர்ந்த கானகம் ஆகி எங்கும்
மனித்தரால்
போகலா நெறி அன்றியும் புரிகின்ற காதல் பொலிந்து
எழச்
சாக மூல பலங்கள் துய்ப்பனவும் தவிர்த்து தனித்து
நேர்
ஏகினார் இரவும் பெரும் கயிலைக் குலக்கிரி
எய்துவார் 5.1.354

1621 ஆயவார் இருளின் கண் ஏகும் அவ் அன்பர் தம்மை
அணைந்து முன்
தீயவாய விலங்கு வன் தொழில் செய்ய அஞ்சின
நஞ்சுகால்
வாய நாக மணிப் பணங் கொள் விளக்கு எடுத்தன
வந்து
தோய வானவராயினும் தனி துன் அருஞ்சுரம்
முன்னினார் 5.1.355

1622 வெங்கதிர்ப் பகல் அக்கடத்து இடை வெய்யவன் கதிர்
கை பரந்து
எங்கும் மிக்க பிளப்பில் நாகர் தம் எல்லை புக்கு
எரிகின்றன
பொங்கழற்று எறு பாலை வெந்நிழல் புக்க சூழல் புகும்
பகல்
செங்கதிர்க் கனல் போலும் அத்திசை திண்மை
மெய்த்தவர் நண்ணினார் 5.1.356

1623 இங்ஙனம் இரவும் பகற் பொழுதும் அரும் சுரம்
எய்துவார்
பங்கயம் புரை தாள் பரட்டளவும் பசைத் தசை
தேயவும்
மங்கை பங்கர் தம் வெள்ளிமால் வரை வைத்த
சிந்தை மறப்பரோ
தம் கரங்கள் இரண்டுமே கொடு தாவி ஏகுதல்
மேவினார் 5.1.357

1624 கைகளும் மணி பந்து அசைந்துறவே கரைந்து
சிதைந்தபின்
மெய் கலந்து எழு சிந்தை அன்பின் விருப்பு மீமிசை
பொங்கிட
மொய் கடுங் கனல் வெம்பரல் புகை மூளும் அத்த
முயங்கியே
மை கொள் கண்டர் தம் அன்பர் செல்ல வருந்தி 5.1.358

உந்தினர் மார்பினால்
1625 மார்பமும் தசை நைந்து சிந்தி வரிந்த என்பு முரிந்திட
நேர் வரும் குறி நின்ற சிந்தையின் நேசம் ஈசனை
நேடு நீடு
ஆர்வம் அங்கு உயிர் கொண்டு ஊகைக்கும் உடம்பு
அடங்கம் ஊன் கெடச்
சேர் வரும் பழுவம் புரண்டு புரண்டு சென்றனர்
செம்மையோர் 5.1.359

1626 அப்புறம் புரள்கின்ற நீள் இடை அங்கம் எங்கும்
அரைந்திடச்
செப்ப அரும் கயிலைச் சிலம்பு அடி சிந்தை சென்று
உறும் ஆதலால்
மெய்ப் புறத்தில் உறுப்பு அழிந்த பின் மெல்ல உந்து
முயற்சியும்
தப்புறச் செயல் இன்றி அந்நெறி தங்கினார் தமிழ்
ஆளியார் 5.1.360

1627 அன்ன தன்மையர் கயிலையை அணைவதற்கு
அருளார்
மன்னும் தீந்தமிழ் புவியின் மேல் பின்னையும் வழுத்த
நன்னெடும் புனல் தடமும் ஒன்று உடன் கொடு
நடந்தார்
பன்னகம் புனை பரமர் ஓர் முனிவராம் படியால் 5.1.361

1628 வந்து மற்றவர் மருங்குற அணைந்து நேர் நின்று
நொந்து நோக்கி மற்றவர் எதிர் நோக்கிட நுவல்வார்
சிந்தி இவ் உறுப்பு அழிந்திட வருந்திய திறத்தால்
இந்த வெங்கடத்து எய்தியது என் என இசைத்தார் 5.1.362

1629 மாசில் வற்கலை ஆடையும் மார்பின் முந்நூலும்
தேசுடைச் சடை மவுலியும் நீறும் மெய் திகழ
ஆசில் மெய்த்தவர் ஆகி நின்றவர் தமை நோக்கிப்
பேச உற்றதோர் உணர்வு உற விளம்புவார் பெரியோர் 5.1.363

1630 வண்டுலாங் குழல் மலை மகளுடன் வட கயிலை
அண்டர் நாயகர் இருக்கும் அப் பரிசு அவர் அடியேன்
கண்டு கும்பிட விருப்பொடும் காதலின் அடைந்தேன்
கொண்ட என் குறிப்பு இது முனியே எனக் கூற 5.1.364

1631 கயிலை மால் வரை யாவது காசினி மருங்கு
பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற்கு
எளிதோ
அயில் கொள் வேல் படை அமரரும் அணுகுதற்கு 5.1.365

அரிதால்
வெயில் கொள் வெஞ்சுரத்து என் செய்தீர் வந்து என
விளம்பி

1632 மீளும் அத்தனை உமக்கு இனிக் கடன் என விளங்கும்
தோளும் ஆகமும் துவளும் முந்நூல் முனி சொல்ல
ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு
அல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என மறுத்தார் 5.1.366

1633 ஆங்கு மற்றவர் துணிவு அறிந்தவர் தமை அறிய
நீங்கு மாதவர் விசும்பு இடைக் கரந்து நீள் மொழியால்
ஓங்கு நாவினுக்கு அரசனே எழுந்திர் என்று உரைப்பத்
தீங்கு நீங்கிய யாக்கை கொண்டு எழுந்து ஒளி
திகழ்வார் 5.1.367

1634 அண்ணலே எனை ஆண்டு கொண்டு அருளிய அமுதே
விண்ணிலே மறைந்து அருள் புரி வேத நாயகனே
கண்ணினால் திருக் கயிலையில் இருந்த நின்
கோலம்
நண்ணி நான் தொழ நயந்து அருள் புரி எனப் பணிந்தார் 5.1.368

1635 தொழுது எழுந்த நல் தொண்டரை நோக்கி விண்
தலத்தில்
எழு பெரும் திருவாக்கினால் இறைவர் இப் பொய்கை
முழுகி நம்மை நீ கயிலையில் இருந்த அம்
முறைமை
பழுதில் சீர்த் திருவையாற்றில் காண் எனப் பணித்தார் 5.1.369

1636 ஏற்றினார் அருள் தலை மிசைக் கொண்டு எழுந்து
இறைஞ்சி
வேற்றும் ஆகி விண் ஆகி நின்றார் மொழி விரும்பி
ஆற்றல் பெற்ற அவ் அண்ணலார் அஞ்சு எழுத்து ஓதிப்
பால் தடம் புனல் பொய்கையில் மூழ்கினார் பணியால் 5.1.370

1637 ஆதி தேவர் தம் திரு அருள் பெருமை யார் அறிந்தார்
போத மாதவர் பனிமலர்ப் பொய்கையில் மூழ்கி
மாதோர் பாகனார் மகிழும் ஐ ஆற்றில் ஓர் வாவி
மீது தோன்றி வந்து எழுந்தனர் உலகெலாம் வியப்ப 5.1.371

1638 வம்புலாம் மலர் வாவியின் கரையில் வந்து ஏறி
உம்பர் நாயகர் திரு அருள் பெருமையை உணர்வார்
எம் பிரான் தரும் கருணை கொல் இது என இரு கண்
பம்பு தாரை நீர் வாவியில் படிந்து எழும் படியார் 5.1.372

1639 மிடையும் நீள் கொடி வீதிகள் விளங்கிய ஐயாறு
உடைய நாயகர் சேவடி பணிய வந்து உறுவார்
அடைய அப்பதி நிற்பவும் சரிப்பவும் ஆன
புடை அமர்ந்த தம் துணையொடும் பொலிவன
கண்டார் 5.1.373

1640 பொன் மலைக் கொடியுடன் அமர்வெள்ளியம்
பொருப்பில்
தன்மை ஆம் படி சத்தியும் சிவமுமாம் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னும் மாதவர் தம்பிரான் கோயில் முன் வந்தார் 5.1.374

1641 காணும் அப்பெருங் கோயிலும் கயிலை மால்
வரையாய்ப்
பேணும் மால் அயன் இந்திரன் முதல் பெருந்தேவர்
பூணும் அன்போடு போற்றி இசைத்து எழும் ஒலி
பொங்கத்
தாணு மா மறை யாவையும் தனித் தனி முழங்க 5.1.375

1642 தேவர் தானவர் சித்தர் விச் சாதரர் இயக்கர்
மேவு மாதவர் முனிவர்கள் புடையெலாம் மிடையக்
காவி வாள் விழி அரம்பையர் கானமும் முழவும்
தாவில் ஏழ் கடல் முழக்கினும் பெருகொலி தழைப்ப 5.1.376

1643 கங்கையே முதல் தீர்த்தமாம் கடவுள் மா நதிகள்
மங்கலம் பொலி புனல் பெரும் தடம் கொடு வணங்க
எங்கும் நீடிய பெரும் கண நாதர்கள் இறைஞ்சப்
பொங்கியங்களால் பூத வேதாளங்கள் போற்ற 5.1.377

1644 அந்தண் வெள்ளி மால் வரை இரண்டாம் என
அணைந்து ஓர்
சிந்தை செய்திடச் செங்கண் மால் விடை எதிர் நிற்ப
முந்தை மாதவப் பயன் பெறு முதன்மையால்
மகிழ்ந்தே
நந்தி எம்பிரான் நடு விடை ஆடி முன் நணுக 5.1.378

1645 வெள்ளி வெற்பின் மேல் மரகதக் கொடி உடன்
விளங்கும்
தெள்ளு பேர் ஒளிப் பவள வெற்பு என இடப்பாகம்
கொள்ளும் மா மலையாள் உடன் கூட வீற்று இருந்த
வள்ளலாரை முன் கண்டனர் வாக்கின் மன்னவனார் 5.1.379

1646 கண்ட ஆனந்தக் கடவினைக் கண்களால் முகந்து
கொண்டு கை குவித்து எதிர் விழுந்து எழுந்து மெய்
குலைய 5.1.380

அண்டர் முன்பு நின்று ஆடினார் பாடினார் அழுதார்
தொண்டனார்க்கு அங்கு நிகழ்ந்தன யார் சொல
வல்லார்

1647 முன்பு கண்டு கொண்டு அருளினார் அமுது உண்ண
மூவா
அன்பு பெற்றவர் அளவு இலா ஆர்வம் முன் பொங்கப்
பொன் பிறங்கிய சடையாரைப் போற்று
தாண்டகங்கள்
இன்பம் ஓங்கிட ஏத்தினார் எல்லையில் தவத்தோர் 5.1.381

1648 ஆயவாறு மற்று அவர் மனம் களிப்புறக் கயிலை
மேய நாதர் தம் துணையொடும் வீற்று இருந்து
அருளித்
தூய தொண்டரும் தொழுது எதிர் நிற்க அக் கோலம்
சேயது ஆக்கினார் திருவையாறு அமர்ந்தமை திகழ 5.1.382

1649 ஐயர் கோலம் அங்கு அளித்து அகன்றிட அடித்
தொண்டர்
மையல் கொண்டு உளம் மகிழ்ந்திட வருந்தி மற்று
இங்குச்
செய்ய வேணியர் அருள் இதுவோ எனத் தெளிந்து
வையம் உய்ந்திட கண்டமை பாடுவார் மகிழ்ந்து 5.1.383

1650 மாதர் பிறைக் கண்ணியானை மலையான்
மகளொடும் என்னும்
கோதறு தண் தமிழ்ச் சொல்லால் குலவு
திருப்பதிகங்கள்
வேத முதல்வர் ஐயாற்றில் விரவும் சராசரம் எல்லாம்
காதல் துணை ஒடும் கூடக் கண்டேன் எனப் பாடி
நின்றார் 5.1.384

1651 கண்டு தொழுது வணங்கிக் கண் நுதலார் தமைப்
போற்றிக்
கொண்ட திருத் தாண்டகங்கள் குறுந்தொகை நேரிசை
அன்பின்
மண்டு விருத்தங்கள் பாடி வணங்கித் திருத்தொண்டு
செய்தே
அண்டர் பிரான் திருவையாறு அமர்ந்தனர் நாவுக்கு
அரசர் 5.1.385

1652 நீடிய அப்பதி நின்று நெய்த்தானமே முதலாக
மாடுயர் தானம் பணிந்து மழபாடியாரை வணங்கிப்
பாடிய செந்தமிழ் மாலை பகர்ந்து பணி செய்து
5.1.386

போற்றித்
தேடிய மாலுக்கு அரியார் திருப் பூந் துருத்தியைச்
சேர்ந்தார்

1653 சேர்ந்து விருப்பொடும் புக்குத் திரு நட மாளிகை
முன்னர்ச்
சார்ந்து வலம் கொண்டு இறைஞ்சித் தம் பெருமான்
திரு முன்பு
நேர்ந்த பரிவொடும் தாழ்ந்து நிறைந்து ஒழியா அன்பு
பொங்க
ஆர்ந்த கண்ணீர் மழை தூங்க அயர் உறும் தன்மையர்
ஆனார் 5.1.387

1654 திருப்பூந் துருத்தி அமர்ந்த செஞ்சடையானை ஆன்
ஏற்றுப்
பொருப்பு ஊர்ந்து அருளும் பிரானைப்
பொய்யிலியைக் கண்டேன் என்று
விருப்புறு தாண்டகத்தோடு மேவிய காதல் விளைப்ப
இருப்போம் திருவடிக்கீழ் நாம் என்னும் குறுந் தொகை
பாடி 5.1.388

1655 அங்கு உறையும் தன்மை வேண்டி நாம் அடி
போற்றுவது என்று
பொங்கு தமிழ்ச் சொல் விருத்தம் போற்றிய பாடல்
புரிந்து
தங்கித் திருத் தொண்டு செய்வார் தம்பிரானார் அருள்
பெற்றுத்
திங்களும் ஞாயிறும் தோயும் திரு மடம் ஆங்கு
ஒன்று செய்தார் 5.1.389

1656 பல் வகைத் தாண்டகத் தோடும் பரவும் தனித்
தாண்டகமும்
அல்லல் அறுப்பவர் தானத்து அடைவும் திருத்
தாண்டகமும்
செல் கதி காட்டிடப் போற்றும் திரு அங்க மாலையும்
உள்ளிட்டு
எல்லையில் பன்மைத் தொகையும் இயம்பினர் ஏத்தி
இருந்தார் 5.1.390

1657 பொன்னி வலம் கொண்ட திருப் பூந்துருத்தி அவர்
இருப்பக்
கல் மனத்து வல் அமணர் தமை வாதில் கட்டு
அழித்துத்

5.1.391

தென்னவன் கூன் நிமிர்த்தி அருளித் திரு நீற்றின் ஒளி
கண்டு
மன்னிய சீர் சண்பை நகர் மறையவனார் வருகின்றார்

1658 தீம் தமிழ் நாட்டு இடை நின்றும் எழுந்து அருளிச்
செழும் பொன்னி
வாய்ந்த வளம் தரு நாட்டு வந்து அணைந்தார்
வாக்கினுக்கு
வேந்தர் இருந்தமை கேட்டு விரைந்தவர் பால்
செல்வன் எனப்
பூந்துருத்தி வளம் பதியின் புறம்பு அணையில் வந்து
அணைந்தார் 5.1.392

1659 சண்பை வருந் தமிழ் விரகர் எழுந்தருளத் தாங்கேட்டு
மண் பரவும் பெருங் கீர்த்தி வாகீசர் மனம் மகிழ்ந்து
கண் பெருகுங் களிகொள்ளக் கண்டு இறைஞ்சும்
காதலினால்
எண் பெருகும் விருப்பு எய்த எழுந்து அருளி எதிர்
சென்றார் 5.1.393

1660 காழியர் கோன் வரும் எல்லை கலந்து எய்திக்
காதலித்தார்
சூழும் இடைந்திடு நெருக்கில் காணாமே தொழுது
அருளி
வாழி அவர் தமைத் தாங்கும் மணிமுத்தின்
சிவிகையினைத்
தாழும் உடல் இது கொண்டு தாங்குவன் யான் எனத்
தரித்தார் 5.1.394

1661 வந்து ஒருவர் அறியாமே மறைந்த வடிவொடும் புகலி
அந்தணனார் ஏறி எழுந்து அருளி வரும் மணி முத்தின்
சந்த மணிச் சிவிகையினைத் தாங்குவார் உடன்
தாங்கிச்
சிந்தை களிப்புற வருவார் தமையாரும் தெளிந்து
இலரால் 5.1.395

1662 திரு ஞான மாமுனிவர் அரசு இருந்த பூந் துருத்திக்கு
அருகுகாக எழுந்து அருளி எங்கு உற்றார் அப்பர் என
உருகா நின்று உம் அடியேன் உம் அடிகள் தாங்கி
வரும்
பெரு வாழ்வு வந்து எய்தப் பெற்று இங்கு உற்றேன்
என்றார் 5.1.396

1663 பிள்ளையார் அதுகேளாப் பெருகு விரைவு உடன்
இழிந்தே
உள்ளமிகு பதைப்பு எய்தி உடைய அரசினை வணங்க
வள்ளலார் வாகீசர் அவர் வணங்கா முன் வணங்கத்
துள்ளு மான் மறிக் கரத்தார் தொண்டடர் எலாம்
தொழுது ஆர்த்தார் 5.1.397

1664 கழு மலக் கோன் திருநாவுக்கு அரசருடன் கலந்து
அருளிச்
செழு மதியம் தவழ் சோலைப் பூந்துருத்தித்
திருப்பதியின்
மழுவினொடு மான் ஏந்தும் திருக்கரத்தார் மலர்த்
தாள்கள்
தொழுது உருகி இன்புற்றுத் துதி செய்து அங்கு உடன்
இருந்தார் 5.1.398

1665 வல் அமணர் தமை வாதில் வென்றதுவும் வழுதி பால்
புல்லிய கூன் நிமிர்த்ததுவும் தண் பொருந்தப் புனல்
நாட்டில்
எல்லை இலாத் திரு நீறு வளர்த்து அதுவும் இருந்
தவத்தோர்
சொல்ல அது கேட்டு உவந்தார் தூய புகழ் வாகீசர் 5.1.399

1666 பண்புடைய பாண்டி மா தேவியார் தம் பரிவும்
நண்புடைய குலச் சிறையார் பெருமையும் ஞானத்
தலைவர்
எண் பெருக உரைத்து அருள எல்லையில் சீர் வாகீசர்
மண் குலவு தமிழ் நாடு காண்பதற்கு மனம் கொண்டார் 5.1.400

1671 பிரம புரத் திரு முனிவர் பெரும் தொண்டை நல்
நாட்டில்
அரன் உறையும் தானங்கள் அணைந்து இறைஞ்சிப்
பாடுதற்கு அங்கு
உரன் உடைய திரு நாவுக்கு அரசர் உரை செய்து
அருளப்
புரம் எரித்தார் திருமகனார் பூந்துருத்தி தொழுது
அகன்றார் 5.1.401

1672 ஆண்ட அரசு அங்கணர் சீர் அருள் பெற்றப் பதி
நின்றும்
பாண்டி நாட்டு எழுந்து அருளும் பான்மையராய்த்
தென் திசை போய்க்
காண் தகைய திருப் புத்தூர் பணிந்து ஏத்திக் கதிர்
5.1.402

மதியம்
தீண்டு கொடி மதில் மதுரைத் திரு ஆலவாய்
சேர்ந்தார்

1673 சென்று அணைந்து மதுரையினில் திருந்திய நூல்
சங்கத்துள்
அன்று இருந்து தமிழ் ஆராய்ந்து அருளிய அங்கணர்
கோயில்
முன்றிலினை வலம் கொண்டு முன் இறைஞ்சி உள்
புக்கு
வன் தனி மால் விடையாரை வணங்கி மகிழ்வொடும்
திளைத்தார் 5.1.403

1674 எய்திய பேர் ஆனந்த இன்பத்தின் இடை அழுந்தி
மொய் திகழும் சடையானை முளைத்தானை என்று
எடுத்துச்
செய் தவத்தோர் தாண்டகச் செந்தமிழ் பாடிப் புறத்து
அணைவார்
கை தொழுது பணிந்து ஏத்தித் திரு உள்ளம் களி
சிறந்தார் 5.1.404

1675 சீர் திகழும் பாண்டிமா தேவியார் திரு நீற்றின்
சார்வு அடைய கூன் நிமிர்ந்த தென்னவனார் தம்
உடனே
பார் பரவும் குலச் சிறையார் வாகீசர் தமைப் பணி
உற்று
ஆரகிலாக் காதல் மிக அடி போற்ற அங்கு இருந்தார் 5.1.405

1676 திரு ஆலவாய் அமர்ந்த செஞ்சுடரைச் செழும்
பொருள் நூல்
தருவானை நேர் இசையும் தாண்டகமும் முதலான
பெரு வாய்மைத் தமிழ் பாடிப் பேணு திருப்பணி
செய்து
மருவார் தம் புரம் எரித்தார் பூவணத்தை வந்து
அடைந்தார் 5.1.406

1677 கொடி மாடம் நிலவு திருப் பூவணத்துக் கோயிலின்
உள்
நெடியானுக்கு அறிய அரியார் நேர் தோன்ற கண்டு
இறைஞ்சி
வடிவேலு திரிசூலத் தாண்டகத்தால் வழுத்திப்
போய்ப்
பொடி நீடு திருமேனிப் புனிதர் பதி பிற பணிவார் 5.1.407

1678 தென் இலங்கை இராவணன் தன் சிரம் ஈரைந்தும் துணித்த
மன்னவன் ஆம் இராமனுக்கு வரும் பெரும் பாதகம் தீர்த்த
பிஞ்ஞகரைத் தொழுவதற்கு நினைந்து போய்ப் பெரு மகிழ்ச்சி
துன்னி மனம் கரைந்து உருகத் தொழுது எழுந்தார் சொல் அரசர் 5.1.408

1679 தேவர் தொழும் தனி முதலைத் திரு இராமேச்சுரத்து மேவிய சங்கரனை எதிர் நின்று விருப்புறு மொழியால்
பாவு திரு நேர் இசைகள் முதலான தமிழ் பாடி
நாவரசர் திருத் தொண்டு நலம் பெருகச் செய்து அமர்ந்தார் 5.1.409

1680 அங்குறைந்து கண் நுதலார் அடி சூடி அகன்று போய்ப்
பொங்கு தமிழ்த் திரு நாட்டுப் புறம் பணை சூழ் நெல் வேலி
செங்கண் விடையார் மன்னும் திருக் கானப் பேர் முதலாம்
எங்கும் நிகழ் தானங்கள் எல்லாம் புக்கு இறைஞ்சுவார் 5.1.410

1681 தொழுது பல வகையாலும் சொல் தொடை வண் தமிழ் பாடி
வழுவில் திருப்பணி செய்து மனம் கசிவு உற்று எப் பொழுதும்
ஒழுகிய கண் பொழி புனலும் ஓவாது சிவன் தாள்கள்
தழுவிய சிந்தையில் உணர்வும் தங்கிய நீர்மையில் சரித்தார் 5.1.411

1682 தேன் பொழியும் செந்தமிழ் நாட்டினில் எங்கும் சென்று இறைஞ்சிப்
பாம்பு அணிவார் தமைப் பணிவார் பொன்னி நாடது அணைந்து
வாம் புனல் சூழ் வள நகர்கள் பின்னும் போய் வணங்கியே
பூம் புகலூர் வந்து அடைந்தார் பொய்ப் பாசம் போக்குவார் 5.1.412

1683 பொய்கை சூழ் பூம் புகலூர்ப் புனிதர் மலர்த் தாள் வணங்கி
நையும் மனப் பரிவினோடும் நாள் தோறும் திரு முன்றில்
5.1.413

கை கலந்த திருத் தொண்டு செய்து பெரும் காதல்
உடன்
வைகு நாள் எண் இறந்த வண் தமிழ் மாலைகள்
மொழிவார்

1684 நின்ற திருத் தாண்டகமும் நீடு தனித் தாண்டகமும்
மன்று உறைவார் வாழ் பதிகள் வழுத்து திருத்
தாண்டகமும்
கொன்றை மலர்ச் சடையார் பால் குறைந்த திரு நேர்
இசையும்
துன்று தனி நேர் இசையும் முதலான தொடுத்து
அமைத்தார் 5.1.414

1685 ஆருயிரின் திரு விருத்தம் தச புராணத்து அடைவும்
பார் பரவும் பாவ நாசப் பதிகம் பன்முறையும்
நேர் பட நின்று அறை கூவும் திருப்பதிகம் முதல்
பிறவும்
பேர் அருளின் கடல் அளிக்கும் பெருமானைப்
பாடினார் 5.1.415

1686 அந் நிலைமையினில் ஆண்ட அரசு பணி செய்ய அவர்
நல் நிலைமை காட்டுவார் நம்பர் திரு மணி முன்றில்
தன்னில் வரும் உழவாரம் நுழைந்த இடம் தான்
எங்கும்
பொன்னினொடு நவமணிகள் பொலிந்து இலங்க
அருள் செய்தார் 5.1.416

1687 செம்பொன்னும் நவமணியும் சேண் விளங்க
ஆங்கொவையும்
உம்பர் பிரான் திருமுன்றில் உருள் பருக்கை உடன்
ஒக்க
எம் பெருமான் வாகீசர் உழ வாரத்தினில் ஏந்தி
வம்பலர் மென் பூங்கமல வாவியினில் புக எறிந்தார் 5.1.417

1688 புல்லோடும் கல்லோடும் பொன்னோடும்
மணியோடும்
சொல்லோடும் வேறு பாடு இலா நிலைமை துணிந்து
இருந்த
நல்லோர் முன் திருப் புகலூர் நாயகனார் திரு
அருளால்
வில்லோடு நுதல் மடவார் விசும்பூடு வந்து இழிந்தார் 5.1.418

1689 வானகம் மின்னுக் கொடிகள் வந்து இழிந்தால் என
வந்து
5.1.419

தான நிறை சுருதிகளில் தகும் அலங்காரத் தன்மை
கான அமுதம் பரக்கும் கனிவாயில் ஒளி பரப்பப்
பானல் நெடுங் கண்கள் வெளி பரப்பி இசை பாடுவார்

1690 கற்பகப் பூந்தளிர் அடி போம் காமரு சாரிகை செய்ய
உற்பலம் மென் முகிழ் விரல் வட்டு அணையோடும்
கை பெயரப்
பொற்புறும் அக் கையின் வழிப் பொரு கயல் கண்
புடை பெயர
அற்புத பொன் கொடி நுடங்கி ஆடுவபோல் ஆடுவார் 5.1.420

1691 ஆடுவார் பாடுவார் அலர் மாரி மேல் பொழிவார்
கூடுவார் போன்று அணைவார் குழல் அவிழ இடை
நுடங்க
ஓடுவார் மார வேளுடன் மீள்வார் ஒளி பெருக
நீடுவார் துகில் அசைய நிற்பாரும் ஆயினார் 5.1.421

1692 இத் தன்மை அரம்பையர்கள் எவ்விதமும் செயல்
புரிய
அத்தனார் திருவடிக் கீழ் நினைவு அகலா அன்பு
உருகும்
மெய்த் தன்மை உணர்வு உடைய விழுத் தவத்து
மேலோர் தம்
சித்த நிலை திரியாது செய் பணியின் தலை நின்றார் 5.1.422

1693 இம் மாயப் பவத் தொடக்காம் இருவினைகள் தமை
நோக்கி
உம்மால் இங்கு என்ன குறை உடையேன் யான்
திருவாரூர்
அம்மானுக்கு ஆள் ஆனேன் அலையேன் மின் நீர்
என்று
பொய்ம் மாயப் பெருங் கடலுள் எனும் திருத்
தாண்டகம் புகன்றார் 5.1.423

1694 மாதர் அவர் மருங்கு அணைய வந்து எய்தி மதன
வசக்
காதலர் புரிந்து ஒழுகும் கை தவங்கள் செய்திடவும்
பேதம் இலா ஓர் உணர்வில் பெரிய வரைப்
பெயர்விக்க
யாதும் ஒரு செயல் இல்லாமையில் இறைஞ்சி எதிர்
அகன்றார் 5.1.424

1695 இந் நிலைமை உலகு ஏழும் எய்த அறிந்து இயல்பு
ஏத்த

5.1.425

மன்னிய அன்பு உறு பத்தி வடிவு ஆன வாகீசர்
மின் நிலவும் சடையார் தம் மெய் அருள் தான் எய்த வரும்
அந்நிலைமை அணித்து ஆகச் சில நாள் அங்கு அமர்ந்து இருந்தார்

1696 மன்னிய அந்தக் கரணம் மருவுதலைப் பாட்டினால்
தன்னுடைய சரண் ஆன தமியேனைப் புகலூரன்
என்னை இனிச் சேவடிக்கீழ் இருத்திடும் என்று எழுகின்ற
முன் உணர்வின் முயற்சியினால் திருவிருத்தம் பல மொழிந்தார் 5.1.426

1697 மண் முதலாம் உலகு ஏத்த மன்னு திருத்
தாண்டகத்தைப்
புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன் எனப்
புகன்று
நண்ணரிய சிவ ஆனந்த ஞான வடிவே ஆகி
அண்ணலார் சேவடிக் கீழ் ஆண்ட அரசு அமர்ந்து இருந்தார் 5.1.427

1698 வானவர்கள் மலர் மாரி மண் நிறைய விண் உலகின்
மேல் நிறைந்த ஐந்து பேரிய ஒலியும் விரிஞ்சன்
முதல்
யோனிகள் ஆயின எல்லாம் உள் நிறைந்த பெரு
மகிழ்ச்சி
தான் நிறைந்த சித்திரையில் சதயம் ஆம் திரு நாளில் 5.1.428

1699 அடியன் ஏன் ஆதரவால் ஆண்ட அரசின் சரிதப்
படியை யான் அறிந்தபடி பகர்ந்தேன் அப் பர முனிவன்
கடி மலர் மென் சேவடிகள் கை தொழுது குலச்
சிறையார்
முடிவில் புகழ்த் திருத் தொண்டின் முயற்சியினை
மொழிகின்றேன் 5.1.429

திருச்சிற்றம்பலம்

5.2 குலச்சிறை நாயனார் புராணம் (1700 - 1710)

திருச்சிற்றம்பலம்

1700 பன்னு தொல் புகழ்ப் பாண்டி நன் நாட்டு இடைச்
செந்நெலார் வயல் தீம் கரும்பின் அயல் 5.2.1

துன்னு பூகப் புறம் பணை சூழ்ந்தது
மன்னு வண்மையினார் மண மேற்குடி

1701 அப்பதிக்கு முதல்வர் வன் தொண்டர் தாம்
ஒப்பரும் பெரு நம்பி என்று ஓதிய
செப்பரும் சீர்க் குலச் சிறையார் திண்மை
வைப்பினால் திருத்தொண்டில் வழாதவர் 5.2.2

1702 காரணங்கள் கண் நுதற்கு அன்பர் என்னவே
வாரம் ஆகி மகிழ்ந்தவர் தாள் மிசை
யாரும் அன்பொடு வீழ்ந்து அஞ்சலி முகிழ்த்து
ஈர நல் மொழி எய்த இசைத்து உள்ளார் 5.2.3

1703 குறியில் நான்கு குலத்தினர் ஆயினும்
நெறியின் அக்குலம் நீங்கினர் ஆயினும்
அறிவு சங்கரற்கு அன்பர் எனப் பெறில்
செறிவுறப் பணிந்து ஏத்திய செய்கையார் 5.2.4

1704 உலகர் கொள்ளும் நலத்தினர் ஆயினும்
அலகில் தீமையர் ஆயினும் அம்புலி
இலகு செஞ்சடையார்க்கு அடியார் எனில்
தலம் உறப் பணிந்து ஏத்தும் தகைமையார் 5.2.5

1705 பண்பு மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண் பெருக்கிய அன்பால் எதிர் கொண்டு
நண்பு கூர்ந்து அமுது ஊட்டும் நலத்தினார் 5.2.6

1706 பூதி கோவணம் சாதனத்தால் பொலிந்து
ஆதி தேவர் தம் அஞ்செழுத்தாம் அவை
ஓது நா வணக்கத்தால் உரைப்பவர்
பாதம் நாளும் பரவிய பண்பினார் 5.2.7

1707 இன்ன நல் ஒழுக்கத்தினார் ஈறில் சீர்த்
தென்னவன் நெடு மாறற்குச் சீர் திகழ்
மன்னு மந்திரிகட்கு மேல் ஆகியார்
ஒன்னலர்ச் செற்று உறுதிக் கண் நின்று உளார் 5.2.8

1708 ஆய செய்கையர் ஆயவர் ஆறணி
நாயனார் திருப் பாதம் நவின்று உளார்
பாய சீர் புனை பாண்டி மா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த் தொண்டர் ஆயினார் 5.2.9

1709 புன்னையத் தருகந்தர் பொய் நீக்கவும்
தென்னர் நாடு திருநீறு போற்றவும்
மன்னு காழியர் வள்ளலார் பொன் அடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினார் 5.2.10

1710 வாதில் தோற்ற அமணரை வன் கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித்தார் திறம்
யாது போற்றினேன் மேல் இனி ஏத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர் தாள் 5.2.11

திருச்சிற்றம்பலம்

5.3 பெரு மிழலைக் குறும்ப நாயனார் புராணம் (1711 -1721)

திருச்சிற்றம்பலம்

1711 சூதம் நெருங்கு குலைத் தெங்கு பலவும்
பூகஞ்சூழ்புடைத்தாய்
வீதிதோறும் நீற்றின் ஒளி விரிய மேவி விளங்கு பதி
நீதி வழுவா நெறியினராய் நிலவும் குடியால் நெடு
நிலத்து
மீது விளங்கும் தொன்மையது மிழலை நாட்டுப்
பெருமிழலை 5.3.1

1712 அன்ன தொன்மைத் திருப்பதிக் கண் அதிபர் மிழலைக்
குறும்பனார்
சென்னி மதியம் வைத்தவர் தம் அடியார்க்கு ஆன
செய் பணிகள்
இன்ன வண்ணம் என்றவர் தாம் உரையா முன்னம்
எதிர் ஏற்று
முன்னம் உணர்ந்து செய்வாராய் முதிரும் அறிவின்
பயன் கொள்வார் 5.3.2

1713 தொண்டர் பலரும் வந்து ஈண்டி உண்ணத்
தொலையா அமுது ஊட்டிக்
கொண்டு செல்ல இரு நிதியம் முகந்து கொடுத்துக்
குறைந்த அடைவார்
வண்டு மருவும் குழல் உமையாள் கேள்வன் செய்ய
தாள் என்னும்
புண்ட ரீகம் அக மலரில் வைத்துப் போற்றும்
பொற்பினார் 5.3.3

1714 இத் தன்மையராய் நிகழும் நாள் எல்லை இல்லாத்
திருத் தொண்டின்
மெய்த் தன்மையினை உலகு அறிய விதியால்
வணங்கி மெய் அடியார் 5.3.4

சித்தம் நிலவும் திருத் தொண்டத் தொகை பாடிய
நம்பியைப் பணிந்து
நித்தன் அருள் பெற்றவர் பாதம் நினைக்கும் நியமத்
தலை நின்றார்

1715 மையார் தடங் கண் பரவையார் மணவாளன் தன்
மலர்க் கழல்கள்
கையால் தொழுது வாய் வாழ்த்தி மனத்தால்
நினைக்கும் கடப் பாட்டில்
செய்யாள் கோனும் நான்முகனும் அறியாச்
செம்பொன் தாள் இணைக் கீழ்
உய்வான் சேர உற்ற நெறி இதுவே என்று அன்பினில்
உய்த்தார் 5.3.5

1716 நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணி மாதி சித்தியான அணைந்த
அதற்பின்
மூளும் காதலுடன் பெருக முதல்வர் நாமத்து
அஞ்செழுத்தும்
கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசு வாய்ப்பக்
கெழுமினார் 5.3.6

1717 இன்ன வாறே இவர் ஒழுக ஏறு கொடி மேல்
உயர்த்தவர் தம்
பொன்னங் கழல்கள் மண்ணின் மேல் பொருந்த வந்து
வழக்கு உரைத்து
மன்னும் ஓலை அவை முன்பு காட்டி ஆண்டவன்
தொண்டர்
சென்னி மதி தோய் மாட மலி கொடுங் கோளூரைச்
சேர்வுற்றார் 5.3.7

1718 அஞ்சைக் களத்து நஞ்சு உண்ட அமுதைப் பரவி
அணைவுறுவார்
செஞ்சொல் தமிழ் மாலைகள் மொழியத் தேவர்
பெருமான் அருளாலே
மஞ்சில் திகழும் வட கயிலைப் பொருப்பில் எய்த
வரும் வாழ்வு
நெஞ்சில் தெளிய இங்கு உணர்ந்தார் நீடு மிழலைக்
குறும்பனார் 5.3.8

1719 மண்ணில் திகழும் திரு நாவலூரில் வந்த வன்
தொண்டர்
நண்ணற்கு அரிய திருக் கயிலை நாளை எய்த நான்
5.3.9

பிரிந்து
கண்ணில் கரிய மணி கழிய வாழ்வார் போல வாழேன்
என்று
எண்ணிச் சிவன் தாள் இன்றே சென்று அடைவன்
யோகத்தால் என்பார்

1720 நாலு கரணங்களும் ஒன்றாய் நல்ல அறிவு மேல்
கொண்டு
காலும் பிரம நாடி வழிக் கருத்துச் செலுத்தக் கபால
நடு
ஏலவே முன் பயின்ற நெறி எடுத்த மறை மூலம்
திறப்ப
மூல முதல்வர் திருப் பாதம் அணைவார் கயிலை
முன் அடைந்தார் 5.3.10

1721 பயிலைச் செறிந்த யோகத்தால் பாவை கேள்வன்
பாதமுறக்
கயிலை பொருப்பர் அடி அடைந்த மிழலைக் குறும்பர்
கழல் வணங்கி
மயிலைப் புறம் கொள் மென் சாயல் மகளிர் கிளவி
யாழினொடும்
குயிலைப் பொருவும் காரைக்கால் அம்மை பெருமை
கூறுவாம் 5.3.11

திருச்சிற்றம்பலம்

5.4 காரைக்கால் அம்மையார் புராணம் (1722 - 1787)

திருச்சிற்றம்பலம்

1722 மானம் மிகு தருமத்தின் வழி நின்று வாய்மையினில்
ஊனமில் சீர்ப் பெரு வணிகர் குடி துவன்றி ஓங்கு பதி
கூனல் வளை திரை சுமந்து கொண்டு ஏறி மண்டு
கழிக்
கானல் மிசை உலவு வளம் பெருகு திருக்
காரைக்கால் 5.4.1

1723 வங்க மலி கடல் காரைக்காலின் கண் வாழ் வணிகர்
தங்கள் குலத் தலைவனார் தனதத்தனார் தவத்தால்
அங்கு அவர் பால் திரு மடந்தை அவதரித்தாள் என
வந்து
பொங்கிய பேர் அழகு மிகப் புனிதவதியார் பிறந்தார் 5.4.2

1724 வணிகர் பெரும் குலம் விளங்க வந்து பிறந்து
அருளியபின்
அணி கிளர் மெல் அடி தளர்வுற்று அசையும் நடைப்
பருவத்தே
பணி அணிவார் கழற்கு அடிமை பழகி பாங்கு பெறத்
தணிவில் பெரு மனக் காதல் ததும்ப வரும் மொழி
பயின்றார் 5.4.3

1725 பல் பெரு நற்கிளை உவப்பப் பயில் பருவச் சிறப்பு
எல்லாம்
செல்வ மிகு தந்தையார் திருப் பெருகும் செயல் புரிய
மல்கு பெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்
பால்
அல்கிய அன்புடன் அழகின் கொழுந்து எழுவது என
வளர்வார் 5.4.4

1726 வண்டல் பயில்வன எல்லாம் வளர் மதியம் புனைந்த
சடை
அண்டர் பிரான் திரு வார்த்தை அணைய வருவன
பயின்று
தொண்டர் வரில் தொழுது தாதியர் போற்றத் துணை
முலைகள்
கொண்ட நுசுப்பு ஒதுங்கு பதக் கொள்கையினில்
குறுகினார் 5.4.5

1727 நல்லவென உறுப்பு நூலவர் உரைக்கும் நலம் நிரம்பி 1
மல்கு பெரு வனப்பு மீக் கூர வரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில் இவர்கள் மரபினுக்கு
ஏற்கும்
தொல் குலத்து வணிகர் மகன் பேசுதற்குத்
தொடங்குவார் 5.4.6

1728 நீடிய சீர்க் கடல் நாகை நிதிபதி என்று உலகின் கண்
பாடு பெறு புகழ் வணிகன் பயந்த குல மைந்தனுக்குத்
தேடவரும் திருமரபில் சேயிழையை மகன் பேச
மாட மலி காரைக்கால் வள நகரில் வரவிட்டார் 5.4.7

1729 வந்த மூது அறிவோர்கள் மணம் குறித்த மனை
புகுந்து
தந்தையாம் தனதத்தன் தனை நேர்ந்து நீ பயந்த
பைந் தொடியை நிதிபதி மைந்தன் பரம தத்தனுக்கு
முந்தை மரபினுக்கு ஏற்கும் முறைமை மணம் புரிக
என்றார் 5.4.8

1730 மற்று அவனும் முறைமையினால் மணம் இசைந்து
செலவு இடச் சென்று
உற்றவர்கள் உரை கேட்ட நிதிபதியும் உயர் சிறப்புப்
பெற்றனன் போல் உவந்து தனிப் பெரு மகட்குத்
திருமலியும்
சுற்றம் உடன் களி கூர்ந்து வதுவை வினைத் தொழில்
பூண்டான் 5.4.9

1731 மணம் இசைந்த நாள் ஓலை செலவிட்டு மங்கல நாள்
அணைய வதுவைத் தொழில்கள் ஆன எலாம்
அமைவித்தே
இணர் அலங்கல் மைந்தனையும் மண அணியின்
எழில் விளக்கி
பணை முரசம் எழுந்து ஆர்ப்பக் காரைக்கால் பதி
புகுந்தார் 5.4.10

1732 அளி மிடை ஆர்த்த தன தத்தன் அணி மாடத்துள்
புகுந்து
தெளிதரு நூல் விதி வழியே செயல் முறைமை
செய்து அமைத்துத்
தளிர் அடி மென் நகை மயிலைத் தாது அவிழ் தார்க்
காளைக்குக்
களி மகிழ் சுற்றம் போற்றக் கலியாணம் செய்தார்கள் 5.4.11

1733 மங்கல மா மண வினைகள் முடித்து இயல்பின்
வைகு நாள்
தங்கள் குடிக்கு அரும் புதல்வி ஆதலினால் தன
தத்தன்
பொங்கொலி நீர் நாகையினில் போகாமே கணவன்
உடன்
அங்கண் அமர்ந்து இனிது இருக்க அணி மாடம்
மருங்கு அமைத்தான் 5.4.12

1734 மகள் கொடையின் மகிழ் சிறக்கும் வரம்பில் தனம்
கொடுத்து அதன்பின்
நிகர்ப்பு அரிய பெரும் சிறப்பில் நிதிபதி தன் குல
மகனும்
தகைப்பில் பெரும் காதலினால் தங்கு மனை வளம்
பெருக்கி
மிகப் புரியும் கொள்கையினில் மேம் படுதல்
மேவினான் 5.4.13

1735 ஆங்கு அவன் தன் இல்வாழ்க்கை அரும் துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர் தாமும் பொரு விடையார் திருவடிக் கீழ்
ஓங்கிய அன்புறு காதல் ஒழிவு இன்றி மிகப் பெருகப்
பாங்கில் வரும் மனை அறத்தின் பண்பு வழாமையில் பயில்வார் 5.4.14

1736 நம்பர் அடியார் அணைந்தால் நல்ல திரு அமுது அளித்தும்
செம்பொன்னும் நவ மணியும் செழுந் துகிலும் முதலான
தம் பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும்
உம்பர் பிரான் திருவடிக் கீழ் உணர்வு மிக ஒழுகு நாள் 5.4.15

1737 பாங்குடைய நெறியின் கண் பயில் பரம தத்தனுக்கு
மாங்கனிகள் ஓரிரண்டு வந்து அணைந்தார் சிலர் கொடுப்ப
ஆங்கு அவை தான் முன் வாங்கி அவர் வேண்டும் குறை அளித்தே
ஈங்கு இவற்றை இல்லத்துக்கு கொடுக்க என இயம்பினான் 5.4.16

1738 கணவன் தான் வர விடுத்த கனி இரண்டும் கைக் கொண்டு
மணம் மலியும் மலர்க் கூந்தல் மாதரார் வைத்து அதற்பின்
பண அரவம் புனைந்து அருளும் பரமனார் திருத் தொண்டர்
உணவின் மிகு வேட்கை யினால் ஒருவர் மனையுள் புகுந்தார் 5.4.17

1739 வேதங்கள் மொழிந்த பிரான் மெய்த் தொண்டர் நிலை கண்டு
நாதன் தன் அடியாரைப் பசி தீர்ப்பேன் என நண்ணிப்
பாதங்கள் விளக்க நீர் முன் அளித்துப் பரிகலம் வைத்து
ஏதம் தீர் நல் விருந்தாம் இன் அடிசில் ஊட்டுவார் 5.4.18

1740 கறி அமுதம் அங்கு உதவாதே திரு அமுது கை கூட
வெறி மலர் மேல் திரு அனையார் விடையவன் தன் அடியாரே 5.4.19

பெறல் அரிய விருந்தானால் பேறு இதன் மேல்
இல்லை எனும்
அறிவினராய் அவர் அமுது செய்வதனுக்கு
ஆதரிப்பார்

1741 இல்லாளன் வைக்க எனத்தம் பக்கல் முன் இருந்த
நல்ல நறு மாங்கனிகள் இரண்டினில் ஒன்றைக்
கொண்டு
வல் விரைந்து வந்து அணைந்து படைத்து மனம்
மகிழ்ச்சியினால்
அல்லல் தீர்ப்பவர் அடியார் தமை அமுது
செய்வித்தார் 5.4.20

1742 மூப்புறும் அத் தளர்வாலும் முதிர்ந்து முடுகிய
வேட்கைத்
தீப் பசியின் நிலையாலும் அயர்ந்து அணைந்த திருத்
தொண்டர்
வாய்ப்புறு மென் சுவை அடிசில் மாங்கனியோடு
இனிது அருந்திப்
பூப்பயில் மென் குழல் மடவார் செயல் உவந்து
போயினார் 5.4.21

1743 மற்றவர் தாம் போயின பின் மனைப் பதி ஆகிய
வணிகன்
உற்ற பெரும் பகலின் கண் ஓங்கிய பேர் இல் எய்திப்
பொற்புற முன் நீர் ஆடிப் புகுந்து அடிசில் புரிந்து
அயிலக்
கற்புடைய மடவாரும் கடப் பாட்டில் ஊட்டுவார் 5.4.22

1744 இன் அடிசில் கறிகள் உடன் எய்தும் முறை இட்டு
அதன்பின்
மன்னிய சீர்க் கணவன் தான் மனை இடை முன்
வைப்பித்த
நல் மதுர மாங்கனியில் இருந்த அதனை நறும்
கூந்தல்
அன்ன மனையார் தாமும் கொடு வந்து கலத்து
அளித்தார் 5.4.23

1745 மனைவியார் தாம் படைத்த மதுரம் மிக வாய்த்த கனி
தனை நுகர்ந்த இனிய சுவை ஆராமை தார் வணிகன்
இனையது ஒரு பழம் இன்னும் உளது அதனை இடுக
என
அனையது தாம் கொண்டு வர அணைவார் போல்
5.4.24

அங்கு அகன்றார்

1746 அம் மருங்கு நின்று அயர்வார் அரும் கனிக்கு அங்கு
என்செய்வார்
மெய்ம் மறந்து நினைந்து உற்ற இடத்து உதவும்
விடையவர் தான்
தம் மனம் கொண்டு உணர்தலுமே அவர் அருளால்
தாழ் குழலார்
கைம் மருங்கு வந்து இருந்தது அதிமதுரக் கனி ஒன்று 5.4.25

1747 மற்றதனைக் கொடு வந்து மகிழ்ந்து இடலும் அயின்று
அதனில்
உற்ற சுவை அமுதினும் மேல் பட உளதாயிட இது
தான்
முன் தரு மாங் கனி அன்று மூவுலகில் பெறர்க்கு
அரிதால்
பெற்றது வேறு எங்கு என்று பெய் வளையார் தமைக்
கேட்டான் 5.4.26

1748 அவ்வுரை கேட்டலும் மடவார் அருள் உடையார்
அளித்து அருளும்
செவ்விய பேர் அருள் விளம்பும் திறம் அன்று என்று
உரை செய்யார்
கை வரு கற்புடை நெறியால் கணவன் உரை
காவாமை
மெய் வழி அன்று என விளம்பல் விட மாட்டார்
விதிர்ப்பு உறுவார் 5.4.27

1749 செய்த படி சொல்லுவதே கடன் என்னும் சீலத்தார்
மை தழையும் கண்டர் சேவடிகள் மனத்து உற
வணங்கி
எய்தவரும் கனி அளித்தார் யார் என்னும்
கணவனுக்கு
மொய் தரு பூங்குழல் மடவார் புகுந்தபடி தனை
மொழிந்தார் 5.4.28

1750 ஈசன் அருள் எனக் கேட்ட இல் இறைவன் அது
தெளியான்
வாச மலர்த் திரு அனையார் தமை நோக்கி மற்று இது
தான்
தேசுடைய சடைப் பெருமான் திருவருளேல்
இன்னமும் ஓர்
ஆசில் கனி அவன் அருளால் அழைத்து அளிப்பாய்
5.4.29

என மொழிந்தான்

1751 பாங்கு அன்று மனைவியார் பணி அணிவார் தமைப் பரவி
ஈங்கு இது அளித்து அருளீரேல் என் உரை பொய்யாம் என்ன
மாங்கனி ஒன்று அருளால் வந்து எய்துதலும் மற்று அதனை
ஆங்கு அவன் கைக் கொடுதலுமே அதிசயித்து வாங்கினான் 5.4.30

1752 வணிகனும் தன் கைப் புக்க மாங்கனி பின்னைக் காணான்
தணிவரும் பயம் மேற்கொள்ள உள்ளமும் தடுமாறு எய்தி
அணி சூழல் அவரை வேறு ஓர் அணங்கு எனக் கருதி நீங்கும்
துணிவு கொண்டு எவர்க்கும் சொல்லான்
தொடர்வின்றி ஒழுகு நாளில் 5.4.31

1753 விடுவதே எண்ணம் ஆக மேவிய முயற்சி செய்வான்
படுதிரைப் பரவை மீது படர் கலம் கொண்டு போகி
நெடு நிதி கொண்மவேன் என்ன நிரந்தபல் கிளைஞர் ஆகும்
வடுவில் சீர் வணிக மாக்கள் மரக்கலம் சமைப்பித்தார்கள் 5.4.32

1754 கலஞ் சமைத்து அதற்கு வேண்டும் கம்மியர் உடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப ஏற்றி
சலம் தரு கடவுள் போற்றித் தலைமையாம் நாய்கன் தானும்
நலம் தரு நாளில் ஏறி நளிர் திரைக் கடல் மேல் போனான் 5.4.33

1755 கடல் மிசை வங்கம் ஓட்டிக் கருதிய தேயம் தன்னில்
அடை உறச் சென்று சேர்ந்து அங்கு அளவில் பல் வளங்கள் முற்றி
இடை சில நாட்கள் நீங்க மீண்டும் அக் கலத்தில் ஏறிப்
படர் புனல் கன்னி நாட்டோ ர் பட்டினம் மருங்கு சேர்ந்தான் 5.4.34

1756 அப் பதி தன்னில் ஏறி அலகில் பல் பொருள்கள்
ஆக்கும்
ஒப்பில் மா நிதியம் எல்லாம் ஒருவழிப் பெருக
உய்த்து
மெய்ப் புகழ் விளங்கும் அவ்வூர் விரும்பவோர்
வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை
செய்தான் 5.4.35

1757 பெறல் அரும் திருவினாளைப் பெரு மணம் புணர்ந்து
முன்னை
அறல் இயல் நறும் மென் கூந்தல் அணங்கனார்
திறத்தில் அற்றம்
புறம் ஒரு வெளி உறாமல் பொதிந்த சிந்தனையின்
ஓடு
முறைமையின் வழாமை வைகி முகம் மலர்ந்து
ஒழுகும் நாளில் 5.4.36

1758 முருகலர் சோலை மூதூர் அதன் முதல்
வணிகரோடும்
இரு நிதிக் கிழவன் எய்திய திருவின் மிக்குப்
பொரு கடல் கலங்கள் போக்கும் புகழினான் மனைவி
தன்பால்
பெருகொளி விளக்குப் போல் ஓர் பெண்கொடி அரிதில்
பெற்றான் 5.4.37

1759 மட மகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்
முன்பு
உடன் உறைவு அஞ்சி நீத்த ஒரு பெரு மனைவி
யாரைத்
தொடர் அற நினைந்து தெய்வத் தொழு குலம் என்றே
கொண்டு
கடன் அமைத்தவர் தம் நாமம் காதல் செய் மகவை
இட்டான் 5.4.38

1760 இந்நிலை இவன் இங்கு எய்தி இருந்தனன் இப்பால்
நீடும்
கன்னி மா மதில் சூழ் மாடக் காரைக்கால் வணிகன்
ஆன
தன் நிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமும்
மன்னிய கற்பினோடு மனை அறம் புரிந்து வைக 5.4.39

1761 விளை வளம் பெருக்க வங்கம் மீது போம் பரம தத்தன்
வளர் புகழ்ப் பாண்டி நாட்டு ஓர் மா நகர் தன்னில்
மன்னி
அளவில் மா நிதியம் ஆக்கி அமர்ந்து இனிது
இருந்தான் என்று
கிளர் ஒளி மணிக் கொம்பு அன்னார் கிளைஞர் தாம்
கேட்டார் அன்றே 5.4.40

1762 அம் மொழி கேட்ட போதே அணங்கனார் சுற்றத்தாரும்
தம் உறு கிளைஞர்ப் போக்கி அவன் நிலை தாமும்
கேட்டு
மம்மர் கொள் மனத்தர் ஆகி மற்றவன் இருந்த பாங்கர்
கொம்மை வெம் முலையின் ஆளை கொண்டு போய்
விடுவது என்றார் 5.4.41

1763 மா மணிச் சிவிகை தன்னில் மட நடை மயில்
அன்னாரைத்
தாமரைத் தவிசில் வைகும் தனித் திரு என்ன ஏற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல் செய் சுற்றத்தாரும்
தே மொழியவரும் சூழச் சேண் இடைக் கழிந்து
சென்றார் 5.4.42

1764 சில பகல் கடந்து சென்று செம் தமிழ்த் திருநாடு எய்தி
மலர் புகழ்ப் பரம தத்தன் மா நகர் மருங்கு வந்து
குல முதல் மனைவியாரைக் கொண்டு வந்து
அணைந்த தன்மை
தொலைவில் சீர்க் கணவனார்க்குச் சொல்லி முன்
செல்ல விட்டார் 5.4.43

1765 வந்தவர் அணைந்த மாற்றம் கேட்டலும் வணிகன்
தானும்
சிந்தையில் அச்சம் எய்திச் செழு மணம் பின்பு செய்த
பைந் தொடி தனையும் கொண்டு பயந்த பெண்
மகவின் ஒடு
முந்துறச் செல்வேன் என்று மொய் குழல் அவர் பால்
வந்தான் 5.4.44

1766 தானும் அம் மனைவி யோடும் தளிர் நடை மகவி
னோடும்
மான் இனம் பிணை போல் நின்ற மனைவியார்
அடியில் தாழ்ந்தே
யான் உமது அருளால் வாழ்வேன் இவ் இளம் குழவி
தானும்
5.4.45

பான்மையால் உமது நாமம் என்று முன் பணிந்து
வீழ்ந்தான்

1767 கணவன் தான் வணங்கக் கண்ட காமர்
பூங்கொடியனாரும்
அணைவுறும் சுற்றத்தார் பால் அச்ச மோடு ஒதுங்கி
நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி உன் திரு மனைவி
தன்னை
மணம் மலி தாரினாய் நீ வணங்குவது என் கொல்
என்றார் 5.4.46

1768 மற்றவர் தம்மை நோக்கி மானுடம் இவர் தாம்
அல்லர்
நற் பெரும் தெய்வம் ஆதல் நான் அறிந்து அகன்ற
பின்பு
பெற்ற இம் மகவு தன்னைப் பேர் இட்டேன் ஆதலாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்
என்றான் 5.4.47

1769 என்றலும் சுற்றத்தாரும் இது என் கொல் என்று
நின்றார்
மன்றலங் குழலினாரும் வணிகன் வாய் மாற்றம்
கேளாக்
கொன்றை வார் சடையினார் தம் குரை கழல்
போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வு கொண்டு உரை
செய்கின்றார் 5.4.48

1770 ஈங்கு இவன் குறித்த கொள்கை இது இனி இவனுக்கு
ஆகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதி கழித்து இங்கு
உன் பால்
ஆங்கு நின் தாள்கள் போற்றும் பேய் வடிவு
அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று பரமர் தாள் பரவி நின்றார் 5.4.49

1771 ஆன அப்பொழுது மன்றுள் ஆடுவார் அருளினாலே
மேனெறி உணர்வு கூர வேண்டிற்றே பெறுவார்
மெய்யில்
ஊன் அடை வனப்பை எல்லாம் உதறி எற்பு உடம்பே
ஆக
வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய்
5.4.50

வடிவம் ஆனார்

1772 மலர் மழை பொழிந்தது எங்கும் வான துந்துபியின்
நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர்
தாமும்
குலவினர் கணங்கள் எல்லாம் குணலை இட்டன முன்
நின்ற
தொலைவில் பல் சுற்றத்தாரும் தொழுது அஞ்சி
அகன்று போனார் 5.4.51

1773 உற் பவித்து எழுந்த ஞானத்து ஒருமையின் உமை
கோன் தன்னை
அற் புதத் திரு அந்தாதி அப்பொழுது அருளிச் செய்வார்
பொற்புடைச் செய்ய பாத புண்ட ரீகங்கள் போற்றும்
நற் கணத்தினில் ஒன்று ஆனேன் நான் என்று நயந்து
பாடி 5.4.52

1774 ஆய்ந்த சீர் இரட்டை மாலை அந்தாதி எடுத்துப் பாடி
ஏய்ந்த பேர் உணர்வு பொங்க எயில் ஒரு மூன்றும்
முன்னாள்
காய்ந்தவர் இருந்த வெள்ளிக் கைலை மால் வரையை
நண்ண
வாய்ந்த பேர் அருள் முன் கூற வழி படும் வழியால்
வந்தார் 5.4.53

1775 கண்டவர் வியப்புற்று அஞ்சிக் கை அகன்று
ஓடுவார்கள்
கொண்டது ஓர் வேடத் தன்மை உள்ளவாறு கூறக்
கேட்டே
அண்ட நாயகனாரென்னை அறிவரேல் அறியா
வாய்மை
எண் திசை மக்களுக்கு யான் எவ்வுருவாய் என்
என்பார் 5.4.54

1776 வட திசை தேசம் எல்லாம் மனத்தினும் கடிது சென்று
தொடை அவிழ் இதழி மாலைச் சூல பாணியனார்
மேவும்
படர் ஒளிக் கைலை வெற்பின் பாங்கு அணைந்து
ஆங்குக் காலின்
நடையினைத் தவிர்த்து பார் மேல் தலையினால்
நடந்து சென்றார் 5.4.55

1777 தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்த
வெள்ளி
மலையின் மேல் ஏறும் போது மகிழ்ச்சியால் அன்பு
பொங்கக்
கலை இளம் திங்கள் கண்ணிக் கண் நுதல் ஒரு
பாகத்துச்
சிலை நுதல் இமய வல்லி திருக் கண் நோக்குற்றது
அன்றே 5.4.56

1778 அம்பிகையின் திருவுள்ளத்தின் அதிசயித்து அருளித்
தாழ்ந்து
தம் பெருமானை நோக்கித் தலையினால் நடந்து
இங்கு ஏறும்
எம் பெருமான் ஓர் எற்பின் யாக்கை அன்பு என்னே
என்ன
நம் பெரு மாட்டிக்கு அங்கு நாயகன் அருளிச்
செய்வான் 5.4.57

1779 வரும் இவன் நம்மைப் பேணும் அம்மை காண்
உமையே மற்று இப்
பெருமை சேர் வடிவம் வேண்டிப் பெற்றனள் என்று
பின்றை
பெருகு வந்து அணைய நோக்கி அம்மையே என்னும்
செம்மை
ஒரு மொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச்
செய்தார் 5.4.58

1780 அங்கணன் அம்மையே என்று அருள் செய அப்பா
என்று
பங்கயச் செம் பொன் பாதம் பணிந்து வீழ்ந்து எழுந்தார்
தம்மைச்
சங்க வெண் குழையினாரும் தாம் எதிர் நோக்கி
நம்பால்
இங்கு வேண்டுவது என் என்ன இறைஞ்சி நின்று
இயம்பு கின்றார் 5.4.59

1781 இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டு
கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க 5.4.60

என்றார்

1782 கூடு மாறு அருள் கொடுத்துக் குலவு தென் திசையில்
என்றும்
நீடு வாழ் பழன மூதூர் நிலவிய ஆலம் காட்டில்
ஆடும் மா நடமும் நீ கண்டு ஆனந்தம் சேர்ந்து
எப்போதும்
பாடுவாய் நம்மை பரவுவார் பற்றாய் நின்றான் 5.4.61

1783 அப் பரிசு அருளப் பெற்ற அம்மையும் செம்மை வேத
மெய்ப் பொருள் ஆனார் தம்மை விடை கொண்டு
வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை அன்பால் திகழ் திரு ஆலம்
காடாம்
நற் பதி தலையினாலே நடந்து புக்கு அடைந்தார்
அன்றே 5.4.62

1784 ஆலங்காடு அதனில் அண்டமுற நிமிர்ந்து ஆடுகின்ற
கோலம் காண் பொழுது கொங்கை திரங்கி என்று
எடுத்து அங்கு
மூலம் காண்பரியார் தம்மை மூத்த நல் பதிகம் பாடி
ஞாலம் காதலித்துப் போற்றும் நடம் போற்றி
நண்ணும் நாளில் 5.4.63

1785 மட்டவிழ் கொன்றையினார் தம் திருக்கூத்து முன்
வணங்கும்
இட்ட மிகு பெருங் காதல் எழுந்து ஓங்க வியப்பு எய்தி
எட்டி இலவம் மீகை என எடுத்துத் திருப் பதிகம்
கொட்ட முழவம் குழகன் ஆடும் எனப் பாடினார் 5.4.64

1786 மடுத்த புனல் வேணியினார் அம்மை என மதுர மொழி
கொடுத்து அருளப் பெற்றாரைக் குலவிய
தாண்டவத்தில் அவர்
எடுத்து அருளும் சேவடிக் கீழ் என்றும்
இருக்கின்றாரை
அடுத்த பெரும் சீர் பரவல் ஆர் அளவாயினது அம்மா 5.4.65

1787 ஆதியோடு அந்தம் இல்லான் அருள் நடம் ஆடும்
போது
கீதம் முன் பாடும் அம்மை கிளர் ஒளி மலர்த்தாள்
போற்றிச்
சீத நீர் வயல் சூழ் திங்களூரில் அப்பூதியாராம்
போத மா முனிவர் செய்த திருத் தொண்டு புகலல்
உற்றேன் 5.4.66

திருச்சிற்றம்பலம்

5.5 அப்பூதி அடிகள் நாயனார் புராணம் (1788 - 1832)

திருச்சிற்றம்பலம்

1788 தாண்டவம் புரிய வல்ல தம்பிரானாருக்கு அன்பர்
ஈண்டிய புகழின் பாலார் எல்லையில் தவத்தின் மிக்கார்
ஆண்ட சீர் அரசின் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
காண் தகு காதல் கூரக் கலந்த அன்பினராய் உள்ளார் 5.5.1

1789 களவு பொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளம் மிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப் பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆ வொடு மேதி மற்றும்
உள எலாம் அரசின் நாமம் சாற்றும் அவ்வொழுகல் ஆற்றார் 5.5.2

1790 வடிவு தாம் காணார் ஆயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பிரானார் அருளும் கேட்டவர் நாமத்தால்
படி நிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவு இலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில் 5.5.3

1791 பொருப்பரையன் மடப் பிடியின் உடன் புணரும் சிவக்களிற்றின்
திருப் பழனம் பணிந்து பணி செய் திருநாவுக்கு அரசர்
ஒருப் படு காதலில் பிறவும் உடையவர் தம்பதி வணங்கும்
விருப்பினொடும் திங்களூர் மருங்கு வழி மேவுவார் 5.5.4

1792 அளவில் சனம் செலவு ஒழியா வழிக்கரையில் அருள் உடையார்
உளம் அனைய தண் அளித்தாய் உறுவேனில் பரிவு அகற்றிக்
5.5.5

குளம் நிறைந்த நீர்த் தடம் போல் குளிர் தூங்கும்
பரப்பினதாய்
வளம் மருவும் நிழல் தரு தண்ணீர்ப் பந்தர் வந்து
அணைந்தார்

1793 வந்து அனைந்த வாகீசர் மந்த மாருத சீதப்
பந்தர் உடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்து அருளிச்
சிந்தை வியப்புற வருவார் திருநாவுக்கரசெனும் பேர்
சந்தம் உற வரைந்து அதனை எம் மருங்கும் தாம்
கண்டார் 5.5.6

1794 இப் பந்தர் இப் பெயர் இட்டு இங்கு அமைத்தார் யார்
என்றார்க்கு
அப் பந்தர் அறிந்தார்கள் ஆண்ட அரசு எனும் பெயரால்
செப்பருஞ் சீர் அப்பூதி அடிகளார் செய்து அமைத்தார்
தப்பு இன்றி எங்கும் உள சாலை குளம் கா என்றார் 5.5.7

1795 என்று உரைக்க அரசு கேட்டு இதற்கு என்னோ கருத்து
என்று
நின்ற வரை நோக்கி அவர் எவ்விடத்தார் என வினவத்
துன்றிய நூல் மார்பரும் இத் தொல் பதியார்
மனையின் கண்
சென்றனர் இப்பொழுது அதுவும் சேய்த்து அன்று
நணித்து என்றார் 5.5.8

1796 அங்கு அகன்று முனிவரும் போய் அப்பூதி அடிகளார்
தங்கும் மனைக் கடைத் தலை முன் சார்வாக உள்
இருந்த
திங்களூர் மறைத் தலைவர் செழும் கடையில் வந்து
அடைந்தார்
நங்கள் பிரான் தமர் ஒருவர் எனக் கேட்டு நண்ணினார் 5.5.9

1797 கடிது அணைந்து வாகீசர் கழல் பணிய மற்று அவர்
தம்
அடி பணியா முன் பணியும் அரசின் எதிர் அந்தணனார்
முடிவில் தவம் செய்தேன் கொல் முன்பு ஒழியும்
கருணை புரி
வடிவுடையீர் என் மனையில் வந்து அருளிற்று என்
என்றார் 5.5.10

1798 ஒரு குன்ற வில்லாரைத் திருப் பழனத்துள் இறைஞ்சி
வருகின்றோம் வழிக் கரையில் நீர் வைத்த வாய்ந்த
வளம்
தருகின்ற நிழல் தண்ணீர்ப் பந்தரும் கண்ட அத்
5.5.11

தகைமை
புரிகின்ற அறம் பிறவும் கேட்டு அணைந்தோம் எனப்
புகல்வார்

1799 ஆறணியும் சடை முடியார் அடியார்க்கு நீர் வைத்த
ஈறில் தண்ணீர்ப் பந்தரில் நும் பேர் எழுதாதே
வேறு ஒரு பேர் முன் எழுத வேண்டிய காரணம் என்
கொல்
கூறும் என எதிர் மொழிந்தார் கோதில் மொழிக்
கொற்றவனார் 5.5.12

1800 நின்ற மறையோர் கேளா நிலை அழிந்த சிந்தையராய்
நன்று அருளிச் செய்து இலீர் நாணில் அமண் பதகர்
உடன்
ஒன்றிய மன்னவன் சூட்சி திருத் தொண்டின் உறைப்
பாலே
வென்றவர் தம் திருப்பேரோ வேறு ஒரு பேர் என
வெகுள்வார் 5.5.13

1801 நம்மை உடையவர் கழல் கீழ் நயந்த திருத்
தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பது என என் போல் வாரும்
தெளியச்
செம்மை புரி திருநாவுக்கரசர் திருப் பெயர் எழுத
வெம்மை மொழி யான் கேட்க விளம்பினீர் என
விளம்பி 5.5.14

1802 பொங்கு கடல் கல் மிதப்பில் போந்து ஏறும் அவர்
பெருமை
அங்கணர் தம் புவனத்தில் அறியாதார் யார் உளரே
மங்கலம் ஆம் திரு வேடத்துடன் இன்று இவ்வகை
மொழிந்தீர்
எங்கு உறைவீர் நீர் தாம் யார் இயம்பும் என
இயம்பினார் 5.5.15

1803 திரு மறையோர் அது மொழியத் திரு நாவுக்கரசர்
அவர்
பெருமை அறிந்து உரை செய்வார் பிற துறையின்
நின்றேற
அருளும் பெரும் சூலையினால் ஆட் கொள்ள
அடைந்து உய்ந்த
தெருளும் உணர்வு இல்லாத சிறுமை யேன் யான்
என்றார் 5.5.16

1804 அரசு அறிய உரை செய்ய அப்பூதி அடிகள் தாம்
கர கமலம் மிசை குவியக் கண் அருவி பொழிந்து
இழிய
உரை குழறி உடம்பு எல்லாம் உரோம புளகம்
பொலியத்
தரையின் மிசை வீழ்ந்தவர் தம் சரண கமலம்
பூண்டார் 5.5.17

1805 மற்றவரை எதிர் வணங்கி வாகீசர் எடுத்து அருள
அற்றவர்கள் அரு நிதியம் பெற்றார் போல் அரு
மறையோர்
முற்றவும் களி கூற முன் நின்று கூத்தாடி
உற்ற விருப்பு உடன் சூழ ஓடினார் பாடினார் 5.5.18

1806 மூண்ட பெரு மகிழ்ச்சியினால் முன் செய்வது
அறியாதே
ஈண்ட மனை அகத்து எய்தி இல்லவர்க்கும்
மக்களுக்கும்
ஆண்ட அரசு எழுந்து அருளும் ஓகை உரைத்து
ஆர்வம் உறப்
பூண்ட பெரும் சுற்றம் எலாம் கொடு மீளப் புறப்பட்டார் 5.5.19

1807 மனைவியார் உடன் மக்கள் மற்றும் உள்ள
சுற்றத்தோர்
அனைவரையும் கொண்டு இறைஞ்சி ஆராத காதல்
உடன்
முனைவரை உள் எழுந்து அருளுவித்து அவர் தாள்
முன் விளக்கும்
புனை மலர் நீர் தங்கள் மேல் தெளித்து உள்ளும்
பூரித்தார் 5.5.20

1808 ஆசனத்தில் பூசனைகள் அமர் வித்து விருப்பின் உடன்
வாசம் நிறை திரு நீற்றுக் காப்பு ஏந்தி மனம் தழைப்பத்
தேசம் உய்ய வந்த வரைத் திரு அமுது செய்விக்கும்
நேசம் உற விண்ணப்பம் செய அவரும் அது நேர்ந்தார் 5.5.21

1809 செய்தவர் இசைந்த போது திரு மனையாரை நோக்கி
எய்திய பேறு நம்பால் இருந்தவாறு என்னே என்று
மை திகழ் மிடற்றினான் தன் அருளினால் வந்தது
என்றே
உய்தும் என்று உவந்து கொண்டு திரு அமுது ஆக்கல்
உற்றார் 5.5.22

1810 தூய நல் கறிகள் ஆன அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆய இன் அமுதும் ஆக்கி அமுது செய்து அருளத்
தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக்கு அரசை வாழை
மேய பொன் குருத்துக் கொண்டுவா என விரைந்து
விட்டார் 5.5.23

1811 நல்ல தாய் தந்தை ஏவ நான் இது செயப் பெற்றேன்
என்று
ஒல்லையில் விரைந்து தோட்டத்துள் புக்குப் பெரிய
வாழை
மல்லல் அம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள் அரா
ஒன்று
அல்லல் உற்று அழுங்கிச் சோர அங்கையில்
தீண்டிற்று அன்றே 5.5.24

1812 கையினில் கவர்ந்து சுற்றிக் கண் எரி காந்துகின்ற
பை அரா உதறி வீழ்த்துப் பதைப்பு உடன் பாந்தாள்
பற்றும்
வெய்ய வேகத்தால் வீழா முன்னம் வேகத்தால்
எய்திக்
கொய்த இக் குருத்தைச் சென்று கொடுப்பன் என்று
ஓடி வந்தான் 5.5.25

1813 பொருந்திய விட வேகத்தில் போதுவான் வேகம் உந்த
வருந்தியே அணையும் போழ்து மாசுணம் கவர்ந்தது
யார்க்கும்
அரும் தவர் அமுது செய்யத் தாழ்க்க யான்
அறையேன் என்று
திருந்திய கருத்தினோடும் செழுமனை சென்று
புக்கான் 5.5.26

1814 எரிவிடம் முறையே ஏறித் தலைக் கொண்ட ஏழாம்
வேகம்
தெரிவுற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து
விரியுரை குழறி ஆவி விடக் கொண்டு மயங்கி
வீழ்வான்
பரி கலக் குருத்தைத் தாயார் பால் வைத்துப் படி மேல்
வீழ்ந்தான் 5.5.27

1815 தளர்ந்து வீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும்
உளம் பதைத்து உற்று நோக்கி உதிரம் சோர் வடிவும்
மேனி

5.5.28

விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீழ்ந்தான்
என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுது செய்வதற்குச்
சூழ்வார்

1816 பெறல் அரும் புதல்வன் தன்னைப் பாயினுள் பெய்து
மூடிப்
புற மனை முன்றில் பாங்கு ஓர் புடையினில் மறைத்து
வைத்தே
அற இது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம்
என்று
விறல் உடைத் தொண்டனார் பால் விருப்பொடு
விரைந்து வந்தார் 5.5.29

1817 கடிது வந்து அமுது செய்யக் காலம் தாழ்கின்றது
என்றே
அடிசிலும் கறியும் எல்லாம் அழகு உற அணைய
வைத்துப்
படியில் சீர்த் தொண்டனார் முன் பணிந்து எழுந்து
அமுது செய்து எம்
குடி முழுதும் உய்யக் கொள்வீர் என்று அவர் கூறக்
கேட்டு 5.5.30

1818 அரும் தவர் எழுந்து செய்ய அடி இணை விளக்கி
வேறு ஓர்
திருந்தும் ஆசனத்தில் ஏறிப் பரிகலம் திருத்தும்
முன்னர்
இருந்து வெண் நீறு சாத்தி இயல்புடை இருவருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும்
போழ்தில் 5.5.31

1819 ஆதி நான்மறை நூல் வாய்மை அப்பூதியாரை
நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதும் ஒன்று உரையார் இப்போது இங்கு அவன்
உதவான் என்றார் 5.5.32

1820 அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திரு உள்ளத்து ஓர் தடு மாற்றம் சேர
நோக்கி
இவ் உரை பொறாது என் உள்ளம் என்று என்
செய்தான் இதற்கு ஒன்று உண்டால்
5.5.33

மெய் விரித்து உரையும் என்ன விளம்புவார் விதிர்ப்பு
உற்று அஞ்சி

1821 பெரியவர் அமுது செய்யும் பேறு இது பிழைக்க
என்னோ
வருவது என்று உரையார் ஏனும் மாதவர் வினவ
வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டும் சீலத்தால் சிந்தை
நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க்கு உற்றது பகர்ந்தார்
அன்றே 5.5.34

1822 நாவினுக்கு அரசர் கேளா நன்று நீர் புரிந்த வண்ணம்
யாவர் இத் தன்மை செய்தார் என்று முன் எழுந்து
சென்றே
ஆவி தீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும்
வண்ணம்
பா இசைப் பதிகம் பாடிப் பணி விடம் பாற்று வித்தார் 5.5.35

1823 தீ விடம் நீங்க உய்ந்த திரு மறையவர் தம் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி விரைந்து எழுவானைப்
போன்று
சேவுகைத்தவர் ஆட் கொண்ட திருநாவுக்கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனித நீறு அளித்தார் அன்றே 5.5.36

1824 பிரிவுறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார்
தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்ற அப் பயந்தார்
தாங்கள்
அறிவரும் பெருமை அன்பர் அமுது செய்து
அருளுதற்குச்
சிறிது இடையூறு செய்தான் இவன் என்று சிந்தை
நொந்தார் 5.5.37

1825 ஆங்கவர் வாட்டம் தன்னை அறிந்து சொல் அரசர் கூட
ஓங்கிய மனையில் எய்தி அமுது செய்து அருள உற்ற
பாங்கினில் இருப்ப முந்நூல் பயில் மணி மார்பர்
தாமும்
தாங்கிய மகிழ்ச்சி யோடும் தகுவன சமைத்துச்
சார்வார் 5.5.38

1826 புகழ்ந்த கோமயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்த வான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம்
ஏற்றி
5.5.39

நிகழ்ந்த அக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம் பெற மரபின்
வைத்தார்

1827 திருந்திய வாச நல் நீர் அளித்திட திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைகள் உடனே
நோக்கி
அரும் புதல்வர்களும் நீரும் அமுது செய்வீர் இங்கு
என்ன
விரும்பிய உள்ளத்தோடு மேலவர் ஏவல் செய்வார் 5.5.40

1828 மைந்தரும் மறையோர் தாமும் மருங்கு இருந்து
அமுது செய்யச்
சிந்தை மிக்கு இல்ல மாதர் திரு அமுது எடுத்து நல்கக்
கொந்து அவிழ் கொன்றை வேணிக் கூத்தனார்
அடியாரோடும்
அம் தமிழ் ஆளியார் அங்கு அமுது செய்து
அருளினாரே 5.5.41

1829 மா தவ மறையோர் செல்வ மனை இடை அமுது
செய்து
காதல் நண்பு அளித்துப் பல் நாள் கலந்து உடன்
இருந்த பின்றை
மே தகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர் தம் பாதம் சேர்ந்து நல் தமிழ்ப் பதிகம் செய்வார் 5.5.42

1830 அப்பூதி அடிகளார் தம் அடிமையைச் சிறப்பித்து
ஆன்ற
மெய்ப் பூதி அணிந்தார் தம்மை விரும்பு சொல்
மாலை வேய்ந்த
இப் பூதி பெற்ற நல்லோர் எல்லை இல் அன்பால்
என்றும்
செப்பு ஊதியம் கைக் கொண்டார் திருநாவுக்கரசர்
பாதம் 5.5.43

1831 இவ் வகை அரசின் நாமம் ஏத்தி எப் பொருளும் நாளும்
அவ்வரும் தவர் பொன் தாளை என உணர்ந்து
அடைவார் செல்லும்
செவ்விய நெறியது ஆகத் திருத் தில்லை மன்றுள்
ஆடும்
நவ்வியம் கண்ணாள் பங்கர் நல் கழல் நண்ணினாரே 5.5.44

1832 மான் மறிக் கையர் பொன் தாள் வாகீசர் அடைவால்
பெற்ற

5.5.45

மேன்மை அப்பூதியாராம் வேதியர் பாதம் போற்றிப்
கான் மலர்க் கமல வாவிக் கழனி சூழ் சாத்த மங்கை
நான் மறை நீல நக்கர் திருத் தொழில் நவிலல்
உற்றேன்

திருச்சிற்றம்பலம்

5.6 திரு நீல நக்க நாயனார் புராணம் (1833 -1870)

திருச்சிற்றம்பலம்

1833 பூத்த பங்கயப் பொகுட்டின் மேல் பொருகயல் உகளும்
காய்த்த செந் நெலின் காடு சூழ் காவிரி நாட்டுச்
சாத்த மங்கை என்று உலகு எலாம் புகழ் உறும்
தகைத்தால்
வாய்த்த மங்கல மறையவர் முதற்பதி வனப்பு 5.6.1

1834 நன்மை சாலும் அப்பதி இடை நறு நுதல் மடவார்
மென் மலர்த் தடம் படிய மற்றவருடன் விரவி
அன்னம் முன் துறை ஆடுவ பாடுவ சாமம்
பன் மறைக் கிடையுடன் பயிற்றுவ பல பூவை 5.6.2

1835 ஆய்ந்த மெய்ப் பொருள் நீறு என வளர்க்கும் அக்
காப்பில்
ஏய்ந்த மூன்று தீ வளர்த்துளார் இரு பிறப்பாளர்
நீந்து நல் அறம் நீர்மையின் வளர்க்கும் அத்தீயை
வாய்ந்த கற்புடன் நான்கு என வளர்ப்பர் கண் மடவார் 5.6.3

1836 சீலம் உய்த்த அத் திருமறையோர் செழு மூதூர்
ஞாலம் மிக்க நான் மறைப் பொருள் விளக்கிய
நலத்தார்
ஆலம் வைத்த கண்டத்தவர் தொண்டராம் அன்பர்
நீல நக்கனார் என்பவர் நிகழ்ந்துளார் ஆனார் 5.6.4

1837 வேத உள்ளுறை ஆவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவர் அடியாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காதலால் அவை இரண்டுமே செய் கருத்து உடையார் 5.6.5

1838 மெய்த்த ஆகம விதி வழி வேத காரணரை
நித்தல் பூசனை புரிந்து எழு நியமும் செய்தே
அத்தர் அன்பருக்கு அமுது செய்விப்பது முதலா
எத் திறத்தன பணிகளும் ஏற்று எதிர் செய்வார் 5.6.6

1839 ஆய செய் கையில் அமரும் நாள் ஆதிரை நாளில்
மேய பூசனை நியதியை விதியினால் முடித்துத்
தூய தொண்டனார் தொல்லை நீடு அயவந்தி அமர்ந்த
நாயனாரையும் அருச்சனை புரிந்திட நயந்தார் 5.6.7

1840 உறையுள் ஆகிய மனை நின்றும் ஒருமை அன்புற்ற
முறைமையால் வரு பூசைக்கும் முற்ற வேண்டுவன
குறைவறக் கொண்டு மனைவியார் தம்மொடும் கூட
இறைவர் கோயில் வந்து எய்தினர் எல்லையில்
தவத்தோர் 5.6.8

1841 அணைய வந்து புக்கு அயவந்தி மேவிய அமுதின்
துணை மலர்க் கழல் தொழுது பூசனை செயத்
தொடங்கி
இணைய நின்று அங்கு வேண்டு மனைவியார் ஏந்த
உணர்வின் மிக்கவர் உயர்ந்த அர்ச்சனை முறை
உய்த்தார் 5.6.9

1842 நீடு பூசனை நிரம்பியும் அன்பினால் நிரம்பார்
மாடு சூழ் புடை வலம் கொண்டு வணங்கி முன்
வழுத்தித்
தேடு மா மறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி
நாடும் அஞ்செழுத்து உணர்வுற இருந்து முன்
நவின்றார் 5.6.10

1843 தொலைவில் செய் தவத் தொண்டனார் சுருதியே
முதலாம்
கலையின் உண்மையாம் எழுத்து அஞ்சும்
கணிக்கின்ற காலை
நிலையின் நின்று முன் வழுவிட நீண்ட பொன் மேருச்
சிலையினார் திருமேனி மேல் விழுந்தது ஓர் சிலம்பி 5.6.11

1844 விழுந்த போதில் அங்கு அயல் நின்ற மனைவியார்
விரைவுற்று
எழுந்த அச்சமோடு இளம் குழவியில் விழும் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதி முன் துமிப்பவர் போலப்
பொழிந்த அன்பினால் ஊதி மேல் துமிந்தனர் போக 5.6.12

1845 பதைத்த செய்கையால் மனைவியார் முன் செயப்
பந்தம்
சிதைக்கு மா தவத் திரு மறையவர் கண்டு தம் கண்
புதைத்து மற்றிது செய்தது என் பொறி இலாய் என்னச்
சுதைச் சிலம்பி மேல் விழ ஊதித் துமிந்தனன் என்றார் 5.6.13

1846 மனைவியார் செய்த அன்பினை மனத்தினில்
கொள்ளார்
புனையும் நூல் மணி மார்பர் தம் பூசனைத் திறத்தில்
இனைய செய்கை இங்கு அநுசிதமாம் என எண்ணும்
நினைவினால் அவர் தம்மை விட்டு அகன்றிட நீப்பார் 5.6.14

1847 மின் நெடுஞ்சடை விமலர் மேல் விழுந்த நூல்
சிலம்பி
தன்னை வேறு ஒரு பரிசினால் தவிர்ப்பது தவிர
முன் அனைந்து வந்து ஊதி வாய் நீர்ப் பட முயன்றாய்
உன்னை யான் இனித் துறந்தனன் ஈங்கு என
உரைத்தார் 5.6.15

1848 மற்ற வேலையில் கதிரவன் மலைமிசை மறைந்தான்
உற்ற ஏவலின் மனைவியார் ஒருவழி நீங்க
முற்ற வேண்டுவ பழுது தீர் பூசனை முடித்துக்
கற்றை வேணியார் தொண்டரும் கடிமனை புகுந்தார் 5.6.16

1849 அஞ்சும் உள்ளமோடு அவர் மருங்கு அணைவுற
மாட்டார்
நஞ்சம் உண்டவர் கோயிலில் நங்கையார் இருந்தார்
செஞ்சொல் நான் மறைத் திரு நீல நக்கர்தாம் இரவு
பஞ்சின் மெல் அணைப் பள்ளியில் பள்ளி
கொள்கின்றார் 5.6.17

1850 பள்ளி கொள் பொழுது தயவந்திப் பரமர் தாம் கனவில்
வெள்ள நீர்ச் சடையொடு நின்று மேனியைக் காட்டி
உள்ளம் வைத்து எமை ஊதி முன் துமிந்த பால்
ஒழியக்
கொள்ளும் இப் புறம் சிலம்பியின் கொப்புள் என்று
அருள 5.6.18

1851 கண்ட அப்பெரும் கனவினை நனவு எனக் கருதிக்
கொண்ட அச்சமோடு அஞ்சலி குவித்து உடன்
விழித்துத்
தொண்டனார் தொழுது ஆடினார் பாடினார் துதித்தார்
அண்டர் நாயகர் கருணையைப் போற்றி நின்று
அழுதார் 5.6.19

1852 போது போய் இருள் புலர்ந்திடக் கோயில் உள் புகுந்தே
ஆதி நாயகர் அயவந்தி அமர்ந்த அங்கணர்தம்
பாத மூலங்கள் பணிந்து வீழ்ந்து எழுந்து முன் பரவி
மாதராரையும் கொண்டு தம் மனையில் மீண்டு
அணைந்தார் 5.6.20

1853 பின்பு முன்னையில் பெருகிய மகிழ்ச்சி வந்துஎய்த
இன்புறும் திறத்து எல்லையில் பூசனை இயற்றி
அன்பு மேம் படும் அடியவர் மிக அணை வார்க்கு
முன்பு போல் அவர் வேண்டுவ விருப்ப முடன்
முடிப்பார் 5.6.21

1854 அன்ன தன்மையில் அமர்ந்து இனிது ஒழுகும்
அந்நாள்ல்
மன்னு பூம் தராய் வரு மறைப் பிள்ளையார் பெருமை
பன்னி வையகம் போற்றிட மற்று அவர் பாதம்
சென்னி வைத்து உடன் சேர்வுறும் விருப்பினால்
சிறந்தார் 5.6.22

1855 பண்பு மேம்படு நிலைமையார் பயிலும் அப்பருவ
மண் பெரும் தவப் பயன் பெற மருவு நல் பதிகள்
விண் பிறங்கு நீர் வேணியார் தமைத் தொழ
அணைவார்
சண்பை மன்னரும் சாத்த மங்கையில் வந்து சார்ந்தார் 5.6.23

1856 நீடு சீர்த் திரு நீலகண்டப் பெரும் பாணர்
தோடுலாங் குழல் விறலியார் உடன் வரத் தொண்டர்
கூடும் அப் பெரும் குழாத்தோடும் புகலியர் பெருமான்
மாடு வந்தமை கேட்டு உளம் மகிழ் நீல நக்கர் 5.6.24

1857 கேட்ட அப் பொழுதே பெரு மகிழ்ச்சியில் கிளர்ந்து
தோட்டலங்கலும் கொடிகளும் புனைந்து
தோரணங்கள்
நாட்டி நீள் நடைக் காவணம் இட்டு நல் சுற்றத்து
ஈடமும் கொடு தாமும் முன் எதிர் கொள எழுந்தார் 5.6.25

1858 சென்று பிள்ளையார் எழுந்து அருளும் திருக் கூட்டம்
ஒன்றி அங்கு எதிர் கொண்டு தம் களிப்பினால்
ஒருவாறு
அன்றி ஆடியும் பாடியும் தொழுது எழுந்து அணைவார்
பொன் தயங்கு நீள் மனை இடை உடன் கொண்டு
புகுந்தார் 5.6.26

1859 பிள்ளையார் எழுந்து அருளிய பெருமைக்குத் தக்க
வெள்ளம் ஆகிய அடியவர் கூட்டமும் விரும்ப
உள்ளம் ஆதரவு ஓங்கிட ஓங்கு சீகாழி
வள்ளலாரைத் தம் மனை இடை அமுது செய்வித்தார் 5.6.27

1860 அமுது செய்த பின் பகலவன் மேல் கடல் அணையக்
குமுத வாவியில் குளிர் மதிக் கதிர் அணை போதில்
இமய மங்கை தன் திருமுலை அமுது உண்டார்
5.6.28

இரவும்
தமது சீர் மனைத் தங்கிட வேண்டுவ சமைத்தார்

1861 சீல மெய்த் திருத் தொண்டரோடு அமுது செய்து அருளி
ஞாலம் மிக்கிட நாயகி உடன் நம்பர் நண்ணும்
காலம் முற்பெற அழுதவர் அழைத்திடக் கடிது
நீல நக்கனார் வந்து அடி பணிந்து முன் நின்றார் 5.6.29

1862 நின்ற அன்பரை நீல கண்டப் பெரும் பாணர்க்கு
இன்று தங்க ஓர் இடம் கொடுத்து அருளுவீர் என்ன
நன்றும் இன்புற்று நடு மனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்று அவர்க்கு இடம் கொடுத்தனர்
திருமறையோர் 5.6.30

1863 ஆங்கு வேதியில் அறாத செம் தீ வலம் சுழிவுற்று
ஓங்கி முன்னையில் ஒரு படித்து அன்றியே ஒளிர
தாங்கு நூலவர் மகிழ் உறச் சகோட யாழ்த் தலைவர்
பாங்கு பாணியார் உடன் அருளால் பள்ளி கொண்டார் 5.6.31

1864 கங்குலில் பள்ளி கொண்ட பின் கவுணியர்க்கு இறைவர்
அங்கு நின்று எழுந்து அருளுவார் அயவந்தி அமர்ந்த
திங்கள் சூடியை நீல நக்கரைச் சிறப்பித்தே
பொங்கு செந்தமிழ் திருப்பதிகத் தொடை புனைந்தார் 5.6.32

1865 பதிக நான் மலர் கொண்டு தம்பிரான் கழல் பரவி
அதிக நண்பினை நீல நக்கருக்கு அளித்து அருளி
எதிர் கொளும் பதிகளில் எழுந்து அருளினார் என்றும்
புதிய செந்தமிழ்ப் பழ மறை மொழிந்த பூசுரனார் 5.6.33

1866 பிள்ளையார் எழுந்து அருள அத்தொண்டர் தாம் பின்பு
தள்ளும் அன்புடன் கேண்மையும் தவிர்ப்பில எனினும்
வள்ளலார் திரு அருளினை வலிய மாட்டாமை
உள்ளம் அங்கு உடன் போக்கி மீண்டு ஒரு வகை
இருந்தார் 5.6.34

1867 மேவு நாளில் அவ் வேதியர் முன்பு போல் விரும்பும்
தாவில் பூசனை முதல் செய்கை தலைத்தலை சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராம் திரு மறைச் சிறுவர்
பூவடித் தலம் பொருந்திய உணர்வொடும் பயின்றார் 5.6.35

1868 சண்பை ஆளியார் தாம் எழுந்து அருளும் எப் பதியும்
நண்பு மேம்பட நாள் இடைச் செலவிட்டு நண்ணி
வண் பெரும் புகழவர் உடன் பயின்று வந்து 5.6.36

உறைந்தார்
திண் பெரும் தொண்டர் ஆகிய திரு நீலக்கர்
1869 பெருகு காதலில் பின் நெடு நாள் முறை பிறங்க
வருபெரும் தவ மறையவர் வாழி சீகாழி
ஒருவர் தம் திருக் கல்லியாணத்தினில் உடனே
திருமணத் திறம் சேவித்து நம்பர் தாள் சேர்ந்தார் 5.6.37
1870 தரு தொழில் திரு மறையவர் சாத்த மங்கையினில்
வருமுதல் பெரும் திருநீல நக்கர் தாள் வணங்கி
இரு பிறப்புடை அந்தணர் ஏறுயர்த்தவர் பால் 1865-3
ஒருமை உய்த்துணர் நமி நந்தியார் தொழில்
உரைப்பாம் 5.6.38

திருச்சிற்றம்பலம்

5.7 நமிநந்தி அடிகள் நாயனார் புராணம் (1871 -1903)

திருச்சிற்றம்பலம்

1871 வையம் புரக்கும் தனிச் செங்கோல் வளவர்
பொன்னித் திருநாட்டுச்
செய்ய கமலத் தடம் பணையும் செழும் நீர்த் தடமும்
புடை உடைத்தாய்
பொய்தீர் வாய்மை அருமறை நூல் புரிந்த சீலப் புகழ்
அதனால்
எய்தும் பெருமை எண் திசையும் ஏறூர் ஏமப் பேர்
ஊரால் 5.7.1
1872 மாலை பயிலும் தோரணங்கள் மருங்கு பயிலும் மணி
மறுகு
வேலை பயிலும் புனல் பருகு மேகம் பயிலும்
மாடங்கள்
சோலை பயிலும் குளிர்ந்த இருள் சுரும்பு பயிலும்
அரும்பூகம்
காலை பயிலும் வேத ஒலி கழுநீர் பயிலும் செழுநீர்ச்
செய் 5.7.2
1873 பணையில் விளைந்த வெண் நெல்லின் பரப்பின் மீது
படச் செய்ய
துணர் மென் கமலம் இடை இடையே சுடர் விட்டு
எழுந்து தோன்றுவன
புணர் வெண் புரி நூலவர் வேள்விக் களத்தில் 5.7.3

புனைந்த வேதிகை மேல்
மணல் வெண் பரப்பின் இடை இடையே வளர்த்த
செந்தீமானுமால்

1874 பெருமை விளங்கும் அப்பதியில் பேணும் நீற்றுச்
சைவ நெறி
ஒருமை நெறி வாழ் அந்தணர் தம் ஓங்கு குலத்தினுள்
வந்தார்
இருமை உலகும் ஈசர் கழல் இறைஞ்சி ஏத்தப் பெற்ற
தவத்து
அருமை புரிவார் நமி நந்தி அடிகள் என்பார் ஆயினார் 5.7.4

1875 வாய்மை மறை நூல் சீலத்தால் வளர்க்கும் செந்தீ
எனத் தகுவார்
தூய்மைத் திரு நீற்று அடைவே மெய்ப் பொருள்
என்று அறியும் துணிவினார்
சாம கண்டர் செய்ய கழல் வழிபட்டு ஒழுகும்
தலைமை நிலை
யாம இரவும் பகலும் உணர் ஒழியா இன்பம் எய்தினார் 5.7.5

1876 அவ்வூர் நின்றும் திருவாரூர் அதனை அடைவார்
அடியார்மேல்
வெவ்வூறு அகற்றும் பெருமான் தன் விரை சூழ்
மலர்த்தாள் பணி உறுதல்
எவ்வூதியமும் எனக் கொள்ளும் எண்ணம் உடையார்
பல நாளும்
தெவ்வூர் எரித்த வரைச்சிலையார் திருப் பாதங்கள்
வணங்கினார் 5.7.6

1877 செம் பொன் புற்றின் மாணிக்கச் செழும் சோதியை
நேர் தொழுஞ் சீலம்
தம் பற்றாக நினைந்து அணைந்து தாழ்ந்து பணிந்து
வாழ்ந்து போந்து
அம் பொன் புரிசைத் திருமுன்றில் அணைவார்
பாங்கோர் அரன் நெறியின்
நம்பர்க்கு இடமாம் கோயிலின் உட்புக்கு வணங்க
நண்ணினார் 5.7.7

1878 நண்ணி இறைஞ்சி அன்பினால் நயப்பு உற்று எழுந்த
காதல் உடன்
அண்ணலாரைப் பணிந்து எழுவார் அடுத்த
நிலைமைக் குறிப்பினால்
பண்ணுந் தொண்டின் பாங்கு பல பயின்று பரவி
5.7.8

விரவுவார்
எண்ணில் தீபம் ஏற்றுவதற்கு எடுத்த கருத்தின்
இசைந்து எழுவார்

1879 எழுந்த பொழுது பகல் பொழுதின் அங்கு இறங்கு
மாலை எய்துதலும்
செழுந்தண் பதியின் இடை அப்பால் செல்லில்
செல்லும் பொழுது என்ன
ஒழிந்து அங்கு அணைந்தோர் மனையில் விளக்குறு
நெய் வேண்டி உள் புகலும்
அழிந்த நிலைமை அமணர் மனை ஆயிற்று அங்கண்
அவர் உரைப்பார் 5.7.9

1880 கையில் விளங்கும் கனல் உடையார் தமக்கு விளக்கு
மிகை காணும்
நெய் இங்கு இல்லை விளக்கு எரிப்பீர் ஆகில் நீரை
முகந்து எரித்தல்
செய்யும் என்று திருத் தொண்டர்க்கு உரைத்தார்
தெளியாது ஒரு பொருளே
பொய்யும் மெய்யும் ஆம் என்னும் பொருள்மேற்
கொள்ளும் புரை நெறியார் 5.7.10

1881 அருகர் மதியாது உரைத்த உரை ஆற்றார் ஆகி
அப்பொழுதே
பெருக மனத்தில் வருத்தமுடன் பெயர்ந்து போந்து
பிறை அணிந்த
முருகு விரியும் மலர்க் கொன்றை முடியார் கோயில்
முன் எய்தி
உருகும் அன்பர் பணிந்து விழ ஒருவாக்கு எழுந்தது
உயர் விசும்பில் 5.7.11

1882 வந்த கவலை மாற்றும் இனி மாறா விளக்குப் பணி
மாற
இந்த மருங்கில் குளத்து நீர் முகந்து கொடு வந்து
ஏற்றும் என
அந்தி மதியம் அணிந்த பிரான் அருளால் எழுந்த
மொழி கேளாச்
சிந்தை மகிழ்ந்து நமிநந்தி அடிகள் செய்வது
அறிந்திலரால் 5.7.12

1883 சென்னி மிசை நீர் தரித்த பிரான் அருளே சிந்தை
செய்து எழுவார்
நன்னீர் பொய்கை நடுப்புக்கு நாதர் நாமம் நவின்று
5.7.13

ஏத்தி
அந்நீர் முகந்து கொண்டு ஏறி அப்பர் கோயில்
அடைந்து அகலுள்
முந்நீர் உலகம் அதிசயிப்ப முறுக்கும் திரி மேல் நீர்
வார்த்தார்

1884 சோதி விளக்கு ஒன்று ஏற்றுதலும் சுடர் விட்டு
எழுந்தது அது நோக்கி
ஆதி முதல்வர் அரன் நெறியார் கோயில் அடைய
விளக்கு ஏற்றி
ஏதம் நினைந்த அருகந்தர் எதிரே முதிரும்
களிப்பினுடன்
நாதர் அருளால் திரு விளக்கு நீரால் எரித்தார் நாடு
அறிய 5.7.14

1885 நிறையும் பரிசு திருவிளக்கு விடியும் அளவும் நின்று
எரியக்
குறையும் தகளிகலுக்கு எல்லாம் கொள்ள வேண்டும்
நீர் வார்த்து
மறையின் பொருளை அருச்சிக்கும் மனையின் நியதி
வழுவாமல்
உறையும் பதியின் அவ்விரவே அணைவார் பணி
உற்று ஒருப்பட்டார் 5.7.15

1886 இரவு சென்று தம் பதியில் எய்தி மனைப்புக்கு என்றும்
போல்
விரவி நியமத் தொழில் முறையே விமலர் தம்மை
அருச்சித்துப்
பரவி அமுது செய்து அருளிப் பள்ளி கொண்டு புலர்
காலை
அரவம் அணிவார் பூசை அமைத்து ஆரூர் நகரின்
மீண்டு அணைந்தார் 5.7.16

1887 வந்து வணங்கி அரன் நெறியார் மகிழும் கோயில்
வலம் கொண்டு
சிந்தை மகிழப் பணிந்து எழுந்து புறம்பும் உள்ளும்
திருப்பணிகள்
முந்த முயன்று பகல் எல்லாம் முறையே செய்து
மறையவனார்
அந்தி அமையத்து அரிய விளக்கு எங்கும் ஏற்றி அடி
பணிவார் 5.7.17

1888 பண்டு போலப் பல நாளும் பயிலும் பணி செய்து
அவர் ஒழுகத்
தண்டி அடிகளால் அமணர் கலக்கம் விளைந்து
சார்வில் அமண்
குண்டர் அழிய ஏழ் உலகும் குலவும் பெருமை
நிலவியதால்
அண்டர் பெருமான் தொண்டர் கழல் அமரர் பணியும்
மணி ஆரூர் 5.7.18

1889 நாத மறை தேர் நமிநந்தி அடிகளார் நல் தொண்டு
ஆகப்
பூத நாதர் புற்றிடங் கொள் புனிதர்க்கு அமுதுபடி
முதலாம்
நீதி வளவன் தான் வேண்டும் நிபந்தம் பலவும் அரி
அணையின்
மீது திகழ இருந்து அமைத்தான் வேத ஆகம விதி
விளங்க 5.7.19

1890 வென்றி விடையார் மதிச் சடையார் வீதி விடங்கப்
பெருமாள் தாம்
என்றும் திருவாரூர் ஆளும் இயல்பின் முறைமை
திருவிளையாட்டு
ஒன்றும் செயலும் பங்குனி உத்திரமாம் திருநாள்
உயர் சிறப்பும்
நின்று விண்ணப்பம் செய்தபடி செய்து அருளும்
நிலைபெற்றார் 5.7.20

1891 இன்ன பரிசு திருப் பணிகள் பலவும் செய்தே ஏழ்
உலகும்
மன்னும் பெருமைத் திருவாரூர் மன்னர் அடியார் வழி
நிற்பார்
அன்ன வண்ணம் திருவிளையாட்டு ஆடி அருள
எந்நாளும்
நன்மை பெருக நமி நந்தி அடிகள் தொழுதார் நாம்
உய்ய 5.7.21

1892 தேவர் பெருமான் எழுச்சி திரு மணலிக்கு ஒரு நாள்
எழுந்து அருள
யாவர் என்னாது உடன் சேவித்து எல்லாக் குலத்தில்
உள்ளோரும்
மேவ அன்பர் தாமும் உடன் சேவித்து அணைந்து
விண்ணவர்தம்
காவலாளர் ஓலக்கம் அங்கே கண்டு களிப்புற்றார் 5.7.22

1893 பொழுது வைகச் சேவித்துப் புனிதர் மீண்டும் கோயில் புகத்
தொழுது தம் ஊர் மருங்கு அணைந்து தூய மனை உள் புகுதாதே
இழுதும் இருள் சேர் இரவு புறம் கடையில் துயில இல்லத்து
முழுதும் தருமம் புரி மனையார் வந்து உள் புகுத மொழ்கின்றார் 5.7.23

1894 திங்கள் முடியார் பூசனைகள் முடித்துச் செய்யும் கடன் முறையால்
அங்கி தனை வேட்டு அமுது செய்து பள்ளி கொள்வீர் என அவர்க்குத்
தங்கள் பெருமான் திருமணலிக்கு எழுச்சி சேவித்து உடன் நண்ண
எங்கும் எல்லாரும் போத இழிவு தொடக்கிற்று எனை என்று 5.7.24

1895 ஆதலாலே குளித்து அடுத்த தூய்மை செய்தே அகம்புகுந்து
வேத நாதர் பூசனையைத் தொடங்க வேண்டும் அதற்கு நீ
சீத நன்னீர் முதலான கொண்டு இங்கு அணைவாய் எனச் செப்பக்
காதலால் மனையார் தாமும் அவை கொணரும் அதற்கு கடிது அணைந்தார் 5.7.25

1896 ஆய பொழுது தம் பெருமான் அருளாலேயோ? மேனியினில்
ஏயும் அசைவின் அயர்வாலோ? அறியோம் இறையும் தாழாதே
மேய உறக்கம் வந்து அணைய விண்ணோர் பெருமான் கழல் நினைந்து
தூய அன்பர் துயில் கொண்டார் துயிலும் பொழுது கனவின் கண் 5.7.26

1897 மேன்மை விளங்கும் திருவாரூர் வீதி விடங்கப் பெருமாள் தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார் போல வந்து அருளி
ஞான மறையோய் ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம் கணங்கள்
ஆன பரிசு காண்பாய் என்று அருளிச் செய்து அங்கு 5.7.27

எதிர் அகன்றார்

1898 ஆதி தேவர் எழுந்து அருள உணர்ந்தார் இரவு
அர்ச்சனை செய்யாது
ஏதம் நினைந்தேன் என அஞ்சி எழுந்த படியே
வழிபட்டு
மாதரார்க்கும் புகுந்தபடி மொழிந்து விடியல்
விரைவோடு
நாதனார் தம் திருவாரூர் புகுத எதிர் அந் நகர் காண்பார் 5.7.28

1899 தெய்வப் பெருமாள் திருவாரூர்ப் பிறந்து வாழ்வார்
எல்லாரும்
மை வைத்த அனைய மணிகண்டர் வடிவே ஆகிப்
பெருகு ஒளியால்
மொய் வைத்து அமர்ந்த மேனியராம் பரிசு கண்டு
முடிகுவித்த
கைவைத்து அஞ்சி அவனிமிசை விழுந்து பணிந்து
கள்சிறந்தார் 5.7.29

1900 படிவம் மாற்றிப் பழம் படியே நிகழ்வும் கண்டு பரமர்
பால்
அடியேன் பிழையைப் பொறுத்து அருள வேண்டும்
என்று பணிந்த அருளால்
குடியும் திருவாரூர் அகத்துப் புகுந்து வாழ்வார்
குவலயத்து
நெடிது பெருகும் திருத்தொண்டு நிகழச் செய்து
நிலவுவார் 5.7.30

1901 நீறு புனைவார் அடியார்க்கு நெடுநாள் நியதி ஆகவே
வேறு வேறு வேண்டுவன எல்லாம் செய்து
மேவுதலால்
ஏறு சிறப்பின் மணிப் புற்றில் இருந்தார் தொண்டர்க்கு
ஆணி எனும்
பேறு திருநாவுக்கரசர் விளம்பப் பெற்ற
பெருமையினார் 5.7.31

1902 இன்ன வகையால் திருப்பணிகள் எல்லா உலகும்
தொழச் செய்து
நன்மை பெருகும் நமிநந்தி அடிகள் நயமார் திருவீதிச்
சென்னி மதியும் திருநதியும் அலைய வருவார்
திருவாரூர்
மன்னர் பாத நீழல் மிகும் வளர் பொன் சோதி
மன்னினார் 5.7.32

1903 **சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி**

நாட்டார் அறிய முன்னாளில் நன்னாள் உலந்த ஐம்
படையின்
பூட்டார் மார்பில் சிறிய மறைப் புதல்வன் தன்னைப்
புக்கு ஒளியூர்த்
தட்டா மரையின் மடுவின் கண் தனி மா முதலை
வாய் நின்றும்
மீட்டார் கழல்கள் நினைவாரை மீளா வழியின்
மீட்பனவே

திருச்சிற்றம்பலம்

திருநின்ற சருக்கம் முற்றிற்று.

சருக்கம் 5-க்குத் திருவிருத்தம் - 1903

This webpage was last updated on 29 November 2004

சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்
இரண்டாம் காண்டம் - சருக்கம் 6
(வம்பறா வரிவண்டுச் சருக்கம்)
6.1 திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம் -முதல் பகுதி (1899- 2598)

periya purANam of cEkkizAr
Canto 2, Carukkam -6 part 1
(vampaRA varivaNTuc carukkam)
In tamil script, unicode/UTF-8 format

Acknowledgements:

Our Sincere thanks go to Dr. Thomas Malten and Colleagues of the Univ. of Koeln, Germany for providing us with the transliterated/romanized version of the etext and giving us permission to release the TSCII version as part of Project Madurai etext collections.
TSCII proof reading by **tiruciRRampalam aRakaTTaLai, Kovilpatti, Tamilnadu.**
Preparation of HTML and PDF versions: **Dr. K. Kalyanasundaram** Lausanne, Switzerland.
This webpage presents the Etext in Tamil script but in Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:
i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages (Netscape 6, Internet Explorer 5, FireFox Mozilla,..) with the Unicode Tamil font chosen as the default font for the UTF-8 char-set/encoding view.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil

literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website

http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம் -முதற் காண்டம்
6. வம்பறா வரிவண்டுச் சருக்கம் - முதல் பகுதி

6.1 திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம் /முதல் பகுதி (1899 - 2598)

திருச்சிற்றம்பலம்

1899 வேத நெறி தழைத்து ஓங்க மிகு சைவத் துறை விளங்கப்
பூத பரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந்து அழுத
சீத வள வயல் புகலித் திருஞான சம்பந்தர்
பாத மலர் தலைக் கொண்டு திருத் தொண்டு பரவுவாம் 6.1.1

1900 சென்னி வளர் மதி அணிந்த சிலம்பு அணி சேவடியார் தம்
மன்னிய சைவத் துறையின் வழி வந்த குடி வளவர்
பொன்னி வளம் தரு நாடு பொலிவு எய்த நிலவியதால்
கன்னி மதில் மருங்கு முகில் நெருங்கும் கழுமல மூதூர் 6.1.2

1901 அப் பதி தான் அந்தணர் தம் கிடைகள் அரு மறை முறையே
செப்பும் ஒலி வளர் பூகச் செழும் சோலை புறம் சூழ
ஒப்பில் நகர் ஓங்குதலால் உகக் கடை நாள் அன்றியே
எப்பொழுதும் கடல் மேலே மிதப்பது என இசைந்து உளதால் 6.1.3

1902 அரி அயனே முதல் அமரர் அடங்க எழும் வெள்ளங்கள்
விரி சுடர் மா மணிப் பதணம் மீது எறிந்த திரை வரைகள்
புரிசை முதல் புறம் சூழ்வ பொங்கு ஓதம் கடை நாளில்
வரி அரவி மந்தரம் சூழ் வடம் போல வயங்குமால் 6.1.4

1903 வளம் பயிலும் புறம் பணைப் பால் வாசப் பாசடை மிடைந்த
தளம் பொலியும் புனல் செந்தாமரைச் செவ்வித தட மலரால்
களம் பயில் நீர்க் கடல் மலர்வது ஒரு பரிதி எனக் கருதி
இளம் பரிதி பல மலர்ந்தாற் போல்ப உள இலஞ்சி பல 6.1.5

1904 உளம் கொள் மறை வேதியர் தம் ஓமத் தூமத்து இரவும்
கிளர்ந்த திரு நீற்று ஒளியில் கெழுமிய நண் பகலும் அலர்ந்து
அளந்து அறியாப் பலூழி ஆற்றுதலால் அகல் இடத்து 6.1.6

விளங்கிய அம்மூதூர்க்கு வேறு இரவும் பகலும் மிகை

1905 பரந்த விளைவயல் செய்ய பங்கயமாம் பொங்கு எரியில்
வரம்பில் வளர் தேமாவின் கனி கிழிந்த மது நறு நெய்
நிரந்தரம் நீள் இலைக் கடையால் ஒழுகுதலால் நெடிது அவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும் தகைய என மணந்து உளதால் 6.1.7

1906 வேலை அழல் கதிர் படிந்த வியன் கங்குல் வெண்மதியம்
சோலை தொறும் நுழைந்து புறப்படும் பொழுது துதைந்த மலர்ப்
பால் அணைந்து மதுத் தோய்ந்து தாது அளைந்து பயின்று அந்தி
மாலை எழும் செவ்வொளிய மதியம் போல் வதியுமால் 6.1.8

1907 காமர் திருப்பதி அதன் கண் வேதியர் போல் கடி கமழும்
தாமரையும் புல்லிதமும் தயங்கிய நூலும் தாங்கித்
தூமரு நுண் துகள் அணிந்து துளி வருகண்ணீர் ததும்பித்
தேமரு மென் சுரும்பு இசையால் செழும் சாமம் பாடுமால் 6.1.9

1908 புனைவார் பொன் குழை அசையப் பூந்தானை பின் போக்கி
வினை வாய்ந்த தழல் வேதி மெழுக்குற வெண் சுதை ஒழுக்கும்
கனை வானமுகில் கூந்தல் கதிர் செய் வடமீன் கற்பின்
மனை வாழ்க்கைக் குலமகளிர் வளம் பொலிவ மாடங்கள் 6.1.10

1909 வேள்வி புரி சடங்கு அதனை விளையாட்டுப் பண்ணை தொறும்
பூழியுற வகுத்து அமைத்துப் பொன் புனை கிண்கிணி ஒலிப்ப
ஆழி மணிச் சிறு தேர் ஊர்ந்த அவ்விரதப் பொடியாடும்
வாழி வளர் மறைச் சிறார் நெருங்கியுள மணி மறுகு 6.1.11

1910 விடு சுடர் நீள் மணி மறுகின் வெண் சுதை மாளிகை மேகம்
தொடு குடுமி நாசி தொறும் தொடுத்த கொடி சூழ் கங்குல்
உடுஎனு நாள் மலர் அலர உறு பகலில் பல நிறத்தால்
நெடு விசும்பு தளிப்பது என நெருங்கியுள மருங்கு எல்லாம் 6.1.12

1911 மடை எங்கும் மணிக்குப்பை வயல் எங்கும் கயல் வெள்ளம்
புடை எங்கும் மலர்ப் பிறங்கல் புறம் எங்கும் மகப் பொலிவு
கிடை எங்கும் கலைச் சூழல் கிளர் எங்கும் முரல் அளிகள்
இடை எங்கும் முனிவர் குழாம் எயில் எங்கும் பயில் எழிலி 6.1.13

1912 பிரமபுரம் வேணுபுரம் புகலி பெருவெம் குரு நீர்ப்
பொருவில் திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம் முன்
வருபுறவம் சண்பை நகர் வளர் காழி கொச்சை வயம்
பரவு திருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப் பெயர்த்தால் 6.1.14

1913 அப்பதியின் அந்தணர் தம் குடி முதல்வர் ஆசில் மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர் கோத்திரம் விளங்கச்
செப்பும் நெறி வழிவந்தார் சீவபாத இருதயர் என்று
இப் புவி வாழத் தவம் செய் இயல்பினார் உளர் ஆனார் 6.1.15

1914 மற்றவர் தம் திரு மனையார் வாய்ந்த மரபின் வரு
பெற்றியினார் எவ்வுலகும் பெறற்கு அரிய பெருமையினார்
பொற்புடைய பகவதியார் எனப் போற்றும் பெயர் உடையார்
கற்பு மேம்படு சிறப்பால் கணவனார் கருத்து அமைந்தார் 6.1.16

1915 மரபு இரண்டும் சைவ நெறி வழிவந்த கேண்மையினார்
அரவு அணிந்த சடை முடியார் அடியலால் அறியாது
பரவு திருநீற்று அன்பு பாலிக்கும் தன்மையராய்
விரவு மறை மனை வாழ்க்கை வியப்பு எய்த மேவு நாள் 6.1.17

1916 மேதினி மேல் சமண் கையர் சாக்கியர் தம் பொய்ம்மிகுந்த
ஆதி அருமறை வழக்கம் அருகி அரன் அடியார் பால்
பூதி சாதன விளக்கம் போற்றல் பெறாது ஒழியக் கண்டு
ஏதமில் சீர் சிவ பாத இருதயர் தாம் இடர் உழந்தார் 6.1.18

1917 . மனை அறத்தில் இன்பம் உறு மகப் பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலை நின்றே ஆய சேவடிக் கமலம்
நினைவுற முன் பர சமயம் நிராகரித்து நீர் ஆக்கும்
புனை மணிப்பூண் காதலனைப் பெறப் போற்றும் தவம் புரிந்தார் 6.1.19

1918 பெருத்து எழும் அன்பால் பெரிய நாச்சியார் உடன் புகலித்
திருத்தோணி வீற்று இருந்தார் சேவடிக் கீழ் வழிபட்டுக்
கருத்து முடிந்திடம் பரவும் காதலியார் மணி வயிற்றில்
உருத் தெரிய வரும் பெரும் பேறு உலகு உய்ய உளதாக 6.1.20

1919 ஆள் உடையாளுடன் தோணி அமர்ந்த பிரான் அருள் போற்றி
மூளும் மகிழ்ச்சியில் தங்கள் முதல் மறைநூல் முறைச் சடங்கு
நாள் உடைய ஈரைந்து திங்களினும் நலம் சிறப்பக்
கேளிர் உடன் செயல் புரிந்து பேர் இன்பம் கிளர்வுறுநாள் 6.1.21

1920 அருக்கன் முதல் கோன் அனைத்தும் அழகிய உச்சங்களிலே
பெருக்க வலியுடன் நிற்கப் பேணிய நல்லோரை எழத்
திருக்கிளரும் ஆதிரை நாள் திசை விளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவம் முதல் வைதிகமும் தழைத்து ஓங்க 6.1.22

1921 தொண்டர் மனம் களி சிறப்பத் தூய திருநீற்று நெறி
எண் திசையும் தனி நடப்ப ஏழ் உலகும் குளிர் தூங்க
அண்டர் குலம் அதிசயிப்ப அந்தணர் ஆகுதி பெருக
வண் தமிழ் செய்தவம் நிரம்ப மாதவத்தோர் செயல் வாய்ப்ப 6.1.23

1922 திசை அனைத்தின் பெருமை எலாம் தென் திசையே வென்று ஏற
மிசை உலகும் பிறவுலகும் மேதினியே தனி வெல்ல
அசைவில் செழும் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல
இசை முழுதும் மெய் அறிவும் இடம் கொள்ளும் நிலை பெருக 6.1.24

1923 தாளுடைய படைப்பு என்னும் தொழில் தன்மை தலைமை பெற
நாளுடைய நிகழ்காலம் எதிர்காலம் நவை நீங்க 6.1.25

வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ
ஆளுடைய திருத்தோணி அமர்ந்த பிரான் அருள் பெருக

1924 அவம் பெருக்கும் புல் அறிவின் அமண் முதலாம் பரசமயப்
பவம் பெருக்கும் புரை நெறிகள் பாழ்பட நல் ஊழி தொறும்
தவம் பெருக்கும் சண்பையிலே தாவில் சராசரங்கள் எலாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார் 6.1.26

1925 அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோர்
எப்பெயரினோரும் அயல் எய்தும் இடையின்றி
மெய்ப்படு மயிர்ப் புளகம் மேவி அறியாமே
ஓப்பில் களி கூர்வதோர் உவப்புற உரைப்பார் 6.1.27

1926 சிவன் அருள் எனப் பெருகும் சித்தம் மகிழ் தன்மை
இவண் இது நமக்கு வர எய்தியது என் என்பார்
கவுணியர் குலத்தில் ஒரு காதலன் உதித்தான்
அவன் வருநிமித்தம் இது என்று அதிசயித்தார் 6.1.28

1927 பூ முகை அவிழ்ந்து மணம் மேவும் பொழில் எங்கும்
தே மருவு தாதோடு துதைந்த திசை எல்லாம்
தூ மருவு சோதி விரியத் துகள் அடக்கி
மா மலய மாருதமும் வந்து அசையும் அன்றே 6.1.29

1928 மேலை இமையோர்களும் விருப்பொடு கரப்பில்
சோலை மலர் போல மலர் மா மழை சொரிந்தே
ஞாலம் மிசை வந்து வளர் காழி நகர் மேவும்
சீல மறையோர்கள் உடன் ஓம வினை செய்தார் 6.1.30

1929 பூத கண நாதர் புவி வாழ அருள் செய்த
நாதன் அருளின் பெருமை கண்டு நலம் உய்ப்பார்
ஓதும் மறையோர் பிறிது உரைத்திடினும் ஓவா
வேத மொழியால் ஒலி விளங்கி எழும் எங்கும் 6.1.31

1930 பயன் தருவ ப·றருவும் வல்லிகளும் மல்கித்
தயங்கு புனலும் தெளிவ தண்மையுடன் நண்ணும்
வயங்கு ஒளி விசும்பு மலினம் கழியும் மாறா
நயம் புரிவ புள் ஒலிகள் நல்ல திசை எல்லாம் 6.1.32

1931 அம்கண் விழவில் பெருகு சண்பை அகல் மூதூர்ச்
சங்கம் படகம் கருவி தாரை முதலான
எங்கணும் இயற்றுபவர் இன்றியும் இயம்பும்
மங்கல முழக்கு ஒலி மலிந்த மறுகு எல்லாம் 6.1.33

1932 இரும் புவனம் இத்தகைமை எய்த அவர் தம்மைத்
தரும் குல மறைத் தலைவர் தம் பவன முன்றில்
பெரும் களி வியப்பொடு பிரான் அருளினாலே
அரும் திரு மகப் பெற அணைந்த அணி செய்வார் 6.1.34

1933 காதல் புரி சிந்தை மகிழக் களி சிறப்பார்
மீது அணியும் நெய் அணி விழாவொடு திளைப்பார்
சூத நிகழ் மங்கல வினைத் துழனி பொங்கச்
சாதக முறைப் பல சடங்கு வினை செய்வார் 6.1.35

1934 மா மறை விழுக்குல மடந்தையர்கள் தமில்
தாம் உறு மகிழ்ச்சியோடு சாயல் மயில் என்னத்
தூ மணி விளக்கொடு சுடர்க் குழைகள் மின்னக்
காமர் திரு மாளிகை கவின் பொலிவு செய்வார் 6.1.36

1935 சுண்ணமொடு தண் மலர் துதைந்த துகள் வீசி
உண்ணிறைந்த விருப்பின் உடன் ஓகை உரை செய்வார்
வெண் முளைய பாலிகைகள் வேதி தொறும் வைப்பார்
புண்ணிய நறும் புனல் கொள் பொன் குடம் நிரைப்பார் 6.1.37

1936 செம் பொன் முதலான பல தான வினை செய்வார்
நம்பர் அடியார் அமுது செய்ய நலம் உய்ப்பார்
வம்பலர் நறும் தொடையல் வண்டொடு தொடுப்பர்
நிம்பம் முதலான கடி நீடு வினை செய்வார் 6.1.38

1937 ஐயவி உடன் பல அமைத்த புகையாலும்
நெய் அகில் நறுங்குறை நிறைத்த புகையாலும்
வெய்ய தழல் ஆகுதி விழுப் புகையினாலும்
தெய்வ மணம் நாறவரு செய் தொழில் விளைப்பார் 6.1.39

1938 ஆய பல செய் தொழில்கள் அன்று முதல் விண்ணோர்
நாயகன் அருள் பெருமை கூறும் நலம் எய்த
தூய திரு மா மறை தொடர்ந்த நடை நூலின்
மேய விதி ஐயிரு தினத்தினும் விளைத்தார் 6.1.40

1939 நாம கரணத்து அழகு நாள் பெற நிறுத்திச்
சேம உதயப் பரிதியில் திகழ் பிரானைத்
தாமரை மிசைத் தனி முதல் குழவி என்னத்
தூ மணி நிரைத்து அணி செய் தொட்டில் அமர்வித்தார் 6.1.41

1940 பெரு மலை பயந்த கொடி பேணும் முலையின் பால்
அரு மறை குழைத்த அமுது செய்து அருளுவாரைத்
தருமிறைவியார் பரமர் தாள் பரவும் அன்பே
திருமுலை சுரந்து அமுது செய்து அருளுவித்தார் 6.1.42

1941 ஆறுலவு செய்ய சடை ஐயர் அருளாலே
பேறு உலகினுக்கு என வரும் பெரியவர்க்கு
வேறு பல காப்பு மிகை என்று அவை விரும்பார்
நீறு திரு நெற்றியில் நிறுத்தி நிறைவித்தார் 6.1.43

1942 தாயர் திரு மடித்தலத்தும் தயங்கு மணித் தவிசினிலும்
தூய சுடர்த் தொட்டிலினும் தூங்கு மலர்ச் சயனத்தும் 6.1.44

சேய பொருள் திருமறையும் தீம் தமிழும் சிறக்க வரு
நாயகனைத் தாலாட்டும் நலம் பல பாராட்டினார்

1943 வரும் முறைமைப் பருவத்தில் வளர் புகலிப் பிள்ளையார்
அரு மறைகள் தலை எடுப்ப ஆண்ட திருமுடி எடுத்துப்
பெரு மழுவர் தொண்டு அல்லால் பிரிது இசையோம் என்பார் போல்
திருமுக மண்டலம் அசையச் செங்கீரை ஆடினார் 6.1.45

1944 நாம் அறியோம் பர சமயம் உலகிர் எதிர் நாடாது
போம் அகல என்று அங்கை தட்டுவதும் புனிதன் பால்
காமரு தாளம் பெறுதற்கு ஒத்துவதும் காட்டுவ போல்
தாமரைச் செங்கை களினால் சப்பாணி கொட்டினார் 6.1.46

1945 விதி தவறுபடும் வேற்றுச் சமயங்கள் இடை விழுந்து
கதி தவழ இரு விசும்பு நிறைந்த கடிவார் கங்கை
நதி தவழும் சடை முடியார் ஞானம் அளித்திட உரியார்
மதி தவழ் மாளிகை முன்றின் மருங்கு தவழ்ந்து அருளினார் 6.1.47

1946 சூழ வரும் பெருஞ்சுற்றத்துத் தோகையரும் தாதியரும்
காழியர் தம் சீர் ஆட்டே கவுணியர் கற்பகமே என்று
ஏழ் இசையும் எவ் உலகும் தனித் தனியே
வாழ வரும் அவர் தம்மை வருக வருக என அழைப்ப 6.1.48

1947 திரு நகையால் அழைத்து அவர் தம் செழு முகங்கள் மலர்வித்தும்
வருமகிழ்வு தலை சிறப்ப மற்றவர் மேல் செலவுகைத்தும்
உருகி மனம் கரைந்து அலைய உடன் அணைந்து தழுவியும் முன்
பெருகிய இன்புற அளித்தார் பெரும் புகலிப் பிள்ளையார் 6.1.49

1948 வளர் பருவ முறை ஆண்டு வருவதன் முன் மலர் வரிவண்டு
உளர் கரு மென் சுருள் குஞ்சியுடன் அலையச் செந்நின்று
கிளர் ஒலி கிண்கிணி எடுப்பக் கீழ்மை நெறிச் சமயங்கள்
தளர் நடை இட்டு அறத் தாமும் தளர் நடை இட்டு அருளினார் 6.1.50

1949 தாதியர் தங்கைப் பற்றித் தளர் நடையின் அசைவு ஒழிந்து
சோதி அணி மணிச் சதங்கை தொடுத்த வடம் புடை சூழ்ந்த
பாத மலர் நிலம் பொருந்தப் பருவ முறை ஆண்டு ஒன்றின்
மீது அணைய நடந்து அருளி விளையாடத் தொடங்கினார் 6.1.51

1950 சிறு மணித்தேர் தொடர்ந்து உருட்டிச் செழுமணல் சிற்றில்கள் இழை
நறு நுதல் பேதையார் மழுங்கு நடந்து ஓடி அடர்ந்து அழித்தும்
குறு வியர்ப்புத் துளி அரும்பக் கொழும்பொடி ஆடிய கோல
மறுகு இடைப் பேர் ஒளி பரப்ப வந்து வளர்ந்து அருளினார் 6.1.52

1951 மங்கையோடு உடன் ஆகி வளர் தோணி வீற்று இருந்த
திங்கள் சேர் சடையார் தம் திரு அருட்குச் செய் தவத்தின் 6.1.53

அங்குரம் போல் வளர்ந்து அருளி அரு மறையோடு உலகு உய்ய
எங்கள் பிரான் ஈர் ஆண்டின் மேல் ஓர் ஆண்டு எய்து தலும்

1952 நாவாண்ட பல கலையும் நா மகளும் நலம் சிறப்பப்
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவு எய்த
சேவாண்ட கொடியவர் தம் சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டில் உலகு உய்ய நிகழ்ந்தது அதனை மொழிகின்றேன் 6.1.54

1953 பண்டு திருவடி மறவாப் பான்மையோர் தமைப் பரமர்
மண்டு தவ மறைக் குலத்தோர் வழிபாட்டின் அளித்து அருளத்
தொண்டின் நிலை தர வருவார் தொடர்ந்த பிரிவு உணர்வு
ஒருகால்
கொண்டு எழலும் வெருக் கொண்டாற் போல் அழுவார் குறிப்பு
அயலாய் 6.1.55

1954 மேதகைய இந் நாளில் வேறு ஒரு நாள் வேத விதி
நீதி முறைச் சடங்கு நெறி முடிப்பதற்கு நீர் ஆடத்
தாதையார் போம் பொழுது தம் பெருமான் அருள் கூடச்
சோதி மணி மனை முன்றில் தொடர்ந்து அழுது பின் சென்றார் 6.1.56

1955 பின் சென்ற பிள்ளையார் தமை நோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனை ஒழிந்து முனிவார் போல் விலக்குதலும்
மின் செய் பொலங் கிண் கிணிக் கால் கொட்டி அவர் மீளாமை
உன் செய்கை இது ஆகில் போ என்று அங்கு உடன் சென்றார் 6.1.57

1956 கடை உகத்தில் தனி வெள்ளம் பல விரிக்கும் கருப்பம் போல்
இடை அறாப் பெரும் தீர்த்தம் எவற்றினுக்கும் பிறப்பு இடமாய்
விடை உயர்த்தார் திருத் தோணிப் பற்று விடா மேன்மை அதாம்
தடம் அதனில் துறை அணைந்தார் தருமத்தின் தலை நின்றார் 6.1.58

1957 பிள்ளையார்தமைக் கரையில் வைத்துத் தாம் பிரிவு அஞ்சித்
தெள்ளு நீர்ப் புக மாட்டார் தேவியொடும் திருத்தோணி
வள்ளலார் இருந்தாரை எதிர் வணங்கி மணி வாவி
உள்ளிழிந்து புனல் புக்கார் உலகு உய்ய மகப் பெற்றார் 6.1.59

1958 நீர் ஆடித் தருப் பிடித்து நியமங்கள் பல செய்வார்
நீர் ஆடும் திரு மகனார் காண்பதன் முன் செய்து அதன்பின்
ஆராத விருப்பினால் அகமர் உடம்படிய நீர்
பேராது மூழ்கினார் பெரும் காவல் பெற்றாராய் 6.1.60

1959 மறை முனிவர் மூழ்குதலும் மற்றவர் தம்மைக் காணாது
இறை தெரியார் எனும் நிலைமை தலைக்கு ஈடா ஈசர் கழல்
முறை புரிந்த முன் உணர்வு மூள அழத் தொடங்கினார்
நிறை புனல் வாவிக் கரையில் நின்று அருளும் பிள்ளையார் 6.1.61

1960 கண் மலர்கள் நீர் ததும்பக் கைம் மலர்களால் பிசைந்து
வண்ண மலர்ச் செங்கனிவாய் மணி அதரம் புடை துடிப்ப 6.1.62

எண்ணில் மறை ஒலி பெருக எவ் உயிரும் குதுகலிப்ப
புண்ணியக் கன்று அனையவர் தாம் பொருமி அழுது அருளினார்

1961 மெய்ம் மேல் கண் துளி பனிப்ப வேறு எங்கும் பார்த்து அழுவார்
தம் மேலைச் சார்பு உணர்ந்தோ சாரும் பிள்ளை மைதானோ
செம் மேனி வெண் நீற்றார் திருத் தோணி சிகரம் பார்த்து
அம்மே அப்பா என்று என்று அழைத்து அருளி அழுது அருள 6.1.63

1962 அந்நிலையில் திருத்தோணி வீற்று இருந்தார் அருள் நோக்கால்
முன் நிலைமைத் திருத் தொண்டு முன்னி அவர்க்கு அருள்
புரிவான்
பொன் மலை வல்லியும் தாமும் பொருவிடை மேல் எழுந்து
அருளிச்
சென்னி இளம் பிறை திகழச் செழும் பொய்கை மருங்கு
அணைந்தார் 6.1.64

1963 திரு மறைநூல் வேதியர்க்கும் தேவியர்க்கும் தாம் கொடுத்த
பெருகு வரம் நினைந்தோ தான் தம் பெருமை கழல் பேணும்
ஒரு நெறியில் வரு ஞானம் கொடுப்ப அதனுக்கு உடன் இருந்த
அரு மறையாள் உடையவளை அளித்து அருள அருள் செய்வார் 6.1.65

1964 அழுகின்ற பிள்ளையார் தமை நோக்கி அருள் கருணை
எழுகின்ற திரு உள்ளத்து இறையவர் தாம் எவ்வுலகும்
தொழுகின்ற மலைக் கொடியைப் பார்த்து அருளித் துணை
முலைகள்
பொழிகின்ற பால் அடிசில் பொன் வள்ளத்து ஊட்டு என்ன 6.1.66

1965 ஆரணமும் உலகு ஏழும் ஈன்று அருளி அனைத்தினுக்கும்
காரணமாய் வளம் பெருகு கருணை திருவடிவான
சீர் அணங்கு சிவபெருமான் அருளுதலும் சென்று அணைந்து
வார் இணங்கு திருமுலைப்பால் வள்ளத்துக் கறந்து அருளி 6.1.67

1966 எண்ணரிய சிவஞானத்தின் இன் அமுதம் குழைத்து அருளி
உண் அடிசில் என ஊட்ட உமை அம்மை எதிர் நோக்கும்
கண் மலர் நீர் துடைத்து அருளிக் கையில் பொன் கிண்ணம்
அளித்து
அண்ணலை அங்கு அழுகை தீர்த்த அங்கணனார் அருள் புரிந்தார் 6.1.68

1967 யாவர்க்கும் தந்தை தாய் எனும் இவர் இப்படி அளித்தார்
ஆவதனால் ஆளுடையப் பிள்ளையாராய் அகில
தேவருக்கும் முனிவர்க்கும் தெரிஅரிய பொருளாகும்
தாவில் தனிச் சிவ ஞான சம்பந்தர் ஆயினார் 6.1.69

1968 சிவன் அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவம் அதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமை இலாக் கலை ஞானம் உணர்வு அரிய மெய்ஞ் ஞானம்
6.1.70

தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்

1969 எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும்
அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள் எனும் அறிவும்
இப்படியால் இது அன்றித் தம் இசைவு கொண்டு இயலும்
துப்புரவில்லார் துணிவு துகளாகச் சூழ்ந்து எழுந்தார் 6.1.71

1970 சீர் மறையோர் சிவபாத இருதயரும் சிறு பொழுதில்
நீர் மருவித் தாம் செய்யும் நியமங்கள் முடித்து ஏறி
பேர் உணர்வில் பொலிகின்ற பிள்ளையார்தமை நோக்கி
யார் அளித்த பால் அடிசில் உண்டது நீ என வெகுளா 6.1.72

1971 எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டு என்று
கைச் சிறியது ஒருமாறு கொண்டோச்சக் கால் எடுத்தே
அச் சிறிய பெருந்தகையார் ஆனந்தக் கண் துளி பெய்து
உச்சியினில் எடுத்து அருளும் ஒரு திருக்கை விரல் சுட்டி 6.1.73

1972 விண் நிறைந்த பெருகு ஒளியால் விளங்கு மழ விடைமேல்
பண் நிறைந்த அருமறைகள் பணிந்து ஏத்தப் பாவை உடன்
எண் நிறைந்த கருணையினால் நின்றாரை எதிர் காட்டி
உள் நிறைந்து பொழிந்து எழுந்த உயர் ஞானத் திருமொழியால் 6.1.74

1973 எல்லை இலா மறை முதல் மெய்யுடன் எடுத்த எழுது மறை
மல்லல் நெடும் தமிழால் இம் மா நிலத்தோர்க்கு உரை சிறப்ப
பல் உயிரும் களிகூரத் தம் பாடல் பரமர் பால்
செல்லு முறை பெறுவதற்குத் திருசெவியைச் சிறப்பித்து 6.1.75

1974 செம்மை பெற எடுத்த திருத் தோடுடைய செவியன் எனும்
மெய்ம்மை மொழித் திருப்பதிகம் பிரமபுரம் மேவினார்
தம்மை அடையாளங்களுடன் சாற்றித் தாதையார்க்கு
எம்மை இது செய்த பிரான் இவன் அன்றே என இசைத்தார் 6.1.76

1975 மண் உலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண் நுதலான் பெரும் கருணை கைக் கொள்ளும் எனக்காட்ட
எண்ணம் இலா வல் அரக்கன் எடுத்து முறிந்து இசைபாட
அண்ணல் அவற்கு அருள் புரிந்த ஆக்கப்பாடு அருள் செய்தார் 6.1.77

1976 தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத் தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மால் அயனும்
இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்து உய்ந்த படி விரித்தார் 6.1.78

1977 வேத காரணராய வெண் பிறை சேர் செய்ய சடை
நாதன் நெறி அறிந்து உய்யார் தம்மிலே நலம் கொள்ளும்
போதம் இலாச் சமண் கையர் புத்தர் வழியாக்கும்
ஏதமே என மொழிந்தார் எங்கள் பிரான் சம்பந்தர் 6.1.79

1978 திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக் காப்புச் சாத்தி
இருக்கு மொழிப் பிள்ளையார் எதிர் தொழுது நின்று அருள
அருள் கருணைத் திருவாளனார் அருள் கண்டு அமரர் எலாம்
பெருக்க விசும்பினில் ஆர்த்துப் பிரசமலர் மழை பொழிந்தார் 6.1.80

1979 வந்து எழும் மங்கலமான வான் அகத் துந்துபி முழக்கும்
கந்தருவர் கின்னரர்கள் கான ஒலிக் கடல் முழக்கும்
இந்திரனே முதல் தேவர் எடுத்து ஏத்தும் இசைமுழக்கும்
அந்தம் இல் பல் கண நாதர் அர எனும் ஓசையின் அடங்க 6.1.81

1980 மறைகள் கிளர்ந்து ஒலி வளர முழங்கிட வானோர் தம்
நிறை முடி உந்திய நிரை மணி சிந்திட நீள் வானத்து
உறை என வந்து உலகு அடைய நிறைந்திட ஓவாமெய்ப்
பொறை பெருகும் தவமுனிவர் எனும் கடல் புடை சூழ 6.1.82

1981 அணைவுற வந்து எழும் அறிவு தொடங்கின அடியார் பால்
இணை இல் பவம் கிளர் கடல்கள் இகந்திட இரு தாளின்
புணை அருள் அங்கணர் பொருவிடை தங்கிய புணர் பாகத்து
துணையொடு அணைந்தனர் சுருதி தொடர்ந்த பெரும் தோணி 6.1.83

1982 அண்ணல் அணைந்தமை கண்டு தொடர்ந்து எழும் அன்பாலே
மண்மிசை நின்ற மறைச் சிறு போதகம் அன்னாரும்
கண் வழி சென்ற கருத்து விடாது கலந்து ஏகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலின் உள் புக்கார் 6.1.84

1983 ஈறில் பெரும் தவம் முன் செய்து தாதை எனப் பெற்றார்
மாறு விழுந்த மலர்க்கை குவித்து மகிழ்ந்து ஆடி
வேறு விளைந்த வெருட்சி வியப்பு விருப்போடும்
கூறும் அரும் தமிழின் பொருளான குறிப் போவார் 6.1.85

1984 தாணுவினைத் தனிகண்டு தொடர்ந்தவர் தம்மைப் போல்
காணுதல் பெற்றிலரேனும் நிகழ்ந்தன கண்டு உள்ளார்
தோணி புரத்திறை தன் அருள் ஆதல் துணிந்து ஆர்வம்
பேணும் மனத்தொடு முன்புகு காதலர் பின் சென்றார் 6.1.86

1985 அப்பொழுது அங்கண் அணைந்தது கண்டவர் அல்லாதார்
முப்புரிநூல் மறையோர்கள் உரோமம் முகிழ்ப்பு எய்தி
இப்படி ஒப்பதோர் அற்புதம் எங்கு உளது என்று என்றே
துப்பு உறழ் வேணியர் கோயிலின் வாயில் புறம் சூழ 6.1.87

1986 பொங்கு ஒளி மால் விடை மீது புகுந்து அணி பொன் தோணி
தங்கி இருந்த பெரும் திரு வாழ்வு தலைப்பட்டே
இங்கு எனை ஆளும் உடையான் உமையோடும் இருந்தான் என்று
அங்கு எதிர் நின்று புகன்றனர் ஞானத்து அமுது உண்டார் 6.1.88

1987 இன் இசை ஏழும் இசைந்த செழும் தமிழ் ஈசற்கே
சொன்முறை பாடும் தொழும்பர் அருள் பெற்ற தொடக்கோடும் 6.1.89

பல் மறை வேதியர் காண விருப்பொடு பால் நாறும்
பொன்மணி வாயினர் கோயிலின் நின்று புறப்பட்டார்

1988 பேணிய அற்புத நீடு அருள் பெற்ற பிரான் முன்னே
நீண் நிலையில் திகழ் கோபுர வாயிலின் நேர் எய்தி
வாண் நிலவில் திகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்வு எய்தும்
தோணி புரத்தவர் தாம் எதிர் கொண்டு துதிக்கின்றார் 6.1.90

1989 காழியர் தவமே கவுணியர் தனமே கலை ஞானத்து
ஆழிய கடலே அதன் இடை அமுதே அடியார் முன்
வாழிய வந்து இம்மண் மிசை வானோர் தனி நாதன்
ஏழ் இசை மொழியாள் தன் திரு அருள் பெற்று அனை என்பார் 6.1.91

1990 மறை வளர் திருவே வைதிக நிலையே வளர் ஞானப்
பொறை அணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறை பெறு மணியே சுருதியின் ஒளியே வெளியே வந்து
இறையவன் உமையாள் உடன் அருள் தர எய்தினை என்பார் 6.1.92

1991 புண்ணிய முதலே புனை மணி அரை ஞாணொடு போதும்
கண் நிறை கதிரே கலை வளர் மதியே கவின் மேவும்
பண் இயல் கதியே பருவமது ஒரு மூவருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர் அருள் பெற்றனை என்பார் 6.1.93

1992 என்று இனைய பல கூறி இருக்கு
மொழி அந்தணரும் ஏனையோரும்
நின்று துதி செய்து அவர்தாள் நீள் முடிக்கண்
மேல் ஏந்தி நிரந்த போது
சென்று அணைந்த தாதையர் சிவபாத
இருதயர் தாம் தெய்வ ஞானக்
கன்றினை முன் புக்கு எடுத்துப் பியலின் மேல்
கொண்டு களி கூர்ந்து செல்ல 6.1.94

1993 மா மறையோர் குழத்தின் உடன் மல்கு
திருத் தொண்டர் குழாம் மருங்கு சூழ்ந்து
தாம் அறுவை உத்தரியம் தனி விசும்பில்
எறிந்து ஆர்க்கும் தன்மையாலே
பூ மறுகு சிவானந்தப் பெருக்காறு போத
அதன் மீது பொங்கும்
காமர் நுரைக் குமிழி எழுந்து இழிவன போல்
விளங்கும் பெரும் காட்சித்தாக 6.1.95

1994 நீடு திருக் கழுமலத்து நிலத்தேவர்
மாளிகை மேல் நெருங்கி அங்கண்
மாடு நிறை மடவார்கள் மங்கலமாம்
மொழிகளால் வாழ்த்தி வாசத்
6.1.96

தோடு மலி நறுமலரும் சுண்ணமும் வெண்
பொரியினொடும் தூவிநிற்பர்
கோடு பயில் குல வரை மேல் மின் குலங்கள்
புடை பெயரும் கொள்கைத்தாக

1995 மங்கல தூர் இயந்து வைப்பர்
மறைச் சாமம் பாடுவார் மருங்கு வேதிப்
பொங்கு மணி விளக்கு எடுத்து பூரண கும்பமும்
நிரைப்பார் போற்றி செய்வார்
அங்கு அவர்கள் மனத்து எழுந்த அதிசயமும்
பெருவிருப்பும் அன்பும் பொங்கத்
தங்கு திரு மலி வீதிச் சண்பை நகர் வலம்
செய்து சாரும் காலை 6.1.97

1996 தம் திரு மாளிகையின் கண் எழுந்து
அருளிப் புகும் பொழுது சங்க நாதம்
அந்தர துந்துபி முதலா அளவில் பெருகு
ஒலி தழைப்ப அணைந்து புக்கார்
சுந்தரப் பொன் தோணி மிசை இருந்த பிரானுடன்
அமர்ந்த துணைவி ஆகும்
பைந்தொடியாள் திரு முலையின் பால் அறா
மதுர மொழிப் பவள வாயார் 6.1.98

1997 தூ மணி மாளிகையின் கண்
அமர்ந்து அருளி அன்று இரவு தொல்லை நாத
மா மறைகள் திரண்ட பெரும் திருத்
தோணி மன்னி வீற்று இருந்தார் செய்ய
கா மரு சேவடிக் கமலம் கருத்திலுற
இடையறாக் காதல் கொண்டு
நாம நெடும் கதிர் உதிப்ப நண்ணினார்
திருத் தோணி நம்பர் கோயில் 6.1.99

1998 காதல் உடன் அணைந்து திருக்
கழுமலத்துக் கலந்து வீற்று இருந்த தங்கள்
தாதை யாரையும் வெளியே தாங்க அரிய
மெய்ஞ்ஞானம் தம்பால் வந்து
போதம் முலை சுரந்து அளித்த புண்ணியத்
தாயாரையும் முன் வணங்கிப் போற்றி
மே தகைய அருள் பெற்றுத் திருக்கோலக் கா
இறைஞ்ச விருப்பில் சென்றார் 6.1.100

1999 பெருக் கோல் இட்டு அலை பிறங்கும் காவிரி நீர் பிரச மலர் தரளம் சிந்த
6.1.101

வரிக் கோல வண்டு ஆட மாதரார் குடைந்து ஆடும் மணி நீர் வாவி
திருக் கோலக்கா எய்திதித் தேவர்பிரான் கோயில் வலம் செய்து
முன் நின்று
இருக்கோல் இட்டு அறிவு அரிய திருப்பாதம் ஏத்துவதற்கு
எடுத்துக் கொள்வார்

2000 மெய்ந் நிறைந்த செம் பொருளாம் வேதத்தின் விழுப் பொருளை
வேணி மீது
பைந் நிறைந்த அரவுடனே பசுங்குழவித் திங்கள் பரித்து
அருளுவானை
மைந் நிறைந்த மிடற்றானை மடையில் வாளைகள் பாய என்னும்
வாக்கால்
கைந் நிறைந்த ஒத்து அறுத்துக் கலைப் பதிகம் கவுணியர் கோன்
பாடும் காலை 6.1.102

2001 கை அதனால் ஒத்து அறுத்துப் பாடுதலும் கண்டு அருளி கருணை
கூர்ந்த
செய்ய சடை வானவர் தம் அஞ்செழுத்தும் எழுதிய நல்
செம்பொன் தாளம்
ஐயர் அவர் திரு அருளால் எடுத்த பாடலுக்கு இசைந்த அளவால்
ஒத்த
வையம் எல்லாம் உய்ய வரு மறைச் சிறுவர் கைத் தலத்து
வந்தது அன்றே 6.1.103

2002 காழி வரும் பெரும் தகையார் கையில் வரும் திருத் தாளக் கருவி
கண்டு
வாழிய தம் திருமுடி மேல் கொண்டு அருளி மனம் களிப்ப மதுர
வாயில்
ஏழ் இசையும் தழைத்து ஓங்க இன்னிசை வண் தமிழ்ப் பதிகம்
எய்தப் பாடித்
தாழும் மணிக் குழையார் முன் தக்க திருக் கடைக் காப்புச் சாத்தி
நின்றார் 6.1.104

2003 உம்பர் உலகம் அதிசயிப்ப
ஓங்கிய நாதத்து அளவின் உண்மை நோக்கித்
தும்புரு நாரதர் முதலாம் சுருதி இசைத் துறை
உள்ளோர் துதித்து மண் மேல்
வம்பு அலர் மா மழை பொழிந்தார் மறை
வாழ வந்து அருளும் மதலையாரும்
தம் பெருமான் அருள் போற்றி மீண்டு அருளிச்
சண்பை நகர் சாரச் செல்வார் 6.1.105

2004 செங்கமல மலர்க் கரத்துத் திருத்
தாளத்துடன் நடந்து செல்லும் போது
தங்கள் குலத் தாதையார் தரியாது தோளின்
மேல் தரித்துக் கொள்ள
அங்கு அவர் தம் தோளின் மிசை எழுந்து அருளி
அணைந்தார் சூழ்ந்து அமரர் ஏத்தும்
திங்கள் அணிமணி மாடத் திருத் தோணி புரத்
தோணிச் சிகரக் கோயில் 6.1.106

2005 திருப் பெருகு பெரும் கோயில் சூழ
வலம் கொண்டு அருளித் திருமுன் நின்றே
அருள் பெருகு திருப்பதிகம் எட்டு ஒரு கட்டளை
ஆக்கி அவற்றுள் ஒன்று
விருப்புறு பொன் திருத்தோணி வீற்று இருந்தார்
தமைப் பாட மேவும் காதல்
பொருத்தமுற அருள் பெற்றுப் போற்றி எடுத்து
அருளினார் பூவார் கொன்றை 6.1.107

2006 எடுத்த திருப் பதிகத்தின் இசை
திருத் தாளத்தினால் இசைய ஒத்தி
அடுத்த நடை பெறப் பாடி ஆர்வமுற வணங்கிப்
போந்து அலைநீர்ப் பொன்னி
மடுத்த வயல் பூந் தராய் அவர் வாழ மழ
விளங் கோலத்துக் காட்சி
கொடுத்து அருளி வைகினார் குறைவு இலா நிறை
ஞானக் கொண்டலார் தாம் 6.1.108

2007 அந் நிலையில் ஆளுடைய பிள்ளையார்
தமை முன்னம் அளித்த தாயார்
முன் உதிக்க முயன்ற தவத் திரு நன்னி பள்ளி
முதல் மறையோர் எல்லாம்
மன்னு பெரு மகிழ்ச்சி உடன் மங்கல தூரியம்
துவைப்ப மறைகள் ஓதிக்
கன்னி மதில் சண்பை நகர் வந்து அணைந்து
கவுணியர் கோன் கழலில் தாழ்ந்தார் 6.1.109

2008 மங்கலமாம் மெய்ஞ்ஞானம் மண்
களிப்ப பெற்ற பெரு வார்த்தையாலே
எங்கணும் நீள் பதி மருங்கில் இரு பிறப்பாளரும்
அல்லா ஏனையோரும்
பொங்கு திருத் தொண்டர்களும் அதிசயித்துக்
குழாங் கொண்டு புகலியார் தம்
சிங்க இளஏற்றின் பால் வந்து அணைந்து கழல் 6.1.110

பணியும் சிறப்பின் மிக்கார்

2009 வந்த திருத் தொண்டர்க்கும் மல்கு செழு
மறையவர்க்கும் மற்று உளோர்க்கும்
சிந்தை மகிழ்வுற மலர்ந்து திருவமுது முதல் ஆன
சிறப்பின் செய்கை
தம் தம் அளவினில் விரும்பும் தகைமையினால்
கடன் ஆற்றும் சண்பை மூதூர்
எந்தை பிரான் சிவலோகம் என விளங்கி எவ் உலகும்
ஏத்தும் நாளில் 6.1.111

2010 செழும் தரளப் பொன்னி சூழ் திரு
நன்னி பள்ளி உள்ளோர் தொழுது திங்கள்
கொழுந்து அணியும் சடையாரை எங்கள்
பதியினில் கும்பிட்டு அருள அங்கே
எழுந்து அருள வேண்டும் என இசைந்து
அருளித் தோணி வீற்று இருந்தார்
பாதம் தொழும் தகைமையால் இறைஞ்சி அருள்
பெற்றுப் பிறபதியும் தொழமுன் செல்வார் 6.1.112

2011 தாது அவிழ் செந்தாமரையின் அக
இதழ் போல் சீர் அடிகள் தரையின் மீது
போதுவதும் பிறர் ஒருவர் பொறுப்பதுவும்
பொறா அன்பு புரிந்த சிந்தை
மாதவம் செய் தாதையார் வந்து எடுத்துத்
தோளின்மேல் வைத்துக் கொள்ள
நாதர் கழல் தம் முடிமேல் கொண்ட கருத்து
உடன் போந்தார் ஞானம் உண்டார் 6.1.113

2012 தேன் அலரும் கொண்றையினார்
திரு நன்னி பள்ளியினைச் சாரச் செல்வார்
வான் அணையும் மலர்ச் சோலை தோன்றுவது
எப் பதி என்ன மகிழ்ச்சி எய்திப்
பானல் வயல் திரு நன்னி பள்ளி எனத்
தாதையர் பணிப்பக் கேட்டு
ஞான போனகர் தொழுது நல் தமிழ்ச் சொல்
தொடை மாலை நவிலல் உற்றார் 6.1.114

2013 காரைகள் கூகை முல்லை
என நிகழ் கலை சேர் வாய்மைச்
சீர் இயல் பதிகம் பாடித் திருக்
கடைக் காப்புத்தன்னில்
நாரியோர் பாகம் வைகும் நனி பள்ளி

6.1.115

உள்குவார் தம்
பேர் இடர் கெடுதற்கு ஆணை நமது
எனும் பெருமை வைத்தார்

2014 ஆதியார் கோயில் வாயில் அணைந்து புக்கு அன்பு கூர
நீதியால் பணிந்து போற்றி நீடிய அருள் முன் பெற்றுப்
போதுவார் தம்மைச் சூழ்ந்து பூசுரர் குழாங்கள் போற்றும்
காதல் கண்டு அங்கு அமர்ந்தார் கவுணியர் தலைவனார் தாம் 6.1.116

2015 அம்பிகை அளித்த ஞானம் அகிலமும் உய்ய உண்ட
நம் பெரும் தகையார் தம்மை எதிர் கொண்டு நண்ண வேண்டி
உம்பரும் வணங்கும் மெய்ம்மை உயர் தவத் தொண்டரோடு
தம் பெரும் விருப்பால் வந்தார் தலைசை அந்தணர்கள் எல்லாம் 6.1.117

2016 காவணம் எங்கும் இட்டுக் கமுகொடு கதலி நாட்டி
பூவணை தாமம் தூக்கிப் பூரண கும்பம் ஏந்தி
ஆவண வீதி எல்லாம் அலங்கரித்து அண்ணலாரை
மா அணை மலர் மென் சோலை வளம் பதி கொண்டு புக்கார் 6.1.118

2017 திரு மறையோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெரு மறை ஓசை மல்கப் பெரும் திருக் கோயில் எய்தி
அரு மறைப் பொருள் ஆனாரைப் பணிந்து அணிநல் சங்கத்தின்
தரு முறை நெறி அக் கோயில் சார்ந்தமை அருளிச் செய்தார் 6.1.119

2018 கறை அணி கண்டர் கோயில் காதலால் பணிந்து பாடி போந்து
மறையவர் போற்ற வந்து திரு வலம் புரத்து மன்னும்
இறைவரைத் தொழுது பாடும் கொடியுடை ஏந்தி
நிறைபுனல் திருச் சாய்க்காடு தொழுதற்கு நினைந்து செல்வார் 6.1.120

2019 பன்னகப் பூணினாரைப் பல்லவ னீச்சரத்துச்
சென்னியால் வணங்கி ஏத்தித் திருந்து இசைப்பதிகம் பாடி
பொன்னி சூழ் புகாரில் நீடு புனிர்தம் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த் தொண்டர் எல்லாம் மகிழ்ந்து எதிர் கொள்ளப் புக்கார் 6.1.121

2020 . வான் அளவு உயர்ந்த வாயில் உள் வலம் கொண்டு புக்குத்
தேன் அலர் கொன்றையார் தம் திருமுன்பு சென்று தாழ்ந்து
மானிடம் தரித்தார் தம்மைப் போற்றுவார் மண்புகார் என்று
ஊன் எலாம் உருக ஏத்தி உச்சி மேல் குவித்தார் செங்கை 6.1.122

2021 சீரினில் திகழ்ந்த பாட்டில் திருக் கடைக் காப்புப் போற்றிப்
பாரினில் பொலிந்த தொண்டர் போற்றிடப் பயில்வார் பின்னும்
ஏர் இசைப் பதிகம் பாடி ஏத்திப் போந்து இறைவர் வெண்காடு
ஆரு மெய்க் காதலோடும் பணிவதற்கு அணைந்தார் அன்றே 6.1.123

2022 பொன்னிதழ்க் கொன்றை வன்னி புனல் இள மதியம் நீடு
சென்னியர் திருவெண் காட்டுத் திருத் தொண்டர் எதிரே சென்று
இன்ன தன்மையர்கள் ஆனார் என ஒணா மகிழ்ச்சி பொங்க 6.1.124

மன்னுசீர் சண்பை ஆளும் மன்னரைக் கொண்டு புக்கார்

2023 முத்தமிழ் விரகர் தாமும் முதல்வர் கோபுரத்து முன்னர்ச்
சித்த நீடு உவகை யோடும் சென்று தாழ்ந்து எழுந்து புக்குப்
பத்தராம் அடியார் சூழப் பரமர் கோயிலைச் சூழ் வந்து
நித்தனார் தம் முன்பு எய்தி நிலம் உறத் தொழுது வீழ்ந்தார் 6.1.125

2024 மெய்ப் பொருள் ஆயினாரை வெண்காடு மேவினாரைச்
செப்பரும்பதிக மாலை கண் காட்டு நுதல் முன் சேர்த்தி
முப்புரம் செற்றார் பாதம் சேரும் முக்குளமும் பாடி
ஒப்பரும் ஞானம் உண்டார் உளம் மகிழ்ந்து ஏத்தி வாழ்ந்தார் 6.1.126

2025 அருமையால் புறம்பு போந்து வணங்கி அங்கு அமரும் நாளில்
திருமுல்லை வாயில் எய்திச் செந்தமிழ் மாலை சாத்தி
மருவிய பதிகள் மற்றும் வணங்குவார் மறையோர் ஏத்தத்
தருமலி புகலி வந்து ஞானசம்பர் சார்ந்தார் 6.1.127

2026 தோணி வீற்று இருந்தார் தம்மைத் தொழுது முன் நின்று தூய
ஆணியாம் பதிகம் பாடி அருள் பெரு வாழ்வு கூரச்
சேண் உயர் மாடம் ஓங்கும் திருப்பதி அதனில் செய்ய
வேணியார் தம்மை நாளும் போற்றிய விருப்பின் மிக்கார் 6.1.128

2027 வைகும் அந்நாளில் கீழ் பால் மயேந்திரப் பள்ளி வாசம்
செய் பொழில் குருகா வூரும் திருமுல்லை வாயில் உள்ளிட்டு
எய்திய பதிகள் எல்லாம் இன்புற இறைஞ்சி ஏத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினார் தமிழ்ச் சொல் மாலை 6.1.129

2028 அவ்வகை மருங்கு சூழ்ந்த பதிகளில் அரனார் பொன் தாள்
மெய் வகை ஞானம் உண்ட வேதியர் விரவிப் போற்றி
உய் வகை மண் உளோருக்கு உதவிய பதிகம் பாடி
எவ்வகையோரும் ஏத்த இறைவரை ஏத்தும் நாளில் 6.1.130

2029 திரு நீல கண்டத்துப் பெரும் பாணர் தெள் அமுதின்
வருநீர்மை இசைப்பாட்டு மதங்க சூளா மணியார்
ஒரு நீர்மையுடன் உடைய பிள்ளையார் கழல் வணங்கத்
தரு நீர்மை யாழ் கொண்டு சண்பையிலே வந்து அணைந்தார் 6.1.131

2030 பெரும் பாணர் வரவு அறிந்து பிள்ளையார் எதிர் கொள்ளச்
சுரும்பு ஆர் கமல மலர்த் துணைப் பாதம் தொழுது எழுந்து
விரும்பு ஆர்வத்தோடும் ஏத்தி மெய்ம்ம மொழிகளால் துதித்து
வரும் பான்மை தரு வாழ்வு வந்து எய்த மகிழ் சிறந்தார் 6.1.132

2031 அளவு இலா மகிழ்ச்சியினார் தமை நோக்கி ஐயா நீர்
உளம் மகிழ இங்கு அணைந்த உறுதி உடையோம் என்றே
இள நிலா நகை முகிழ்ப்ப இசைத்த அவரை உடன் கொண்டு
கள நிலவு நஞ்சு அணிந்தார் பால் அணையும் கவுணியனார் 6.1.133

2032 கோயிலினில் புற முன்றில் கொடு புக்குக் கும்பிடுவித்து
ஏயும் இசை யாழ் உங்கள் இறைவருக்கு இங்கு இயற்றும் என
ஆய புகழ்ப் பிள்ளையார் அருள் பெற்ற அதற்கு இறைஞ்சி
மேய தொடைத் தந்திரி யாழ் வீக்கி இசை விரிக்கின்றார் 6.1.134

2033 தான நிலைக் கோல் வடித்துப் படி முறைமைத் தகுதியினால்
ஆன இசை ஆராய்வுற்று அங்கணர் பாணியினை
மான முறைப் பாடினியார் உடன் பாடி வாசிக்க
ஞான போனகர் மகிழ்ந்தார் நான் மறையோர் அதிசயித்தார் 6.1.135

2034 யாழில் எழும் ஓசையுடன் இருவர் மிடற்று இசை ஒன்றி
வாழி திருத் தோணி உளார் மருங்கு அணையும் மாட்சியினைத்
தாழும் இரு சிறைப் பறவை படிந்த தனி விசும்பு இடை நின்று
ஏழ் இசை நூல் கந்தருவர் விஞ்சையரும் எடுத்து இசைத்தார் 6.1.136

2035 எண்ணரும் சீர் திருத்தோணி எம் பெருமான் கழல் பரவிப்
பண் அமையாழ் இசை கூடப்பெரும் பாணர் பாடிய பின்
கண் நுதலார் அருளினால் காழியர் கோன் கொடு போந்து
நண்ணி உறை இடம் சமைத்து நல் விருந்து சிறந்து அளிப்ப 6.1.137

2036 பிள்ளையார் அருள் பெற்ற பெரும்பாணர் பிறை அணிந்த
வெள்ள நீர்ச் சடையாரை அவர் மொழிந்த மெய்ப் பதிகம்
உள்ளபடி கேட்டலுமே உருகு பெரு மகிழ்ச்சியராய்த்
தெள் அமிர்தம் அருந்தினர் போல் சிந்தை களிப்பு உறத் தொழுதார் 6.1.138

2037 காழியர் தவப்பயனாம் கவுணியர் தம் தோன்றலார்
ஆழி விடம் உண்டவர் தம் அடி போற்றும் பதிக இசை
யாழின் முறைமையின் இட்டே எவ் உயிரும் மகிழ்வித்தார்
ஏழ் இசையும் பணி கொண்ட நீல கண்ட யாழ்ப்பாணர் 6.1.139

2038 சிறிய மறைக் களிறு அளித்த திருப்பதிக இசை யாழின்
நெறியில் இடும் பெரும் பாணர் பின்னும் நீர் அருள் செய்யும்
அறிவரிய திருப்பதிக இசை யாழில் இட்டு அடியேன்
பிறிவு இன்றிச் சேவிக்கப் பெற வேண்டும் எனத் தொழுதார் 6.1.140

2039 மற்றதற்குப் பிள்ளையார் மனம் மகிழ்வுற்று இசைந்து அருள
பெற்றவர் தாம் தம்பிரான் அருள் இதுவே எனப் பேணிச்
சொல் தமிழ் மாலையின் இசைகள் சுருதி யாழ் முறை தொடுத்தே
அற்றை நாள் போல் என்றும் அகலா நண்பு உடன் அமர்ந்தார் 6.1.141

2040 சிரபுரத்தில் அமர்ந்து அருளும் திருஞான சம்பந்தர்
பரவு திருத் தில்லை நடம் பயில்வாரைப் பணிந்து ஏத்த
விரவி எழும் பெரும் காதல் வெள்ளத்தை உள்ளத்தில்
தர இசையும் குறிப்பு அறியத் தவ முனிவர்க்கு அருள் செய்தார் 6.1.142

2041 பிள்ளையார் அருள் செய்யப் பெரும் தவத்தால் பெற்று எடுத்த
வள்ளலார் தாமும் உடன் செல்வதற்கு மனம் களிப்ப 6.1.143

வெள்ளி மால் வரை என்னத் திருத் தோணி வீற்று இருந்த
புள்ளி மான் உரியாரைத் தொழுது அருளால் புறப்பட்டார்

2042 தாழ்வில் யாழ்ப் பாணரொடும் தாதையார் தம்மோடும்
மேவிய சீர் அடியார்கன் புடை வர வெம் குரு வேந்தர்
பூவின் மேல் அயன் போற்றும் புகலியினைக் கடந்து போய்த்
தேவர்கள் தம் பெருமம் தேவர் திருத் தில்லை வழிச் செல்வார் 6.1.144

2043 நள்ளிருட்கண் நின்று ஆடுவார்
உறை பதி நடுவு கண்டன போற்றி
முள்ளிடைப் புற வெள் இதழ்க் கோதை
முகிழ் விரி மணம் சூழப்
புள்ளிடைத் தடம் பழனமும் படு கரும்பு
உடை கழிந்திடப் போந்து
கொள்ளிடத் திரு நதிக்கரை அணைந்தார்
கவுணியர் குல தீபர் 6.1.145

2044 வண்டிரைத்து எழு செழு மலர்ப்
பிறங்கலும் மணியும் ஆரமும் உந்தித்
தண் தலைப் பல வளத்தொடும் வருபுனல்
தாழ்ந்து சேவடித்தாழ
தெண் திரைக் கடல் பவழமும் பணிலமும்
செழு மணித் திரள் முத்தும்
கொண்டிரட்டி வந்தோதமங்கெதிர்
கொளக் கொள்ளிடம் கடந்து ஏறி 6.1.146

2045 பல்கு தொண்டர் தம் குழாத்
தொடும் உடன் வரும் பயில் மறையவர் சூழச்
செல் கதிப் பயன் காண்பவர் போல் களி
சிந்தை கூர் தரக் கண்டு
மல்கு தேவரே முதல் அணைத்து உயிர்களும்
வணங்க வேண்டின எல்லாம்
நல்கு தில்லை சூழ் திரு எல்லை பணிந்தனர்
ஞான ஆரமுது உண்டார் 6.1.147

2046 செங்கண் ஏற்றவர் தில்லையே
நோக்கி இத் திருந்து உலகினிற்கு எல்லாம்
மங்கலம் தரு மழவிளம் போதகம் வரும்
இரு மருங்கு எங்கும்
தங்கு புள்ளொலி வாழ்த்து உரை எடுத்து
முன் தாமரை மது வாசப்
பொங்கு செம்முகை கரம் குவித்து அலர்
முகம் காட்டின புனல் பொய்கை 6.1.148

2047 கலவ மென் மயில் இனம் களித்து
தழைத்திடக் கடி மணக் குளிர் கால் வந்து
உலவி முன் பணிந்து எதிர் கொளக் கிளர்ந்து
எழுந்து உடன் வரும் சுரும்பு ஆர்ப்ப
இலகு செந்தளிர் ஒளி நிறம் திகழ் தர
இரு குழை புடை ஆட
மலர் முகம் பொலிந்து அசைய மென்
கொம்பர் நின்று ஆடுவ மலர்ச் சோலை 6.1.149

2048 இழைத் தடம் கொங்கை
இமய மாமலைக் கொடி இன் அமுது என ஞானம்
குழைத்து அளித்திட அமுது செய்து
அருளிய குருளையார் வரக் கண்டு
மழைத்த மந்த மருதத்தினால் நறு மலர்
வண்ண நுண் துகள் தூவித்
தழைத்த பொங்கு எழில் முகம் செய்து
வணங்கின தடம் பணை வயல் சாலி 6.1.150

2049 ஞாலம் உய்ந்திட ஞானம்
உண்டவர் எழுந்து அருளும் அந் நலம் கண்டு
சேல் அலம்பும் தண் புனல் தடம் படிந்து
அணை சீத மாருதம் வீசச்
சாலவும் பல கண் பெறும் பயன் பெறும்
தன்மையில் களி கூர்வ
போல் அசைந்து இரு புடைமிடைந்து
ஆடின புறம்பு அணை நறும் பூகம் 6.1.151

2050 பவம் தவிர்ப்பவர் தில்லை சூழ்
எல்லையில் மறையவர் பயில் வேள்விச்
சிவம் தரும் பயன் உடைய ஆகுதிகளின்
செழும் புகை பரப்பாலே
தவம் தழைப்ப வந்து அருளிய பிள்ளையார்
தாம் அணைவுற முன்னே
நிவந்த நீல நுண் துகில் விதானத்தது
போன்றது நெடுவானம் 6.1.152

2051 கரும்பு செந்நெல் பைம் கமுகொடு கலந்து உயர் கழனி அம் பணை நீங்கி
அரும்பு மென் மலர் தளிர் பல மூலம் என்று அணைத்தின் ஆகரம் ஆன
மருங்கில் நந்தன வனம் பணிந்து அணைந்தனர் மாட மாளிகை ஓங்கி
6.1.153

நெருங்கு தில்லை சூழ் நெடுமதில் தென் திரு வாயில் நேர்
அணித்தாக

2052 பொங்கு கொங்கையில் கறந்த மெய் ஞானமாம் போனகம் பொன்
குன்றம்
மங்கை செங்கையால் ஊட்ட உண்டு அருளிய மதலையார்
வந்தார் என்று
அங்கண் வாழ் பெரும் திருத்தில்லை அந்தணர் அன்பர்களுடன்
ஈண்டி
எங்கும் மங்கல அணிமிக அலங்கரித்து எதிர் கொள
அணைவார்கள் 6.1.154

2053 வேத நாதமும் மங்கல முழக்கமும் விசும்பு இடை நிறைந்து ஓங்க
சீத வாச நீர் நிறை குடம் தீபங்கள் திசை எலாம் நிறைந்து ஆரச்
சோதி மா மணி வாயிலின் புறம் சென்று சோபன ஆக்கமும்
சொல்லிக்
கோதிலாதவர் ஞானசம்பந்தரை எதிர் கொண்டு புக்கார் 6.1.155

2054 செல்வம் மல்கிய தில்லை மூதூரினில் தென் திசைத் திருவாயில்
எல்லை நீங்கி உள் புகும் திருமருங்கு நின்று எடுக்கும் ஏத்து ஒலி
சூழ
மல்லல் ஆவண மறுகிடைக் கழிந்து போய் மறையவர் நிறை
வாழ்க்கைத்
தொல்லை மாளிகை நிரைத் திரு வீதியைத் தொழுது
அணைந்தனர் தூயோர் 6.1.156

2055 மலர்ந்த பேர் ஒளி குளிர் தரச் சிவமணம் கமழ்ந்து வான் துகள்
மாறிச்
சிலம்பு அலம்பு சேவடியவர் பயில் உறும் செம்மையால்
திருத்தொண்டு
கலந்த அன்பர் தம் சிந்தையில் திகழ் திருவீதி கண் களி செய்யப்
பலன் கொள் மைந்தனார் எழுநிலைக் கோபுரம் பணிந்து எழுந்தனர்
போற்றி 6.1.157

2056 நீடுநீள் நிலைக் கோபுரத்துள் புக்கு நிலவிய திரு முன்றின்
மாடு செம் பொனின் மாளிகை வலம் கொண்டு வானுற வளர்
திங்கள்
சூடுகின்ற பேரம்பலம் தொழுது போந்து அருமறை தொடர்ந்து
ஏத்த
ஆடுகின்றவர் முன்புற அணைந்தனர் அணிகிளர் மணிவாயில் 6.1.158

2057 நந்தி எம்பிரான் முதல் கண நாதர்கள் நலம் கொள்பவன் முறை
கூட
அந்தம் இல்லவர் அணுகி முன் தொழுதிரு அணுக்கனாம்
6.1.159

திருவாயில்
சிந்தை ஆர்வமும் பெருகிடச் சென்னியில் சிறிய செங்கை யேற
உய்ந்து வாழ் திரு நயனங்கள் களி கொள்ள உருகும் அன்பொடு
புக்கார்

2058 அண்ணலார் தமக்கு அளித்த மெய்ஞ் ஞானமே ஆன அம்பல
முந்தம்
உள் நிறைந்த ஞானத்து எழும் ஆனந்த ஒரு பெரும் தனிக் கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டு கும்பிட்டு எழும் களிப்பொடும் கடல்
காழிப்
புண்ணியக் கொழுந்து அனையவர் போற்றுவார் புனிதர் ஆடிய
பொற்பு 6.1.160

2059 உணர்வின் நேர் பெற வரும் சிவ போகத்தை ஒழிவு இன்றி
உருவின் கண்
அணையும் ஐம் பொறி அளவினும் எளிவர அருளினை எனப்
போற்றி
இணை இல் வண் பெருங் கருணையே ஏத்தி முன் எடுத்த சொல்
பதிகத்தில்
புணரும் இன் இசை பாடினர் ஆடினர் பொழிந்தனர் விழி மாரி 6.1.161

2060 ஊழி முதல்வர்க்கு உரிமைத் தொழில் சிறப்பால்
வாழி திருத் தில்லை வாழ் அந்தணரை முன் வைத்தே
ஏழ் இசையும் ஓங்க எடுத்தார் எமை ஆளும்
காழியர் தம் காவலனார் கற்றாங் கெரியோம்பி 6.1.162

2061 ண்ணார் பதிகத் திருக் கடை காப்புப் பரவி
உள் நாடும் என்பும் உயிரும் கரைந்து உருகும்
விண் நாயகன் கூத்து வெட்ட வெளியே திளைத்துக்
கண்ணார் அமுது உண்டார் காலம் பெற அழுதார் 6.1.163

2062 முன் மால் அயன் அறியா மூர்த்தியார் முன் நின்று
சொல் மாலையால் காலம் எல்லாம் துதித்து இறைஞ்சி
பல் மா மறை வெள்ளம் சூழ்ந்து பரவுகின்ற
பொன் மாளிகையை வலம் கொண்டு புறம் போந்தார் 6.1.164

2063 செல்வத் திருமுன்றில் தாழ்ந்து எழுந்து தேவர் குழாம்
மல்கும் திருவாயில் வந்து இறைஞ்சி மா தவங்கள்
நல்கும் திரு வீதி நான்கும் தொழுது அங்கண்
அல்கும் திறம் அஞ்சுவார் சண்பை ஆண்டகையார் 6.1.165

2064 செய்ய சடையார் திருவேட்களம் சென்று
கை தொழுது சொல் பதிகம் பாடிக் கழுமலக் கோன்
வைகி அருளும் இடம் அங்கு ஆக மன்றாடும்
ஐயன் திருக் கூத்துக் கும்பிட்டு அணை உறும் நாள் 6.1.166

2065 கைம் மான் மறியார் கழிப்பாலை உள் அணைந்து
மெய்ம் மாலைச் சொல் பதிகம் பாடி விரைக் கொன்றைச்
செம்மாலை வேணித் திரு உச்சி மேவியுறை
அம்மானைக் கும்பிட்டு அரும் தமிழும் பாடினார் 6.1.167

2066 பாடும் பதிக இசை யாழ்ப்பாணரும் பயிற்றி
நாடும் சிறப்பு எய்த நாளும் நடம் போற்றுவார்
நீடும் திருத்தில்லை அந்தணர்கள் நீள் மன்றுள்
ஆடும் கழற்கு அணுக்கராம் பேறு அதிசயிப்பார் 6.1.168

2067 ஆங்கு அவர் தம் சீலத்து அளவு இன்மையும் நினைந்தே
ஓங்கி எழும் காதல் ஒழியாத உள்ளத்தார்
தேன் கமழும் சோலைத் திருவேட்களம் கடந்து
பூங்கிடங்கு சூழ் புலியூர் புக்கு அணையும் போழ்தின்கண் 6.1.169

2068 அண்டத்து இறைவர் அருளால் அணி தில்லை
முண்டத் திருநீற்று மூவாயிரவர்களும்
தொண்டத் தகைமைக் கண நாதராய்த் தோன்றக்
கண்ட அப் பரிசு பெரும் பாணர்க்கும் காட்டினார் 6.1.170

2069 செல்வம் பிரிவு அறியாத் தில்லை வாழ் அந்தணரும்
எல்லையில் சீர்ச் சண்பை இளவேறு எழுந்து அருளி
ஒல்லை இறைஞ்சா முன் தாமும் உடன் இறைஞ்சி
மல்லல் அணி வீதி மருங்கு அணைய வந்தார்கள் 6.1.171

2070 பொங்கி எழும் காதல் புலன் ஆகப் பூசுரர் தம்
சிங்கம் அனையார் திரு முடியின் மேல் குவித்த
பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்பு ஓங்கும்
செங்கையொடும் சென்று திருவாயில் உட்புக்கார் 6.1.172

2071 ஒன்றிய சிந்தை உருக உயர் மேருக்
குன்று அனைய பேர் அம்பலம் மருங்கு கும்பிட்டு
மன்று உள் நிறைந்து ஆடும் மாணிக்கக் கூத்தர் எதிர்
சென்று அணைந்து தாழ்ந்தார் திருக்களிற்றுப் படிக் கீழ் 6.1.173

2072 ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர் என்று எடுத்து ஆர்வத்தால்
பாடினார் பின்னும் அப்பதிகத்தினில் பரவிய பாட்டு ஒன்றில்
நீடு வாழ் தில்லை நான் மறையோர் தமைக் கண்ட அந் நிலை
எல்லாம்
கூறுமாறு கோத்து அவர் தொழுது ஏத்துச் சிற்றம் பலம் எனக் கூறி 6.1.174

2073 இன்ன தன்மையில் இன் இசைப்
பதிகமும் திருக்கடைக் காப்பு ஏத்தி
மன்னும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்து
எதிர் வந்து முன் நின்று ஆடும்
பின்னுவார் சடைக் கூத்தர் பேர் அருள்
6.1.175

பெறப் பிரியாத விடைபெற்றுப்
பொன்னின் அம்பலம் சூழ்ந்து தாழ்ந்து
எழுந்து போந்து அணைந்தனர் புறமுன்றில்

2074 அப் புறத்து இடை வணங்கி அங்கு
அருளுடன் அணிமணித் திருவாயில்
பொற்புறத் தொழுது எழுந்து உடன்
போதரப் போற்றிய புகழ்ப் பாணர்
நற்பதம் தொழுது அடியனேன் பதி
முதல் நதி நிவாக்கரை மேய
ஒப்பில் தானங்கள் பணிந்திட வேண்டும்
என்று உரை செய அது நேர்வார் 6.1.176

2075 பொங்கு தெண்திரைப் புனித நீர்
நிவாக்கரைக் குடதிசை மிசைப் போந்து
தங்கு தந்தையாருடன் பரிசனங்களும்
தவ முனிவரும் செல்லச்
செங்கை யாழ்த் திரு நீலக் கண்டப்
பெரும் பாணருடன் சேர
மங்கையார் புகழ் மதங்க சூளாமணியாருடன்
வரவந்தார் 6.1.177

2076 இரும் தடங்களும் பழனமும் கடந்து
போய் எருக்கத்தம் புலியூரின்
மருங்கு சென்றுற நீல கண்டப்
பெரும்பாணர் வணங்கிக் கார்
நெருங்கு சோலை சூழ் இப்பதி
அடியேன்பதி என நெடிது இன்புற்று
அருங்கலைச் சிறு மழ இளங்களிறனார்
அங்கணைந்து அருள் செய்வார் 6.1.178

2077 ஐயர் நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு
செய்வாறு எனச் சிறப்பு உரைத்து அருளி அச் செழும்பதி இடம்
கொண்ட
மை கொள் கண்டர் தம் கோயில் உட்புக்கு வலம் கொண்டு
வணங்கி பார்
உய்ய வந்தவர் செழும் தமிழ்ப் பதிகம் அங்கு இசையுடன் உரை
செய்தார் 6.1.179

2078 அங்கு நின்று எழுந்து அருளி மற்றவருடன்
அம்பொன்மா மலை வல்லி
பங்கர் தாம் இனிது உறையும் நற் பதி பல
பரிவொடும் பணிந்து ஏத்தித்

6.1.180

துங்க வண்தமிழ்த் தொடை மலர் பாடிப்
போய்த் தொல்லை வெங்குரு வேந்தர்
செங்கண் ஏற்றவர் திரு முது குன்றினைத்
தொழுது சென்று அணைகின்றார்

2079 மொய் கொள் மா மணிக் கொழித்து
முத்தாறு சூழ் முது குன்றை அடைவோம் என்று
எய்து சொல் மலர் மாலை வண் பதிகத்தை
இசையொடும் புனைந்து ஏத்தி
செய் தவத் திரு முனிவரும் தேவரும்
திசையெலாம் நெருங்கப் புக்கு
ஐயர் சேவடி பணியும் அப் பொருப்பினில்
ஆதரவுடன் சென்றார் 6.1.181

2080 வான நாயகர் திருமுது குன்றினை
வழிபட வலம் கொள்வார்
தூ நறும் தமிழ்ச் சொல் இருக்குக் குறள்
துணை மலர் மொழிந்து ஏத்தி
ஞான போதகர் நம்பர் தம் கோயிலை
நண்ணி அங்கு உள்புக்கு
தேன் அலம்பு தண் கொன்றை யார் சேவடி
திளைத்த அன்பொடு தாழ்ந்தார் 6.1.182

2081 தாழ்ந்து எழுந்து முன் முரசு அதிர்ந்து
எழும் எனும் தண் தமிழ் தொடை சாத்தி
வாழ்ந்து போந்து அங்கண் வளம்பதி அதன்
இடை வைகுவார் மணி வெற்புச்
சூழ்ந்த தண் புனல் சுலவு முத்தாறொடு
தொடுத்த சொல் தொடை மாலை
வீழ்ந்த காதலால் பல முறை விளம்பியே
மேவினார் சில நாள்கள் 6.1.183

2082 ஆங்கு நாதரைப் பணிந்து பெண்ணாகடம்
அணைந்து அருமறை ஓசை
ஓங்கு தூங்கானை மாடத்துள் அமர்கின்ற
ஒரு தனிப் பரஞ்சோதிப்
பாங்கு அணைந்து முன் வலம் கொண்டு
பணிவுற்றுப் பரவு சொல் தமிழ் மாலை
தீங்கு நீங்குவீர் தொழுமின்கள் எனும்
இசைப் பதிகமும் தெரிவித்தார் 6.1.184

2083 கருவரைப்பில் புகாதவர் கை தொழும்
ஒருவரைத் தொழுது உள்ளம் உவந்து போய்ப்
6.1.185

பெருவரத்தினில் பெற்றவர் தம் உடன்
திரு அரத்துறை சேர்த்தும் என்று ஏகுவார்

2084 முந்தை நாள்கள் ஒரோ ஒரு கால் முது
தந்தையார்பியல் மேல் இருப்பார் தவிர்ந்து
அந்தணாளர் அவர் அருகே செலச்
சிந்தை செய் விருப்போடு முன் சென்றனர் 6.1.186

2085 ஆதியார் தம் அரத்துறை நோக்கியே
காதலால் அணைவார் கடிது ஏகிட
தாதையாரும் பரிவுறச் சம்பந்தர்
பாத தாமரை நொந்தன பைப்பய 6.1.187

2086 மறை அனைத்தும் ஒரு வடிவாம் என
நிறை மதிப் பிள்ளை நீள் நிலம் சேர்ந்து எனத்
துறை அலைக் கங்கை சூடும் அரத்துறை
இறைவரைத் தொழுவான் விரைந்து ஏகினார் 6.1.188

2087 பாசம் அற்றிலர் ஆயினும் பார் மிசை
ஆசை சங்கரர்கு ஆயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு ஆனவர்
ஈசனைத் தொழுதே தொழுது ஏகினார் 6.1.189

2088 இந்த மாநிலத்தின் இருள் நீங்கிட
வந்த வைதிக மாமணி ஆனவர்
சிந்தை ஆரமுதாகிய செம் சடைத்
தந்தையார் கழல் தாழ்ந்து எழுந்து ஏகினார் 6.1.190

2089 மாறன் பாடி எனும் பதி வந்துற
ஆறு செல் வருத்தத்தின் அசைவினால்
வேறு செல்பவர் வெய் துறப் பிள்ளையார்
ஏறும் அஞ்செழுத்து ஓதி அங்கு எய்திட 6.1.191

2090 உய்ய வந்த சம்பந்தர் உடன் வந்தார்க்கு
எய்து வெம்மை இளைப்பு அஞ்சினான் போலக்
கைகள் ஆயிரம் வாங்கிக் கரந்து போய்
வெய்யவன் சென்று மேல் கடல் வீழ்ந்தனன் 6.1.192

2091 அற்றை நாள் இரவு அப்பதியின் இடைச்
சுற்று நீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்றம் ஊர்ந்த பிரான் கழல் பேணுவார்
வெற்றி மாதவத்தோருடன் மேவினார் 6.1.193

2092 இந்நிலைக் கண் எழில் வளர் பூந்தராய்
மன்னனார் தம் வழி வருத்தத் தினை
அன்னம் ஆடும் துறை நீர் அரத்துறைச்
சென்னியாற்றர் திருவுளம் செய்தனர் 6.1.194

2093 ஏறுதற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவு பொன் சின்னங்கள்
மாறில் முத்தின் படியினால் மன்னிய
நீறு வந்த நிமலர் அருளுவார் 6.1.195

2094 நீடு வாழ் பதி யாகும் நெல் வயலின்
மாட மாமணை தோறும் மறையோர்க்குக்
கூடு கங்குல் கனவில் குலமறை
தேடு சேவடி தோன்ற முன் சென்று பின் 6.1.196

2095 ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான்
மான முகத்தின் சிவிகை மணிக் குடை
ஆன சின்னம் நம் பால் கொண்டு அருங்கலைக்
கோன் அவன் பால் அணைந்து கொடும் என 6.1.197

2096 அந்தணாளர் உரைத்த அப்போழ்தினில்
வந்து கூடி மகிழ்ந்து அற்புதம் உறும்
சிந்தையோடும் செழுநீர் அரத்துறை
இந்து சேகரர் கோயில் வந்து எய்தினர் 6.1.198

2097 ஆங்கு மற்ற அருள் அடியாருடன்
ஓங்கு கோயில் உள்ளார்க்கும் உண்டாயின
ஈங்கு இது என்ன அதிசயம் என்பவர்
தாங்கள் அம்மறையோர்கள் முன் சாற்றினார் 6.1.199

2098 சால மிக்க வியப்புறு தன்மையின்
பாலர் ஆதலும் பள்ளி எழுச்சியின்
காலம் எய்திடக் காதல் வழிப்படும்
சீல மிக்கார் திருக்காப்பு நீக்கினார் 6.1.200

2099 திங்கள் நீர்மைச் செழுந் திரள் முத்தினால்
துங்க வெண் குடை தூய சிவிகையும்
பொங்க ஊதும் பொருவரும் சின்னமும்
அங்கண் நாதர் அருளினால் கண்டனர் 6.1.201

2100 கண்டபின் அவர் கை தலை மேல் குவித்து
எண்திசைக்கும் விளக்கி இவையாம் எனத்
தொண்ட ரோடும் மறையவர் சூழ்ந்து எழுந்து
அண்டர் நாடும் அறிவுற ஆர்த்தனர் 6.1.202

2101 சங்கு துந்துபி தாரை பேரி இம்முதல்
பொங்கு பல்லிய நாதம் பொலிந்து எழ
அங்கணன் அருளால் அவை கொண்டு உடன்
பொங்கு காதல் எதிர் கொளப் போதுவார் 6.1.203

2102 மாசில் வாய்மை நெல் வாயின் மறையவர்
ஆசில் சீர்ச் சண்பை ஆண் தகையார்க்கு எதிர் 6.1.204

தேசுடைச் சிவிகை முதலாயின
ஈசர் இன் அருளால் தாங்கி ஏகினார்

2103 இத்தலை இவர் இன்னணம் ஏகினார்
அத்தலைச் சண்பை நாதர்க்கும் அவ் இரா
முத்த நற் சிவிகை முதல் ஆயின
உய்த்து அளிக்கும் படி முன் உணர்த்துவார் 6.1.205

2104 அள்ளல் நீர் வயல் சூழும் அரத்துறை
வள்ளலார் நாம் மகிழ்ந்து அளிக்கும் அவை
கொள்ளல் ஆகும் கொண்டு உய்த்தல் செய்வாய் என
உள்ளவாறு அருள் செய்ய உணர்ந்த பின் 6.1.206

2105 சண்பை ஆளியார் தாம் கண்ட மெய் அருள்
பண்பு தந்தையார் தம்முடன் பாங்கமர்
தொண்டருக்கு அருள் செய்து தொழா முனம்
விண் புலப்பட வீங்கு இருள் நீங்கலும் 6.1.207

2106 மாலை யாமம் புலர் உறும் வைகறை
வேலை செய்வினை முற்றி வெண் நீறு அணி
கோல மேனியர் ஆய்க் கைம் மலர் குவித்து
ஏல அஞ்செழுத்து ஓதி எழுந்தனர் 6.1.208

2107 போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீத முத்தின் சிவிகை மேல் ஏற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடல்
மீது தேரின் வந்து எய்தினன் வெய்யவன் 6.1.209

2108 ஆய போழ்தின் அரவு எனும் ஆர்ப்புடன்
தூய முத்தின் சிவிகை சுடர்க் குடை
மேய சின்னங்கள் கொண்டு மெய் அன்ப ரோடு
ஏய அந்தணர் தாம் எதிர் தோன்றினார் 6.1.210

2109 வந்து தோன்றிய அந்தணர் மாதவர்
கந்த வார் பொழில் காழி நல்னாடர் முன்
அந்தமில் சீர் அரத்துறை ஆதியார்
தந்த பேர் அருள் தாங்குவீர் என்றனர் 6.1.211

2110 என்று தங்களுக்கு ஈசர் அருள் செய்தது
ஒன்றும் அங்கு ஒழியாமை உரைத்து முன்
நின்று போற்றித் தொழுதிட நேர்ந்தது
மன்று உளரர் அருள் என்று வணங்கினார் 6.1.212

2111 மெய்ம்மை போற்றி விடாத விருப்பினால்
தம்மை உன்னும் பரிசு தந்து ஆள்பவர்
செம்மை நித்தில ஆனச் சிறப்பு அருள்
எம்மை ஆளுவிப்பான் இன்று அளித்ததே 6.1.213

2112 எந்தை ஈசன் என எடுத்து இவ்வருள்
வந்தவாறு மற்று எவ் வணமோ என்று
சிந்தை செய்யும் திருப் பதிகத்து இசை
புந்தியார் அப் புகன்று எதிர் போற்றுவார் 6.1.214

2113 பொடி அணிந்த புராணன் அரத்துறை
அடிகள் தம் அருளே இதுவாம் எனப்
படி இலாத சொல் மாலைகள் பாடியே
நெடிது போற்றிப் பதிகம் நிரப்பினார் 6.1.215

2114 சோதி முத்தின் சிவிகை சூழ் வந்து பார்
மீது தாழ்ந்து வெண் நீற்று ஒளி போற்றி நின்று
ஆதியார் அருள் ஆதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகு எலாம் 6.1.216

2115 தொண்டர் ஆர்த்தனர் சுருதிகள் ஆர்த்தன தொல்லை
அண்டர் ஆர்த்தனர் அகிலமும் ஆர்ப்புடன் எய்தக்
கொண்டல் ஆர்த்தன முழவமும் ஆர்த்தன குழுமி
வண்டு அறாப் பொலி மலர் மழை ஆர்த்தது வானம் 6.1.217

2116 விளையும் ஆர்த்தன வயிர்களும் ஆர்த்தன மறையின்
கிளையும் ஆர்த்தன கிளைஞரும் ஆர்த்தனர் கெழுவும்
களைகண் ஆர்த்ததொர் கருணையின் ஆர்த்தன முத்து
விளையும் மா கதிர் வெண்குடை ஆர்த்தது மிசையே 6.1.218

2117 பல்கு வெண்கதிர்ப் பத்திசேர் நித்திலச் சிவிகைப்
புல்கு நீற்று ஒளியுடன் பொலி புகலி காவலனார்
அல்கு வெல் வளை அலைத்து எழு மணி நிரைத் தரங்கம்
மல்கு பால் கடல் வளர்மதி உதித்தது என வந்தார் 6.1.219

2118 நீடு தொண்டர்கள் மறையவர் ஏனையோர் நெருங்கி
மாடு கொண்டு எழு மகிழ்ச்சியின் மலர்க்கை மேல் குவித்தே
ஆடு கின்றனர் அயர்ந்தனர் அளவில் ஆனந்தம்
கூடுகின்ற கண் பொழி புனல் வெள்ளத்தில் குளித்தார் 6.1.220

2119 செய்ய பொன் புனை வெண்டரளத்து அணிசிறக்க
சைவ மா மறைத் தலைவர் பால் பெறும் தனிக் காளம்
வையம் ஏழுடன் மறைகளும் நிறை தவத்தோரும்
உய்ய ஞானசம்பந்தன் வந்தான் என ஊத 6.1.221

2120 சுற்று மாமறைச் சுருதியின் பெருகு ஒலி நடுவே
தெற்றினார் புரம் எரித்தவர் தரு திருச்சின்னம்
முற்றும் ஆனவன் ஞானமே முலை சுரந்து ஊட்ட
பெற்ற பாலறா வாயன் வந்தான் எனப் பிடிக்க 6.1.222

2121 புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார் முன்னே
இணைந்த நித்திலத்து இலங்கு ஒளி நலங்கிளர் தாரை 6.1.223

அணைந்த மாமறை முதல் கலை அகிலமும் ஓதாது
உணர்ந்த முத்தமிழ் விரகன் வந்தான் என ஊத

2122 தெருளும் மெய்க்கலை விளங்கவும் பார் உளோர் சிந்தை
இருளும் நீங்கவும் எழுது சொன் மறை அளிப்பவர் தாம்
பொருளும் ஞானமும் போகமும் போற்றி என்பாருக்கு
அருளும் அங்கணர் திரு அரத் துறையை வந்து அணைந்தார் 6.1.224

2123 வந்து கோபுர மணி நெடு வாயில் சேய்த்து ஆகச்
சந்த நித்திலச் சிவிகை நின்று இழிந்து தாழ்ந்து எழுந்து
சிந்தை ஆர்வமும் மகிழ்ச்சியும் பொங்கி முன் செல்ல
அந்தி நாண்மதி அணிந்தவர் கோயிலுள் அடைந்தார் 6.1.225

2124 மன்னு கோயிலை வலம் கொண்டு திரு முன்பு வந்து
சென்னியில் கரம் குவித்து வீழ்ந்து அன்பொடு திளைப்பார்
என்னையும் பொருளாக இன் அருள் புரிந்து அருளும்
பொன் அடித்தலத் தாமரை போற்றி என்று எழுந்தார் 6.1.226

2125 சூடினார் கர கமலங்கள் சொரிந்து இழி கண்ணீர்
ஆடினார் திரு மேனியில் அரத்துறை விரும்பி
நீடினார் திரு அருள் பெரும் கருணையே நிகழப்
பாடினார் திருப் பதிகம் ஏழ் இசையொடும் பயில 6.1.227

2126 இசை விளங்கிட இயல்பினில் பாடி நின்று ஏத்தி
மிசை விளங்கு நீர் வேணியார் அருளினால் மீண்டு
திசை விளங்கிடத் திரு அருள் பெற்றவர் சில நாள்
அசைவில் சீர்த் தொண்டர் தம் உடன் அப்பதி அமர்ந்தார் 6.1.228

2127 தேவர் தம்பிரான் திரு அரத் துறையினில் இறைஞ்சி
மேவு நாட்களில் விமலனார் நெல் வெண்ணெய் முதலாத்
தாவில் அன்பர்கள் தம் உடன் தொழுது பின் சண்பைக்
காவலர் அருள் பெற்று உடன் கலந்து மீண்டு அணைந்தார் 6.1.229

2128 விளங்கு வேணு புரத்து திருத் தோணி வீற்று இருந்த
களம் கொள் கண்டர் தம் காதலியார் உடன் கூட
உளம் கொளப் புகுந்து உணர்வினில் வெளிப்பட உருகி
வளம் கொள் பூம் புனல் புகலிமேல் செல மனம் வைத்தார் 6.1.230

2129 அண்ணலார் திரு அரத்துறை அடிகளை வணங்கி
நண்ணு பேர் அருளால் விடை கொண்டு போய் நடம் கொண்டு
உள் நிறைந்த பூங்கழல் இணை உச்சி மேல் கொண்டே
வெள் நிலா மலர் நித்திலச் சிவிகை மேல் கொண்டார் 6.1.231

2130 சிவிகை முத்தினில் பெருகு ஒளி திசை எலாம் விளக்கப்
கவிகை வெண்மதிக் குளிர் ஒளி கதிர் செய்வான் கலப்பக்
குவிகை மேல் கொண்டு மறையவர் குணலை இட்டு ஆடப்
புவிகை மாறு இன்றிப் போற்ற வந்து அருளினார் போந்தார் 6.1.232

2131 மறை முழங்கின தழங்கின வண்தமிழ் வயிரின்
குறை நரன்றன முரன்றன வளைக்குலம் காளம்
முறை இயம்பின இயம்பல ஒலித்தன முரசப்
பொறை கறங்கின பிறங்கின போற்றிசை அரவம் 6.1.233

2132 உடைய பிள்ளையார் வரும் எல்லை உள்ள அப்பதியோர்
புடை இரண்டினும் கொடியொடு பூந்துகில் விதானம்
நடை செய் காவணம் தோரணம் பூகம் நல் கதலி
மிடையும் மாலைகள் நிறை குடம் விளக்கொடு நிரைத்தார் 6.1.234

2133 அனைய செய்கையால் எதிர் கொளும் பதிகள் ஆனவற்றின்
வினை தரும் பவம் தீர்ப்பவர் கோயில்கள் மேவிப்
புனையும் வண் தமிழ் மொழிந்து அடி பணிந்து போந்து
அணைந்தார்
பனை நெடும் கை மா உரித்தவர் மகிழ் பெரும் பழுவூர் 6.1.235

2134 அங்கு அணைந்து இளம்பிறை அணிந்த சென்னியர்
பொங்கு எழில் கோபுரம் தொழுது புக்க பின்
துங்க நீள் விமானத்தைச் சூழ்ந்து வந்துமுன்
பங்கயச் சேவடி பணிந்து பாடுவார் 6.1.236

2135 மண்ணினில் பொலி குலமலையர் தாம் தொழுது
எண் இல் சீர்ப் பணிகள் செய்து ஏத்தும் தன்மையில்
நண்ணிய வகை சிறப்பித்து நாதரைப்
பண்ணினில் திகழ் திருப்பதிகம் பாடினார் 6.1.237

2136 பாவின இசை வழிபாடி அங்கு அகன்றி
யாவரும் தொழுது உடன் ஏத்த எய்தினார்
மூவுலகு உய்ய நஞ்சு உண்ட மூர்த்தியார்
மேவிய பெரும் திரு விசய மங்கையில் 6.1.238

2137 அந்தணர் விசய மங்கையினில் அங்கணர்
தம் தனி ஆலயம் சூழ்ந்து தாழ்ந்து முன்
வந்தனை செய்து கோ தனத்தை மன்னிய
செந்தமிழ் மாலையில் சிறப்பித்து ஏத்தினார் 6.1.239

2138 விசய மங்கையின் இடம் அகன்று மெய்யர் தாள்
அசைவில் வைகாவினில் அணைந்து பாடிப் போந்து
இசை வளர் ஞான சம்பந்தர் எய்தினார்
திசை உடை ஆடையர் திருப்புறம் பயம் 6.1.240

2139 புறம் பயத்து இறைவரை வணங்கிப் போற்றி செய்
திறம் புரி நீர்மையில் பதிகச் செம்தமிழ்
நிறம் பயில் இசையுடன் பாடி நீடிய
அறம் தரு கொள்கையர் அமர்ந்து மேவினார் 6.1.241

2140 அத் திருப்பதி பணிந்து அகன்று போய் அனல்
கைத் தலத்தவர் பதி பிறவும் கை தொழு
முத் தமிழ் விரபராம் முதல்வர் நண்ணினார்
செய்த் தலைப் பணிலம் முத்து ஈனும் சேய்ஞலூர் 6.1.242

2141 திரு மலி புகலி மன் சேரச் சேய் ஞலூர்
அரு மறையவர் பதி அலங்கரித்து முன்
பெரு மறையொடு முழவு ஒலி பிறங்கவே
வருமுறை எதிர் கொள வந்து முந்தினார் 6.1.243

2142 ஞான சம்பந்தரும் நாயனார் சடைத்
தூ நறும் தொடையல் முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும் பதி என்று நித்தில
யானமுன் இழிந்து எதிர் இறைஞ்சி எய்தினார் 6.1.244

2143 மா மறையாளர் வண் புகலிப் பிள்ளையார்
தாம் எழுந்து அருளிடத் தங்கள் பிள்ளையார்
காமரும் பதியில் வந்து அருளக் கண்டனர்
ஆ மகிழ் உடன் பணிந்து ஆடி ஆர்த்தனர் 6.1.245

2144 களித்தனர் புண்ணியக் கரக வாசநீர்
தெளித்தனர் பொரிகளும் மலரும் சிந்தினர்
துளித்தனர் கண் மழை சுருதி ஆயிரம்
அளித்தவர் கோயிலுள் அவர் முன்பு எய்தினார் 6.1.246

2145 வெங்குரு வேந்தரும் விளங்கு கோயிலைப்
பொங்கிய விருப்பினால் புடை வலம் கொடு
செங்கைகள் சென்னிமேல் குவித்துச் சென்று புக்கு
அங்கணர் முன்புற அணைந்து தாழ்ந்தனர் 6.1.247

2146 வேதியர் சேய்ஞலூர் விமலர் தம் கழல்
காதலில் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதை தாள் தடிந்த சண்டீசப் பிள்ளையார்
பாதகப் பயன் பெறும் பரிசு பாடினார் 6.1.248

2147 இன் இசை வண் தமிழ் பாடி ஏத்தியே
நன்னெடும் பதி உளோர் நயக்க வைகிய
பின்னர் வெண்பிறை அணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந்தாள் வணங்கினார் 6.1.249

2148 ஆங்கணி சொன் மலர் மாலை சாத்தி அப்
பாங்கு பந்தணை நலூர் பணிந்து பாடிப் போய்த்
தீங்கு தீர் மா மறைச் செம்மை அந்தணர்
ஓங்கும் ஓமாம் புலியூர் வந்து உற்றனர் 6.1.250

2149 மற்ற நல் பதி வட தளியின் மேவிய
அற்புதர் அடி பணிந்து அலர்ந்த செந்தமிழ்ச் 6.1.251

சொல் தொடைபாடி அங்கு அகன்று சூழ் மதில்
பொன் பதி வாழ் கொளி புத்தூர் புக்கனர்

2150 சீர் வளர் கோயிலை அணைந்து தேமலர்க்
கார் வளர் கண்டர் தாள் பணிந்து காண்பவர்
பார் புகழ் பதிகங்கள் பாடி நீடுவார்
வார் பொழில் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர் 6.1.252

2151 நம்பரை நலம் திகழ் நாரை ஊரினில்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடி நின்று
எம்பிரான் கவுணியர் தலைவர் ஏத்தினார் 6.1.253

2152 அப்பதி பணிந்து அரும் தமிழ் புனைந்து தம்
மெய்ப்படு விருப்பொடு மேவு நாள் அரன்
பொன் பதி பலவும் முன் பணிந்து போந்தனர்
பைப் பணியவர் கருப் பறியல் ஊரினில் 6.1.254

2153 பரமர் தம் திருக் கருப் பறியல் ஊரினைச்
சிரபுரச் சிறுவர் கை தொழுது செந்தமிழ்
உரை இசை பாடி அம் மருங்கின் உள்ளவாம்
சுரர் தொழும் பதிகளும் தொழுது பாடினார் 6.1.255

2154 மண் உலகு செய்த தவப் பயனாய் உள்ள
வள்ளலார் அப்பதிகள் வணங்கி ஏகி
எணில் முரசு இரங்கி எழப் பணிலம் ஆர்ப்ப
இலங்கிய காளம் சின்னம் எங்கும் ஊதக்
கண் வளர் மென் கரும்பு மிடை கதிர்ச் செம்சாலி
கதலி கமுகு உடன் ஓங்கும் கழனி நாட்டுத்
தெண் நிலவு சூடிய தம் பெருமான் வைகும்
திருப் பிரம புரம் சாரச் செல்லும்போது 6.1.256

2155 பிள்ளையார் எழுந்து அருளக் கேட்ட செல்வப்
பிரமபுரத்து அருமறையோர் பெருகு காதல்
உள்ளம் மகிழ் சிறந்து ஓங்கத் தோணி மேவும்
உமைப் பாகர் கழல் வணங்கி உவகை கூர
வெள்ள மறை ஒலிபெருகு மறுகு தோறும் மிடை
மகர தோரணங்கள் கதலி பூகம்
தெள்ளுபுனல் நிறை குடங்கள் தீப தூபம் செழும்
கொடிகள் நிரைத்து எதிர் கொள் சிறப்பில் செய்வார் 6.1.257

2156 ஆரணங்கள் மதுர ஒலி எழுந்து பொங்க
அரசிலையும் தருப்பையும் பெய்து அணிந்த வாசப்
பூரண கும்பங்கள் நிறை கரகம் ஏந்திப் புது
மலரும் நறும் துகளும் பொரியும் தூவி 6.1.258

வாரணங்கு முலை உமையாள் குழைத்த
செம்பொன் வள்ளத்தில் அமுது உண்ட வள்ளலாரைச்
சீர் அணங்கு மணி முத்தின் சிவிகை மீது
செழுந்தரளக் குடை நிழல் கீழ் சென்று கண்டார்

2157 கண்ட பொழுதே கைகள் தலைமேல் கொண்டு
கண் களிப்ப மனம் களிப்பக் காதல் பொங்கித்
தொண்டர்களும் மறையவரும் சென்று சூழ்ந்து
சொல் இறந்த மகிழ்ச்சியினால் துதித்த ஓசை
எண் திசையும் நிறைவித்தார் ஆடை வீசி
இரு விசும்பின் வெளி தூர்த்தார் ஏறு சீர்த்தி
வண்டமிழ் நாயகரும் இழிந்து எதிரே சென்று
வணங்கி அவருடன் கூடி மகிழ்ந்து புக்கார் 6.1.259

2158 திங்கள் அணி மணிமாடம் மிடைந்த வீதி
சென்று அணைந்து தெய்வ மறைக் கற்பின் மாதர்
மங்கல வாழ்த்து இசை இரண்டு மருங்கு
மல்க வானவர் நாயகர் கோயில் மருங்கு சார்ந்து
துங்க நிலைக் கோபுரத்தை இறைஞ்சி
புக்குச் சூழ்ந்து திருத்தோணி மிசை மேவினார்கள்
தங்கள் திரு முன்பு தாழ்ந்து எழுந்து நின்று
தமிழ் வேதம் பாடினார் தாளம் பெற்றார் 6.1.260

2159 பரவு திருப்பதிக இசை பாடி நீடும்
பரன் கருணைத் திருவருளின் பரிசு போற்றி
விரவு மலர்க் கண் பனிப்பப் கைகள் கூப்பி
விழுந்து எழுந்து புறம் போந்து வேத வாய்மைச்
சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும் போது
திரு நீல கண்ட யாழ்ப்பாணர் பின்னே
வர அவரை வளம் பெருகு மனையில் போக
அருள் செய்து தம் திரு மாளிகையின் வந்தார் 6.1.261

2160 மறையவர்கள் அடி போற்றத் தந்தையாரும்
மருங்கு அணைய மாளிகையில் அணையும்போதில்
நிறை குடமும் மணி விளக்கும் முதலாய் உள்ள
நீதி மறைக் குல மகளிர் நெருங்கி ஏந்த
இறைவர் திரு நீற்றுக் காப்பு ஏந்தி முன் சென்று
ஈன்ற தாயார் சாத்தி இறைஞ்சி ஏத்த
முறைமை அவர்க்கு அருள் செய்து மடத்தில்
புக்கார் முதல்வர் பால் மணி முத்தின் சிவிகை பெற்றார் 6.1.262

2161 செல்வ நெடு மாளிகையில் அமர்ந்து
நாளும் திருத் தோணி மிசையாரைச் சென்று தாழ்ந்து
6.1.263

மல்கு திருப் பதிகங்கள் பலவும் பாடி மனம்
மகிழ்ந்து போற்றி இசைத்து வைகுநாளில்
ஒல்லை முறை உபநயனப் பருவம் எய்த உலகு
இறந்த சிவஞானம் உணரப் பெற்றார்
தொல்லை மறை விதிச் சடங்கு மறையோர் செய்யத்
தோலொடு நூல் தாங்கினார் சுரர்கள் போற்ற

2162 ஒரு பிறப்பும் எய்தாமை உடையார்தம்மை
உலகு இயல்பின் உபநயன முறைமையாகும்
இருபிறப்பின் நிலைமையினைச் சடங்கு காட்டி
எய்துவிக்கும் மறை முனிவர் எதிரே நின்று
வரு திறத்தின் மறை நான்கும் தந்தோம் என்று
மந்திரங்கள் மொழிந்தவர்க்கு மதுர வாக்கால்
பொருவு இறப்ப ஓதினார் புகலி வந்த புண்ணியனார்
எண்ணிறந்த புனித வேதம் 6.1.264

2163 சுருதி ஆயிரம் ஓதி அங்கம் ஆன தொல்
கலைகள் எடுத்து இயம்பும் தோன்றலாரைப்
பரிதி ஆயிரம் கோடி விரிந்தால் என்னப் பரஞ்சோதி
அருள் பெற்ற பான்மை மேன்மை
கருதி ஆதரவோடும் வியப்பு உற்று ஏத்தும் கலை
மறையோர் கவுணியனார் தம்மைக் கண்முன்
வரும் தியானப் பொருள் என்று இறைஞ்சி தாம்
முன் வல்ல மறை கேட்டு ஐயம் தீர்ந்து வாழ்ந்தார் 6.1.265

2164 மந்திரங்கள் ஆன எல்லாம் அருளிச் செய்து
மற்று அவற்றின் வைதிக நூல் சங்கின் வந்த
சிந்தை மயக்குறும் ஐயம் தெளிய எல்லாம் செழு
மறையோர்க்கு அருளி அவர் தெருளும் ஆற்றால்
முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதல் ஆகும் முதல்வனார் எழுத்தஞ்சு என்பார்
அந்தியினுள் மந்திரம் அஞ்சு எழுத்துமே என்று
அஞ்சு எழுத்தின் திருப்பதிகம் அருளிச்செய்தார் 6.1.266

2165 அத்தகைமை பிள்ளையார் அருளிச் செய்ய
அந்தணர்கள் அருள் தலைமேல் கொண்டு தாழ்ந்து
சித்தம்மகிழ்வொடு சிறப்பத் தாமும் தெய்வத்
திருத்தோணி அமர்ந்தாரைச் சென்று தாழ்ந்து
மெய்த்த இசைப் பதிகங்கள் கொண்டு போற்றி
விரை மலர்த்தாள் மனம் கொண்டு மீண்டு போந்து
பத்தர் உடன் இனிது அமரும் பண்பு கூடப் பரமர்
தாள் பணிந்து ஏத்திப் பயிலும் நாளில் 6.1.267

2166 பந்து அணை மெல் விரலாளும் பரமரும் பாய் விடை மீது
வந்து பொன் வள்ளத்து அளித்த வரம்பில் ஞானத்து அமுது உண்ட
செந்தமிழ் ஞான சம்பந்தர் திறம் கேட்டு இறைஞ்சு தற்காக
அந்தணர் பூந்தராய் தன்னில் அணைந்தனர் நாவுக் கரையர் 6.1.268

2167 வாக்கின் பெருவிறல் மன்னர் வந்து அணைந்தார் எனக் கேட்டு
பூக்கமழ் வாசத் தடம் சூழ் புகலிப் பெரும் தகையாரும்
ஆக்கிய நல் வினைப் பேறு என்று அன்பர் குழாத் தொடும் எய்தி
ஏற்கும் பெரு விருப்போடும் எதிர் கொள எய்தும் பொழுதில் 6.1.269

2168 சிந்தை இடை அறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தம் மிகையாம் கருத்தும் கை உழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவில் பொலி திரு நீறும்
அந்தம் இலாத் திரு வேடத்து அரசும் எதிர் வந்து அணைய 6.1.270

2169 கண்ட கவுணியர்க் கன்றும் கருத்தில் பரவு மெய்க் காதல்
தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது என்று தொழுதே
அண்டரும் போற்ற அணைந்த அங்கு அரசும் எதிர் வந்து இறைஞ்ச
மண்டிய ஆர்வம் பெருக மதுர மொழி அருள் செய்தார் 6.1.271

2170 பேர் இசை நாவுக்கு அரசைப் பிள்ளையார் கொண்டு உடன் போந்து
போர் விடையார் திருத்தோணிப் பொன் கோயில் உட்புகும்
போதில்
ஆர்வம் பெருக அணையும் அவருடன் கும்பிட்டு அருளால்
சீர்வளர் தொண்டரைக் கொண்டு திருமாளிகையினில் சேர்ந்தார் 6.1.272

2171 அணையும் திருத்தொண்டர் தம்மோடு ஆண்ட அரசுக்கும்
அன்பால்
இணையில் திரு அமுது ஆக்கி இயல்பால் அமுது செய்வித்துப்
புணரும் பெருகு அன்பு நண்பும் பொங்கிய காதலில் கும்பிட்டு
உணரும் சொல் மாலைகள் சாத்தி உடன் மகிழ்வு எய்தி
உறைந்தார் 6.1.273

2172 அந்நாள் சில நாள்கள் செல்ல அருள் திருநாவுக்கு அரசர்
மின்னார் சடை அண்ணல் எங்கும் மேவிடம் கும்பிட வேண்டி
பொன் மார்பில் முந்நூல் புனைந்த புகலிப் பிரான் இசைவோடும்
பின்னாக எய்த இறைஞ்சிப் பிரியாத நண்பொடும் போந்தார் 6.1.274

2173 வாக்கின் தனி மன்னர் ஏக மாறாத் திரு உளத்தோடும்
பூக்கமழ் பண்ணைகள் சூழ்ந்த புகலியின் மீண்டும் புகுந்து
தேக்கிய மாமறை வெள்ளத் திருத்தோணி வீற்று இருந்தாரைத்
தூக்கின் தமிழ் மாலை பாடித் தொழுது அங்கு உறைகின்ற நாளில் 6.1.275

2174 செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுள்களான் மொழி மாற்றும்
வந்த சொல் சீர் மாலை மாற்றும் வழி மொழி எல்லா மடக்குச்
சந்த வியமகம் ஏகபாதம் தமிழ் இருக்குக் குறள் சாத்தி
6.1.276

எந்தைக்கு எழு கூற்றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு
2175 நாலடி மேல் வைப்பு மேன்மை நடையின் முடுகும் இராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கியமாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத்து உயர் காழியாரைப் பாடினார் ஞான சம்பந்தர் 6.1.277

2175 இன்னிசை பாடின எல்லாம் யாழ்ப் பெரும் பாணனார் தாமும்
2176 மன்னும் இசை வடிவான மதங்க சூளா மணியாரும்
பன்னிய ஏழ் இசை பற்றிப் பாடப் பதிகங்கள் பாடிப்
பொன்னின் திருத்தாளம் பெற்றார் புகலியில் போற்றி இருந்தார் 6.1.278

2177 அங்கண் அமர் கின்ற நாளில் அரும் தமிழ் நாடு எத்தினுள்ளும்
திங்கள் சடை அண்ணலார்தம் திருப்பதி யாவையும் கும்பிட்டு
எங்கும் தமிழ் மாலை பாடி இங்கு எய்துவன் என்று
தம் குலத் தாதையா ரோடும் தவ முனிவர்க்கு அருள் செய்தார் 6.1.279

2178 பெருகு விருப்புடன் நோக்கிப் பெற்ற குலத் தாதையாரும்
அருமையால் உம்மைப் பயந்த அதனால் பிரிந்து உறைவு
ஆற்றேன்
இருமைக்கும் இன்பம் அளிக்கும் யாகமும் யான் செய வேண்டும்
ஒருமையால் இன்னம் சிலநாள் உடன் எய்துவேன் என்று
உரைத்தார் 6.1.280

2179 ஆண்டகையாரும் இசைந்து அங்கு அம்பொன் திருத்தேணி
மேவும்
நீண்ட சடையார் அடிக்கீழ் பணி உற்று நீடு அருள் பெற்றே
ஈண்டு புகழ்த் தாதையார் பின் எய்திட யாழ்ப்பாணரோடும்
காண் தகு காழி தொழுது காதலினால் புறம் போந்தார் 6.1.281

2180 அத்திரு மூதூரின் உள்ளார் அமர்ந்து உடன்போதுவார் போத
மெய்த்தவர் அந்தணர் நீங்கா விடை கொண்டு மீள்வார்கள் மீள
முத்தின் சிவிகை மேல் கொண்டு மொய் ஒளித் தாமம் நிரத்த
நித்தில வெண்குடை மீது நிறை மதி போல நிழற்ற 6.1.282

2181 சின்னம் தனிக் காளம் தாரை சிரபுரத்து ஆண்டகை வந்தார்
என்னும் தகைமை விளங்க ஏற்ற திருப் பெயர் சாற்ற
முன் எம்மருங்கும் நிரத்த முரசு உடைப் பல்லியம் ஆர்ப்ப
மன்னும் திருத்தொண்டனார் வந்து எதிர் கொண்டு வணங்க 6.1.283

2182 சங்க நாதங்கள் ஒலிப்பத் தழங்கு பொன் கோடு முழங்க
மங்கல வாழ்த்து உரை எங்கும் மல்க மறை முன் இயம்பத்
திங்களும் பாம்பும் அணிந்தார் திருப்பதி எங்கும் முன் சென்று
பொங்கிய காதலில் போற்றப் புகலிக் கவுணியர் போந்தார் 6.1.284

2183 திருமறைச் சபையர் ஆளி சிவனார் திருக்கண்ணார் கோயில்
பெரு விருப்பால் அணைந்து ஏத்திப் பிஞ்ஞகர் கோயில் பிறவும் 6.1.285

உருகிய அன்பால் இறைஞ்சி உயர் தமிழ் மாலை கொண்டு ஏத்தி
வரு புனல் பொன்னி வடபால் குட திசை நோக்கி வருவார்

2184 போற்றிய காதல் பெருக புள்ளிருக்கும் திருவேளூர்
நால் தடம் தோளுடை மூன்று நயனப் பிரான் கோயில் நண்ணி
ஏற்ற அன்பு எய்த வணங்கி இருவர் புள் வேந்தர் இறைஞ்சி
ஆற்றிய பூசனை சாற்றி அஞ்சொற் பதிகம் அணிந்தார் 6.1.286

2185 நீடு திரு நின்றி ஊரின் நிமலனார் நீள் கழல் ஏத்திக்
கூடிய காதலில் போற்றிக் கும்பிட்டு வண் தமிழ் கூறி
நாடு சீர் நீடூர் வணங்கி நம்பர் திருப் புன்கூர் நண்ணி
ஆடிய பாதம் இறைஞ்சி அரும் தமிழ் பாடி அமர்ந்தார் 6.1.287

2186 அங்கு நின்று ஏகி அப்பாங்கில் அரனார் மகிழ் கோயில் ஆன
எங்கணும் சென்று பணிந்தே ஏத்தி இமவான் மடந்தை
பங்கர் உறை பழ மண்ணிப் படிக்கரைக் கோயில் வணங்கித்
தங்கு தமிழ் மாலை சாத்தித் திருக்குறுக்கைப் பதி சார்ந்தார் 6.1.288

2187 திருக்குறுக்கைப் பதி மன்னித் திரு வீரட்டானத்து அமர்ந்த
பொருப்புவில்லாளரை ஏத்திப் போந்து அன்னியூர் சென்று
போற்றிப்
பருக்கை வரை உரித்தார் தம் பந்தண நல்லூர் பணிந்து
விருப்புடன் பாடல் இசைந்தார் வேதம் தமிழால் விரித்தார் 6.1.289

2188 அப்பதி போற்றி அகல்வார் அரனார் திருமணம் சேரி
செப்பரும் சீர்த் தொண்டரோடும் சென்று தொழுது இசை பாடி
எப்பொருளும் தரும் ஈசர் எதிர் கொள் பாடிப் பதி எய்தி
ஒப்பில் பதிகங்கள் பாடி ஓங்கு வேள்விக் குடி உற்றார் 6.1.290

2189 செழுந்திரு வேள்விக் குடியில் திகழ் மணவாள நற்கோலம்
பொழிந்த புனல் பொன்னி மேவும் புனிதத் துருத்தி இரவில்
தழும்பிய தன்னைமையும் கூடத் தண் தமிழ் மாலையில் பாடிக்
கொழுந்து வெண் திங்கள் அணிந்தார் கோடிக் காவிற்
சென்றடைந்தார் 6.1.291

2190 திருக்கோடி காவில் அமர்ந்த தேவர் சிகாமணி தன்னை
எருக்கோடு இதழியும் பாம்பும் இசைந்து அணிந்தானை
வெள்ளேனப்
பருக்கோடு பூண்ட பிரானைப் பணிந்து சொல் மாலைகள் பாடிக்
கருக்கோடி நீப்பார்கள் சேரும் கஞ்சனூர் கை தொழச் சென்றார் 6.1.292

2191 கஞ்சனூர் ஆண்ட தம் கோவைக் கண் உற்று இறைஞ்சி முன்
போந்து
மஞ்சணி மாமதில் சூழும் மாந்துறை வந்து வணங்கி
அஞ்சொல் தமிழ் மாலை சாத்தி அங்கு அகன்று அன்பர்
முன்னாகச்
6.1.293

செஞ்சடை வேதியர் மன்னும் திருமங்கலக் குடி சேர்ந்தார்

2192 வெங் கண் விடை மேல் வருவார் வியலூர் அடிகளைப் போற்றித்
தங்கிய இன்னிசை கூடும் தமிழ்ப் பதிகத் தொடை சாத்தி
அங்கண் அமர்வார் தம் முன்னே அருள் வேடம் காட்டத் தொழுது
செங்கண் மாலுக்கு அரியார் தந்திருந்து தேவன் குடி சேர்ந்தார் 6.1.294

2193 திருந்து தேவன் குடி மன்னும் சிவ பெருமான் கோயில் எய்திப்
பொருந்திய காதலில் புக்குப் போற்றி வணங்கிப் புரிவார்
மருந்தொடு மந்திரம் ஆகி மற்றும் இவர் வேடமாம் என்று
அருந்தமிழ் மாலை புனைந்தார் அளவில் ஞானத்து அமுது
உண்டார் 6.1.295

2194 மொய் திகழ் சோலை அம் மூதூர் முன் அகன்று அந் நெறி
செல்வார்
செய் தரு சாலி கரும்பு தெங்கு பைம் பூகத்து இடை போய்
மை திகழ் கண்டர் தம் கோயில் மருங்கு உள்ள எல்லாம் வணங்கி
எய்தினர் ஞானசம்பந்தர் இன்னம்பர் ஈசர்தம் கோயில் 6.1.296

2195 இன்னம்பர் மன்னும் பிரானை இறைஞ்சி இடை மடக்கான
பன்னும் தமிழ்த் தொடை மாலைப் பாடல் புனைந்து பரவி
பொன்னங் கழல் இணை போற்றிப் புறம் போந்து அணைந்து
புகுந்தார்
மன்னும் தடம் கரைப் பொன்னி வட குரங்காடுதுறையில் 6.1.297

2196 வட குரங்காடுதுறையில் வாலியார் தாம் வழிபட்ட
அடைவும் திருப்பதிகத்தில் அறிய சிறப்பித்து அருளிப்
புடை கொண்டு இறைஞ்சினர் போந்து புறத்துள்ள தானங்கள்
போற்றி
படை கொண்ட மூவிலை வேலர் பழனம் திருப்பதி சார்ந்தார் 6.1.298

2197 பழனத்து மேவிய முக்கண் பரமேட்டியார் பயில் கோயில்
உழைபுக்கு இறைஞ்சி நின்று ஏத்தி உருகிய சிந்தையர் ஆகி
விழை சொல் பதிகம் விளம்பி விருப்புடன் மேவி அகல்வார்
அழனக்க பங்கய வாவி ஐயாறு சென்று அடைகின்றார் 6.1.299

2198 மாட நிரை மணி வீதித் திருவையாற்றினில் வாழும் மல்கு
தொண்டர்
நாடு உய்யப் புகலிவரு ஞான போனகர் வந்து நண்ணினார் என்று
ஆடலொடு பாடல் அறா அணி மூதூர் அடைய அலங்காரம் செய்து
நீடு மனக் களிப்பினொடும் எதிர் கொள்ள நித்தில யானத்து நீங்கி 6.1.300

2199 வந்து அணைந்த திருத்தொண்டர் மருங்கு வர மான் ஏந்து கையர்
தம்பால்
நந்தி திரு அருள் பெற்ற நல் நகரை முன் இறைஞ்சி நண்ணும்
போதில் 6.1.301

ஐந்து புலன் நிலை கலங்கும் இடத்து அஞ்சேல் என்பார் தம்
ஐயாறு என்று
புந்தி நிறை செந்தமிழின் சந்த இசை போற்றி இசைத்தார் புகலி
வேந்தர்

2200 மணி வீதி இடம் கடந்து மால் அயனுக்கு அரிய பிரான் மன்னும்
கோயில்
அணி நீடு கோபுரத்தை அணைந்து இறைஞ்சி உள் எய்தி அளவில்
காதல்
தணியாத கருத்தின் ஓடும் தம்பெருமான் கோயில் வலம்
கொண்டு தாழ்ந்து
பணி சூடும் அவர் முன்பு பணிந்து வீழ்ந்து எழுந்து அன்பால்
பரவுகின்றார் 6.1.302

2201 கோடல் கோங்கம் குளி கூவிளம் என்னும் திருப்பதிகக் குலவு
மாலை
நீடு பெரும் திருக்கூத்து நிறைந்த திரு உள்ளத்து நிலைமை
தோன்ற
ஆடுமாறு அது வல்லான் ஐயாற்று எம் ஐயனே என்று நின்று
பாடினார் ஆடினார் பண்பினொடும் கண் பொழி நீர் பரந்து பாய 6.1.303

2202 பல முறையும் பணிந்து எழுந்து புறம்
போந்து பரவு திருத் தொண்டரோடு
நிலவு திருப்பதி அதன் கண் நிகழும்
நாள் நிகர் இலா நெடுநீர்க் கங்கை
அலையும் மதி முடியார் தம் பெரும்புலியூர்
முதலான அணைந்து போற்றிக்
குலவு தமிழ்த் தொடை புனைந்து மீண்டு
அணைந்து பெருகு ஆர்வம் கூரு நாளில் 6.1.304

2203 குடதிசை மேல் போவதற்குக் கும்பிட்டு
அங்கு அருள் பெற்றுக் குறிப்பின் ஓடும்
படரும் நெறி மேல் அணைவார் பரமர்
திருநெய்த்தானப் பதியில் நண்ணி
அடையும் மனம் உற வணங்கி அரும் தமிழ்
மாலைகள் பாடி அங்கு நின்றும்
புடைவளர் மென் கரும்பினொடு பூகம்
இடை மழபாடி போற்றச் சென்றார் 6.1.305

2204 செங்கை மான்மறியார் தம் திருமழபாடிப்
புறத்துச் சேரச் செல்வார்
அங்கையார் அழல் என்னும் திருப்பதிகம்
எடுத்து அருளி அணைந்த போழ்தில்

6.1.306

மங்கை வாழ் பாகத்தார் மழபாடி தலையினால்
வணங்குவார்கள்
பொங்கு மா தவம் உடையார் எனத் தொழுது
போற்றி இசைத்தே கோயில் புக்கார்

2205 மழபாடி வயிர மணித் தூண் அமர்ந்து மகிழ்
கோயில் வலம் கொண்டு எய்தி
செழுவாச மலர்க் கமலச் சேவடிக் கீழ்ச் சென்று
தாழ்ந்து எழுந்து நின்று
தொழுது ஆடிப் பாடி நறும் சொல் மாலைத்
தொடை அணிந்து துதித்துப் போந்தே
ஒழியாத நேசம் உடன் உடையவரைக் கும்பிட்டு
அங்கு உறைந்தார் சின்னாள் 6.1.307

2206 அதன் மருங்கு கடந்து அருளால்
திருக்கானூர் பணிந்து ஏத்தி ஆன்ற சைவ
முதன் மறையோர் அன்பிலாந் துறையின்
முன்னவனைத் தொழுது போற்றிப்
பதம் நிறை செந்தமிழ் பாடிச் சடைமுடியார்
பயில் பதியும் பணிந்து பாடி
மத கரட வரை உரித்தார் வட கரை மாந்துறை
அணைந்தார் மணி நூல் மார்பர் 6.1.308

2207 சென்று திரு மாந்துறையில் திகழ்ந்து
உறையும் துறை நதி வாழ் சென்னியார் தம்
முன்றில் பணிந்து அணி நெடு மாளிகை
வலம் செய்து உள்புக்கு முன்பு தாழ்ந்து
துன்று கதிர்ப் பரிதிமதி மருந்துக்கள்
தொழுது வழிபாடு செய்ய
நின்ற நிலை சிறப்பித்து நிறை தமிழில்
சொல் மாலை நிகழப் பாடி 6.1.309

2208 அங்கண் அகன்று அம் மருங்கில்
அங்கணர் தம் பதி பிறவும் அணைந்து போற்றிச்
செங்கமலப் பொதி அவிழச் சேல் பாயும்
வயல் மதுவால் சேறு மாறாப்
பொங்கு ஒலி நீர் மழ நாட்டுப் பொன்னி வட
கரை மிசைப் போய்ப் புகலி வேந்தர்
நங்கள் பிரான் திருப்பாச்சிலாச்சிரமம்
பணிய நண்ணும் போதில் 6.1.310

2209 அந் நகரில் கொல்லி மழவன் பயந்த
அரும் பெறல் ஆர் அமுத மென் சொல்
6.1.311

கன்னி இள மடப்பிணையாம் காமரு
கோமளக் கொழுந்தின் கதிர் செய் மேனி
மன்னு பெரும் பிணியாகும் முயலகன்
வந்து அணைவுற மெய் வருத்தம் எய்தித்
தன்னுடைய பெரும் சுற்றம் புலம்பு எய்தத்
தானும் மனம் தளர்வு கொள்வான்

2210 மற்று வேறு ஒருபரிசால் தவிராமை
மறி வளரும் கையார் பாதம்
பற்றியே வரும் குலத்துப் பான்மையினான்
ஆதலினால் பரிவு தீரப்
பொன் தொடியைக் கொடு வந்து போர்
கோலச் சேவகராய் புரங்கள் மூன்றும்
செற்றவர் தம் கோயில் உட் கொடு புகுந்து
திரு முன்பே இட்டு வைத்தான் 6.1.312

2211 அவ்வளவில் ஆளுடைய பிள்ளையார்
எழுந்து அருளி அணுக எய்தச்
செவ்விய மெய்ஞ் ஞானம் உணர் திருஞான
சம்பந்தன் வந்தான் என்றே
எவ் உலகும் துயர் நீங்கப் பணி மாறும்
தனிக் காளத்து எழுந்த ஓசை
எவ் உயிர்க்கும் அவன் கேளா மெல்
இயலை விட்டு எதிரே விரைந்து செல்வான் 6.1.313

2212 மா நகரம் அலங்கரிமின் மகர
தோரணம் நாட்டும் மணி நீர் வாசத்
தூ நறும் பூரண கும்பம் சோதி மணி
விளக்கினொடு தூபம் ஏந்தும்
ஏனை அணி பிறவும் எலாம் எழில் பெருக
இயற்றும் என ஏவித் தானும்
வானவர் நாயகர் மகனார் வருமுன்பு
தொழுது அணைந்தான் மழவர் கோமான் 6.1.314

2213 பிள்ளையார் எழுந்தருளப் பெற்றேன்
என்று ஆனந்தம் பெருகு காதல்
வெள்ளம் நீர் கண் பொழியத் திருமுத்தின்
சிவிகையின் முன் வீழ்ந்த போது
வள்ளலார் எழுக என மலர்வித்த
திருவாக்கால் மலர்க்கை சென்னி
கொள்ள மகிழ்ந்து உடன் சென்று குலப்பதியின்
மணிவீதி கொண்டு புக்கான் 6.1.315

2214 மங்க தூரியம் முழங்கும் மணி வீதி
கடந்து மதிச் சடையார் கோயில்
பொங்கு சுடர்க் கோபுரத்துக்கு அணித்து
ஆக புனை முத்தின் சிவிகை நின்றும்
அங்கண் இழிந்து அருளும் முறை இழிந்து
அருளி அணிவாயில் பணிந்து புக்கு
தங்கள் பிரான் கோயில் வலம் கொண்டு
திருமுன் வணங்கச் சாரும் காலை 6.1.316

2215 கன்னி இளம் கொடி உணர்வு கழிந்து
நிலம் சேர்ந்து அதனைக் கண்டு நோக்கி
என் இது என்று அருள் செய்ய மழவன்தான்
எதிர் இறைஞ்சி அடியேன் பெற்ற
பொன் இவளை முயலகனாம் பொருவில்
அரும்பிணி பொருந்தப் புனிதர் கோயில்
முன் அணையக் கொணர்வித்தேன் இது
புகுந்தபடி என்று மொழிந்து நின்றான் 6.1.317

2216 அணிகிளர் தார் அவன் சொன்ன
மாற்றம் அருளொடும் கேட்டு அந் நிலையின் நின்றே
பணி வளர் செஞ்சடைப் பாச்சின் மேய
பரம் பொருள் ஆயினாரைப் பணிந்து
மணி வளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பது என்று
தணிவில் பிணி தவிர்க்கும் பதிகத்
தண்தமிழ் பாடினார் சண்பை நாதர் 6.1.318

2217 பன்னு தமிழ் மறையாம் பதிகம் பாடி
திருக்கடைக் காப்புச் சாத்தி
மன்னும் கவுணியர் போற்றி நிற்க மழவன்
பயந்த மழலை மென் சொல்
கன்னி உறு பிணி விட்டு நீங்கக் கதும் எனப்
பார் மிசை நின்று எழுந்து
பொன்னின் கொடி என ஒல்கிவந்து
பெருவலித் தாதை புடை அணைந்தாள் 6.1.319

2218 வன்பிணி நீங்கு மகளைக் கண்ட
மழவன் பெரு மகிழ்ச்சி பொங்கக்
தன்தனிப் பாவையும் தானும் கூடச்
சண்பையர் காவலர் தாளில் வீழ
நின்ற அருமறைப் பிள்ளையாரும் நீர்
அணிவேணி நிமலர் பாதம்
ஒன்றிய சிந்தை உடன் பணிந்தார் உம்பர் 6.1.320

பிரான் திருத்தொண்டர் ஆர்த்தார்

2219 நீடு திரு வாச்சிரமம் மன்னும் நேரிழை
பாகத்தர் தாள் வணங்கிக்
கூடும் அருளுடன் அங்கு அமர்ந்து கும்பிடும்
கொள்கை மேற்கொண்டு போந்தே
ஆடல் பயின்றார் பதிபிறவும் அணைந்து
பணிந்து அடிபோற்றி ஏகிச்
சேடர்கள் வாழும் திருப்பைஞ்ஞீலிச்
சிவபெருமானை இறைஞ்சச் சென்றார் 6.1.321

2220 பண்பயில் வண்டு இனம்பாடும் சோலைப்
பைஞ்ஞீலி வாணர் கழல் பணிந்து
மண் பரவும் தமிழ் மாலை பாடி வைகி
வணங்கி மகிழ்ந்து போந்து
திண்பெரும் தெய்வக் கயிலையில் வாழ் சிவனார்
பதி பல சென்று இறைஞ்சிச்
சண்பை வளம் தரும் நாடர் வந்து தடம்
திரு ஈகோய் மலையைச் சார்ந்தார் 6.1.322

2221 செங்கண் குறவரைத் தேவர் போற்றும்
திகழ் திரு ஈங்கோய் மலையில் மேவும்
கங்கை சடையார் கழல் பணிந்து கலந்த
இசைப் பதிகம் புனைந்து
பொங்கர்ப் பொழில் சூழ் மலையும் மற்றும்
புறத்துள்ள தானங்கள் எல்லாம் போற்றிக்
கொங்கில் குட புலம் சென்று அணைந்தார்
கோதில் மெய்ஞ்ஞான கொழுந்து அனையார் 6.1.323

2222 அண்டர் பிரான் ஆலயங்கள் அம்மருங்கு உள்ளன பணிந்து
தெண்திரை நீர்த் தடம் பொன்னித் தென் கரையாம் கொங்கின் இடை
வண்டு அலையும் புனல் சடையார் மகிழ் இடங்கள் தொழுது அணைந்தார்
கொண்டல் பயில் நெடும் புரிசை கொடி மாடச் செங்குன்றூர் 6.1.324

2223 அந் நகரில் வாழ்வாரும் அடியவரும் மனம் மகிழ்ந்து
பன்னெடுந்தோரணமுதலாப் பயில் அணிகள் பல அமைத்து
முன் உறவந்து எதிர் கொண்டு பணிந்து ஏத்திமொய் கரங்கள்
சென்னியுறக் கொண்டு அணைந்தார் சினவிடையார்
செழுங்கோயில் 6.1.325

2224 தம் பெருமான் கோயிலினுள் எழுந்து அருளித் தமிழ் விரகர்
நம்பரவர் திரு முன்பு தாழ்ந்து எழுந்து நலம் சிறக்க
6.1.326

இம்பரும் உம்பரும் ஏத்த இன்னிசை வண் தமிழ் பாடிக்
கும்பிடும் ஆதரவு உடன் அக் கோ நகரில் இனிது அமர்ந்தார்

2225 அப்பாலைக் குட புலத்தில் ஆறணிந்தார் அமர் கோயில்
எப்பாலும் சென்று ஏத்தித் திரு நணாவினை இறைஞ்சிப்
பைப் பாந்தள் புணைந்த வரைப் பரவிப் பண்டு அமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்து அணைந்து வைகினார் 6.1.327

2226 ஆங்கு உடைய பிள்ளையார் அமர்ந்து உறையும் நாளின்கண்
தூங்கு துளி முகில் குலங்கள் சுரந்து பெயல் ஒழிகாலை
வீங்கு ஒலி நீர் வைப்பு எல்லாம் வெயில் பெறா விருப்பு வரப்
பாங்கர் வரையும் குளிரும் பனிப் பருவம் எய்தியதால் 6.1.328

2227 அளிக்குலங்கள் சுளித்து அகல அரவிந்தம் முகம் புலரப்
பளிங்கு மணி மரகத வல்லியில் கோத்த பான்மை எனத்
துளித் தலைமேல் அறுகு பனி தொடுத்து அசையச் சூழ் பனியால்
குளிர்க் குடைந்து வெண் படாம் போர்த்து அனைய குன்றுகளும் 6.1.329

2228 மொய் பனி கூர் குளிர் வாடை முழுது உலவும் பொழுதேயாய்க்
கொய் தளிர் மென் சோலைகளும் குலைந்து அசைய குளிர்க்கு
ஒதுங்கி
வெய்யவனும் கரம் நிமிர்க்க மாட்டான் போல் விசும்பின் இடை
ஐது வெயில் விரிப்பதுவும் அடங்குவதும் ஆகுமால். 6.1.330

2229 நீடிய அப் பதிகள் எலாம் நிறை மாடத் திறைகள் தொறும்
பேடையுடன் பவளக்கால் புறவு ஒடுங்கப் பித்திகையின்
தோடு அலர் மென் குழல் மடவார் துணைக் கலச வெம்
முலையுள்
ஆடவர் தம் பணைத்தோளும் மணி மார்பும் அடங்குவன 6.1.331

2230 அரிசனமும் குங்குமமும் அரைத்து அமைப்பார் அயல் எல்லாம்
பரிய அகில் குறை பிளந்து புகைப்பார்கள் பாங்கு எல்லாம்
எரி உமிழ் பேழ் வாய்த் தோணி இரும்பு ஈர்ப்பார் இடை எல்லாம்
விரி மலர் மென் புறவு அணிந்த மீப்புலத்து வைப்பு எல்லாம் 6.1.332

2231 அந்நாளில் கொடி மாடச் செங் குன்றூர் அமர்ந்து இருந்த
மெய்ஞ்ஞானப் பிள்ளையாருடன் மேவும் பரிசனங்கள்
பன்னாளும் அந்நாட்டில் பயின்ற அதனால் பனித்த குளிர்
முன் ஆன பிணி வந்து மூள்வது போல் முடுகுதலும் 6.1.333

2232 அந்நிலைமை ஆளுடைய பிள்ளையார்க்கு அவர்கள் எல்லாம்
முன் அறிவித்து இறைஞ்சுதலும் முதல்வனார் அருள் தொழுதே
இந்நிலத்தின் இயல்பு எனினும் நமக்கு எய்தப் பெறு என்று
சென்னி மதி அணிந்தாரைத் திருப்பதிகம் பாடுவார் 6.1.334

2233 அவ்வினைக்கு இவ்வினை என்று எடுத்து ஐயர் அமுது செய்த
வெவ்விடம் முன் தடுத்து எம் இடர் நீக்கிய வெற்றியினால் 6.1.335

எவ்விடத்தும் அடியார் இடர் காப்பது கண்டம் என்றே
செய்வினைத் தீண்டா திரு நீல கண்டம் எனச் செப்பினார்

2234 ஆய குறிப்பினில் ஆணை நிகழ அருளிச் செய்து
தூய பதிகத் திருக் கடைக் காப்புத் தொடுத்து அணிய
மேய அப்பொன்பதி வாழ்பவர்க்கே அன்றி மேவும் அந்நாள்
தீய பனிப் பிணி அந்நாட்டு அடங்கவும் தீர்ந்தது அன்றே 6.1.336

2235 அப்பதியின் கண் அமர்ந்து சில நாளில் அங்கு அகன்று
துப்புறழ் வேணியர் தானம் பலவும் தொழுது அருளி
முப்புரி நூலுடன் தோல் அணி மார்பர் முனிவரொடும்
செப்பரும் சீர்த் திருப்பாண்டிக் கொடுமுடி சென்று அணைந்தார் 6.1.337

2236 பருவம் அருப் பொன்னிப் பாண்டிக் கொடு முடியார் தம்பாதம்
மருவி வணங்கி வளத் தமிழ் மாலை மகிழ்ந்து சாத்தி
விரி சுடர் மாளிகை வெஞ்ச மாக் கூடல் விடையவர் தம்
பெருவில் தானம் பல போற்றிக் குணதிசைப் போதுகின்றார் 6.1.338

2237 செல்வக் கருவூர்த் திருவானிலைக் கோயில் சென்று இறைஞ்சி
நல் இசை வண் தமிழ்ச் சொல் தொடை பாடி அந்நாடு அகன்று
மல்கிய மாணிக்க வெற்பு முதலா வணங்கி வந்து
மல்கு திரைப் பொன்னித் தென் கரைத் தானம் பல பணிவார் 6.1.339

2238 பன்னெடும் குன்றும் படர் பெரும் கானும் பல பதியும்
அந் நிலைத் தானங்கள் ஆயின எல்லாம் அமர்ந்து இறைஞ்சி
மன்னு புகலியில் வைதிக வாய்மை மறையவனார்
பொன் இயல் வேணிப் புனிதர் பராய்த் துறையுள் புகுந்தார் 6.1.340

2239 நீடும் பராயத் துறை நெற்றித் தனிக் கண்ணர் கோயில் நண்ணிக்
கூடும் கருத்தொடு கும்பிட்டுக் கோதில் தமிழ்ச் சொல் மாலை
பாடும் கவுணியர் கண்பனி மாரி பரந்து இழியச்
சூடும் கரதலத்து அஞ்சலி கோலித் தொழுது நின்றார் 6.1.341

2240 தொழுது புறம்பு அணைந்து அங்கு நின்று ஏகிச் சுரர் பணிவு உற்று
எழு திரு ஆலந்துறை திருச்செந்துறையே முதலா
வழுவில் பல் கோயில்கள் சென்று வணங்கி மகிழ்ந்து அணைவார்
செழு மலர்ச் சோலைத் திருக் கற்குடி மலை சேர வந்தார் 6.1.342

2241 கற்குடி மாமலை மேல் எழுந்த கனகக்
கொழுந்தினைக் கால் வளையப்
பொன் திரள் மேருச் சிலை வளைத்த
போர் விடையாளியைப் போற்றி இசைத்து
நற்றமிழ் மாலை புனைந்து அருளி ஞான
சம்பந்தர் புலன்கள் ஐந்தும்
செற்றமிழ் மூக்கீச்சரம் பணிந்து
திருச்சிராப் பள்ளிச் சிலம்பு அணைந்தார் 6.1.343

2242 செம்மணி வாரி அருவி தூங்கும்
சிராப் பள்ளி மேய செழும் சுடரை
கைம் மலை ஈருரி போர்வை சாத்தும் கண்
நுதலாரைக் கழல் பணிந்து
மெய்ம் மகிழ்வு எய்தி உளம் குளிர விளங்கிய
சொல் தமிழ் மாலை வேய்ந்து
மைம் மலர் கண்டர் தம் ஆனைக் காவை
வணங்கும் விருப்பொடு வந்து அணைந்தார் 6.1.344

2243 விண்ணவர் போற்றி செய் ஆனைக்
காவில் வெண் நாவல் மேவிய மெய்ப் பொருளை
நண்ணி இறைஞ்சி முன் வீழ்ந்து எழுந்து
நால் கோட்டு நாகம் பணிந்ததுவும்
அண்ணல் கோச் செங்கண் அரசன்செய்த
அடிமையும் அஞ்சொல் தொடையில் வைத்துப்
பண் உறு செந்தமிழ் மாலைப் பாடி பரவி
நின்று ஏத்தினர் பான்மையினால் 6.1.345

2244 நாரணன் நான்முகன் காணா உண்மை
வெண் நாவல் உண்மை மயேந்திரமும்
சீரணி நீடு திருக்கயிலை செல்வத்
திருவாரூர் மேய பண்பும்
ஆரணத்து உட் பொருள் ஆயினாரை
ஆனைக் காவின் கண் புகழ்ந்து பாடி
ஏர் அணியும் பொழில் சூழ்ந்த சண்பை
ஏந்தலார் எல்லை இல் இன்பம் உற்றார் 6.1.346

2245 கை தொழுது ஏத்திப் புறத்து அணைந்து
காமர் பதி அதன் கண் சில நாள்
வைகி வணங்கி மகிழ்ந்து அணைவார்
மன்னும் தவத்துறை வானவர் தாள்
எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே இன்
தமிழ் மாலை கொண்டு ஏத்திப் போந்து
வைதிக மாமணி அம்மருங்கு மற்று உள்ள
தானம் வழுத்திச் செல்வார் 6.1.347

2246 ஏறு உயர்த்தார் திருப்பாற்றுறையும்
எறும்பியூர் மாமலையே முதலா
வேறு பதிகள் பலவும் போற்றி விரவும்
திருத்தொண்டர் வந்து சூழ
ஈறில் புகழ்ச் சண்பை ஆளியார் தாம் எண்
திசையோரும் தொழுது இறைஞ்ச
நீறணி செம்பவளப் பொருப்பின் நெடுங்கள 6.1.348

மா நகர் சென்று சேர்ந்தார்

2247 நெடுங்களத்து ஆதியை அன்பால்
நின்பால் நெஞ்சம் செலாவகை நேர் விலக்கும்
இடும்பைகள் தீர்த்து அருள் செய்வாய் என்றும்
இன் இசை மாலை கொண்டு ஏத்தி ஏகி
அடும் பணிச் செஞ்சடையார் பதிகள்
அணைந்து பணிந்து நியமம் போற்றிக்
கடும் கைவரை உரித்தார் மகிழ்ந்த காட்டுப்
பள்ளிப்பதி கை தொழுவார் 6.1.349

2248 சென்று திகழ் திருக்காட்டு பள்ளிச்
செம் சடை நம்பர் தம் கோயில் எய்தி
முன்றில் வலம் கொண்டு இறைஞ்சி வீழ்ந்து
மொய் கழல் சேவடி கை தொழுவார்
கன்று அணை ஆவின் கருத்து வாய்ப்பக் கண்
நுதலாரை முன் போற்றி செய்து
மன்றுள் நின்று ஆடல் மனத்துள் வைப்பார்
வாரு மன்னும் முலை பாடி வாழ்ந்தார் 6.1.350

2249 அங்கு அப்பதி நின்று எழுந்தருளி
அணிந்திரு வாலம் பொழில் வணங்கி
பொங்கு புனல் பொன்னிப் பூந்துருத்தி பொய்
இலியாரைப் பணிந்து போற்றி
எங்கும் நிகழ் திருத் தொண்டர் குழாம் எதிர்
கொள்ள எப்பதியும் தொழுது
செங்கயல் பாய் வயல் ஓடை சூழ்ந்த திருக்
கண்டியூர் தொழச் சென்று அணைந்தார் 6.1.351

2250 கண்டியூர் வீரட்டர் கோயில் எய்திக் கலந்து
அடியாருடன் காதல் பொங்கக்
கொண்ட விருப்புடன் தாழ்ந்து இறைஞ்சிக் குலவு
மகிழ்ச்சியின் கொள்கையினால்
தொண்டர் குழாத்தினை நோக்கி நின்று தொடுத்த
இசைத்தமிழ் மாலை தன்னில்
அண்டர் பிரான் தன் அருளின் வண்ணம் அடியார்
பெருமையில் கேட்டு அருளி 6.1.352

2251 வினவி எடுத்த திருப் பதிகம் மேவு
திருக்கடைக் காப்பு தன்னில்
அனைய நினைவு அரியேன் செயலை
அடியாரைக் கேட்டு மகிழ்ந்த தன்மை
புனைவுறு பாடலில் போற்றி செய்து
6.1.353

போந்து புகலிக் கவுணியனார்
துனை புனல் பொன்னித் திரை வலம் கொள்
சோற்றுத் துறை தொழச் சென்று அடைவார்

2252 . அப்பர் சோற்றுத் துறை சென்று அடைவோம் என்று
ஒப்பில் வண் தமிழ் மாலை ஒருமையால்
செப்பியே சென்று சேர்ந்தனர் சேர்விலார்
முப்புரம் செற்ற முன்னவர் கோயில் முன் 6.1.354

2253 தொல்லை நீள் திருச் சோற்றுத் துறை உறை
செல்வர் கோயில் வலம் கொண்டு தேவர்கள்
அல்லல் தீர்க்க நஞ்சு உண்ட பிரான் அடி
எல்லையில் அன்பு கூர இறைஞ்சினார் 6.1.355

2254 இறைஞ்சி ஏத்தி எழுந்து நின்று இன் இசை
நிறைந்த செந்தமிழ் பாடி நிலாவி அங்கு
உறைந்து வந்து அடியாருடன் எய்தினார்
சிறந்த சீர்த் திரு வேதிக் குடியினில் 6.1.356

2255 வேத வேதியர் வேதி குடியினில்
நாதர் கோயில் அணைந்து நலம் திகழ்
பாத பங்கயம் போற்றிப் பணிந்து எழுந்து
ஓதினார் தமிழ் வேதத்தின் ஓங்கு இசை 6.1.357

2256 எழுது மா மறையாம் பதிகத்து இசை
முழுதும் பாடி முதல்வரைப் போற்றி முன்
தொழுது போந்து வந்து எய்தினார் சோலை சூழ்
பழுதில் சீர்த்திரு வெண்ணிப் பதியினில் 6.1.358

2257 வெண்ணி மேய விடையவர் கோயிலை
நண்ணி நாடிய காதலின் நாண் மதிக்
கண்ணியார் தம் கழல் இணை போற்றியே
பண்ணில் நீடும் பதிக முன் பாடினார் 6.1.359

2258 பாடி நின்று பரவிப் பணிந்து போய்
ஆடும் அங்கணர் கோயில் அங்கு உள்ளன
மாடு சென்று வணங்கி மகிழ்ந்தனர்
நீடு சண்பை நிறை புகழ் வேதியர் 6.1.360

2259 மொய் தரும் சோலை சூழ் முளரி முள்ளடவி போய்
மெய் தரும் பரிவிலான் வேள்வியைப் பாழபடச்
செய்த சங்கரர் திருச்சக்கரப் பள்ளி முன்
பெய்தவம் அருளினார் இயல் இசைத் தலைவனார் 6.1.361

2260 சக்கரப் பள்ளியார் தம் திருக் கோயில் உள்
புக்கு அருத்தியின் உடன் புனை மலர்த் தாள் பணிந்து
அக்கரைப் பரமர்பால் அன்பு உறும் பரிவு கூர் 6.1.362

மிக்க சொல் தமிழினால் வேதமும் பாடினார்

2261 தலைவர் தம் சக்கரப் பள்ளி தன் இடை அகன்று
அலைபுனல் பணைகளின் அருகு போய் அருமறைப்
புலன் உறும் சிந்தையார் புள்ள மங்கைப் பதி
குலவும் ஆலந்துறைக் கோயிலைக் குறுகினார் 6.1.363

2262 மன்னும் அக் கோயில் சேர் மான் மறிக் கையர்தம்
பொன் அடித்தலம் உறப் புரிவொடும் தொழுது எழுந்து
இன் இசைத் தமிழ் புனைந்து இறைவர் சேல் ஊருடன்
பன்னு பாலைத் துறைப் பதி பணிந்து ஏகினார் 6.1.364

2263 காவின் மேல் முகில் எழும் கமழ் நறும் புறவு போய்
வாவி நீடு அலவன் வாழ் பெடை உடன் மலர் நறும்
பூவின் மேல் விழை உறும் புகலியார் தலைவனார்
சேவின் மேல் அண்ணலார் திருநலூர் நண்ணினார் 6.1.365

2264 மன்றலங் கழனி சூழ் திரு நலூர் மறைவலோர்
துன்று மங்கல வினைத் துழனியால் எதிர் கொளப்
பொன் தயங்கு ஒளி மணிச் சிவிகையில் பொலிவு உறச்
சென்று அணைந்து அருளினார் சிரபுரச் செம்மலார் 6.1.366

2265 நித்திலச் சிவிகை மேல் நின்று இழிந்து அருளியே
மொய்த்த அந்தணர் குழாம் முன் செலப் பின் செலும்
பத்தரும் பரிசனங்களும் உடன் பரவவே
அத்தர் தம் கோபுரம் தொழுது அணைந்து அருளினார் 6.1.367

2266 வெள்ளி மால் வரையை நேர் விரிசுடர்க் கோயிலைப்
பிள்ளையார் வலம் வரும் பொழுதினில் பெருகு நீர்
வெள்ள ஆனந்தம் பொழிய மேல் ஏறி நீர்
துள்ளுவார் சடையரைத் தொழுது முன் பரவுவார் 6.1.368

2267 பரவு சொல் பதிகம் முன் பாடினார் பரிவுதான்
வர அயர்த்து உருகு நேர் மனன் உடன் புறம் அணைந்து
அரவு உடைச் சடையர் பேர் அருள் பெறும் பெருமையால்
விரவும் அப்பதி அமர்ந்து அருளியே மேவினார் 6.1.369

2268 அன்ன தன்மையில் அப்பதியினில் அமர்ந்து அருளி
மின் நெடும் சடை விமலர் தாள் விருப்பொடு வணங்கிப்
பன்னும் இன்னிசைப் பதிகமும் பல முறை பாடி
நல் நெடும் குல நான் மறையவர் தொழ நயந்தார் 6.1.370

2269 நீடும் அப்பதி நீங்குவார் நிகழ் திருநல்லூர்
ஆடுவார் திரு அருள் பெற அகன்று போந்து அங்கண்
மாடும் உள்ளன வணங்கியே பரவி வந்து அணைந்தார்
தேடும் மால் அயற்கு அரியவர் திருக்கருகாவூர் 6.1.371

2270 வந்து பந்தர் மாதவி மணம் கமழ் கருகாவூர்ச்
சந்த மாமறை தந்தவர் கழல் இணை தாழ்ந்தே
அந்தம் இல்லவர் வண்ணமார் அழல் வண்ணம் என்று
சிந்தை இன்புறப் பாடினார் செழும் தமிழ்ப் பதிகம் 6.1.372

2271 பதிக இன் இசை பாடிப் போய்ப் பிறப்பதி பலவும்
நதி அணிந்தவர் கோயில்கள் நண்ணியே வணங்கி
மதுர முத்தமிழ் வாசகர் அணைந்தனர் மன்றுள்
அதிர் சிலம்பு அடியார் மகிழ் அவள் இவள் நல்லூர் 6.1.373

2272 . மன்னும் அப்பதி வானவர் போற்றவும் மகிழ்ந்த
தன்மையார் பயில் கோயில் உள் தம்பரிசு உடையார்
என்னும் நாமமும் நிகழ்ந்திட ஏத்தி முன் இறைஞ்சிப்
பன்னு சீர்ப் பதி பலவும் அப்பால் சென்று பணிவார் 6.1.374

2273 பழுது இல் சீர்த் திருப் பரிதி நல் நியமும் பணிந்து அங்கு
எழுது மாமறையாம் பதிகத்து இசை போற்றி
முழுதும் ஆனவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவு இலார் திருப்பூவனூர் வணங்கி வந்து அணைந்து 6.1.375

2274 பொங்கு காதலில் போற்றி அங்கர் அருளுடன் போந்து
பங்கயத் தடம் பணைப் பதி பலவும் முன் பணிந்தே
எங்கும் அன்பர்கள் ஏத்து ஒலி எடுக்க வந்து அணைந்தார்
அங்கணர்க்கு இடம் ஆகிய பழம்பதி ஆவூர் 6.1.376

2275 பணியும் அப்பதிப் பசுபதி ஈச்சரத்தின் இனிது இருந்த
மணியை உள் புக்கு வழிபடும் விருப்பினால் வணங்கித்
தணிவு இல் காதலினால் தண் தமிழ் மாலைகள் சாத்தி
அணி விளங்கிய திருநலூர் மீண்டும் வந்து அணைந்தார் 6.1.377

2276 மறை விளங்கும் அப்பதியினில் மணிகண்டர் பொன் தாள்
நிறையும் அன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்
பிறை அணிந்தவர் அருள் பெறப் பிரச மென் மலர் வண்டு
அறை நறும் பொழில் திரு வலம் சுழியில் வந்து அணைந்தார் 6.1.378

2277 மதி புணைந்தவர் வலம் சுழி மருவு மாதவத்து
முதிரும் அன்பர்கள் முத்தமிழ் விரகர் தம் முன் வந்து
எதிர் கொள் போழ்தினில் இழிந்தவர் எதிர் செல மதியைக்
கதிர் செய் வெண் முகில் குழாம் புடை சூழ்ந்தெனக் கலந்தார் 6.1.379

2278 கலந்த அன்பர்கள் தொழுது எழக் கவுணிய தலைவர்
அலர்ந்த செம் கமலக் கரம் குவித்து உடன் அணைவார்
வலம் சுழிப் பெருமான் மகிழ் கோயில் வந்து எய்திப்
பொலம் கொள் நீள் சுடர்க் கோபுரம் இறைஞ்சி உள் புகுந்தார் 6.1.380

2279 மருவலார் புரம் முனிந்தவர் திரு முன்றில் வலம் கொண்டு
உருகும் அன்புடன் உச்சி மேல் அஞ்சலியினராய்த் 6.1.381

திருவலம் சுழி உடையவர் சேவடித் தலத்தில்
பெருகும் ஆதரவு உடன் பணிந்து எழுந்தனர் பெரியோர்

2280 ஞான போனகர் நம்பர் முன் தொழுது எழும் விருப்பால்
ஆன காதலில் அங்கணவர் தமை வினவும்
ஊனமில் இசையுடன் விளங்கிய திருப்பதிகம்
பான் அலார் மணிகண்டரைப் பாடினார் பரவி 6.1.382

2281 புலன் கொள் இன் தமிழ் போற்றினர் புறத்தினில் அணைந்தே
இலங்கு நீர்ப் பொன்னி சூழ் திருப்பதியினில் இருந்து
நலம் கொள் காதலின் நாதர்தாள் நாள்தொறும் பரவி
வலம் சுழிப் பெருமான் தொண்டர் தம் உடன் மகிழ்ந்தார் 6.1.383

2282 மகிழ்ந்த தன்தலை வாழும் அந் நாள் இடை வானில்
திகழ்ந்த ஞாயிறு துணைப் புணர் ஓரை உள் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையில் நிலவும் ஏழ் கடல் நீர்மை குன்ற
வெகுண்டு வெம் கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில் 6.1.384

2283 தண் புனல் குளிர் கால் நறும் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாச மென் மலர் பொதி பனி நீர்
நண்புடைத் துணை நகை மணி முத்தணி நாளும்
உண்ப மாதுரியச் சுவை உலகு உளோர் விரும்ப 6.1.385

2284 அறல் மலியும் கான் ஆற்றின் நீர் நசையால் அணையுமான்
பெறல் அரிய புனல் என்று பேத்தேரின் பின் தொடரும்
உறை உணவு கொள்ளும் புள் தேம்பிஅயல் இரை தேரும்
பறவை சிறை விரித்து ஒடுங்கப் பனிப் புறத்து வதியுமால் 6.1.386

2285 நீண் நிலை மாளிகை மேலும் நிலா முன்றின் மருங்கினும்
வாண் நிழல் நல் சோலையிலும் மலர் வாவிக் கரை மாடும்
பூண் நிலவு முத்து அணிந்த பூங்குழலார் முலைத் தடத்தும்
காணும் மகிழ்ச்சியின் மலர்ந்து மாந்தர் கலந்து உறைவாரால் 6.1.387

2286 மயில் ஒடுங்க வண்டு ஆட மலர்க் கமல முகை விரிய
குயில் ஒடுங்காச் சோலையின் மென் தளிர் கோதிக் கூவி எழத்
துயில் ஒடுங்கா உயிர் அனைத்தும் துயில் பயிலச் சுடர் வானில்
வெயில் ஒடுங்கா வெம்மை தரும் வேனில் விரி தரு நாளில் 6.1.388

2287 சண்பை வரும் பிள்ளையார் சடா மகுடர் வலம் சுழியை
எண் பெருகத் தொழுது ஏத்திப் பழையாறை எய்துதற்கு
நண்பு உடைய அடியார்களுடன் போத நடந்து அருளி
விண் பொரு நீள் மதில் ஆறை மேல் தளி சென்று எய்தினார் 6.1.389

2288 திருவாறை மேல் தளியில் திகழ்ந்து இருந்த செந்தீயின்
உருவாளன் அடிவணங்கி உருகிய அன்பொடு போற்றி
மருவாரும் குழல் மலையாள் வழிபாடு செய்ய அருள்
தருவார் தம் திரு சத்தி முற்றத்தின் புறம் சேர்ந்தார் 6.1.390

2289 திருச் சத்தி முற்றத்தில் சென்று எய்தித் திருமலையாள்
அருச்சித்த சேவடிகள் ஆர்வம் உறப் பணிந்து ஏத்திக்
கருச் சுற்றில் அடையாமல் கை தருவார் கழல் பாடி
விருப்பு உற்றுத் திருப் பட்டீச்சரம் பணிய மேவும் கால் 6.1.391

2290 வெம்மை தரு வேனில் இடை வெயில் வெப்பம் தணிப்பதற்கு
மும்மை நிலைத் தமிழ் விரகர் முடிமீதே சிவபூதம்
தம்மை அறியாதபடி தண் தரளப் பந்தர் எடுத்து
எம்மை விடுத்து அருள் புரிந்தார் பட்டீசர் என்று இயம்ப 6.1.392

2291 அவ்வுரையும் மணி முத்தின் பந்தரும் ஆகாயம் எழச்
செவ்விய மெய்ஞ்ஞானம் உணர் சிரபுரத்துப் பிள்ளையார்
இவ் வினைதான் ஈசர் திரு அருளால் ஆகில் இசைவது என
மெய் விரவு புளகம் உடன் மேதினியின் மிசைத் தாழ்ந்தார் 6.1.393

2292 அது பொழுதே அணி முத்தின் பந்தரினை அருள் சிறக்கக்
கதிர் ஒளிய மணிக் காம்பு பரிசனங்கள் கைக் கொண்டார்
மதுர மொழி மறைத் தலைவர் மருங்கு இமையோர் பொழிவாசப்
புது மலரால் அப்பந்தர் பூம் பந்தரும் போலும் 6.1.394

2293 தொண்டர் குழாம் ஆர்ப்பு எடுப்பச் சுருதிகளின் பெருந்துழனி
எண் திசையும் நிறைந்து ஓங்க எழுந்து அருளும் பிள்ளையார்
வெண் தரளப் பந்தர் நிழல் மீது அணையத் திருமன்றில்
அண்டர்பிரான் எடுத்த திருவடி நீழல் என அமர்ந்தார் 6.1.395

2294 பாரின் மிசை அன்பர் உடன் வருகின்றார் பன்னகத்தின்
ஆரம் அணிந்தவர் தந்த அருள் கருணைத் திறம் போற்றி
ஈர மனம் களி தழைப்ப எதிர் கொள்ள முகம் மலர்ந்து
சேர வரும் தொண்டர் உடன் திருப்பட்டீச்சரம் அணைந்தார் 6.1.396

2295 சென்று அணைந்து திருவாயில் புறத்து இறைஞ்சி உள்புக்கு
வென்றி விடையவர் கோயில் வலம் கொண்டு வெண் கோட்டுப்
பன்றி கிளைத்து அறியாத பாத தாமரை கண்டு
முன் தொழுது விழுந்து எழுந்து மொழி மாலை போற்றி
இசைத்தார் 6.1.397

2296 அருள் வெள்ளத் திறம் பரவி அளப்பரய ஆனந்தப்
பெரு வெள்ளத்து இடை மூழ்கிப் பேராத பெருங்காதல்
திரு உள்ளப் பரிவுடனே செம்பொன் மலை வல்லியார்
தரு வள்ளத்து அமுது உண்ட சம்பந்தர் புறத்து அணைந்தார் 6.1.398

2297 அப்பதியில் அமர்கின்ற ஆளுடைய பிள்ளையார்
செப்பரும் சீர் திருவாறை வட தளியில் சென்று இறைஞ்சி
ஒப்பு அரிய தமிழ் பாடி உடன் அமரும் தொண்டரொடு
எப்பொருளுமாய் நின்றார் இரும் பூளை எய்தினார் 6.1.399

2298 தேவர் பிரான் அமர்ந்த திரு இரும் பூளை சென்று எய்தக்
காவண நீள் தோரணங்கள் நாட்டி உடன் களி சிறப்பப்
பூவண மாலைகள் நாற்றிப் பூரண பொன் குடம் நிரைத்து அங்கு
யாவர்களும் போற்றி இசைப்பத் திருத் தொண்டர் எதிர்
கொண்டார் 6.1.400

2299 வண் தமிழின் மொழி விரகர் மணிமுத்தின் சிவிகையினைத்
தொண்டர் குழாத்து எதிர் இழிந்து அங்கு அவர் தொழத் தாமும்
தொழுதே
அண்டர்பிரான் கோயிலினை அணைந்து இறைஞ்சி முன் நின்று
பண்டு அரும் இன் இசைப் பதிகம் பரம் பொருளைப் பாடுவார் 6.1.401

2300 நிகர் இலா மேருவரை அணுவாக நீண்டானை
நுகர்கின்ற தொண்டர் தமக்கு அமுதாகி நொய்யானை
தகவு ஒன்ற அடியார்கள் தமை வினவித் தமிழ் விரகர்
பகர்கின்ற அருமறையின் பொருள் விரியப் பாடினார் 6.1.402

2301 பாடும் அரதைப் பெரும் பாழியே முதலாகச்
சேடர் பயில் திருச்சேறை திருநாலூர் குட வாயில்
நாடிய சீர் நறையூர் தென் திருப்புத்தூர் நயந்து இறைஞ்சி
நீடு தமிழ் தொடை புனைந்து அந்நெடு நகரில் இனிது அமர்ந்தார் 6.1.403

2302 அங்கண் இனிது அமரு நாள் அடல் வெள் ஏனத்து உருவாய்
செங்கண் நெடுமால் பணியும் சிவபுரத்துச் சென்று அடைந்து
கங்கைச் சடை கரந்தவர் தம் கழல் வணங்கிக் காதலினால்
பொங்குமிசைத் திருப்பதிகம் முன் நின்று போற்றி இசைத்தார் 6.1.404

2303 போற்றி இசைத்துப் புனிதர் அருள் பெற்றுப் போந்து எவ் உயிரும்
தோற்றுவித்த அயன் போற்றும் தோணிபுரத்து அண்ணனார்
ஏற்றும் இசை ஏற்று உகந்த இறைவர் தமை ஏத்துதற்கு
நாற்றிசை யோர் பரவும் திருக் குடமூக்கு நண்ணினார் 6.1.405

2304 தேமருவு மலர்ச் சோலைத்திரு குடமூக்கினில் செல்வ
மாமறையோர் பூந்தராய் வள்ளலார் வந்து அருளத்
தூமறையின் ஒலி பெருகத் தூரிய மங்கலம் முழங்க
கோ முறைமை எதிர் கொண்டு தம்பதி உள் கொடு புக்கார் 6.1.406

2305 திருஞான சம்பந்தர் திருக்குட மூக்கினைச் சேர
வருவார் தம் பெருமானை வண் தமிழின் திருப்பதிகம்
உருகா நின்று உளம் மகிழ்க் குட மூக்கை உவந்து இருந்த
பெருமான் எம் இறை என்று பெருகு இசையால் பரவினார் 6.1.407

2306 வந்து அணைந்து திருக்கீழ்க் கோட்டத்து இருந்த வான் பொருளை
சிந்தை மகிழ்வுற வணங்கித் திருத்தொண்டருடன் செல்வார்
அந்தணர்கள் புடை சூழ்ந்து போற்றி இசைப்ப அவரொடும்
கந்த மலர் பொழில் சூழ்ந்த காரோணம் சென்று அடைந்தார் 6.1.408

2307 பூ மருவும் கங்கை முதல் புனிதமாம் பெரும் தீர்த்தம்
மா மகம் தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில்
தூ மருவும் மலர்க் கையால் தொழுது வலம் கொண்டு அணைந்து
காமர் கெட நுதல் விழித்தார் கழல் பணிந்து கண் களித்தார் 6.1.409

2308 கண்ணாரும் அருமணியைக் காரோணத்து ஆர் அமுதை
நண்ணாதார் புரம் எரித்த நான் மறையின் பொருளானைப்
பண் ஆர்ந்த திருப்பதிகம் பணிந்து ஏத்திப் பிறபதியும்
எண் ஆர்ந்த சீர் அடியார் உடன் பணிவுற்று எழுந்து அருளி 6.1.410

2309 . திரு நாசேச் சரத்து அமர்ந்த செங்கனகத் தனிக் குன்றை
கரு நாகத்து உரி புணைந்த கண் நுதலைச் சென்று இறைஞ்சி
அருஞானச் செந்தமிழின் திருப்பதிகம் அருள் செய்து
பெரு ஞான சம்பந்தர் பெருகு ஆர்வத்தின் புற்றார் 6.1.411

2310 மா நாகம் அர்ச்சித்த மலர் கமலத் தாள் வணங்கி
நாள் நாளும் பரவுவார் பிணி தீர்க்கும் நலம் போற்றி
பால் நாறும் மணி வாயார் பரமர் திருவிடை மருதில்
பூ நாறும் புனல் பொன்னித் தடங்கரை போய் புகுகின்றார் 6.1.412

2311 ஓங்கு திருப்பதிகம் ஓடேகலன் என்று எடுத்து அருளித்
தாங்க அரிய பெருமகிழ்ச்சி தலை சிறக்கும் தன்மையினால்
ஈங்கு எனை ஆளுடைய பிரான் இடை மருது ஈதோ என்று
பாங்கு உடைய இன் இசையால் பாடி எழுந்து அருளினார் 6.1.413

2312 அடியவர்கள் எதிர் கொள்ள எழுந்து அருளி அங்கு அணைந்து
முடிவில் பரம் பொருள் ஆனார் முதல் கோயில் முன் இறைஞ்சிப்
படியில் வலம் கொண்டு திரு முன்பு எய்திப் பார் மீது
நெடிது பணிந்து எழுந்து அன்பு நிறை கண்ணீர் நிரந்து இழிய 6.1.414

2313 பரவுறு செந்தமிழ்ப் பதிகம் பாடி அமர்ந்த அப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பல பாடி வெண் பதியோடு
அரவு சடைக்கு அணிந்தவர் தம் தாள் போற்றி ஆர்வத்தால்
உரவு திருத் தொண்டருடன் பணிந்து ஏத்தி உறையும் நாள் 6.1.415

2314 மருங்கு உள நல் பதிகள் பல பணிந்து மா நதிக்கரை போய்க்
குரங்கு ஆடு துறை அணைந்து குழகனார் குரை கழல்கள்
பெரும் காதலினால் பணிந்து பேணிய இன்னிசை பெருக
அரும் கலை நூல் திருப்பதிகம் அருள் செய்து 6.1.416

2315 அம் மலர்த் தடம் பதிபணிந்து அகன்று போந்து அருகு
கைம்மலர்க் களத்து இறைவர் தம் கோயில்கள் வணங்கி
நம் மலத்துயர் தீர்க்க வந்து அருளிய ஞானச்
செம்மலார் திரு ஆவடு துறையினைச் சேர்ந்தார் 6.1.417

2316 மூவர்க்கு அறிவரும் பொருள் ஆகிய மூலத்
தேவர் தம் திரு ஆவடு துறைத் திருத் தொண்டர் 6.1.418

பூ அலம்பு தண் பொரு புனல் தடம் பணைப் புகலிக்
காவலர்க்கு எதிர் கொள்ளும் ஆதரவு உடன் கலந்தார்

2317 வந்து அணைவார் தொழா முனம் மலர் புகழ்ச் சண்பை
அந்தணர்க்கு எலாம் அருமறைப் பொருள் என வந்தார்
சந்த நித்திலச் சிவிகை நின்று இழிந்து எதிர் தாழ்ந்தே
சிந்தை இன்புற இறைவர் தம் கோயில் முன் சென்றார் 6.1.419

2318 நீடு கோபுரம் இறைஞ்சி உள் புகுந்து நீள் நிலையான்
மாடு சூழ் திரு மாளிகை வலம் கொண்டு வணங்கி
ஆடும் ஆதியை ஆவடு துறையுள் ஆர் அமுதை
நாடு காதலில் பணிந்து எழுந்து அரும் தமிழ் நவின்றார் 6.1.420

2319 அன்பு நீடிய அருவி கண் பொழியும் ஆர்வத்தால்
முன்பு போற்றியே புறம்பு அணை முத்தமிழ் விரகர்
துன்பு போம் மனத் திருத்தொண்டர் தம்முடன் தொழுதே
இன்பம் மேவி அப்பதியினில் இனிது அமர்ந்து இருந்தார் 6.1.421

2320 மேவி அங்கு உறை நாளினில் வேள்வி செய்வதனுக்கு
ஆவது ஆகிய காலம் வந்து அணை உற அணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத் தாதையார் தாமும்
போவதற்கு அரும் பொருள் பெற எதிர் நின்று புகன்றார் 6.1.422

2321 தந்தையார் மொழி கேட்டலும் புகலியார் தலைவர்
முந்தை நாளிலே மொழிந்தமை நினைந்து அருள் முன்னி
அந்தமில் பொருள் ஆவன ஆவடு துறையுள்
எந்தையார் அடித் தலங்கள் அன்றோ என எழுந்தார் 6.1.423

2322 சென்று தேவர் தம்பிரான் மகிழ் கோயில் முன்பு எய்தி
நின்று போற்றுவார் நீள் நிதி வேண்டினார்க்கு ஈவது
ஒன்றும் மற்றிலேன் உன்னடி அல்லது ஒன்று அறியேன்
என்று பேர் அருள் வினவிய செந்தமிழ் எடுத்தார் 6.1.424

2323 எடுத்த வண் தமிழ்ப் பதிக நால் அடியின் மேல் இரு சீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்த இன் இசையினால் துதிப்பார்
மடுத்த காதலில் வள்ளலார் அடி இணை வழுத்தி
அடுத்த சிந்தையால் ஆதரித்து அஞ்சலி அளித்தார் 6.1.425

2324 நச்சி இன் தமிழ் பாடிய ஞான சம்பந்தர்
இச்சையே புரிந்து அருளிய இறைவர் இன் அருளால்
அச் சிறப்பு அருள் பூதம் முன் விரைந்த கல் பீடத்து
உச்சி வைத்தது பசும் பொன் ஆயிரக் கிழி ஒன்று 6.1.426

2325 வைத்த பூதம் அங்கு அணைந்து முன் நின்று நல் வாக்கால்
உய்ந்த இக்கிழி பொன் உலவாக் கிழி உமக்கு
நித்தனார் அருள் செய்தது என்று உரைக்க நேர் தொழுதே
அத்தனார் திரு அருள் நினைந்து தவ மேனி மேல் பணிந்தார் 6.1.427

2326 பணிந்து எழுந்து கை தொழுது முன் பனி மலர்ப் பீடத்து
அணைந்த ஆடகக் கிழிதலைக் கொண்டு அருமறைகள்
துணிந்த வான் பொருள் தரும் பொருள் தூய வாய்மையினால்
தணிந்த சிந்தை அத் தாதையார்க்கு அளித்து உரைசெய்வார் 6.1.428

2327 ஆதி மாமறை விதியினால் ஆறு சூழ் வேணி
நாதனாரை முன் ஆகவே புரியும் நல் வேள்வி
தீது நீங்க நீர் செய்யவும் திருக் கழுமலத்து
வேத வேதியர் அனைவரும் செய்யவும் மிகுமால் 6.1.429

2328 என்று கூறி அங்கு அவர்தமை விடுத்த பின் அவரும்
நன்றும் இன்புறும் மனத்தொடும் புகலி மேல் நண்ண
வென்றி ஞான சம்பந்தரும் விருப்பொடு வணங்கி
மன்றல் ஆவடு துறையினில் மகிழ்ந்து இனிது இருந்தார் 6.1.430

2329 அண்ணலார் திரு ஆவடுதுறை அமர்ந்தாரை
உள் நிலாவிய காலினால் பணிந்து உறைந்து
மண் எலாம் உய வந்தவர் போந்து வார் சடைமேல்
தெள் நிலா அணிவார் திருக் கோழம்பம் சேர்ந்தார் 6.1.431

2330 கொன்றைவார் சடைமுடியரைக் கோழம்பத்து இறைஞ்சி
என்றும் நீடிய இன் இசைப் பதிகம் முன் இயம்பி
மன்று உளார் மகிழ் வைகல் மாடக் கோயில் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர் 6.1.432

2331 வைகல் நீடு மாடக் கோயில் மன்னிய மருந்தைக்
கைகள் அஞ்சலி கொண்டு தாழ்ந்து எழுந்து கண் அருவி
செய்ய இன் இசைச் செந்தமிழ் மாலைகள் மொழிந்து
நையும் உள்ளத்தர் ஆய்த்திரு நல்லத்தில் நண்ணி 6.1.433

2332 நிலவு மாளிகைத் திரு நல்லம் நீடு மாமணியை
இலகு சேவடி இறைஞ்சி இன் தமிழ் கொடு துதித்துப்
பலவும் ஈசர் தம் திருப்பதி பணிந்து செல்பவர் தாம்
அலை புனல் திருவழுந்தூர் மாடக் கோயில் அடைந்தார் 6.1.434

2333 மன்னுமாடம் மகிழ்ந்த வான் பொருளினை வணங்கிப்
பன்னு பாடலில் பதிக இன் இசை கொடு பரவிப்
பொன்னி மா நதிக் கரையினில் மீண்டு போந்து அணைந்து
சொன்னவாறு அறிவார் தமைத் துருத்தியில் தொழுதார் 6.1.435

2334 திரைத் தடம் புனல் பொன்னி சூழ் திருத்துருத்தியினில்
வரைத்தலைப் பசும் பொன் எனும் வண் தமிழ்ப்பதிகம்
உரைத்து மெய் உறப் பணிந்து போந்து உலவும் அந்நதியின்
கரைக் கண் மூவலூர்க் கண் நுதலார் கழல் பணிந்தார் 6.1.436

2335 . மூவலூர் உறை முதல்வரைப் பரவிய மொழியால்
மேவு காதலில் ஏத்தியே விருப்பொடும் போந்து 6.1.437

பூ அலம்பு தண் புனல் பணைப் புகலியார் தலைவர்
வாவி சூழ் திரு மயிலாடு துறையினில் வந்தார்

2336 மல்கு தண் தலை மயிலாடு துறையினில் மருவும்
செல்வ வேதியர் தொண்டரொடு எதிர் கொளச் சென்று
கொல்லை மான்மறிக் கையரைக் கோயில் புக்கு இறைஞ்சி
எல்லை இல்லதோர் இன்பம் முன் பெருகிட எழுந்தார் 6.1.438

2337 உள்ளம் இன்புற உணர் உறும் பரிவு கொண்டு உருகி
வெள்ளம் தாங்கிய சடையரை விளங்கு சொல் பதிகத்
தெள்ளும் இன்னிசைத் திளைப்பொடும் புறத்து அணைந்து அருளி
வள்ளலார் மற்ற வளம் பதி மருவுதல் மகிழ்ந்தார் 6.1.439

2338 அத்திருப்பதி அன்று போய் அணிகிளர் சூலங்
கைத்தலப் படை வீரர் செம் பொன் பள்ளி கருதி
மெய்த்த காதலில் விள நகர் விடையவர் பாதம்
பத்தர் தம் உடன் பணிந்து இசைப் பதிகம் முன் பகர்ந்தார் 6.1.440

2339 பாடும் அப்பதி பணிந்து போய்ப் பறியலூர் மேவும்
தோடு உலாம் மலர் இதழியும் தும்பையும் அடம்பும்
காடு கொண்ட செம் சடைமுடிக் கடவுளர் கருது
நீடு வீரட்டம் பணிந்தனர் நிறை மறை வேந்தர் 6.1.441

2340 பரமர் தம் திருப் பறியலூர் வீரட்டம் பரவி
விரவு காதலின் வேலையின் கரையினை மேவி
அரவு அணிந்தவர் பதி பல அணைந்து முன் வணங்கிச்
சிரபுரத்தவர் திருத்தொண்டர் எதிர் கொளச் செல்வார் 6.1.42

2341 அடியவர்கள் களி சிறப்பத் திருவேட்டக்குடி
பணிந்து அங்கு அலைவாய்ப் போகிக்
கடி கமழும் மலர் பழனக் கழிநாடு அகன்
பதிகள் கலந்து நீங்கிக்
கொடி மதில் சூழ் தரும புரம் குறுகினார்
குண்டர் சாக்கியர் தம் கொள்கை
படி அறியப் பழுது என்றே மொழிந்து உய்யும்
நெறி காட்டும் பவள வாயர் 6.1.443

2342 தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர்
பிறப்பு இடம் ஆம் அதனால் சார
வரும் அவர் தம் சுற்றத்தார் வந்து எதிர் கொண்டு
அடி வணங்கி வாழ்த்தக் கண்டு
பெருமை உடைப் பெரும்பாணர் அவர்க்கு
உரைப்பார் பிள்ளையார் அருளிச் செய்த
அருமை உடைப் பதிகம் தாம் யாழினால்
பயிற்றும் பேறு அருளிச் செய்தார் 6.1.444

2343 கிளைஞரும் மற்று அது கேட்டுக் கெழுவு
திரு பதிகத்திற்கு கிளர்ந்த ஓசை
அளவு பெறக் கருவியில் நீர் அமைத்து இயற்றும்
அதனாலே அகிலம் எல்லாம்
வளர இசை நிகழ்வது என விளம்புதலும் வளம்
புகலி மன்னர் பாதம்
உளம் நடுங்கிப் பணிந்து திருநீல கண்டப்
பெரும்பாணர் உணர்த்து கின்றார் 6.1.445

2344 அலகில் திருப்பதிக இசை அளவு படா
வகை இவர்கள் அன்றி ஏயும்
உலகில் உளோரும் தெரிந்து அங்கு உண்மையினை
அறிந்து உய்ய உணர்த்தும் பண்பால்
பலர் புகழும் திருப்பதிகம் பாடி அருளப்
பெற்றால் பண்பு நீடி
இலகும் இசை யாழின்கண் அடங்காமையான்
காட்டப் பெறுவன் என்றார் 6.1.446

2345 வேத நெறி வளர்பவரும் விடையவர் முன்
தொழுது திருப்பதிகத்து உண்மை
பூதலத்தோர் கண்டத்தும் கலத்தினிலும்
நிலத்த நூல் புகன்ற பேத
நாத இசை முயற்சிகளால் அடங்காத வகை
காட்ட நாட்டுகின்றார்
மாதர் மடப்பிடி பாடி வணங்கினார் வானவரும்
வணங்கி ஏத்த 6.1.447

2346 வண் புகலி வேதியனார் மாதர் மடப்பிடி
எடுத்து வனப்பில் பாடிப்
பண் பயிலும் திருக்கடைக் காப்பு சாத்த அணைந்து
பெரும் பாணர் தாம்
நண்புடை யாழ்க் கருவியினில் முன்பு போல்
கைக்கொண்டு நடத்தப்புக்கு
எண் பெருகும் அப் பதிகத்து இசை நரம்பில்
இட அடங்கிற்று இல்லை அன்றே 6.1.448

2347 அப்பொழுது திருநீல கண்ட இசைப்
பெரும்பாணர் அதனை விட்டு
மெய்ப் பயமும் பரிவும் உறப் பிள்ளையார் கழல்
இணை வீழ்ந்து நோக்கி
இப்பெரியோர் அருள் செய்த திருப்பதிகத்து
இசை யாழில் ஏற்பன் என்னச்
செப்பியது இக் கருவியை நான் தொடுதலின் 6.1.449

நன்றோ என்று தெளிந்து செய்வார்

2348 வீக்கு நரம்பு உடையாழினால் விளைந்தது
இது என்று அங்கு அதனைப் போக்க
ஓக்குதலும் தடுத்து அருளி ஐயரே உற்ற
இசை அளவினால் நீர்
ஆக்கிய இக்கருவியினைத் தாரும் என வாங்கிக்
கொண்டு அவனி செய்த
பாக்கியத்தின் மெய் வடிவாம் பால் அறா வாயர்
பணித்து அருளுகின்றார் 6.1.450

2349 451. ஐயர் நீர் யாழ் இதனை முரிக்கும் அதென்
ஆள் உடையாள் உடனே கூடச்
செய்ய சடையார் அளித்த திருவருளின்
பெருமை எலாம் தெரிய நம்பால்
எய்திய இக் கருவியினில் அளவு படுமோ
நம் தம் இயல்புக்கு ஏற்ப
வையகத்தோர் அறிவு உற இக்கருவி அளவையின்
இயற்றல் வழக்கே என்றார் 6.1.451

2350 சிந்தையால் அளவு படா இசைப்
பெருமை செயல் அளவில் எய்துமோ நீர்
இந்த யாழினைக் கொண்டே இறைவர் திருப்
பதிக இசை இதனில் எய்த
வந்தவாறே பாடி வாசிப்பீர் எனக் கொடுப்பப்
புகலி மன்னர்
தந்த யாழினைத் தொழுது கைக் கொண்டு
பெரும் பாணர் தலை மேல் கொண்டார் 6.1.452

2351 அணைவுறும் அக் கிளைஞர் உடன் பெரும்
பாணர் ஆள் உடைய பிள்ளையார் தம்
துணை மலர்ச் சேவடி பணிந்து துதித்து அருளத்
தோணிபுரத் தோன்றலாரும்
இணையில் பெரும் சிறப்பு அருளித் தொண்டருடன்
அப்பதியில் இனிது மேவிப்
பணை நெடும் கை மதயானை உரித்தவர் தம் பதி
பிறவும் பணியச் செல்வார் 6.1.453

2352 பங்கய பாசடைத் தடம் சூழ் பழன நட்டு
அகன் பதிகள் பலவும் நண்ணி
மங்கை ஒரு பாகத்தார் மகிழ் கோயில் எனைப்
பலவும் வணங்கிப் போற்றித்
தங்கி இசை யாழ்ப் பெரும் பாணர் உடன் மறையோர்

6.1.454

தலைவனார் சென்று சார்ந்தார்
செங்கை மான் மழு ஏந்தும் சின விடையார்
அமர்ந்து அருளும் திரு நள்ளாறு

2353 நள்ளாற்றில் எழுந்து அருள நம்பர்
திருத்தொண்டர் குழாம் நயந்து சென்று
கொள்ளாற்றில் எதிர் கொண்டு குலவி
உடன் சூழ்ந்து அணையக் குறுகிக் கங்கைத்
தெள்ளாற்று வேணியர் தம் திருவளர்
கோபுரம் இறைஞ்சிச் செல்வக் கோயில்
உள்ளாற்ற வலம் கொண்டு திருமுன்பு
தாழ்ந்து எழுந்தார் உணர்வின் மிக்கார் 6.1.455

2354 உருகிய அன்புறு காதல் உள் உருகி
நனை ஈரம் பெற்றால் போல
மருவு திருமேனி எலாம் முகிழ்த்து எழுந்த
மயிர்ப் புளகம் வளர்க்கும் நீராய்
அருவி சொரி திரு நயனத்து ஆனந்த
வெள்ளம் இழிந்து அலைய நின்று
பொருவில் பதிகம் போகம் ஆர்த்த பூண்
முலையாள் என்று எடுத்துப் போற்றி 6.1.456

2355 யாழ்நரம்பில் ஆர இயல் இசை
கூடப் பாடியே எண்ணில் கற்பச்
சேணளவு பட ஓங்கும் திருக் கடைக்
காப்பு சாத்திச் செங்கண் நாகப்
பூண் அகலத்தவர் பாதம் போற்றி
இசைத்துப் புறத்து அணைந்து புவனம் ஏத்தும்
பாணனார் யாழில் இடப் பால் அறா
வாயர் அருள் பணித்த போது 6.1.457

2356 பிள்ளையார் திருத்தாளம் கொடு
பாடப் பின்பு பெரும் பாணனார் தாம்
தெள் அமுத இன் இசையின் தேம்
பொழி தந்திரி யாழை சிறக்க வீக்கிக்
கொள்ள இடும் பொழுதின் கண்
குவலத்தோர் களிகூரக் குலவு சண்பை
வள்ளலார் திரு உள்ளம் மகிழ்ந்து
திருத் தொண்டர் உடன் மருவும் காலை 6.1.458

2357 மன்னு திரு நள்ளாற்று மருந்தை
வணங்கிப் போந்து வாச நன்னீர்ப்
பொன்னி வளம் தரு நாட்டுப் புறம்பு
6.1.459

அணை சூழ் திருப்பதிகள் பலவும் போற்றிச்
செந் நெல் வயல் செங்கமல முகம்
மலரும் திருச் சாத்த மங்கை மூதூர்
தன்னில் எழுந்து அருளினார் சைவ சிகா
மணியார் மெய்த் தவத்தோர் சூழ

2358 நிறை செல்வத் திருச்சாத்த
மங்கையினில் நீல நக்கர் தாமும் சைவ
மறையவனார் எழுந்து அருளும் படி கேட்டு
வாழ்ந்து வழி விளக்கி எங்கும்
துறை மலி தோரணம் கதலி கமுகு
நிறை குடம் தூப தீபம் ஆக்கி
முறைமையில் வந்து எதிர் கொள்ள உடன்
அணைந்து முதல்வனார் கோயில் சார்ந்தார் 6.1.460

2359 அயவந்தி அமர்ந்து அருளும் அங்கணர் தம்
கோயில் மருங்கு அணைந்து வானோர்
உயவந்தித்து எழு முன்றில் புடை வலம் கொண்டு
உள்புக்கு ஆறு ஒழுகும் செக்கர்
மய வந்தி மதிச் சடையார் முன் தாழ்ந்து மாதவம்
இவ் வையம் எல்லாம்
செய வந்த அந்தணனார் செங்கைமேல்
குவித்து எழுந்து திருமுன் நின்றார் 6.1.461

2360 போற்றி இசைக்கும் பாடலினால்
பொங்கி எழும் ஆதரவு பொழிந்து விம்ம
ஏற்றின் மிசை இருப்பவர் தம் எதிர் நின்று
துதித்துப் போந்து எல்லை இல்லா
நீற்று நெறி மறையவனார் நீல நக்கர்
மனையில் எழுந்து அருளி அன்பால்
ஆற்றும் விருந்தவர் அமைப்ப அன்பருடன்
இன்புற்று அங்கு அமுது செய்தார் 6.1.462

2361 நீடு திரு நீல நக்கர் நெடு மனையில்
விருந்து அமுது செய்து நீர்மைப்
பாடும் யாழ்ப் பெரும் பாணரும் தங்க அங்கு
இரவு பள்ளி மேவி
ஆடும் அவர் அயவந்தி பணிவதனுக்கு
அன்பருடன் அணைந்து சென்று
நாடிய நண்புடை நீல நக்க அடிகளுடன்
நாதர் கழலில் தாழ்ந்து 6.1.463

2362 கோது இலா ஆர் அமுதைக் கோமளக்
கொம்புடன் கூடக் கும்பிட்டு ஏத்தி
ஆதி ஆம் மறைப் பொருளால் அரும் தமிழின்
திருப்பதிகம் அருளிச் செய்வார்
நீதியால் நிகழ்கின்ற நீல நக்கர் தம் பெரும்
சீர் நிகழ வைத்துப்
பூதி சாதனர் பரவும் புனித இயல் இசைப்
பதிகம் போற்றி செய்தார் 6.1.464

2363 பரவிய காதலில் பணிந்து பால் அறா
வாயர் புறத்து அணைந்து பண்பு
விரவிய நண்பு உடை அடிகள் விருப்பு உறு
காதலில் தங்கி மேவும் நாளில்
அரவு அணிந்தார் பதி பிறவும் பணிய எழும்
ஆதரவால் அணைந்து செல்வார்
உரவு மனக் கருத்து ஒன்றாம் உள்ளம் உடையவர்க்கு
விடை உவந்து நல்கி 6.1.465

2364 மற்றவர்தம் பெரும் கேண்மை மகிழ்ந்து கொண்டு
மால் அயனுக்கு அரிய பிரான் மருவு தானம்
பற்பலவும் சென்று பணிந்து ஏத்திப் பாடிப் பரமர்
திருத்தொண்டர் குழாம் பாங்கின் எய்தக்
கற்றவர் வாழ் கடல் நாகைக் காரோணத்துக் கண்
நுதலைக் கைதொழுது கலந்த ஓசைச்
சொல் தமிழ் மாலைகள் பாடிச் சில நாள் வைகித்
தொழுது அகன்றார் தோணி புரத் தோன்றலாம் தாம் 6.1.466

2365 கழிக் கானல் மருங்கு அணையும் கடல்
நாகை அது நீங்கிக் கங்கையாற்றுச்
சுழிக் கானல் வேணியர் தம் பதிபலவும் பரவிப்
போய்த் தோகைமார் தம்
விழிக் காவி மலர் பழனக் கீழ் வேளூர் விமலர்
கழல் வணங்கி ஏத்தி
மொழிக் காதல் தமிழ் மாலை புனைந்தருளி
அங்கு அகன்றார் மூதூர் நின்றும் 6.1.467

2366 அருகு அணையும் திருப்பதிகள் ஆனவெலாம்
அங்கணரைப் பணிந்து போற்றிப்
பெருகிய ஞானம் பெற்ற பிள்ளையார் எழுந்து
அருளும் பெருமை கேட்டுத்
திரு மருவு செங் காட்டங் குடி நின்றும் சிறுத்
தொண்டரோடிச் சென்று அங்கு
குருகு மனம் களி சிறப்ப எதிர் கொண்டு தம் 6.1.468

பதியுள் கொண்டு புக்கார்

2367 சிறுத் தொண்டர் உடன் கூடச் செங்காட்டங்
குடியில் எழுந்து அருளிச் சீர்த்தி
நிறுத்த எண் திக்கிலும் நிலவும் தொண்டர்
அவர் நண்பு அமர்ந்து நீல கண்டம்
பொறுத்து அண்டர் உயக் கொண்டார் கணபதீச்
சரத்தின் கண் போகம் எல்லாம்
வெறுத்து உண்டிப் பிச்சை நுகர் மெய்த்
தொண்டருடன் அணைந்தார் வேதகீதர் 6.1.469

2368 அங்கு அணைந்து கோயில் வலம் கொண்டு
அருளி அரவு அணிந்தார் அடிக் கீழ் வீழ்ந்து
செங்கண் அருவிகள் பொழியத் திருமுன்பு
பணிந்து எழுந்து செங்கை கூப்பித்
தங்கள் பெரும் தகையாரைச் சிறுத் தொண்டர்
தொழ இருந்த தன்மை போற்றிப்
பொங்கி எழும் இசைபாடிப் போற்றி இசைத்து
அங்கு ஒரு பரிசு புறம்பு போந்தார் 6.1.470

2369 போந்து மா மாத்திரர் தம் போர் ஏற்றின்
திருமனையில் புகுந்து சிந்தை
வாய்ந்த மாதவர் அவர் தாம் மகிழ்ந்து
அருள அமர்ந்து அருளி மதில்கள் மூன்றும்
காய்ந்த மால் விடையார் தம் கணபதீச்
சரம் பரவு காதல் கூர
ஏந்து நூல் அணி மார்பர் இன்புற்று அங்கு
அன்பருடன் இருந்த நாளில் 6.1.471

2370 திருமருகல் நகரின் கண் எழுந்து அருளித்
திங்களுடன் செங்கண் பாம்பு
மருவு நெடும் சடைமவுலி மாணிக்க வண்ணார்
கழல் வணங்கிப் போற்றி
உருகிய அன்புறு காதல் உள் அலைப்பத்
தெள்ளும் இசையுடனே கூடப்
பெருகு தமிழ்த் தொடை சாத்தி அங்கு இருந்தார்
பெரும் புகலிப் பிள்ளையார்தாம் 6.1.472

2371 அந் நாளில் ஒரு வணிகன் பதிகன் ஆகி
அணைவான் ஓர் கன்னியையும் உடன் கொண்டு
பொன்னார் மேருச் சிலையார் கோயில் மாடு
புறத்தில் ஒரு மடத்து இரவு துயிலும் போது
மினார் வெள் எயிற்று அரவு கவ்வுதலும் கிளர்ந்த
6.1.473

விட வேகம் கடிது தலை மீக் கொண்டு ஏறத்
தன் ஆவி நீங்கும் அவன் தன்மை கண்டு சாயல்
இளம் கன்னி நிலை தளர்ந்து சோர்வான்

2372 வாள் அரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாள்
மறு மாற்றம் மற்று ஒருவர் கொடு பார் இன்றி
ஆளரியேறு அனையானை அணுக வீழ்ந்தே அசைந்த
மலர்க்கொடி போல்வாள் அரற்றும் போது
கோள் உருமும் புள் அரசும் அனையார் எல்லாக்
கொள்கையினாலும் தீர்க்கக் குறையாதாக
நீள் இரவு புலர் காலை மாலை வாச நெறி குழலாள்
நெடிது அயர்ந்து புலம்புகின்றாள் 6.1.474

2373 அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவாக உடன் போந்தேன் அரவால் வீடி
என்னை உயிர் விட்டு அகன்றாய் யான் என் செய்கேன்
இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாரும் இல்லை
மன்னிய சீர் வணிகர் குல மணியே யானும் வாழேன்
என்று என்று அயர்வாள் மதியினாலே
சென்னி இளம் பிறை அணிவார் கோயில் வாயில்
திசை நோக்கித் தொழுது அழுதாள் செயல் ஒன்று இல்லாள் 6.1.475

2374 அடியாராம் இமையவர் தம் கூட்டம் உய்ய
அலை கடல் வாய் நஞ்சு உண்ட அமுதே செங்கண்
நெடியானும் நான்முகனும் காணாக் கோல நீலவிட
அரவு அணிந்த நிமலா வெந்து
பொடியான காமன் உயிர் இரதி வேண்டப்
புரிந்து அளித்த புண்ணியனே பொங்கர் வாசக்
கடியாரும் மலர்ச் சோலை மருங்கு சூழும் கவின்
மருகற் பெருமானே காவாய் என்றும் 6.1.476

2375 வந்து அடைந்த சிறு மறையோன் உயிர்
மேல் சீறி வரும் காலன் பெருங்கால வலயம் போலும்
செந்தறு கண் வெள் எயிற்றுக் கரிய கோலம்
சிதைந்து உருள உதைத்து அருளும் செய்யதாளா
இந்த விடக் கொடு வேகம் நீங்குமாறும் யான்
இடுக்கண் குழி நின்றும் ஏறு மாறும்
அந்தி மதிக் குழவி வளர் செய்ய வேணி அணி
மருகற் பெருமானே அருளாய் என்றும் 6.1.477

2376 இத் தன்மை சிவன் அருளே சிந்தித்து ஏங்கும்
இளங்கொடி போல் நுடங்கும் இடை ஏழை ஏத்தும்
அத் தன்மை ஓசை எழுந்து எங்கள் சண்பை
6.1.478

ஆண்டகையார் கும்பிட வந்து அணைகின்றார் தம்
மெய்த் தன்மை விளங்கு திருச் செவியில் சார
மேவுதலும் திரு உள்ளக் கருணை மேல் மேல்
வைத் தன்னம் என அயர்வாள் மாடு நீடு மா
தவத்தோர் சூழ எழுந்து அருளி வந்தார்

2377 சிரபுரத்து மறையவனார் சென்று நின்று
சிவபெருமான் அருள் போற்றிச் சிந்தை நைந்து
பரிவுறுவாள் தனை நோக்கிப் பயப்படேல் நீ
பருவரலும் நும் பரிசும் பகர்வாய் என்னக்
கரமலர் உச்சியின் மேல் குவித்துக் கொண்டு
கண் அருவி சொரிந்து இழியக் காழி வேதப்
புரவலனார் சேவடிக் கீழ் வீழ்ந்து தாங்கள்
போந்ததுவும் புகுந்ததுவும் புகலல் உற்றாள் 6.1.479

2378 வளம் பொழில் சூழ் வைப்பூர் கோன் தாமன்
எந்தை மருமகன் மற்று இவன் அவற்கு மகளிர்நல்ல
இளம் பிடியார் ஓர் எழுவர் இவரில் மூத்தாள்
இவனுக்கு என்றே உரை செய்தே ஏதிலானுக்குக்
குளம் பெருகத் தனம் பெற்றுக் கொடுத்த
பின்னும் ஓர் ஒருவராக எனை ஒழிய ஈந்தான்
தளர்ந்து அழியும் இவனுக்காத் தகவு செய்து
அங்கு அவரை மறைத்து இவன் தனையே சார்ந்துபோந்தேன் 6.1.480

2379 மற்று இவனும் வாள் அரவு தீண்ட மாண்டான்
மறி கடலில் கலம் கவிழ்த்தால் போல்நின்றேன்
சுற்றத்தார் என வந்து தோன்றி என்பால் துயரம்
எலாம் நீங்க அருள் செய்தீர் என்னக்
கற்றவர்கள் தொழுது ஏத்தும் காழி வேந்தர்
கருணையினால் காரிகையாள் தனக்கு நல்கப்
பற்றியவாள் அரவு விடம் தீரு மாறு பணைமருகர்
பெருமானைப் பாடலுற்றார் 6.1.481

2380 சடையானை எவ்வுயிர்க்கும் தாயானானை
சங்கரனை சசி கண்ட மவுலியானை
விடையானை வேதியனை வெண் நீற்றானை
விரவாதார் புரம் மூன்றும் எரியச் செற்ற
படையானைப் பங்கயத்து மேவினானும் பாம்பு
அணையில் துயின்றானும் பரவும் கோலம்
உடையானை உடையானே தகுமோ இந்த
ஒள்ளிழையார் உள் மெலிவு என்று எடுத்துப் பாட 6.1.482

2381 பொங்கு விடம் தீர்ந்து எழுந்து நின்றான்
சூழ்ந்த பொருவில் திருத் தொண்டர் குழாம் பொலிய ஆர்ப்ப
அங்கையினை உச்சியின் மேல் குவித்துக்
கொண்டு அங்கு அருள் காழிப் பிள்ளையார் அடியில்வீழ்ந்த
நங்கை அவள் தணை நயந்த நம்பியோடு
நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம்
மங்குல் தவழ் சோலை மலி புகலி வேந்தர்
மணம் புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார் 6.1.483

2382 மற்றவர்க்கு விடை கொடுத்து அங்கு அமரும்
நாளில் மருகல் நகரினில் வந்து வலியபாசம்
சொற்ற புகழ்ச் சிறுத் தொண்டர் வேண்ட மீண்டும்
செங்காட்டங் குடியில் எழுந்து அருள வேண்டிப்
பற்றி எழும் காதல் மிக மேல் மேல் சென்று பரமனார்
திறத்து உன்னிப் பாங்கர் எங்கும்
சுற்றும் அருந்தவரோடும் கோயில் எய்திச் சுடர் மழு
ஆண்டவர் பாதம் தொழுவான் புக்கார் 6.1.484

2383 புக்கு இறைஞ்சி எதிர் நின்று போற்றுகின்றார்
பொங்கு திரை நதிப்புனலும் பிறையும்சேர்ந்த
செக்கர் முடிச் சடை மவுலி வெண்ணீற்றார் தம்
திருமேனி ஒரு பாகம் பசுமை ஆக
மைக் குலவு கண்டத்தார் மருகர் கோயில் மன்னு
நிலை மனம் கொண்டு வணங்குவார் முன்
கைக் கனலார் கணபதீச் சரத்தின் மேவும் காட்சி
கொடுத்து அருளுவான் காட்டக் கண்டார் 6.1.485

2384 மருகல் அமர்ந்து நிறைந்த கோலம் மல்கு
செங் காட்டங் குடியின் மன்னிப்
பெருகு கணபதி ஈச்சரத்தார் பீடு உடைக்
கோலமே ஆகித் தோன்ற
உருகிய காதலும் மீது பொங்க உலகர்
முன் கொள்ளும் உணர்வு நீட
அருவி கண் வார் உறப் பாடலுற்றார்
அங்கமும் வேதமும் என்று எடுத்து 6.1.486

2385 கண்டு எதிர் போற்றி வினவிப் பாடிக்
கணபதி ஈச்சரம் காதலித்த
அண்டர் பிரானை வணங்கி வைகும்
அப்பதியில் சில நாள் போற்றித்
தொண்டருடன் அருள் பெற்று மற்றத்
தொல்லைத் திருப்பதி எல்லை நீங்கிப்
புண்டரிகத் தடம் சூழ் பழனப் பூம் 6.1.487

புகலூர் தொழப் போதுகின்றார்

2386 சீரின் மலிந்த சிறப்பின் மேவும் சிறுத்
தொண்டர் நண்பருடன் செல்ல நல்ல
வேரி நறும் தொங்கல் மற்றவரும் விடை
அருளப் பெற்று மீண்ட பின்பு
நீரின் மலிந்த சடையர் மேவி நிகழும்
பதிகன் பல பணிந்து
பாரின் மலிந்து நிறைந்த செல்வம் பயில்
புகலூர் நகர்ப் பாங்கு அணைந்தார் 6.1.488

2387 திருப்புகலூர் திருத் தொண்டரோடும்
செம்மை முருகனார் மெய்ம் மகிழ்ந்த
விருப்பொடு சென்று எதிர் கொள்ள வந்து
வேத முதல்வர் தம் கோயில் எய்திப்
பொருப்பு உறழ் கோபுரத்து உட் புகுந்து
பூமலி முன்றில் புடை வலம் கொண்டு
ஒருப் படு சிந்தையொடு உள் அணைந்தார்
ஓதாது ஞானம் எலாம் உணர்ந்தார் 6.1.489

2388 புக்கு எதிர் தாழ்ந்து விழுந்து எழுந்து
பூம் புகலூர் மன்னு புண்ணியரை
நெக்கு உருகும் சிந்தை அன்பு பொங்க
நிறை மலர் கண்ணீர் அருவி செய்ய
மிக்க தமிழ்த் தொடை மாலை சாத்தி
மேவிய ஏழ் இசை பாடிப் போந்து
திக்கு நிறை சீர் முருகர் முன்பு செல்ல
அவர் மடம் சென்று புக்கார் 6.1.490

2389 ஆங்கு அவர் போற்றும் சிறப்பின் மேவி
அப் பதி தன்னில் அமரு நாளில்
வாங்கு மலைச் சிலையார் மகிழ்ந்த வர்த்த
மானீச்சரம் தான் வணங்கி
ஓங்கிய அன்பின் முருகனார் தம் உயர்
திருத்தொண்டு சிறப்பித்து ஓங்கும்
பாங்கு உடை வண்தமிழ் பாடி நாளும் பரமர்
தம் பாதம் பணிந்து இருந்தார் 6.1.491

2390 மற்றத் திருப்பதி வைகு நாளில் வாக்கின்
பெரு விறல் மன்னனார் தாம்
புற்றிடம் கொண்டாரை வந்து இறைஞ்சிப்
பொன் மதில் ஆரூர் புகழ்ந்து போற்றிச்
சிறு இடைப் பொன் தொடிப் பாங்கர்

6.1.492

தங்கும் திருப்புகலூர் தொழச் சிந்தை செய்து
கொற்றவனார் அருள் பெற்ற தொண்டர்
குழாத்துடன் அவ்வூர் குறுக வந்தார்

2391 நாவுக்கு அரசர் எழுந்து அருளும்
நல்ல திருவார்த்தை கேட்ட போதே
சேவில் திகழ்ந்தவர் மைந்தர் ஆன திருஞான
சம்பந்தர் சிந்தை அன்பு
மேவுற்ற காதல் மிகப் பெருக விரைந்து எதிர்
கொள்ள மெய் அன்பர் ஓடும்
பூவில் பொலி பொய்கை சூழ் புகலூர் புறம்பு
அணை எல்லை கடந்து போந்தார் 6.1.493

2392 அங்கணர் ஆரூர் வணங்கிப் போந்த
அரசும் எதிர் வந்து அணைய வாசப்
பொங்கு புனல்தண் புகலி வந்த பூசுரர்
சிங்கமும் பொற்பின் எய்தித்
தங்களின் அன்பின் முறைமை யாலே
தாழ்ந்து வணங்கித் தனித் தனியே
மங்கலம் ஆகிய நல் வரவின் வாய்மை
வினவி மகிழும் போது 6.1.494

2393 மெய்த்திரு ஞான சம்பந்தர் வாக்கின்
வேந்தரை விருப்பினாலே
அப்பரை இங்கு அணையப் பெறும் பேர்
அருள் உடையோம் அந்தனர் ஆரூர்
எப்பரிசால் தொழுது உய்ந்தது என்று
வினவிட ஈறில் பெரும் தவத்தோர்
செப்பிய வண் தமிழ் மாலையாலே திருவாதிரை
நிகழ் செல்வம் சொன்னார் 6.1.495

2394 அரசர் அருளிச் செய்த வாய்மை
அப்பொழுதே அருள் ஞானம் உண்ட
சிரபுர வேந்தரும் சிந்தையின் கண்
தென் திருவாரூர் வணங்குதற்கு
விரவிய காதலில் சென்று போற்றி மீண்டும்
வந்து உம்முடன் மேவுவன் என்று
உரவு கடல் கல் மிதப்பின் வந்தார்க்கு உரைத்து
உடன்பாடு கொண்டு ஒல்லை போந்தார் 6.1.496

2395 சொல் பெரு வேந்தரும் தோணி மூதூர்
தோன்றல் பின் காதல் தொடத் தாமும்
பொன் புகலூர் தொழச் சென்று அணைந்தார்
6.1.497

புகலிப் பிரானும் புரிந்த சிந்தை
விற்குடி வீரட்டம் சென்று மேவி விடையவர்
பாதம் பணிந்து போற்றிப்
பற்பல ஆயிரம் தொண்டரோடும் பாடலன்
நான் மறைப் பாடிப் போந்தார்

2396 துணர் இணர்ச் சோலையும் சாலி
வேலித் துறை நீர்ப் பழனமும் சூழ் கரும்பின்
மண மலி கானமும் ஞானமும் உண்டார்
மருங்கு உற நோக்கி மகிழ்ந்து அருளி
அணைபவர் அள்ளல் கழனி ஆரூர் அடைவோம்
என மொழிந்து அன்பு பொங்கப்
புணர் இசைச் செந்தமிழ் கொண்டு போற்றிப்
பொன் மதில் ஆரூர்ப் புறத்து அணைந்தார் 6.1.498

2397 வான் உயர் செங்கதிர் மண்டலத்து
மருங்கு அணையும் கொடி மன்னும் ஆரூர்
தான் ஒரு பொன் உலகு என்னத் தோன்றும்
தயங்கு ஒளி முன் கண்டு சண்பை வந்த
பால் நிற நீற்றர் பருக்கையானைப் பதிகத்
தமிழ் இசைபாடி ஆடித்
தேனொடு வண்டுமுரலும் சோலைத்
திருப்பதி மற்று அதன் எல்லை சேர்ந்தார் 6.1.499

2398 பொங்கிய சிந்தை விருப்பின் வெள்ளம்
பொழிந்து புவிமேல் பொலிவது என்ன
எங்கும் குளிர் ஒளி வீசு முத்தின் இலங்கு
சிவிகை இழிந்தருளிச்
செங்கை நிறை மலர் கொண்டு தூவித்
திரு இருக் குறள் பாடி ஏத்தித்
தங்கள் பிரான் அருள் ஆளும் ஆரூர்
தனைப் பணிவு உற்றார் தமிழ் விரகர் 6.1.500

2399 படியில் ஞானம் உண்டு அருளிய பிள்ளையைப் பணிதற்கு
அடியர் சென்று எதிர் கொள எழுந்து அருளும் அஞ்ஞான்று
வடி கொள் சூலத்தர் மன்னிய பொன்மதில் ஆரூர்க்
கடி கொள் பேரணிப் பொலிவையார் முடிவுறக் காண்பார் 6.1.501

2400 நான மான் மத நளிர் பெரும் சேற்று இடை நறும் பொன்
தூ நறுந்துகள் சொரிதலில் சுடர் ஒளிப் படலை
யான வீதிகள் அடி வலித்து அவை கரைந்தலைய
வான மாரியில் பொழிந்தது மலர் மது மாரி 6.1.502

2401 ஆடல் நீடுவ துகில் கொடி அணி குழல் கொடிகள்
தோடு சூழ்வன சுரும்பொடு தமனியத் தசும்பு
காடு கொண்டன கதலி தோரணம் நிரைக் கமுகு
மாட மாளிகை மண்டபங்களின் மருங்கு எல்லாம் 6.1.503

2402 மாலை சூழ் புறம் கடைகளின் மணி நிரை விளக்கின்
கோல நீள் சுடர் ஒளியுடன் கோத்து இடை தூக்கும்
நீல மா மணி நிழல் பொர நிறம்புகர் படுக்கும்
பால வாயின பவன வேதிகை மலர்ப் பந்தர் 6.1.504

2403 தழை மலர்த்தடம் சாலைகள் தெற்கள் சதுக்கம்
குழை முகத்தவர் ஆட அரங்கு இமையவர் குழாமும்
விழை சிறப்பின வியல் இடம் யாவையும் மிடைந்து
மழை முழக்கு என இயம்பின மங்கல இயங்கள் 6.1.505

2404 விரவு பேர் அணி வேறு வேறு இன்னன விளங்கும்
பிரசமென்மலர் சோலை சூழ் பெரும் திருவாரூர்
அரசு அளிப்பவர் அருளினால் அடியவர் குழுவும்
புரிசனங்களும் புறத்து அணைந்து எதிர் கொள்ளும் பொழுது 6.1.506

2405 வந்து இறைஞ்சும் மெய்த் தொண்டர் தம் குழாத்து எதிர் வணங்கிச்
சந்த முத்தமிழ் விரகராம் சண்பையர் தலைவர்
அந்தமாய் உலகு ஆதியாம் பதிகம் அங்கு எடுத்தே
எந்தை தான் எனை என்று கொள்ளும் கொல் என்று இசைத்தார் 6.1.507

2406 ஆன அத்திரு பதிகம் முன் பாடிவந்து அணையும்
ஞான வித்தகர் மெய்த்தவர் சூழ அந் நகரார்
தூ நறும் சுண்ண மலர் பொரி தூஉய்த் தொழுது ஏத்த
வான நாயகர் கோயில் வாயிலின் மருங்கு அணைந்தார் 6.1.508

2407 மன்னு தோரண வாயில் முன் வணங்கி உள் புகுவார்
தன் உள் எவ்வகைப் பெருமையும் தாங்கிய தகைத்தாம்
பன் நெடும் சுடர்ப் படலையின் பரப்பினைப் பார்த்துச்
சென்னி தாழ்ந்து தேவ ஆசிரியன் தொழுது எழுந்தார் 6.1.509

2408 . மாடு சூழ் திரு மாளிகை வலம் கொண்டு வணங்கிக்
கூடு காதலில் கோபுரம் பணிந்து கை குவித்துத்
தேடு மால் அயர்க்கு அரியராய்ச் செழுமணிப் புற்றில்
நீடு வாழ் முன்பு நிலமுறப் பல முறை பணிந்தார் 6.1.510

2409 பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர் பரவிய புளகம்
அணிந்த மேனியோடு ஆடினர் பாடினர் அறிவில்
துணிந்த மெய்ப் பொருள் ஆனவர் தமைக் கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைந்து எழு வேட்கையில் தாழ்ந்தார் 6.1.511

2410 செஞ் சொல் வண் தமிழ்த் திருப்பதிகத்து இசை எடுத்து
நஞ்சு போனகம் ஆக்கிய நம்பர் முன் பாடி 6.1.512

மஞ்சு சூழ் திரு மாளிகை வாயிலின் புறம் போந்து
அஞ்சு எழுத்தின் மெய் உணர்ந்தவர் திருமடத்து அணைந்தார்

2411 அங்கு அணைந்து அமர்ந்து அருளுவார் அரன் நெறி அமர்ந்த
செங்கண் ஏற்றவர் சேவடி வணங்கி முன் திளைத்துப்
பொங்கு பேர் ஒளிப் புற்று இடம் கொண்டவர் புனிதப்
பங்கயப் பதம் தொழுது காலம் தொறும் பணிந்தார் 6.1.513

2412 புற்றிடம் கொளும் புனிதரைப் போற்றி இசை பெருக
பற்றும் அன்பொடு பணிந்து இசைப் பதிகங்கள் பாடி
நல்தவத் திருத்தொண்டர்கள் ஒடு நலம் சிறப்ப
மற்ற வண்பதி தன் இடை வைகும் அந் நாளில் 6.1.514

2413 மல்லல் நீடிய வலி வலம் கோளிலி முதலாத்
தொல்லை நான் மறை முதல்வர் தம் பதி பல தொழுதே
எல்லை இல் திருப்பதிகங்களால் பணிந்து ஏத்தி
அல்லல் தீர்ப்பவர் மீண்டும் ஆரூர் தொழ அணைந்தார் 6.1.515

2414 ஊறு காதலில் ஒளி வளர் புற்றிடம் கொண்ட
ஆறு உலாவிய சடை முடி ஐயரைப் பணிந்து
நீறு வாழ் என நிகழ் திருத் தொண்டர் களோடும்
ஈறிலாத் திரு ஞான சம்பந்தர் அங்கு இருந்தார் 6.1.516

2415 அங்கு நன்மையில் வைகும் அந்நாள் சில அகல
நங்கள் தம் திரு நாவினுக்கு அரசரை நயந்து
பொங்கு சீர்ப் புகலூர் தொழ அருளினால் போவார்
தங்கும் அப்பதிப் புறம்பணை சார்ந்து அருள் செய்வார் 6.1.517

2416 புவன ஆரூரினில் புறம் போந்து
அதனையே நோக்கி நின்றே
அவம் இலா நெஞ்சமே அஞ்சல் நீ
உய்யும் ஆறு அறிதி அன்றே
சிவனது ஆரூர் தொழாய் நீ மறவாது
என்று செங்கை கூப்பி
பவனமாய்ச் சோடையாய் எனும்
திருப்பதிகம் முன் பாடினாரே 6.1.518

2417 காழியார் வாழ வந்து அருள் செயும்
கவுணியப் பிள்ளையார் தாம்
ஆழியான் அறிஒணா அண்ணல்
ஆரூர் பணிந்து அரிது செல்வார்
பாழி மால் யானையின் உரி புணைந்தார்
பனையூர் பணிந்து
வாழி மாமறை இசைப் பதிகமும் பாடி
அப் பதியினில் வைகி 6.1.519

2418 அங்கு நின்று அரிது எழுந்து அருளுவார் அகில காரணமும் ஆனார்
தங்கு நல் பதிகளும் பிற பணிந்து அருளி வண் தமிழ் புனைந்தே
எங்கும் மெய்த்தவர் குழாம் எதிர் கொளத் தொழுது எழுந்து அருளி வந்தார்
பொங்கு தண் பாசடைப் பங்கயப் புனல் வயல் புகலூர் சார 6.1.520

2419 நாவினுக்கு அரசரும் நம்பி சீர் முருகரும் மற்று நாமச்
சேவுகைத்தவர் திருத் தொண்டர் ஆனவர்கள் முன் சென்று சீதப்
பூவினில் பொலி புனல் புகலியார் போதகத்து எதிர் பணிந்தே
மேவ மற்று அவருடன் கூடவே விமலர் கோயிலை அடைந்தார் 6.1.521

2420 தேவர் தம் தலைவனார் கோயில் புக்கு
அனைவரும் சீர் நிலத்து உற வணங்கி
பாவரும் தமிழ் இசைப் பதிகமும் பாடி முன்
பரவுவார் புறம்பு அணைந்தே
தாவில் சீர் முருகனார் திருமனைக்கு எய்தி
அத் தனி முதல் தொண்டர் தாமே
யாவையும் குறை அறுத்து இட அமர்ந்து
அருளுவார் இனிதின் அங்கு உறையும் நாளில் 6.1.522

2421 நீல நக்க அடிகளும் நிகழ் சிறுத்
தொண்டரும் உடன் அணைந்து எய்தும் நீர்மைச்
சீலம் மெய்த்தவர்களும் கூடவே கும்பிடும்
செய்கை நேர் நின்று வாய்மை
சாலமிக்கு உயர் திருத் தொண்டின்
உண்மை திறம் தன்னையே தெளிய நாடிக்
காலம் உய்த்தவர்களோடு அளவளாவிக்
கலந்து அருளினார் காழி நாடார் 6.1.523

2422 கும்பிடும் கொள்கையில் குறி கலந்து
இசை எனும் பதிக முன் ஆன பாடல்
தம் பெரும் தலைமையால் நிலைமை சால்
பதிய தன் பெருமை சால்புற விளம்பி
உம்பரும் பரவுதற்கு உரிய சொல்
பிள்ளையார் உள்ளம் மெய்க் காதல் கூர
நம்பர் தம் பதிகள் ஆயின ஏனைப் பலவும்
முன் நண்ணியே தொழ நயந்தார் 6.1.524

2423 புள்ளல் அம்பு தண்புனல் புகலூர்
உறை புனிதனார் அருள் பெற்றுப்
பிள்ளையார் உடன் நாவினுக்கு
அரசரும் பிற பதி தொழச் செல்வார்
வள்ளலார் சிறுத் தொண்டரும் நீல
6.1.525

நக்கரும் வளம் பதிக்கு ஏக
உள்ளம் அன்புறும் முருகர் அங்கு
ஒழியவும் உடன்பட இசைவித்தார்

2424 கண்ணகன் புகல் ஊரினைத் தொழுது
போம் பொழுதினில் கடல் காழி
அண்ணலார் திரு நாவினுக்கு அரசர் தம்
அருகு விட்டு அகலாதே
வண்ண நித்திலச் சிவிகையும் பின் வர
வழிகொள உறும் காலை
எண்ணில் சீர்த்திரு நாவினுக்கு அரசரும்
மற்று அவர்க்கு இசைக்கின்றார் 6.1.526

2425 நாயனார் உமக்கு அளித்து அருள்
செய்த இந் நலம் கிளர் ஒளி முத்தின்
தூய யானத்தின் மிசை எழுந்து அருளுவீர்
என்றலும் சுடர்த் திங்கள்
மேய வேணியர் அருளும் இவ்வாறு எனில்
விரும்பு தொண்டர்களோடும்
போய தெங்குநீர் அங்கு யான் பின் வரப்
போவது என் அருள் செய்தார் 6.1.527

2426 என்று பிள்ளையார் மொழிந்து அருள் செய்திட
இரும் தவத்து இறையோரும்
நன்று நீர் அருள் செய்ததே செய்வன் என்று
அருள் செய்து நயப்பு உற்ற
அன்றை நாள் முதல் உடன் செல்லும் நாள்
எலாம் அவ் இயல்பினில் செல்வார்
சென்று முன் உறத் திருவம்பர் அணைந்தனர்
செய்தவக் குழாத்தோடும் 6.1.528

2427 சண்பை மன்னரும் தம்பிரான் அருள்
வழி நிற்பது தலைச் செல்வார்
பண்பு மேம் படு பனிக்கதிர் நித்திலச்
சிவிகையில் பணிந்து ஏறி
வண் பெரும் புகல் ஊரினைக் கடந்து
போய் வரும் பரிசனத்தோடும்
திண் பெரும் தவர் அணைந்தது எங்கு
என்று போய்த் திருவம்பர் நகர் புக்கார் 6.1.529

2428 அம்பர்மா நகர் அணைந்து மா
காளத்தில் அண்ணலார் அமர்கின்ற
செம் பொன் மாமதில் கோயிலை வலம் கொண்டு
6.1.530

திருமுன்பு பணிந்து ஏத்தி
வம்புலாம் மலர் தூவி முன் பரவியே வண்
தமிழ் இசை மாலை
உம்பர் வாழ நஞ்சு உண்டவர் தமைப்
பணிந்து உருகும் அன்பொடு தாழ்ந்தார்

2429 தாழ்ந்து நாவினுக்கு அரசுடன்
தம்பிரான் கோயில் முன்புறம் எய்திச்
சூழ்ந்த தொண்டரோடு அப்பதி
அமர்பவர் சுரநதி முடிமீது
வீழ்ந்த வேணியர் தமைப் பெரும் காலங்கள்
விரும்பினால் கும்பிட்டு
வாழ்ந்து இருந்தனர் காழியர் வாழ
வந்து அருளிய மறை வேந்தர் 6.1.531

2430 பொருவு இலாத சொல் புல்கு பொன்
நிறம் முதல் பதிகங்களால் போற்றித்
திருவின் ஆர்ந்த கோச் செங்கணான்
அந்நகர் செய்த கோயிலைச் சேர்ந்து
மருவு வாய்மை வண் தமிழ் மாலை
அவ்வளவனைச் சிறப்பித்துப்
பெருகு காதலில் பணிந்து முன் பரவினார்
பேணிய உணர்வோடும் 6.1.532

2431 இன்ன வாறு சொல் மாலைகளால்
துதித்து இறைஞ்சி அங்கு அமர் நாளில்
கன்னி மா மதில் திருக்கடவூர் தொழக்
காதல் செய்து அருளிப்போய்
மன்னு கோயில்கள் பிறபதி வணங்கியே
வாக்கின் மன்னவ ரோடும்
அந்நெடும்பதி அணை உறக் அயலரோடு
அடியவர் எதிர்கொண்டார் 6.1.533

2432 மற்ற வண் பதி அணைந்து வீர
அட்டத்து மழவிடையார் கோயில்
சுற்று மாளிகை வலம் கொண்டு காலனை
உதைத்து உருட்டிய செய்ய
பொன் சிலம்பு அணி தாமரை வணங்கிமுன்
போற்றி உய்ந்து எதிர் நின்று
பற்று அறுப்பவர் சடை உடையான்
எனும் பதிக இன் இசை பாடி 6.1.534

2433 பரவி ஏத்தி அங்கு அரிதினில்
போந்து பார் பரவு சீர் அரசோடு
விரவு நண்பு உடை குங்கிலிய பெருங்
கலயர் தம் மனை மேவிக்
கரை இல் காதல் மற்று அவர் அமைத்து
அருளிய விருந்து இனிது அமர்ந்து
சிரபுரத்தவர் திரு மயானமும் பணிந்து
இருந்தனர் சிறப்பு எய்தி 6.1.535

2434 சிறப்பு உடைத் திருப்பதி அதன்
இடைச் சில நாள் அமர்ந்து அருளோடும்
விறல் பெரும் கரி உரித்தவர் கோயில்கள்
தொழச் செல்வார்
மறைப் பெரும் திருக் கலயரும் உடன்பட
வணங்கிய மகிழ்வோடும்
அறப் பெரும் பயன் அனைய அத் தொண்டரோடு
அணைந்தனர் திருவாக்கூர் 6.1.535

2435 தக்க அந்தணர் மேவும் அப் பதியினில்
தான் தோன்றி மாடத்துச்
செக்கர் வார் சடை அண்ணலைப்
பணிந்து இசைச் செந்தமிழ் தொடைபாடி
மிக்க கோயில்கள் பிறவுடன் தொழுது
போய் மீச்சூர் பணிந்து ஏத்திப்
பக்கம் பாரிடம் பரவ நின்று ஆடுவார்
பாம்புரம் நகர் சேர்ந்தார் 6.1.537

2436 பாம்புரத் துறை பரமரைப் பணிந்து
நல் பதிக இன் இசை பாடி
வாம்புனல் சடை முடியினார் மகிழ்
இடம் மற்றும் உள்ளன போற்றிக்
காம்பினில் திகழ் கரும்பொடு செம்
நெலின் கழனி அம்பணை நீங்கித்
தேம் பொழில் திரு வீழி நன் மிழலையின்
மருங்கு உறச் செல்கிறார் 6.1.538

2437 அப்பொழுதின் ஆண்ட அரசை எதிர் கொண்ட
மெய்ப் பெருமை அந்தணர்கள் வெங்குரு வாழ் வேந்தனார்
பிற்பட வந்து எய்தும் பெரும் பேறு கேட்டு உவப்பார்
எப் பரிசினால் வந்து அணைந்து அங்கு எதிர் கொண்டார் 6.1.539

2438 நிறை குடம் தூபம் தீபம் நீட நிரைத்து ஏந்தி
நறை மலர் பொன் சுண்ணம் நறும் பொரியும் தூவி
6.1.540

மறை ஒலி போய் வான் அளப்ப மா முரசம் ஆர்ப்ப
இறைவர் திரு மைந்தர் தமை எதிர் கொள் வரவேற்றார்

2439 வந்து திரு வீழி மிழலை மறை வல்ல
அந்தணர்கள் போற்றி இசைப்பத் தாமும் மணி முத்தின்
சந்த மணிச் சிவிகை நின்று இழிந்து தாழ்ந்து அருளி
உய்ந்த மறையோர் உடன் அணைந்து அங்கு உள் புகுவார் 6.1.541

2440 அப்போது அரையார் விரிகோவண ஆடை
ஒப்பு ஓதரும் பதிகத்து ஓங்கும் இசைபாடி
மெய்ப் போதப் போது அமர்ந்தார் தம் கோயில் மேவினார்
கைப் போது சென்னியின் மேல் கொண்டு கவுணியர் 6.1.542

2441 நாவின் தனி மன்னர் தாமும் உடன் நண்ண
மேவிய விண் இழிந்த கோயில் வலம் கொள்வார்
பூவியலும் உந்தியான் போற்றப் புவிக் கிழிந்த
தேவியலும் மெய் கண்டு சிந்தை வியப்பு எய்தினார் 6.1.543

2442 வலம் கொண்டு புக்கு எதிரே வந்து வர நதியின்
சலம் கொண்ட வேணித் தனி முதலைத் தாழ்ந்து
நிலம் கொண்ட மேனியராய் நீடு பெரும் காதல்
புலம் கொண்ட சிந்தையினால் பொங்கி இசை மீப்பொழிந்தார் 6.1.544

2443 போற்றிச் சடையார் புனல் உடையான் என்று எடுத்து
சாற்றிப் பதிகத் தமிழ் மாலை சந்த இசை
ஆற்ற மிகப் பாடி ஆனந்த வெள்ளத்தில்
நீற்றழகர் சேவடிக் கீழ் நின்று அலைந்து நீடினார் 6.1.545

2444 நீடிய பேரன்பு உருகி உள்ளலைப்ப நேர் நின்று
பாடி எதிர் ஆடிப் பரவிப் பணிந்து எழுந்தே
ஆடிய சேவடிகள் ஆர்வம் உற உட்கொண்டு
மாடுயர் கோயில் புறத்து அரிது வந்து அணைந்தார் 6.1.546

2445 வந்து அணைந்து வாழ்ந்து மதில்புறத்து ஓர் மா மடத்துச்
செம் தமிழ்ச் சொல் வேந்தரும் செய்தவரும் சேர்ந்து அருளச்
சந்த மணிக் கோபுரத்துச் சார்ந்த வடபால் சண்பை
அந்தணர் சூளா மணியார் அங்கு ஓர் மடத்து அமர்ந்தார் 6.1.547

2446 அங்கண் அமர்வார் அரனார் அடி இணைக் கீழ்த்
தங்கிய காதலினால் காலங்கள் தப்பாமே
பொங்கு புகழ் வாகீசரும் கூடப் போற்றி இசைத்தே
எங்கும் இடர் தீர்ப்பார் இன்புற்று உறைகின்றார் 6.1.548

2447 ஓங்கு புனல் பேணு பெருந்துறையும் உள்ளிட்ட
பாங்கர் திலதைப் பதிமுற்றமும் பணிந்து
வீங்கு ஒலி நீர் வீழி மழலையினில் மீண்டும் அணைந்து
ஆங்கு இனிது கும்பிட்டு அமர்ந்து ஒழுகும் நாளில் 6.1.549

2448 சேண் உயர் மாடப் புகலி உள்ளார்
திரு ஞான சம்பந்தப் பிள்ளையாரைக்
காணும் விருப்பில் பெருகும் ஆசை கைம்
மிகு காதல் கரை இகப்பப்
பூணும் மனத்தொடு தோணி மேவும்
பொருவிடை யார் மலர்ப் பாதம் போற்றி
வேணு புரத்தை அகன்று போந்து வீழி
மிழலையில் வந்து அணைந்தார் 6.1.550

2449 ஊழி முடிவில் உயர்ந்த வெள்ளத்து
ஓங்கிய காழி உயர் பதியில்
வாழி மறையவர் தாங்கள் எல்லாம் வந்து
மருங்கு அணைந்தார்கள் என்ன
வீழி மிழலையின் வேதியர்கள் கேட்டு மெய்
ஞானம் உண்டாரை முன்னா
ஏழ் இசை சூழ்மறை எய்த ஓதி எதிர் கொள்
முறைமையில் கொண்டு புக்கார் 6.1.551

2450 சண்பைத் திருமறையோர்கள் எல்லாம்
தம் பிரானாரைப் பணிந்து போந்து
நண்பில் பெருகிய காதல் கூர்ந்து
ஞான சம்பந்தர் மடத்தில் எய்திப்
பண்பில் பெருகும் கழுமலத்தார் பிள்ளையார்
பாதம் பணிந்து பூண்டே
எண் பெற்ற தோணிபுரத்தில் எம்மோடு
எழுந்து அருளப் பெற வேண்டும் என்றார் 6.1.552

2451 என்று அவர் விண்ணப்பம் செய்த போதில்
ஈறு இல் சிவ ஞானப் பிள்ளை யாரும்
நன்று இது சாலவும் தோணி மேவும் நாதர்
கழல் இணை நாம் இறைஞ்ச
இன்று கழித்து மிழலை மேவும் இறைவர்
அருள் பெற்று போவது என்றே
அன்று புகலி அருமறையோர்க்கு அருள்
செய்து அவர்க்கு முகம் அளித்தார் 6.1.553

2452 மேற்பட்ட அந்தணர் சண்பை மேவும்
வேதியர்க்கு ஆய விருந்து அளிப்ப
பால் பட்ட சிந்தையராய் மகிழ்ந்து
பரம் பொருள் ஆனார் தமைப் பரவும்
சீர் பட்ட எல்லை இனிது செல்லத் திருத்
தோணி மேவிய செல்வர் தாமே
கார் பட்ட வண்கைக் கவுணியர்க்கு கனவிடை 6.1.554

முன் நின்று அருள் செய்கின்றார்

2453 தோணியில் நாம் அங்கு இருந்த
வண்ணம் தூமறை வீழி மிழலை தன்னுள்
சேண் உயர் விண்ணினின்று இழிந்த
இந்தச் சீர் கொள் விமானத்துக் காட்டுகின்றோம்
பேணும் படியால் அறிதி என்று பெயர்ந்து
அருள் செய்யப் பெரும் தவங்கள்
வேணு புரத்தவர் செய்ய வந்தார் விரவும்
புளகத் தொடும் உணர்ந்தார் 6.1.555

2454 அறி உற்ற சிந்தையராய் எழுந்தே
அதிசயித்து உச்சிமேல் அங்கை கூப்பி
வெறி உற்ற கொன்றையினார் மகிழ்ந்த விண்
இழி கோயிலில் சென்று புக்கு
மறி உற்ற கையரைத் தோணி மேல் முன்
வணங்கும்படி அங்குக் கண்டு வாழ்ந்து
குறியில் பெருகும் திருப்பதிகம் குலவிய
கொள்கையில் பாடுகின்றார் 6.1.556

2455 மைம் மரு பூங்குழல் என்று எடுத்து
மாறில் பெரும் திருத்தோணி தன் மேல்
கொம்மை முலையினாள் கூட நீடு
கோலம் குலாவு மிழலை தன்னுள்
செம்மை தரு விண் இழிந்த கோயில்
திகழ்ந்தபடி இது என் கொல் என்று
மெய்ம்மை விளங்கும் திருப்பதிகம் பாடி
மகிழ்ந்தனர் வேதவாயர் 6.1.557

2456 செஞ்சொல் மலர்ந்த திருப்பதிகம்
பாடி திருக் கடைக் காப்புச் சாத்தி
அஞ்சலி கூப்பி விழுந்து எழுவார்
ஆனந்த வெள்ளம் அலைப்பப் போந்து
மஞ்சிவர் சோலைப் புகலி மேவும் மா
மறையோர் தமை நோக்கி வாய்மை
நெஞ்சில் நிறைந்த குறிப்பில் வந்த நீர்மை
திறத்தை அருள் செய்கின்றார் 6.1.558

2457 பிரம புரத்தில் அமர்ந்த முக்கண்
பெரிய பிரான் பெருமாட்டி யோடும்
விரவிய தானங்கள் எங்கும் சென்று விரும்பிய
கோலம் பணிந்து போற்றி
வருவது மேல் கொண்ட காதல் கண்டு
6.1.559

அங்கு அமர்ந்த வகை இங்கு அளித்தது என்று
தெரிய உரைத் தருள் செய்து நீங்கள்
சிரபுர மாநகர் செல்லும் என்றார்

2458 என்று கவுணியப் பிள்ளையார் தாம்
இயம்பப் பணிந்தருள் ஏற்றுக் கொண்டே
ஒன்றிய காதலின் உள்ளம் அம் கண்
ஒழிய ஒருவாறு அகன்று போந்து
மன்றுள் நடம் புரிந்தார் மகிழ்ந்த தானம்
பலவும் வணங்கிச் சென்று
நின்ற புகழ்த் தோணி நீடுவாரைப் பணியும்
நியதியராய் உறைந்தார் 6.1.560

2459 சிரபுரத்து அந்தணர் சென்ற பின்னைத்
திருவீழி மேவிய செல்வர் பாதம்
பரவுதல் செய்து பணிந்து நாளும் பண்பின்
வழாத் திருத் தொண்டர் சூழ
உரவுத் தமிழ்த் தொடை மாலை சாத்தி
ஓங்கிய நாவுக்கு அரசரோடும்
விரவிப் பெருகிய நண்பு கூர மேவி
இனிது அங்கு உறையும் நாளில் 6.1.561

2460 மண்ணின் மிசை வான் பொய்த்து நதிகள்
தப்பி மன் உயிர்கள் கண் சாம்பி உணவு மாறி
விண்ணவர்க்கும் சிறப்பில் வரும் பூசை
ஆற்ற மிக்க பெரும் பசி உலகில் விரவக் கண்டு
பண் அமரும் மொழி உமையாள் முலையின்
ஞானப் பால் அறா வாயருடன் அரசும் பார் மேல்
கண் நுதலான் திருநீற்றுச் சார் வினோர்க்கும்
கவலை வருமோ என்று கருத்தில் கொண்டார் 6.1.562

2461 வானாகி நிலனாகி அனலுமாகி மாருதமாய்
இரு சுடராய் நீரும் ஆகி
ஊனாகி உயிராகி உணர்வுமாகி உலகங்கள்
அனைத்தும் ஆய் உலகுக்கு அப்பால்
ஆனாத வடிவாகி நின்றார் செய்ய அடி
பரவி அன்று இரவு துயிலும் போது
கான் ஆடு கங்காளர் மிழலை மூதூர் காதலித்தார்
கனவில் அணைந்து அருளிச் செய்வார் 6.1.563

2462 உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய
உறுபசி நோய் உமை அடையாது எனினும் உம்பால்
நிலவு சிவ நெறி சார்ந்தோர் தம்மை வாட்டம்
6.1.564

நீங்குதற்கு நித்தம் ஓர் ஓர் காசு நீடும்
இலகு மணிப் பீடத்துக் குணக்கும் மேற்கும்
உமக்கு இந்தக் காலம் தீர்ந்தால்
அலகில் புகழீர் தவிர்வ தாகும் என்றே அருள்
புரிந்தார் திருவீழி மிழலை ஐயர்

2463 தம்பிரான் அருள் புரிந்து கனவின்
நீங்கச் சண்பையர் இள ஏறு தாமும் உணர்ந்து
நம்பிரான் அருள் இருந்த வண்ணம் என்றே
நாவின் இசை அரசரொடும் கூட நண்ணி
வம்புலா மலர் இதழி வீழிநாதர் மணிக்
கோயில் வலம் செய்யப் புகுந்த வேலி
அம்பிகா பதி அருளால் பிள்ளையார் தாம்
அபிமுகத்துப் பீடிகை மேல் காசு கண்டார் 6.1.565

2464 காதலொடும் தொழுது எடுத்துக் கொண்டு நின்று
கை குவித்துப் பெரு மகிழ்ச்சி கலந்துபொங்க
நாதர் விரும்பு அடியார்கள் நாளும் நாளும் நல்
விருந்தாய் உண்பதற்கு வருக என்று
தீது இல் பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர்
திருவமுது கறி நெய்பால் தயிர் என்று இன்ன
ஏதம் உறாது இனிது உண்ண ஊட்டி அங்கண்
இருதிறத்து பெரும் தவரும் இருந்த நாளில் 6.1.566

2465 நாவினுக்கு வேந்தர் திரு மடத்தில் தொண்டர்
நாட் கூறு திரு அமுது செய்யக் கண்டு
சே உகைத்தார் அருள் பெற்ற பிள்ளையார் தம்
திருமடத்தில் அமுது ஆக்குவாரை நோக்கித்
தீவினைக்கு நீர் என்றும் அடைவிலாதீர் திரு
அமுது காலத்தால் ஆக்கி இங்கு
மேவு மிக்க அடியவருக்கு அளியா வண்ணம்
விளைந்தவாறு என் கொலோ விளம்பும் என்றார் 6.1.567

2466 திருமறையோர் தலைவர் தாம் அருளிச்
செய்யத் திருமடத்தில் அமுது அமைப்போர் செப்புவார்கள்
ஒரு பரிசும் அறிந்திலோம் இதனை உம்மை உடையவர்
பால் பெறும் படிக்காசு ஒன்றும் கொண்டு
கருதிய எல்லாம் கொள்ள வேண்டிச் சென்றால்
காசு தனை வாசி பட வேண்டும் என்பார்
பெரு முனிவர் வாகீசர் பெற்ற காசு பேணியே
கொள்வர் இது பிற்பாடு என்றார் 6.1.568

2467 திரு ஞான சம்பந்தர் அதனைக் கேட்டுச்
சிந்திப்பார் சிவபெருமான் நமக்குத் தந்த
ஒரு காசு வாசிபட மற்றக் காசு நன்று ஆகி
வாசி படாது ஒழிவான் அந்தப்
பெரு வாய்மை திருநாவுக்கரசர் தொண்டால்
பெறும் காசாம் ஆதலினால் பெரியோன் தன்னை
வருநாள்கள் தரும் காசு வாசி தீரப் பாடுவன்
என்று எண்ணியது மனதுள் கொண்டார் 6.1.569

2468 மற்றை நாள் தம்பிரான் கோயில் புக்கு
வாசி தீர்த்து அருளும் எனப் பதிகம் பாடிப்
பெற்றபடி நல் காசு கொண்டு மாந்தர் பெயர்ந்து
போய் ஆவண வீதியினில் காட்ட
நல் தவத்தீர் இக் காசு சால நன்று வேண்டுவன
நாம் தருவோம் என்று நல்க
அற்றை நாள் தொடங்கி நாள் கூறு தன்னில்
அடியவரை அமுது செய்வித்து ஆர்வம் மிக்கார் 6.1.570

2469 அருவிலையில் பெரும் காசும் அவையே
ஆகி அமுது செய்யத் தொண்டர் அளவு இறந்துபொங்கி
வரும் அவர்கள் எல்லார்க்கும் வந்தாருக்கும்
மகிழ்ந்து உண்ண இன் அடிசில் மாளாது ஆகத்
திரு முடி மேல் திங்களொடு கங்கை சூடும் சிவ
பெருமான் அருள் செய்ய சிறப்பின் மிக்க
பெருமை தரு சண்பை நகர் வேந்தர் நாவுக்கு
அரசர் இவர் பெரும் சோற்றுப் பிறங்கல் ஈந்தார் 6.1.571

2470 அவனி மிசை மழை பொழிய உணவு மல்க்¢
அனைத்து உயிரும் துயர் நீங்கி அருளினாலே
புவனம் எலாம் பொலிவு எய்தும் காலம் எய்த
புரி சடையார் கழல் பலநாள் போற்றி வைகிப் 2
தவ முனிவர் சொல் வேந்தரோடும் கூடத் தம்பிரான்
அருள் பெற்றுத் தலத்தின் மீது
சிவன் மகிழும் தானங்கள் வணங்கப் போவார்
தென் திருவாஞ்சிய மூதூர் சென்று சேர்ந்தார் 6.1.572

2471 நீடு திரு வாஞ்சியத்தில் அமர்ந்த முக்கண்
நீல மிடற்று அருமணியை வணங்கிப் போற்றிப்
பாடொலி நீர்த் தலையாலம்காடு மாடு பரமர்
பெருவேளூரும் பணிந்து பாடி
நாடு புகழ்த் தனிச் சாத்தங் குடியில் நண்ணி
நம்பர் திருக்கர் வீரம் நயந்து பாடித்
தேடு மறைக்கு அரியார் தம் விளமர் போற்றித் 6.1.573

திருவாரூர் தொழ நினைந்து சென்று புக்கார்

2472 நம்பர் மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து
நலம் கொள் திருக் காறாயில் நண்ணி ஏத்திப்
பைம் புனல் மென் பணைத்தேவூர் அணைந்து போற்றிப்
பரமர் திருநெல்லிக்காப் பணிந்து பாடி
உம்பர் பிரான் கைச்சினமும் பரவித் தெங்கூர் ஓங்கு
புகழ்த் திருக் கொள்ளிக்காடும் போற்றி
செம் பொன் மதில் கோட்டூரும் வணங்கி ஏத்தித்
திரு மலி வெண் துறை தொழுவான் சென்று சேர்ந்தார் 6.1.574

2473 மற்றவ்வூர் தொழுது ஏத்தி மகிழ்ந்து பாடி மால்
அயனுக்கு அரிய பிரான் மருவும் தானம்
பற் பலவும் சென்று பணிந்து ஏத்திப் பாடிப் பரவும்
திருத்தொண்டர் குழாம் பாங்கின் எய்தக்
கற்றவர் வாழ் தண்தலை நீள் நெறி உள்ளிட்ட
கனக மதில் திருக் களரும் கருதார் வேள்வி
செற்றவர் சேர் பதி பிறவும் சென்று போற்றித்
திருமறைக் காட்டு அதன் மருங்கு சேர்ந்தார் அன்றே 6.1.575

2474 கார மண் வெஞ்சுரம் அருளால் கடந்தார் தாமும்
கடல் காழி கவுணியர் தம் தலைவர் தாமும்
சேர எழுந்து அருளிய அப் பேறு கேட்டுத் திறை
மறைக் காட்டு அகன்பதியோர் சிறப்பில் பொங்கி
ஊர் அடைய அலங்கரித்து விழவு கொள்ள உயர்
கமுகு கதலி நிறை குடம் தீபங்கள்
வார் முரசம் மங்கள் நாள் தங்கள் மல்க எதிர்
கொள்ள அடியாருடன் மகிழ்ந்து வந்தார் 6.1.576

2475 முன் அணைந்த திருநாவுக்கு அரசர் தம்மை
முறைமையால் எதிர் கொண்டு களிப்பின் மூழ்கிப்
பின் அணைய எழுந்து அருளும் பிள்ளையார்
தம் பெருகிய பொன் காளத்தின் ஓசை கேட்டுச்
சென்னி மிசை கரம் குவித்து முன்பு சென்று
சேண் நிலத்து வணங்குதலும் திருந்து சண்பை
மன்னவரும் மணிமுத்தின் சிவிகை நின்று
வந்து இழிந்து வணங்கி மகிழ்ந்து உடன் போந்தார் 6.1.577

2476 சொல் அரசர் உடன் கூடப் பிள்ளையாரும்
தூமணி நீர் மறைக் காட்டுத் தொல்லை மூதூர்
மல்கு திரு மறுகின் கண் புகுந்த போது மாதவர்கள்
மறையவர்கள் மற்றும் உள்ளோர்
எல்லை இல்லா வகை அர என்று எடுத்த ஓசை

6.1.578

இரு விசும்பும் திசை எட்டும் நிறைந்து பொங்கி
ஒல் ஒலி நீர் வேலை ஒலி அடக்கி விண்மேல்
உம்பர் நாட்டு அப்புறத்தும் உற்றது அன்றே

2477 அடியவரும் பதியவரும் மருங்கு போற்ற
அணி மறுகின் உடன் எய்தி அருகு சூழ்ந்த
கொடி நுடங்கு செழும் திரு மாளிகையின்
முன்னர்க் கோபுரத்தைத் தாழ்ந்து இறைஞ்சிக்குறுகிப் புக்கு
முடிவில் இமையவர் முனிவர் நெருங்கும்
தெய்வ முன்றில் வலம் கொண்டு நேர் சென்று முன்னாள்
படியின் மறை அருச்சித்துக் காப்பு செய்த
பைம் பொன் மணித் திருவாயில் பாங்கு வந்தார் 6.1.579

2478 அரு மறைகள் திருக் காப்புச் செய்து
வைத்த அக்கதவம் திறந்திட அம் மறைகள் ஓதும்
பெருகிய அன்பு உடை அடியார் அணைந்து
நீக்கப் பெருமையினால் அன்று முதலாகப் பின்னை
ஒரு புடை ஓர் வாயில் அமைத்து ஒழுகும்
தன்மை உள்ளபடி கேட்டு அருளி உயர்ந்த சண்பைத்
திருமறையோர் தலைவர் வியப்பு எய்தி
நின்று திருநாவுக்கு அரசருக்குச் செப்புகின்றார் 6.1.580

2479 அப்பரே வேத வனத்து ஐயர் தம்மை
அபிமுகத்துத் திருவாயில் திறந்து புக்கே
எப்பரிசும் நாம் இறைஞ்ச வேண்டும் நீரே
இவ்வாயில் திருக்காப்பு நீங்கு மாறு
மெய்ப் பொருள் வண் தமிழ் பாடி அருளும்
என்ன விளங்கு மொழி வேந்தர் அது மேற்கொண்டு என்னை
இப்பரிசு நீர் அருளிச் செய்தீர் ஆகில் இது
செய்வேன் எனப் பதிகம் எடுத்துப் பாட 6.1.581

2480 பாடிய அப் பதிகப் பாட்டு ஆன பத்தும்
பாடல் நிரம்பிய பின்னும் பைம் பொன் வாயில்
சேடு உயர் பொன் கதவு திருக் காப்பு நீங்காச்
செய்கையினால் வாகீசர் சிந்தை நொந்து
நீடு திருக் கடைக் காப்பில் அரிது வேண்டி
நின்று எடுக்கத் திருக்காப்பு நீக்கம் காட்ட
ஆடிய சேவடியார் தம் அடியார் விண்ணோர்
ஆர்ப்பு எழுந்த அகிலாண்டம் அனைத்தும் மூழ்க 6.1.582

2481 மற்றது கண்ட போதே வாக்கின் மன்னவரை நோக்கிப்
பொற்புறு புகலி மன்னர் போற்றிட அவரும் போற்றி
அற்பது நிலையினார்கள் அணி திரு மறைக்காடு ஆளும்
6.1.583

கொற்றவர் கோயில் வாயில் நேர்வழி குறுகிப் புக்கார்

2482 கோயில் உட்புகுவார் உச்சி குவித்த செங்கைகளோடும்
தாயினும் இனிய தங்கள் தம்பிரானாரைக் கண்டார்
பாயும் நீர் அருவி கண்கள் தூங்கிடப் படியின் மீது
மேயின மெய்யர் ஆகி விதிர்புற்று விரைவின் வீழ்ந்தார் 6.1.584

2483 அன்பினுக்கு அளவு காணார் ஆனந்த வெள்ளம் மூழ்கி
என்பு நெக்கு உருக நோக்கி இறைஞ்சி நேர் விழுந்து நம்பர்
முன்பு நிற்பதுவும் ஆற்றார் மொழி தடுமாற ஏத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார் 6.1.585

2484 புறம்பு வந்து அணைந்த போது புகலி காவலரை நோக்கி
நிறம் கிளர் மணிக் கபாடம் நீக்கமும் அடைப்பும் நிற்கத்
திறிந்தவாறு அடைக்கப்பாடி அருளும் நீர் என்றார் தீய
மறம் புரி அமணர் செய்த வஞ்சனை கடக்க வல்லார் 6.1.586

2485 அன்று அரசு அருளிச் செய்ய அருமறைப் பிள்ளையாரும்
வென்றி வெள் விடையார் தம்மை விருப்பினால் சதுரம் என்னும்
இன் தமிழ்ப் பதிகப் பாடல் இசைத்திட இரண்டு பாலும்
நின்ற அக் கதவு காப்பு நிரம்பிட அடைத்தது அன்றே 6.1.587

2486 அடைத்திடக் கண்டு சண்பை ஆண்டகை யாரும் அஞ்சொல்
தொடைத் தமிழாளி யாரும் தொழுது எழத் தொண்டர் ஆர்த்தார்
புடைப்பு ஒழிந்து இழிந்தது எங்கும் பூ மழை புகலி வேந்தர்
நடைத் தமிழ்ப் பதிக மாலை நிரம்பிட நவின்று போற்றி 6.1.588

2487 அத்திரு வாயில் தன்னில் அற்றை நாள் தொடங்கி நேரே
மெய்த்திரு மறைகள் போல மேதினி புக்குப் போற்ற
வைத்து எதிர் வழக்கம் செய்த வரம்பு இலாப் பெருமையோரை
கைத்தலம் குவித்துத் தாழ்ந்து வாழ்ந்தது கடல் சூழ் வையம் 6.1.589

2488 அருமறை ஆன எல்லாம் அகல் இரு விசும்பில் ஆர்த்துப்
பெருமையின் முழங்கப் பஞ்ச நாதமும் பிறங்கி ஓங்க
இரு பெரும் தகையோர் தாமும் எதிர் எதிர் இறைஞ்சிப் போந்து
திரு மடங்களின் முன் புக்கார் செழும்பதி விழவு கொள்ள 6.1.590

2489 வேதங்கள் எண்ணில் கோடி மிடைந்து செய் பணியை மிக்க
ஏதங்கள் நம்பால் நீப்பார் இருவரும் செய்து வைத்தார்
நாதம் கொள் வடிவாய் நின்ற நதி பொதி சடையார் செய்ய
பாதங்கள் போற்றும் மேலோர் பெருமையார் பகரும் நீரார் 6.1.591

2490 திருமறை நம்பர் தாம் முன்பு அருள் செய்த அதனைச் செப்பும்
ஒருமையில் நின்ற தொண்டர் தம்பிரானார் பால் ஒக்க
வரும் அருள் செய்கை தாமே வகுத்திட வல்லோர் என்றால்
பெரு மறையுடன் மெய்த் தொண்டர்க்கு இடையீடு பெரிதாம்
அன்றே 6.1.592

2491 இவ்வகை திருமறைக் காட்டு இறையவர் அருளை உன்னி
மெய் வகை தெரிந்த வாக்கின் வேந்தர் தாம் துயிலும் போதில்
மை வளர் கண்டர் சைவ வேடத்தால் வந்து வாய்மூர்
அவ்விடை இருத்தும் அங்கோ வா என்று அங்கு அருளிப் போக 6.1.593

2492 . கண்ட அப்போதே கைகள் குவித்து உடன் கடிது செல்வார்
மண்டிய காதலோடு மருவுவார் போன்றும் காணார்
எண்திசை நோக்குவாருக்கு எய்துவார் போல எய்தா
அண்டர் தம்பிரானார் தம் பின் போயினார் ஆர்வத் தோடும் 6.1.594

2493 அங்கு அவர் ஏகச் சண்பை ஆண்டகையாரும் அப்பர்
எங்கு உற்றது என்று கேட்ப எய்தினார் திருவாய்மூரில்
பொங்கிய காதலால் என்று உரைத்திடப் போன தன்மை
சங்கை உற்று என்கொல் என்று தாமும் அங்கு அணையப்
போந்தார் 6.1.595

2494 அந்நிலை அணைந்த போதில் அம்பிகை உடனே கூட
மன்னிய ஆடல் காட்டத் தளர் இளவள ரும் பாடிச்
சென்னியால் வணங்கி வாய்மூர் அரசொடும் சென்று புக்கு அங்கு
இன் இயல்பு உற முன் கூடி இருவரும் போற்றி செய்தார் 6.1.596

2495 நீடு சீர்த் திருவாய் மூரில் நிலவிய சிவனார் தம்மைப்
பாடு சொல் பதிகம் தன்னால் பரவி அப் பதியில் வைகிக்
கூடு மெய் அன்பு பொங்க இருவரும் கூடி மீண்டு
தேடு மா மறைகள் கண்டார் திரு மறைக்காடு சேர்ந்தார் 6.1.597

2496 சண்பை நாடு உடைய பிள்ளை தமிழ் மொழித் தலைவரோடு
மண் பயில் சீர்த்திச் செல்வ மா மறைக் காட்டு வைகிக்
கண் பயில் நெற்றியார் தம் கழல் இணை பணிந்து போற்றிப்
பண் பயில் பதிகம் பாடிப் பரவி அங்கு இருந்தார் அன்றே 6.1.598

2497 இவ் வகை இவர்கள் அங்கண் இருந்தனர் ஆக இப்பால்
செய் வகை இடையே தப்பும் தென்னவன் பாண்டி நாட்டு
மெய் வகை நெறியில் நில்லா வினை அமண் சமயம் மிக்குக்
கை வகை முறைமைத் தன்மை கழிய முன் கலங்கும் காலை 6.1.599

2498 தென்னவன் தானும் முன் செய் தீவினைப் பயத்தினாலே
அந் நெறிச் சார்வு தன்னை அறம் என நினைந்து நிற்ப
மன்னிய சைவ வாய்மை வைதிக வழக்கம் ஆகும்
நன் நெறி திரிந்து மாறி நவை நெறி நடந்தது அன்றே 6.1.600

2499 பூழியர் தமிழ் நாட்டு உள்ள பொருவில் சீர்ப் பதிகள் எல்லாம்
பாழியும் அருகர் மேவும் பள்ளிகள் பலவும் ஆகிச்
சூழ் இருள் குழுக்கள் போலத் தொடை மயில் பீலி யோடு
மூழி நீர் கையில் பற்றி அமணரே ஆகி மொய்ப்ப 6.1.601

2500 பறிமயிர்த் தலையும் பாயும் பீலியும் தடுக்கும் மேனிச்
செறியும் உக் குடையும் ஆகித் திரிபவர் எங்கும் ஆகி
அறியும் அச் சமய நூலின் அளவினில் அடங்கிச் சைவ
நெறியினில் சித்தம் செல்லா நிலைமையில் நிகழும் காலை 6.1.602

2501 வரிச் சிலைத் தென்னவன் தான் உய்வதற்கு வளவர் கோமான்
திரு உயிர்த்து அருளும் செல்வப் பாண்டிமா தேவியாரும்
குரை கழல் அமைச்சனாராங் குலச் சிறையாரும் என்னும்
இருவர் தம் பாங்கும் அன்றிச் சைவம் அங்கு எய்தாதாக 6.1.603

2502 ஆங்கு அவர் தாங்கள் அம் கண் அரும் பெறல் தமிழ் நாடு உற்ற
தீங்கினுக்கு அளவு தேற்றாச் சிந்தையில் பரிவு கொண்டே
ஓங்கிய சைவ வாய்மை ஒழுக்கத்தில் நின்ற தன்மை
பூங்கழல் செழியன் முன்பு புலப்படா வகை கொண்டு உய்த்தார் 6.1.604

2503 இந் நெறி ஒழுகு கின்றார் ஏழ் உலகு உய்ய வந்த
மன்னிய புகலி வேந்தர் வைதிக வாய்மைச் சைவச்
செந்நெறி விளக்கு கின்றார் திரு மறைக்காடு சேர்ந்த
நல்நிலை கன்னி நாட்டு நல்வினைப் பயத்தால் கேட்டார் 6.1.605

2504 கேட்ட அப்பொழுதே சிந்தை கிளர்ந்து எழு மகிழ்ச்சி பொங்க
நாள் பொழுது அலர்ந்த செந்தாமரை நகை முகத்தர் ஆகி
வாள் படை அமைச்சனார் உம் மங்கையர்க்கு அரசியாரும்
சேட் படு புலத்தார் ஏனும் சென்று அடி பணிந்தார் ஒத்தார் 6.1.606

2505 காதலால் மிக்கோர் தாங்கள் கை தொழும் கருத்தினாலே
போது அவிழ் சோலை வேலிப் புகலி காவலனார் செய்ய
பாதங்கள் பணிமின் என்று பரிசன மாக்கள் தன்மை
மா தவம் சுருதி செய்த மா மறைக் காட்டில் விட்டார் 6.1.607

2506 ஆங்கு அவர் விட முன் போந்த அறிவு உடைமாந்தர் அம் கண்
நீங்கி வண்தமிழ் நாட்டு எல்லை பின் பட நெறியின் ஏகி
ஞாங்கர் நீர் நாடும் காடும் நதிகளும் கடந்து வந்து
தேன் கமழ் கை தை நெய்தல் திருமறைக் காடு சேர்ந்தார் 6.1.608

2507 திருமறைக்காடு நண்ணிச் சிரபுர நகரில் வந்த
அருமறைப் பிள்ளையார் தாம் அமர்ந்து இனிது அருளும் செல்வ
பெருமடத்து அணைய வந்து பெருகிய விருப்பில் தாங்கள்
வரு முறைத் தன்மை எல்லாம் வாயில் காவலர்க்குச் சொன்னார் 6.1.609

2508 மற்றவர் சென்று புக்கு வளவர் கோன் மகளார் தென்னர்
கொற்றவன் தேவி யாரும் குலச்சிறையாரும் ஏவப்
பொற்கழல் பணிய வந்தோம் எனச் சிலர் புறத்து வந்து
சொற்றனர் என்று போற்றித் தொழுது விண்ணப்பம் செய்தார் 6.1.610

2509 புகலி காவலர் தாம் கேட்டுப் பொருவிலா அருள் முன் கூர
அகம் மலர்ந்து அவர்கள் தம்மை அழையும் என்று அருளிச் செய்ய 6.1.611

நகை முகச் செவ்வி நோக்கி நல்தவ மாந்தர் கூவத்
தகவு உடை மாந்தர் புக்குத் தலையினால் வணங்கி நின்றார்

2510 நின்றவர் தம்மை நோக்கி நிகரில் சீர்ச் சண்பை மன்னர்
மன்றல் அங்குழலியாராம் மானியார் தமக்கும் மானக்
குன்று என நின்ற மெய்ம்மை குலச் சிறையார் தமக்கும்
நன்று தான் வினவக் கூறி நல் பதம் போற்றுவார்கள் 6.1.611

2511 கன்னி நாடு அமணர் தம்பால் கட்டு அழிந்து இழிந்து தங்கள்
மன்னனும் அவர்கள் மாயத்து அழுந்த மா தேவியாரும்
கொன்னவில் அயில் வேல் வென்றிச் குலச் சிறையாரும் கூடி
இந்நிலை புகலி வேந்தர்க்கு இயம்பும் என்று இறைஞ்சி விட்டார் 6.1.613

2512 என்று அவர்கள் விண்ணப்பம் செய்த பின்னர்
ஏறு உயர்த்த சிவபெருமான் தொண்டர்எல்லாம்
நன்று நமை ஆள் உடைய நாதன் பாதம்
நண்ணாத எண்ணில் அமண் குண்டர் தம்மை
வென்று அருளி வேதநூல் நெறியே ஆக்கி
வெண்ணீறு வேந்தனையும் இடுவித்து அங்கு
நின்ற செயல் சிவனடியார் செயலே ஆக
நினைந்து அருள வேண்டும் என நின்று போற்ற 6.1.614

2513 மற்று அவர்கட்கு அருள் புரிந்து
பிள்ளையாரும் வாகீச முனிவருடன் கூடச் சென்று
பெற்றம் உயர்த்தவர் பாதம் பணிந்து போந்து
பெரிய திருக் கோபுரத்துள் இருந்து தென் நாடு
உற்ற செயல் பாண்டிமா தேவியாரும் உரிமை
அமைச்சரும் உரைத்து விட்ட வார்த்தை
சொற்ற தனி மன்னவருக்குப் புகலி மன்னர்
சொல்லி எழுந்து அருளுதற்குத் துணிந்தபோது 6.1.615

2514 அரசர் அருளிச் செய்கிறார் பிள்ளாய் அந்த
அமண் கையர் வஞ்சனைக்கு ஓர் அவதி இல்லை
உரை செய்வது உளது உறு கோள் தானும் தீய
எழுந்து அருள உடன்படுவது ஒண்ணாது என்ன
பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றால்
பழுது அணையாது எனப் பகர்ந்து பரமர் செய்ய
விரை செய் மலர்த்தாள் போற்றி புகலி வேந்தர்
வேய் உறு தோளியை எடுத்து விளம்பினாரே 6.1.616

2515 சிரபுரத்துப் பிள்ளையார் அருளிச் செய்த
திருப்பதிகம் கேட்டு அதன் பின் திருந்து நாவுக்கு
அரசும் அதற்கு உடன்பாடு செய்து தாமும் அவர்
முன்னே எழுந்து அருள அமைந்த போது
6.1.617

புரம் எரித்தார் திருமகனார் அப்பர் இந்தப் புனல்
நாட்டில் எழுந்து அருளி இருப்பீர் என்று
கரகமலம் குவித்து இறைஞ்சித் தவிர்ப்ப வாக்கின்
காவலரும் தொழுது அரிதாம் கருத்தில் நேர்ந்தார்

2516 வேதம் வளர்க்கவும் சைவம் விளக்குதற்கும்
வேதவனத்து அருமணியை மீண்டும் புக்குப்
பாதம் உறப் பணிந்து எழுந்து பாடிப் போற்றிப்
பரசி அருள் பெற்று விடை கொண்டு போந்து
மா தவத்து வாகீசர் மாறாத வண்ணம் வணங்கி
அருள் செய்து விடை கொடுத்து மன்னும்
காதலினால் அருமை உறக் கலந்து நீங்கிக்
கதிர்ச் சிவிகை மருங்கு அணைந்தார் காழி நாதர் 6.1.618

2517 திருநாவுக் கரசரும் அங்கு இருந்தார்
இப்பால் திருஞான சம்பந்தர் செழுநீர் முத்தின்
பெருநாமச் சிவிகையின் மீது ஏறி பெற்றம் உயர்த்தவர்
தாள் சென்னியின் மேல் பேணும் உள்ளத்து
ஒரு நாமத்து அஞ்சு எழுத்தும் ஓதி வெண்ணீற்று
ஒளி விளங்கும் திருமேனி தொழுதார் நெஞ்சில்
வருநாமத்து அன்பு உருகும் கடலாம் என்ன மாதவர்
ஆர்ப்பு ஒலி வையம் நிறைந்தது அன்றே 6.1.619

2518 பொங்கி எழும் திருத்தொண்டர்
போற்று எடுப்பார் நால் திசையும்
மங்கல தூரியம் தழங்க மறை முழங்க
மழை முழங்கும்
சங்க படகம் பேரி தாரை
காளம் தாளம்
எங்கும் எழுந்து எதிர் இயம்ப இரு
விசும்பு கொடி தூர்ப்ப 6.1.620

2519 மலர் மாரி பொழிந்து இழிய மங்கல வாழ்த்து இனிது இசைப்ப
அலர் வாசப் புனல் குடங்கள் அணி விளக்குத் தூபம் உடன்
நிலை நீடு தோரணங்கள் நிரைத்து அடியார் எதிர் கொள்ளக்
கலை மாலை மதிச் சடையார் இடம் பலவும் கை தொழுவார் 6.1.621

2520 தெண் திரை சூழ் கடல் கானல் திரு அகத்தியன் பள்ளி
அண்டர் பிரான் கழல் வணங்கி அருந்தமிழ் மா மறை பாடிக்
கொண்டல் பயில் மணல் கோடு சூழ் கோடிக் குழகர் தமைத்
தொண்டருடன் தொழுது அணைந்தார் தோணிபுரத் தோன்றலார் 6.1.622

2521 கண் ஆர்ந்த திரு நுதலார் மகிழ்ந்த கடிக்குளம் இறைஞ்சி
எண் ஆர்ந்த திரு இடும்பா வனம் ஏத்தி எழுந்து அருளி
6.1.623

மண் ஆர்ந்த பதி பிறவும் மகிழ் தரும் அன்பால் வணங்கிப்
பண் ஆர்ந்த தமிழ் பாடிப் பரவியே செல்கின்றார்

2522 திரு உசாத் தானத்துத் தேவர் பிரான் கழல் பணிந்து
மருவிய செந்தமிழ்ப் பதிகமால் போற்றும் படி பாடி
இரு வினையும் பற்று அறுப்பார் எண் இறந்த தொண்டருடன்
பெருகு விருப்பினர் ஆகிப் பிற பதியும் பணிந்து அருள்வார் 6.1.624

2523 கருங்கழி வேலைப் பாலைக் கழி நெய்தல் கடந்து அருளித்
திருந்திய சீர் புனல் நாட்டுத் தென் மேல் பால் திசை நோக்கி
மருங்கு மிடை தடஞ் சாலி மாடு செறி குலத்தெங்கு
நெருங்கி வளர் கமுகு உடுத்த நிறை மருத வழிச் சென்றார் 6.1.625

2524 சங்கங்கள் வயல் எங்கும் சாலி கழைக் கரும்பு எங்கும்
கொங்கு எங்கும் நிறை கமலக் குளிர் வாசத் தடம் எங்கும்
அங்கு அங்கே உழவர் குழாம் ஆர்க்கின்ற ஒலி எங்கும்
எங்கும் எங்கும் மலர்ப் படுகர் இவை கழிய எழுந்து அருளி 6.1.626

2525 தடம் எங்கும் புனல் குடையும் தையலார் தொய்யில் நிறம்
இடம் எங்கும் அந்தணர்கள் ஓதும் இடையாக நிலை
மடம் எங்கும் தொண்டர் குழாம் மனை எங்கும் புனைவதுவை
நடம் எங்கும் ஒலி ஓவா நல் பதிகள் அவை கடந்து 6.1.627

2526 நீர் நாடு கடந்து அருளி நெடும் புறவில் குறும்புதல்கள்
கார் நாடு முகை முல்லைக் கடி நாறு நிலம் கடந்து
போர் நாடும் சிலை மறவர் புன் புலவை பிடை போக்கிச்
சீர் நாடும் தென் பாண்டி நல் நாடு சென்று அணைவார் 6.1.628

2527 மன்றல் மலர் பிறங்கல் மருங்கு எறிந்து வரும் நதிகள் பல
சென்று அணைந்து கடந்து ஏறித் திரி மருப்பின் கலை புணர்மான்
கன்று தெறித்தன உகைக்கும் கான அதர் கடந்து அணைந்தார்
கொன்றை நறும் சடை முடியார் மகிழ்ந்த திருக்கொடும் குன்றம் 6.1.629

2528 கொடும் குன்றத்து இனிது அமர்ந்த கொழும்பவளச் செழுங்
குன்றை
அடும் குன்றம் உரித்தானை வணங்கி அரும் தமிழ் பாடி
நெடும் குன்றும் படர் காணும் நிறை நாடும் கடந்து மதி
தொடும் குன்ற மதில் மதுரைத் தொன் நகர் வந்து அணைகின்றார் 6.1.630

2529 இந்நிலை இவர் வந்து எய்த எண் பெரும் குன்றம் மேவும்
அந்நிலை அமணர் தங்கள் கழிவு முன் சாற்றல் உற்றுப்
பல்முறை வெருக் கொண்டு உள்ளம் பதைப்பத்தீக்
கனாக்களோடும்
துன் நிமித்தங்கள் அங்கு நிகழ்ந்தன சொல்லல் உற்றாம் 6.1.631

2530 பள்ளிகள் மேலும் மாடு பயில் அமண் பாழி மேலும்
ஓள்ளிதழ் அசோகின் மேலும் உணவு செய் கவளம் கையில் 6.1.632

கொள்ளூ மண்டபங்கள் மேலும் கூகையோடு ஆந்தை தீய
புள் இனம் ஆன தம்மில் பூசல் இட்டு அழிவு சாற்றும்

2531 பீலியும் தடுக்கும் பாயும் பிடித்தகை வழுவி வீழக்
கால்களும் தடுமாறும் ஆடிக் கண்களும் இடமே ஆடி
மேல் வரும் அழிவுக்கு ஆக வேறு காரணமும் காணார்
மால் உழந்து அறிவு கெட்டு மயங்கினர் அமணர் எல்லாம் 6.1.633

2532 கந்தியர் தம்மில் தாமே கனன்று எழு கலாங்கள் கொள்ள
வந்தவாறு அமணர் தம்மில் மாறு கொண்டு ஊறு செய்ய
முந்தைய உரையில் கொண்ட பொறை முதல் வைப்பும் விட்டுச்
சிந்தையில் செற்றம் முன்னாத் தீக் குணம் தலை நின்றார்கள் 6.1.634

2533 இப்படி அமணர் வைகும் எப் பெயர்ப் பதியும் எய்தும்
ஒப்பில் உற்பாதம் எல்லாம் ஒருவரின் ஒருவர் கூறி
மெய்ப்படு தீக்கனாவும் வேறு வேறு ஆகக் கண்டு
செப்புவான் புறத்து உளோரும் தென்னவன் மதுரை சேர்ந்தார் 6.1.635

2534 அந்நகர் தன்னில் வாழ்வார் புறம் நின்று அணைவார் கூடி
மன்னவன் தனக்கும் கூறி மருண்ட உள்ளத்தர் ஆகித்
துன்னிய அழுக்கு மெய்யில் தூசு இலார் பலரும் ஈண்டி
இன்னன கனவு கண்டோம் என எடுத்து இயம்பல் உற்றார் 6.1.636

2535 சீர் மலி அசோகு தன் கீழ் இருந்த நம் தேவர் மேலே
வேரொடு சாய்ந்து வீழக் கண்டனம் அதன் பின் ஆக
ஏர் கொள் முக்குடையும் தாமும் எழுந்து கை நாற்றிப் போக
ஊர் உளோர் ஓடிக் காணக் கண்டனம் என்று உரைப்பார் 6.1.637

2536 குண்டிகை தகர்த்துப் பாயும் பீறியோர் குரத்தி ஓடப்
பண்டிதர் பாழி நின்றும் கழுதை மேல் படர்வார் தம்பின்
ஒண்தொடி இயக்கி யாரும் உளை இட்டுப் புலம்பி ஓடக்
கண்டனம் என்று சொன்னார் கையறு கவலை உற்றார் 6.1.638

2537 கான் இடை நட்டம் ஆடும் கண் நுதல் தொண்டர் எல்லாம்
மீனவன் மதுரை தன்னில் விரவிடக் கண்டோம் என்பார்
கோன் அவன் தானும் வெய்ய கொடும் தழல் முழுகக் கண்டோம்
ஆனபின் எழவும் கண்டோம் அதிசயம் இதுவாம் என்பார் 6.1.639

2538 மழவிடை இளம் கன்று ஒன்று வந்து நம் கழகம் தன்னை
உழறிடச் சிதறி ஓடி ஒருவரும் தடுக்க அஞ்சி
விழ ஒரு புகலும் இன்றி மேதினி தன்னை விட்டு
நிழல் இலா மரங்கள் ஏறி நின்றிடக் கண்டோம் என்பர் 6.1.640

2539 ஆவது என் பாவிகாள் இக் கனாத்திறம் அடிகள் மார்க்கு
மேவிய தீங்கு தன்னை விளைப்பது திடமே என்று
நோவுறு மனத்தர் ஆகி நுகர் பெரும் பதமும் கொள்ளார்
யாவது செயல் என்று எண்ணி இடர் உழன்று அழுங்கினார்கள் 6.1.641

2540 அவ்வகை அவர்கள் எல்லாம் அந்நிலைமையர்கள் ஆகச்
சைவ நன் மரபில் வந்த தட மயில் மட மென் சாயல்
பை வளர் அரவேர் அல்குல் பாண்டி மா தேவியார்க்கும்
மெய் வகை அமைச்சனார்க்கும் விளங்கும் நன் நிமித்தம் மேன்
மேல் 6.1.642

2541 அளவு இலா மகிழ்ச்சி காட்டும் அரும் பெரும் நிமித்தம் எய்த
உள மகிழ் உணரும் காலை உலகெலாம் உய்ய வந்த
வளர் ஒளி ஞானம் உண்டார் வந்து அணைந்து அருளும் வார்த்தை
கிளர் உறும் ஓகை கூறி வந்தவர் மொழியக் கேட்டார் 6.1.643

2542 அம்மொழி விளம்பினோர்க்கு வேண்டுவ அடைய நல்கி
மெய்ம்மையில் விளங்கு காதல் விருப்புறு வெள்ளம் ஓங்கி
தம்மையும் அறியா வண்ணம் கை மிக்குத் தழைத்துப் பொங்கி
விம்மிய மகிழ்ச்சி கூர மேவிய சிறப்பின் மிக்கார் 6.1.644

2543 மங்கையர்க் கரசியார் பால் வந்து அடி வணங்கி நின்ற
கொங்கு அலர் தெரியல் ஆராம் குலச்சிறை யாரை நோக்கி
நங்கள் தம்பிரானாராய ஞான போனகர் முன்பு எய்தி
இங்கு எழுந்து அருள உய்ந்தோம் என எர் கொள்ளும் என்றார் 6.1.645

2544 மன்றலங் குழலினாரை வணங்கப் போந்த அமைச்சனாரும்
வென்றிவேல் அரசனுக்கும் உறுதியே என விரைந்து
பொன் திகழ் மாட வீதி மதுரையின் புறத்துப் போகி
இன் தமிழ் மறை தந்தாரை எதிர்கொள எய்தும் காலை 6.1.646

2545 அம்புய மலராள் போல்வார் ஆலவாய் அமர்ந்தார் தம்மைக்
கும்பிட வேண்டும் என்று கொற்றவன் தனக்கும் கூறி
தம் பரிசனங்கள் சூழத் தனித் தடையோடும் சென்று
நம்பரை வணங்கித் தாமும் நல் வரவேற்று நின்றார் 6.1.647

2546 திரு நிலவு மணி முத்தின் சிவிகையின் மேல் சேவித்து
வரு நிலவு தரு மதி போல் வளர் ஒளி வெண் குடை நிழற்றப்
பெருகு ஒளிய திரு நீற்றுத் தொண்டர் குழாம் பெருகிவர
அருள் பெருக வரும் ஞானத்து அமுது உண்டார் அணைகின்றார் 6.1.648

2547 துந்துபிகள் முதலாய தூரியங்கள் கிளராமே
அந்தணராம் மாதவர்கள் ஆயிரம் மா மறை எடுப்ப
வந்து எழும் மங்கல நாத மாதிரம் உட்பட முழங்கச்
செந்தமிழ் மாருதம் எதிர் கொண்டு எம்மருங்கும் சேவிப்ப 6.1.649

2548 பண்ணிய வஞ்சனைத் தவத்தால் பஞ்சவன் நாட்டு இடைப் பரந்த
எண்ணில் அமண் எனும் பாவ இருஞ்சேனை இரிந்து ஓட
மண் உலகமே அன்றி வான் உலகம் செய்த பெரும்
புண்ணியத்தின் படை எழுச்சி போல் எய்தும் பொலிவு எய்த 6.1.650

2549 துன்னும் முழு உடற்றுகளால் சூழும் உணர்வின் இற்றுகளால்
அன்னெறியில் செறிந்து அடைந்த அமண் மாசு கழுவுதற்கு
மன்னி ஒளிர் வெண்மையினால் தூய்மையினால் வழுதியர் தம்
கன்னி நாட்டு இடைக் கங்கை அணைந்தது எனும் கவின் காட்ட 6.1.651

2550 பானல் வயல் தமிழ் நாடு பழி நாடும்படி பரந்த
மானம் இலா அமண் என்னும் வல் இருள் போய் மாய்வதனுக்கு
ஆன பெருகு ஒளி பரப்பால் அண்டம் எலாம் கொண்டதொரு
ஞான மணி விளக்கு எழுந்து வருவது என நலம் படைப்ப 6.1.62

2551 புரசை வயக் கட களிற்றுப் பூழியர் வண் தமிழ் நாட்டுத்
தரை செய் தவப் பயன் விளங்கச் சைவ நெறி தழைத்து ஓங்க
உரை செய்து இருப்போர் பலவும் ஊது மணிச் சின்னம் எலாம்
பர சமயக் கோளரி வந்தான் என்று பணிமாற 6.1.653

2552 இப்பரிசு அணையும் சண்பையர் பெருமான்
எழுந்து அருளும் பொழுது இசைக்கும்
ஒப்பில் நித்திலப் பொன் தனிப் பெரும் கானம்
உலகு உய்ய ஒலித்து எழும் ஓசை
செப்பரும் பெருமைக் குலச் சிறையார் தம்
செவி நிறை அமுது எனத் தேக்க
அப்பொழுது அறிந்து தலத்தின் மேல் பணிந்தே
அளப்பு அரும் களிப்பினர் ஆனார் 6.1.654

2553 அஞ்சலி குவித்த கரங்களும் தலைமேல்
அணைந்திடக் கடிது சென்று அணைவார்
நஞ்சு அணி கண்டர் தம் திருமகனார் உடன்
வரும் நல்தவக் கடலை
நெஞ்சினில் நிறைந்த ஆர்வம் முன் செல்லக்
கண்டு நீள் நிலத்து இடைத் தாழ்ந்து
பஞ்சவர் பெருமான் மந்திரித் தலைவர் பாங்கு
உற அணைந்து முன் பணிந்தார் 6.1.655

2554 நிலமிசை பணிந்த குலச் சிறையாரை
நீடிய பெரும் தவத் தொண்டர்
பலரும் முன் அணைந்து வணங்கி மற்று அவர்தாம்
படியின் நின்று எழாவகை கண்டு
மலர் மிசைப் புத்தேள் வழிபடும் புகலி
வைதிகச் சேகரர் பாதம்
குலவி அங்கு அணைந்தார் தென்னவன்
அமைச்சர் குலச்சிறையார் எனக் கூற 6.1.656

2555 சிரபுரச் செல்வர் அவர் உரை கேட்டுத்
திருமுகத் தாமரை மலர்ந்து
6.1.657

விரவு ஒளி முத்தின் சிவிகை நின்று இழிந்து
விரைந்து சென்றவர் தமை அணைந்து
கரகமலங்கள் பற்றியே எடுப்பக் கை தொழுது
அவரும் முன் நிற்ப
வரமிகு தவத்தால் அவரையே நோக்கி
வள்ளலார் மதுர வாக்கு அளிப்பார்

2556 செம்பியர் பெருமான் குல மகளார்க்கும்
திருந்திய சிந்தையீர் உமக்கும்
நம் பெருமான் தன் திரு அருள் பெருகும்
நன்மை தான் வாலிதே என்ன
வம்பு அலர் அலங்கல் மந்திரி யாரும் மண்
மிசைதாழ்ந்து அடி வணங்கித்
தம் பெரும் தவத்தின் பயன் அனையார்க்குத்
தன்மை ஆம் நிலை உரைக்கின்றார் 6.1.658

2557 சென்ற காலத்தின் பழுது இலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்து அருளப் பெற்ற பேறு இதனால்
எற்றைக்கும் திரு அருள் உடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ்
வேந்தனும் உய்ந்து
வென்றி கொள் திரு நீற்று ஒளியினால் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார் 6.1.659

2558 இங்கு எழுந்து அருளும் பெருமை கேட்டு
அருளி எய்துதற்கு அரிய பேறு எய்தி
மங்கையர்க் கரசியாரும் நம்முடைய வாழ்வு
எழுந்து அருளியது என்றே
அங்கு நீர் சென்று அடிபணிவீர் என்று அருள்
செய்தார் எனத் தொழுதார்வம்
பொங்கிய களிப்பால் மீளவும் பணிந்து
போற்றினார் புரவலன் அமைச்சர் 6.1.660

2559 ஆங்ஙனம் போற்றி அடி பணிந்து அவர் மேல்
அளவுஇலா அருள் புரி கருணை
தாங்கிய மொழியால் தகுவன விளம்பி தலை
அளித்து அருளும் அப்பொழுதில்
ஓங்கு எயில் புகழ் சூழ் மதுரைத் தோன்றுதலும்
உயர் தவ தொண்டரை நோக்கி
ஈங்கு நம் பெருமான் திரு ஆலவாய் மற்று
எம்மருங்கினது என வினவ 6.1.661

2560 அன்பராய் அவர் முன் பணிந்த சீர் அடியார்
அண்ணலார் அடி இணை வணங்கி
முன்பு நின்று எடுத்த கைகளால் காட்டி முருகு
அலர் சோலைகள் சூழ்ந்து
மின் பொலி விசும்பை அளக்கும் நீள் கொடி
வியன் நெடும் கோபுரம் தோன்றும்
என்பு அணி அணிவார் இனிது அமர்ந்து
அருளும் திருவாலவாய் இது என்றார் 6.1.662

2561 தொண்டர்தாம் போற்றிக் காட்டிடக் கண்டு
துணைமலர்க் கரம் குவித்து அருளி
மண்டு பேரன்பால் மண்மிசைப் பணிந்து
மங்கையர்க்கரசி என்று எடுத்தே
எண் திசையும் பரவும் ஆலவாய் ஆவது
இதுவே என்று இருவர் தம் பணியும்
கொண்டமை சிறப்பித்து அருளி நல்
பதிகம் பாடினார் குவலயம் போற்ற 6.1.663

2562 பாடிய பதிகம் பரவியே வந்து பண்பு
உடை அடியவரோடும்
தேடுமால் அயனுக்கு அரியவர் மகிழ்ந்த
¢ரு ஆலவாய் மருங்கு அணைந்து
நீடுயர் செல்வக் கோபுரம் இறைஞ்சி
நிறை பெரு விருப்புடன் புக்கு
மாடு சூழ் வலம் கொண்டு உடையவர்
கோயில் மந்திரியாருடன் புகுந்தார் 6.1.664

2563 ஆளும் அங்கணர் ஆலவாய் அமர்ந்து இனிது இருந்த
கான கண்டரைக் கண்களின் பயன் பெறக் கண்டு
நீள வந்து எழும் அன்பினால் பணிந்து எழ நிறையார்
மீளவும் பல முறை நிலம் உற விழுந்து எழுவார் 6.1.665

2564 அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவு இன்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்ம மயிர் புளகமும் பொழியும்
செம் கண் நீர் தரும் அருவியும் திகழ் திரு மேனி
எங்கும் ஆகி நின்று ஏத்தினார் புகலியர் இறைவர் 6.1.666

2565 நீல மா மிடற்று ஆலவாயான் என நிலவும்
மூலம் ஆகிய திரு இருக்குக் குறள் மொழிந்து
சீல மாதவத் திருத் தொண்டர் தம் ஒடும் திளைத்தார்
சாலும் மேன்மையில் தலைச்சங்கப் புலவனார் தம்முன் 6.1.667

2566 சேர்த்தும் இன் இசைப் பதிகமும் திருக்கடைக் காப்புச்
சாத்தி நல் இசை தண் தமிழ் சொல் மலர் மாலை
6.1.668

பேர்த்தும் இன்புறப் பாடி வெண் பிறை அணி சென்னி
மூர்த்தியார் கழல் பரவியே திருமுன்றில் அணைய

257 பிள்ளையார் எழுந்து அருளி முன் புகுதும் அப் பொழுது
வெள்ள நீர் பொதி வேணியார் தம்மைத் தொழும் விருப்பால்
உள் அணைந்திட எதிர் செலாது ஒரு மருங்கு ஓங்கும்
தெள்ளு நீர் விழித் தெரிவையார் சென்று முன்பு எய்த 6.1.669

2568 மருங்கின் மந்திரியார் பிள்ளையார் கழல் வணங்கிக்
கரும் குழல் கற்றை மேல் குவிகைத்து அருளி உடையார்
பருங்கை யானை வாழ் வளவர் கோன் பாவையார் என்னப்
பெரும் களிப்புடன் விரைந்து எதிர் பிள்ளையார் அணைந்தார் 6.1.670

2569 தென்னவன் பெருந் தேவியார் சிவக் கன்றின் செய்ய
பொன்னடிக் கமலங்களில் பொருந்த முன் விழுந்தார்
மன்னு சண்பையர் வள்ளலார் மகிழ் சிறந்து அளிக்கும்
இன்னருட் பெரும் சிறப் பொடும் திருக்கையால் எடுத்தார் 6.1.671

2570 ஞான போனகர் எதிர் தொழுது எழுந்த நல்தவத்து
மானியார் மனக் கருத்து முற்றியது என மதித்தே
பானலங் கண்கள் நீர் மல்கப் பவளவாய் குழறி
யானும் என் பதியும் செய்த தவம் என் கொல் என்றார் 6.1.672

2571 யாழின் மென் மொழியார் மொழிந்து எதிர் கழல் வணங்கக்
காழி வாழ வந்து அருளிய கவுணியர் பிரானும்
சூழும் ஆகிய பர சமயத்து இடைத் தொண்டு
வாழும் நீர் மையீர் உமைக் காண வந்தனம் என்றார் 6.1.673

2572 இன்னவாறு அருள் செய்திடத் தொழுது அடி வீழ்ந்தார்
மன்னும் மந்திரியார் வரும் திறம் எலாம் மொழிய
அன்ன மென் நடையார் தமக்கு அருள் செய்து போக்கித்
துன்னு மெய்த் தொண்டர் சூழ வந்து அருளும் அப் பொழுது 6.1.674

2573 செல்வம் மல்கிய திரு ஆல வாயினில் பணி செய்து
அல்கு தொண்டர்கள் பிள்ளையார் மருங்கு அணைந்து இறைஞ்சி
மல்குகார்அமண் இருள் கெட ஈங்கு வந்து அருள
எல்லையில் தவம் செய்தனம் என எடுத்து இசைத்தார் 6.1.675

2574 அத் திருத் தொண்டர் தங்களுக்கு அருள் முகம் அளித்து
மெய்த்த காதலின் அவரொடும் புறத்தினில் மேவிச்
சித்தம் இன்புறும் அமைச்சனார் திரு மடம் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத்தொடும் இனிது அமர்ந்தார் 6.1.676

2575 பரவு காதலில் பாண்டிமா தேவியார் அருளால்
விரவு நண்பொடு குலச் சிறையார் விருந்து அளிப்பக்
சிரபுரத்து வந்து அருளிய செல்வர் அங்கு இருந்தார்
இரவி மேல் கடல் அணைந்தனன் எல்லி வந்து அணைய 6.1.677

2576 வழுதி மாநகர் அதன் இடை மாமறைத் தலைவர்
பழுதில் சீர் அடியாருடன் பகல் வரக் கண்ட
கழுது போல் வரும் கார் அமண் குண்டர்கள் கலங்கி
இழுது மை இருளுக்கு இருள் என ஈண்டினர் ஒரு பால் 6.1.678

2577 அங்கண் மேவிய சமணர்கள் பிள்ளையார் அமர்ந்த
துங்க மா மடம் தன்னிடைத் தொண்டர் தம் குழாங்கள்
எங்கும் ஓதிய திருப்பதிகத்து இசை எடுத்த
பொங்கு பேர் ஒலி செவிப்புலம் புக்கிடப் பொறாராய் 6.1.679

2578 மற்றிவ் வான் பழி மன்னவன் மாறனை எய்திச்
சொற்றும் என்று தம் சூழ்ச்சியும் ஒரு படி துணிவார்
கொற்றவன் கடைக் காவலர் முன் சென்று குறுகி
வெற்றி வேலவர்க்கு எங்களை விளம்புவீர் என்றார் 6.1.680

2579 வாயில் காவலர் மன்னவன் தனை எதிர் வணங்கி
ஆய மாகி வந்து அடிகள் மார் அணைந்தனர் என்ன
ஏயினான் அணைவா ரென அவரும் சென்று இசைத்தார்
பாயினால் உடல் மூடுவார் பதைப்புடன் புக்கார் 6.1.681

2580 புக்க போது அவர் அழிவுறு மனத்து இடைப் புலர்ச்சி
மிக்க தன்மையை வேந்தனும் கண்டு எதிர் வினவி
ஒக்க நீர் திரண்டு அணைவதற்கு உற்றது என் என்னத்
தக்கது அல்ல தீங்கு அடுத்தது சாற்றுதற்கு என்றார் 6.1.682

2581 ஆவதேல் நுமக்கு அடுத்தது கூறுவீர் என்று
காவலன் பரிந்து உரைத்தலும் கார் அமண் கையர்
மாவலாய் உன் தன் மதுரையில் சைவ வேதியர் தாம்
மேவலால் இன்று கண்டுமுட்டியாம் என்று விளம்ப 6.1.683

2582 என்று கூறலும் கேட்டு முட்டி யானும் என்று இயம்பி
நன்று நல் அறம் புரிந்தவா நான் என்று நகுவான்
கன்றும் உள்ளத்தன் ஆகி அக் கண் நுதல் அடியார்
இன்று இம் மாநகர் அணைந்தது என் அவர்கள் யார் என்றான் 6.1.684

2583 மாலை வெண் குடை வளவர் சோணாட்டு வண்புகலிச்
சூல பாணிபால் ஞானம் பெற்றான் என்று சுருதிப்
பாலன் அன்பர் தம் குழாத்தொடும் பனி முத்தின் சிவிகை
மேல் அணைந்தனன் எங்களை வாதினில் வெல்ல 6.1.685

2584 என்று கூறுவார் இத்திறம் முன்பு தாம் அறிந்தது
ஒன்றும் அங்கு ஒழியா வகை உரைத்தலும் தென்னன்
மன்றலம் பொழில் சண்பையார் வள்ளலார் நாமம்
சென்று தன் செவி நிறைத்தலும் செயிர்த்து முன் கொல்வான் 6.1.686

2585 மற்ற மா மறை மைந்தன் இம் மருங்கு அணைந்தானேல்
உற்ற செய் தொழில் யாது செய்கோம் என உரைப்ப 6.1.687

செற்றம் மீக் கொண்ட சிந்தையும் செய்கையும் உடையோர்
கொற்ற மன்னவன் மொழிக்கு எதிர் குறித்து உரை செய்வார்

2586 வந்த அந்தணன் தன்னை நாம் வலிது செய்து போக்கும்
சிந்தை அன்றி அச் சிறு மறையோன் உறை மடத்தில்
வெம் தழல் பட விஞ்சை மந்திரத் தொழில் விளைத்தால்
இந்த நன்னகர் இடத்திரான் ஏகும் என்று இசைத்தார் 6.1.688

2587 ஆவது ஒன்று இதுவே ஆகில் அதனையே விரைந்து செய்யப்
போவது என்று அவரைப் போக்கிப் பொய் பொருளாகக்
கொண்டான்
யாவதும் உரை ஆடாதே எண்ணத்தில் கவலையோடும்
பூவணை அமளி புக்கான் பொங்கு எழில் தேவி சேர்ந்தாள் 6.1.689

2588 மன்னவன் உரைப்பது இன்றி இருக்க மா தேவியார்தாம்
என் உயிருக்கு உயிராய் உள்ள இறைவா நீ உற்றது என்னோ
முன் உள மகிழ்ச்சி இன்றி முகம் புலர்ந்து இருந்தாய் இன்று
பன்னிய உள்ளத்து எய்தும் பருவரல் அருள் செய் என்றார் 6.1.690

2589 தேவியார் தம்மை நோக்கித் தென்னவன் கூறுகின்றான்
காவி நீள் கண்ணினாய் கேள் காவிரி நாட்டில் மன்னும்
தாவில் சீர்க் கழுமலத்தான் சங்கரன் அருள் பெற்று இங்கு
மேவினான் அடிகள் மாரை வாதினில் வெல்ல என்றான் 6.1.691

2590 வெண் பொடி பூசும் தொண்டர் விரவினார் அவரை எல்லாம்
கண்டு முட்டு அடிகள் மார்கள் கேட்டு முட்டியானும் காதல்
வண்டுணத் துதைந்த கோதை மானியே இங்கு வந்த
பண்பு மற்று இதுவேயாகும் பரிசு வேறு இல்லை என்றான் 6.1.692

2591 மன்னவன் உரைப்பக் கேட்டு மங்கையர்க்கு அரசியார் தாம்
நின்னிலை இதுவே யாகில் நீடிய தெய்வத் தன்மை
அன்னவர் வாது செய்தால் வென்றவர் பக்கம் சேர்ந்து
துன்னுவது உறுதியாகும் சுழிவுறேல் மன்ன என்றார் 6.1.693

2592 சிந்தையில் களிப்பு மிக்குத் திருக் கழு மலத்தார் வேந்தன்
வந்தவாறு எம்மை ஆள என வரு மகிழ்ச்சி யோடும்
கொந்தலர் குழலார் போதக் குலச் சிறையார் அங்கு எய்த
இந்த நன் மாற்றம் எல்லாம் அவர்க்கு உரைத்து இருந்த பின்னர் 6.1.694

2593 கொற்றவன் அமைச்சனாரும் கைதலை குவித்து நின்று
பெற்றனம் பிள்ளையார் இங்கு அணைந்திடப் பெறும் பேறு
என்பார்
இற்றை நாள் ஈசன் அன்பர் தம்மை நாம் இறைஞ்சப் பெற்றோம்
மற்று இனிச் சமணர் செய்யும் வஞ்சனை அறியோம் என்றார் 6.1.695

2594 மானியார் தாமும் அஞ்சி வஞ்சகப் புலையர் தாங்கள்
ஈனமே புரிய வல்லார் செய்வது என் நாம் என்று எண்ணி 6.1.696

ஞான சம்பந்தர் தம்பால் நன்மை அல்லாது செய்யும்
ஊனம் வந்து அடையில் யாமும் உயிர் துறந்து ஒழிவது என்றார்

2595 இவர் நிலை இதுவே ஆக இலங்குவேல் தென்னவன் ஆன
அவன் நிலை அதுவாம் அந்நாள் அருகர் தம் நிலை யாது என்னில்
தவம் மறைந்து அல்ல செய்வார் தங்கள் மந்திரத்தால் செந்தீ
சிவ நெறி வளர்க்க வந்தார் திரு மடம் சேரச் செய்தார் 6.1.697

2596 ஆதி மந்திரம் அஞ்சு எழுத்து ஓதுவார் நோக்கும்
மாதிரத்தினும் மற்றை மந்திர விதி வருமே
பூதி சாதனர் மடத்தில் தாம் புனைந்த சாதனைகள்
சாதியா வகை கண்ட அமண் குண்டர்கள் தளர்ந்தார் 6.1.698

2597 தளர்ந்து மற்று அவர் தாம் செய்த தீத்தொழில் சரியக்
கிளர்ந்த அச்சம் முன் கெழுமிய கீழ்மையோர் கூடி
விளங்கு நீள் முடி வேந்தன் ஈது அறியின் நம் மேன்மை
உளம் கொள்ளான் நமர் விருத்தியும் ஒழிக்கும் என்று உணர்வார் 6.1.699

2598 மந்திரச் செயல் வாய்த்து இல மற்று இனிச் செய்யும்
புந்தியாவது இங்கு இது எனப் பொதி தழல் கொடு புக்கு
அந்தண் மாதவர் திரு மடப் புறத்து அயல் இருள் போல்
வந்து தம் தொழில் புரிந்தனர் வஞ்சனை மனத்தோர் 6.1.700

This webpage was last updated on 4 May 2005

ÿÿ

kavi kALamEkap pulavar pATalkaL
(in tamil script, unicode format)

கவி காளமேகம் பாடல்கள்

Acknowledgements:
Etext preparation,PDF and Web version: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland

This webpage presents the Etext in Tamil script but in Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:
i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages (Netscape 6, Internet Explorer 5, FireFox Mozilla,..) with the Unicode Tamil font chosen as the default font for the UTF-8 char-set/encoding view.

In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

© Project Madurai 1998 - 2005
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website

http://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

கவி காளமேகம் (15-ம் நூற்றாண்டு) பாடல்கள்

காப்பு

1 ஏர்ஆனைக் காவில்உறை என்ஆனைக்கு அன்று அளித்த
போர் ஆனைக் கன்றுதனைப் போற்றினால் - வாராத

புத்திவரும்; பத்திவரும்; புத்திரஉற்பத்திவரும்;
சக்திவரும்; சித்திவரும் தான்.

கலைமகள் வணக்கம்
(திருமலைராயன் அவையில் அரியணை இரண்டு முழம் வளர்ந்து இடம் கொடுத்தபோது பாடியது)

2 வெள்ளைக் கலைஉடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தில் அரசரேடு என்னைச்
சரியா சனம்வைத்த தாய். ..

நிந்தாத் துதிகள்
அ. இகழ்வது போல் புகழ்தல்
(காஞ்சி வரதர் கருட உற்சவத்தைச் சேவித்து இகழ்வது போல் புகழ்ந்து பாடியது)

3 பெருமாளும் நல்ல பெருமாள்! அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள்! - பெருமாள்
இருந்திடத்தில் சும்மா இராமையினால், ஐயோ!
பருந்துஎடுத்துப் போகிறதே பார்! ..

(தில்லைக் கூத்தரசர் திருவிழாவைப் பார்த்து இகழ்வதுபோல் புகழ்ந்து பாடியது)

4 நச்சரவம் பூண்டதில்லை நாதரே; தேவரீர்
பிச்சையெடுத்து உண்ணப் புறப்பட்டும் - உச்சிதமாம்
காளம் ஏன்? குஞ்சரம் ஏன்? கார்க்கடல்போ லேமுழங்கும்
மேளம் ஏன்? ராசாங்கம் ஏன்? .

(நாகைப்பட்டினம் காத்தான் வருணகுலாதித்தன் சத்திரத்தில் காளமேகப்புலவர் உண்டபோது பாடிய நிந்தையும் காத்தான் வேண்டுகோளுக்கு இணங்கி அதையே துதியாகவும் பாடியது)

5 கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்; குத்தி
உலையில்இட ஊர்அடங்கும்; ஓர்அகப்பை அன்னம்
இலையில்இட வெள்ளி எழும். .

(காஞ்சிபுரம் விநாயகர் உற்சவத்தைப் பழிப்பதுபோலப் புகழ்ந்து பாடியது)

6 மூப்பான் மழுவும், முராரிதிருச் சக்கரமும்
பார்ப்பான் கதையும் பறிபோச்சோ? - மாப்பார்
வலிமிகுந்த மும்மதத்து வாரணத்தை, ஐயோ!
எலி இழுத்துப் போகின்றது, ஏன்? .

(முருகக் கடவுளைத் தரிசித்துப் பழிப்பதுபோலப்
புகழ்ந்து பாடியது)

7 அப்பன் இரந்துஉண்ணி; ஆத்தாள் மலைநீலி;
ஒப்பரிய மாமன் உறிதிருடி; - சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன்; ஆறுமுகத் தானுக்குஇங்கு
எண்ணும் பெருமை இவை..

(திருவாரூர்த் தியாகேசரது திருநடனத்தைக் கண்டு இகழ்வது
போலப் புகழ்ந்து பாடியது)

8 ஆடாரோ பின்னைஅவர் அன்பர்எலாம் பார்த்திருக்க
நீடுஆரூர் வீதியிலே நின்றுதான்? - தோடுஆரும்
மெய்க்கே பரிமளங்கள் வீசும் தியாகேசர்
கைக்கே பணம்இருந்தக் கால்..

(மதுரையில் மீனாட்சியம்மன் அன்னவாகனத்தில் ஏறிவதைச்
சேவித்து இகழ்வதுபோலப் புகழ்ந்து பாடியது)

9 மாயனார் போற்றும் மதுரா புரிச்சொக்க
நாயனார் பித்திஏறி னார்என்றே - நேயமாம்
கன்னல்மொழி அம்கயல்கண் காரிகையாள், ஐயையோ!
அன்னம்இறங் காமல்அலை வாள்..

(திருச்செங்காட்டில் உத்தராபதீசுரரைத் தரிசித்துப்
பழிப்பதுபோலப் புகழ்ந்து பாடியது)

10 காலனையும் காமனையும் காட்டுசிறுத் தொண்டர்தரு
பாலனையும் கொன்ற பழிபோமோ? - சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே; நீர் திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக் கால்.

(மயிலாடுதுறையில் மயூரநாதரைத் தரிசித்து
இகழ்வதுபோலப் புகழ்ந்து பாடியது)

11 வள்ளல் எனும்பெரிய மாயூர் நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேஇருத்தத் தெள்உமையாள்
'அஞ்சல் அஞ்சல்!' என்றுதினம் அண்டையிலே தான்இருக்க
நஞ்சுதனை ஏன்அருந்தி னார்?

(மதுரை மீனாட்சியம்மையைத் தரிசித்து இகழ்வதுபோலப்
புகழ்ந்து பாடியது)

12 நல்லதொரு புதுமை நாட்டில்கண் டேன்; அதனைச்
சொல்லவா? சொல்லவா? - சொல்லவா? தொல்லை
மதுரைவிக்கி னேச்சுரனை மாதுஉமையாள் பெற்றாள்
குதிரைவிற்க வந்தவனைக் கொண்டு.

(மதுரையில் சொக்கநாத¨த் தரிசித்து இகழ்வதுபோலப்
புகழ்ந்து பாடியது)

13 கண்டீரோ? பெண்காள்; கடம்பவனத்து ஈசனார்
பெண்டீர் தமைச்சுமந்து பித்தனார் - எண்சிதைக்கும்
மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பை இட்டார்
அக்காளை எறினா ராம்!

(தில்லையில் சிவகாமியம்மையைக் கண்டு வணங்கி
இகழ்வதுபோலப் புகழ்ந்து பாடியது)

14 மாட்டுக்கோன் தங்கை மதுரைவிட்டுத் தில்லைநகர்
ஆட்டுக்கோ னுக்குப்பெண்டு ஆயினாள்; கேட்டிலையோ?
குட்டி மறிக்கஒரு கோட்டானையும் பெற்றாள்
கட்டிமணிச் சிற்றிடைச்சி காண்!

(தில்லை நடராசரைக் கண்டு வணங்கி இகழ்வதுபோலப்
புகழ்ந்து பாடியது)

15 நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுகால், ஐயா! நின்
ஆட்டுக்கு இரண்டுகால் ஆனாலும், - நாட்டம் உள்ள
சீர்மேவு தில்லைச் சிவனே;,இல் ஆட்டைவிட்டுப்
போமோ,சொல் வாய்! அப் புலி?

(தில்லையில் நடராசரது பிச்சாடனத் தோற்றத்தைக்
கண்டு வணங்கி இகழ்வதுபோலப் புகழ்ந்து பாடியது)

16 தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏறாளோ?
பூண்டசெருப் பால்ஒருவன் போடானோ? - மீண்டு ஒருவன்
வையானோ? விவ்முறிய மாட்டானோ? தென்புலியூர்
ஐயா,நீ ஏழைஆ னால்.

(தில்லை அம்பலவாணரைத் தரிசித்து இகழ்வதுபோலப்
புகழ்ந்து பாடியது)

17 கொங்குஉலகும் தென்தில்லைக் கோவிந்தக் கோன்இருக்கக்
கங்குல்பகல் அண்டர்பலர் காத்திருக்கச் செங்கையிலே
ஓடு எடுத்த அம்பலவா; ஓங்குதில்லை உன்புகுந்தே
ஆடுஎடுத்தது எந்தஉபா யம்?

(திருவொற்றியூர்த் தியாகேசரது திருநடனத்தைக்
கண்டு வணங்கி இகழ்வதுபோலப் புகழ்ந்து பாடியது)

18 ஆடும் தியாகரே! ஆட்டம்ஏன் தான்உமக்கு?
வீடும் சமுசாரம் மேலிட்டுக் -கூடிச்
செருக்கிலினை யாடச் சிறுவர்இரண்டு ஆச்சே!
இருக்கும்ஊர் ஒற்றிஆச் சே!

(வைத்தீசுவரைத் தரிசித்து இகழ்வதுபோலப்
புகழ்ந்து பாடியது)

19 வாதக்கால் ஆம்தமக்கு; மைத்துனர்க்கு நீரிழிவுஆம்;
பேதப் பெருவயிறுஆம் பிள்ளைதனக்கு! - ஓதக் கேள்!
வந்தவினை தீர்க்க வகை அறிவார் வேறூரார்
எந்தவினை தீர்ப்பார் இவர்?

(புள்ளிருக்கும் வேளூர்ச் சிவபெருமானை
இகழ்வதுபோலப் புகழ்ந்து பாடியது)

20 தீத்தான்உன் கண்ணிலே; தீத்தான்உன் கையிலே;
தீத்தானும் உன்தன் சிரிப்பிலே, தீத்தான்உன்
மெய்எலாம்! புள்இருக்கும் வேளூரா; உன்னை இந்தத்
தையலாள் எப்படிச் சேர்ந் தாள்?

(திருச்செங்காட்டுச் சிவபெருமானைப் பழிப்பது போலப்
புகழ்ந்து பாடியது)

21 கண்ணபுரம் கோயில் கதவுஅடைத்துத் தாழ் போட்டார்
மண்ணை உண்டார் வெண்ணெய்உண்ட மாயனார் என்னும்
சிரக்கப் புரைஏந்திச் செங்காட்டில் ஈசர்
இரக்கப் புறப்பட்டார் என்று.

(திருவாரூர்த் தியாகராசரது திருநடனம் குறித்தப்
பழிப்பதுபோலப் புகழ்ந்து பாடியது)

22 திருந்துஆடு அரவுஅணியும் தென்கமலை ஈசர்
இருந்துஆடாது என்செய் திடுவார்? - பொருந்த
ஒருகாலே அல்லலே ஒண்தொடிக் காஅன்று
இருகாலும் சந்துபோ னால்.

(திருவொற்றியூர்த் தியாகேசரைக் கண்டு வணங்கியபோது
அவரைப் பழிப்பதுபோலப் புகழ்ந்து பாடியது)

23 பார்ஊர் அறியப் பலிக்குஉழன் றீர்பற்றிப் பார்க்கும்இடத்து
ஓர்ஊரும் இல்லை; இருக்கஎன் றாலும்உள் ளூரும்ஒற்றி;
பேரூர் அறியத் தியாகர்என் றேபெரும் பேரும்பெற்றீர்;
ஆருரி லேஇருப் பீர்?இனிப் போய்விடும் அம்பலத்தே!

(ஓர் ஊரில் சிவன் திருவீதி புறப்பட்டு வருவதைப் பார்த்துப்
பழிப்பதுபோலப் புகழந்து பாடியது)

24 வாணியன் பாடிட கண்ணான் சுமக்க, வடுகன்செட்டி
சேணியன் போற்றக், கடல்பள்ளி முன்தொழத் தீங்கரும்பைக்
கோணியன் வாழ்த்தக் கருமான் துகில்தனைக் கொண்டு அணிந்த
வேணியன் ஆனவன் தட்டான் புறப்பட்ட வேடிக்கையே.

(தில்லை நடராசர் மீது பழிப்பதுபோலப் புகழ்ந்து பாடியது)

25 வில்லால் அடிக்க செருப்பால் உதைக்க வெகுண்டுஒருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கஇக் காசினியில்
அல்ஆர் பொழில்தில்லை அம்பல வாணற்குஓர் அன்னைபிதா
இல்லாத தாழ்வுஅல்ல வோஇங்ங னேஎளிது ஆனதுவே.

(தில்லையில் வாழும் கணபதியைத் தரிசித்துப்
பழிப்பதுபோலப் புகழ்ந்து பாடியது)

26 கம்பமத கடகளிற்றான் தில்லை வாழும்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பர்எல்லாம் விழித்திருந்தார் அயில்வேல் செங்கை
உடையஅறு முகவனும்கண் ணீர்ஆறு ஆனான்
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுஉண் டான்மால்
பயம்அடைந்தான் உமையும்உடல் பாதி ஆனான்
அம்புலியைப் படைத்திடுவது அவம தேஎன்று
அவனும்அன்னம் இறங்காமல் அலைகின் றானே.

ஆ. புகழ்வதுபோல் இகழ்தல்
(திருக்கண்ணபுரத்து இருக்கும் திருமாலைப்
புகழ்வதுபோல் இகழ்ந்து பாடியது)

27 கன்னபுரம் மாலே; கடவுளிலும் நீஅதிகம்;
உன்னிலுமோ யான்அதிகம்; ஒன்றுகேள்! - முன்னமே
உன்பிறப்போ பத்தாம்; உயர்சிவனுக்கு ஒன்றும்இல்லை;
என்பிறப்புஎண் ணத்தொலையா தே!

புகழ்ச்சியும் இகழ்ச்சியும்
அ. புகழ்ச்சி
(ஆமூர் வேங்கட முதலியாருடைய குதிரையைப்
புகழ்ந்து பாடியது)

28 ஆறும் பதினாறும் ஆமூரில் வேங்கட்டன்
ஏறும் பரிமாவே ஏற்றமா - வேறுமா
வெந்தமா சும்மா வெறுமா களிகிளற
வந்தமா சந்தமா மா.

(திருவண்ணாமலையில அருணாசலப்பெருமானை
வணங்கும்போது புகழ்ந்து பாடியது)

29 சட்டியிலே பாதிஅந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் தில்பாதி இட்டுஇருக்கத் - திட்டமுடன்
ஆடிவந்த சோணேசர் அன்று அழைத்த போது,பிள்ளை
ஓடிவந்தது எவ்வாறு உரை?

(கலைச்சியின் தாயார் வேண்டுகோளுக்கிணங்கிப்
பாடிய புகழ்மொழி)

30 நஞ்சுகுடி கொண்டகனை நாலும் தெரிந்துமதன்
இஞ்சிகுடி தன்னிலும்வந்து எய்வானோ -விஞ்சு
முலைச்சிகரத் தால்அழுத்தி முத்தம்இட்டுச் சந்தே
கலைச்சிகரத் தால்அணைத்தக் கால்?

(வைத்தீச்சுவரன் கோயிலில் மருந்தாகக் கொடுக்கப்படும்
புற்று மண்ணின் பெருமையைப் புகழ்ந்து பாடியது)

31 மண்டலத்தில் நாளும் வைத்தியராய்த் தாம்இருந்து
கண்டவினை தீர்க்கின்றார் கண்டீரோ? - தொண்டர்
விருந்தைப்பார்த்து உண்டுஅருளும் வேளூர்என் நாதர்
மருந்தைப்பார்த் தால்சுத்த மண்.

(ஆமூர் முதலியார் என்னும் வள்ளலைப்
புகழ்ந்து பாடியது)

32 உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி
வெள்ளம்கா லம்திரிந்து விட்டோமே ! - உள்ளபடி
ஆமூர் முதலி அமரர்கோன் இங்குஇருக்கப்
போம்ஊர் அறியாமல் போய்.

(மதுரைச் சொக்கநாதரைப் புகழ்ந்து பாடியது)

33 கடம்பவனச் சொக்கருக்குக் கண்ணன்தான் வேறோ?
இடம்பெரிய கண்ஒன்றை ஈந்தான்; - உடம்பதனில்
செம்பாதி ஆனான்; சுமக்க எருது ஆனான்;
அம்புஆனான்; தேவியும்ஆ னான்.

(அமராவதிக் குருக்கள் அளித்த விருந்தினை உண்டு
அவனைப் புகழ்ந்து பாடியது)

34 ஆனை குதிரைதரும் அன்னைதனைக் கொன்றகதி
சேனைமன் னரைக்காய்துன் னீஅவரை - பூநெயுடன்
கூட்டிஅமுது இட்டான் குருக்கள்அம ராபதியான்
வீட்டில்உண்டு வந்தேன் விருந்து.

(திருப்பனந்தாள் பட்டரைப் புகழ்ந்து பாடியது)

35 விண்நீரும் வற்றிப் புவிநீரும் வற்றி விரும்புமழைத்
தண்நீரும் வற்றிப் புலவோர் தலிக்கின்ற காலத்திலே
உண்ணீர்உண் ணீர்என்று உபசாரம் சொல்லி உபசரித்துத்
தண்ணீரும் சோறும் தருவான் திருப்பனந் தாள்பட்டனே !

(திருமலைராயன் புகழைப் புகழ்ந்து பாடியது)

36 வீமன்என வலிமிகுந்த திருமலைரா
யன்கீர்த்தி வெள்ளம் பொங்கத்
தாமரையில் அயன்ஓடிச் சத்தியலோ
கம்புகுந்தான் சங்க பாணி

பூமிதொட்டு வானம்மட்டும் வளர்ந்துநின்றான்
சிவன்கயிலைப் பொருப்பில் ஏறிச்
சோமனையும் தலைக்கு அணிந்து
வடவரைத்தண் டால்ஆழம் சோதித் தானே.

ஆ. இகழ்ச்சி
(விகடராமன் குதிரையைப் பழித்துப் பாடியது)

37 முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்துஇரண்டு பேர்தள்ள - எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி.

(தாசி கலைச்சி என்பவளை இகழ்ந்து பாடியது)

38 ஏய்ந்த தனங்கள் இரண்டும்இரு பாகற்காய்
வாய்ந்தஇடை செக்குஉலக்கை மாத்திரமே - தேய்ந்தகுழல்
முக்கலம்சிக் கும்பிடிக்கும் மூதேவி யாள்கமலைக்
குக்கல்இச்சிக் கும்கலைச்சிக் கு.

(கம்பரை இகழ்ந்து பாடியது)

39 நாரா யணனை நராயணன்என் றேகம்பன்
ஓராமல் சொன்ன உறுதியால் - நேர்ஆக
வார்என்றால் வர்என்பேன்; வாள்என்றால் வள்என்பேன்;
நார்என்றால் நர்என்பேன் நான்.

(நாகைப்பட்டினம் தாசி ஒருத்தி பாடிய பாட்டைக்
கேட்டு அப்பாட்டு இனிமையாய் இல்லாதப்டியால்
அவளைப் பழித்துப் பாடியது)

40 வாழ்த்து திருநாகை வாகுஆன தேவடியாள்
பாழ்த்த குரல்எடுத்துப் பாடினாள் - நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான்கண் டேன்கண்டேன் என்று
பழுதைஎடுத்து ஓடிவந்தான் பார்.

(திருவரங்கத்தில் ஒருத்தி வீட்டில் சாப்பிட்ட
சாப்பாட்டைஇகழ்ந்து பாடியது)

41 நீச்சால் பெருத்திடு காவேரி ஆற்றை நிலைநிறுத்திச்
சாய்ச்சாள் இலைக்கறிச் சாற்றைஎல் லாம்அது தானும் அன்றிக்
காய்ச்சாப் புளியும்நல் கல்லுடன் சோறும் கலந்துவைத்த
ஆய்ச்சாளை யான்மற வேன்;மறந் தால்மனம் ஆற்றிடுமே.

(தன்னை ஏளனம் செய்த பாடத் தெரியாத கிழத்
தூசியை இகழ்ந்து பாடியது)

42 இந்து முடிக்கும் சடையாளர் இருக்கும் தொண்டை வளநாட்டில்
சிந்து படிக்கக் கவிபடிக்கத் தெரியா மடவாய்; உன்தனக்குக்

கெந்தப் பொடி ஏன்? பூமுடி ஏன்? கிழமாய் நரைத்து முகம்திரைந்தும்
இந்த முறுக்குஏன்? வீறாப்பு ஏன்? எடுப்புஏன்? உன்னைக் கொடுப்பேனே.

(அதிமதுரகவி காளமேகத்தை இகழ்ந்து பாடியது)

43 மூச்சு விடும்முன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சுதுஎன்றால் ஆயிரம்பாட்டு ஆகாதா? - பேச்சு என்ன?
வெள்ளைக் கலிகாள மேகமே! நின்னுடைய
கள்ளக் கலிக்கடையைக் கட்டு!

வியப்பும் சிறப்பும்

அ. வியப்பு

(கீரை விற்கும் பெண் ஒருத்தியின் இடைச் சிறுமையையும்
தனப்பெருமையையும் நோக்கி இரங்கி வியந்து பாடியது)

44 வெள்ளைஆன் ஏறும் விமலர் அடிபணியும்
பிள்ளையான் வாழும் பெரும்தெருவில் - வள்ளை
இலைக்கறிவிற் பாள்மருங்குல் இற்றுவிடம் என்று
முலைக்குஅறிவிப் பார்இலையே முன்.

(கொண்டத்தூர் தண்டைக்காலம்மை சமைத்த
பூசணிக்காய்க் கறியை வியந்து பாடியது)

45 கண்டக்கால் கிட்டும் கயிலாயம் கைக்கொண்டுஉள்
கொண்டக்கால் மோட்சம் கொடுக்குமே - கொண்டத்தூர்
தண்டைக்கால் அம்மை சமைத்துவைத்த பூசுணிக்காய்
அண்டர்க்குஆம் ஈசருக்கும் ஆம்.

(ஆற்றூரில் வாழ்ந்த சோமி என்னும் தாசியின்
அழகைக்கண்டு வியந்து பாடியது)

46 ஆராயும் முத்தமிழ் ஆற்றூரில் சோமி அழகுகண்டு
நாரா யணன்நெடு மால்ஆகி னான்அந்த நான்முகனும்
ஓர்ஆ யிரம்மடல் ஊர்ந்தான்வில் மாரன்உருஅழிந்தான்
பேர்ஆன வானவர் கோனும்கண் ஆயிரம் பெற்றனனே.

ஆ. சிறப்பு

(காஞ்சி வரதரது யானை வாகன உற்சவத்தைச்
சிறப்பித்துப் பாடியது)

47 எட்டுஒருமா எண்காணி மீதே இருந்தகலைப்
பட்டுஒருமா நால்மாவில் பாய்ந்ததே - சிட்டர்தொழும்
தேவாதி தேவன் திருஅத்தி யூர்வரதன்
மாஏறி வீதிவரக் கண்டு.

(மதுரையில் உள்ள கூத்தாள் என்னும் தாசி, அவள்
தமக்கை, தாயார், பாட்டி இவர்களைச் சிறப்பித்தப் பாடியது)

48 கூத்தாள் விழிகள்நெடும் கூர்வேலாம்; கூத்தாள்தன்
முத்தாள் விழிகள் முழுநீலம்; - மூத்தாள்தன்
ஆத்தாள் விழிகள் அரவிந்தம்; ஆத்தாள்தன்
ஆத்தாள்விழிகள் இரண்டு அம்பு.

(திருவாரூர்த் தியாகேசர் சுந்தரருக்காகப் பரவையாரிடம்
தூது சென்றதை சிறப்பித்துப் பாடியது)

49 ஆனர் இலையே அயனும் திருமாலும்
கான்ஆர் அடிமுடிமுன் காண்பதற்கு - மேல்நாள்
இரவுதிரு ஆருரில் எந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.

(திருவாலங்குடிச் சிவனைச் சிறப்பித்துப் பாடியது)

50 ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலம் குடியான் என்று ஆர் சொன்னார்? - ஆலம்
குடியானே ஆயின் குவலயத்தோர் எல்லாம்
மடியாரோ மண்மீதிலே.

(சிவபெருமான் நஞ்சு உண்டதைச் சிறப்பித்தப் பாடியது)

51 கடுக்கை முடியானே காலைமுடித் தான்போல்
சுடுக்கைகுடி யான்ஆகில் காணார் - கடுக்கை
உரல்அடிமீது உற்றானும், உம்பர்களும், மற்றும்
உரல்அடிமீது உற்றானும் ஊர்.

(கங்கைகொண்ட சோளேச்சுரத்தானைச்
சிறப்பித்துப் பாடியது)

52 காவலன் எங்கள் கனவைப்புஆம் சோளேசன்
மாவலி கங்கை மணிவாரி - ஆஅனல்என்று
அப்புள் அங்கை தோய்க்க அதில்வா ரியமுத்தைக்
கொப்புளம்என்று ஊதும் குரங்கு.

(அரசன் ஒருவனுடைய குதிரையைச் சிறப்பித்தப் பாடியது)

53 கோக்குதிரை நின்குதிரை! கோவல்மது ரா! ஒன்னார்
மாக்கு திரைஎல்லாம் மண்குதிரை; - தூக்குதிரைத்
துங்கக் கரைக்குதிரை; சொக்கன் குதிரை;சது
ரங்கக் குதிரைகளே ஆம்!

வசையும் வசைமீட்சியும்
அ. வசை

(தண்டாங்கூரில் உள்ளவர்கள் பண்ட நிறை குறைய
விற்றதைக் கண்ட அவர்கள் மீது பாடிய வசை)

54 தண்டாங்கூர் மாசனங்காள்! சற்குணர்நீர் என்றுஇருந்தேன் !
பண்டம் குறையவிற்ற பாவிகாள்! - பெண்டுகளைத்
தேடி உண்ண விட்டீர் தெருக்கள் தெருக்கள்தோறும்
ஆடிமுதல் ஆனிவரைக் கும்.

(மாவலிவாணனைப் பாடிய வசை)

55 சொக்கன் மதுரையினில் தொண்டர்க்குன் அவிழ்ந்த
பொய்க்குதிரை சந்தைக்குப் போகுமதோ? - மிக்க
கரசரணா! அந்தக் கரும்புறத்தார்க்கு எல்லாம்
அரசுஅரணா? மாவலியா ணா !

(திருக்கண்ணமங்கை நம்பியார் மீது பாடிய வசை)

56 தருக்குலவு கண்ணமங்கைத் தானத்தார் எல்லாம்
திருக்குளத்து மீன்ஒழியத் தின்று - குருக்கொடுக்கும்
தம்பிமார் என்று இருந்தோம்; நாட்டில் அழிகூத்தி
தம்பிமா ராய்இருந்தார் தாம் !

(புலிக்குட்டி சிங்கன் மீது பாடிய வசை)

57 போனபோன இடம்தொறும்தலைப்பொட்டுஎழப்பிறர் குட்டவே
புண்படைத்த மனத்தன்ஆகிய பொட்டிபுத்திரன் அத்திரன்
மானஈசன் இலச்சைகேடன் ஒழுக்கம்அற்ற புழுக்கையன்
மாசனாம்புலிக் குட்டிசிங்கன் வரைக்குள்ஏறி இறங்குவீர்;
பேனும்ஈரும் எடுக்கவோசடை பின்னிவேப்பநெய் வார்க்கவோ
பீவிழிக்கிரி எழுதவோஒரு பீறுதுண்டம் உடுத்தவோ
கானகம்தனில் வைக்கவோஇரு கால்விலங்கிடுவிக்கவோ
காதகம்கொடு சாடவோஒரு காரியம்தனை ஏவுமே !

(குடவாசல் விண்ணாள் மீது பாடிய வசை)

58 செக்கோ மருங்குல் சிறுபய றோதனம் சிக்குஅளகம்
வைக்கோல் கழிகற்றை யோகுழி யோவிழி வாவிதொறும்
கொக்குஏறி மேய்குட வாசல்விண் ணாள்வரைக் கோம்பியனீர்!
எக்கோ படைத்தது? நீரே நெருப்பில் எரிந்தவரே !

(ஒரு குழந்தை காளமேகத்தைக் கண்டு பயந்து அழுதுகொண்டு சென்று,
தன் தாயிரிடம் சொல்லிற்று. உடனே தாயார் புலவரைப் பார்த்து
@உன்னைக் கொடுப்பேனே@ என்று ஏசினார். அது கேட்ட புலவர் சினம்
கொண்டு அக்குழந்தை இறந்துபோகும்படி முதலில் வசை பாடினார்.
அது கண்ட அக்குழந்தையின் தந்தை தன் குழந்தையை உயிர்
பிழைக்க வைக்கும்படி வேண்டினார். அதற்கு இரங்கிய புலவர்
அக்குழந்தை பிழைக்கும்படி வசைமீட்சி பாடினார். வசையும் வசைமீட்சியும்
அமைந்த பாடல் இது)

59 என்னைக் கொடுத்தால் இரக்கம்உனக்கு உண்டாகுமோ?
அன்னக் கமலமுக வல்லியே! - துன்னுமதக்

காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே! நீபயந்த
கோட்டானைத் தானே கொடு.

(திருவாரூர்த் தியாகர் கழுத்தில இருந்த வைரமாலை அறவும்
மறுபடி பொருந்திப்பெறவும் பாடிய வசையும் வசைமீட்சியும்)

60 அன்னவயல் சூழ்ந்திருக்கும் ஆரூரான் நெஞ்சத்தில்
இன்னம் வயிரம் இருப்பதா? - முன்னம்ஒரு
தொண்டன்மக னைக்கொன்றும் சோழன்மகனைக் கொன்றும்
சண்டன்மக னைக்கொன்றும் தான்.

எடுப்பும் முடிப்பும்
அ. எடுப்பும் முடிப்பும்
(எழுத்தாணி என்று எடுத்துச் சூரிக்கத்தி இன்று முடித்தது)

61 எழுத்தா ணிதுபெண் இதனைமுனி காதில்
வழுத்துஆ ரணக்குகனை வாதுக்கு - அழைத்ததுவும்
மாரன்கை வில்மால்முன் காத்ததவும் நன்றாகும்
தீரம்உள்ள சூரிக்கத் தி.

(கொட்டைப்பாக்கு என்று எடுத்துக் களிப்பாக்கு
என்று முடித்துப் பாடிய து)

62 கொட்டைப்பாக் கும்ஒருகண் கூடையைப் பாக் கும்மடியில்
பிட்டைப்பாக் கும்பாகம் பெண்பாக்கும் - முட்டநெஞ்சே!
ஆரணனும் நாரணனும் ஆதிமறை யும்தேடும்
காரணனைக் கண்டுகளிப் பாக்கு.

(செருப்பு என்று எடுத்து விளக்குமாறு என்று முடித்துப் பாடியது)

63 செருப்புக்கு வீரர்களைச் சென்றுஉழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல - மருப்புக்குத் தண்தேன்
பொழிந்ததிருந் தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்கு மாறே!

(கரி என்று எடுத்து உமி என்று முடித்துப் பாடியது)

64 கரிஅதனை யேஉரித்த கையா! வளைஏந்து
அரிஅயற்கும் எட்டாத ஐயா! - பரிவுஆக
அண்டர்எல்லாம் கூடி அமுதம் கடைந்தபொழுது
உண்டநஞ்சை இங்கே உமி.

(கரி என்று எடுத்து உமி என்று முடித்துப் பாடியது)

65 கரிக்காய பொரித்தாள்கன் னிக்காயைத் தீய்த்தாள்
பரிக்காயைப் பச்சடியாப் பண்ணாள் - உருக்கம்உள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினாள் அத்தைமகள்
உப்புக்காண் சீச்சி உமி.

(ஒருவர் குரங்கு என்று தொடங்கி இடம் என்று முடிக்க
வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கிணங்கிப் பாடியது)

66 குரங்குஅனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரம்செறியப் பாம்புஅலவன் கவ்வ - விரைந்துபோய்
பற்றவே கள்உண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக்கு இடம்.

முடிப்பு

(சிவனை நஞ்சுணி என்று முடித்துப் பாடியது)

67 சிரித்துப் புரம்எரித்தான் சிந்துரத்தைப் பற்றி
உரித்துஉதிரம் பாய உடுத்தான் - வருத்தமுடன்
வாடும்அடி யாருடனே வானவரும் தானவரும்
ஓடுபயம் தீர்த்தநஞ்சு ணி.

வினா விடை

(மன் என்று எடுத்து மலுக்கு என்று முடித்து
வினா-விடை அமையப் பாடியது)

68 மன்னுதிரு வண்ணா மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னும் தலைச்சவரம் பண்ணுவதேன் - மின்னின்
இளைத்தஇடை மாதர் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு

(திருவரங்கத்து வைணவர் திருமால் உலகத்தை உண்டபோது
சிவன் எங்கே இருந்தார்? என்று கேட்டார். அதற்கு விடையாகப்
பாடியது)

69 அருந்தினான் அண்டம்எலாம் அன்றுமால் ஈசன்
இருந்தபடி ஏதுஎன்று இயம்பப் - பொருந்திப்
பருங்கவளம் யானைகொளப் பாகன்அதன் மீதே
இருந்தபடி ஈசன்இருந் தான்.

(தில்லை நடராசர் கையில் ஏந்திய மான் அவர் திருமுகத்திற்கு
நேராகத்தன் முகத்தையும் முன்னம் கால்களையும் உயரத் தூக்கி
இருப்பதற்குக் காரணம் யாது? என வினவிய தில்லை மூவாயிரவர்க்கு
விடையாகப் பாடியது)

70 பொன்னம் சடைஅறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்நெஞ்சு உவகையுறத் தாவுமே! - அன்னங்கள்
செய்க்கமலத்து உற்றுலவும் தில்லை நடராசன்
கைக்கமலத்து உற்றமான் கன்று.

சொல் நயம்

(பூநக்கி ஆறுகால் முதலியாவகச் சொல்நயம் அமையப் பாடியது)

71 பூநக்கி ஆறுகால்; புள்இனத்துக்கு ஒன்பதுகால்;
ஆனைக்குக் கால்பதினேழ் ஆனதே; மானே! கேள்!
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததுண்டு;
கண்டதுண்டு; கேட்டதில்லை காண்!

(சிவன் முருகன், பிள்ளையார், திருமால், சிவனடியார் ஆகியவர்க்த் தனித்தனியே ஆறதலை உண்டு என்று சொல்நயம் அமையப் பாடியது)

72 சங்கரற்கும் ஆறுதலை; சண்முகற்கும் ஆறுதலை;
ஐங்கரற்கும் மாறுதலை ஆனதே; - சங்கைப்
பிடித்தோர்க்கும் மாறுதலை; பித்தா! நின் பாதம்
படித்தோர்க்கும் ஆறுதலை பார்!

வெண்பாவில் அடக்கிப் பாடியவை

(ஒரு வெண்பாவில் சிதம்பரதேவ என்னும் தொடர் நான்கு முறை அமையப் பாடியது)

73 அரகர! திருச்சிற் றம்பலவா ணாஅந்
தரரூ ப!மகே ச!சிதம் - பரதே
வ!சிதம் பரதே வ!சிதம் பரதே
வ!சிதம் பரதே வனே!

(ஒன்று முதல் பதினெட்டு வரை அடைமொழி இன்றி ஒரு வெண்பாவில் அமையப் பாடியது)

74 ஒன்றுஇரண்டு, மூன்றுநான்கு, ஐந்துஆறு, ஏழ்எட்டு
ஒன்பதுபத் துப்பதி னொன்று - பன்னிரண்டு பதின்
மூன்றுபதி னான்குபதி னைந்து
பதி னாறுபதி னேழ்பதி னெட்டு.

(ஒரு வெண்பாவில் ஐந்து டு வரப்பாடியது)

75 ஓ,கா,மா வீ,தோ உரைப்பன் டு,டு,டு,டு,டு
நாகுஆர் குடந்தை நகர்க்குஇறைவர் - வாகுஆய்
எடுப்பர் நடம்இடுவர் ஏறுவர் அன்பர்க்குக்
கொடுப்பர் அணிவர் குழைக்கு.

(மும்மூர்த்திகளின் பெயர், கறி, உணவு, கருவி, அணிகலம், ஊர்தி, வாழிடம் ஆகியவற்றை ஒரு வெண்பாவில் அடக்கியப் பாடியது)

76 சிறுவன் அளைபறு நெந்நெல் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூல் பொறிஅரவம்
வெற்றேறு புள்அன்னம் வேதன்அரன் மாலுக்குக்
கல்தாழம் பூவே கறி.

(பன்னிரண்டு இராசிகளின் பெயரும் முறையும் தொகையும்
அடைமொழி இல்லாமல் ஒர வெண்பாவில் அமைத்துப் பாடியது)

77 பகருங்கால் மேடம்இட பம்துனம், காக்க
டகம்சிங்கம், கன்னி, துலாம்,விர்ச் - சிகம்,த
நுசுமகரம், கும்பம்மீ னம்பன்னி ரண்டும்
வசையறும்இ ராசி வளம்.

(ஆறு அற்புதங்களைக் கூறி, அவற்றை ஒரு வெண்பாவில்
அமைத்துத் தரவேண்டும் என்றவர்க்கு, முதல்¢ல் அப்பா என்பதையும்
முடிவில் யார்க்கும் என்பதையும் சேர்த்து அவர்கள் சொன்ன
வரிசைப்படியே அமைத்துப் பாடியது)

78 அப்பா! குமரகோட் டக்கீரை செவ்விலிமேட்
டுப்பாகற் காய் பருத் திக்குளநீர், - செப்புவா
சல்காற்றுக், கம்பத்து அடியில் தவம்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கும் இனிது.

(திருமால் அவதாரம் பத்தையும் பாதி வெண்பாவில்
அடக்கிப் பாடியது)

79 மெச்சுபுகழ் வேங்கடவா, வெண்பாவில் பாதியில்என்
இச்சையில்உன் சன்மம் எடுக்கவா? - மச்சா, கூர்
மாகோலா, சிங்காவா மாராமா, ராமாராமா
கோபா லாமாஆ வாய்.

(ஒரு வெண்பாவில் ஆறு சாதிப் பெயர்கள் அமைத்துப் பாடியது)

80 கம்மாளன் அங்கிக் கணக்கன்என வேதுதித்தார்
செம்மான் சதுரைத் திருஅரசை - அம்மா!கேள்!
வாணியனும் பொன்ஏரி வாழும்வெள் ளாழனுமே
சேணியனும் அன்றே தெரிந்து.

காரணம் காண்பித்துப் பாடியவை
(பாற்கடலில் செந்தூள் எழுந்ததற்குக் காரணம் கற்பித்துப் பாடியது)

81 சுத்தபாற் கடலின் நடுவினில் தூளி
தோன்றிய அதிசயம் அதுகேள்;
மத்தகக் கரியை உரித்தவன் மீது
மதன்பொருது அழிந்திடு மாற்றம்
வித்தகக் கமலை செவியுறக் கேட்டாள்
விழுந்துநொந்து அயர்ந்துஅழுது ஓங்கிக்
கைத்தல மலரால் மார்புறப் புடைத்தாள்
எழுந்தது கலவையின் செந்தூள்!

(தில்லைக் கூத்துப்பிரான் மழு ஏந்தியதற்குக் காரணம்
கற்பித்துப் பாடியது)

82 தில்லைக் காவுக்குள் சிதம்பரனார் ஆட்டைஎடுத்து
இல்லைக்காண் என்றுமழு ஏந்தினார் - சொல்லக்கேள்
மெய்யிலே கண்டேன்யான் மீண்டும்கேள்! ஆயனுமே
நெய்யிலே கையிட்டா னே.

(சிரித்துப்புரம் எரித்ததற்குக் காரணம் கூறிப் பாடியது)

83 தில்லைக்குள் வாழும் சிதம்பர ரே! உமைச் செப்புஎன்றால்
அல்லல் பிழைப்பே பிழைத்துவிட் டீர்!முப்பு ராதியர்மேல்
வில்லைத் தொடுத்தெய்ய மாட்டாமல் நீர்ஆந்த வேளைதண்ணில்
பல்லைத் திறந்துவிட் டீர்இது வோநும் படைத்தொழிலே?

(திருமால் எருதாகச் சுமந்ததற்குக் காரணம் கூறிப் பாடியது)

84 எருதாய்ச் சுமந்துபோய் ஏத்திக்கண் சாத்திப்
பொருதுஆழி வாங்கினதும் பொய்யோ? - பெருமான்
திருநாமம் என்நெற்றி தீட்டியதும் கச்சி
ஒருமா இலக்கம்அல்ல வோ?

இலக்கணம் அமையப் பாடியவை<

(அ வருக்கம் / ககர வருக்கம் அமையப் பாடியது)

85 காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
நோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்க - கைக்குக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா.

(தகர வருக்கம் அமையப் பாடியது)

86 தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி து¨த்ததா தூதிதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
¦த்ததாதோ? தித்தித்த தோது!

(ஆ இனம் / வல்லினம் அமையப் பாடியது)

87 துடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோடல்
தொடுத்த தொடைகடுக்கை பொன்போல் - பொடித்துத்
தொடைபடித்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டிற்குக் காடு.

(மெல்லினம் அமையப் பாடியது)

88 மானமே நண்ணா மணமென் மனமென்னும்
மானமான் மன்னா நனிநாணு - மீனமா
மானா மினன்மின்னி முன்முன்னே நண்ணினும்
மானா மணிமேனி மான்.

(இடையினம் அமையப் பாடியது)

89 விரவலராய் வாழ்வாரை வெல்லல் ஒழிவாய்
இரவுஉலவா வேலை ஒலியே - வரவு ஒழிவாய்
ஆயர்வா யேஅரிவை ஆர்உயிரை ஈராவோ?
ஆயர்வாய் வேயோ அழல்.

(இ மொழிமாற்று / கடைமொழி மாற்று)

90 மாடுதின்பான், பார்ப்பான் மறைஓது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான், கொல்லனே - தேடி
இரும்புஅடிப்பான்; செக்கான் எண்ணெய்விற்பான்; வண்ணான்
பரும்புடைவை தப்பும்;பறை.

(இதுவும் அது)

91 இந்திரையை மார்பில்வைத்தான், ஈசன் உமையையிடத்து
அந்திபகல்அமைத்தான், அம்புயத்தோன் - கந்தம்மிகு
வெண்தா மரைமயிலே வேண்டிவைத்தான் நாவில் உலகு
உண்டுஉமிழ்ந்த தாமரைக்கண் ணோன்.

(இதுவும் அது)

92 அன்னம் திருமாலுக் காம்கருடன், சங்கரற்காம்
பண்இடபம்; இந்திரற்காம் பார்க்குங்கால் - துன்னு
மதவா ரணம்;அளகை மன்னனுக்காம் பஞ்சு
கதிசேர் புரவி; விதிக் காம்.

(இதுவும் அது)

93 கடம்பற்கு; எண் தோற்அயற்குக்; கண்பதினைந்து ஆமால்
கடம்பற்கே; நால்வாய்கை ஐந்தே - கடம்பல்கோடு
ஆனைமுகற்கு; ஆயிரம்கண் ஆகண்ட லற்கு; இலம்பாடு
ஆன்ஐமுகற்கு; ஆறுஇரண்டு கை.

(இதுவும் அது)

94 ஆயனுக்கு கண்மூன்றுஆம் ஆதிசிவனு க்குஇருகண்
மாயனுக்குச் செங்கையிலே மான்மழுஆம் - நேயமுடன்
சங்கரற்குச் சங்குஆழி தான்மாலுக்கு ஆலம்ஆம்
மங்கைஇடத் தாற்குஆகும் மண்.

(இதுவும் அது)

95 கொன்றை மலர்தரித்தான் கோபாலன் கோல்எடுத்து
நின்றுகுழல் ஊதினான் நீள்சடையன் - பொன்திகழும்
அக்குஅணிந்தான் மாயன் அரவுஅணையில் கண்வளர்ந்தான்
சிக்கலிலே வாழும் சிவன்.

(இதுவும் அது)

96 வெண்ணெய் திருடிஉண்ட வேணிஅர னார் இருக்கக்
கண்ணன்மேல் வைத்த களவுஏது? - பெண்ணைத்

தலையில் சுமந்தான்மால் சர்ப்பத்தில் ஏறி
அவையில் துயின்றான் அரன்.

(ஈ நிரல்நிறைப் பொருள்கோள்)

97 பொன்னனைவாள் அரக்கனைநூற் றுவரைக் காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்னன் ஈன்ற
நல்மகற்குஆய்ச் சுரர்க்குஆய்ஐ வருக்குஆய்க் காதல்
நப்பினைக்குஆய்ச் சானகிக்குஆய் நடவைக்குஆக
மன்உகிரால் வடிக்கணையால் வளையால் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்க ளாலும்
முன்உடல்கீ றிச்சிச்சிரம்கொண்டு அமரில் வீழ்த்தி
முதலொடும்கொண்டு இறுத்துஅடைத்தான் மோகூ ரானே.

(இதுவும் அது)

98 கூற்றுவனை வில்மதனை அரக்கர் கோவைக்
கூன்நிலவைக் குஞ்சரத்தை இஞ்சி மூன்றை
ஏற்றுஉலகுஇன் புறஉருவம் மாளத் தோள்கள்
இறஎறிப்ப இமையப்பெண் வெருவ வேவக்
கால்தொழிலால் நயனத்தால் விரலால் கற்றைக்
கதிர்முடியால் கரதலத்தால் கணையால் பின்னும்
ஊற்றுஅழிய உ¨த்துஎரித்து நெரித்துச் சூடி
உரித்துஎரித்தான் அவன்என்னை உடைய கோவே.

(உ/ நடு எழுத்து அலங்காரம்)

99 திருமால்வா கனம்நாவாய் இராசி ஒன்று
சினைதெவிட்டார் மாதுலன்கோ கிலம்இவ் எழின்
உருஆம்ஏழ் எழுத்தின்நடு எனக்குச் செய்தான்
உகந்துபதி னான்கிணையும் தானே கொண்டான்,
ஒருபாகத்து இருத்தினான் கையில் ஏற்றான்
ஒருமதலை தனக்கு அளித்தான் உண்டான் பூண்டான்
பரிவாய்ஒண் கரத்து அமைத்தான் உகந்தான் இந்தப்
பைம்பொழில்தில் லையுள்ஆடும் பரமன் தானே. .

முடங்கல் பாட்டு

(ஞானவரோதயர் என்னும் பெரியவர் மதுரைக்குச் சென்றிருப்பதை அறிந்து அவருக்கு எழுதி அனுப்பிய கடிதக் கவிதை)

100 முதுரத் தமிழ்தெரி நின்பாடல் தன்னை முறையறிந்தே
எதிர்ஒக்கக் கேட்பதற்கு ஏழ்ஏழு பேர்இல்லை;இன்தமிழின்
பதரைத் தெரிதரக் கோஇல்லை, ஏறப் பலகை இல்லை
மதுரைக்கு நீசென்றது எவ்வாறு? ஞான வரோதயனே.

பதிகளில் பாடியவை

(கும்பகோணத்தில் பாடியது)

101 அம்புஆகி னான்பாதம் அன்றுபிடித் தாய்அவற்குஉன்
செம்பாதம் காட்டாத் திறம்என்னோ? உம்பர்தொழும்
நம்பகோ ணத்தானே! நாகச் சிலைவளைத்த
கும்பகோ ணத்தானே! கூறு.

(திருவிருஞ்சையில் பாடியது)

102 வேண்டிய சைவனார் விட்டதூ துக்கோ?முன்
பாண்டியனார் கையில்அடி பட்டதற்கோ? - ஆண்டவரே!
வானோர் புகழ்விரிஞ்சை மார்க்க சகாயரே!
ஏனோ தலை இறைஞ்சி னீர்?

(திருவீரட்டானத்தில் பாடியது)

103 இவரோவீ ரட்டர் எனும் நாமம் உள்ளோர்?
இவரோ வழுவூரில் ஈசர்? - இவரோ
கடத்தடக்க தக்கரிப்பி டித்துஇழுத்து அழுத்திமெத்த
அடித்துஅறுத்து உரித்துஉடுத்த வர்?

(திருவானைக்காவில் பாடியது)

104 கல்லால் அடித்ததற்கோ, காலால் உதைத்ததற்கோ,
வில்லால் அடித்ததற்கோ, வெட்கினீர்? - சொல்லீரால்
மஞ்சுதனைச் சூழும் மதில்ஆனைக் காவாரே!
நஞ்சுதனைத் தின்றது என்முன் நாள்?

(திருமழபாடியில் பாடியது)

105 வலியமழ பாடி வயித்தநா தற்குத்
தலைவலியாம்; நீர்ஏற்றம் தானாம்; - குலைவலியாம்;
கையோடு சூவையாம்; கால்வாத மாம்; கண்மேல்
ஐயோ! ஏழுஞாயி றாம்.

(அழகர்மலையில் பாடியது)

106 மீனமுகம் ஆமைமுகம் மேதினிஎ லாம்இடந்த
ஏனமுகம் சிங்கமுகம் என்னாமல் - ஞானப்
பழகர்என்றும் சோலைமலைப் பண்பர்என்றும், உம்மை
அழகர்என்றும் பேரிட்டார் யார்?

(திருமங்கையில பாடியது)

107 ஓர்ஒரு மாஒன்றும் ஒன்பதுமா வின்கலையை
ஈர்ஒருமா மும்மாவுக்கு ஈந்ததே! - பார்அறியப்
பொன்மானின் பின்போன பூமங்கை ஆள்வாரைக்
கன்மாவின் வீதிவரக் கண்டு.

(திருவாரூரில் பாடியது)

108 சேலை யுடைஅழகா! தேவரகண் டா!கழுநீர்
மாலை அழகா! மணிமார்பா! - வேலை
அடங்கார் புரம்எரித்த ஆரூரா! வீதி
விடங்கா! பிரியா விடை!

அகத் துறை அமையப் பாடியது
(அ/. பாலனைப் பழித்தல்)

109 கஞ்ச முகையும் களிற்றுஆனை யின்கொம்பும்
அஞ்சுமுலை நாலுமுலை ஆனதுவும் - மிஞ்சுபுகழ்
பெற்றான்தன் மாலை பிறர்க்குஅளித்த தும்சூதலை
கற்றான் பிறந்தபின்பு காண்

(ஆ/ தூது)

110 தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூதாதே - தாதொத்த
துத்திதத் தாதே துதித்துத்தேத் தொத்தீது
தித்தித்த தோதித் திதி.

(இ/ வரும் புனம் கண்டு தலைவன் இரங்கல்)

111 கம்பத்தா னைக்கடையில் கட்டினான் கால்சாய
அம்பைத்தா வித்தான்கால் ஆனதே! - வம்புசெறி
பூவைகாள்! கிள்ளைகாள்! பூங்குயில்காள்! அன்றில்காள்!
பாவையாள் ஆண்ட பதி.

(ஈ/ வெறி விலக்கம்)

112 முந்நான்கில் ஒன்று உடையான் முந்நான்கில் ஒன்றுஎடுத்து
முந்நான்கில் ஒன்றின்மேல் மோதினான் - முந்நான்கில்
ஒன்றுஅரிந்தால் ஆகுமோ, ஒஓ மடமயிலே
அன்று அணைந்தான் வாராவிட் டால்?

(இதுவும் அது)

113 போலநிறம் ஆவார்க்குப் பூண்ஆரம் ஆவாரை
ஏலவதை செய்தால் இயல்புஆமோ? - சாலப்
பழிக்கு அஞ்சும் தென்மதுரைப் பாவை!இருநான்கு
விழக்கஞ்சன் சோமன்அலை வேந்து.

சின்னங்கள்
(சிதம்பரத்தில் உள்ளவை)

114 ஞானசபைக னகசபைசிற் றம்பலம்பே
ரானந்தக் கூடம் திருமூலட் - டானம்பே
ரம்பலம்பஞ் சாவரணம், நாற்கோபு ரம்பொன்செய்
கம்பமண்ட பம்சிவகங் கை.

(திருவாரூரில் உள்ளவை)

115 சங்குதீர்த் தம்திருச் சாளரவா யில்வீர
சிங்காச னம்,திருவந் திக்காப்புப்,- பங்குனிமா
தத்திருநாள், தீர்த்தம் திருவின்நா தன்கோயில்
உத்தரபா கம்திருவா ரூர்.

(கும்பகோணத்தில் உள்ளவை)

116 திருக்குடந் தைஆதி கும்பேசர் செந்தா
மரைக்குளம் கங்கை மகம், கா- விரிக்கரையின்
ஓரம்கீழ்க் கோட்டம்கா ரோணம்மங்கை நாயகியார்
சாரங்க பாணி தலம்.

(சிவத்தலங்கள் / பாண்டிய நாட்டில் உள்ளவை)

117 கூடல், புனவாயில், குற்றாலம், ஆப்பனூர்
ஏடகம்நெல் வேலி, இராமேசம், - ஆடானை
தென்பரங்குன்றமி, சுழியல், தென்திருப்புத் தூர், காசி
வன்கொடுங்குன் றம்,பூ வணம்.

.(உடமைகள் / தில்லை நடராசப் பெருமானுடைய உடைமைகள்)

118 ஏறு கட்டிய கொட்டில் அரங்கமே!
ஈர்இ ரண்டு முகன்வாய் இலாயமே!
மாறு கண்ணப்பன் வாய்மடைப் பள்ளியே!
வாய்த்த ஓடை திருமால் வதனமே!
வீறு சேர்சிறுத் தொண்டன்இல் லாள்உந்தி
வேட்ட நல்கறி காய்க்கின்ற தோட்டமே!
நாறு பூம்பொழில் சூழ்தில்லை அம்பலம்
நாரி பாகற்கு நாடக சாலையே!

(பதினாறு பெருதல்)

119 துதி, வானி, வீரம் விசயம்,சந் தானம், துணிவு, தனம்
அதிதா னியம்,சவு பாக்கியம், போகம், அறிவு, அழகு,
புதிதாம் பெருமை, அறம்குலம், நோய்இன்மை, பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே.

தரிசித்தபோது பாடியவை
(காஞ்சி காமாட்சியம்மனைக் கண்டு வணங்கியபோது பாடியது)

120 மாக்கைக்கு இரங்கும் குருகும் வளர்சக்ர வாகப்புள்ளும்
தாக்கச் சரபம் குழைந்தது எவ்வாறு? சகதலத்தை
ஆக்கிப் பெருக்கித் திருஅறச் சாலையில் அன்னம்இட்டுக்
காக்கைக்கு ஒருகொக்கின் கீழே இருக்கும் கரும்குயிலே!

(திருவலஞ்சுழியில் உள்ள பிள்ளையாரைத் தரிசித்தபோது பாடியது)

122 பறவாத தும்பி கருகாத வெம்கரி பண்புரண்டே
இறுகாத தந்தி உருகாத மாதங்கம் இந்துநுதல்
நிறவாத சிந்துரம் பூசாக் களபம் நெடும்சுனையில்
பிறவாத ஆம்பல் வலஞ்சுழிக் கேவரப் பெற்றனனே!

(திருத்துருத்திப் பெருமானைத் தரிசித்தபோது பாடியது)

122 காலையிலும் வேலை கடையக் கயிறுஆகும்
மாலையிலும் பூமுடித்து வாழுமே - சோலைசெறி
செய்யில்ஆ ரம்பயிலும் செந்துருத்தி மாநகர்வாழ்
பொய்இலா மெய்யர்இடும் பூண்.

(மதுரை இறைவனைப் பாடியது)

123 காண்டரிய மேனியும் கந்தரமும் சுந்தரனாய்
ஆண்டதுவும் மேனிக்கு அமைந்ததுவும் - நீண்டமுகில்
மைக்கலிங்கம் ஆகமணி மாடம்அணி மாமதுரைச்
சொக்கலிங்கம் என்னும் சுகம்.

(காஞ்சி ஏகாம்பரநாதரைப் பாடியது)

124 ஆறாது ஒருக்காலும் ஐயோ!ஏ கம்பருக்கு
மாறா வடுவாய் மறையாதே - பேறுஆகச்
செங்கையினா லேஅழுத்திச் செய்யகச்சிக்
காமாட்சி கொங்கையினால் இட்ட குறி.

(சிவபெருமானைப் பாடியது)

125 கப்பணம்தந் தான்குடந்தைக் கார்வேளான்காசிதனில்
உப்பணம்தந் தான்கிரந்தம் ஓதுவான் - முப்பணமும்
வப்பணமாய் மாற்றிமணிக்குழையில் தூக்கினேன்
அப்பணம்போல் ஆவார் அவர்

(ஓர் ஊரில் சிவன் காளை ஊர்தியில் வருவதைக் கண்டு பாடியது)

16 கரிஒன்று பொன்மிகும் பைஏறக் கற்றவர்சூழ்ந்துதொழ
எரிஒன்று செல்வன் துலாத்தினில் ஏற இருண்ட மஞ்சு
சொரிகின்ற நாகம்மின் சோற்றினால் ஏறித் தொடர்ந்துவர
நரிஒன்று சொந்தக் கனல்ஏறி வந்தது நம்களத்தே!

(இடப வாகனக் காட்சியைக் கண்டு பாடியது)

127 ஆடுஎடுத்த தில்லை அனவரதத் தாண்டவனனை
மாடுஎடுத்துப் போவதுஎன்ன மாயமோ? நீடும்உயர்
வானத்தார் போற்றுகின்ற வண்மைச் சிதம்பரத்துத்
தானத்தார் பார்த்திருக்கத் தான்.

(அண்ணாமலையார் ஏறி ஊரும் எருது குறித்துப் பாடியது)

128 நடக்கஅறி யாது;கால் நாலும் முடக்கிக்
கிடக்கஅறி யும்;புல்நீர் கேளாது! - இடக்கை

அரைப்பணியார் சோணகிரி அத்தனார் ஓட்டில்
இரப்புணியார் ஏறும் எருது.

(திருவாரூர்த் தியாகேசரைத் தரிசிக்கும்போது பாடியது)

129 தென்ஒக்கும் சோலைக் கமலைப் பிரான்செஞ் சடாஅடவிதான்
என்ஒக்கும் என்னில் எரிஒக்கும் அந்த எரியில்இட்ட
பொன்ஒக்கும் கொன்றை கரிஒக்கும் வண்டுநல் பொன்பணிசெய்
மின்ஒக்கும் கங்கை கிழக்கொல்லன் ஒக்கும்அவ் வெண்பிறையே.

இரட்டுற மொழிதல் - சிலேடை
(ஆமணக்கும் யானைக்கும்)

130 முத்துஇருக்கும் கொம்புஅசைக்கும் மூரித்தண்டு ஏந்திவரும்
கொத்துஇருக்கும் நேரே குலைசாய்க்கும் - எத்திசைக்கும்
தேமணக்கும் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை ஆம்.

(வைக்கோலுக்கும் யானைக்கும்)

131 வாரிக் களத்துஅடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவுஆகும் - சீர்உற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை ஆம்.

(பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும்)

132 நஞ்சுஇருக்கும் தோல்உரிக்கும் நாதர்முடி மேல்இருக்கும்
வெம்சினத்தில பல்பட்டால் மீளாது - விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புஆகும் வாழைப் பழம்.

(பாம்புக்கும் எள்ளுக்கும்)

133 ஆடிக் குடத்துஅடையும் ஆடும்போ தேஇரையும்
முடித் திறக்கின் முகம்காட்டும் - ஓடிமண்டை
பற்றில் பரபரஎனும் பாரில்பிண் ணாக்கும்உண்டாம்
உற்றிடும்பாம்பு என்எனவே ஓது.

(பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும்)

134 பெரியவிட மேசேரும் பித்தர்முடி ஏறும்
அரிஉண்ணும் உப்பும்மேல் ஆடும் - எரிகுணம்ஆம்
தேம்பொழியும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பும் எலுமிச்சம் பழம்.

(முகுந்தனுக்கும் முறத்துக்கும்)

135 வல்அரிஆய் உற்றிடவால் மாதர்கையில் பற்றிடவால்
சொல்அரிய மாப்புடைக்கத் தோன்றுதலால் - வல்லோர்
அகம்தனிலே வாழ்தலால் அன்றுஉலகுஅளந்த

முகுந்தனுமே ஆகும் முறம்.

(மலைக்கும் மதிக்கும்)

136 நிலவாய் விளங்குதலால் நீள்வான் படிந்து
சிலைபோது உலாவுதலால் சென்று - தலைமேல்
உதித்து வரலால் உயர்மா மலையை
மதிக்கு நிகர்ஆ வழுத்து.

(மதிக்குநிக ராக வழுத்து என்னும் பாடம் நாய்க்கும் தேங்காய்க்கும்)

137 ஓடும் இருக்கும்அதன் உள்வாய் வெளுத்துஇருக்கும்
நாடும் குலைதனக்கு நாணாது - சேடியே
தீங்கானது இல்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயும்எனச் செப்பு

(மீனுக்கும் பேனுக்கும்)

138 மன்னீரி லேபிறக்கும் மற்றவையி லேமேயும்
பின்னீச்சில் குத்தும் பெருமையால் - சொன்னேன் கேள்!
தேன்உந்து சோலைத் திருமலைரா யன்வரையில்
மீனும்பே னும்சரிஆ மே.

(பனைமரத்துக்கும் வேசைக்கும்)

139 கட்டித் தழுவுதலால் கால்சேர ஏறுதலால்
எட்டிப் பன்னாடை இழுத்தலால் - முட்டப்போய்
ஆசைவாய்க் கள்ளை அருந்துதலால் அப்பனையும்
வேசைஎனல் ஆமே விரைந்து.

(தென்னைமரத்துக்கும் வேசைக்கும்)

140 பாரத் தலைவிரிக்கும் பன்னாடை மேல்சுற்றும்
சோர இளநீர் சுமந்திருக்கும் - நேரேமேல்
ஏறி இறங்கவே இன்பமாம் தென்னைமரம்
கூறும் கணிகைஎன்றே கொள்.

(வெற்றிலைக்கும் வேசைக்கும்)

141 கொள்ளுகையால் நீரில் குளிக்கையால் மேல்ஏறிக்
கிள்ளுகையால் கட்டிக் கிடக்கையால் - தெள்ளுபுகழ்ச்
செற்றவரை வென்ற திருமலைரா யன்வரையில்
வெற்றிலையும் வேசை ஆமே.

(கண்ணாடிக்கும் அரசனுக்கும்)

142 யாவருக்கும் ரஞ்சனைசெய்து யாவருக்கும் அவ்வவராய்ப்
பாவனையாய்த் தீதுஅகலப் பார்த்தலால் - மேவும்
எதிரியைத்தன் னுள்ஆக்கி ஏற்ற ரசத்தால்
சதிர்உறவால் ஆடிஅரசு ஆம்.

(கூத்தியருக்கும் குரங்குக்கும்)

143 ஓட்டம் கடியதால் உள்ளவரை மேவுதலால்
சேட்டை எவரிடத்தும் செய்தலால் - நாட்டமுடன்
காத்திரத்தில் குட்டியுறக் கட்டுதலால் தெட்டுதலால்
கூத்தியர்க்கு நேர்ஆம் குரங்கு.

(ஆட்டுக்குதிரைக்கும் காவிரி ஆற்றுக்கும்)

144 ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னவரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் - நாடுஅறியத்
தேடு புகழான் திருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரிஆ மே.

(கீரைப்பாத்திக்கும் குதிரைக்கும்)

145 சுட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால் - முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரிஆகு மே.

(ஆட்டுக்கும் கதவுக்கும்)

146 செய்யுள் கிடைமறிக்கும் சேர்பலகை இட்டுமுட்டும்
ஐயம்அற மேற்றாள் அடர்க்குமே - துய்யநிலை
தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்
ஆடும் கதவும்நிகர் ஆம்.

(ஆட்டுக்கும் குதிரைக்கும்)

147 கொம்புஇலையே தீனிதின்னும் கொண்டதன்மேல் வெட்டுதலால்
அம்புவியில் நல்நடையது ஆதலால் - உம்பர்களும்
தேடுநல் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆடும் குதிரையும்நேர் ஆம்.

(துப்பாக்கிக்கும் ஓலைச்சுருளுக்கும்)

148 ஆணி வரைஉறலால் ஆனகுறிப் பேதரலால்
தோணக் கருமருந்தைத் தோய்த்திடலால் - நீள்நிலத்தில்
செப்பார்க்கு உதவாத் திருமலைரா யன்வரையில்
துப்பாக்கி ஓலைச் சுருள்.

(பூசணிக்காய்க்கும் பரமசிவனுக்கும்)

149 அடிநந்தி சேர்தலால் ஆகம் வெளுத்துக்
கொடியும்ஒரு பக்கத்தில் கொண்டு - வடிவுஉடைய
மாகணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனால்
பூசணிக்காய் ஈசன்எனப் போற்று.

(நிதம்பத்துக்கும் ஒடத்துக்கும்)

150 பலகைஇடும் உள்ளே பருமாணி தைக்கும்
சலம்இறைக்கும் ஆள்ஏறித் தள்ளும் - உலகுஅறிய

ஓடமும் ஒன்றே உலகநாதன் பெண்டீர்
மாடமும் ஒன்றே மதி.

(கரண்டகத்துக்கும் பெண்குறிக்கும்)

151 இட்டுஇட்டு வாங்குதலால் இன்பவெள்ளை தோன்றுதலால்
மட்டுஇட்டு மூடி மறைத்தலால் - முட்டத்
தெருண்டோர்கள் போற்றும் திருமலைரா யன்சீர்க்
கரண்டமும் பெண்குறிஆம் காண்.

(வானவில்லுக்கும் திருமாலுக்கும் வெற்றிவைக்கும்)

152 நீரில் உளவால் நிறம்பச்சை யால்திருவால்
பாரில் பகைதீர்க்கும் பான்மையால் - சாருமனுப்
பல்வினையை மாற்றுதலால் பாரீர் பெருவான
வில்விண்டு நேர்வெற் றிலை.

(பிள்ளையாருக்கும் முருகருக்கும் சிவனுக்கும்)

153 சென்னிமுக மாறுளதால் சேர்கரம்முன் நாலுகையால்
இந்நிலத்தில் கோடுஒன்று இருக்கையால் - மன்னுகுளக்
கண்உறுத வானும் கணபதியும் செவ்வேளும்
எண் அரனும் நேர்ஆவ ரே.

(கிராமலங்காரமாக முக்கால் முதல் கீழரை வரையும் உள்ள
எண்கள் வரும்படி கச்சித் திருப்பதியில் பாடிய சிலேடைவெண்பா)

154 முக்காலுக்கு ஏகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா வரைக்கால் கண்டு அஞ்சாமுன் - விக்கி
இருமாமுன் மாகாணிக்கு ஏகாமுன் கச்சி
ஒருமாலின் கீழரைஇன்று ஓது.

(காஞ்சி ஏகாம்பரநாதரைக் கனவில் கண்டு அசதி ஆடிய ஒரு
பெண்ணின் கூற்றாகப் பாடிய சிலேடை வெண்பா)

155 நேற்றுஇரா வந்துஒருவன் நித்திரையில் கைப்பிடித்தால்
வேற்றுஊரான் என்று விடாய்என்றேன் - ஆற்றியே
கஞ்சிகுடி என்றான் களித்தின்று போஎன்றேன்
வஞ்சியரே! சென்றான் மறைந்து.

(மதுரை மீனாட்சியம்மனைக் கண்டு வணங்கிப்
பாடிய சிலேடைப் பாடல்)

156 விள்ளப் புதுமைஒன்று உண்டுஆல வாயினில் மேவுதென்னன்
பிள்ளைக்கு ஒருகுலை மூன்றே குரும்பை பிடித்துஅதிலே
கொள்ளிக் கணன்திட்டி யால்ஓர் குரும்பை குறைந்துஅமிர்தம்
உள்ளில் பொதிந்த இரண்டுஇள நீர்கச்சு உறைந்ததுவே.

157 பாங்கு பெறும்திரு ஐந்நூற்று இரட்டிப் பணவிடையில்
தூங்கும் அதில் ஒரு மாஏற்றம் உண்டு சுரர்முனிவர்

ஆங்குஅவர் செப்பிற்கு அடங்காது உலகம் அனைத்துபெறும்
ஓங்கும் அரங்கத் திருப்பெட் டகத்துள் ஒருமணியே.

(திருமணம் ஒன்றில் மணமக்களுக்குச் சேடை இட்டனர்.
அப்போது அவர்களைச் சிவனும் திருமாலும் காக்க வேண்டும்
என்று வாழ்த்தினார். அச்சமயம் பாடிய சிலேடை வெண்பா)

158 சாரங்க பாணியர் அஞ்சக்கரத்தர் கஞ்சனைமுன்
ஓர்அங்கம் கொய்த உகிர்வாளர் - பார்எங்கும்
ஏத்திடுமை ஆகர் இனிதால் இவர்உம்மைக்
காத்திடுவர் எப்போதும் காண்.

(சிதம்பரத்தில் பாடிச சிவபரமாக அரங்கேற்றிய
சிற்றிலக்கியத்தைத் திருவரங்கத்தில் திருமால்பரமாக
அரங்கேற்றியதோடு, சந்திரோபாலம்பனம் என்னும் அகத்துறை
அமையவும் பாடிய சிலேடைப் பாடல்)

159 இரும்தாரை கேள்வனை ஓங்கும் அராவை எழுபுனலைத்
திருந்தாரை வன்னியை முன்முடித்தோன் செய்யவே ளைப்பண்டு
தரும்தாதை நாயகன் சுந்தரன் தூதன் சமரில்அன்று
பொருந்தார் புரத்துஇட்ட தீப்போல் மதியம் புறப்பட்டதே.

பல்வகைப் / பல்சுவைப் பாடல்கள்

(கின்னரி வாசிக்கும் கிளி எனப் பாடியது)

160 ஆடல்புரிந் தான்என்றும் அந்நாளி லேமூவர்
பாடல்உகந் தான்என்றும் பான்மையினால் கூடலிலே
நல்நரிவா சிக்கு நடைபயிற்றி னான்என்றும்
கின்னரிவா சிக்கும் கிளி.

(பொன் ஆ வரை இவை காய் பூ என அமையப் பாடியது)

161 உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்
எடுத்ததுவும் பள்ளிக்கு இயையப் - படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன்,ஆ வரை,இலை, காய், பூ.

(இதுவும் அது)

162 தோய்ந்தான் மேய்த் தான்குடையாத் தூக்கினான்
மேன்மேலாச் சாய்ந்தான் எறிந்தான்பின் சாப்பிட்டான் - ஆய்ந்துசொலும்
மன்னா! வரத்தில்வரு மால்சாமி நாதாகேள்!
பொன்,ஆ. வரை,இலை,காய், பூ.

(புங்கம் கொம்பு அங்கு இங்கு என்று பாடியது)

163 எங்கள் மடத்துக்கு எரிகரும்பு வெட்டுதற்குப்
புங்கங்கொம் பங்கிங்கொன் பதுபுளி - யங்கொம்பங்
கிங்கொன் பதுவெட்டி நறுக்கிய வென்வேலங்

கொம்பங் கிங்கொன் பது.

(ராமராமா, கோவிந்தா, வேங்கடவா, நாராயணா என்று பாடியது)

164 இந்தோ திலகம்நுதல்? ராமரா மா!வனசக்
கொந்தோ களபம்முலை? கோவிந்தா! - சந்தம்உறும்
வேலோ இணைவிழிகள்? வேங்கடவா! - நல்லவயிறு
ஆலோ?காண் நாரா யணா!

(குடத்திலே கங்கை அடங்கும் எனப் பாடியது)

165 விண்ணுக்கு அடங்காமல் வெற்புக்கு அடங்காமல்
மண்ணுக்கு அடங்காமல் வந்தாலும் - பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கைஅடங் கும்.

(பச்சைவடம் பாகுசேலை சோமன் என்று பாடியது)

166 மாயன் துயின்றதுவும் மாமலராள் சொல்லதுவும்
ஏய குருந்தில்கொண்டு ஏறியதும் - தூயை
இடப்பாகன் சென்னியின்மேல் ஏறியதும் பச்சை
வடம்பாகு சேலைசோ மன்.

(செங்கழுநீர்க் கிழங்கு என்று பாடியது)

167 வாதுஅமணர் ஏறியதும் மாயன் துயின்றதுவும்
ஆதிதடுத்து ஆட்கொண்ட அவ்உருவுழ் - சீதரனார்
தாள்கொண்டு அளந்ததுவும் தண்கச்சிக் காவலா!
கேள்!செங் கழு,நீர்க், கிழங்கு.

(நாநீ நூ தே என்று பாடியது)

168 அரையில் முடியில் அணிமார்பில் நெஞ்சில்
தெரிவை இடத்தமர்ந்தான் சேவை - புறைஅறவே
மான்ஆர் விழியீர்! ம,ல,ர,ணஒற்று ஈறுஆகும்
ஆனாலா நா,நீ,நூ நே.

(ஈ ஏற மலை குலுங்கப் பாடியது)

169 வாரணங்கள் எட்டும் மகமேரு வும்கடலும்
தாரணியும் எல்லாம் சலித்தனவால் - நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தி னால்அடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது.

(தை மாசி பங்குனி மாதம் என்று பாடியது)

170 பாணர்க்குச் சொல்லுவதும் பைம்புனலை மூடுவதும்
தாணு உரித்ததுவும் சக்கரத்தோன் - ஊண்அதுவும்
எம்மானை ஏத்துவும் ஈசன்இடத் தும்சிரத்தும்
தைம்மாசி பங்குனிமா தம்.

(சோகாமா ஏவாதூ என்று பாடியது).

171 சோ,கா,மா, ஏ,வா,தா சொல்லிமன் கூட்டிஉமை
பாகுஆர்ந்த தில்லைப் பரமேசர் - வாகாய்த்
தரித்தார் எரித்தார் தறித்தார் உதைத்தார்
உரித்தார் கணைபடைத்தார் ஊர்க்கு.

(சீத்துப்பூத்து என்று அமையப் பாடியது)

172 அப்புஊரும் செஞ்சடைமேல் அம்புலியைப் பார்த்துப்பார்த்து
எப்போதும் சீத்துப்பூத்து என்னவே - முப்போதும்
வால்அங்குஆட் டாநிற்கும் வாய்அங்கா வாநிற்கும்
ஆலங்காட் டான்பூண் அரா.

(மாம்பிஞ்சுசுவை நோக்கிப் பாடியது)

173 திங்கள் நுதலார் திருமணம்போ லேகீறிப்
பொங்குகடல் உப்பைப் புகட்டியே - எங்களிட
ஆச்சாளுக்கு ஊறுகாய் ஆகாமல் ஆருக்காக
காய்ச்சாய் வடுவாமாங் காய்?

(பெண்களால் மாண்டவர்களைப் பற்றிப் பாடியது)

174 வாலி மடிந்ததுவும் வல்அரக்கர் பட்டதுவும்
கோலமுடி மன்னர் குறைந்ததுவும் - சால
மதியுடைய நூற்றுஒருவர் மாண்டதுவும், ஐயோ
சதஇகரத் தால்வந்த தாழ்வு.

(நல்லோருக்கு உதவி செய் எனப் பாடியது)

175 பண்புளருக்கு ஓர்பறவை பாவத்திற்கு ஓர்இலக்கம்
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி - திண்புலியை
ஆள்வார் மதுரை அழகியசொக் கர்க்குஅரவம்
நீள்வா கனம்நல் நிலம்.

(தென்றல் காற்று வீசாத போது பாடியது)

176 அம்புஏந்து கையான் அவன்பதியில் ஐம்மாவைக்
கொம்புஏந்தி தந்தைபணி கொண்டதோ? - அன்பாய்
அரிந்த மகவை அமுதுக்கு அழைஎன்று
இருந்தவன்தன் செங்காட்டி லே.

(இடைச்சி நீர் கலந்த மோரைக் கொடுத்தபோது பாடியது)

177 கார்என்று பேர்படைத்தாய் ககனத்து உறும்போது
நீர்என்று பேர்படைத்தாய் நெடும்தரையில் வந்ததன்பின்
வார்ஒன்றும் மென்முலையார் ஆய்ச்சியர்கை வந்ததன்பின்
மோர்என்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே!

இறைவனது ஏழ்மையை எடுத்துப் பாடியது)

178 மாடுகிடப் பாடி மனையாள் உடல்பாதி
தேடுதற்குப் பிள்ளை தினைக்கடம்பன் - நாடில்

அரவுஆ பரணம்பூண் அம்பலவா! பிச்சை
இரவாமல் நீர்என்செய் வீர்.

(சிவனுக்கு குரு முருகன் என்று பாடியது)

179 எவர்தமக்கும் ஞானகுரு ஏகாம்ப ரேசர்
அவர்தமக்கு ஞானகுரு ஆரோ? - உவரிஅணை
கட்டினான் பார்த்திருக்கக் காதலன் தன்தலையில்
குட்டினான் தானே குரு.

(குப்பாச்சியாயி என்பவளுடைய இயல்பைக் கூறியது)

180 சோற்றை அரசிலைமேல் தூவி வழுதுணங்காய்க்
கீற்றை அதன்மேல் கிடத்தியே -ஆற்றுமிக
அப்பச்சி! கண்ணே! அரசே! அருந்துஎன்பள்
குப்பச்சி ஆயி குணம்.

(தாசி கமலாட்சியின் கண்களைப் பாடியது)

181 முற்றாத காஞ்சியினும் முல்லையினும் பாலையினும்
கற்றான்பின் சென்ற கருணைமால் - பெற்றான்தன்
ஆலைப் பதித்தார்அளகத்தி யாட்குஅயனார்
வேலைப் பதித்தார் விழி.

(எல்லாவற்றிக்கும் மதுரை சொக்கநாதரே
தலைவர் என்று பாடியது)

182 நூலாம்நா லாயிரநா னூற்றுநாற் பத்துஒன்பான்
பாலாம்நா னூற்றுநாற் பத்துஒன்பான் - மேலாம்நாற்
பத்துஒன்பான் சங்கம்அறு பத்துநால் ஆடலுக்கும்
கர்த்தன் மதுரையில்சொக் கன்.

(வேசை ஒருத்தி கதை சொல்லும்படி கேட்டபோது
பாடியது)

183 சோமன் புறப்படத் தென்றலும் வீசத் துளில்ஒழிய
யாமங்கள் தோறும் குயில்வந்து கூவிடும்அந் நேரத்திலே
நாமும் பிழைத்து மனிதர்முன் பேசிட நாமும்உண்டாய்
காமக் கலகம் தெளிந்தபின் நானும் கதைசொல்வனே!

(பன்றிக்கு மார்பிலே கொம்பு முளைத்தது
என்று பாடியது)

184 தெருமுட்டப் பாளை சிதறிவளர் பூகத்
தருமுட்டச் செவ்வாளை தாவும் - திருமுட்டத்து
ஊரிலே கண்டேன் ஒருபுதுமை! பன்றிக்கு
மாரிலே கொம்புஆன ஆறு.

(கடுங்காற்றும் மழைகாற்றும் எனப் பாடியது)

185 நீரோ பிறவா நெறிகாட்டி யார்எமக்கு
நீரோ சமிசை நிலையிட்டீர் - நீரேஇவ்
விங்களம்ஏன் செய்தீர் விடும்கடும்காற் றும்மழைகாட்
டும்!சுடுநட் புப்பகைகாட் டும்!

(ஒருவர் யசோதை கண்ணனை மத்தினால் அடித்ததைப்
பற்றி இரங்கிப் பாடவேண்டும் என்று கேட்டபோது பாடியது)

186 வண்ணம் கரியன் என்றும் வாய்வேதம் நாறிஎன்றும்
கண்ணன்இவன் என்றும் கருதாமல் - மண்ணை
அடிப்பது மத்தாலே அளந்தானை ஆய்ச்சி
அடிப்பது மத்தாலே அழ.

(மருதீசர் மன்மதனை எரித்ததைக் குறித்துப் பாடியது)

187 கண்ணன் இடும்கறியும் காட்டுசிறுத் தொண்டர்அன்பில்
பண்ணுசிறு வன்கறியும் பற்றாதோ? -தண்ணோடு
மட்டுஇயையும் சோலை மருதுஈச ரேயன்றிக்
குட்டியைஏன் தீய்த்தீர் குறித்து?

(கூத்துப்பிரான் முப்புரத்தையும் காமனையும் எரித்ததைக்
குறித்துப் பாடியது)

188 சித்தசனை முப்புரத்தைச் செந்தழலால் வீழஒரு
பத்தினியைக் கொண்டுஎரியப் பண்ணினான் - நித்தம்
மறைஓத வீற்றிருக்கும் மண்டலமென் தில்லைப்
பிறைசூடும் வேணிப் பிரான்.

(திருக்கண்ணபுரம் சவுரி நாராயணப் பெருமாள்
பிறந்த நாள் இதுவாம் எனப் பாடியது)

189 உத்திரத்துக்கு ஓர்நாள் உரோகணிக்குப் பத்தாம்நாள்
சித்திரைக்கு நேரே சிறந்தநாள் - எத்திசையும்
கார்ஆரும் பூஞ்சோலைக் கன்னபுரம் வாழ்சவுரி
நார யணன்பிறந்த நாள்.

(கண்ணன் சங்கை முழங்காவிட்டால் பாண்டவர்
தோற்பர் எனப் பாடியது)

190 சதுர்அரங்கர் சங்கத்து அழகர்செங் கைச்சங்கை
அதரம்மிசை வைத்திலரே ஆயின் - முதல்ஐ
வரும்குளத்தில் முண்டகம்கை வைப்பர்அன்றே அன்று
பொரும்களத்தில் நூற்றுவர்முன் போய்.

(திருவீழியப்பருக்குத் திருமால் காளை
ஆனார் எனப் பாடியது)

191 காலால் படிஅளக்கும் கண்இடத்து பூசிக்கும்
சேலாம் கமடமாம் சிங்கமாம் - பால்ஆகும்

ஆழிஅப்பி லேதுயிலும் ஐவர்க்குத் தூதாகும்
வீழியப்பர் ஏறும் விடை.

(திருவாரூர்த் தியாகருக்குத் தீருமால் விடையானான்
எனப் பாடியது)

192 பார்அளக்கும் தூதுசெல்லும் பைஅரவின் மேல்நடிக்கும்
சீர்அகலி சாபத்தைத் தீர்க்குமே - ஊர்அருகில்
சண்டச் சகடுஉதைக்கும் தையலாய்! கார்நீல
கண்டத்தார் ஊர்ஆன் கழல்.

(திருமலைராயன் பட்டினத்தில் மண்மாரி
பெய்யப் பாடியது)

193 செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யா! அரனே! அரைநொடியில் - வெய்யதழல்
கண்மாரி யான்மதனைக் கட்டுஅழித்தால் போல்தீயோர்
மண்மாரி யால்அழிய வாட்டு.

(இதுவும் அது)

194 கோளர் இருக்கும்ஊர் கோள்கரவு கற்றஊர்
காளைகளாய் நின்று கதறும்ஊர் - நாளையே
விண்மாரி அற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கஇந்த வான்.

(நரசிங்கத்தைச் சிவன் சிம்புள் ஆகி அடக்காவிட்டால்
திக்கும் உலகும் அழிந்து போய்விடும் எனப் பாடியது)

195 கூதிகுகுளட்டு ஏழும் குலைந்து நடுநடுங்கிப்
பூதிக்குஒப்பு ஆகஅன்றே போய்விடுமே - ஆதி
நரக்காண் தகவரியை நல்சரபம் ஆகிச்
சுருக்கா விடின்நஞ்சு உணி.

(என்னை இடுக்கடிபாயைச் சுருட்டடி என்பதை
நிரையசைக் கட்டளைக் கலித்துறையாகப் பாடியது)

196 தடக்கட லில்பள்ளி கொள்வோம் அதனைநல் சங்கரனார்
அடல்புலிக் குட்டிக்கு அளித்தன ராம்அது கேட்டுநெஞ்சில்
நடுக்கம்வந்து உற்றது கைகால் எழு¡நளி னத்திஎன்னை
இடுக்கடி பாயைச் சுருட்டடி எகடி அம்பலத்தே.

(ஒருவர் போவாள், வருவாள், புருவாள், புறப்படுவாள்,
ஆவாள், இவாள் அவாளாம் என்று பாடுக என்றபோது பாடியது)

197 செற்றவரை வென்ற திருமலைர யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள் - மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாள் இவார் அவா ளாம்!

(குடந்தையில் சோழியப் பார்ப்பனன் ஒருவன் தான்
உண்டுகொண்டிருந்த இலையில் அவிழ்ந்து விழும் தன் குடுமியை
எடுத்து உதறியபோத அதனின்றும் எச்சில் சோறானது
காளமேகப் புலவரது இலையில் வந்து விழக்கண்டு அது
குறித்துச் சினமுற்று பாடியது)

198 சுருக்குஅவிழ்ந்த முன்குடுமிச் சோழியா! சோற்றுப்
பொருக்குஉலர்ந்த வாயா! புலையா! - திருக்குடந்தைக்
கோட்டானே! நாயே! குரங்கே! உனைஒருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்!

(திருவரங்கத் து வைணவப் பார்ப்பனர்கள் விநாயகருக்கு
நாமம் இட்டு இவர் விஷ்ணுவே பரம் என்று நாமம் போட்டுக்கொண்டு
இருக்கிறார் பாரும் என்று இகழ்ந்து சொன்னதற்குப் பாடியது)

199 தந்தை பிறந்துஇறவாத் தன்மையினால், தன்மாமன்
வந்து பிறந்து இறக்கும் வன்மையினால் - முந்துஒருநாள்
வீண்இக்கு வேளை எரித்தான் மகன்,மாமன்
காணிக்கு வந்துஇருந்தான் காண்.

(திருவரங்கத்து வைணவரும் திருவானைக்காச்
சைவரும் சண்டையிட்டுக் கொண்டபோது அவர்களைச்
சமாதானப்படுத்திப் பாடியது)

200 சீரங்கத் தாரும் திருஆனைக் காவாரும்
போர்அங்கம் ஆகப் பொருவதுஏன்? - ஓரங்கள்
வேண்டாம்இது என்ன விவரம் தெரியாதோ
ஆண்டானும் தாதனும்ஆ னால்?

(எட்டிகுளத்துச் குட்டிசெட்டி தன் மகளை மணம்செய்து
கொடுத்தபோது அளித்த சீர்வரிசைகளைப் பற்றிப் பாடியது)

201 எட்டி குளத்தில் இருந்து சரக்குவிற்கும்
குட்டிசெட்டி தன்மகளைக் கொண்டுபோய் -நொட்டுதற்கே
ஆயிரம் யானை எழுநூறு கூன்பகடு
பாயும் பகடுஎண்பத்து ஐந்து.

(ஓர் ஊரார்மேல் சினம்கொண்டு அந்த ஊரில் உள்ள
ஏரி உடைந்து ஓட்டை ஏரி ஆகும்படி பாடியது)

202 கலங்கல் துறைஅதனில் காராளர் போதத்
தெலுங்கப்ப நாரணன்தெண் டிக்கச் - சலம்பெருகி
நட்டாறு கொண்டுகரை நன்றாய் உடைந்துநீர்
கட்டாது ஒழிதல் கடன்.

(ஒருநாள் இரவு மதுரையில் பசியால் வாடிக்
கொசுக்கடியால் தொல்லைபட்டபோது பாடியது)

203 மசகம் இசைகாட்ட மாடுமணி காட்ட
நிசியும் ஒருக்காலை நீட்டப் - பசியால்
வாடினேன் வாடி மனம்தளர்ந்து நான்உன்னைத்
தேடினேன் தென்னவரா யா!

(நெல்லிக்காய் ஊறுகாய்களைக் களவு செய்த
பெண்களைப் பாடியது)

204 பாடுபட்டுத் தேடிப் பலகாரம் உப்புஅமைத்தே
ஓடுவட்ட மாக உடைத்துஅடைத்து - வேடுகட்டும்
நெல்லிக்கா யைத்திருடும் நீலிகாள்! உங்கள்இடை
இல்லிக்குஆர் ஆப்புஏற்று வார்?

(திம்மி என்னும் தெலுங்குத் தேவடியாள் மரியாதை
இன்றிப் பேசியதைக் குறித் துப் பாடியது)

205 ஏமிரா ஓரி என்பாள் எந்துண்டி வஸ்தி என்பாள்
தாம்இராச் சொன்ன எல்லாம் தலைகடை தெரிந்தது இல்லை
போம்இராச் சூழும் சோலை பொருகொண்டைத் திம்மி கையில்
நாம்இராப் பட்ட பாடு நமன்கையில் பாடு தானே!

(செட்டிகள் இவரைக்கண்டு தங்கள் மொழியில்
பேசிக்கொண்டதைக் குறித்துப் பாடியது)

206 கருந்தலை செந்தலை தங்கான்
திரிகால் கடையில்சுற்றி
வருந்திக் குடவற்கும் தாட்டிக்கும்
கொத்துஇட்டு மாய்வதுஅல்லால்
கரந்தைகள் ஆண்டில் ஒருகால்
வருவது கண்டுஇருந்தும்
அரும்புக்கும் கொத்துக்கும் வந்தார்
பிழைப்பது அரிதுஎன்பரே!

(ஒருவர் சிவனைக் குறித்து நீறாவாய், நெருப்பாவாய், கூறாவாய்,
கொழுந்தாவாய், நட்டமாவாய், நஞ்சாவாய் என ஒரு வெண்பாப் பாட
வேண்டும் என்று கேடடுக் கொண்டபோது பாடியது)

207 நீறுஆவாய் நெற்றி நெருப்பு ஆவாய் அங்கம்இரு
கூறுஆவாய் மேனி கொளுத்துவாய் - மாறாத
நட்டம்ஆ வாய்சோறு நஞ்சுஆவாய் நாயேனை
இட்டமாய்க் காப்பாய் இனி.

(முருகன் குறத்தியை மணந்தான் என்று சிவன் முதலானோர்
வருந்தியதற்கு வேடிக்கையாகப் பாடியது)

208 மருகுஇருக்கும் வேளூரின் வலித்தமகன்
குறமகளை மணந்தான் என்று
உருகிஅரன் நஞ்சுஉண்டான்; உமையவளும்

தவம்புரிந்தாள் உயர்மால் மேனி
கருகிமிக மண்தின்றான்; கமலன்முகம்
நால்ஆனான்;கடவு ளோர்கள்
இருவிழியும் இமையாமல் இரவுபகல்
உறங்காமல் இருக்கின் றாரே!

(கயிற்றாற்றில் உள்ள பெருமானைத் தூக்கும்படி காளமேகப்
புலவரை வருத்திச்சுமத்தியபோது பாடியது)

209 பாவைமணம் கமழுகின்ற கயிற்றாற்றுப்
பெருமாளே! பழிகா ரா! கேள்
வேளைஎன்றால் இவ்வேளை பதினாறு
நாழிகைக்கு மேல்ஆ யிற்று! என்
தோளைமுறித் ததும்அன்றி நம்பியா
னையும்கூடச் சுமக்கச் செய் தாய்!
நாளைஇனி யார்சுமப்பார்? எந்நாளும்
உன்கோயில் நாசம் தானே!

(வீரசென்னன் என்னும் வடுகப் பார்ப்பனன் வீட்டில் அளித்த
கூழைக் குடித்துப் பாடியது)

210 ஏழ்ஆனை அடித்தபுலி தனைஅடித்தான்
வீரசென்னன் என்றே காட்டில்
வாழாமல் சிறுபுலிகள் ஈப்புலியோடு
எலிப்புலியாய் வடிவம் கொண்டு
பாழ்ஆகிக் காடுஎல்லாம் பரிதவிக்க
வடுகர்அடுப்பு அடியில் வந்து
கூழ்ஆகி வயிற்றினில்போம் பொழுதுகுணம்
போகாமல் குமுறும் தானே.

(தில்லைக் கோவிந்தராசர் கால்மாட்டிலிருந்து சபாநாதர் நடனம்
செய்கின்றதைப் பாரும் என்று வைணவர் அவமதித்துச் சொன்னபோது
பாடியது)

211 ஆட்டுக்கு இசைந்தவர் அம்பல வாணர் அவர்க்குஎதிரே
நீட்டிற்று மால்வட பாலினில் கால்என நீதினையேல்
சூட்டுஉற்ற முப்புரம் செற்றவர் தம்மைச் சுமந்து அலுத்த
மாட்டுக்குஎன் னோஇடம் கால்நீட்டல் சொல்ல வழக்கு இல்லையே!

(தில்லை கோவிந்தராசர் கோயிலில் இருக்கும் நம்பியார்
விஷ்ணுவே பரம் என்றதற்குப் பாடியது)

212 சத்துஆகி ஐந்தையும் தாங்காத தெய்வம் தனிமறையும்
சுத்தா எனும்தெய்வம் அம்பலத் தேகண்டும் கண்கள்இரு
பத்துஆன வன்மைந்தன் பொய்த்தேவி யைக்கொல்லப் பார்த்துஅழுத
பித்துஆன வன்தனை யோதெய்வம் ஆகப் பிதற்றுவதே!

(திருவரங்கர்முன் முருகர் வர, அவரது மயில் ஊர்தியைக் கண்டு,
அத்திருவரங்கரது படுக்கையான பாம்பு அஞ்சியதாகப் பாடியது)

213 திரண்டுஇமை யோர்தொழும் தென்அரங்
சேகர்முன் செங்கைகள் ஆறு
இரண்டுஉடை யோனும் எதிர்சென்ற தால்எரித்
தார்தமைக்கண்டு
அருண்டுஎழும் ஐவர்க்குத் தேர்ஊர் பவன்கொள்
அணைவெருண்டு
புரண்டு ஒரு புற்றைக் கடந்துஒரு புற்றில்
புகுந்ததுவே!

(அதிமதுரகவிராயர் உன் பெயர் என்ன? பாடத் தெரியுமா?
என்று கேட்டபோது பாடியது)

214 இம்என்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்என்றால் ஆயிரம்பாட்டு ஆகாதோ? - சும்மா
இருந்தால் இருந்தேன்; எழுந்தேனே ஆயின்
பெரும்காள மேகம் பிளாய்!

(திருமலைராயனுடைய அரசரவைப் புலவர்களை நீங்கள் யார்
என்று காளமேகப் புலவர் கேட்டபோது அதற்கு அவர்கள் தங்களைக்
கவிராயர் என்று சொன்னார்கள். அப்போது பாடிய பாடல்(

215 வால்எங்கே? நீண்ட வயிறு எங்கே? முன்இரண்டு
கால்எங்கே? உள்குழிந்த கண்எங்கே? - சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீவிர்
கவிராயர் என்றுஇருந்தக் கால்.

(அதிமதுர கவிராயரின் கட்டியக்காரர் கட்டியம் கூறியதற்குப் பாடியது)

216 அதிமதுரம் என்றே அதிலம் அறியத்
துதிமதுரம் ஆய்எடுத்துச் சொல்லும் புதுமைஎன்ன?
காட்டுச் சரக்குஉலகில் காரம்இல் லாச்சரக்குக்
கூட்டுச் சரக்குஎனவே கூறு.

(அதிமதுரத்தின் கட்டியக்காரர் காளமேகத்திடம் நீர்யார் என்று
கேட்டதற்குப் பாடியது)

217 கழியும் பிழைபொருள் தள்ளிநல்
நூல்அம் கடலின்உண்டு
வழியும் பொதியை வரையினில்
கால்கொண்டு வண்கவிதை
பொழியும் புலவர் மனத்தே இடித்து
முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள
மேகம் புறப்பட்டதே.

(அதிமதுரகவி முதலியோர், காளமேகப் புலவரைப் பார்த்து, நீ யார்? உனக்கு என்ன தெரியும்? என்று கேட்டபோது பாடியது)

218 தூதுஅஞ்சு நாழிகையில் ஆறுநா ழிகைதனில் சொற்சந்த மாலை சொல்லத்
துகள்இலா அந்தாதி எழுநா ழிகைதனில் தொகைபட விரித்துஉ ரைக்கப்
பாதம்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனில் பரணிஒரு நாள்மு ழுதுமே
பாரகா வியம்எலாம் ஓர்இரு தினத்திலே பகரக் கொடிகட்டி னேன்
சீதம்செ யும்திங்கள் மரபினில் நீடுபுகழ் செய்யதிரு மலைரா யன்முன்
சீறுமாறு என்றுமிகு தாறுமா றுகள்சொல் திருட்டுக் கலிப்புல வரைக்
காதுஅங்கு அறுத்துச் சவுக்கிட்டு அடித்துக் கதுப்பில் புடைத்து வெற்றிக்
கல்லணையி னொடுகொடிய கடிவாளம் இட்டுஏறும் கவிகாள மேகம்
நானே.

(இயல்பான பொருளோடு இடக்கர் அடக்கல்பொருளும் அமையப் பாடியது)

219 ஆண்டி குயவா! அடா!உன்பெண் டாட்டிதனைத்
தோண்டிஒன்று கேட்டேன் துரத்தினாள் - வேண்டிஇரு
கைக்கரகம் கேட்டேன்நான் கால்அதனைத் தூக்கியே
சக்கரத்தைக் காட்டினாள் தான்!

(சிவனுக்கு அரைக்கண் என்று பாடியது)

220 முக்கண்ணன் என்றுஅரனை முன்னோர் மொழிந்திடுவார்
அக்குஅண்ணற்கு உள்ளதுஅரைக் கண்ணே - மிக்க
உமையாள்கண் ஒன்றரைமற்று ஊன்வேடன் கண்ஒன்று
அமையும் இதனால்என்று அறி.

காளமேகப் புலவர் பாடல்கள் முற்றிற்று

This webpage was last updated on 14 January 2005
Please send your comments to the webmasters of this website.

***

சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்
இரண்டாம் காண்டம் - சருக்கம் 6
(வம்பறா வரிவண்டுச் சருக்கம்) -
3ம் பகுதி (3155-3634)

periya purANam of cEkkizAr
Canto 2, Carukkam -6 part 3
(vampaRA varivaNTuc carukkam)
In tamil script, TSCII format

***

Etext in Tamil Script - TSCII format (v. 1.7)
Our Sincere thanks go to Dr. Thomas Malten and Colleagues of the Univ. of Koeln, Germany for providing us with the transliterated/romanized version of the etext and giving us permission to release the TSCII version as part of Project Madurai etext collections.
TSCII proof reading by tiruciRRampalam aRakaTTaLai, Kovilpatti, Tamilnadu.
Preparation of HTML and PDF : Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

This pdf file is based on TSCInaimathi font embedded in the file. Hence this file can be viewed and printed on all computer platforms: Windows, Macintosh and Unix without the need to have the font installed in your computer.

© Project Madurai 2005
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்
இரண்டாம் காண்டம் - சருக்கம் 6
வம்பறா வரிவண்டுச் சருக்கம்- 3ம் பகுதி (3155-3634)

6.2 ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் (3155 - 3563)
6.3 திரு மூல நாயனார் புராணம் (3564 - 3591)
6.4 தண்டியடிகள் புராணம் (3592 - 3617)
6.5 மூர்க்க நாயனார் புராணம் (3618 - 3629)
6.6 சோமாசி மாற நாயனார் புராணம் (3630 - 3634)

6.2 ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் (3155 - 3563)

திருச்சிற்றம்பலம்

3155

நீடு வண் புகழ்ச் சோழர் நீர் நாட்டு இடை நிலவும்
மாடு பொன் கொழி காவிரி வடகரைக் கீழ்பால்
ஆடு பூங்கொடி மாடம் நீடிய அணி நகர் தான்
பீடு தங்கிய திரு மங்கலப் பெயர்த்தால் 6.2.1

3156

இஞ்சி சூழ்வன எந்திரப் பந்தி சூழ் ஞாயில்
மஞ்சு சூழ்வன வரை என உயர் மணி மாடம்
நஞ்சு சூழ்வன நயனியர் நளின மெல்லடிச் செம்
பஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு 6.2.2

3157

விழவு அறாதன விளங்கு ஒளி மணி நெடுவீதி
முழவு அறாதன மொய் குழலியர் நட அரங்கம்
மழவு அறாதன மங்கலம் பொலி மணி முன்றில்
உழவு அறாத நல் வளத்தன ஓங்கிருங் குடிகள் 6.2.3

3158

நீரினில் பொலி சடை முடி நெற்றி நாட்டத்துக்
காரினில் திகழ் கண்டர் தம் காதலோர் குழுமி
பாரின் மிக்கதோர் பெருமையால் பரமர்தாள் பரவும்
சீரின் மிக்கது சிவபுரி எனத் தகும் சிறப்பால் 6.2.4

3159

இன்ன வாழ் பதி அதன் இடை ஏயர் கோக் குடிதான்
மன்னிய நீடிய வளவர் சேனாபதிக் குடியாம்
தொன்மை மேவிய தொடர்ச்சியால் நிகழ்வது தூய
பொன்னி நாட்டு வேளாண்மையில் உயர்ந்த பொற்பினதால் 6.2.5

3160

அங்கண் மிக்க அக் குடியினில் அவதரித்து உள்ளார்
கங்கை வாழ் முடியார் தொண்டர் கலிக்காமர் என்பார்
தங்கள் நாயகர் அடி பணிவார் அடிச்சாந்து
பொங்கு காதலின் அவர் பணி போற்றுதல் புரிந்தார் 6.2.6

3161

புதிய நாள் மதிச் சடைமுடியார் திருப் புன் கூர்க்
அதிகம் ஆயின திருப்பணி அநேகமும் செய்து
நிதியம் ஆவன நீறு உகந்தார் கழல் என்று
துதியினால் பரவித் தொழுது இன்புறு கின்றார் 6.2.7

3162

நாவலூர் மன்னர் நாதனைத் தூது விட்டு அதனுக்கு
இயாவர் இச் செயல் புரிந்தனர் என்று அவர் இழிப்பத்
தேவர் தம் பிரான் அவர் திறம் திருத்திய அதற்கு
மேய வந்த அச் செயலினை விளம்புவான் உற்றேன் 6.2.8

3163

திருத் தொண்டத் தொகை அருளித் திருநாவலூர் ஆளி
கருத்து ஒன்று காதலினால் கனக மதில் திருவாரூர்
ஒருத்தர் கழல் முப்பொழுதும் உருகிய அன்பொடு பணிந்து
பெருத்து எழும் மெய் அன்பினால் பிரியாது அங்கு உறையும் நாள் 6.2.9

3164

தாள் ஆண்மை உழவு தொழில் தன்மை வளம் தலை சிறந்த
வேளாளர் குண்டையூரக் கிழார் எனும் மே தக்கோர்
வாளார் வெண் மதி அணிந்தார் மறைவராய் வழக்கினில் வென்று
ஆளாகக் கொண்டவர்தாள் அடைந்து அன்பால் ஒழுகுவார் 6.2.10

3165

செந் நெல்லும் பொன்னன்ன செழும் பருப்பும் தீம்கரும் பின்
இன்னல்ல அமுதும் முதல் எண்ணில் பெரும் வளங்கள்
மன்னிய சீர் வன் தொண்டர்க்கு அமுதாக வழுவாமல்
பன்னெடு நாள் பரவையார் மாளிகைக்குப் படி சமைத்தார் 6.2.11

3166

ஆன செயல் அன்பின் வரும் ஆர்வத்தால் மகிழ்ந்து ஆற்ற
வான முறை வழங்காமல் மா நிலத்து வளம் சுருங்கப்
போனக நெல் படி நிரம்ப எடுப்பதற்குப் போ தாமை
மானம் அழி கொள்கையினால் மனம் மயங்கி வருந்துவார் 6.2.12

3167

வன் தொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல் எடுக்க
இன்று குறை ஆகின்றது என் செய்கேன் என நினைந்து
துன்று பெரும் கவலையினால் துயர் எய்தி உண்ணாதே
அன்று இரவு துயில் கொள்ள அங்கணர் வந்து அருள் புரிவார் 6.2.13

3168

ஆரூரன் தனக்கு உன்பால் நெல் தந்தோம் என்று அருளி
நீரூரும் சடை முடியார் நிதிக் கோமான் தனை ஏவப்
பேரூர் மற்று அதன் எல்லை அடங்கவும் நெல் மலைப் பிறங்கல்
காரூரும் நெடும் விசும்பும் கரக்க நிறைந்து ஓங்கியது ஆல் 6.2.14

3169

அவ்விரவு புலர் காலை உணர்ந்து எழுவார் அது கண்டே
எவ்வுலகின் நெல் மலைதான் இது என்றே அதிசயித்து
செவ்விய பொன் மலை வளத்தார் திரு அருளின் செயல் போற்றிக்
கொவ்வை வாய்ப் பரவையார் கொழுநரையே தொழுது எழுவார் 6.2.15

3170

நாவலூர் மன்னன் ஆர்க்கு நயனார் அளித்த நெல் இங்கு
யாவரால் எடுக்கல் ஆகும் இச்செயல் அவர்க்குச் சொல்லப்
போவன் யான் என்று போந்தார் புகுந்தவாறு அருளிச் செய்து
தேவர் தம் பெருமான் ஏவ நம்பியும் எதிரே சென்றார் 6.2.16

3171

குண்டையூர்க் கிழவர் தாமும் எதிர் கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனார் பாதம் தன்னில் தொழுது வீழ்ந்து எழுந்து நின்று
பண்டெலாம் அடியேன் செய்த பணி எனக்கு இன்று முட்ட
அண்டர் தம் பிரானார் தாமே நெல் மலை அளித்தார் என்று 6.2.17

3172

மனிதரால் எடுக்கும் எல்லைத்து அன்று நெல் மலையின் ஆக்கம்
இனி எனால் செய்யல் ஆகும் பணி அன்று இது என்னக் கேட்டு
பனி மதி முடியார் அன்றே பரிந்து உமக்கு அளித்தார் நெல் என்று
இனியன மொழிந்து தாமும் குண்டையூர் எய்த வந்தார் 6.2.18

3173

விண்ணினை அளக்கும் நெல்லின் வெற்பினை நம்பி நோக்கி
அண்ணலைத் தொழுது போற்றி அதிசயம் மிகவும் எய்தி
எண்ணில் சீர்ப் பரவை இல்லத்து இந் நெல்லை எடுக்க ஆளும்
தண்ணிலவு அணிந்தார் தமே தரில் அன்றி ஒண்ணாது என்று 6.2.19

3174

ஆளிட வேண்டிக் கொள்வார் அருகு திருப்பதியான
கோளிலியில் தம் பெருமான் கோயிலினை வந்து எய்தி
வான் அளவு கண் மடவாள் வருந்தாமே எனும் பதிகம்
மூள வரும் காதல் உடன் முன் தொழுது பாடுதலும் 6.2.20

3175

பகல் பொழுது கழிந்து அதன் பின் பரவை மனை அளவு அன்றி
மிகப் பெருகும் நெல் உலகில் விளங்கிய ஆரூர் நிறையப்
புகப் பெய்து தருவன நம் பூதங்கள் என விசும்பில்
நிகர்ப்பு அரியது ஒருவாக்கு நிகழ்ந்தது நின் மலன் அருளால் 6.2.21

3176

தம் பிரான் அருள் போற்றித் தரையின் மிசை விழுந்து எழுந்தே
உம்பரால் உணர்வு அரிய திருப் பாதம் தொழுது ஏத்திச்
செம் பொன் நேர் சடையாரைப் பிறபதியும் தொழுது போய்
நம்பர் ஆரூர் அணைந்தார் நாவலூர் நாவலன் ஆர் 6.2.22

3177

பூங்கோயில் மகிழ்ந்து அருளும் புராதனரைப் புக்கு இறைஞ்சி
நீங்காத பெரும் மகிழ்ச்சி உடன் ஏத்திப் புறம் போந்து
பாங்கு ஆனார் புடை சூழ்ந்து போற்றி இசைக்க பரவையார்
ஓங்கு திரு மாளிகையினுள் அணைந்தார் ஆரூரர் 6.2.23

3178

கோவை வாய்ப் பரவையார் தாம் மகிழும் படி கூறி
மேவி அவர் தம் மோடு மிக இன்புற்று இருந்து அதன்பின்
சேவின் மேல் உமையோடும் வருவார் தம் திரு அருளின்
ஏவலினால் அவ்விரவு பூதங்கள் மிக்கு எழுந்து 6.2.24

3179

குண்டையூர் நெல் மலையைக் குறள் பூதப் படை கவர்ந்து
வண்டுலாம் குழல் பரவை மாளிகையை நிறைவித்தே
அண்டர்பிரான் திரு ஆரூர் அடங்கவும் நெல் மலை ஆக்கி
கண்டவர் அற்புதம் எய்தும் காட்சி பெற அமைத்தன ஆல் 6.2.25

3180

அவ்விரவு புலர் காலை ஆரூரில் வாழ்வார் கண்டு
எவ்வுலகில் விளைந்தன நெல் மலை இவை என்று அதிசயித்து
நவ்வி மதர்த் திருநோக்கின் நங்கை புகழ்ப் பரவையார்க்கு
இவ் உலகு வாழ வரும் நம்பி அளித்தன என்பார் 6.2.26

3181

நீக்க அரிய நெல் குன்று தனை நோக்கி நெறி பலவும்
போக்க அரிது ஆயிடக் கண்டு மீண்டும் தம் இல் புகுவார்
பாக்கியத்தின் திரு வடிவாம் பரவையார்க்கு இந் நெல்லுப்
போக்கும் இடம் அரிதாகும் எனப் பலவும் புகல்கின்றார் 6.2.27

3182

வன் தொண்டர் தமக்கு அளித்த நெல் கண்டு மகிழ் சிறப்பார்
இன்று உங்கள் மனை எல்லைக்கு உள்படும் நெல் குன்று எல்லாம்
பொன் தங்கு மாளிகையில் புகப் பெய்து கொள்க என
வென்றி முரசு அறைவித்தார் மிக்க புகழ் பரவையார் 6.2.28

3183

அணி ஆரூர் மருகு அதனில் ஆளி அங்குப் பறை அறைந்த
பணியாலே மனை நிறைத்துப் பாங்கு எங்கும் நெல் கூடு
அணியாமல் கட்டி நகர் களி கூரப் பரவையார்
மணியாரம் புனை மார்பின் வன் தொண்டர் தமைப் பணிந்தார் 6.2.29

3184

நம்பி ஆரூர் திருவாரூரில் நயந்து உறைநாள்
செம் பொன் புற்று இடம் கொண்டு வீற்று இருந்த செழும் தேனைக்
தம் பெரிய விருப்பினொடும் தாழ்ந்து உணர்வினால் பருகி
இம்பருடன் உம்பர்களும் அதிசயிப்ப ஏத்தினார் 6.2.30

3185

குலவு புகழ்க் கோட்டிலியார் குறை யிரந்து தம் பதிக்கண்
அலகில் புகழ் ஆரூரர் எழுந்து அருள அடி வணங்கி
நிலவிய வன் தொண்டர் அஃது இசைந்து அதன்பின் நேர் இறைஞ்ச
பலர் புகழும் பண்பினார் மீண்டும் தம் பதி அணைந்தார் 6.2.31

3186

தேவர் ஒதுங்க திருத்தொண்டர் மிடையும் செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளும் கடவுள் பெருமான் கழல் வணங்கி
நாவலூரர் அருள் பெற்று நம்பர் பதிகள் பிற நண்ணிப்
பாவை பாகர் தமைப் பணிந்து பாடும் விருப்பில் சென்று அணைவார் 6.2.32

3187

மாலும் அயனும் உணர்வு அரியர் மகிழும் பதிகள் பல வணங்கி
ஞாலம் நிகழ் கோட் புலியார் தம் நாட்டியத்தான் குடி நண்ண
ஏலும் வகையால் அலங்கரித்து அங்கு அவரும் எதிர்கொண்டு இனிது இறைஞ்சிக்
கோல மணி மாளிகையின் கண் ஆர்வம் பெருகக்கொடு புக்கார் 6.2.33

3188

தூய மணிப் பொன் தவிகில் எழுந்து அருளி இருக்கத் தூ நீரால்
சேய மலர்ச் சேவடி விளக்கித் தெளித்துக் கொண்ட செழும் புனலால்
மேய சுடர் மாளிகை எங்கும் விளங்க வீசி உளம் களிப்ப
ஏய சிறப்பில் அர்ச்சனைகள் எல்லாம் இயல்பின் முறை புரிவார் 6.2.34

3189

பூந்தண் பனிநீர் கொடு சமைத்த பொருவு இல் விரைச்சந்தனக் கலவை
வாய்ந்த அகிலின் நறும் சாந்து வாசம் நிறைமான் மதச் சேறு
தோய்ந்த புகை நாவியின் நறு நெய் தூய பசும் கர்ப்பூரம் உடன்
ஏய்ந்த அடைக்காய் அமுது இனைய எண்ணில் மணிப் பாசனத்து ஏந்தி 6.2.35

3190

வேறு வேறு திருப் பள்ளித் தாமப் பணிகள் மிக எடுத்து
மாறிலாத மணித்திரு ஆபரண வருக்கம் பல தாங்கி
ஈறில்விதத்துப் பரிவட்டம் ஊழின் நிரைத்தே எதிர் இறைஞ்சி
ஆறு புணைந்தார் அடித் தொண்டர் அளவு இல் பூசை கொள அளித்தார் 6.2.36

3191

செங்கோல் அரசன் அருள் உரிமைச் சேனாபதி ஆம் கோட்புலியார்
நங்கோமானை நாவலூர் நகரார் வேந்தை நண்பினால்
தங்கோ மனையில் திரு அமுது செய்வித்து இறைஞ்சித்தலை சிறந்த
பொங்கு ஓதம் போல் பெரும் காதல் புரிந்தார் பின்னும் போற்றுவா 6.2.37

3192

ஆன விருப்பின் மற்று அவர் தாம் அருமையால் பெற்று எடுத்த
தேனார் கோதைச் சிங்கடியார் தமையும் அவர்பின் திரு உயிர்த்த
மானார் நோக்கின் வனப்பகையார் தமையும் கொணர்ந்து வன் தொண்டர்
தூ நாண் மலர்த்தாள் பணிவித்துத் தாமும் தொழுது சொல்லுவார் 6.2.38

3193

அடியேன் பெற்ற மக்கள் இவர் அடிமை ஆகக் கொண்டு அருளிக்
கடிசேர் மலர்த் தாள் தொழுது உய்யக் கருணை அளிக்க வேண்டும் எனத்
தொடி சேர் தளிக்கை இவர் எனக்குத் தூய மக்கள் எனக் கொண்டப்
படியே மகண்மை யாக் கொண்டார் பரவையார் தம் கொழு நனார் 6.2.39

3194

கோதை சூழ்ந்த குழலாரைக் குறங்கின் வைத்து கொண்டு இருந்து
காதல் நிறைந்த புதல்வியராம் கருத்து உட்கசிவால் அணைத்து உச்சி
மீது கண்ணீர் விழ மோந்து வேண்டுவனவும் கொடுத்து அருளி
நாதர் கோயில் சென்று அடைந்தார் நம்பிதம்பிரான் தோழர் 6.2.40

3195

வென்றி வெள்ளேறு உயர்த்து அருளும் விமலர் திருக்கோபுரம் இறைஞ்சி
ஒன்றும் உள்ளத் தொடும் அன்பால் உச்சிகுவித்த கரத்தொடும்
சென்று புக்குப் பணிந்து திருப்பதிகம் பூணாண் என்று எடுத்துக்
கொன்றை முடியார் அருள் உரிமை சிறப்பித்தார் கோட்புலியாரை 6.2.41

3196

சிறப்பித்து அருளும் திருக்கடைக் காப்பு அதன் இடைச் சிங்கடியாரைப்
பிறப்பித்து எடுத்த பிதாவாகத் தம்மை நினைத்த பெற்றியினால்
மறப்பில் வகைச் சிங்கடி அப்பன் என்றே தம்மை வைத்து அருளி
நிறப் பொற்பு உடைய இசைபாடி நிறைந்த அருள் பெற்று இறைஞ்சினார் 6.2.42

3197

அங்கு நின்றும் எழுந்து அருளி அளவில் அன்பின் உள் மகிழச்
செங்கண் நுதலார் மேவு திருவலிவலத்தைச் சேர்ந்து இறைஞ்சி
மங்கை பாகர் தம்மைப் பதிகம் வலிவலத்துக் கண்டேன் என்று
எங்கும் நிகழ்ந்த தமிழ் மாலை எடுத்துத் தொடுத்த இசைபுனைவார் 6.2.43

3198

நன்று மகிழும் சம்பந்தர் நாவுக் கரசர் பாட்டு உகந்தீர்
என்று சிறப்பித்து இறைஞ்சி மகிழ்ந்து ஏத்தி அருள் பெற்று எழுந்து அருளி
மன்றின் இடையே நடம் புரிவார் மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயில் பெருமான் செம் பொன் கழல் பணிந்து 6.2.44

3199

இறைஞ்சிப் போந்து பரவையார் திரு மாளிகையில் எழுந்து அருளி
நிறைந்த விருப்பின் மேவும் நாள் நீடு செல்வத் திருவாரூர்ப்
புறம்பு நணிய கோயில் களும் பணிந்து போற்றிப் புற்று இடமாய்
உறைந்த பெருமான் கழல் பிரியாது ஓவா இன்பம் உற்று இருந்தார் 6.2.45

3200

செறி புன் சடையார் திருவாரூர்ப் திருப் பங்குனி உத்தரத் திருநாள்
குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவில் குறைவறுக்க
நிறையும் பொன் கொண்டு அணைவதற்கு நினைந்து நம்பி திருப்புகலூர்
இறைவர் பாதம் பணிய எழுந்து அருளிச் சென்று அங்கு எய்தினார் 6.2.46

3201

சென்று விரும்பித் திருப்புகலூர் தேவர் பெருமான் கோயில் மணி
முன்றில் பணிந்து வலம் கொண்டு முதல்வர் முன்பு வீழ்ந்து இறைஞ்சித்
தொன்று மரபின் அடித்தொண்டு தோய்ந்த அன்பில் துதித்து எழுந்து
நின்று பதிக இசைபாடி நினைந்த கருத்து நிகழ் விப்பார் 6.2.47

3202

சிறிது பொழுது கும்பிட்டுச் சிந்தை முன்னம் அங்கு ஒழிய
வறிது புறம் போந்து அருளி அயல் மடத்தில் அணையார் வன் தொண்டர்
அறிவு கூர்ந்த அன்பர் உடன் அணி முன்றிலின் ஓர் அருகு இருப்ப
மறி வண்கையார் அருளேயோ மலர்கண் துயில் வந்து எய்தியதால் 6.2.48

3203

துயில் வந்து எய்தத் தம்பிரான் தோழர் அங்குத் திருப்பணிக்குப்
பயிலும் சுடுமண் பலகை பல கொணர்வித்து உயரம் பண்ணித் தேன்
அயிலும் சுரும்பார் மலர்ச் சிகழி முடிமேல் அணியா உத்தரிய
வெயில் உந்திய வெண் பட்டு அதன் மேல் விரித்துப் பள்ளி மேவினார் 6.2.49

3204

சுற்றும் இருந்த தொண்டர்களும் துயிலும் அளவில் துணை மலர்க் கண்
பற்றும் துயில் நீங்கிடப் பள்ளி உணர்ந்தார் பரவை கேள்வனார்
வெற்றி விடையார் அருளாலே வேமண் கல்வே விரிசுடர்ச் செம்
பொற்றிண் கல்லாயின கண்டு புகலூர் இறைவர் அருள் போற்றி 6.2.50

3205

தொண்டர் உணர மகிழ்ந்து எழுந்து துணைக் கைக் கமல முகை தலை மேல்
கொண்டு கோயில் உள் புக்குக் குறிப்பில் அடங்காப் பேர் அன்பு
மண்டு காதல் உற வணங்கி வாய்ந்த மதுர மொழிமாலை
பண்டு அங்கு இசையில் தம்மையே புகழ்ந்து என்று எடுத்து 6.2.51

3206

பதிகம் பாடித் திருக் கடைக் காப் பணிந்து பரவிப் புறம் போந்தே
எதிரில் இன்பம் இம்மையே தருவார் அருள் பெற்று எழுந்து அருளி
நிதியின் குவையும் உடன் கொண்டு நிறையும் நதியும் குறை மதியும்
பொதியும் சடையார் திருப் பனையூர் புகுவார் புரிநூல் மணி மார்பர் 6.2.52

3207

செய்ய சடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக் கூத்தொடும் காட்சி
எய்த அருள் எதிர் சென்று அங்கு எழுந்த விருப்பால் விழுந்து இறைஞ்சி
ஐயர் தம்மை அரங்கு ஆட வல்லார் அவரே அழகியர் என்று
உய்ய உலகு பெறும் பதிகம் பாடி அருள் பெற்று உடன்போந்தார் 6.2.53

3208

வளம் மல்கிய சீர்ப் பனையூர் வாழ்வார் ஏத்த எழுந்து அருளி
அளவில் செம்பொன் இட்டிகைகள் ஆள்மேல் நெருங்கி அணி ஆரூர்த்
தளவ முறுவல் பரவையார் தம் மாளிகையில் புகத் தாமும்
உளமன்னிய தம் பெருமானார் தம்மை வணங்கி உவந்து அணைந்தார் 6.2.54

3209

வந்து பரவைப் பிராட்டியார் மகிழ வைகி மருவும் நாள்
அந்தண் ஆரூர் மருங்கு அணிய கோயில் பலவும் அணைந்து இறைஞ்சிச்
சிந்தை மகிழ விருப்பினொடும் தெய்வப் பெருமாள் திருவாரூர்
முந்தி வணங்கி இனிது இருந்தார் முனைப் பாடியார் தம் காவலனார் 6.2.55

3210

பல நாள் அமர்வார் பரமர் திரு அருளால் அங்கு நின்றும் போய்ச்
சிலை மா மேரு வீரனார் திரு நன்னிலத்துச் சென்று எய்தி
வலம் மாக வந்து கோயிலின் உள் வணங்கி மகிழ்ந்து பாடினார்
தலமார்கின்ற தண் இயல் வெம்மை யினான் என்னும் தமிழ் மாலை 6.2.56

3211

பாடி அங்கு வைகிய பின் பரமர் வீழி மிழலையினில்
நீடு மறையால் மேம் பட்ட அந்தண் ஆளர் நிறைந்து ஈண்டி
நாடு மகிழ அவ் அளவு நடைக் காவணம் பாவாடைஉடன்
மாடு கதலி பூகம் நிரை மல்க மணித் தோரணம் நிரைத்து 6.2.57

3212

வந்து நம்பி தம்மை எதிர் கொண்டு புக்கார் மற்றவரும்
சிந்தை மலர்ந்து திரு வீழி மிழலை இறைஞ்சிச் சேண் விசும்பின்
முந்தை இழிந்த மொய் ஒளி சேர் கோயில் தன்னை முன் வணங்கி
பந்தம் அறுக்கும் தம் பெருமான் பாதம் பரவி பணிகின்றார் 6.2.58

3213

படங்கொள் அரவில் துயில் வோனும் பதுமத்தோனும் பரவிய
விடங்கன் விண்ணோர் பெருமானை விரவும் புளகம் உடன் பரவி
அடங்கல் வீழி கொண்டு இருந்தீர் அடியேனுக்கும் அருளும் எனத்
தடம்கொள் செஞ்சொல் தமிழ் மாலை சாத்தி அங்குச் சாரும் நாள் 6.2.59

3214

வாசி அறிந்து காசு அளிக்க வல்ல மிழலை வாணர்பால்
தேசு மிக்க திருஅருள் முன் பெற்று திருவாஞ்சியத்து அடிகள்
பாசம் அறுத்து ஆள் கொள்ளும் தாள் பணிந்து பொருவனார் என்னும்
மாசில் பதிகம் பாடி அமர்ந்து அரிசில் கரைப் புத்தூர் அணைந்தார் 6.2.60

3215

செழு நீர் நறையூர் நிலவு திருச் சித்தீச் சரமும் பணிந்து ஏத்தி
விழுநீர் மையினில் பெரும் தொண்டர் விருப்பின் ஓடும் எதிர்கொள்ள
மழுவோடு இள மான் கரதலத்தில் உடையார் திருப் புத்தூர் வணங்கி
தொழு நீர் மையினில் துதித்து ஏத்தித் தொண்டர் சூழ உறையும் நாள் 6.2.61

3216

புனிதனார் முன் புகழ்த் துணையார்க்கு அருளும் திறமும் போற்றிசைத்து
முனிவர் போற்ற எழுந்து அருளி மூரி வெள்ளக் கங்கையினில்
பனி வெண் திங்கள் அணி சடையார் பதிகள் பலவும் பணிந்து போந்து
இனிய நினைவில் எய்தினார் இறைவர் திருவா வடு துறையில் 6.2.62

3217

விளங்கும் திருவாவடு துறையில் மேயார் கோயில் புடைவலம் கொண்டு
உளம் கொண்டு உருகும் அன்பினுடன் உள்புக்கு இறைஞ்சி ஏத்துவார்
வளம் கொள் பதிகம் மறையவன் என்று எடுத்து செம்கணான்
தளம் கொள் பிறப்பும் சிறப்பித்துத் தமிழ் சொல் மாலை சாத்தினார் 6.2.63

3218

சாத்தி அங்கு வைகு நாள் தயங்கும் அன்பருடன் கூடப்
பேர்த்தும் இறைஞ்சி அருள் பெற்றும் பெண்ணோர் பாகத்து அண்ணலார்
தீர்தப் பொன்னித் தென் கரைமேல் திகழும் பதிகள் பல பணிந்து
மூர்த்தியார் தம் இடை மருதை அடைந்தார் முனைப் பாடித் தலைவர் 6.2.64

3219

மன்னு மருதின் அமர்ந்த வரை வணங்கி மதுரச் சொல் மலர்கள்
பன்னிப் புனைந்து பணிந்து ஏத்திப் பரவிப் போந்து தொண்டர் உடன்
அந் நல் பதியில் இருந்து அகல்வார் அரனார் திருநாசேச்சரத்தை
முன்னி புக்கு வலம் கொண்டு முதல்வர் திருத்தாள் வணங்கினார் 6.2.65

3220

பெருகும் பதிகம் பிறை அணிவாள் நுதலாள் பாடிப் பெயர்ந்து நிறை
திருவின் மலியும் சிவபுரத்துத் தேவர் பெருமான் கழல் வணங்கி
உருகும் சிந்தை உடன் போந்தே உமையோர் பாகர் தாம் மகிழ்ந்து
மருவும் பதிகள் பிற பணிந்து கலைய நல்லூர் மருங்கு அணைந்தார் 6.2.66

3221

செம்மை மறையோர் திருக்கலைய நல்லூர் இறைவர் சேவடிக்கீழ்
மும்மை வணக்கம் பெற இறைஞ்சி முன்பு பரவித் தொழுது எழுவார்
கொம்மை மருவு குரும்பைமுலை உமையாள் என்னும் திருப்பதிகம்
மெய்ம்மைப் புராணம் பலவும் மிகச் சிறப்பித்து இசையின் விளம்பினார் 6.2.67

3222

அங்கு நின்று திருக் குடமூக்கு அணைந்து பணிந்து பாடிப்போய்
மங்கைப் பாகர் வலம் சுழியை மருவிப் பெருகும் அன்பு உருகத்
தங்கு காதல் உடன் வணங்கித் தமிழால் பரசி அரசினுக்குத்
திங்கள் முடியார் அடி அளித்த திரு நல்லூரைச் சென்று அணைந்தார் 6.2.68

3223

நல்லூர் இறைவர் கழல் போற்றி நவின்று நடுவர் நம்பர் பதி
எல்லாம் இறைஞ்சி ஏத்திப் போந்து இசையால் பரவும் தம் உடைய
சொல்லுதியமா அணிந்தவர் தம் சோற்றுத் துறையின் மருங்கு எய்தி
அல்லூர் கண்டர் கோயிலின் உள்
அடைந்து வலம் கொண்டு அடி பணிவார் 6.2.69

3224

அழல் நீர் ஒழுகி அனைய எனும் அம் சொல் பதிகம் எடுத்து அருளிக்
கழல் நீடிய அன்பினில் போற்றும் காதல் கூரப் பரவிய பின்
கெழு நீர்மையினில் அருள் பெற்றுப் போந்து பரவையார் கேள்வர்
முழு நீறு அணிவார் அமர்ந்த பதி பலவும் பணிந்து முன்னுவார் 6.2.70

3225

தேவர் பெருமான் கண்டியூர் பணிந்து திரு ஐயாறு அதனை
மேவி வணங்கிப் பூந்துருத்தி விமலர் பாதம் தொழுது இறைஞ்சிச்
சேவில் வருவார் திரு ஆலம் பொழிலில் சேர்ந்து தாழ்ந்து இரவு
பாவு சயனத்து அமர்ந் அருளிப் பள்ளி கொள்ளக் கனவின்கண் 6.2.71

3226

மழபாடி இனில் வருவதற்கு நினைக்க மறந்தாயோ என்று
குழகு ஆகிய தம் கோலம் எதிர்காட்டி அருளக் குறித்து உணர்ந்து
நிழலார் சோலைக் கரைப் பொன்னி வடபால் ஏறி நெடுமாடம்
அழகார் வீதி மழபாடி அணைந்தார் நம்பி ஆரூரர் 6.2.72

3227

அணைந்து திருக் கோபுரம் இறைஞ்சி அன்பர் சூழ உடன் புகுந்து
பணம் கொள் அரவம் அணிந்தார் முன் பணிந்து வீழ்ந்து பரம் கருணைக்
குணம் கொள் அருளின் திறம் போற்றிக் கொண்ட புளகத்துடன் உருகிப்
புணர்ந்த இசையால் திருப்பதிகம் பொன்னார் மேனி என்று எடுத்து 6.2.73

3228

அன்னே உன்னை அல்லல் யான் ஆரை நினைக்கேன் என ஏத்தி
தன்னோர் இல்லாப் பதிக மலர் சாத்தித் தொழுது புறம்பு அணைந்து
மன்னும் பதியில் சில நாள் கள் வைகித் தொண்டர் உடன் மகிழ்ந்து
பொன்னிக் கரையின் இருமருங்கும் பணிந்து மேல்பால் போதுவார் 6.2.74

3229

செய்ய சடையார் திரு ஆனைக் காவில் அணைந்து திருத் தொண்டர்
எய்த முன் வந்து எதிர் கொள்ள இறைஞ்சிக் கோயில் உள் புகுந்தே
ஐயர் கமலச் சேவடிக் கீழ் ஆர்வம் பெருக விழுந்து எழுந்து
மெய்யும் முகிழ்ப்பக் கண் பொழிநீர் வெள்ளம் பரப்ப விம்முவார் 6.2.75

3230

மறைகளாய நான்கும் என மலர்ந்த செம் சொல் தமிழ் பதிகம்
நிறையும் காதல் உடன் எடுத்து நிலவும் அன்பர் தமை நோக்கி
இறையும் பணிவார் எம்மையும் ஆள் உடையார் என்று ஏத்துவார்
உறையூர்ச் சோழன் மணியாரம் சாத்தும் திறத்தை உணர்ந்து அருளி 6.2.76

3231

வளவர் பெருமான் மணியாரம் சாத்திக் கொண்டு வரும் பொன்னிக்
கிளரும் திரை நீர் மூழ்குதலும் வழுவிப் போக ஏதம் உற
அளவில் திருமஞ்சனக் குடத்துள் அது புக்கு ஆட்ட அணிந்து அருளித்
தளரும் அவனுக்கு அருள் புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார் 6.2.77

3232

சாற்றி அங்குத் தங்கு நாள் தயங்கும் பவளத் திருமேனி
நீற்றர் கோயில் எம்மருங்கும் சென்று தாழ்ந்து நிறை விருப்பால்
போற்றி அங்கு நின்றும் போய்ப் பொருவில் அன்பர் மருவிய தொண்டு
ஆற்றும் பெருமை திருப்பாச்சில் ஆச்சிரமம் சென்று அடைந்தார் 6.2.78

3233

சென்று திருக் கோபுரம் இறைஞ்சித் தேவர் மலிந்த திருந்து மணி
முன்றில் வலம் கொண்டு உள் அணைந்து முதல்வர் முன்னம் வீழ்ந்து இறைஞ்சி
நன்று பெருகும் பொருள் காதல் நயப்புப் பெருக நாதர் எதிர்
நின்று பரவி நினைந்த பொருள் அருளாது ஒழிய நேர் நின்று 6.2.79

3234

அன்பு நீங்கா அச்சம் உடன் திருத் தோழமைப் பணியால்
பொன் பெறாத திரு உள்ளம் புழுங்க அழுங்கிப் புறம்பு ஒருபால்
முன்பு நின்ற திருத் தொண்டர் முகப்பே முறைப்பாடு உடையார்போல்
என்பு கரைந்து பிரானார் மற்று இலையோ என்ன எடுக்கின்றார் 6.2.80

3235

நித்தமும் நீங்கா நிலைமையின் நீங்கி
நிலத்து இடைப் புலம் கெழும் பிறப்பால்
உய்த்த காரணத்தை உணர்ந்து நொந்து
அடிமை ஒருமையாம் எழுமையும் உணர்த்தி
எத்தனை அருளாது ஒழியினும் பிரானார்
இவர் அலாது இலையோ என்பார்
வைத்தனன் தனக்கே தலையும் என்
நாவும் என வழுத்தினார் தொண்டர் 6.2.81

3236

இவ் வகை பரவித் திருக்கடைக் காப்பும்
ஏசின வல்ல என்று இசைப்ப
மெய் வகை விரும்பு தம் பெருமானார்
விழுநிதிக் குவை அளித்து அருள
மை வளர் கண்டர் கருணையே பரவி
வணங்கி அப்பதி இடை வைகி
எவ் வகை மருங்கும் இறைவர் தம் பதிகள்
இறைஞ்சி அங்கு இருந்தனர் சில நாள் 6.2.82

3237

அப்பதி நீங்கி அருளினால் போகி ஆவின்
அஞ்சு ஆடுவார் நீடும்
எப்பெயர்ப் பதியும் இருமருங்கு இறைஞ்சி
இறைவர் பைஞ்ஞீலியை எய்திப்
பைப் பணி அணிவார் கோபுரம் இறைஞ்சிப்
பாங்கு அமர் புடை வலம் கொண்டு
துப்பு உறழ் வேணியார் கழல் தொழுவார்
தோன்றும் கங்காளரைக் கண்டார் 6.2.83

3238

கண்டவர் கண்கள் காதல் நீர் வெள்ளம்
பொழிதரக் கை குவித்து இறைஞ்சி
வண்டறை குழலார் மனம் கவர் பலிக்கு
திரு வடிவு கண்டவர்கள்
கொண்டது ஓர் மயலல் வினவு கூற்று
ஆகக் குலவு சொல் கார் உலாவிய என்று
அண்டர் நாயகரைப் பரவி ஆரணிய விடங்கராம்
அருந் தமிழ் புனைந்தார் 6.2.84

3239

பரவி அப் பதிகத் திருக் கடைக் கப்புச்
சாத்தி முன் பணிந்து அருள் பெற்றுக்
கரவில் அன்பர்கள் தம் கூட்டமும் தொழுது
கலந்து இனிது இருந்து போந்து அருளி
விரவிய ஈங்கோய் மலை முதல் ஆக விமலர்
தம் பதி பல வணங்கிக்
குரவலர் சோலை அணி திருப் பாண்டிக்
கொடு முடி அணைந்தனர் கொங்கில் 6.2.85

3240

கொங்கினில் பொன்னித் தென் கரைக்கறையூர்க்
கொடு முடிக் கோயில் முன் குறுகிச்
சங்க வெண் குழையார் உழை வலம் செய்து
சார்ந்து அடி அன்பினில் தாழ்ந்து
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது
புனிதர் பொன் மேனியை நோக்கி
இங்கு இவர் தம்மை மறக்க ஒண்ணாது
என்று எழுந்த மெய்க் குறிப்பினில் எடுப்ப 6.2.86

3241

அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம
அஞ்சு எழுத்து அறிய எப் பொழுதும்
எண்ணிய நாவே இன் சுவை பெருக
இடை அறாது இயம்பும் என்றும் இதனைத்
திண்ணிய உணர்வில் கொள்பவர் மற்றுப்
பற்றுஇலேன் எனச் செழும் தமிழால்
நண்ணிய அன்பில் பிணிப்பு உற நவின்றார்
நமச்சிவாயத் திருப் பதிகம் 6.2.87

3242

உலகு எலாம் உய்ய உறுதி ஆம்பதிகம்
உரைத்து மெய் உணர்வு அறா ஒருமை
நிலவிய சிந்தை உடன் திரு அருளால்
நீங்குவார் பாங்கு நல் பதிகள்
பலவும் முன் பணிந்து பரமர் தாள்
போற்றிப் போந்து தண் பனி மலர்ப் படப்பைக்
குலவும் அக் கொங்கில் காஞ்சிவாய்ப்
பேரூர் குறுகினார் முறுகும் ஆதரவால் 6.2.88

3243

அத் திருப்பதியை அணைந்து முன்
ஆண்டவர் கோயில் உள் புகுந்து
மெய்த்தவர் சூழ வலம் கொண்டு முன்பு
மேவுவார் தம் எதிர் விளங்க
நித்தனார் தில்லை மன்றுள் நின்று ஆடல்
நீடிய கோலம் நேர் காட்டக்
கைத்தலம் குவித்துக் கண்கள் ஆனந்தக்
கலுழி நீர் பொழிதரக் கண்டார் 6.2.89

3244

காண்டலும் தொழுது வீழ்ந்து உடன் எழுந்து
கரை இல் அன்பு என்பினை உருக்கப்
பூண்ட ஐம் புலனில் புலப் படா இன்பம்
புணர்ந்து மெய் உணர்வினில் பொங்கத்
தாண்டவம் புரியும் தம் பிரானாரைத்
தலைப்படக் கிடைத்த பின் சைவ
ஆண் தகை யாருக்கு அடுத்த அந் நிலைமை
விளைவை யார் அளவு அறிந்து உரைப்பார் 6.2.90

3245

அந் நிலை நிகழ்ந்த ஆரருள்
பெற்ற அன்பு அனார் இன்ப வெள்ளத்து
மன்னிய பாடல் மகிழ்ந்து உடன்
பரவி வளம் பதி அதன் இடை மருவி
பொன் மணி மன்றுள் எடுத்த சேவடியார்
புரி நடம் கும்பிடப் பெற்றால்
என் இனிப் புறம் போய் எய்துவது என்று
மீண்டு எழுந்து அருளுவதற்கு எழுவார் 6.2.91

3246

ஆயிடை நீங்கி அருளினால் செல்வார்
அருவரைச் சுரங்களும் பிறவும்
பாயும் நீர் நதியும் பல பல கடந்து பரமர்
தம் பதிபல பணிந்து
மேய வண் தமிழால் விருப் பொடும்
பரவி வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்து வந்து அடைந்தார்
தென் திசை கற்குடிமலையில் 6.2.92

3247

வீடு தரும் இக் கல் குடியில் விழுமியாரைப்
பணிந்து இறைஞ்சி
நீடு விருப்பில் திருப்பதிகம் நிறைந்த
சிந்தை உடன் பாடிப்
பாடும் விருப்பில் தொண்டருடன் பதிகள்
பலவும் அணைந்து இறைஞ்சி
தேடும் இருவர் காண்ப அரியார் திருவாறை
மேல் சென்று அணைந்தார் 6.2.93

3248

செம் பொன் மேரு சிலை வளைத்த சிவனார் ஆறை மேல் தளியில்
நம்பர் பாதம் பணிந்து இறைஞ்சி நாளும் மகிழ் வார்க்கு அருள் கூட
உம்பர் போற்றும் தானங்கள் பலவும் பணிந்து போந்து அணைவார்
இம்பர் வாழ இன்னம்பர் நகரைச் சேர எய்தினார் 6.2.94

3249

ஏரின் மருவும் இன்னம்பர் மகிழ்ந்த ஈசர் கழல் வணங்கி
ஆரும் அன்பில் பணிந்து ஏத்தி ஆரா அருளால் அங்கு அமர்வார்
போரின் மலியும் கரி உரித்தார் மருவும் புறம் பயம் போற்றச்
சேரும் உள்ளம் மிக்குஎழ மெய்ப் பதிகம் பாடிச் சென்றார் 6.2.95

3250

அங்கம் ஓதி ஓர் ஆறை மேல் தளி என்று எடுத்து அமர் காதலில்
பொங்கு செந்தமிழால் விரும்பு புறம் பயந்து தொழப் போதும் என்று
எங்கும் மன்னிய இன் இசை பதிகம் புணைந்து உடன் எய்தினார்
திங்கள் சூடிய செல்வர் மேவும் திருப் புறம் பயம் சேரவே 6.2.96

3251

அப் பதிக் கண் அமர்ந்த தொண்டரும் அன்று வெண்ணெய் நல் ஊரினில்
ஒப்பரும் தனி வேதியன் பழ ஓலை காட்டி நின்று ஆண்டவர்
இப்பதிக் கண் வந்து எய்த என்ன தவங்கள் என்று எதிர் கொள்ளவே
முப்புரங்கள் எரித்த சேவகர் கோயில் வாயிலின் முன்னினார் 6.2.97

3252

நீடு கோபுரம் முன்பு இறைஞ்சி நிலாவு தொண்டரொடுள்ளணைந்து
ஆடல் மேவிய அண்ணலார் அடி போற்றி அஞ்சலி கோலி நின்று
ஏடு உலாம் மலர் தூவி எட்டினெடு ஐந்தும் ஆகும் உறுப்பினால்
பீடு நீடு நிலத்தின் மேல் பெருகப் பணிந்து வணங்கினார் 6.2.98

3253

அங்கு நீடு அருள் பெற்று உள் ஆர்வம் மிகப் பொழிந்து எழும் அன்பினால்
பொங்கு நாள் மலர் பாதம் முன் பணிந்து ஏத்தி மீண்டும் புறத்து அணைந்து
எங்கும் ஆகி நிறைந்து நின்றவர் தாம் மகிழ்ந்த இடங்களில்
தங்கு கோலம் இறைஞ்சுவார் அருள் அன்பரோடு எய்தினார் 6.2.99

3254

வம்பு நீடு அலங்கல் மார்பின் வன் தொண்டர் வன்னி கொன்றை
தும்பை வெள் அடம்பு திங்கள் தூய நீறு அணிந்த சென்னித்
தம்பிரான் அமர்ந்த தானம் பல பல சார்ந்து தாழ்ந்து
கொம்பனார் ஆடல் நீடு கூடலை யாற்றூர் சார 6.2.100

3255

செப்பரும் பதியில் சேரார் திருமுது குன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் சொல்லும் ஒருவழி உமையாளோடு
மெய்ப் பரம் பொருளாய் உள்ளார் வேதியர் ஆகி நின்றார்
முப்புரி நூலும் தாங்கி நம்பி ஆரூரர் முன்பு 6.2.101

3256

நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்த சிந்தையராய்த் தாழ்வார்
இன்றி யாம் முது குன்று எய்த வழி எமக்கு இயம்பும் என்ன
குன்ற வில்லாளி யாரும் கூடலை யாற்றூர் ஏறச்
சென்றது இவ் வழிதான் என்று செல்வழித் துணையாய்ச் செல்ல 6.2.102

3257

கண்டவர் கைகள் கூப்பித் தொழுது பின் தொடர்வார்க் காணார்
வண்டலர் கொன்றையாரை வடிவுடை மழு என்று ஏத்தி
அண்டர் தம் பெருமான் போந்த அதிசயம் அறியேன் என்று
கொண்டு எழும் விருப்பினேடும் கூடலை யாற்றூர் புக்கார் 6.2.103

3258

கூடலை ஆற்றூர் மேவும் கொன்றை வார் சடையினார்தம்
பீடுயர் கோயில் புக்குப் பெருகிய ஆர்வம் பொங்க
ஆடகப் பொதுவில் ஆடும் அறைகழல் வணங்கிப் போற்றி
நீடு அருள் பெற்றுப் போந்து திரு முது குன்றில் நேர்ந்தார் 6.2.104

3259

தட நிலைக் கோபுரத்தைத் தாழ்ந்து முன் இறைஞ்சிக் கோயில்
புடைவலம் கொண்டு புக்குப் போற்றினர் தொழுது வீழ்ந்து
நடம் நவில்வாரை நஞ்சி இடை எனும் செம் சொல்மாலைத்
தொடை நிகழ் பதிகம் பாடித் தொழுது கை சுமந்து நின்று 6.2.105

3260

நாதர் பால் பொருள் தாம் வேண்டி நண்ணிய வண்ணம் எல்லாம்
கோதறு மனத்துள் கொண்ட குறிப் பொடும் பரவும் போது
தாது அவிழ் கொன்றை வேய்ந்தார் தர அருள் பெறுவார் சைவ
வேதியர் தலைவர் மீண்டும் மெய்யில் வெண் பொடியும் பாட 6.2.106

3261

பனி மதிச் சடையார் தாமும் பன்னிரண்டாயிரம் பொன்
நனி அருள் கொடுக்கும் ஆற்றால் நல்கிட உடைய நம்பி
தனி வரும் மகிழ்ச்சி பொங்கத் தாழ்ந்து எழுந்து அருகு சென்று
கனி விடம் மிடற்றினார் முன் பின் ஒன்று கழறல் உற்றார் 6.2.107

3262

அருளும் இக் கனகம் எல்லாம் அடியனேற்கு ஆரூர் உள்ளோர்
மருளுற வியப்ப அங்கே வரப் பெற வேண்டும் என்னத்
தெருளுற எழுந்த வாக்கால் செழு மணி முத்தாற்றில் இட்டிப்
பொருளினை முழுதும் ஆரூர்க் குளத்தில் போய்க் கொள்க என்றார் 6.2.108

3263

என்று தம் பிரானார் இன் அருள் பெற்ற பின்னர்
வன் தொண்டர் மச்சம் வெட்டிக் கைக் கொண்டு மணி முத்து ஆற்றில்
பொன் திரள் எடுத்து நீருள் புகவிட்டுப் போது கின்றார்
அன்று எனை வலிந்து ஆட்கொண்ட அருள் இதில் அறிவேன் என்று 6.2.109

3264

மேவிய காதல் தொண்டு விரவு மெய் விருத்தி பெற்றார்
ஆவியின் விருத்தி ஆன அந்தணர் புலியூர் மன்றில்
காவியங் கண்டர் கூத்து கண்டு கும்பிடுவது என்று
வாவி சூழ் தில்லை மூதூர் வழிக் கொள்வான் வணங்கிப் போந்தார் 6.2.110

3265

மாடுள பதிகள் சென்று வணங்கிப் போய் மங்கை பாகர்
நீடிய கடம்பூர் போற்றி நிறைந்த ஆனந்தக் கூத்தர்
ஆடிய தில்லை மூதூர் அணைந்து அணி வாயில் புக்குச்
சேடுயர் மாடம் மன்னும் செழும் திரு வீதி சார்ந்தார் 6.2.111

3266

பொன் திரு வீதி தாழ்ந்து புண்ணிய விளைவாய் ஓங்கும்
நல் திரு வாயில் நண்ணி நறை மலி அலங்கல் மார்பர்
மற்றதன் முன்பு மண்மேல் வணங்கி உள் புகுந்து பைம் பொன்
சுற்று மாளிகை சூழ் வந்து தொழுது கை தலைமேல் கொள்வார் 6.2.112

3267

ஆடிய திருமுன்பான அம் பொனின் கோபுரத்தின்
ஊடு புக்கு இறைஞ்சி ஓங்கும் ஒளி வளர் கனக மன்றில்
நாடகம் செய்யதாளை நண்ணுற உள் நிறைந்து
நீடும் ஆனந்த வெள்ளக் கண்கள் நீர் நிறைந்து பாய 6.2.113

3268

பரவுவாய் குளறிக் காதில் படி திருப் படியைத் தாழ்ந்து
விரவு மெய் அங்கம் ஐந்தும் எட்டினும் வணங்கி வேட்கை
உரனுறு திருக்கூத்து உள்ளம் ஆர்தரப் பெருகி நெஞ்சில்
கரவு இலாத அவரைக் கண்ட நிறைவு தம் கருத்தில் கொள்ள 6.2.114

3269

மடித்து ஆடும் அடிமைக்கண் என்று
எடுத்து மன் உயிர் கட்கு அருளும் ஆற்றல்
அடுத்து ஆற்று நல் நெறிக்கண் நின்றார்கள்
வழுவி நரகு அணையா வண்ணம்
தடுப்பானைப் பேரூரில் கண்ட நிலை
சிறப்பித்துத் தனிக் கூத்து என்றும்
நடிப்பானை நாம் மனமே பெற்றவாறு
எனும் களிப்பால் நயந்து பாடி 6.2.115

3270

மீளாத அருள் பெற்றுப் புறம் போந்து
திரு வீதி மேவித் தாழ்ந்தே
ஆளான வன் தொண்டர் அந்தணர்கள்
தாம் போற்ற அமர்ந்து வைகி
மாளாத பேர் அன்பால் பொன்பதியை
வணங்கிப் போய் மறலி வீழத்
தாள் ஆண்மை கொண்டவர் தம்
கருப்பறியலூர் வணங்கிச் சென்று சார்ந்தார் 6.2.116

3271

கூற்று உதைத்தார் திருக் கொகுடிக் கோயில் நண்ணிக்
கோபுரத்தைத் தொழுது புகுந்து அன்பர் சூழ
ஏற்ற பெரு காதலினால் இறைஞ்சி ஏத்தி எல்லை
இலாப் பெரு மகிழ்ச்சி மனத்தில் எய்தப்
போற்றிசைத்துப் புறத்து அணைந்தப் பதியில் வைகிப்
புனிதர் அவர் தமை நினையும் இன்பம் கூறி
சாற்றிய மெய்த் திருப் பதிகம் சிம்மாந்து என்னும் தமிழ்
மாலை புனைந்து ஆங்குச் சாரும் நாளில் 6.2.117

3272

கண் நுதலார் விரும்பு கருப் பறியலூரைக்
கை தொழுது நீங்கிப் போய்க் கயல்கள் பாயும்
மண்ணி வளம் படிக் கரையை நண்ணி அங்கு மாது
ஒரு பாகத்தவர் தாள் வணங்கிப் போற்றி
எண்ணில் புகழ்ப் பதிகமும் முன்னவன் என்று ஏத்தி
ஏகுவார் வாழ் கொளி புத்தூர் எய்தாது
புண்ணியனார் போம் பொழுது நினைந்து மீண்டு
புகுகின்றார் தலைக்கலன் என்று எடுத்துப் போற்றி 6.2.118

3273

திருப் பதிகம் பாடியே சென்று அங்கு
எய்தித் தேவர் பெருமானார் தம் கோயில் வாயில்
உருப் பொலியும் மயிர்ப் புளகம் விரவத் தாழ்ந்தே
உள் அணைந்து பணிந்து ஏத்தி உருகும் அன்பால்
பொருப்பரையன் மடப் பாவை இடப் பாலானைப்
போற்றி இசைத்துப் புறம் போந்து தங்கிப் பூ மென்
கருப்பு வயல் வாழ் கொளி புத்தூரை நீங்கிக் கான்
நாட்டு முள்ளூரில் கலந்த போது 6.2.119

3274

கான் நாட்டு முள்ளூரைச் சாரும் போது
கண் நுதலார் எதிர் காட்சி கொடுப்பக் கண்டு
தூ நாண் மென் மலர்க் கொன்றைச் சடையார் செய்ய
துணைப் பாத மலர் கண்டு தொழுதேன் என்று
வான் ஆளும் திருப் பதிகம் வள்வாய் என்னும் வன் தமிழின்
தொடைமாலை மலரச் சாத்தித்
தேன் ஆரும் மலர்ச் சோலை மருங்கு சூழ்ந்த திருஎதிர்
கொள் பாடியினை எய்தச் செல்வார் 6.2.120

3275

எத்திசையும் தொழுது ஏத்த மத்த யானை
எடுத்து எதிர் கொள் பாடியினை அடைவோம் என்னும்
சித்த நிலைத் திருப்பதிகம் பாடி வந்து செல்வம் மிகு
செழும் கோயில் இறைஞ்சி நண்ணி
அத்தர் தமை அடி வணங்கி அங்கு வைகி அருள்
பெற்றுத் திரு வேள்விக் குடியில் எய்தி
முத்தி தரும் பெருமானைத் துருத்தி கூட மூப்பதிலை
எனும் பதிகம் மொழிந்து வாழ்ந்தார் 6.2.121

3276

காட்டு நல் வேள் விக் கோலம் கருத்துற வணங்கிக் காதல்
நாட்டிய உள்ளத்தோடு நம்பி ஆரூரர் போற்றி
ஈட்டிய தவத்தோர் சூழ அங்கு நின்று ஏகி அன்பு
பூட்டி ஆட்கொண்டார் மன்னும் தானங்கள் இறைஞ்சிப் போந்து 6.2.122

3277

எஞ்சாத பேர் அன்பில் திருத் தொண்டர் உடன் எய்தி
நஞ்சாரும் கறை மிடற்றார் இடம் பலவும் நயந்து ஏத்தி
மஞ்சாரும் பொழில் உடுத்த மலர்த் தடங்கள் புடை சூழும்
செஞ்சாலி வயல் மருதத் திருவாரூர் சென்று அடைந்தார் 6.2.123

3278

செல்வமலி திருவாரூர்த் தேவரொது முனிவர்களும்
மல்கு திருக் கோபுரத்து வந்து இறைஞ்சி உள்புக்கு அங்கு
எல்லை இலாக் காதல் மிக எடுத்த மலர்க் கை குவித்துப்
பல்கு திருத் தொண்டர் உடன் பரமர் திருமுன் அணைந்தார் 6.2.124

3279

மூவாத முதல் ஆகி நடுவாகி முடியாத
சேவாரும் கொடியாரைத் திரு மூலட்டானத்துள்
ஓவாத பெரும் காதல் உடன் இறைஞ்சிப் புறம் போந்து
தாவாத புகழ்ப் பரவையார் திரு மாளிகை சார்ந்தார் 6.2.125

3280

பொங்கு பெரு விருப்பினொடு புரி குழலார் பலர் போற்றப்
பங்கயக் கண் செங்கனிவாய்ப் பரவையார் அடி வணங்கி
எங்களையும் நினைந்து அருளி என இயம்ப இனிது அளித்து
மங்கை நல்லார் அவரோடு மகிழ்ந்து உறைந்து வைகும் நாள் 6.2.126

3281

நாயனார் முது குன்றர் நமக்கு அளித்த நல் நிதியம்
தூய மணி முத்தாற்றில் புக விட்டேம் துணைவர் அவர்
கோயிலின் மாளிகை மேல் பாற்குளத்தில் அவர் அருளாலே
போய் எடுத்துக்கொடு போதப் போதுவாய் எனப்புகல 6.2.127

3282

என்ன அதிசயம் இது தான் என் சொன்னவாறு என்று
மின் இடையார் சிறு முறுவல் உடன் விளம்ப மெய் உணர்ந்தார்
நன் நுதலாய் என்னுடைய நாதன் அருளால் குளத்தில்
பொன் அடைய எடுத்து உனக்குத் தருவது பொய்யாது என்று 6.2.128

3283

ஆங்கு அவரும் உடன் போத அளவு இறந்த விருப்பின் உடன்
பூங்கோயில் உள் மகிழ்ந்த புராதனரைப் புக்கு இறைஞ்சி
ஓங்கு திரு மாளிகையை வலம் வந்து அங்கு உடன் மேலைப்
பாங்கு திருக் குளத்து அணைந்தார் பரவையார் தனித்துணைவர் 6.2.129

3284

மற்றதனில் வட கீழ் பால் கரை மீது வந்து அருளி
முற்று இழையார் தமை நிறுத்தி முனைப் பாடித் திருநாடர்
கற்றை வார் சடையாரைக் கை தொழுது குளத்தில் இழிந்து
அற்றை நாள் இட்டு எடுப்பார் போல் அங்குத் தடவுதலும் 6.2.130

3285

நீற்றழகர் பாட்டு உவந்து திரு விளையாட்டினில் நின்று
மாற்றுறு செம் பொன் குளத்து வருவியாது ஒழிந்து அருள
ஆற்றினில் இட்டுக் குளத்தில் தேடுவீர் அருள் இதுவோ
சாற்றும் எனக் கோல் தொடியார் மொழிந்து அருளத் தனித் தொண்டர் 6.2.131

3286

முன் செய்த அருள் வழியே முருகு அலர் பூங்குழல் பரவை
தன் செய்ய வாயில் நகை தாராமே தாரும் என
மின் செய்த நூல் மார்பின் வேதியர் தாம் முது குன்றில்
பொன் செய்த மேனி இனீர் எனப் பதிகம் போற்றிசைத்து 6.2.132

3287

முட்ட இமை யோர் அறிய முது குன்றில் தந்த பொருள்
சட்ட நான் பெறாது ஒழிந்த தளர்வினால் கையறவாம்
இட்டளத்தை இவள் எதிரே கொடுத்து அருளும் எனும் திருப்பாட்டு
எட்டளவும் பொன் காட்டாது ஒழிந்து அருள ஏத்துவார் 6.2.133

3288

ஏத்தாதே இருந்து அறியேன் எனும் திருப்பாட்டு எவ்வுலகும்
காத்தாடும் அம்பலத்துக் கண்ணுளனாம் கண் நுதலைக்
கூத்தாதந்து அருள்வாய் இக் கோமளத்தின் முன் என்று
நீத்தாரும் தொடர் அரிய நெறி நின்றார் பரவுதலும் 6.2.134

3289

கொந்து அவிழ் பூங்கொன்றை முடிக் கூத்தனார் திரு அருளால்
வந்து எழும் பொன் திரள் எடுத்து வரன் முறையால் கரை ஏற்ற
அந்தரத்து மலர் மாரி பொழிந்து இழிந்தது அவனியுளோர்
இந்த அதிசயம் என்னே யார் பெறுவார் எனத் தொழுவார் 6.2.135

3290

ஞாலம் வியப்பு எய்த வரும் நல் கனக மிடை எடுத்து
மூலம் எனக் கொடு போந்த ஆணியின் முன் உரைப் பிக்க
நீல மிடற்றவர் அருளால் உரை தாழப் பின்னும் நெடு
மால் அயனுக்கு அரிய கழல் வழுத்தினார் வன்தொண்டர் 6.2.136

3291

மீட்டும் அவர் பரவுதலும் மெய் அன்பர் அன்பில் வரும்
பாட்டுவந்து கூத்து உவந்தார் படுவாசி முடிவு எய்தும்
ஓட்டறு செம் பொன் ஓக்க ஒரு மாவும் குறையாமல்
காட்டுதலும் மகிழ்ந்து எடுத்துக் கொண்டு கரை ஏறினார் 6.2.137

3292

கரை ஏறிப் பரவையார் உடன் கனக ஆனது எலாம்
நிரையே ஆளில் சுமத்தி நெடு நிலை மாளிகை போக்கித்
திரை யேறும் புனல் சடிலத்திரு மூலத் தானத்தார்
விரை யேறு மலர் பாதம் தொழுது அணைந்தார் வீதியினில் 6.2.138

3293

வந்து திரு மாளிகையின் உள் புகுந்து மங்கல வாழ்த்து
அந்தமிலா வகை ஏத்தும் அளவு இறந்தார் ஒலி சிறப்பச்
சிந்தை நிறை மகிழ்ச்சி உடன் சேயிழையாருடன் அமர்ந்தார்
கந்த மலி மலர்ச் சோலை நவலர் தம் காவலனார் 6.2.139

3294

அணி ஆரூர் மணி புற்றின் அமர்ந்தருளும் பரம் பொருளைப்
பணிவார் அங்கு ஒரு நாளில் பாராட்டும் திருப் பதிகம்
தணியாத ஆனந்தம் தலை சிறப்பத் தொண்டர் உடன்
துணிவு ஆய பொருள் வினவித் தொழுது ஆடிப் பாடுவார் 6.2.140

3295

பண்ணிறையும் வகை பாறு தாங்கி என எடுத்து அருளி
உண்ணிறையும் மனக் களிப்பால் உறு புளகம் மயிர் முகிழ்ப்ப
கண்ணிறையும் புனல் பொழியக் கரை இகந்த ஆனந்தம்
எண்ணிறைந்த படி தோன்ற ஏத்தி மகிழ்ந்து இன்புற்றார் 6.2.141

3296

இன்புற்று அங்கு அமர்நாளில் ஈறில் அரு மறை பரவும்
வன்புற்றின் அரவு அணிந்த மன்னவனார் அருள் பெற்றே
அன்புற்ற காதல் உடன் அளவு இறந்த பிறபதியும்
பொன்புற்கு என்றிட ஒளிரும் சடையாரைத் தொழப் போவார் 6.2.142

3297

பரிசனமும் உடன் போதப் பாங்கு அமைந்த பதிகள் தொறும்
கரியுரிவை புனைந்தார் தம் கழல் தொழுது மகிழ்ந்து ஏத்தித்
துரிசறு நல் பெரும் தொண்டர் நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறு மெய்த் தொண்டர் எதிர் கொள்ளப் புக்கு அணைந்தார் 6.2.143

3298

விண் தடவு கோபுரத்தைப் பணிந்து கரம் மேல் குவித்துக்
கொண்டு புகும் தண்ணலார் கோயிலினை வலம் செய்து
மண்டிய பேர் அன்பினொடு மன்னும் திரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிக் கீழ் பொருந்த நிலம் மிசைப் பணிந்தார் 6.2.144

3299

அங்கண்ணரைப் பணிந்து ஏத்தி அருளினால் தொழுது போய்
மங்குல் அணி மணி மாடத் திருக் கடவூர் வந்து எய்தித்
திங்கள் வளர் முடியார் தம் திருமயானமும் பணிந்து
பொங்கும் இசைப் பதிகம் மருவார் கொன்றை எனப் போற்றி 6.2.145

3300

திரு வீரட்டானத்துத் தேவர் பிரான் சினக் கூற்றின்
பொரு வீரந்தொலைத்த கழல் பணிந்து பொடியார் மேனி
மருஈரத் தமிழ் மலை புனைந்து ஏத்தி மலை வளத்த
பெரு வீரர் வலம் புரத்துப் பெருகு ஆர்வத் தொடும் சென்றார் 6.2.146

3301

வரையோடு நிகர் புரிசை வலம் புரத்தார் கழல் வணங்கி
உரை ஓசைப் பதிகம் எனக்கு இனி ஓதிப் போய்ச் சங்கம்
நிரையோடு துமித் தூப மணித் தீபம் நித்திலப் பூம்
திரை ஓதம் கொண்டு இறைஞ்சும் திருச்சாய்க்காடு எய்தினார் 6.2.147

3302

தேவர் பெருமான் தன்னைத் திருச்சாய்க்காட்டினில் பணிந்து
பாவலர் செம் தமிழ் மாலைத் திருப் பதிகம் பாடிப்போய்
மேவலர் தம் புரம் எரித்தார் வெண் காடு பணிந்து ஏத்தி
நாவலர் காவலர் அடைந்தார் நனி பள்ளித் திரு நகரில் 6.2.148

3303

நனிபள்ளி அமர்ந்தபிரான் கழல் வணங்கி நல் தமிழின்
புனித நறும் தொடை புணைந்து திருச் செம்பொன் பள்ளி முதல்
பனி மதி சேர் சடையார் தம் பதிபலவும் பணிந்து போய்த்
தனி விடை மேல் வருவார் தம் திரு நின்றியூர் சார்ந்தார் 6.2.149

3304

நின்றியூர் மேயாரை நேயத்தால் புக்கு இறைஞ்சி
ஒன்றிய அன்பு உள் உருகப் பாடுவார் உடைய அரசு
என்றும் உலகு இடர் நீங்கப் பாடிய ஏழ் எழுநூறும்
அன்று சிறப்பித்து அம் சொல் திருப் பதிகம் அருள் செய்தார் 6.2.150

3305

அப்பதியில் அன்பருடன் அமர்ந்து அகல்வார் அகல் இடத்தில்
செப்ப அரிய புகழ் நீடூர் பணியாது செல் பொழுதில்
ஒப்ப அரிய உணர்வினால் நினைந்து அருளி தொழல் உறுவார்
மெய்ப் பொருள் வண் தமிழ் மலை விளம்பிய மீண்டு அணைந்தார் 6.2.151

3306

மடல் ஆரும் புனல் நீடூர் மருவினர் தாள் வணங்காது
விடல் ஆமே எனும் காதல் விருப்பு உறும் அத்திருப்பதிகம்
அடல் ஆர் சூலப் படையார் தமைப் பாடி அடிவணங்கி
உடல் ஆரும் மயிர்ப் புளகம் மிகப் பணிந்து அங்கு உறைகின்றார் 6.2.152

3307

அம் கண் இனிது அமர்ந்து அருளால் திருப்புன் கூர் அணைந்து இறைஞ்சிக்
கொங்கு அலரும் மலர்ச் சோலைத் திருக் கோலக்கா அணையக்
கங்கை சடைக் கரந்தவர் தாம் எதிர் காட்சி கொடுத்து அருளப்
பொங்கு விருப்பால் தொழுது திருப்பதிகம் போற்றி இசைப்பார் 6.2.153

3308

திருஞான சம்பந்தர் திருக்கைகளால் ஒற்றிப்
பெருகு ஆர்வத்துடன் பாட பிஞ்ஞகனார் கண்டு இரங்கி
அருளாலே திருத்தாளம் அளித்தபடி சிறப்பித்துப்
பொருள் மாலைத் திருப்பதிகம் பாடியே போற்றி இசைத்தார் 6.2.154

3309

மூவாத முழு முதலார் முதல் கோலக்கா அகன்று
தாவாத புகழ் சண்பை வலம் கொண்டு தாழ்ந்து இறைஞ்சி
நாவார் முத்தமிழ் விரகர் நற்பதங்கள் பரவிப் போய்
மேவார் தம் புரம் செற்றார் குருகாவூர் மேவுவார் 6.2.155

3310

உண் நீரின் வேட்கை உடன் உறுபசியால் மிக வருந்தி
பண் நீர்மை மொழிப் பரவையார் கொழுநர் வரும் பாங்கர்க்
கண் நீடு திரு நுதலார் காதல் வரக் கருத்து அறிந்து
தண்ணீரும் பொதி சோறும் கொண்டு வழிச் சார் கின்றார் 6.2.156

3311

வேனில் உறு வெயில் வெம்மை தணிப்பதற்கு விரைக் குளிர் மென்
பான் நல் மலர்த் தடம் போலும் பந்தர் ஒரு பால் அமைத்தே
ஆன மறை வேதியராய் அருள் வேடம் கொண்டிருந்தார்
மான் அமரும் திருக் கரத்தார் வன் தொண்டர் தமைப் பார்த்து 6.2.157

3312

குருகாவூர் அமர்ந்து அருளும் குழகர் வழி பார்த் திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் தோழர் திருத் தொண்டர் உடன்
வருவார் அப்பந்தர் இடைப்புகுந்து திரு மறைவர் பால்
பெருகு ஆர்வம் செல இருந்தார் சிவாயநம எனப் பேசி 6.2.158

3313

ஆல நிழல் கீழ் இருந்தார் அவர் தம்மை எதிர் நோக்கிச்
சால மிகப் பசித்தீர் இப் பொதி சோறு தருகின்றேன்
காலம் இனித் தாழாமே கைக் கொண்டு இங்கு இனிது அருந்தி
ஏலம் நறும் குளிர் தண்ணீர் குடித்து இனைப்பு தீரும் என 6.2.159

3314

வன் தொண்டர் அது கேட்டு மறை முனிவர் தரும் பொதி சோறு
இன்று நமக்கு எதிர் விலக்கல் ஆகாது என்று இசைந்து அருளிப்
பொன் தயங்கு நூல் மார்பர் தரும் பொதி சோறு அது வாங்கிச்
சென்று திருத் தொண்டருடன் திரு அமுது செய்து அருளி 6.2.160

3315

எண் நிறைந்த பரிசனங்கள் எல்லாரும் இனிது அருந்தப்
பண்ணியபின் அம் மருங்கு பசித்து அணைந்தார்களும் அருந்த
உண்ணிறைந்த ஆரமுதாய் ஒருகாலும் உலவாதே
புண்ணியனார் தாம் அளித்த பொதி சோறு பொலிந்ததால் 6.2.161

3316

சங்கரனார் திரு அருள் போல் தண்ணீரின் சுவை ஆர்ந்து
பொங்கி வரும் ஆதரவால் அவர் நாமம் புகழ்ந்து ஏத்தி
அங்கு அயர் வால் பள்ளி அமர்ந்து அருகு அணைந்தார் களும் துயிலக்
கங்கை சடைக் கரந்தார் அப் பந்தரொடும் தாம் கரந்தார் 6.2.162

3317

சித்த நிலை திரியாத திரு நாவலூர் மன்னர்
அத்தகுதி யினில் பள்ளி உணர்ந்தவரை காணாமை
இத்தனையா மாற்றம் அறிந்திலேன் என எடுத்து
மெய்த் தகைய திருப்பதிகம் விளம்பியே சென்று அடைந்தார் 6.2.163

3318

குருகவூர் அமர்ந்து அருளும் குழகனார் கோயிலினுக்கு
அருகார் பொன் கோபுரத்தை அணைந்து இறைஞ்சி உள்புக்கு
வருகாதல் கூர வலம் கொண்டு திரு முன் வணங்கிப்
பருகா இன் அமுதத்தைக் கண்களால் பருகினார் 6.2.164

3319

கண்ணார்ந்த இன் அமுதை கை ஆரத் தொழுது இறைஞ்சிப்
பண்ணார்ந்த திருப் பதிகம் பாடியே பணிந்து ஏத்தி
உண்ணாடும் பெரும் காதல் உடையவர்தாம் புறத்து எய்தி
நண்ணும் ஆர்வத் தொண்டருடன் அங்கு இனிது நயந்து இருந்தார் 6.2.165

3320

அந் நாளில் தம் பெருமான் அருள் கூடப் பணிந்து அகன்று
மின்னார் செஞ்சடை முடியார் விரும்பும் இடம் பல வணங்கிக்
கன்னாடும் எயில் புடை சூழ் கழிப்பாலை தொழுது ஏத்தி
தென்னாவலூர் மன்னர் திருத்தில்லை வந்து அடைந்தார் 6.2.166

3321

சீர் வளரும் திருத்தில்லைத் திரு வீதி பணிந்து புகுந்து
ஏர் வலர் பொன் திரு மன்றுள் எடுத்த சேவடி இறைஞ்சிப்
பார் வளர மறை வளர்க்கும் பதி அதனில் பணிந்து உறைவார்
போர் வளர் மேருச்சிலையார் திருத்தினை மா நகர் புகுந்தார் 6.2.167

3321

திருத்தினை மா நகர் மேவும் சிவக் கொழுந்தைப் பணிந்து போய்
நிருத்தினார் அமர்ந்து அருளும் நிறை பதிகள் பல வணங்கிப்
பொருத்த மிகும் திருத்தொண்டர் போற்று திரு நாவலூர்
கருத்தில் வரும் ஆதரவால் கை தொழச் சென்று எய்தினார் 6.2.168

3323

திருநாவலூர் மன்னர் சேர்கின்றார் எனக் கேட்டுப்
பெரு நாமப் பதியோரும் தொண்டர்களும் பெருவாழ்வு
வருநாள் என்று அலங்கரித்து வந்து எதிர்கொண்டு உள் அணையச்
செரு நாகத்து உரிபுனைந்தார் செழுங்கோயில் உள் அணைந்தார் 6.2.169

3324

மேவிய அத் தொண்ட குழாம் மிடைந்து அர என்று எழும் ஓசை
மூவுலகும் போய் ஒலிப்ப முதல் வனார் முன்பு எய்தி
ஆவியினும் அடைவுடையார் அடிக் கமலத்து அருள் போற்றிக்
கோவலன் நான்முகன் எடுத்துப் பாடியே கும்பிட்டார் 6.2.170

3325

நலம் பெருகும் அப்பதியில் நாடி அன்பொடு நயந்து
குலம் பெருகும் திருத்தொண்டர் குழாத்தோடும் இனிது அமர்ந்து
சலம் பெருகும் சடைமுடியார் தாள் வணங்கி அருள் பெற்றுப்
பொலம் புரிநூல் மணிமார்பர் பிறபதியும் தொழப் போவார் 6.2.171

3326

தண்டகமாந் திரு நாட்டுத் தனி விடையார் மகிழ் இடங்கள்
தொண்டர் எதிர் கொண்டு அணையத் தொழுது போய்த் தூய நதி
வண்டறை பூம் புறவு மலை வளம் மருதம் பல கடந்தே
எண் திசை யோர் பரவு திருக் கழுக் குன்றை எய்தினார் 6.2.172

3327

தேன் ஆர்ந்த மலர்ச் சோலை திருக்கழுக் குன்றத்து அடியார்
ஆனாத விருப்பினொடும் எதிர் கொள்ள அடைந்து அருளித்
தூ நாள் வெண் மதி அணிந்த சுடர்க் கொழுந்தைத் தொழுது இறைஞ்சி
பா நாடும் இன் இசையின் திருப்பதிகம் பாடினார் 6.2.173

3328

பாடிய அப் பதியின் கண் இனிது அமர்ந்து பணிந்து போய்
நாடிய நல்லுணர்வின் ஒடும் திருக் கச்சூர் தனை நண்ணி
ஆடக மா மதில் புடை சூழ் ஆலக்கோயிலின் அமுதைக்
கூடிய மெய் அன்பு உருகக் கும்பிட்டுப் புறத்து அணைந்தார் 6.2.174

3329

அணைந்து அருளும் அவ்வேலை அமுது செயும் பொழுதாகக்
கொணர்ந்த அமுது சமைத்து அளிக்கும் பரிசனமும் குறுகாமை
தணந்த பசி வருத்தத்தால் தம்பிரான் திருவாயில்
புணர்ந்த மதில் புறத்துஇருந்தார் முனைப்பாடி புரவலனார் 6.2.175

3330

வன் தொண்டர் பசி தீர்க்க மலையின் மேல் மருந்து ஆனார்
மின் தங்கு வெண் தலையோடு ஒழிந்து ஒரு வெற்றோடு ஏந்தி
அன்று அங்கு வாழ்வார் ஓர் அந்தணராய்ப் புறப்பட்டுச்
சென்று அன்பர் முகம் நோக்கி அருள் கூறச் செப்புவார் 6.2.176

3331

மெய்ப் பசியால் மிக வருந்தி இனைத்து இருந்தீர் வேட்கைவிட
இப்பொழுதே சோறிரந்து இங்கு யான் உமக்குக் கொணர்கின்றேன்
அப்புறம் நீர் அகலாதே சிறிது பொழுது அமரும் எனச்
செப்பி அவர் கச்சூர் மனை தோறும் சென்றிரப்பார் 6.2.177

3332

வெண் திரு நீறு அணி திகழ விளங்குநூல் ஒளி துளங்கக்
கண்டவர்கள் மனம் உருகக் கடும் பகல் போது இடும் பலிக்குப்
புண்டரிகக் கழல் புவிமேல் பொருந்த மனை தொறும் புக்குக்
கொண்டுதாம் விரும்பி ஆட் கொண்டவர் முன் கொடுவந்தார் 6.2.178

3332

இரந்து தாம் கொடு வந்த இன் அடிசிலும் கறியும்
அரந்தை தரும் பசி தீர அருந்துவீர் என அளிப்ப
பெருந்தகையார் மறையவர் தம் பேர் அருளின் திறம் பேண
நிரந்த பெரும் காதலினால் நேர் தொழுது வாங்கினார் 6.2.179

3334

வாங்கிய அத்திரு அமுது வன் தொண்டர் மருங்கு அணைந்த
ஓங்கு தவத் தொண்டருடன் உண்டு அருளி உவந்து இருப்ப
ஆங்கு அருகு நின்றார் அவர் தம்மை அறியாமே
நீங்கினார் எப் பொருளும் நீங்காத நிலைமையினார் 6.2.180

3335

திருநாவலூராளி சிவ யோகியார் நீங்க
வரு நாம மறையவனார் இறையவனார் என மதித்தே
பெரு நாதச் சிலம்பு அணி சேவடி வருந்த பெரும் பகல் கண்
உருநாடி எழுந்து அருளிற்று என் பொருட்டாம் என உருகி 6.2.181

3336

முதுவாயோரி என்று எடுத்து முதல்வனார் தம் பெரும் கருணை
அதுவாம் என்றுஅதிசயம் வந்து எய்தக் கண்ணீர் மழை அருவி
புதுவார் புனலின் மயிர் புளகம் புதையப் பதிகம் போற்றி இசைத்து
மதுவார் இதழி முடியாரைப் பாடி மகிழ்ந்து வணங்கினார் 6.2.182

3337

வந்தித்து இறைவர் அருளால் போய் மங்கை பாகர் மகிழ்ந்த இடம்
முந்தித் தொண்டர் எதிர் கொள்ளப் புக்கு முக் கண் பெருமானைச்
சிந்தித்திட வந்து அருள் செய் கழல் பணிந்து செஞ்சொல் தொடைபுனைந்தே
அந்திச் செக்கர்ப் பெருகு ஒளியார் அமரும் காஞ்சி மருங்கு அணைந்தார் 6.2.183

3338

அன்று வெண்ணெய் நல்லூரில் அரியும் அயனும் தொடர் அரிய
வென்றி மழ வெள் விடை உயர்த்தார் வேத முதல்வராய் வந்து
நின்று சபை முன் வழக்கு உரைத்து நேரே தொடர்ந்து ஆட்கொண்டவர் தாம்
இன்று இங்கு எய்தப் பெற்றோம் என்று எயில் சூழ்காஞ்சி நகர் வாழ்வார் 6.2.184

3339

மல்கு மகிழ்ச்சி மிகப் பெருக மறுகு மணித் தோரணம் நாட்டி
அல்கு தீபம் நிறை குடங்கள் அகிலின் தூபம் கொடி எடுத்துச்
செல்வ மனைகள் அலங்கரித்து தெற்றி ஆடல் முழவு அதிரப்
பல்கு தொண்டருடன் கூடிப் பதியின் புறம் போய் எதிர் கொண்டார் 6.2.185

3340

ஆண்ட நம்பி எதிர் கொண்ட அடியார் வணங்க எதிர்வணங்கி
நீண்ட மதில்கோபுரம் கடந்து நிறை மாளிகை வீதியில் போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன் புனை மங்கல தூரியம் ஒலிப்ப
ஈண்டு தொண்டர் பெருகு திரு ஏகாம்பரம் சென்று எய்தினார் 6.2.186

3341

ஆழி நெடுமால் அயன் முதலாம் அமரர் நெருங்கு கோபுரம் முன்
பூழியுற மண் மிசை மேனி பொருந்த வணங்கிப் புகுந்து அருளிச்
சூழுமணி மாளிகை பலவும் தொழுது வணங்கி வலம் கொண்டு
வாழி மணிப் பொன் கோயிலினுள் வந்தார் அணுக்க வன் தொண்டர் 6.2.187

3342

கைகள் கூப்பி முன் அணைவார் கம்பை ஆறு பெருகிவர
ஐயர் தமக்கு மிக அஞ்சி ஆரத் தழுவிக் கொண்டு இருந்த
மை உலாவும் கரும் நெடும் கண் மலையாள் என்றும் வழிபடுபூஞ்
செய்ய கமலச் சேவடிக் கீழ்த் திருந்து காதலுடன் வீழ்ந்தார் 6.2.188

3343

வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மி எழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த சிந்தை உடன் பாடி மாறா விருப்பில் புறம் போந்து
சூழ்ந்த தொண்டருடன் மருவும் நாளில் தொல்லைக் காஞ்சி நகர்த்
தாழ்ந்த சடையார் ஆலயங்கள் பலவும் சார்ந்து வணங்குவார் 6.2.189

3344

சீரார் காஞ்சி மன்னும் திருக் காமக் கோட்டம் சென்று இறைஞ்சி
நீரார் சடையார் அமர்ந்து அருளும் நீடு திரு மேற்றளி மேவி
ஆரா அன்பில் பணிந்து ஏத்தும் அளவில் நுந்தா ஒண்சுடராம்
பாரார் பெருமைத் திருப் பதிகம் பாடி மகிழ்ந்து பரவினார் 6.2.190

3345

ஓணகாந்தன் தளி மேவும் ஒருவர் தம்மை உரிமையுடன்
பேணி அமைந்த தோழமையால் பெருகும் அடிமைத் திறம் பேசிக்
காண மோடு பொன் வேண்டி நெய்யும் பாலும் கலை விளங்கும்
யாணர்ப் பதிகம் எடுத்து ஏத்தி எண்ணில் நிதி பெற்று இனிது இருந்தார் 6.2.191

3346

அங்கண் அமர்வார் அனே கதங்கா பதத்தை எய்தி உள்ளணைந்து
செங்கண் விடையார் தமைப் பணிந்து தேன் நெய் புரிந்து என்று எடுத்ததமிழ்
தங்கும் இடமாம் எனப்பாடித் தாழ்ந்து பிறவும் தானங்கள்
பொங்கு காதலுடன் போற்றிப் புரிந்த பதியில் பொருந்தும் நாள் 6.2.192

3347

பாடல் இசையும் பாணியினால் பாவைத் தழுவக் குழைக் கம்பர்
ஆடல் மருவும் சே அடிகள் பரவிப் பிரியாது அமர்கின்றார்
நீட மூதூர்ப் புறத்து இறைவர் நிலவும் பதிகள் தொழவிருப்பால்
மாடம் நெருங்கு வன் பார்த்தான் பனம் காட்டூரில் வந்து அடைந்தார் 6.2.193

3348

செல்வம் மல்கு திருப் பனங் காட்டூரில் செம் பொன் செழும் சுடரை
அல்லல் அறுக்கும் அரு மருந்தை வணங்கி அன்புபொழி கண்ணீர்
மல்க நின்று விடையின் மேல் வருவான் எனும் வண் தமிழப் பதிகம்
நல்ல இசையின் உடன் பாடிப் போந்து புறம்பு நண்ணுவார் 6.2.194

3349

மன்னும் திருமால் பேறு அணைந்து வணங்கிப் பரவித் திருவல்லம்
தன்னுள் எய்தி இறைஞ்சிப் போய்ச்சாரும் மேல்பால் கற்றைப்
பின்னல் முடியார் இடம் பலவும் பேணி வனங்கிப் பெரும் தொண்டர்
சென்னி முகில் தோய் தடம் குவட்டுத் திருக்
திருக்காளத்தி மலைசேர்ந்தார் 6.2.195

3350

தடுக்கலாகாப் பெருங்காதல் தலை நின்று அருளும் கண்ணப்பர்
இடுக்கண் களைந்து ஆட் கொண்டு அருளும் இறைவர் மகிழ்ந்த காளத்தி
அடுக்கல் சேர அணைந்து பணிந்து அருளால் ஏறி அன்பாறும்
அடுப்பத் திருமுன் சென்று எய்தி மலை மேல் மருந்தை வணங்கினார் 6.2.196

3351

வணங்கி உள்ளம் களி கூர மகிழ்ந்து போற்றி மதுர இசை
அணங்கு செண்டாடு எனும் பதிகம் பாடி அன்பால் கண்ணப்பர்
மணம் கொள் மலர்ச் சேவடி பணிந்து வாழ்ந்து போந்து மன்னும் பதி
இணங்கும் தொண்டருடன் கெழுமி இன்புற்று இருக்கும் அந்நாளில் 6.2.197

3352

வட மாதிரத்துப் பருப்பதம் திருக் கேதார மலையும் முதல்
இடமா அரனார் தாம் உவந்த எல்லாம் இங்கே இருந்து இறைஞ்சி
நடம் ஆடிய சேவடியாரை நண்ணினார் போல் உள் நிறைந்து
திரு மாம் கருத்தில் திருப் பதிகம் பாடிக் காதல் சிறந்து இருந்தார் 6.2.198

3353

அங்கு சில நாள் வைகிய பின் அருளால் போந்து பெரு விடையார்
தங்கும் இடங்கள் எனைப் பலவும் சார்ந்து தாழ்ந்து தமிழ்பாடிப்
பொங்கு புணிரிக் கரை மருங்கு புவியுள் சிவலோகம் போலத்
திங்கள் முடியார் அமர்ந்த திரு ஒற்றியூரைச் சென்று அடைந்தார் 6.2.199

3354

அண்ணல் தொடர்ந்து ஆவணம் காட்டி ஆண்டநம்பி எழுந்து அருள
எண்ணில் பெருமை ஆதி புரி இறைவர் அடியார் எதிர் கொள்வார்
வண்ண வீதி வாயில் தொறும் வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறை பொன் குடம் தீபம் எடுத்துத் தொழ எழுங்கால் 6.2.200

3355

வர மங்கல நல்லியம் முழங்க வாச மாலை அணி அரங்கில்
புர மங்கையர்கள் நடம் ஆடப் பொழியும் வெள்ளப் பூ மாரி
அர மங்கையரும் அமரர்களும் வீச அன்பர் உடன் புகுந்தார்
பிரமன் தலையில் பலியுவந்த பிரானார் விரும்பும் தொண்டர் 6.2.201

3356

ஒற்றி ஊரின் உமையோடும் கூட நின்றார் உயர்தவத்தின்
பற்று மிக்க திருத் தொண்டர் பரந்த கடல் போல் வந்து ஈண்டிச்
சுற்றம் அணைந்து துதி செய்யத் தொழுது தம்பிரான் அன்பர்
கொற்ற மழவேறு உடையவர் தம் கோயில் வாயில் எய்தினார் 6.2.202

3357

வானை அளக்கும் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து புகுந்து வளர்
கூனல் இளம் வெண் பிறைச் சடையார் கோயில் வலம் கொண்டு எதிர் குறுகி
ஊனும் உயிரும் கரைந்து உருக உச்சி குவித்த கையின் உடன்
ஆன காதல் உடன் வீழ்ந்தார் ஆரா அன்பின் ஆரூரர் 6.2.203

3358

ஏட்டு வரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்து அறியும்
நாட்ட மலரும் திரு நுதலார் நறும் பொன் கமலச் சேவடியில்
கூட்டும் உணர்வு கொண்டு எழுந்து கோதில் இசை கூடப்
பாட்டும் பாடி பரவி எனும் பதிகம் எடுத்துப் பாடினார் 6.2.204

3359

பாடி அறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம் போந்து
நீடு விருப்பில் பெரும் காதல் நிறைந்த அன்பர் பலர் போற்றத்
தேடும் அயனும் திருமாலும் அறிதற்கு அரிய திருப்பாதம்
கூடும் காலங்களில் அணைந்து பரவிக் கும்பிட்டு இனிது இருந்தார் 6.2.205

3360

இந்த நிலமையார் இவர் இங்கு இருந்தார் முன்பே இவர்க்காக
அந்தண் கயிலை மலை நீங்கி அருளால் போந்த அநித்திதையார்
வந்து புவி மேல் அவதரித்து வளர்ந்து பின்பு வன் தொண்டர்
சந்த விரை சூழ் புயம் சேர்ந்த பரிசு தெரியச் சாற்றுவாம் 6.2.206

3361

நாலாம் குலத்தில் பெருகு நலம் உடையார் வாழும் ஞாயிற்றின்
மேலாங் கொள்கை வேளாண்மை மிக்க திரு ஞாயிறு கிழவர்
பாலாதரவு தரும் மகளர் ஆகிப் பார் மேல் அவதரித்தார்
ஆலாலஞ் சேர் கறை மிடற்றார் அருளால் முன்னை அநிந்திதையார் 6.2.207

3362

மலையான் மடந்தை மலர்ப் பாதம் மறவா அன்பால் வந்த நெறி
தலையாம் உணர்வு வந்து அணையத் தாமே அரிந்த சங்கிலியார்
அலையார் வேல் கண் சிறு மகளிர் ஆயத்தோடும் விளையாட்டு
நிலையாயின அப் பருவங்கள் தோறும் நிகழ நிரம்புவார் 6.2.208

3363

சீர் கொள் மரபில் வரும் செயலே அன்றித் தெய்வ நிகழ் தன்மை
பாரில் எவரும் அதிசயிக்கும் பண்பில் வளரும் பைந்தொடியார்
வாரும் அணிய அணியவாம் வளர் மென் முலைகள் இடை வருத்தச்
சாரும் பதத்தில் தந்தையார் தம் கண் மனைவியார்க்கு உரைப்பார் 6.2.209

3364

வடிவும் குணமும் நம்முடைய மகட்கு மண் உள்ளோர்க்கு இசையும்
படிவம் அன்றி மேல் பட்ட பரிசாம் பான்மை அறிகிலோம்
கடிசேர் மணமும் இனி நிகழும் காலம் என்னக் கற்புவளர்
கொடியே அனைய மனைவியார் ஏற்கும் ஆற்றாக் கொடும் என்றார் 6.2.210

3365

தாயாரோடு தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியார்
ஏயு மாற்றம் அன்றி எம் பெருமான் திரு அருளே
மேய ஒருவர்க்கு உரியது யான் வேறு என் விளையும் என வெருவுற்(று)
ஆய உணர்வு மயங்கி மிக அயர்ந்தே அவனி மேல் விழுந்தார் 6.2.211

3366

பாங்கு நின்ற தந்தையார் தாயார் பதைத்துப் பரிந்து எடுத்தே
ஏங்கும் உள்ளத்தினர் ஆகி இவளுக்கு என்னே உற்றது எனத்
தாங்கிச் சீத விரைப் பனி நீர் தெளித்து தை வந்தது நீங்க
வாங்கு சிலை நன்னுதலாரை வந்தது உனக்கு இங்கு என்? என்றார் 6.2.212

3367

என்று தம்மை ஈன்று எடுத்தார் வினவ மறை விட்டு இயம்புவார்
இன்று என்திறத்து நீர் மொழிந்த இது என் பரிசுக்கு இசையாது
வென்றி விடையார் அருள் செய்தார் ஒருவர்க்கு உரியேன் யான் இனிமேல்
சென்று திரு ஒற்றியூர் அணைந்து சிவனார் அருளில் செல்வன் என 6.2.213

3368

அந்த மாற்றம் கேட்டவர் தாம் அயர்வும் பயமும் அதிசயமும்
வந்த உள்ளத்தினர் ஆகி மற்ற மாற்றம் மறைத்து ஒழுகப்
பந்தம் நீடும் இவர் குலத்து நிகர் ஆம் ஒருவன் பரிசு அறியான்
சிந்தை விரும்பி மகள் பேச விடுத்தான் சிலரும் சென்று இசைத்தார் 6.2.214

3369

தாதையாரும் அது கேட்டுத் தன்மை விளம்பத் தகாமையினால்
ஏதம் எய்தாவகை மொழிந்து போக்க அவர் ஆங்கு எய்தா முன்
தீது அங்கு இழைத்தே இறந்தான் போல் செல்ல விடுத்தார் உடன் சென்றான்
மாதராரைப் பெற்றார் மற்று அதனைக் கேட்டு மனம் மருண்டார் 6.2.215

3370

தையலார் சங்கிலியார் தம் திறத்துப் பேசத் தகா வார்த்தை
உய்ய வேண்டும் நினைவு உடையார் உரையார் என்று அங்கு உலகு அறியச்
செய்த விதிபோல் இது நிகழச் சிறந்தார்க்கு உள்ள படி செப்பி
நையும் உள்ளத்துடன் அஞ்சி நங்கை செயலே உடன் படுவார் 6.2.216

3371

அணங்கே ஆகும் இவள் செய்கை
அறிந்தோர் பேச அஞ்சுவரால்
வணங்கும் ஈசர் திறம் அன்றி வார்த்தை
அறியாள் மற்று ஒன்றும்
குணங்கள் இவையாம் இனி இவள் தான்
குறித்த படியே ஒற்றி நகர்ப்

பணம் கொள் அரவச் சடையார் சடையார்தம்
பால் கொண்டு அணைவோம் எனப் பகர்வார் 6.2.217

3372

பண்ணார் மொழிச் சங்கிலியாரை நோக்கிப் பயந்தாரொடும் கிளைஞர்
தெண்ணீர் முடியார் திருவொற்றியூரில் சேர்ந்து செல்கதியும்
கண்ணார் நுதலார் திரு அருளால் ஆகிக் கன்னி மாடத்துத்
தண்ணார் தடம் சூழ் அந்நகரில் தங்கிப் புரிவீர் தவம் என்று 6.2.218

3373

பெற்ற தாதை சுற்றத்தார் பிறை சேர் முடியார் விதியாலே
மற்றுச் செயல் ஒன்று அறியாது மங்கையார் சங்கிலியார் தாம்
சொற்ற வண்ணம் செயத் துணிந்து துதைந்த செல்வத்தொடும் புரங்கள்
செற்ற சிலையார் திருவொற்றியூரில் கொண்டு சென்று அணைந்தார் 6.2.219

3374

சென்னி வளர் வெண் பிறை அணிந்த சிவனார் கோயிலுள் புகுந்து
துன்னும் சுற்றத் தொடும் பணிந்து தொல்லைப் பதியோர் இசைவினால்
கன்னி மாடம் மருங்கு அமைத்துக் கடி சேர் முறைமை காப்பு இயற்றி
மன்னும் செல்வம் தக வகுத்துத் தந்தையார் வந்து அடி வணங்கி 6.2.220

3375

யாங்கள் உமக்குப் பணி செய்ய ஈசற்கு ஏற்ற பணி விரும்பி
ஓங்கு கன்னி மாடத்தில் உறைகின்றீர் என்று உரைக்கின்றார்
தாங்கற்கு அரிய கண்கள் நீர்த் தாரை ஒழுகத் தரியாதே
ஏங்கு சுற்றத் தொடும் இறைஞ்சிப் போனார் எயில் சூழ் தம்பதியில் 6.2.221

3376

காதல் புரிந்து தவம் புரியும் கன்னியார் அங்கு அமர்கின்றார்
பூத நாதர் கோயிலினில் காலம் தோறும் புக்கு இறைஞ்சி
நீதி முறைமை வழுவாது தமக்கு நேர்ந்த பணி செய்யச்
சீத மலர்ப் பூ மண்டபத்து திரை சூழ் ஒரு பால் சென்று இருந்து 6.2.222

3377

பண்டு கயிலைத் திருமலையில் செய்யும் பணியின் பான்மை மனம்
கொண்ட உணர்வு தலை நிற்பக் குலவு மென் கொடி அனையார்
வண்டுமருவும் திரு மலர் மெல் மாலை காலங்களுக்கு ஏற்ப
அண்டர் பெருமான் முடிச் சாத்த அமைத்து வணங்கி அமரும் நாள் 6.2.223

3378

அந்தி வண்ணத்து ஒருவர் திரு அருளால் வந்த ஆரூரர்
கந்த மாலைச் சங்கிலியார் தம்மைக் காதல் மணம் புணர
வந்த பருவம் ஆதலால் வகுத்த தன்மை வழுவாத
முந்தை விதியால் வந்து ஒருநாள் முதல்வர் கோயிலுள் புகுந்தார் 6.2.224

3379

அண்டர் பெருமான் அந்தணராய் ஆண்ட நம்பி அங்கணரைப்
பண்டை முறைமை யால் பணிந்து பாடிப் பரவிப் புறம் போந்து
தொண்டு செய்வார் திருத் தொழில்கள் கண்டு தொழுது செல்கின்றார்
புண்டரீகத் தடம் நிகழ் பூந்திருமண்டபத் தின் உள் புகுந்தார் 6.2.225

3380

அன்பு நாரா அஞ்சு எழுத்து நெஞ்சு தொடுக்க அலர் தொடுத்தே
என்பு உள் உருக்கும் அடியாரைத் தொழுது நீங்கி வேறு இடத்து
முன்பு போல திரை நீக்கி முதல்வர் சாத்தும் பணி கொடுத்து
மின் போல் மறையும் சங்கிலியார் தம்மை விதியால் கண் உற்றார் 6.2.226

3381

கோவா முத்தும் சுரும்பு ஏறாக் கொழு மென் முகையும் அனையாரைச்
சேவார் கொடியார் திருத் தொண்டர் கண்டபோது சிந்தை நிறை
காவாதவர் பால் போய் விழத் தம் பால் காமனார் துரந்த
பூ வாளிகள் வந்துற வீழத் தரியார் புறமே போந்து உரைப்பார் 6.2.227

3382

இன்ன பரிசு என்று அறி அரிதால் ஈங்கு ஓர் மருங்கு திரைக்கு உள்ளால்
பொன்னும் மணியும் மலர்ந்த ஒளி அமுதில் அளாவிப்புதியமதி
தன்னுள் நீர்மையால் குழைத்துச் சமைத்த மின்னுக் கொடிபோல்வாள்
என்னை உள்ளம் திரிவித்தாள் யார் கொல் என்று அங்கு இயம்புதலும் 6.2.228

3383

அங்கு நின்றார் விளம்புவார் அவர்தாம் நங்கை சங்கிலியார்
பெருகும் தவத்தால் ஈசர் பணி பேணும் கன்னியார் என்ன
இருவரால் இப்பிறவியை எம் பெருமான் அருளால் எய்துவித்தார்
மருவும் பரவை ஒருத்தி இவள் மற்றையவளாம் என மருண்டார் 6.2.229

3384

மின்னார் சடையார் தமக்காளாம் விதியால் வாழும் எனை வருத்தித்
தன்னார் அருளால் வரும் பேறு தவத்தால் அணையா வகை தடுத்தே
என்னாருயிரும் எழில் மலரும் கூடப் பிணைக்கும் இவள் தன்னைப்
பொன்னார் இதழி முடியார் முடியார்பால் பெறுவேன் என்று போய்ப் புக்கார்
6.2.230

3385

மலர்மேல் அயனும் நெடுமாலும் வானும் நிலனும் கிளைத்து அறியா
நிலவு மலரும் திரு முடியும் நீடும் கழலும் உடையாரை
உலகம் எலாம் தாம் உடையாராயும் ஓற்றியூர் அமர்ந்த
இலகு சோதி பரம் பொருளை இறைஞ்சி முன் நின்று ஏத்துவார் 6.2.231

3386

மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின் கண்
கங்கை தன்னைக் கரந்து அருளும் காதல் உடையீர் அடியேனுக்(கு)
இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்து என் உள்ளத்து தொடை அவிழ்ந்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்து என் வருத்தம் தீரும் என 6.2.232

3387

அண்ணாலார் முன் பலவும் அவர் அறிய உணர்த்திப்புறத்து அணைந்தே
எண்ணம் எல்லாம் உமக்கு அடிமையாமாறு எண்ணும் என் நெஞ்சில்
திண்ணம் எல்லாம் உடைவித்தாள் செய்வது ஒன்றும் அறியேன்யான்
தண்ணிலா மின் ஒளிர் பவளச் சடையீர் அருளும் எனத் தளர்வார் 6.2.233

3388

மதிவாண் முடியார் மகிழ் கோயில் புறத்தோர் மருங்கு வந்து இருப்பக்
கதிரோன் மேலைக் கடல் காண மாலைக் கடலைக் கண்டு அயர்வார்
முதிரா முலையார் தம்மை மணம் புணர்க்க வேண்டி முளரிவளை
நிதியான் நண்பர் தமக்கு அருளும் நண்பால் நினைந்து நினைந்து அழிய 6.2.234

3389

உம்பர் உய்ய உலகு உய்ய ஓல வேலை விடம் உண்ட
தம்பிரான் ஆனார் வன் தொண்டர் தம்பால் எய்திச் சங்கிலியை
இம்பர் உலகில் யாவருக்கும் எய்த ஒண்ணா இரும் தவத்துக்
கொம்பை உனக்குத் தருகின்றோம் கொண்டகவலை ஒழிக என்ன 6.2.235

3390

அன்று வெண்ணெய் நல்லூரில் வலிய ஆண்டு கொண்டு அருளி
ஒன்றும் அறியா நாயேனுக்குக் உறுதி அளித்தீர் உயிர் காக்க
இன்றும் இவளை மணம் புணர்க்க என்று நின்றீர் எனப் போற்றி
மன்றல் மலர்ச் சேவடி இணைக்கீழ் வணங்கி மகிழ்ந்தார் வன் தொண்டர் 6.2.236

3391

ஆண்டு கொண்ட அந்தணனார் அவருக்கு அருளிக் கருணையினால்
நீண்ட கங்குல் யாமத்து நீங்கி வானில் நிறை மதியம்
தீண்டு கன்னி மாடத்துச் சென்று திகழ் சங்கிலியாராம்
தூண்டு சோதி விளக்கு அனையார் தம்பால் கனவில் தோன்றினார் 6.2.237

3392

தோன்றும் பொழுதில் சங்கிலியார் தொழுது விழுந்து பரவசமாய்
ஆற்ற அன்பு பொங்கி எழுந்(து) அடியேன் உய்ய எழுந்து அருளும்
பேற்றுக்கு என் யான் செய்வது எனப் பெரிய கருணை பொழிந்து அனைய
நீற்றுக் கோல வேதியரும் நேர் நின்று அருளிச் செய்கின்றார் 6.2.238

3393

சாரும் தவத்துச் சங்கிலி! கேள்; சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம் பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான் ஆள உரியான் உன்னை இரந்தான்
வார் கொள் முலையாய்! நீ அவனை மனத்தால் அணைவாய் மகிழ்ந்து என்றார்
6.2.239

3394

ஆதி தேவர் முன் நின்று அங்கு அருளிச் செய்த பொழுதின் கண்
மாதரார் சங்கிலியாரும் மாலும் அயனும் அறிவு அரிய
சீத மலர் தாமரை அடிக்கீழ் சேர்ந்து வீழ்ந்து செந்நின்று
வேத முதல்வர் முன் நடுக்கம் எய்தித் தொழுது விளம்புவார் 6.2.240

3395

எம் பிரானே! நீர் அருளிச் செய்தார்க்கு உரியேன் யான் இமையோர்
தம் பிரானே அருள் தலைமேல் கொண்டேன் தக்க விதி மணத்தால்
நம்பி ஆரூரருக்கு என்னை நல்கி அருளும் பொழுது இமயக்
கொம்பின் ஆகங்கொண்டீர்க்குக் கூறும் திறம் ஒன்று உளது என்பார் 6.2.241

3396

பின்னும் பின்னல் முடியார் முன் பெருக நாணித் தொழுது உரைப்பார்
மன்னும் திருவாரூரின் கண் அவர் தாம் மகிழ்து உறைவது
என்னும் தன்மை அரிந்து அருளும் எம் பிராட்டி திரு முலை தோய்
மின்னும் புரிநூல் அணி மார் பீர் என்றார் குன்றா விளக்கு அனையார் 6.2.242

3397

மற்றவர் தம் உரைகொண்டு வன்தொண்டர் நிலைமையினை
ஒற்றி நகர் அமர்ந்த பிரான் உணர்ந்து அருளி உரைசெய்வார்
பொன் தொடியாய்! உனை இகந்து போகாமைக்கு ஒரு சபதம்
அற்றமுறு நிலைமையினால் அவன் செய்வான் என அருளி 6.2.243

3398

வேய் அனைய தோளியார் பால் நின்று மீண்டு அருளித்
தூய மனம் மகிழ்து இருந்த தோழனார் பால் அணைந்து
நீ அவளை மணம் புணரும் நிலை உரைத்தோம் அதற்கு அவள் பால்
ஆயதொரு குறை உன்னால் அமைப்பதுள என்று அருள 6.2.244

3399

வன் தொண்டர் மனம் களித்து வணங்கி அடியேன் செய்ய
நின்ற குறையாது என்ன நீ அவளை மணம் புணர்தற்(கு)
ஒன்றி உடனே நிகழ்வது ஒரு சபதம் அவள் முன்பு
சென்று கிடைத்து இவ்விரவே செய்த என அருள் செய்தார் 6.2.245

3400

என் செய்தால் இது முடியும் அது செய்வன் யான் அதற்கு
மின் செய்த புரி சடையீர் அருள் பெறுதல் வேண்டும் என
முன் செய்த முறுவலுடன் முதல்வர் அவர் முகம் நோக்கி
உன் செய்கை தனக்கு இனி என் வேண்டுவது என்று உரைத்து அருள 6.2.246

3401

வம்பு அணி மென் முலை அவர்க்கு மனம் கொடுத்த வன் தொண்டர்
நம்பர் இவர் பிற பதியும் நயந்த கோலம் சென்று
கும்பிடவே கடவேனுக்கு இது விலக்காம் எனக் குறிப்பால்
தம் பெருமான் திருமுன்பு தாம் வேண்டும் குறை இரப்பார் 6.2.247

3402

சங்கரர் தாள் பணிந்து இருந்து தமிழ் வேந்தர் மொழிகின்றார்
மங்கை அவள் தனைப் பிரியா வகை சபதம் செய்வதனுக்(கு)
அங்கு அவளோடு யான் வந்தால் அப்பொழுது கோயில்விடத்
தங்கும் இடம் திரு மகிழ்க் கீழ்க் கொள வேண்டும் எனத்தாழ்ந்தார் 6.2.248

3403

தம்பிரான் தோழர் அவர் தாம் வேண்டிக் கொண்டு அருள
உமபர் நாயகரும் அதற்கு உடன்பாடு செய்வாராய்
நம்பி! நீ சொன்னபடி நாம் செய்தும் என்று அருள
எம்பிரானே! அரியது இனி எனக்கு என்? என ஏத்தி 6.2.249

3404

அஞ்சலி சென்னியில் மன்ன அருள் பெற்றுப் புறம் போதச்
செஞ்சடையார் அவர் மாட்டுத் திரு விளையாட்டினை மகிழ்ந்தோ
வஞ்சி இடைச் சங்கிலியார் வழி அடிமைப் பெருமையோ?
துஞ்சிருள் மீளவும் அணைந்தார் அவர்க்கு உறுதி சொல்லுவார் 6.2.250

3405

சங்கிலியார் தம் மருங்கு முன்பு போல் சார்ந்து அருளி
நங்கை உனக்கு ஆரூரன் நயந்து சூள் உறக் கடவன்
அங்கு நமக்கு எதிர் செய்யும் அதற்கு நீ இசையாதே
கொங்கலர் பூ மகிழின் கீழ்க் கொள்க எனக் குறித்து அருள 6.2.251

3406

மற்றவரும் கை குவித்து மால் அயனுக்கு அறிய அரியீர்
அற்றம் எனக்கு அருள் புரிந்த அதனில் அடியேன் ஆகப்
பெற்றது யான் எனக் கண்கள் பெரும் தாரை பொழிந்து இழிய
வெற்றி மழ விடையார் தம் சேவடிக் கீழ் வீழ்ந்து எழுந்தார் 6.2.252

3407

தையலார் தமக்கு அருளிச் சடா மகுடர் எழுந்து அருள
எய்திய போது அதிசயத்தால் உணர்ந்து எழுந்த அவ்விரவின் கண்
செய்ய சடையார் அருளின் திறம் நினைந்தே கண் துயிலார்
ஐயம் உடன் அருகு துயில் சேடியாரை அணைந்து எழுப்பி 6.2.253

3408

நீங்கு துயில் பாங்கியர்க்கு நீங்கல் எழுத்து அறியும் அவர்
தாம் கனவில் எழுந்து அருளித் தமக்கு அருளிச் செய்தது எலாம்
பாங்கு அறிய மொழிய அவர் பயத்தின் உடன் அதிசயமும்
தாங்கு மகிழ்ச்சியும் எய்தச் சங்கிலியார் தமைப் பணிந்தார் 6.2.254

3409

சேயிழையார் திருப் பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும்
தூய பணிப் பொழுது ஆகத் தொழில் புரிவார் உடன் போதக்
கோயிலின் முன் காலம் அது ஆகவே குரித்து அணைந்தார்
ஆய சபதம் செய்ய வரவு பார்த்து ஆரூரர் 6.2.255

3410

நின்றவர் அங்கு எதிர் வந்த நேர் இழையார் தம் மருங்கு
சென்று அணைந்து தம் பெருமான் திரு அருளின் திறம் கூற
மின் தயங்கு நுண் இடையார் விதி உடன்பட்டு எதிர் விளம்பார்
ஒன்றிய நாண் ஒடு மடவாருடன் ஒதுங்கி உட்புகுந்தார் 6.2.256

3411

அங்கு அவர் தம் பின்சென்ற ஆரூரர் ஆயிழையீர்!
இங்கு நான் பிரியாமை உமக்கு இசையும் படி இயம்பத்
திங்கள் முடியார் திருமுன் போதுவீர் எனச் செப்பச்
சங்கிலியார் கனவு உரைப்பக் கேட்ட தாதியர் மொழிவார் 6.2.257

3412

எம் பெருமான் இதற்காக எழுந்து அருளி இமயவர்கள்
தம் பெருமான் திருமுன்பு சாற்றுவது தகாது என்ன
நம் பெருமான் வன் தொண்டர் நாதர் செயல் அறியாதே
கொம்பு அனையீர் யான் செய்வது எங்கு என்று கூறுதலும் 6.2.258

3413

மாதர் அவர் மகிழ்க் கீழே அமையும் என மனமருள்வார்
ஈதலர் ஆகிலும் ஆகும் இவர் சொன்ன படி மறுக்கில்
ஆதலினால் உடன் படவே அமையும் எனத் துணிந்து ஆகில்
போதுவீர் என மகிழ்க் கீழ் அவர் போதப் போய் அணைந்தார் 6.2.259

3414

தாவாத பெருந் தவத்துச் சங்கிலியாரும் காண
மூவாத திரு மகிழை முக்காலும் வலம் வந்து
மேவாது இங்கு யான் அகலேன் என நின்று விளம்பினார்
பூவார் தண் புனல் பொய்கை முனைப்பாடிப் புரவலனார் 6.2.260

3415

மேவிய சீர் ஆரூரர் மெய்ச் சபதம் வினை முடிப்பக்
காவியினோர் கண்ணாரும் கண்டு மிக மனம் கலங்கிப்
பாவியேன் இது கண்டேன் தம் பிரான் பணியால் என்று
ஆவி சோர்ந்து அழிவார் அங்கு ஒரு மருங்கு மறைந்து அயர்ந்தார் 6.2.261

3416

திருநாவலூராளி தம் உடைய செயல் முற்றிப்
பொரு நாகத்து உரி புனைந்தார் கோயிலின் உள்புகுந்து இறைஞ்சி
அருள் நாளும் தர இருந்தீர் செய்தவாறு அழகு இது எனப்
பெரு நாமம் எடுத்து ஏத்திப் பெரு மகிழ்ச்சி உடன் போந்தார் 6.2.262

3417

வார் புனையும் வன முலையார் வன் தொண்டர் போனதன் பின்
தார் புனையும் மண்டபத்துத் தம் உடைய பணி செய்து
கார் புனையும் மணி கண்டர் செயல் கருத்தில் கொண்டு இறைஞ்சி
ஏர் புனையும் கன்னி மாடம் புகுந்தார் இருள் புலர 6.2.263

3418

அன்று இரவே ஆதி புரி ஒற்றி கொண்டார் ஆட்கொண்ட
பொன் திகழ் பூண் வன் தொண்டர் புரிந்த வினை முடித்து அருள
நின்ற புகழ்த் திரு ஒற்றியூர் நிலவு தொண்டர்க்கு
மன்றல் வினை செய்வதற்கு மனம் கொள்ள உணர்த்துவார் 6.2.264

3419

நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலி தன்னை
இம்பர் ஞாலத்து இடை நம் ஏவலினால் மணவினை செய்து
உம்பர் வாழ் உலகு அறிய அளிப்பீர் என்று உணர்த்துதலும்
தம்பிரான் திருத்தொண்டர் அருள் தலைமேல் கொண்டு எழுவார் 6.2.265

3420

மண்ணிறைந்த பெரும் செல்வத்து திரு ஒற்றியூர் மன்னும்
எண்ணிறைந்த திருத் தொண்டர் எழில் பதியோர் உடன் ஈண்டி
உண்ணிறைந்த மகிழ்ச்சியுடன் உம்பர் பூ மழை பொழியக்
கண்ணிறைந்த பெரும் சிறப்பில் கலியாணம் செய்து அளித்தார் 6.2.266

3421

பண்டு நிகழ் பான்மையினால் பசுபதி தன் அருளாலே
வண்டமர் பூங்குழலாரை மணம் புணர்ந்த வன்தொண்டர்
புண்டரிகத்து அவள் வனப்பைப் புறம் கண்ட தூ நலத்தைக்
கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அமர்ந்து இருந்தார் காதலினால் 6.2.267

3422

யாழின் மொழி எழில் முறுவல் இரு குழை மேல் கடை பிறழும்
மாழை விழி வன முலையார் மணி அல்குல் துறை படிந்து
வீழும் அவர்க்கு இடைதோன்றி மிகும் புலவி புணர்ச்சிக் கண்
ஊழியாம் ஒரு கணம் தான் அவ் வூழி ஒரு கணம் ஆம் 6.2.268

3423

இந் நிலையில் பேர் இன்பம் இனிது அமர்வார் இறை உறையும்
மன்னு புகழ் ஒற்றியூர் அதனில் மகிழ் சிறப்பினால்
சென்னி மதி புனைவார் தம் திருப் பாதம் தொழுது இருந்தார்
முன்னிய காலங்கள் பல முறைமையினால் வந்து அகல 6.2.269

3424

பொங்கு தமிழ்ப் பொதிய மலைப் பிறந்து பூஞ்சந்தனத்தின்
கொங்கு அணைந்து குளிர் சாரல் இடை வளர்ந்த கொழும் தென்றல்
அங்கு அணைய திருவாரூர் அணி வீதி அழகர் அவர்
மங்கல நாள் வசந்தம் எதிர் கொண்டு அருளும் வகை நினைந்தார் 6.2.270

3425

வெண் மதியின் கொழுந்து அணிந்த வீதி விடங்கப் பெருமான்
ஒண்ணுதலார் புடை பரந்த ஒலக்கம் அதன் இடையே
பண்ணமரும் மொழிப் பரவையார் பாடல் ஆடல் தனைக்
கண்ணுற முன் கண்டு கேட்டார் போலக் கருதினார் 6.2.271

3426

பூங்கோயில் அமர்ந்தாரை புற்றிடங்கொண்டு இருந்தாரை
நீங்காத காலினால் நினைந்தாரை நினைவாரைப்
பாங்காகத் தாம் முன்பு பணிய வரும் பயன் உணர்வார்
ஈங்கு நான் மறந்தேன் என்று ஏசறவால் மிக அழிவார் 6.2.272

3427

மின்னொளிர் செஞ்சடையானை வேத முதல் ஆனானை
மன்னு புகழ்த் திருவாரூர் மகிழ்தானை மிக நினைந்து
பன்னிய சொல் பத்திமையும் அடிமையையும் கைவிடுவான்
என்னும் இசைத் திருப்பதிகம் எடுத்து இயம்பி இரங்கினார் 6.2.273

3428

பின் ஒரு நாள் திருவாரூர் தனைப் பெருக நினைந்து அருளி
உன்ன இனியார் கோயில் புகுந்து இறைஞ்சி ஒற்றி நகர்
தன்னை அகலப் புக்கார் தாம் செய்த சபதத்தால்
முன் அடிகள் தோன்றாது கண் மறைய மூர்ச்சித்தார் 6.2.274

3429

செய்வதனை அறியாது திகைத்து அருளி நெடிது உயிர்ப்பார்
மை விரவு கண்ணார் பால் சூல் உறவு மறுத்த அதனால்
இவ்வினை வந்து எய்தியது ஆம் என என நினைந்து எம் பெருமானை
எய்திய இத் துயர் நீங்கப் பாடுவேன் என நினைந்து 6.2.275

3430

அழுக்கு மெய் கொடு என்று எடுத்த சொல்
பதிகம் ஆதி நீள் புரி அண்ணலை ஓதி
வழுத்து நெஞ்சொடு தாழ்ந்து நின்று உரைப்பார்
மாதோர் பாகனார் மலர்பதம் உன்னி
இழுக்கு நீக்கிட வேண்டும் என்று இரந்தே
எய்து வெம் துயர்க் கையற வினுக்கும்
பழிக்கும் வெள்கி நல் இசை கொடு பரவி
பணிந்து சாலவும் பல பல நனைவார் 6.2.276

3431

அங்கு நாதர் செய் அருளது ஆக
அங்கை கூப்பி ஆரூர் தொழ நினைந்தே
பொங்கு காதல் மீளா நிலைமையினால்
போதுவார் வழி காட்ட முன் போந்து
திங்கள் வேணியார் திரு முல்லைவாயில்
சென்று இறைஞ்சி நீடிய திருப்பதிகம்
சங்கிலிக்காக என் கணை மறைத்தீர்
என்று சாற்றிய தன்மையில் பாடி 6.2.277

3432

தொண்டைமானுக்கு அன்று அருள் கொடுத்து
அருளும் தொல்லை வண்புகழ் முல்லை நாயகரைக்
கொண்ட வெந்துயர் களை எனப் பரவிக் குறித்த
காதலின் நெறிக் கொள வருவார்
வண்டுலா மலர்ச் சோலைகள் சூழ்ந்து மாட
மாளிகை நீடு வெண் பாக்கம்
கண்ட தொண்டர்கள் எதிர் கொள வணங்கிக்
காயும் நாகத்தார் கோயிலை அடைந்தார் 6.2.278

3433

அணைந்த தொண்டர்கள் உடன்
வலமாக அங்கண் நாயகர் கோயில் முன் எய்திக்
குணங்கள் ஏந்தியே பரவி அஞ்சலியால் குவித்த
கைத்தலை மேற்கொண்டு நின்று
வணங்கி நீர் மகிழ் கோயில் உளீரே என்ற வன்
தொண்டர்க்கு ஊன்று கோல் அருளி

இணங்கிலா மொழியால் உளோம் போகீர்
என்று இயம்பினார் ஏதிலார் போல 6.2.279

3434

பிழை உள்ளன பொறுத்திடுவர் என்று எடுத்துப் பெண் பாகம்
விழைவடிவில் பெருமானை வெண்பாக்கம் மகிழ்ந்தானை
இழை என மாசுணம் அணிந்த இறையானைப் பாடினார்
மழை தவழும் நெடும் புரிசை நாவலூர் மன்னவனார் 6.2.280

3435

முன் நின்று முறைப்பாடு போல் மொழிந்த மொழிமாலைப்
பன்னும் இசைத் திருப் பதிகம் பாடியபின் பற்றாய
என்னுடையபிரான் அருள் இங்கு இத்தனை கொலாம் என்று
மன்னு பெரும் தொண்டர் உடன் வணங்கியே வழிக் கொள்வார் 6.2.281

3436

அங்கணர் தம் பதி அதனை அகன்று போய் அன்பர் உடன்
பங்கயப் பூந்தடம் பணை சூழ் பழையனூர் உழை எய்தித்
தங்குவார் அம்மைத் திரு தலையாலே வலம் கொள்ளும்
திங்கள் முடியார் ஆடும் திருவாலங் காட்டின் அயல் 6.2.282

3437

முன் நின்று தொழுது ஏத்தி முத்தா என்று எடுத்து அருளிப்
பன்னும் இசைத் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து ஏத்துவார்
அந் நின்று வணங்கிப் போய்த் திருவூறல் அமர்ந்து இறைஞ்சிக்
கன்னி மதில் மணி மாடக் காஞ்சி மா நகர் அணைந்தார் 6.2.283

3438

தேன் நிலவு பொழில் கச்சிக் காமக் கோட்டத்தில்
ஊனில் வளர் உயிர்க்கு எல்லாம் ஒழியாத கருணையினால்
ஆன திரு அறம் புரக்கும் அம்மை திருக் கோயிலின் முன்
வானில் வளர் திருவாயில் வணங்கினார் வன் தொண்டர் 6.2.284

3439

பதொழுது விழுந்து எழுந்து அருளால் துதித்துப் போய் தொல் உலகம்
முழுதும் அளித்து அழிக்கும் முதல்வர் திரு ஏகம்பம்
பழுதில் அடியார் முன்பு புகப் புக்குப் பணிகின்றார்
இழுதையேன் திருமுன்பே என் மொழிவேன் என்று இறைஞ்சி 6.2.285

3440

ப விண் ஆள்வார் அமுது உண்ண மிக்க பெரும் விடம் உண்ட
கண்ணாளா கச்சி ஏகம்பனே கடையானேன்
எண்ணாத பிழை பொறுத்து இங்கு யான் காண எழில் பவள
வண்ணா கண் அளித்து அருளாய் என வீழ்ந்து வணங்கினார் 6.2.286

3441

பபங்கயச் செங்கைத் தளிரால் பனிமலர் கொண்டு அருச்சித்துச்
செங்கயற் கண் மலைவல்லி பணிந்த சேவடி நினைந்து
பொங்கிய அன்பொடு பரவிப் போற்றிய ஆரூரருக்கு
மங்கைத் தழுவக் குழைந்தார் மறைந்த இடக் கண் கொடுத்தார் 6.2.287

3442

பஞாலந்தான் இடந்தவனும் நளிர் விசும்பு கடந்தவனும்
மூலந்தான் அறிய அரியார் கண் அளித்து முலைச்சுவட்டுக்
கோலந்தான் காட்டுதலும் குறுகி விழுந்து எழுந்து களித்து
ஆலந்தான் உகந்தவன் என்று எடுத்து ஆடிப் பாடினார் 6.2.288

3443

பபாடி மிகப் பரவசமாய்ப் பணிவார்க்குப் பாவை உடன்
நீடிய கோலம் காட்ட நிறைந்த விருப்புடன் இறைஞ்சிச்
சூடிய அஞ்சலியினராய்த் தொழுது புறம் போந்து அன்பு
கூடிய மெய்த்தொண்டர் உடன் கும்பிட்டு இனிது அமர்வார் 6.2.289

3444

பமா மலையாள் முலைச்சுவடும் வளைத்தழும்பும் அணிந்த மதிப்
பூ மலிவார் சடையாரைப் போற்றி அருளது ஆகத்
தே மலர்வார் பொழில் காஞ்சித் திருநகரம் கடந்து அகல்வார்
பாமலர் மாலைப் பதிகம் திருவாரூர் மேல் பரவி 6.2.290

3445

ப அந்தியும் நண் பகலும் என எடுத்து ஆர்வத்துடன் நசைவால்
எந்தை பிரான் திருவாரூர் என்று கொல் எய்துவது என்று
சந்த இசை பாடிப் போய்த் தாங்க அரிய ஆதரவு
வந்து அணைய அன்பர் உடன் மகிழ்ந்து வழி கொள்கின்றார் 6.2.291

3446

பமன்னு திருப் பதிகள் தொறும் வன்னியொடு கூவிளமும்
சென்னி மிசை வைத்து உவந்தார் கோயிலின் முன் சென்று இறைஞ்சிப்
பன்னு தமிழ்த் தொடை சாத்திப் பரவியே போந்து அணைந்தார்
அன்னமலி வயல் தடங்கள் சூழ்ந்த திரு ஆமாத்தூர் 6.2.292

3447

பஅங்கணரை ஆமாத்தூர் அழகர் தமை அடி வணங்கித்
தங்கும் இசைத் திருப் பதிகம் பாடிப் போய்த் தாரணிக்கு
மங்கலமாம் பெரும் தொண்டை வள நாடு கடந்து அணைந்தார்
செங்கண் வளவன் பிறந்த சீர் நாடு நீர் நாடு 6.2.293

3448

பஅந் நாட்டின் மருங்கு திரு அரத் துறையைச் சென்று எய்தி
மின்னாரும் படை மழுவார் விரை மலர்த்தாள் பணிந்து எழுந்து
சொன்மாலை மலர்க் கல் வாய் அகில் என்னும் தொடை சாத்தி
மன்னார்வத்து திருத்தொண்டர் உடன் மகிழ்ந்து வைகினார் 6.2.294

3449

பரமர் திரு அரத் துறையைப் பணிந்து போய்ப் பலபதிகள்
விரவி மழ விடை உயர்த்தார் விரைமலர்த்தாள் தொழுது ஏத்தி
உரவு நீர்த் தடம் பொன்னி அடைந்து அன்பருடன் ஆடி
அரவு அணிந்தார் அமர்ந்த திருவா வடு தண் துறை அணைந்தார் 6.2.295

3450

அங்கணைவார் தமை அடியார் எதிர் கொள்ளப் புக்கு அருளிப்
பொங்கு திருக் கோயிலினைப் புடைவலம் கொண்டுள்ளணைந்து
கங்கை வாழ் சடையாய் ஓர் கண்ணிலேன் எனக் கவல்வார்
இங்கு எனக்கு ஆர் உறவு என்னும் திருப்பதிகம் எடுத்து இசைத்தார் 6.2.296

3451

திருப்பதிகம் கொடு பரவிப் பணிந்து திரு அருளால் போய்
விருப்பினொடும் திருத்துருத்தி தனை மேவி விமலர் கழல்
அருத்தியினால் புக்கு இறைஞ்சி அடியேன் மேல் உற்ற பிணி
வருத்தம் எனை ஒழித்து அருளவேண்டும் என வணங்குவார் 6.2.297

3452

பரவியே பணிந்தவர்க்குப் பரமர் திரு அருள் புரிவார்
விரவிய இப் பிணி அடையத் தவிப்பதற்கு வேறு ஆக
வரமலர் வண்டறை தீர்த்த வட குளித்துக் குளி என்னக்
கரவில் திருத்தொண்டர் தாம் கை தொழுது புறப்பட்டார் 6.2.298

3453

மிக்க புனல் தீர்த்தத்தின் முன் அணைந்து வேதம் எலாம்
தொக்க வடிவாய் இருந்த துருத்தியார் தமைத் தொழுது
புக்கு அதனில் மூழ்குதலும் புதிய பிணி அது நீங்கி
அக்கணமே மணி ஒளிசேர் திருமேனி ஆயினார் 6.2.299

3454

கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறி உடைபுனைந்து
மண்டு பெரும் கதலினால் கோயிலினை வந்து அடைந்து
தொண்டர் எதிர் மின்னு மா மேகம் எனும் சொல் பதிகம்
எண்திசையும் அறிந்துய்ய ஏழிசையால் எடுத்து இசைத்தார் 6.2.300

3455

பண்ணிறைந்த தமிழ் பாடிப் பரமர் திரு அருள் மறவாது
எண்ணிறைந்த தொண்டர் உடன் பணிந்து அங்கண் உறைந்தேகி
உண்ணிறைந்த பதி பிறவும் உடையவர் தாள் வணங்கிப்போய்
கண்ணிறைந்த திருவாரூர் முன்தோன்றக் காண்கின்றார் 6.2.301

3455

பண்ணிறைந்த தமிழ் பாடிப் பரமர் திரு அருள் மறவாது
எண்ணிறைந்த தொண்டர் உடன் பணிந்து அங்கண் உறைந்தேகி
உண்ணிறைந்த பதி பிறவும் உடையவர் தாள் வணங்கிப்போய்
கண்ணிறைந்த திருவாரூர் முன்தோன்றக் காண்கின்றார் 6.2.301

3456

அன்று திரு நோக்கு ஒன்றால் ஆரக்கண்டு இன்பு உறார்
நின்று நிலமிசை வீழ்ந்து நெடிது உயிர்த்து நேர் இறைஞ்சி
வன் தொண்டர் திருவா ரூர் மயங்கு மாலையில் புகுந்து
துன்று சடைத் தூவாயர் தமை முன்னம் தொழ அணைந்தார் 6.2.302

3457

பொங்கு திருத்தொண்டருடன் உள்ளணைந்து புக்கு இறைஞ்சி
துங்க இசைத் திருப்பதிகம் தூவாயா என்று எடுத்தே
இங்கு எமது துயர் களைந்து கண் காணக் காட்டாய் என்று
அம் கணர் தம் முன் நின்று பாடி அருந்தமிழ் புணைந்தார் 6.2.303

3458

ஆறணியுஞ் சடையாரைத் தொழுது புறம் போந்து அங்கண்
வேறு இருந்து திருத்தொண்டர் விரவுவார் உடன் கூடி
ஏறுயர்த்தார் திருமூலட்டாத்து உள் இடை தெரிந்து
மாறில் திரு அத்தயா மத்து இறைஞ்ச வந்து அணைந்தார் 6.2.304

3459

ஆதி திரு அன்பர் எதிர் அணைய அவர் முகம் நோக்கிக்
கோதில் இசையால் குருகுபாய எனக் கோத்து எடுத்தே
ஏதிலார் போல் வினவி ஏசறவால் திருப்பதிகம்
காதல் புரி கைக்கிளையால் பாடியே கலந்து அணைவார் 6.2.305

3460

சீர் பெருகும் திருத் தேவாசிரியன் முன் சென்று இறைஞ்சிக்
கார் விரவு கோபுரத்தைக் கை தொழுதே உள் புகுந்து
தார் பெருகு பூங்கோயில் தனை வணங்கி சார்ந்து அணைவார்
ஆர்வம் மிகு பெரும் காதலால் அவனி மேல் வீழ்ந்தார் 6.2.306

3461

வீழ்ந்து எழுந்து கை தொழுது முன் நின்று விம்மியே
வாழ்ந்த மலர்க் கண் ஒன்றால் ஆராமல் மனம் அழிவார்
ஆழ்ந்த துயர்க் கடல் இடை நின்று அடியேனை எடுத்து அருளித்
தாழ்ந்த கருத்தினை நிரப்பிக் கண்தாரும் எனத் தாழ்ந்தார் 6.2.307

3462

திரு நாவலூர் மன்னர் திருவாரூர் வீற்று இருந்த
பெருமானைத் திரு மூலட்டானம் சேர் பிஞ்ஞகனைப்
பருகா இன் அமுதைக் கண்களால் பருகுதற்கு
மருவார்வத்துடன் மற்றைகண் தாரீர் என வணங்கி 6.2.308

3463

மீளா அடிமை என எடுத்து மிக்க தேவர் குலம் எல்லாம்
மாளமே நஞ்சு உண்டு அருளி மன்னி இருந்த பெருமானைத்
தாளா தரிக்கும் மெய் அடியார் தமக்கு ஆம் இடர் நீர் தரியீர் என்று
ஆளாம் திருத் தோழமைத் திறத்தால் அஞ்சொல் பதிகம் பாடினார் 6.2.309

3464

பூத முதல்வர் புற்றிடங்கொண்டு இருந்த புனிதர் வன் தொண்டர்
காதல் புரி வேதனைக்கு இரங்கி கருணைத் திரு நோக்கு அளித்து அருளிச்
சீத மலர்க் கண் கொடுத்து அருளச் செவ்வே விழித்து முகம் மலர்ந்து
பாத மலர்கள் மேல் பணிந்து வீழ்ந்தார் உள்ளம் பர வசமாய் 6.2.310

3465

விழுந்தும் எழுந்தும் பல முறையால் மேவிப் பணிந்து மிகப் பரவி
எழுந்த களிப்பினால் ஆடிப் பாடி இன்ப வெள்ளத்தில்
அழுந்தி இரண்டு கண்ணாலும் அம் பொன் புற்றின் இடை எழுந்த
செந்தண் பவளச் சிவக் கொழுந்தின் அருளைப் பருகித் திளைக்கின்றார் 6.2.311

3466

காலம் நிரம்பத் தொழுது ஏத்திக் கனக மணி மாளிகை கோயில்
ஞாலம் உய்ய வரும் நம்பி நலம் கொள் விருப்பால் வலம் கொண்டு
மாலும் அயனும் முறை இருக்கும் வாயில் கழியப் புறம் போந்து
சீலம் உடைய அன்பர் உடன் தேவாசிரியன் மருங்கு அணைந்தார் 6.2.312

3467

நங்கை பரவையார் தம்மை நம்பி பிரிந்து போன அதன் பின்
தங்கு மணி மாளிகையின் கண் தனிமை கூரத் தளர்வார்க்குக்
கங்குல் பகலாய்ப் பகல் கங்குலாகிக் கழியா நாள் எல்லாம்
பொங்கு காதல் மீதூரப் புல்வார் சில நாள் போன அதன்பின் 6.2.313

3468

செம்மை நெறி சேர் திரு நாவலூர் ஒற்றியூர் சேர்ந்து
கொம்மை முலையார் சங்கிலியார் தம்மைக் குலவு மணம் புணர்ந்த
மெய்ம்மை வார்த்தை தாம் அவர்பால் விட்டார் வந்து கட்டு உரைப்ப
தம்மை அறியா வெகுளியினால் தரியா நெஞ்சினொடும் தளர்வார் 6.2.314

3469

மென் பூஞ்சயனத்து இடைத்துயிலும் மேவார் விழித்தும் இனிது அமரார்
பொன் பூந்தவிசின் மிசை இனி இரார் நில்லார் செல்லார் புறம்பு ஒழியார்
மன் பூ வாளி மழை கழியார் மறவார் நினையார் வாய் விள்ளார்
என்பூடுருக்கும் புலவியோ பிரிவோ இரண்டின் இடைப் பட்டார் 6.2.315

3470

ஆன கவலைக் கை அறவால் அழியும் நாளில் ஆரூரர்
கூனல் இளம் வெண் பிறைக் கண்ணி முடியார் கோயில் முன் குறுகப்
பால் நல் விழியார் மாளிகையில் பண்டு செல்லும் பரிசினால்
போன பெருமைப் பரிசனங்கள் புகுதப் பெறாது புறம் நின்றார் 6.2.316

3471

நின்ற நிலைமை அவர்கள் சிலர் நிலவு திருவாரூரர் எதிர்
சென்று மொழிவார் திரு ஒற்றியூரில் நிகழ்ந்த செய்கை எலாம்
ஒன்றும் ஒழியா வகை அறிந்து அங்கு உள்ளார் தள்ள மாளிகையில்
இன்று புறமும் சென்று எய்தப் பெற்றிலோம் என்று இறைஞ்சினார் 6.2.317

3472

மற்ற மாற்றம் கேட்டு அழிந்த மனத்தர் ஆகி வன் தொண்டர்
உற்ற இதனுக்கு இனி என்னே செயல் என்று உணர்வார் உலகு இயல்பு
கற்ற மாந்தர் சிலர் தம்மைக் காதல் பரவையார் கொண்ட
செற்ற நிலைமை அறிந்தவர்க்கு தீர்வு சொல்லச் செல விட்டார் 6.2.318

3473

நம்பி அருளால் சென்ற அவரும் நங்கை பரவையார் தமது
பைம் பொன் மணி மாளிகை அணைந்து பண்பு புரியும் பாங்கினால்
வெம்பு புலவிக் கடல் அழுந்தும் மின்னேரிடையார் முன் எய்தி
எம் பிராட்டிக்கு இது தகுமோ என்று பலவும் எடுத்துரைப்பார் 6.2.319

3474

பேத நிலைமை நீதியினால் பின்னும் பலவும் சொன்னவர் முன்
மாதர் அவரும் மறுத்துமனம் கொண்ட செற்றம் மாற்றாராய்
ஏதம் மருவும் அவர் திறத்தில் இந்த மாற்றம் இயம்பில் உயிர்
போதல் ஒழியாது என உரைத்தார் அவரும் அஞ்சிப்புறம் போந்தார் 6.2.320

3475

போந்து புகுந்த படி எல்லாம் பூந்தண் பழன முனைப்பாடி
வேந்தர் தமக்கு விளம்புதலும் வெருவுற்று அயர்வார் துயர்வேலை
நீந்தும் புணையாம் துணை காணார் நிகழ்த்த சிந்தை ஆகுலம் நெஞ்சில்
காந்த அழிந்து தோய்ந்து எழார் கங்குல் இடையாமகக் கடலுள் 6.2.321

3476

அருகு சூழ்ந்தார் துயின்று திருஅந்தயாமம் பணி மடங்கிப்
பெருகு புவனம் சலிப்பு இன்றிப் பேயும் உறங்கும் பிறங்கு இருள்வாய்
முருகு விரியும் மலர்க் கொன்றை முடிமேல் அரவும் இளமதியும்
செருகும் ஒருவர் தோழர் தனி வருந்தி இருந்து சிந்திப்பார் 6.2.322

3477

முன்னை வினையால் இவ்வினைக்கு மூலம் ஆனாள்பால் அணைய
என்னை உடையாய் நினைந்த அருளாய் இந்த யாமத்து எழுந்து அருளி
அன்னம் அனையாள் புலவியினை அகற்றில் உய்யலாம் அன்றிப்
பின்னை இல்லைச் செயல் என்று பெருமான் அடிகள் தமை நினைந்தார் 6.2.323

3478

அடியார் இடுக்கண் தரியாதார் ஆண்டு கொண்ட தோழர் குறை
முடியாது இருக்க வல்லரே முற்றும் அளித்தாள் பொற்றளிர்க் கைத்
தொடியார் தழும்பும் முலைச் சுவடும் உடையார் தொண்டர் தாம் காணும்
படியால் அணைந்தார் நெடியோனும் காணா அடிகள் படி தோய 6.2.324

3479

தம் பிரானார் எழுந்து அருளத் தாங்கற்கு அரிய மகிழ்ச்சியினால்
கம்பியா நின்ற அவயவங்கள் கலந்த புளகம் மயிர் முகிழ்ப்ப
நம்பி ஆரூரரும் எதிரே நளின மலர்க்கை தலைக் குவிய
அம்பிகா வல்லவர் செய்ய அடித் தாமரையின் கீழ் விழுந்தார் 6.2.325

3480

விழுந்து பரவி மிக்க பெரும் விருப்பினேடும் எதிர் போற்றி
எழுந்த நண்பர் தமை நோக்கி என் நீ உற்றது என்று அருள
தொழுது தம் குறையை விளம்புவார் யானே தொடங்கும் துரிசி இடைப்பட்டு
அழுந்தும் என்னை இன்னம் எடுத்து ஆள வேண்டும் உமக்கு என்று 6.2.326

3481

அடியேன் அங்குத் திருவொற்றியூரில் நீரே அருள் செய்ய
வடிவேல் ஒண் கண் சங்கிலியை மணம் செய்து அணைந்ததிறம் எல்லாம்
கொடியேர் இடையாள் பரவை தான் அறிந்து தன்பால் யான் குறுகில்
முடிவேன் என்று துணிந்து இருந்தாள் என் நான் செய்வது என மொழிந்து 6.2.327

3482

நாயன் நீரே நான் உமக்கு இங்கு அடியேன் ஆகில் நீர் எனக்குத்
தாயின் நல்ல தோழருமாம் தம்பிரனாரே ஆகில்
ஆய அறிவும் இழந்து அழிவேன் அயர்வு நோக்கி அவ்வளவும்
போய் இவ்விரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாரும் என 6.2.328

3483

அன்பு வேண்டும் தம் பெருமான் அடியார் வேண்டிற்றே வேண்டி
முன்பு நின்று விண்ணப்பம் செய்தநம்பி முகம் நோக்கித்
துன்பம் ஒழி நீ யாம் உனக்கோர் தூதன் ஆகி இப்பொழுதே
பொன் செய் மணிப்பூண் பரவைபால் போகின்றோம் என்று அருள் செய்தார் 6.2.329

3484

எல்லை இல்லாக் களிப்பினராய் இறைவர் தாளில் விழுந்து எழுந்து
வல்ல பரிசு எல்லாம் துதித்து வாழ்ந்து நின்ற வன் தொண்டர்
முல்லை முகை வெண்ணகைப் பரவை முகில் சேர் மாடத்து இடை செல்ல
நில்லாது ஈண்ட எழுந்து அருளி நீக்கும் புலவி எனத் தொழுதார் 6.2.330

3485

அண்டர் வாழக் கருணையினால் ஆல காலம் அமுதாக
உண்ட நீலக் கோல மிடற்று ஒருவர் இருவர்க்கு அறிவரியர்
வண்டு வாழும் மலர்க் கூந்தல் பரவையார் மாளிகை நோக்கி
தொண்டனார் தம் துயர் நீக்க தூதனாராய் எழுந்து அருள 6.2.331

3486

தேவாசிரியன் முறை இருக்கும் தேவர் எலாம் சேவித்துப்
போவார் தம்மில் வேண்டுவார் போத ஒழிந்தார் புறத்து ஒழிய
ஓவா அணுக்கச் சேவகத்தில் உள்ளோர் பூத கண நாதர்
மூவா முனிவர் யோகிகளின் முதல் ஆனார்கள் முன்போக 6.2.332

3487

அருகு பெரிய தேவருடன் அணைந்து வரும் அவ்விருடிகளும்
மருவு நண்பின் நிதிக் கோனும் முதலாய் உள்ளோர் மகிழ்ந்து ஏத்த
தெருவும் விசும்பும் நிறைந்து விரைச் செழும் பூமாரி பொழிந்து அலையப்
பொருவில் அன்பர் விடும்தூதர் புனித வீதியினில் போத 6.2.333

3488

மாலும் அயனும் காணாதார் மலர்த்தாள் பூண்டு வந்து இறைஞ்சும்
காலம் இது என்று அங்கு அவரை அழைத்தால் என்னக் கடல் விளைத்த
ஆலம் இருண்ட கண்டத்தான் அடித்தாமரை மேல் சிலம்பு ஒலிப்ப
நீல மலர்க்கண் பரவையார் திருமாளிகையை நேர் நோக்கி 6.2.334

3489

இறைவர் விரைவின் எழுந்து அருள எய்தும் அவர்கள் பின்தொடர
அறை கொள் திரை நீர் தொடர் சடையில் அரவு தொடர அரிய இளம்
பிறை கொள் அருகு நறை இதழிப் பிணையல் சுரும்பு தொடர உடன்
மறைகள் தொடர வன் தொண்டர் மனமும் தொடர வரும் பொழுது 6.2.335

3490

பெரு வீரையினும் மிக முழங்கிப்பிறங்கு மத குஞ்சரம் உரித்து
மருவீர் உரிவை புனைந்தவர் தம் மருங்கு சூழ்வார் நெருங்குதலால்
திரு வீதியினில் அழகர் அவர் மகிழும் செல்வத் திருவாரூர்
ஒரு வீதியிலே சிவலோகம் முழுதும் காண உளதாமால் 6.2.336

3491

ஞாலம் உய்ய எழுந்து அருளும் நம்பி தூதர் பரவையார்
கோல மணி மாளிகை வாயில் குறுகுவர் முன் கூடத்தம்
பாலங்கு அணைந்தார் புறம் நிற்பப் பண்டே தம்மை அர்ச்சிக்கும்
சீலம் உடைய மறை முனிவர் ஆகித் தனியே சென்று அணைந்தார் 6.2.337

3492

சென்று மணி வாயில் கதவம் செறிய அடைத்த அதன் முன்பு
நின்று பாவாய் திறவாய் என்று அழைப்ப நெறி மென் குழலாகும்
ஒன்றும் துயிலாது உணர்ந்து அயர்வார் உடைய பெருமான் பூசனை செய்
துன்றும் புரி நூல் மணி மார்பர் போலும் அழைத்தார் எனத் துணிந்து 6.2.338

3493

பாதி மதி வாழ் முடியாரைப் பயில் பூசனையின் பணி புரிவார்
பாதி இரவில் இங்கு அணைந்தது என்னே என்று பயம் எய்திப்
பாதி உமையாள் திரு வடிவில் பரமர் ஆவது அறியாதே
பாதி மதி வாண் நுதலாரும் பதைத்து வந்து கடை திறந்தார் 6.2.339

3494

மன்னும் உரிமை வன் தொண்டர் வாயில் தூதா வாயில் இடை
முன் நின்றாரைக் கண்டு இறைஞ்சி முழுதும் உறங்கும் பொழுதின் கண்
என்னை ஆளும் பெருமான் இங்கு எய்தி அருளினார் என்ன
மின்னும் மணி நூல் அணிமார்பீர் எய்த வேண்டிற்று என் என்றார் 6.2.340

3495

கங்கை நீர் கரந்த வேணி கரந்தவர் அருளிச் செய்வார்
நங்கை நீ மாறாது செய்யின் நான் வந்து உரைப்பது என்ன
அங்கயல் விழியினாரும் அதனை நீர் அருளிச் செய்தால்
இங்கு எனக்கு இசையும் ஆகில் இசையவாம் என்று சொல்லி 6.2.341

3496

என் நினைந்து அணைந்து என்பால் இன்னது என்று அருளிச் செய்தால்
பின்னை அதியலும் ஆகில் ஆம் எனப் பிரானார் தாமும்
மின்னிடை மடவாய் நம்பி இங்கு வர வேண்டும் என்ன
நன் நுதலாரும் சால நன்று நம் பெருமை என்பார் 6.2.342

3497

பங்குனி திரு நாளுக்குப் பண்டுபோல் வருவார் ஆகி
இங்கு எனைப் பிரிந்து போகி ஒற்றியூர் எய்தி அங்கே
சங்கிலித் தொடக்கு உண்டாருக்கு இங்கு ஒரு சார்வு உண்டோ நீர்
கங்குலின் வந்து சொன்ன காரியம் அழகிது என்றார் 6.2.343

3498

நாதரும் அதனைக் கேட்டு நங்கை நீ நம்பி செய்த
ஏதங்கள் மனத்துக் கொள்ளாது எய்திய வெகுளி நீக்கி
நோதக ஒழித்தற்கு அன்றே நுன்னையான் வேண்டிக் கொண்டது
ஆதலின் மறுத்தல் செய்யல் அடாது என அருளிச் செய்தார் 6.2.344

3499

அரு மறை முனிவரான ஐயரைத் தையலார் தாம்
கருமம் ஈதாக நீர் இக் கடைத் தலை வருகை மற்(று)உம்
பெருமைக்குத் தகுவது அன்றால் ஒற்றியூர் உறுதி பெற்றார்
வருவதற்கு இசையேன் நீரும் போம் என மறுத்துச் சொன்னார் 6.2.345

3500

நம்பர் தாம் அதனைக் கேட்டு நகையும் உட்கொண்டு மெய்ம்மைத்
தம் பரிசு அறியக் காட்டார் தனிப் பெரும் தோழனார் தம்
வெம்புறு வேட்கை காணும் திருவிளையாட்டின் மேவி
வம்பலர் குழலினார் தாம் மறுத்ததே கொண்டு மீண்டார் 6.2.346

3501

தூதரைப் போக விட்டு வரவு பார்த்திருந்த தொண்டர்
நாதரை அறிவிலாதே நன்நுதல் புலவி நீக்கிப்
போதரத் தொழுதேன் என்று புலம்புவார் பரவை யாரைக்
காதலில் இசைவு கொண்டு வருவதே கருத்து உட் கொள்வார் 6.2.347

3502

போய் அவள் மனையில் நண்ணும் புண்ணியர் என் செய்தாரோ
நாயனார் தம்மைக் கண்டால் நன் நுதல் மறுக்குமோ தான்
ஆய என் அயர்வு தன்னை அறிந்து எழுந்து அருளினார் தாம்
சேயிழை துனி நீர்த்து அன்றி மீள்வது செய்யார் என்று 6.2.348

3503

வழி எதிர் கொள்ளச் செல்வர் வரவு காணாது மீள்வர்
அழிவுற மயங்கி நிற்பர் அசைவுடன் இருப்பர் நெற்றி
விழியவர் தாழ்ந்தார் என்று மீளவும் எழுவர் மாரன்
பொழி மலர் மாரி வீழ ஒதுங்குவார் புன்கண் உற்றார் 6.2.349

3504

பரவையார் தம்பால் நம்பி தூதராம் பாங்கில் போன
அரவணி சடையார் மீண்டே அறியும் மாறு அணையும் போதில்
இரவும்தான் பகலாய் தோன்ற எதிர் எழுந்து அணையை விட்ட
உரவுநீர் வெள்ளம் போல ஓங்கிய களிப்பில் சென்றார் 6.2.350

3505

சென்று தம் பிரானைத் தாழ்ந்து திருமுகம் முறுவல் செய்ய
ஒன்றிய விளையாட்டு ஓரார் உறுதி செய்து அணைந்தார் என்றே
அன்று நீர் ஆட்கொண்ட அதனுக்குத் தகவே செய்தீர்
இன்று இவள் வெகுளி எல்லாம் தீர்த்து எழுந்து அருளி என்றார் 6.2.351

3506

அம் மொழி விளம்பும் நம்பிக்கையர் தாம் அருளிச் செய்வார்
நம்மை நீ சொல்ல நாம் போய்ப் பரவை தம் இல்லம் நண்ணிக்
கொம்மை வெம் முலையினாள்க்கு உன் திறம் எலாம் கூறக் கொள்ளாள்
வெம்மை தான் சொல்லி நாமே வேண்டவும் மறுத்தாள் என்றார் 6.2.352

3507

அண்ணலார் அருளிச் செய்யக் கேட்ட ஆரூரர் தாமும்
துண்ணென நடுக்கம் உற்றே தொழுது நீர் அருளிச் செய்த
வண்ணமும் அடியாள் ஆன பரவையோ மறுப்பாள் நாங்கள்
எண்ண ஆர் அடிமைக்கு என்பது இன்று அறிவித்தீர் என்று 6.2.353

3508

வானவர் உய்ய வேண்டி மறிகடல் நஞ்சை உண்டீர்
தானவர் புரங்கள் வேவ மூவரைத் தவிர்த்து ஆட்கொண்டீர்
நான் மறைச் சிறுவர்க்காக காலனைக் காய்ந்து நட்டீர்
யான் மிகை உமக்கு இன்று ஆனால் என் செய்வீர் போதா என்றார் 6.2.354

3509

ஆவதே செய்தீர் இன்று என் அடிமை வேண்டா விட்டால்
பாவியேன் தன்னை அன்றுவலிய ஆள் கொண்டபற்று என்
நேவும் என் அழிவும் கண்டீர் நுடங்கு இடை அவள் பால் இன்று
மேவுதல் செய்யீர் ஆகில் விடும் உயிர் என்று வீழ்ந்தார் 6.2.355

3510

தம்பிரான் அதனைக் கண்டு தரியாது தளர்ந்து வீழ்ந்த
நம்பியை அருளால் நோக்கி நாம் இன்னம் அவள் பால் போய் அக்
கொம்பினை இப்பொழுதே நீ குறுகுமா கூறுகின்றோம்
வெம்புறு துயர் நீங்கு என்றார் வினை எல்லாம் விளைக்க வல்லார் 6.2.356

3511

மயங்கிய நண்பர் உய்ய வாக்கு எனும் மதுர வாய்மை
நயம் கிளர் அமுதம் நல்க நாவலூர் மன்னர்தாமும்
முயங்கிய கலக்கம் நீங்கி உம் அடித் தொழும்பன் ஏனைப்
பயம் கெடுத்து இவ்வாறு அன்றோ பணி கொள்வது என்று போற்ற 6.2.357

3512

அன்பர் மேல் கருணை கூர ஆண்டவர் மீண்டும் செல்லப்
பின்பு சென்று இறைஞ்சி நம்பி பேதுறவோடு மீண்டார்
முன்பு உடன் போதா தாரும் முறைமையில் சேவித்து ஏகப்
பொன்புரி சடையார் மாதர் புனித மாளிகையில் சென்றார் 6.2.358

3513

மதி நுதல் பரவையார் தாம் மறையவர் போனபின்பு
முதிர் மறை முனியாய் வந்தார் அருள் உடை முதவர் ஆகும்
அதிசயம் பலவும் தோன்ற அறிவுற்றே அஞ்சிக் கெட்டேன்
எதிர்மொழி எம்பிரான் முன் என் செய மறுத்தேன் என்பார் 6.2.359

3514

கண் துயில் எய்தார் வெய்யகை யறவு எய்தி ஈங்கு இன்று
அண்டர் தம்பிரானார் தோழர்க்கு ஆக அர்ச்சிப்பார் கோலம்
கொண்டு அணைந்த வரை யான் உட்கெண்டிலேன் பாவியேன் என்று
ஒண் சுடர் வாயிலே பார்த்து உழைய ரோடு அழியும் போதில் 6.2.360

3515

வெறியுறு கொன்றை வேணி விமலரும் தாமாம் தன்மை
அறிவுறு கோலத் தோடும் அளவில் பல் பூத நாதர்
செறிவுறு தேவர் யோக முனிவர்கள் சூழ்ந்து செல்ல
மறுவில் சீர் பரவையார் தம் மாளிகை புகுந்தார் வந்து 6.2.361

3516

பாரிடத் தலைவர் முன்னம் பல் கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்தர் இயக்கர்கள் நிறைதலாலே
பேரருளாளர் எய்தப் பெற்ற மாளிகைதான் தென்பால்
சீர் வளர் கயிலை வெள்ளித் திருமலை போன்றது அன்றே 6.2.362

3517

ஐயர் அங்கு அணைந்த போதில் அகில லோகத்து உள்ளாரும்
எய்தியே செறிந்து சூழ எதிர் கொண்ட பரவையார் தாம்
மெய்யுறு நடுக்கத் தோடு மிக்கு எழும் மகிழ்ச்சி பொங்கச்
செய்யதாள் இணை முன் சேர விரைவினால் சென்று வீழ்ந்தார் 6.2.363

3518

அரி அயற்கு அரியர் தாமுமாய் இழையாரை நோக்கி
உரிமையால் ஊரன் ஏவ மீளவும் உன் பால் வந்தோம்
முருகலர் குழலாய் இன்னம் முன் போல் மாறாதே நின்பால்
பிரிவுற வருந்து கின்றான் வரப் பெற வேண்டும் என்றார் 6.2.364

3519

பெரும் தடம் கண்ணினாரும் பிரான் முன்பு மிகவும் அஞ்சி
வருந்திய உள்ளத்தோடு மலர்க்கரம் குழல் மேல் கொண்டே
அரும் திரு மறையோர் ஆகி அணைந்தீர் முன் அடியேன் செய்த
இரும் தவப் பயனாம் என்ன எய்திய நீரோ என்பார் 6.2.365

3520

துளிவளர் கண்ணீர் வாரத் தொழுது விண்ணப்பம் செய்வார்
ஒளிவளர் செய்ய பாதம் வருந்த ஓர் இரவு மாறாது
அளிவரும் அன்பர்க்காக அங்கு ஒடிங்கி உழல் வீராகி
எளி வருவீரும் ஆனால் என் செய் கேன் இசையாது என்றார் 6.2.366

3521

நங்கை நின் தன்மைக்கு ஏற்கும் நன்மையே மொழிந்தாய் என்று
மங்கையோர் பாகம் வைத்த வள்ளலார் விரைந்து போக
திங்கள் வாள் நுதலினாரும் சென்று பின் இறைஞ்சி மீண்டார்
எங்களை ஆளும் நம்பி தூதர் மீண்டு ஏகுகின்றார் 6.2.367

3522

ஆதியும் மேலும் மாலயன் நாடற்கு அருளாதார்
தூதினில் ஏகித் தொண்டரை ஆளும் தொழில் கண்டே
வீதியில் ஆடிப் பாடி மகிழ்ந்தே மிடை கின்றார்
பூதியில் நீடும் பல் கண நாதப் புகழ் வீரர் 6.2.368

3523

அன்னவர் முன்னும் பின்னும் மருங்கும் அணைவு எய்த
மின் இடையார் பால் அன்பரை உய்க்கும் விரைவோடும்
சென்னியில் நீடும் கங்கை ததும்ப திருவாரூர்
மன்னவனார் அம்மறையவனார் பால் வந்துற்றார் 6.2.369

3524

அன்பரும் என்பால் ஆவி அளிக்கும் படி போனார்
என் செய்து மீள்வார் இன்னமும் என்றே இடர் கூரப்
பொன் புரி முந்நூல் மார்பினர் செல்லப் பொலிவீதி
முன்புற நேரும் கண் இணை தானும் முகிழாரால் 6.2.370

3525

அந் நிலைமைக் கண் மன்மதன் வாளிக்கு அழிவார் தம்
மன் உயிர் நல்கும் தம் பெருமானார் வந்து எய்த
முன் எதிர் சென்றே மூவுலகும் சென்று அடையும் தாள்
சென்னியில் வைத்து என் சொல்லுவார் என்றே தெளியாதார் 6.2.371

3526

எம் பெருமான் நீர் என் உயிர் காவாது இடர் செய்யும்
கொம்பு அனையாள் பால் என் கொடுவந்தீர் குறை என்னத்
தம் பெருமானும் தாழ் குழல் செற்றம் தணி வித்தோம்
நம்பி இனப் போய் மற்று அவள் தன்பால் நணுகு என்ன 6.2.372

3527

நந்தி பிரானார் வந்து அருள் செய்ய நலம் எய்தும்
சிந்தையுள் ஆர்வம் கூர் களி எய்தித் திகழ்கின்றார்
பந்தமும் வீடும் நீர் அருள் செய்யும் படி செய்தீர்
எந்தை பிரானே என் இனி என் பால் இடர் என்றார் 6.2.373

3528

என்று அடி வீழும் நண்பர் தம் அன்புக்கு எளிவந்தார்
சென்று அணை நீ அச் சே இழை பால் என்று அருள் செய்து
வென்று உயர் சே மேல் வீதி விடங்கப் பெருமாள் தம்
பொன் திகழ் வாயில் கோயில் புகுந்தார் புவி வாழ 6.2.374

3529

தம்பிரான் ஆனார் பின் சென்று தாழ்ந்து எழுந்து அருளால் மீள்வார்
எம்பிரான் வல்லவாறு என்று எய்திய மகிழ்ச்சி யோடும்
வம்பலர் குழலார் செம்பொன் மாளிகை வாயில் நோக்கி
நம்பி ஆரூரர் காதல் நயந்து எழுந்து அருளும் போது 6.2.375

3530

முன் துயில் உணர்ந்து சூழ்ந்த பரிசனம் மருங்கு மொய்ப்ப
மின் திகழ் பொலம் பூ மாரி விண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன்றல் செய் மதுர சீதம் சிகரம் கொண்டு மந்தத்
தென்றலும் எதிர் கொண்டு எய்தும் சேவகம் முன்பு காட்ட 6.2.376

3531

மாலை தண் கலவைச் சேறு மான் மதச் சாந்து பொங்கும்
கோல நல் பசும் கர்ப்பூரம் குங்குமம் முதலாய் உள்ள
சாலும் மெய்க் கலன்கள் கூடச் சாத்தும் பூண் ஆடைவர்க்கம்
பாலனம் பிறவும் ஏந்தும் பரிசனம் முன்பு செல்ல 6.2.377

3532

இவ்வகை இவர் வந்து எய்த எய்திய விருப்பினேடும்
மை வளர் நெடுங்கணாரும் மாளிகை அடைய மன்னும்
செய்வினை அலங்கரத்துச் சிறப்பு அணி பலவும் செய்து
நெய்வளர் விளக்குத் தூபம் நிறை குடம் நிரைத்துப் பின்னும் 6.2.378

3533

பூ மலி நறும் பொன் தாமம் புனை மணிக் கோவை நாற்றிக்
காமர் பொன் சுண்ணம் வீசிக் கமழ் நறும் சாந்து நீவித்
தூ மலர் வீதி சூழ்ந்த தோகையர் வாழ்த்தத்தாமும்
மா மணி வாயில் முன்பு வந்து எதிர் ஏற்று நின்றார் 6.2.379

3534

வண்டுலாம் குழலார் முன்பு வன்தொண்டர் வந்து கூடக்
கண்ட போது உள்ளம் காதல் வெள்ளத்தின் கரை காணாது
கொண்ட நாண் அச்சம் கூர வணங்க அக் குரிசிலாரும்
தண் தளிர் செங்கை பற்றிக் கொண்டு மாளிகையுள் சாந்தார் 6.2.380

3535

இருவரும் தம் பிரானார் தாம் இடை ஆடிச் செய்த
திரு அருள் கருணை வெள்ளத் திறத்தினைப் போற்றி சிந்தை
மருவிய இன்ப வெள்ளத்து அழுந்திய புணர்ச்சிவாய்ப்ப
ஒருவருள் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர் ஒன்று ஆனார் 6.2.381

3536

ஆரணக் கமலக் கோயில் மேவிப் புற்றிடங்கொண்டு ஆண்ட
நீரணி வேணியாரை நிரந்தரம் பணிந்து போற்றி
பாரணி விளக்கும் செஞ்சொல்பதிக மாலைகளும் சாத்தி
தாரணி மணிப்பூண் மார்பர் தாம் மகிழ்ந்து இருந்த நாளில் 6.2.382

3537

நம்பி ஆரூரர் நெஞ்சில் நடுகம் ஒன்று இன்றி நின்று
தம் பிரானாரைத் தூது தையல் பால் விட்டார் என்னும்
இம்பரின் மிக்க வார்த்தை ஏயர் கோனார்தாம் கேட்டு
வெம்பினார் அதிசயித்தார் வெருவினார் விளம்பல் உற்றார் 6.2.383

3538

நாயனை அடியான் ஏவும் காரியம் நன்று சால
ஏயும் என்று இதனைச் செய்வான் தொண்டனாம் என்னே பாவம்
பேயனேன் பொறுக்க ஒண்ணாப் பிழையினைச் செவியால் கேட்பது
ஆயின பின்னும் மாயாது இருந்தது என் ஆவி என்பார் 6.2.384

3539

காரிகை தன்பால் செல்லும் காதலால் ஒருவன் ஏவப்
பாரிடை நடந்து செய்ய பாததாமரைகள் நோவத்
தேரணி வீதியூடு செல்வது வருவது ஆகி
ஓரிரவு எல்லாம் தூதுக்கு உழல்வராம் ஒருவர் என்று 6.2.385

3540

நம்பர் தாம் அடிமை ஆற்றார் ஆகியே நண்ணினாரேல்
உம்பரார் கோனும் மாலும் அயனும் நேர் உணர ஒண்ணா
எம்பிரான் இசைந்தால் ஏவப் பெறுவதே இதனுக்கு உள்ளம்
கம்பியாது அவனை யான் முன் காணும் நாள் எந் நாள் என்று 6.2.386

3541

அரிவை காரணத்தினாலே ஆளுடைப் பரமர் தம்மை
இரவினில் தூது போக ஏவி அங்குஇருந்தான் தன்னை
வரவு எதிர் காண்பேன் ஆகில் வருவது என்னாம் கொல் என்று
விரவிய செற்றம் பற்றி விள்ளும் உள்ளத்தர் ஆகி 6.2.387

3542

ஈறிலாப் புகழின் ஓங்கும் ஏயர் கோன் ஆர் தாம் எண்ணிப்
பேறிது பெற்றார் கேட்டுப் பிழை உடன்படுவர் ஆகி
வேறினி இதற்குத் தீர்வு வேண்டுவார் விரிபூங்கொன்றை
ஆறிடு சடையனாருக்கு அதனை விண்ணப்பம் செய்து 6.2.388

3543

நாள் தொறும் பணிந்து போற்ற நாதரும் அதனை நோக்கி
நீடிய தொண்டர் தம்முள் இருவரும் மேவும் நீர்மை
கூடுதல் புரிவார் ஏயர் குரிசிலார் தம்பால் மேனி
வாடுறும் சூலை தன்னை அருளினார் வருந்தும் ஆற்றால் 6.2.389

3544

ஏதமில் பெருமைச் செய்கை ஏயர்தம் பெருமான் பக்கல்
ஆதியார் ஏவும் சூலை அனல் செய் வேல் குடைவது என்ன
வேதனை மேல் மேல் செய்ய மிக அதற்கு உடைந்து வீழ்ந்து
பூத நாயகர் தம் பொன் தாள் பற்றியே போற்றுகின்றார் 6.2.390

3545

சிந்தையால் வாக்கால் அன்பர் திருந்து அடி பேற்றி செய்ய
எந்தமையாளும் ஏயர் காவலர் தம்பால் ஈசர்
வந்துனை வருத்தும் சூலைவன் தொண்டன் தீர்கில் அன்றி
முந்துற ஒழியாது என்று மொழிந்து அருள் செய்யக் கேட்டு 6.2.391

3546

எம்பிரான் எந்தை தந்தை தந்தை எங்கூட்டம் எல்லாம்
தம் பிரான் நீரே என்று வழி வழி சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை என்னை நின்று ஈரும் சூலை
வம்பு என ஆண்டுக் கொண்டான் ஒருவனே தீர்ப்பான் வந்து 6.2.392

3547

மற்றவன் தீர்க்கில் தீராது ஒழிந்து எனை வருத்தல் நன்றால்
பெற்றம் மேல் உயர்த்தீர் செய்யும் பெருமையை அறிந்தார் யாரே
உற்றவன் தொண்டற்கே ஆம் உறுதியே செய்தீர் என்னக்
கற்றைவார் சடையார்தாமும் அவர் முன்பு கரந்தார் அன்றே 6.2.393

3548

வன் தொண்டர் தம்பால் சென்று வள்ளலார் அருளிச் செய்வார்
இன்று நம் ஏவலாலே ஏயர்கோன் உற்ற சூலை
சென்று நீ தீர்ப்பாய் ஆக என்று அருள் செயச் சிந்தையோடு
நன்று மெய்ம் மகிழ்ந்து போற்றி வணங்கினார் நாவல் ஊரர் 6.2.394

3549

அண்ணலார் அருளிச் செய்து நீங்க ஆரூரர் தாமும்
விண்ணவர் தம்பிரான் ஆர் ஏவலால் விரைந்து செல்வார்
கண்ணிய மனத்தின் மேவும் காதலால் கலிக்காமர்க்குத்
திண்ணிய சூலை தீர்க்க வரும்தி செப்பி விட்டார் 6.2.395

3550

நாதர் தம் அருளால் நண்ணும் சூலையும் அவர்பால் கேட்ட
கேதமும் வருத்த மீண்டும் வன்தொண்டர் வரவும் கேட்டு
தூதனாய் எம்பிரானை ஏவினான் சூலை தீர்க்கும்
ஏதம் இங்கு எய்த எய்தில் யான் செய்வது என்னாம் என்பார் 6.2.396

3551

மற்றவன் இங்கு வந்து தீர்பதன் முன் நான் மாயப்
பற்றி நின்று என்னை நீங்காப் பாதகச் சூலை தன்னை
உற்ற இவ் வயிற்றினோடும் கிழிப்பன் என்று உடைவாள் தன்னால்
செற்றிட உயிரினோடும் சூலையும் தீர்ந்தது அன்றே 6.2.397

3552

கருதரும் பெருமை நீர்மைக் கலிக்காமர் தேவியாரும்
பொருவரும் கணவரோடு போவது புரியும் காலை
மருவி இங்கு அணைந்தார் நம்பி என்று முன்வந்தார் கூற
ஒருவரும் அழுதல் செய்யாது ஒழிக என்று உரைத்துப் பின்னும் 6.2.398

3553

கணவர் தம் செய்கை தன்னைக் கரந்து காவலரை நம்பி
அணைவுறும் பொழுது சால அலங்கரித்து எதிர் போம் என்னப்
புணர் நிலை வாயில் தீபம் பூரண கும்பம் வைத்துத்
துணர் மலர் மாலை தூக்கித் தொழுது எதிர் கொள்ளச் சென்றார் 6.2.399

3554

செம்மை சேர் சிந்தை மாந்தர் சென்று எதிர் கொண்டு போற்ற
நம்மை ஆளுடைய நம்பி நகை முகம் அவர்க்கு நல்கி
மெய்மையாம் விருப்பின்னோடும் மேவி உள் புகுந்து மிக்க
மொய்ம் மலர்த் தவிசின் மீது முகம் மலர்ந்து இருந்தபோது 6.2.400

3555

பான்மை அர்ச்சனைகள் எல்லாம் பண்பினில் வழாமை ஏய்ந்த
நான் மறை தொடர்ந்த வாய்மை நம்பி ஆரூரர் கொண்டு இங்கு
யான் மிக வருந்து கின்றேன் ஏயர் கோனார் தாம் உற்ற
ஊன வெஞ்சூலை நீங்கி உடன் இருப்பதனுக்கு என்றார் 6.2.401

3556

மாதர் தம் ஏவலாலே மனைத் தொழில் மாக்கள் மற்று இங்கு
ஏதம் ஒன்று இல்லை உள்ளே பள்ளி கொள்கின்றார் என்னத்
தீது அணை வில்லை ஏறும் என் மனம் தெருளாது இன்னம்
ஆதலால் அவரைக் காண வேண்டும் என்று அருளிச் செய்தார் 6.2.402

3557

வன் தொண்டர் பின்னும் கூற மற்றவர் தம்மைக் காட்டத்
துன்றிய குருதி சோரத் தொடர் குடர் சொரிந்து உள்ளாவி
பொன்றியே கிடந்தார் தம்மைக் கண்டபின் புகுந்தவாறு
நன்று என மொழிந்து நானும் நண்ணுவேன் இவர் முன்பு என்பார் 6.2.403

3558

கோளுறு மனத்தர் ஆகிக் குற்று உடைவாளைப் பற்ற
ஆளுடைத் தம்பிரானார் அருளினால் அவரும் உய்ந்து
கேளிரே ஆகிக் கெட்டேன் என விரைந்து எழுந்து கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள வன் தொண்டர் வணங்கி வீழ்ந்தார் 6.2.404

3559

மற்றவர் வணங்கி வீழ வாளினை மாற்றி ஏயர்
கொற்றவனாரும் நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தார்
அற்றை நாள் நிகழ்ந்த இந்த அதிசயம் கண்டு வானோர்
பொன் தட மலரின் மாரி பொழிந்தனர் புவனம் போற்ற 6.2.405

3560

இருவரும் எழுந்து புல்லி இடைவிடா நண்பினாலே
பொருவரும் மகிழ்சி பொங்கத் திருபுன் கூர் புனிதர் பாதம்
மருவினர் போற்றி நின்று வன் தொண்டர் தம்பிரானார்
அருளினை நினைந்தே அந்தணாளன் என்று எடுத்து பாடி 6.2.406

3561

சில பகல் கழிந்த பின்பு திருமுனைப் பாடி நாடர்
மலர் புகழ்த் திருவாரூரில் மகிழ்ந்துடன் வந்த ஏயர்
குல முதல் தலைவனாரும் கூடவே குளிர் பூங்கோயில்
நிலவினார் தம்மைக் கும்பிட்டு உறைந்தனர் நிறைந்த அன்பால் 6.2.407

3562

அங்கு இனிது அமர்ந்து நம்பி அருளினால் மீண்டும் போந்து
பொங்கிய திருவின் மிக்க தம்பதி புகுந்து பொற்பில்
தங்கு நாள் ஏயர் கோனார் தமக்கு ஏற்ற தொண்டு செய்தே
செங்கண் மால் விடையார் விடையார் பாதம் சேர்ந்தனர் சிறப்பினேடும் 6.2.408

3563

நள்ளிருள் நாயனாரைத் தூது விட்டு அவர்க்கே நண்பாம்
வள்ளலார் ஏயர் கோனார் மலர் அடி வணங்கிப்புக்கேன்
உள்ளுணர்வான ஞானம் முதலிய ஒரு நான்கு உண்மை
தெள்ளு தீந்தமிழால் கூறும் திருமூலர் பெருமை செப்ப 6.2.409

திருச்சிற்றம்பலம்

6.3 திரு மூல நாயனார் புராணம் (3564 - 3591)

திருச்சிற்றம்பலம்

3564

அந்தி இளம் பிறைக் கண்ணி அண்ணலார் கயிலையினில்
முந்தை நிகழ் கோயிலுக்கு முதல் பெரு நாயகம் ஆகி
இந்திரன் மால் அயன் முதலாம் இமயவர்க்கு நெறி அருளும்
நந்தி திருவருள் பெற்ற நான் மறை யோகிகள் ஒருவர் 6.3.1

3565

மற்றவர் தாம் அணி மாதி வரும் சித்தி பெற்று உடையார்
கொற்றவனார் திருக் கயிலை மலை நின்றும் குறு முனிபால்
உற்றது ஒரு கேண்மையினால் உடன் சில நாள் உறைவதற்கு
நல் தமிழின் பொதிய மலை நண்ணுதற்கு வழி கொண்டார் 6.3.2

3566

மன்னு திருக் கேதாரம் வழி பட்டு மா முனிவர்
பன்னு புகழ்ப் பசுபதி நேபாளத்தைப் பணிந்து ஏத்தித்
துன்னு சடைச் சங்கரனார் ஏற்ற தூ நீர்க் கங்கை
அன்ன மலி அகன் துறை நீர் அருங்கரையின் மருங்கு அணைந்தார் 6.3.3

3567

கங்கை நீர்த் துறை ஆடிக் கருத்துறை நீள் கடல் ஏற்றும்
அங்கணர் தாம் மகிழ்து அருளும் அவிமுத்தம் பணிந்து ஏத்தி
மங்குல் வளர் வரை விந்தம் மன்னு பருப்பதம் இறைஞ்சி
திங்கள் அணி சடையார் திருக்காளத்தி மலை சேர்ந்தார் 6.3.4

3568

நீடு திருக்காளத்தி நிலவு தாணுவை வணங்கி
ஆடு திரு அரங்கான ஆலவனம் தொழுது ஏத்தித்
தேடும் இருவர்க்கு அரியார் திரு ஏகாம்பரம் பணிந்து
மாடுயர் மா மதில் காஞ்சி வள நகரின் வைகினார் 6.3.5

3569

நற்பதி அங்கு அமர் யோக முனிவர்களை நயந்து போய்க்
கற்புரிசைத் திருவதிகை கலந்து இறைஞ்சிக் கறை கண்டர்
அற்புதக் கூத்து ஆடுகின்ற அம்பலம் சூழ் திருவீதிப்
பொற்பதியாம் பெரும் பற்ற புலியூர் வந்து அணைந்தார் 6.3.6

3570

எவ்வுலகும் உய்ய எடுத்து அருளிய சேவடியாரைச்
செவ்விய அன்புற வணங்கிச் சிந்தை களிவரத் திளைத்து
வவ்விய மெய் உணர்வின் கண் வரும் ஆனந்தக் கூத்தை
அவ்வியல்பில் கும்பிட்டு அங்கு ஆராமை அமர்ந்திருந்தார் 6.3.7

3571

தட நிலை மாளிகைப் புலியூர் தன்னில் உறைந்து இறைஞ்சிப் போய்
அடல் விடையின் மேல் வருவார் அமுது செய அஞ்சாதே
விடம் அளித்தது எனக் கருதி மேதினிக்கு வளம் நிறைத்தே
கடல் வயிறு நிறையாத காவிரியின் கரை அணைந்தார் 6.3.8

3572

காவிரி நீர்ப் பெரும் தீர்த்தம் கலந்து ஆடிக் கடந்து ஏறி
ஆவின் அரும் கன்று உறையும் ஆவடு தண் துறை அணைந்து
சேவில் வரும் பசுபதியார் செழும் கோயில் வலம் வந்து
மேவு பெரும் காதலினால் பணிந்து அங்கு விருப்பு உறுவார் 6.3.9

3573

அந்நிலைமைத் தானத்தை அகலாத ஒருகருத்து
முன்னி எழும் குறிப்பினால் மூளும் ஆதரவு எய்தப்
பின்னும் அகன்று ஏகுவார் பேண வரும் கோக்குலங்கள்
பொன்னி நதிக் கரைப் புறவில் புலம்புவன எதிர் கண்டார் 6.3.10

3574

அந்தணர்தம் சாத்தனூர் ஆமேய்பார் குடித் தோன்றி
முந்தை முறை நிரை மேய்ப்பான் மூலன் எனும் பெயருடையான்
வந்து தனி மேய் கின்றான் வினைமாள வாழ்நாளை
வெந்தொழில் கூற்றுவன் கூற்று உண்ண வீடி நிலத்து இடை வீழ்ந்தான் 6.3.11

3575

மற்றவன் தன் உடம்பினை அக்கோக் குலங்கள் வந்து அணைந்து
சுற்றி மிகக் கதறுன சுழல்வன மோப்பனவாக
நல் தவ யோகியார் காணா நம்பர் அருளாலே ஆ
உற்றதுயர் இவை நீங்க ஒழிப்பன் என உணர்கின்றார் 6.3.12

3576

இவன் உயிர் பெற்று எழில் அன்றி ஆக்கள் இடர் நீங்கா என்று
அவன் உடலில் தம் உயிரை அடை விக்க அருள் புரியும்
தவ முனிவர் தம் உடம்புக்கு அரண் செய்து தாம் முயன்ற
பவன வழி அவன் உடலில் தம் உயிரைப் பாய்த்தினார் 6.3.13

3577

பாய்த்திய பின் திரு மூலராய் எழலும் பசுக்கள் எலாம்
நாத் தழும்ப நக்கி மோந்து அணைந்து கனைப் பொடு நயந்து
வாய்த்து எழுந்த களிப்பினால் வால் எடுத்துத் துள்ளிப்பின்
நீத்த துயரினவாகி நிரைந்து போய் மேந்தனவால் 6.3.14

3578

ஆவின் நிரை மகிழ்வுறக் கண்ட அளிகூர்ந்த அருளினராய்
மேவியவை மேய் விடத்துப் பின் சென்று மேய்ந்தவை தாம்
காவிரி முன் துறைத் தண்ணீர் கலந்து உண்டு கரை ஏறப்
பூவிரி தண் புறவின் நிழல் இனிதாகப் புறங்காத்தார் 6.3.15

3579

வெய்ய சுடர்க் கதிரவனும் மேல் பாலை மலை அணையச்
சைவ நெறி மெய் உணந்தோர் ஆன் இனங்கள் தாமே முன்
பைய நடப்பன கன்றை நினைந்து படர் வன வாகி
வைய நிகழ் சாத்தனூர் வந்து எய்தப் பின் போனார் 6.3.16

3580

போனவர் தாம் பசுக்கள் எல்லாம் மனை தோறும் புகநின்றார்
மானம் உடை மனையாளும் வைகிய பின் தாழ்ந்தார் என்று
ஆன பயத்துடன் சென்றே அவர் நின்ற வழி கண்டாள்
ஈனம் இவர்க்கு அடுத்தது என மெய்தீண்ட அதற்கு இசையார் 6.3.17

3581

அங்கு அவளும் மக்களுடன் அரும் சுற்றம் இல்லாதாள்
தங்கி வெரு உற மயங்கி என் செய்தீர் எனத்தளர
இங்கு உனக்கு என்னுடன் அணை ஒன்று இல்லை என எதிர்மறுத்துப்
பொங்கு தவத்தோர் ஆங்கோர் பொது மடத்தின் உட்புகுந்தார் 6.3.18

3582

இல்லாளன் இயல்பு வேறு ஆனமை கண்டு இரவு எல்லாம்
சொல் ஆடாது இருந்தவர் பால் அணையாது துயிலாதாள்
பல்லார் முன் பிற்றை நாள் இவர்க்கு அடுத்த பரிசு உரைப்ப
நல்லார்கள் அவர் திறத்து நாடியே நயந்து உரைப்பார் 6.3.19

3583

பித்து உற்ற மயல் அன்று பிறிது ஒரு சார்பு உளது அன்று
சித்த விகற்பம் களைந்து தெளிந்த சிவ யோகத்தில்
வைத்த கருத்தினர் ஆகி வரம்பில் பெருமையில் இருந்தார்
இத்தகைமை அளப்பு அரிதால் யாராலும் என உரைப்பார் 6.3.20

3584

பற்று அறுத்த உபதேசப் பரமர் பதம் பெற்றார் போல்
முற்றும் உணர்ந்தனர் ஆகும் முன்னை நிலைமையில் உங்கள்
சுற்றம் இயல் பினுக்கு எய்தார் என்று உரைப்பத் துயர் எய்தி
மற்றவளும் மையலுற மருங்குள்ளார் கொண்டு அகன்றார் 6.3.21

3585

இந் நிலைமையில் இருந்தார் எழுந்திருந்து ஆங்கு ஆன் நிரைகள்
வந்த நெறியே சென்று வைத்த காப்பினில் உய்த்த
முந்தை உடல் பொறைகாணார் முழுது உணர்ந்த மெய்ஞ்ஞானச்
சிந்தையினில் வந்த செயல் ஆராய்ந்து தெளிகின்றார் 6.3.22

3586

தண்ணிலவார் சடையார் தாம் தந்த ஆகமப் பொருளை
மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்பக்
கண்ணிய அத்திரு அருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண் நிறைந்த உணர்வு உடையார் ஈசர் அருள் என உரைத்தார் 6.3.23

3587

சுற்றிய அக் குலத்துள்ளார் தொடர்ந்தார்கு தொடர்வு இன்மை
முற்றவே மொழிந்து அருள அவர் மீண்டு போனதன் பின்
பெற்றம் மீது உயர்த்தவர் தாள் சிந்தித்துப் பெருகு ஆர்வச்
செற்றம் முதல் கடிந்தவர்தாம் ஆவடுதண் துறை சேர்ந்தார் 6.3.24

3588

ஆவடு தண் துறை அணைந்து அங்கு அரும் பொருளை உறவணங்கி
மேவுவார் புறக் குடபால் மிக்கு உயர்ந்த அரசின் கீழ்த்
தேவிருக்கை அமர்ந்து அருளிச் சிவயோகம் தலை நின்று
பூவலரும் இதயத்துப் பொருளோடும் உணர்ந்து இருந்தார் 6.3.25

3589

ஊன் உடம்பில் பிறவிவிடம் தீர்ந்து உலகத்தோய் உய்ய
ஞானம் முதல் நான்கு மலர் நல் திரு மந்திர மாலை
பான்மை முறை ஓர் ஆண்டுக்கு ஒன்றாக பரம் பொருளாம்
ஏன எயிறு அணிந்தாரை ஒன்றவன்தான் என எடுத்து 6.3.26

3590

முன்னிய அப் பொருள் மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி
மன்னிய மூவாயிரத்து ஆண்டு இப்புவிமேல் மகிழ்ந்து இருந்து
சென்னி மதி அணிந்தார் தம் திரு அருளால் திருக் கயிலை
தன்னில் அணைந்து ஒரு காலும் பிரியாமைத் தாள் அடைந்தார் 6.3.27

3591

நலம் சிறந்த ஞான யோகக் கிரியா சரியை யெலாம்
மலர்ந்த மொழித் திருமூலத் தேவர் மலர்க் கழல் வணங்கி
அலர்ந்த புகழ்த் திருவாரூர் அமணர் கலக்கம் கண்ட
தலம் குலவு விறல் தண்டி அடிகள் திறம் சாற்றுவாம் 6.3.28

திருச்சிற்றம்பலம்

6.4 தண்டியடிகள் புராணம் (3592 - 3617)

திருச்சிற்றம்பலம்

3592

தண்டி அடிகள் திரு ஆரூர் பிறக்கும் பெருமைத் தவம் உடையார்
அண்ட வாணர் மறை பாட ஆடும் செம் பொன் கழல் மனத்துக்
கொண்ட கருத்தின் அகம் நோக்கும் குறிப்பே அன்றிப் புற நோக்கும்
கண்ட உணர்வு துறந்தார் போல் பிறந்த பொழுதே கண் காணார் 6.4.1

3593

காணும் கண்ணால் காண்பது மெய்த் தொண்டே ஆன கருத்து உடையார்
பேணும் செல்வத் திருவாரூர்ப் பெருமான் அடிகள் திரு அடிக்கே
பூணும் அன்பினால் பரவிப் போற்றும் நிலைமை புரிந்து அமரர்
சேணும் அறிய அரியதிருத் தொண்டில் செறியச் சிறந்து உள்ளார் 6.4.2

3594

பூவார் சடிலத் திருமுடியார் மகிழ்ந்த செல்வப் பூங்கோயில்
தேவ ஆசிரியன் முன் இறைஞ்சி வலம் செய்வாரய் செம்மை புரி
நாவால் இன்பம் உறும் காதல் நமச்சிவாய நற்பதமே
ஓவா அன்பில் எடுத்து ஓதி ஒரு நாள் போல வரும் நாளில் 6.4.3

3595

செம் கண் விடையார் திருக்கோயில் குடபால் தீர்த்தக் குளத்தின் பாங்கு
எங்கும் அமணர் பாழிகளாய் இடத்தால் குறைபாடு எய்துதலால்
அங்கு அந்நிலைமை தனைத் தண்டி அடிகள் அறிந்தே ஆதரவால்
இங்கு நான் இக் குளம் பெருகக் கல்ல வேண்டும் என்று எழுந்தார் 6.4.4

3596

குழி வாய் அதனில் குறி நட்டுக் கட்டும் கயிறு குளக் குலையின்
இழிவாய்ப் புறத்து நடுத் தறியோடு இசையக் கட்டி இடை தடவி
வழியால் வந்து மண் கல்லி எடுத்து மறித்தும் தடவிப் போய்
ஒழியா முயற்சியால் உய்த்தார் ஓதும் எழுத்தஞ்சுடன் உய்ப்பார் 6.4.5

3597

நண்ணிநாளும் நல்தொண்டர் நயந்த விருப்பால் மிகப் பெருகி
அண்ணல் தீர்த்தக் குளம் கல்லக்கண்ட அமணர் பொறார் ஆகி
எண்ணித் தண்டி அடிகள் பால் எய்தி முன் நின்று இயம்புவார்
மண்ணைக் கல்லில் பிராணி படும் வருத்த வேண்டாம் என்று உரைத்தார் 6.4.6

3598

மாசு சேர்ந்த முடை உடலார் மாற்றம் கேட்டு மறு மாற்றம்
தேசு பெருகும் திருத் தொண்டர் செப்புகின்றார் திரு இலிகாள்
பூசு நீறு சாந்தம் எனப் புனைந்த பிரானுக்கு ஆன பணி
ஆசிலா நல் அறம் ஆவது அறிய வருமோ உமக்கு என்றார் 6.4.7

3599

அந்தம் இல்லா அறிவு உடையார் உரைப்பக் கேட்ட அறிவு இல்லார்
சிந்தித்து இந்த அறம் கேளாய் செவியும் இழந்தாயோ என்ன
மந்த உணர்வும் விழிக்குருடும் கேளாச் செவியும் மற்று உமக்கே
இந்த உலகத்து உள்ளன என்று அன்பர் பின்னும் இயம்புவார் 6.4.8

3600

வில்லால் எயில் மூன்று எரித்தபிரான்
விரையார் கமலச் சேவடிகள்
அல்லால் வேறுகாணேன் யான்
அதுநீர் அறிதற்கார் என்பார்
நில்லா நிலையீர் உணர்வு இன்றி நும்
கண் குருடாய் என் கண் உலகு
எல்லாம் காண்பான் யான் கண்டால்
என் செய்வீர் என்று எடுத்து உரைத்தார் 6.4.9

3601

அருகர் அது கேட்டு உன் தெய்வத்து
அருளால் கண் நீ பெற்றாயேல்
பெருகும் இவ்வூரினில் நாங்கள் பின்னை
இருக்கிலோம் என்று
கருகு முருட்டு கைகளால் கொட்டை
வாங்கிக் கருத்தின் வழித்
தருகைக்கயிறும் தறியும் உடன் பறித்தார்
தங்கள் தலை பறித்தார் 6.4.10

3602

வெய்ய தொழிலார் செய்கையின் மேல்
வெகுண்ட தண்டி அடிகள்தாம்
மைகொள் கண்டர் பூங்கோயில் மணிவாயிலின்
முன் வந்து இறைஞ்சி
ஐயனே இன்று அமணர்கள் தாம்
என்னை அவமானம் செய்ய
நைவது ஆனேன் இது தீர நல்கும்
அடியேற்கு எனவீழ்ந்தார் 6.4.11

3603

பழுது தீர்ப்பார் திருத் தொண்டர் பரவி விண்ணப்பம் செய்து
தொழுது போந்து மடம் புகுந்து தூய பணி செய்யப் பெறாது
அழுது கங்குல் அவர் துயிலக் கனவில் அகில லோகங்கள்
முழுதும் அளித்த முதல்வனார் முன் நின்று அருளிச் செய்கின்றார் 6.4.12

3604

நெஞ்சில் மருவும் கவலையினை ஒழி நீ நின் கண் விழித் தந்த
வஞ்ச அமணர் தம் கண்கள் மறையுமாறு காண்கின்றாய்
அஞ்ச வேண்டாம் என்று அருளி அவர் பால் நீங்கி அவ்விரவே
துஞ்சும் இருளில் அரசன் பால் தோன்றிக் கனவில் அருள் புரிவார் 6.4.13

3605

தண்டி நமக்குக் குளம் கல்லக் கண்ட அமணர் தரியாராய்
மிண்டு செய்து பணிவிலக்க வெகுண்டான் அவன்பால் நீ மேவிக்

கொண்ட குறிப்பால் அவன் கருத்தை
முடிப்பாய் என்று கொள அருளித்
தொண்டர் இடுக்கண் நீங்க எழுந்து
அருளினார் அத்தொழில் உவப்பார் 6.4.14

3606

வேந்தன் அது கண்டு அப்பொழுதே விழித்து மெய்யின் மயிர் முகிழ்ப்பப்
பூந்தண் கொன்றை வேய்ந்தவரைப் போற்றிப் புலரத் தொண்டர்பால்
சார்ந்து புகுந்த படி விளம்பத்தம் பிரானார் அருள் நினைந்தே
ஏய்ந்த மன்னன் கேட்ப இது புகுந்த வண்ணம் இயம்புவார் 6.4.15

3607

மன்ன! கேள் யான் மழவிடையார் மகிழும் தீர்த்த குளம் கல்லத்
துன்னும் அமணர் அங்கு அணைந்து ஈது அறம் அன்று என்று பல சொல்லிப்
பின்னும் கயிறு தடவுதற்கு யான் பிணித்ததறிகள் அவை வாங்கி
என்னை வலிசெய்து யான் கல்லும் கொட்டைப் பறித்தார் என்று இயம்பி 6.4.16

3608

அந்தன் ஆன உனக்கு அறிவும் இல்லை என்றார் யான் அதனுக்கு
எந்தை பெருமான் அருளால் யான் விழிக்கில் என் செய்வீர் என்ன
இந்த ஊரில் இருக்கிலோம் என்றே ஓட்டினார் இதுமேல்
வந்தவாறு கண்டு இந்த வழக்கை முடிப்பது என மொழிந்தார் 6.4.17

3609

அருகர் தம்மை அரசனும் அங்கு அழைத்துக் கேட்க அதற்கு இசைந்தார்
மருவும் தொண்டர் முன்போக மன்னன் பின்போய் மலர்வாவி
அருகு நின்று விறல் தண்டி அடிகள் தம்மை முகம் நோக்கிப்
பெருகுந் தவத்தீர் கண் அருளால் பெறுமா காட்டும் எனப் பெரியோர் 6.4.18

3610

ஏய்ந்த அடிமை சிவனுக்கு யான் என்னில் இன்று என் கண் பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவும் சமணர் கண் இழப்பார்
ஆய்ந்த பொருளும் சிவபதமே ஆவது என்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்து ஓதி மணிநீர் மூழ்கினார் 6.4.19

3611

தொழுது புனல் மேல் எழும் தொண்டர் தூய மலர்க்கண் பெற்று எழுந்தார்
பொழுது தெரியாவகை அமரர் பொழிந்தார் செழும் தண்பூமாரி
இழுதை அமணர் விழித்தே கண் இழந்து தடுமாறக் கண்டு
பழுது செய்த அமண் கெட்டது என்று மன்னன் பகர்கின்றான் 6.4.20

3612

தண்டி யடிகள் தம்முடனே ஒட்டிக் கெட்ட சமண் குண்டர்
அண்டர் போற்றும் திருவாரூர் நின்றும் அகன்று போய்க் கழியக்
கண்ட அமணர் தமை எங்கும் காணா வண்ணம் துரக்க என
மண்டி வயவர் சாடுதலும் கண்கள் காணார் மனம் கலங்கி 6.4.21

3613

குழியில் விழுவார் நிலை தளர்வார் கோலும் இல்லை- என உரைப்பார்
வழி ஈது என்று தூறு அடைவார் மாண்டோம் என்பாமதி-கெட்டீர்

அழியும் பொருளை வட்டித்து இங்கு கழிந்தோம் என்பார்-அரசனுக்கு
பழி ஈது ஆமோ என்று உரைப்பார் பாய்கள் இழப்பர்-பறிதலையார் 6.4.22

3614

பீலி தடவிக் காணாது பெயர்வார் நின்று பேதுறுவார்
காலினோடு கை முறியக் கல் மேல் இடறி வீழ்வார்கள்
சால நெருங்கி எதிர் எதிரே தம்மில் தாமே முட்டிடுவார்
மாலும் மனமும் அழிந்து ஓடி வழிகள் அறியார் மயங்குவார் 6.4.23

3615

அன்ன வண்ணம் ஆரூரில் அமணர் கலக்கம் கண்டவர் தாம்
சொன்ன வண்ணமே அவரை ஓடத் தொடர்ந்து துரந்து அதன்பின்
பன்னும் பாழிப் பள்ளிகளும் பறித்துக் குளம் சூழ் கரைபடுத்து
மன்னவனும் மனம் மகிழ்ந்து வந்து தொண்டர் அடிபணிந்தான் 6.4.24

3616

மன்னன் வணங்கிப் போயின பின் மாலும் அயனும் அறியாத
பொன் அம் கழல்கள் போற்றி இசைத்து புரிந்த பணியும் குறை முடித்தே
உன்னும் மனத்தால் அஞ்சு எழுத்தும் ஓதி வழுவாது ஒழுகியே
மின்னும் சடையார் அடி நீழல் மிக்க சிறப்பின் மேவினார் 6.4.25

3617

கண்ணின் மணிகள் அவை இன்றிக் கயிறு தடவி குளம்தொட்ட
எணில் பெருமைத் திருத் தொண்டர் பாதம் இறைஞ்சி இடர் நீங்கி
விண்ணில் வாழ்வார் தாம் வேண்டப் புரங்கள் வெகுண்டார் வேல் காட்டூர்
உள் நிலாவும் புகழ்த் தொண்டர் மூர்க்கர் செய்கை உரைக்கின்றாம் 6.4.26

திருச்சிற்றம்பலம்

6.5 மூர்க்க நாயனார் புராணம் (3618 - 3629)

திருச்சிற்றம்பலம்

3618

மன்னிப் பெருகும் பெரும் தொண்டை வளநாடு அதனில் வயல் பரப்பும்
நல் நித்திலம் வெண் திரைப்பாலி நதியின் வடபால் நலம் கொள் பதி
அன்னப் பெடைகள் குடை வாவி அலர் புக்காட அரங்கின் இடை
மின்னுக் கொடிகள் துகில் கொடிகள் விழவில் காடு வேற்காடு 6.5.1

3619

செம் பொன் புரிசை திருவேற்காடு அமர்ந்த செய்ய சடைக் கற்றை
நம்பர்க்கு உம்பர்க்கு அமுது அளித்து நஞ்சை அமுது செய்தவருக்கு
இம்பர் தலத்தில் வழி அடிமை என்றும் குன்றா இயல்பில் வரும்
தம் பற்று உடைய நிலை வேளாண் குலத்தில் தலைமை சார்ந்து உள்ளார் 6.5.2

3620

கோதில் மரபில் பிறந்துவளர்ந்து அறிவு கொண்ட நாள்தொடங்கி
ஆதி முதல்வர் திருநீற்றின் அடைவே பொருள் என்று அறிந்து அரனார்

காதல் அடியார்க்கு அமுது ஆக்கி அமுது செய்யக்கண்டு உண்ணும்
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார் 6.5.3

3621

தூய அடிசில் நெய் கன்னல் சுவையின் கறிகள் அவைஅமைத்து
மேய அடியார் தமைப் போற்றி விருப்பால் அமுது செய்வித்தே
ஆய பொருளும் அவர் வேண்டும் படியால் உதவி அன்பு மிக
ஏயுமாறு நாள் தோறும் இனைய பணி செய்து இன்புற்றார் 6.5.4

3622

இன்ன செயலின் ஒழுகுநாள் அடியார் மிகவும் எழுந்து அருள
முன்னம் உடைமை ஆன பொருள் முழுதும் மாள அடிமை உடன்
மன்னும் காணி ஆன நிலம் மற்றும் உள்ள திறம் விற்றே
அன்னம் அளித்தே மேன்மேலும் ஆரா மனத்தார் ஆயினார் 6.5.5

3623

அங்கண் அவ்வூர் தமக்கு ஒருபால் அடியார் தங்கட்கு அமுத ஆக்க
எங்கும் காணா வகை தோன்ற இலம் பாடு எய்தி இருந்துஅயர்வார்
தங்கும் வகையால் தான் முன்பு கற்ற தன்மை நற்சூதால்
பொங்கும் பொருள் ஆக்கவும் அங்குப் பொருவார் இன்மை இனில் போவார்
6.5.6

3624

பெற்றம் ஏறிப் பலிக்கு வரும் பெருமான் அமரும் தானங்கள்
உற்ற அன்பால் சென்று எய்தி உருகும் உள்ளத்தொடும் பணிந்து
கற்ற சூதால் நியதியாம் கருமம் முடித்தே கருதாரூர்
செற்ற சிலையார் திருக் குடந்தை அடைந்தார் வந்து சில நாளில் 6.5.7

3625

இருளாரும் மணிகண்டர் அடியார்க்கு இன் அமுது அளிக்கப்
பொருளாயம் எய்துதற்குப் புகழ்க் குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூது ஆடி உறுபொருள் வென்றன நம்பர்
அருளாகவே கொண்டு அமுது செய்வித்து இன்புறுவார் 6.5.8

3626

முதல் சூது தாம் தோற்று முதல் பணயம் அவர் கொள்ளப்
பின் சூது பல முறையும் வென்று பெரும் பொருள் ஆக்கிச்
சொல் சூதால் மறுத்தாரைச் சுரிகை உருவிக் குத்தி
நல் சூதர் மூர்க்கர் எனும் பெயர் பெற்றார் நால் நிலத்தில் 6.5.9

3627

சூதினில் வென்று எய்தும் பொருள் துரிசு அற்ற நல் உணர்வில்
தீது அகல அமுது ஆக்குவார் கொள்ளத் தாம் தீண்டார்
காதல் உடன் அடியார்கள் அமுது செயக் கடைப் பந்தி
ஏதம் இலா வகை தாமும் அமுது செய்து அங்கு இருக்கும் நாள் 6.5.10

3628

நாதன் தன் அடியார்க்கு நல் அடிசில் நாள்தோறும்
ஆதரவினால் அமுது செய்வித்து அங்கு அருளாலே

ஏதங்கள் போய் அகல இவ் உலகைவிட்டு அதன்பின்
பூதங்கள் இசைபாட ஆடுவார் புரம் புக்கார் 6.5.11

3629

வல்லார்கள் தமைவென்று சூதினால் வந்த பொருள்
அல்லாரும் கறைக் கண்டர் அடியவர்கள் தமக்கு ஆக்கும்
நல்லார் நல் சூதராம் மூர்க்கர் கழல் நாம் வணங்கிச்
சொல்லார் சீர்ச் சோமாசி மாறர் திறம் சொல்லுவாம் 6.5.12

திருச்சிற்றம்பலம்

6.6 சோமாசி மாற நாயனார் புராணம் (3630 - 3634)

திருச்சிற்றம்பலம்

3630

சூதம் பயிலும் பொழில் அம்பரில் தூய வாய்மை
வேதம் பயிலும் மறையாளர் குலத்தின் மேலோர்
ஏதம் புரியும் எயில் செற்றவர்க்கு அன்பர் வந்தால்
பாதம் பணிந்தார் அமுது ஊட்டும் நல் பண்பின் மிக்கார் 6.6.1

3631

யாழின் மொழியாள் தனிப் பாகரைப் போற்றும் யாகம்
ஊழின் முறைமை வழுவாது உலகங்கள் ஆன
ஏழும் உவப்பப் புரிந்து இன்புறச் செய்த பேற்றால்
வாழும் திறம் ஈசர் மலர்க் கழல் வாழ்த்தல் என்பார் 6.6.2

3632

எத்தன்மையர் ஆயினும் ஈசனுக்கு அன்பர் என்றால்
அத் தன்மையர் தாம் நமை ஆள்பவர் என்று கொள்வார்
சித்தம் தெளியச் சிவன் அஞ்செழுத்து ஓதும் வாய்மை
நித்தம் நியமம் எனப் போற்றும் நெறியில் நின்றார் 6.6.3

3633

சீரும் திருவும் பொழியும் திருவாரூர் எய்தி
ஆரம் திகழ் மார்பின் அணுக்கவன் தொண்டர்க்கு அன்பால்
சாரும் பெரு நண்பு சிறப்ப அடைந்து தங்கிப்
பாரும் விசும்பும் பணியும் பதம் பற்றி உள்ளார் 6.6.4

3634

துன்றும் புலன் ஐந்து உடன் ஆறு தொகுத்த குற்றம்
வென்று இங்கு இது நல்நெறி சேரும் விளக்கம் என்றே
வன் தொண்டர் பாதம் தொழுது ஆன சிறப்பு வாய்ப்ப
என்றும் நிலவும் சிவலோ கத்தில் இன்பம் உற்றார் 6.6.5

3635

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

பணையும் தடமும் புடை சூழும் ஒற்றியூரில் பாகத்தோர்
துணையும் தாமும் பிரியாதார் தோழத்தம் பிரானாரை
இணையும் கொங்கைச் சங்கிலியார் எழில் மென்பணை தோள் எய்துவிக்க
அணையும் ஒருவர் சரணமே அரணமாக அடைந்தோமே 6.6.6

திருச்சிற்றம்பலம்

வம்பறா வரிவண்டு சருக்கம் முற்றிற்று.

சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்
இரண்டாம் காண்டம் / பகுதி 4
சருக்கம் 7 - 13 :

periya purANam of cEkkizAr
Canto 2, Carukkam 7 to 13
(in tamil script, TSCII format)

***

Etext in Tamil Script - TSCII format (v. 1.7)
Our Sincere thanks go to Dr. Thomas Malten and Colleagues of the Univ. of Koeln, Germany for providing us with the transliterated/romanized version of the etext and giving us permission to release the TSCII version as part of Project Madurai etext collections.
TSCII proof reading by tiruciRRampalam aRakaTTaLai, Kovilpatti, Tamilnadu.
Preparation of HTML and PDF : Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

This pdf file is based on TSCInaimathi font embedded in the file. Hence this file can be viewed and printed on all computer platforms: Windows, Macintosh and Unix without the need to have the font installed in your computer.

© Project Madurai 2005
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

சேக்கிழார் அருளிய
திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்
இரண்டாம் காண்டம் - சருக்கம் 7
வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் (3636 - 3938))

7.1 சாக்கிய நாயனார் புராணம் (3636 - 3653)
7.2 சிறப்புலி நாயனார் புராணம் (3654 .- 3659)
7.3 சிறுத்தொண்ட நாயனார் புராணம் (3660 - 3747)
7.4 கழற்றி அறிவார் நாயனார் புராணம் (3748 - 3922)
7.5 கணநாத நாயனார் புராணம் (3923 - 3938)

7.1 சாக்கிய நாயனார் புராணம் (3636 - 3653)

திருச்சிற்றம்பலம்

3636

அறு சமயத் தலைவராய் நின்றவருக்கு அன்பராய்
மறு சமயச் சாக்கியர்தம் வடிவினால் வரும் தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கம் கண்டு உவந்து கல் எறிந்து
மறுவில் சரண் பெற்ற திறம் அறிந்தபடி வழுத்துவாம் 7.1.1

3637

தாளாளர் திருச்சங்க மங்கையினில் தகவுடைய
வேளாளர் குலத்து உதித்தார் மிக்க பொருள் தெரிந்து உணர்ந்து
கேளாகிப் பல் உயிர்க்கும் அருள் உடையார் ஆய்க் கெழுமி
நீளாது பிறந்து இறக்கும் நிலை ஒழிவேன் என நிற்பார் 7.1.2

3638

அந் நாளில் எயில் காஞ்சி அணிநகரம் சென்று அடைந்து
நல்ஞானம் அடைவதற்குப் பலவழியும் நாடுவார்
முன்னாகச் சாக்கியர் தாம் மொழி அறத்தின் வழி சார்ந்து
மன்னாத பிறப்பு அறுக்கும் தத்துவத்தின் வழி உணர்வார் 7.1.3

3639

அந் நிலைமைச் சாக்கியர்தம் அரும் கலை நூல் ஓதி அது
தன்னிலையும் புறச் சமயச் சார்வுகளும் பொருள் அல்ல
என்னும் அது தெளிந்து ஈசர் அருள் கூட ஈறில் சிவ
நன்னெறியே பொருள் ஆவது என உணர்வு நாட்டுவார் 7.1.4

3640

செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்
மெய் வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்ல வற்றுக்கு இல்லை என
உய்வகையால் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்து அறிந்தார் 7.1.5

3641

எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள் என்றே
துன்னிய வேடம் தன்னைத் துறவாதே தூய சிவம்
தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலை நிற்பார் 7.1.6

3642

எல்லாம் உடைய ஈசனே இறைவன் என்ன அறியாதார்
பொல்லா வேடச் சாக்கியரே ஆகிப் புல்லர் ஆகுவார்
அல்லார் கண்டர் தமக்கு இந்த அகிலம் எல்லாம் ஆள் என்ன
வல்லார் இவர் அவ் வேடத்தை மாற்றாது அன்பின் வழிநிற்பார் 7.1.7

3643

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்
நாணாது நேடியமால் நான் முகனும் காண நடுச்
சேணாரும் தழல் பிழம்பாய்த் தோன்றிது தெளிந்தாராய் 7.1.8

3644

நாள் தோறும் சிவலிங்கம் கண்டு உண்ணும் அது நயந்து
மாடோர் வெள் இடை மன்னும் சிவலிங்கம் கண்டு மனம்
நீடோடு களியுவகை நிலைமை வரச் செயல் அறியார்
பாடோர் கல் கண்டு அதனைப் பதைப்போடும் எடுத்து எறிந்தார் 7.1.9

3645

அகம் நிறைந்த பேர் உவகை அடங்காத ஆதரவால்
மகவு மகிழ்ந்து உவப்பார்கள் வன்மை புரிசெயலினால்
இகழ்வனவே செய்தாலும் இளம் புதல்வர்க்கு இன்பமே
நிகழும் அது போல் அதற்கு நீள் சடையார் தாம் மகிழ்வார் 7.1.10

3646

அன்றுபோய் பிற்றைநாள் அந்நியதிக்கு அனையுங்கால்
கொன்றை முடியார் மேல் தாம் கல் எறிந்த குறிப்புஅதனை
நின்றுணர்வார் எனக்கு அப்போது இது நிகழ்ந்தது அவர் அருளே
என்று அதுவே தொண்டு ஆக என்றும் அது செய நினைந்தார் 7.1.11

3647

தொடங்கிய நாள் அருளிய அத்தொழில் ஒழியா வழிதொடரும்
கடன் புரிவார் அது கண்டு கல் எறிவார் துவராடைப்
படம் புனை வேடம் தவிரார் பசுபதியார் தம் செயலே
அடங்கலும் என்பது தெளிந்தார் ஆதலினால் மாதவர்தாம் 7.1.12

3648

இந் நியதி பரிவோடும் வழுவாமல் இவர் செய்ய
முன்னும் திருத்தொண்டர் நிலை முடிந்தபடி தான் மொழியில்
துன்னிய மெய் அன்புடனே எழுந்தவினை தூயவர்க்கு
மன்னு மிகு பூசனையாம் அன்பு நெறி வழக்கினால் 7.1.13

3649

கல்லாலே எறிந்த அதுவும் அன்பான படி காணில்
வில்வேடர் செருப்பு அடியும் திருமுடியில் மேவிற்றால்
நல்லார் மற்று அவர் செய்கை அன்பாலே நயந்து அதனை
அல்லாதார் கல் என்பார் அரனார்க்கு அஃது அலராமால் 7.1.14

3650

அங்கு ஒரு நாள் அருளாலே அயர்ந்து உண்ணப் புகுகின்றார்
எங்கள் பிரான் தனை எறியாது அயர்ந்தேன் யான் என எழுந்து
பொங்கியது ஓர் காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு
வெங்கரியின் உரி புனைந்தார் திருமுன்பு மேவினார் 7.1.15

3651

கொண்டதொரு கல்எடுத்துக் குறிகூடும் வகை எறிய
உண்டி வினை ஒழித்து அஞ்சி ஓடி வரும் வேட்கை ஓடும்
கண்டருளும் கண்நுதலார் கருணை பொழிதிருநோக்கால்
தொண்டர் எதிர் நெடும் விசும்பில் துணைவி ஓடும் தோன்றினார் 7.1.16

3652

மழ விடைமேல் எழுந்து அருளி வந்த ஒரு செயலாலே
கழல் அடைந்த திருத்தொண்டர் கண்டு கரம் குவித்து இறைஞ்சி
விழ அருள் நோக்கு அளித்து அருளிமிக்க சிவலோகத்தில்
பழ அடிமைப் பாங்கு அருளிப் பரமர் எழுந்து அருளினார் 7.1.17

3653

ஆதியார் தம்மை நாளும் கல் எறிந்து அணுகப் பெற்ற
கோதில் சீர்த் தொண்டர் கொண்ட குறிப்பினை அவர்க்கு நல்கும்
சோதியார் அறிதல் அன்றித் துணிவது என் அவர்தான் சூடித்
தீதினை நீக்கல் உற்றேன் சிறப்புலியாரைச் செப்பி 7.1.18

திருச்சிற்றம்பலம்

7.2 சிறப்புலி நாயனார் புராணம் (3654 - 3659)

திருச்சிற்றம்பலம்

3654

பொன்னி நீர் நாட்டின் நீடும் பொன் பதி புவனத்து உள்ளோர்
இன்மையால் இரந்து சென்றோர்க்கு இல்லை என்னாதே ஈயும்
தன்மையார் என்று நன்மை சார்ந்த வேதியரைச் சண்பை
மன்னனார் அருளிச்செய்த மறைத் திரு ஆக்கூர் அவ்வூர் 7.2.1

3655

தூ மலர்ச் சோலை தோறும் சுடர் தொடுமாடம் தோறும்
மா மழை முழக்கம் தாழ மறை ஒலி முழக்கம் ஓங்கும்
பூ மலி மறுகில் இட்ட புகை அகில் தூபம் தாழ
ஓம நல் வேள்விச் சாலை ஆகுதித் தூபம் ஓங்கும் 7.2.2

3656

ஆலை சூழ் பூக வேலி அத்திரு ஆக்கூர் தன்னில்
ஞாலம் ஆர் புகழின் மிக்கார் நான் மறைக் குலத்தில் உள்ளார்
நீலம் ஆர் கண்டத்து எண் தோள் நிருத்தர்தம் திருத்தொண்டு ஏற்ற
சீலராய்ச் சாலும் ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார் 7.2.3

3657

ஆளும் அங்கணருக்கு அன்பர் அணைந்த போது அடியில் தாழ்ந்து
மூளும் ஆதரவு பொங்க முன்பு நின்று இனிய கூறி
நாளும் நல் அமுதம் ஊட்டி நயந்தன எல்லாம் நல்கி
நீளும் இன்பத்து உள் தங்கி நிதிமழை மாரி போன்றார் 7.2.4

3658

அஞ்சு எழுத்து ஓதி அங்கி வேட்டு நல் வேள்வி எல்லாம்
நஞ்சு அணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலத்து
எஞ்சலில் அடியார்க்கு என்றும் இடை அறா அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசர் தாள் நிழல் தங்கினாரே 7.2.5

3659

அறத்தினில் மிக்க மேன்மை அந்தணர் ஆக்கூர் தன்னில்
மறைப் பெரு வள்ளலார் வண் சிறப்புலி யார் தாள் வாழ்த்திச்
சிறப்புடைத் திருச் செங்காட்டங் குடியினில் செம்மை வாய்ந்த
வீரர் சிறுத் தொண்டர் செய்த திருத்தொழில் விளம்பல் உற்றேன் 7.2.6

திருச்சிற்றம்பலம்

7.3 சிறுத்தொண்ட நாயனார் புராணம் (3660 - 3747)

திருச்சிற்றம்பலம்

3660

உரு நாட்டுஞ் செயல் காமன் ஒழிய விழிபொழி செந்தீ
வரும் நாட்டத் திருநுதலார் மகிழ்து அருளும் பதிவயலில்
கருநாட்டக் கடைசியர் தம் களி நாட்டும் காவேரித்
திரு நாட்டு வளம் காட்டும் செங்காட்டக் குடி ஆகும் 7.3.1

3661

நிலவிய அத் திருப்பதியில் நெடும் சடையார் நீற்று அடைவால்
உலகில் வளர் உயிர்க்கு எல்லாம் உயர் காவல் தொழில் பூண்டு
மலர் புகழ் மா மாத்திரர் தம் குலம் பெருக வந்து உள்ளார்
பலர் புகழும் திருநாமம் பரஞ்சோதியார் என்பார் 7.3.2

3662

ஆயுள் வேதக் கலையும் அலகில் வடநூல் கலையும்
தூய படைக்கலத் தொழிலும் துறை நிரம்பப் பயின்று அவற்றால்
பாயும் மதக் குஞ்சரமும் பரியும் உகைக்கும் பண்பு
மேய தொழில் விஞ்சையிலும் மேதினியில் மேல் ஆனார் 7.3.3

3663

உள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவு இன்றி பயின்று அவற்றால்
தெள்ளி வடித்து அறிந்த பொருள் சிவன் கழலில் செறிவு என்றே
கொள்ளும் உணர்வினில் முன்னே கூற்று உதைத்த கழற்கு அன்பு
பள்ளமடையாய் என்றும் பயின்று வரும் பண்புடையார் 7.3.4

3664

ஈசன் அடியார்க்கு என்றும் இயல்பான பணி செய்தே
ஆசில் புகழ் மன்னவன்பால் அணுக்கராய் அவற்கு ஆகப்
பூசல் முனைக் களிறு உகைத்து போர் வென்று பொரும் அரசர்
தேசங்கள் பல கொண்டு தேர்வேந்தன் பால் சிறந்தார் 7.3.5

3665

மன்னவர்க்குத் தண்டு போய் வடபுலத்து வாதாவித்
தொன் நகரம் துகள் ஆகத் துனைகெடும் கை வரை உகைத்துப்
பல் மணியும் நிதிக் குவையும் பகட்டு இனமும் பரித் தொகையும்
இன்னை எண்ணிலகவர்ந்தே இகல் அரசன் முன் கொணர்ந்தார் 7.3.6

3666

கதிர் முடி மன்னனும் இவர் தம் களிற்று உரிமை ஆண்மையினை
அதிசயித்துப் புகழ்ந்து உரைப்ப அறிந்த அமைச்சர்களுக்கு உரைப்பார்
மதி அணிந்தார் திருத்தொண்டு வாய்த்தலி உடைமையினால்
எதிரி இவருக்கு இவ்வுலகில் இல்லை என எடுத்து உரைத்தார் 7.3.7

3667

தம் பெருமான் திருத்தொண்டர் எனக் கேட்ட தார் வேந்தன்
உம்பர் பிரான் அடியாரை உணராதே கெட்டு ஒழிந்தேன்
வெம்பு கொடும் போர் முனையில் விட்டு இருந்தேன் எனவெருவுற்று
எம் பெருமான் இது பொறுக்க வேண்டும் என இறைஞ்சினான் 7.3.8

3668

இறைஞ்சுதலும் முன் இறைஞ்சி என் உரிமைத் தொழிற்கு அடுத்த
திறம் புரிவேன் அதற்கு என்னோ தீங்கு என்ன ஆங்கு அவர்க்கு
நிறைந்த நிதிக்குவைகளுடன் நீடு விருத்திகள் அளித்தே
அறம் புரி செங்கோல் அரசன் அஞ்சலி செய்து உரைக்கின்றான் 7.3.9

3669

உம்முடைய நிலைமையினை அறியாமை கொண்டு உய்த்தீர்
எம்முடைய மனக் கருத்துக்கு இனிதாக இசைந்து உமது
மெய்ம்மைபுரி செயல் விளங்க வேண்டியவாறே சரித்துச்
செம்மை நெறி திருத்தொண்டு செய்யும் என விடை கொடுத்தான் 7.3.10

3670

மன்னவனை விடை கொண்டு தம்பதியில் வந்து அடைந்து
பன்னு புகழ் பரஞ் சோதியார் தாமும் பனி மதி வாழ்
சென்னியரைக் கணபதி ஈச்சரத்து இறைஞ்சித் திருத்தொண்டு
முன்னை நிலைமையில் வழுவா முறை அன்பில் செய்கின்றார் 7.3.11

3671

வேத காரணர் அடியார் வேண்டிய மெய்ப் பணி செய்யத்
தீதில் குடிப் பிறந்தார் திருவெண்காட்டு நங்கை எனும்
காதல் மனைக் கிழத்தியார் கருத்து ஒன்ற வரும் பெருமை
நீதி மனை அறம் புரியும் நீர்மையினை நிலை நிற்பார் 7.3.12

3672

நறை இதழித் திரு முடியார் அடியாரை நாள் தோறும்
முறைமையினில் திரு அமுது முன் ஊட்டிப் பின் உண்ணும்
நிறையுடைய பெருவிருப்பில் நியதி ஆகக் கொள்ளும்
துறைவழுவா வகை ஒழுகும் தூய தொழில் தலை நின்றார் 7.3.13

3673

தூய திரு அமுது கனி கன்னல் அறுசுவைக் கறிநெய்
பாய தயிர் பால் இனிய பண்ணியம் உண் நீர் அமுதம்
மேய படியால் அமுது செய்விக்க இசைந்து அடியார்
மாயிரு ஞாலம் போற்ற வரும் இவர் பால் மனம் மகிழ்ந்தார் 7.3.14

3674

சீதமதி அரவின் உடன் செஞ்சடைமேல் செறிவித்த
நாதன் அடியார் தம்மை நயப்பாட்டு வழி பாட்டால்
மே தகையார் அவர் முன்புமிகச் சிறியராய் அடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் என நிகழ்ந்தார் அவனியின் மேல் 7.3.15

3675

கண் நுதலார் கணபதீச்சரத்தின் கண் கருத்து அமர
உண்ணிறை அன்பினில் பணி செய்து ஒழுவார் வழுவு இன்றி
எண்ணில் பெரும் சீர் அடியார் இடை விடாது அமுதுசெய
நண்ணிய பேர் உவகையுடன் நயந்து உறையும் நாளின் கண் 7.3.16

3676

நீராரும் சடை முடியார் அருளினால் நிறை தவத்துப்
பேராளர் அவர் தமக்குப் பெருகுதிரு மனை அறத்தின்
வேராகி விளங்கும் திரு வெண்காட்டு நங்கைபால்
சீராளத் தேவர் எனும் திருமைந்தர் அவதரித்தார் 7.3.17

3677

அருமையினில் தனிப் புதல்வர் பிறந்த பொழுது அலங்கரித்த
பெருமையினில் கிளை களிப்பப் பெறற்கு அரிய மணிபெற்று
வரும் மகிழ்ச்சி தாதையார் மனத்து அடங்காவகை வளரத்
திருமலி நெய் ஆடல் விழாச் செங்காட்டங்குடி எடுப்ப 7.3.18

3678

மங்கல நல் இயம் முழக்கம் மறை முழக்கம் வான் அளப்ப
அங்கணர் தம் சீர் அடியார்க்கு அளவு இறந்த நிதி அளித்துத்
தங்கள் மரபினில் உரிமை சடங்கு தச தினத்தினிலும்
பொங்கு பெரு மகிழ்ச்சியுடன் புரிந்து காப்பு அணிபுணைந்தார் 7.3.19

3679

ஆர்வம் நிறை பெரும் சுற்றம் அகமலர அளித்தவர் தாம்
பார் பெருகும் மகிழ்ச்சி உடன் பருவ முறைப் பாராட்டுச்
சீர் பெருகச் செய்ய வளர் திருமனார் சீறடியில்
தார் வளர் கிண்கிணி அசையத் தளர் நடையின் பதம் சார்ந்தார் 7.3.20

3680

சுருளும் மயிர் நுதல் சுட்டி துணைக் காதின் மணிக் குதம்பை
மருவு திருக்கண்ட நாண் மார்பினில் ஐம்படைக் கையில்
பொருவில் வயிரச் சரிகள் பொன் அரைஞாண் புனை சதங்கை
தெருவில் ஒளி விளங்க வளர் திருவிளையாட்டினில் அமர்ந்தார் 7.3.21

3681

வந்து வளர் மூவாண்டில் மயிர் வினை மங்கலம் செய்து
தந்தையாரும் பயந்த தாயாரும் தனிச்சிறுவர்
சிந்தை மலர் சொல் தெளிவித்தே செழும் கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்து அவரைப் பள்ளியினில் இருத்தினார் 7.3.22

3682

அந் நாளில் சண்பை நகர் ஆண்தகையார் எழுந்து அருள
முன்னாக எதிர்கொண்டு கொடு புகுந்து முந்நூல் சேர்
பொன் மார்பில் சிறுத் தொண்டர் புகலிகாவனார்தம்
நன்னமச் சேவடிகள் போற்றி இசைத்து நலம் சிறந்தார் 7.3.23

3683

சண்பையர் தம் பெருமானும் தாங்க அரிய பெரும் காதல்
பண்புடைய சிறுத்தொண்டர் உடன் பயின்று மற்று அவரை
மண் பரவும் திருப்பதிகத்தினில் வைத்துச் சிறப்பித்து
நண்பருளி எழுந்து அருளத் தாம் இனிது நயப்பு உற்றார் 7.3.24

3684

இத்தன்மை நிகழும் நாள் இவர் திருத்தொண்டு இரும் கயிலை
அத்தர் திருவடி இணைக் கீழ்ச் சென்று அணைய அவர் உடைய
மெய்த் தன்மை அன்பு நுகர்ந்து அருளுதற்கு விடையவர் தாம்
சித்தம் மகிழ் வயிரவராய்த் திருமலையின் நின்று அணைகின்றார் 7.3.25

3685

மடல் கொண்ட மலர் இதழி நெடும்சடையை வனப்பு எய்தக்
கடல் மண்டி முகந்து எழுந்த காள மேகச் சுருள் போல்
தொடர் பங்கி சுருண்டு இருண்டு தூறி நெறித்து அசைந்து செறி
படர் துஞ்சின் கரும் குஞ்சி கொந்தளம் ஆகப் பரப்பி 7.3.26

3686

அஞ்சனம் மஞ்சனம் செய்தது அனைய அணி கிளர் பம்பை
மஞ்சின் இடைஎழுந்த வான மீன் பரப்பு என்னப்
புஞ்ச நிரை வண்டு தேன் சும்பு புடை படர்ந்து ஆர்ப்பத்
துஞ்சின் உனித்து தனிப் பரப்பும் தும்பை நறுமலர் தோன்ற 7.3.27

3687

அருகு திருமுடிச் செருகும் அந்தி இளம் பிறை தன்னைப்
பெருகு சிறுமதியாக்கிப் பெயர்த்து சாத்தியது என்ன
விரிசுடர் செம்பவள ஒளி வெயில் விரிக்கும் விளங்கு சுடர்த்
திருநுதல் மேல் திருநீற்றுத் தனிப் பொட்டும் திகழ்ந்து இலங்க 7.3.28

3688

வெவ்வருக்கன் மண்டலமும் விளங்கு மதி மண்டலமும்
அவ்வனல் செம்மண்டலமும் உடன் அணைந்தது என அழகை
வவ்வும் திருக்காதின் மணிக் குழைச் சங்கு வளைத்து அதனுள்
செவ்வரத்த மலர் செறித்த திருத்தோடு புடை சிறக்க 7.3.29

3689

களம் கொள் விடம் மறைத்து அருளக் கடல் அமுத குமிழிநிரைத்
துளங்கொளி வெண் திரட் கோவைத் தூய வடம் அணிந்தது என
உளங்கொள்பவர் கரைந்து உடலும் உயிரும் உருகப் பெருக
விளங்கும் திருக் கழுத்தின் இடைவெண் பளிங்கின் வடம் திகழ 7.3.30

3690

செம்பரிதி கடல் அளித்த செக்கர் ஒளியினை அந்திப்
பம்பும் இருள் செறி பொழுது படர்ந்து அணைந்து சூழ்வது என
தம்பழைய கரியுரிவை கொண்டுசமைத்தது சாத்தும்
அம்பவளத் திருமேனிக் கஞ்சுகத்தின் அணிவிளங்க 7.3.31

3691

மிக்கு எழும் அன்பர்கள் அன்பு திருமேனி விளைந்தது என
அக்குமணியால் சன்ன வீரமும் ஆரமும் வடமும்
கைக்கு அணி கொள்வளைச்சரியும் அரைக் கடி சூத்திரச் சரியும்
தக்க திருக்கால் சரியும் சாத்திய ஒண் சுடர் தயங்க 7.3.32

3692

பொருவில் திருத் தொண்டர்க்குப் புவிமேல் வந்து அருள் புரியும்
பெருகருளின் திறம் கண்டு பிரான் அருளே பேணுவீர்
வரும் அன்பின் வழிநிற்பீர் என மறைபூண்டு அறைவனபோல்
திருவடிமேல் திருச்சிலம்பு திசை முழுதும் செல ஒலிப்ப 7.3.33

3693

அயன் கபாலம் தரித்த இடத்திருக்கையால் அணைத்த
வயங்கு ஒலி மூவிலைச்சூலம் மணித்திருத் தோள்மிசைப் பொலியத்
தயங்கு சுடர் வலத்திருக்கை தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன் தவத்தால் பெறும் புவியும் பாத தாமரை சூட 7.3.34

3694

அருள்பொழியும் திருமுகத்தில் அணி முறுவல் நிலவு எறிப்ப
மருள் பொழியும் மலம் சிதைக்கும் வடிச்சூலம் வெயில் எறிப்பப்
பொருள் பொழியும் பெருகு அன்பு தழைத்து ஓங்கிப்புவி ஏத்தத்
தெருள் பொழிவண் தமிழ்நாட்டுச் செங்காட்டம் குடிசேர்ந்தார் 7.3.35

3695

தண்டாத ஒரு வேட்கைப் பசி உடையார் தமைப்போலக்
கண்டாரைச் சிறுத் தொண்டர்மனை வினவிக் கடிது அணைந்து
தொண்டனார்க்கு எந்நாளும் சோறு அளிக்கும் திருத்தொண்டர்
வண்டார் பூந்தாரார் இம்மனைக்கு உள்ளாரோ என்ன 7.3.36

3696

வந்து அணைந்து வினவுவார் மாதவரேயாம் என்று
சந்தனம்மாம் தையலார் முன்வந்து தாள் வணங்கி
அந்தமில் சீர் அடியாரைத் தேடி அவர் புறத்து அணைந்தார்
எந்தமை ஆள் உடையீரே அகத்து எழுந்து அருளும் என 7.3.37

3697

மடவரலை முகம் நோக்கி மாதரார் தாம் இருந்த
இடவகையில் தனிபுகுதோம் என்று அருள அதுகேட்டு
விட அகல்வார் போல் இருந்தார் என வெருவி விரைந்து மனைக்
கடன் உடைய திருவெண்காட்டு அம்மை கடைத்தலை எய்தி 7.3.38

3698

அம்பலவர் அடியாரை அமுது செய்விப்பார் இற்றைக்கு
எம் பெருமான் யாவரையும் கண்டிலர் தேடிப் போனார்
வம்பென நீர் எழுந்து அருளி வரும் திருவேடம் கண்டால்
தம் பெரிய பேறு என்றே மிக மகிழ்வார் இனித்தாழார் 7.3.39

3699

இப்பொழுதே வந்து அணைவர் எழுந்து அருளி இரும் என்ன
ஒப்பில் மனை அறம் புரப்பீர் உத்தரா பதி உள்ளோம்
செப்பரும் சீர் சிறுத்தொண்டர் தமைக் காணச் சேர்ந்தனம் யாம்
எப்பரிசும் அவர் ஒழிய இங்கு இரோம் என்று அருளி 7.3.40

3700

கண்ணுதலில் காட்டாதார் கணபதீச் சரத்தின் கண்
வண்ணமலர் ஆத்தியின் கீழ் இருக்கின்றோம் மற்று அவர்தாம்
நண்ணினால் நாம் இருந்த பரிசு உரைப்பீர் என்று அருளி
அண்ணலார் திருவாத்தி அணைந்து அருளி அமர்ந்திருந்தார் 7.3.41

3701

நீரார் சடையான் அடியாரை நேடி எங்கும் காணாது
சீரார் தவத்துச் சிறுத்தொண்டர் மீண்டும் செல்வமனை எய்தி
ஆரா இன்ப மனைவியார்க்கு இயம்பி அழிவு எய்திட அவரும்
பாரா தரிக்கும் திருவேடத்து ஒருவர் வந்தபடி பகர்ந்தார் 7.3.42

3702

அடியேன் உய்ந்தேன் எங்கு உற்றார் உரையாய் என்ன அவர் மொழிவார்
வடி சேர் சூல கபாலத்தார் வட தேசத்தோம் என்றார் வண்
துடிசேர் கரத்துப் பயிரவர் யாம் சொல்ல இங்கும் இராதே போய்க்
கடிசேர் திரு ஆத்தியின் நிழல்கீழ் இருந்தார் கணபதீச் சரத்து 7.3.43

3703

என்று மனைவியார் இயம்ப எழுந்த விருப்பால் விரைந்து எய்திச்
சென்று கண்டு திருப்பாதம் பணிந்து நின்றார் சிறுத்தொண்டர்
நின்ற தொண்டர் தமை நோக்கி நீரோ பெரிய சிறுத்தொண்டர்
என்று திருவாய் மலர்ந்து அருள இறைவர் தம்மைத் தொழுது உரைப்பார் 7.3.44

3704

பூதி அணி சாதனத்தவர் முன் போற்றப் போதேன் ஆயிடினும்
நாதன் அடியார் கருணையினால் அருளிச் செய்வார் நான் என்று
கோதில் அன்பர் தமை அமுது செய்விப்பதற்குக் குலப்பதியில்
காதலாலே தேடியும் முன் காணேன் தவத்தால் உமைக் கண்டேன் 7.3.45

3705

அடியேன் மனையில் எழுந்து அருளி அமுது செய்ய வேண்டும் என
நெடியோன் அறியா அடியார்தாம் நிகழும் தவத்தீர் உமைக் காணும்
படியால் வந்தோம் உத்தர பதியோம் எம்மைப் பரிந்து ஊட்ட
முடியா துமக்குச் செய்கை அரிது ஒண்ணா என்று மொழிந்து அருள 7.3.46

3706

எண்ணா அடியேன் மொழியேன் நீர் அமுது செய்யும் இயல்பு அதனைக்
கண்ணார் வேடம் நிறை தவத்தீர் அருளிச் செய்யும் கடிது அமைக்க
தண்ணார் இதழி முடியார் தம் அடியார் தலைப்பட்டால் தேட
ஒண்ணாதனவும் உளவாகும் அருமை இல்லை என உரைத்தார் 7.3.47

3707

அரியது இல்லை எனக் கேட்ட பொழுதில் அழகு பொழிகின்ற
பெரிய பயிரவக் கோலப் பெருமான் அருளிச் செய்வார் யாம்
பரியுந் தொண்டீர் மூவிருது கழித்தால் பசு வீழ்த்திட உண்பது
உரிய நாளும் அதற்கு இன்றால் ஊட்ட அரிதாம் உமக்கு என்றார் 7.3.48

3708

சால நன்று முந் நிரையும் உடையேன் தாழ்வு இங்கு எனக்கு இல்லை
ஆலம் உண்டார் அன்பர் உமக்கு அமுதாம் பசுத்தான் இன்னது என
ஏல அருளிச் செயப் பெற்றால் யான் போய் அமுது கடிது அமைத்துக்
காலம் தப்பாமே வருவேன் என்று மொழிந்து கை தொழுதார் 7.3.49

3709

பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்
நண்பு மிக்கீர் நாம் உண்ணப் படுக்கும் பசுவும் நரப்பசுவாம்
உண்பதஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறுவின்றேல் இன்னம்
புண் செய் நோவில் வேல் எறிந்தால் போலும் புகல்வது ஒன்று என்றார் 7.3.50

3710

யாதும் அரியது இல்லை இனி ஈண்ட அருளிச் செய்யும் என
நாதன் தானும் ஒரு குடிக்கு நல்ல சிறுவன் ஒரு மகனைத்
தாதை அரியத் தாய் பிடிக்கும் பொழுதில் தம்மில் மனம் உவந்தே
ஏதம் இன்றி அமைத்த கறியாம் இட்டு உண்பது என மொழிந்தார் 7.3.51

3711

அதுவும் முனைவர் மொழிந்து அருளக் கேட்ட தொண்டர் அடியேனுக்கு
இதுவும் அரிது அன்று எம்பெருமான் அமுது செய்யப் பெறில் என்று
கதுமென் விரைவில் அவர் அவர் இசையப் பெற்றுக் களிப்பால் காதலொடு
மதுமென் கமல மலர்ப் பாதம் பணிந்து மனையில் வந்து அணைந்தார் 7.3.52

3712

அன்பு மிக்க பெரும் கற்பின் அணங்கு திரு வெண் காட்டு அம்மை
முன்பு வந்து சிறுத் தொண்டர் வரவு நோக்கி முன் நின்றே
இன்பம் பெருக மலர்ந்த முகம் கண்டு பாதமிசை இறைஞ்சிப்
பின்பு கணவர் முகம் நோக்கிப் பெருகும் தவத்தோர் செயல் வினவ 7.3.53

3713

வள்ளலாரும் மனையாரை நோக்கி வந்த மாதவர் தாம்
உள்ளம் மகிழ அமுது செய இசைந்தார் குடிக்கோர் சிறுவனுமாய்
கொள்ளும் பிராயம் ஐந்துளனாய் உறுப்பில் குறைபாடு இன்றித்தாய்
பிள்ளை பிடிக்க உவந்து பிதா அரிந்து சமைக்கப் பெறின் என்றார் 7.3.54

3714

அரிய கற்பின் மனைவியார் அவரை நோக்கி உரை செய்வார்
பெரிய பயிரவத் தொண்டர் அமுது செய்யப் பெறுவதற்கு இங்கு
உரிய வகையால் அமுது அமைப்போம் ஒருவன் ஆகி ஒரு குடிக்கு
வரும் அச்சிறுவன் தனைப் பெறுமாறு எவ்வாறு என்று வணங்குதலும் 7.3.55

3715

மனைவியார் தம் முகம் நோக்கி மற்று இத் திறத்து மைந்தர் தமை
நினைவு நிரம்ப நிதி கொடுத்தால் தருவார் உளரே? நேர் நின்று
தனையன் தன்னைத் தந்தை தாய் அரிவார் இல்லைத் தாழாதே
எனை இங்கு உய்ய நீ பயந்தான் தன்னை அழப்போம் யாம் என்றார் 7.3.56

3716

என்று கணவர் கூறுதலும் அதனுக்கு இசைந்து எம்பிரான் தொண்டர்
இன்று தாழாது அமுது செய்யப் பெற்று இங்கு அவர் தம் மலர்ந்த முகம்
நன்று காண்பது என நயந்து நம்மைக் காக்க வரும் மணியை
சென்று பள்ளியினில் கொண்டு வாரும் என்றார் திரு அனையார் 7.3.57

3717

காதல் மனையார் தாம் கூறக் கணவனாரும் காதலனை
ஏதம் அகலப் பெற்ற பேறு எல்லாம் எய்தினால் போல
நாதர் தமக்கு அங்கு அமுது ஆக்க நறும் மென் குதலை மொழிப் புதல்வன்
ஓத அணைந்த பள்ளியினில் உடன் கொண்டு எய்தக் கடிது அகன்றார் 7.3.58

3718

பள்ளியினில் சென்று எய்துதலும் பாதச் சதங்கை மணி ஒலிப்ப
பிள்ளை ஓடி வந்து எதிரே தழுவ எடுத்து இயல்பின் மேல்
கொள்ள அணைத்துக் கொண்டு மீண்டு இல்லம் புகுதக் குலமாதர்
வள்ளலார் தம் முன் சென்று மைந்தன் தன்னை எதிர் வாங்கி 7.3.59

3719

குஞ்சி திருத்தி முகம் துடைத்துக் கொட்டை அரை ஞாண் துகன் நீக்கி
மஞ்சள் அழிந்த அதற்கு இரங்கி மையும் கண்ணின் மருங்கு ஒதுக்கிப்
பஞ்சி அஞ்சும் மெல் அடியார் பரிந்து திருமஞ்சனம் ஆட்டி
எஞ்சல் இல்லாக் கோலம் செய்து எடுத்துக் கணவர் கைக் கொடுத்தார் 7.3.60

3720

அச்சம் எய்திக் கறி அமுதாம் என்னும் அதனால் அரும் புதல்வன்
உச்சி மோவார் மார்பின் கண் அணைத்தே முத்தம் தாமுண்ணார்
பொச்சம் இல்லாத் திருத் தொண்டர் புனிதர் தமக்குக் கறி அமைக்க
மெச்சும் மனத்தால் அடுக்களையின் மேவார் வேறு கொண்டு அணைவார் 7.3.61

3721

ஒன்றும் மனத்தார் இருவர்களும் உலகர் அறியார் என மறைவில்
சென்று புக்குப் பிள்ளைதனைப் பெற்ற தாயார் செழுங்கலங்கள்
நன்று கழுவிக் கொடு செல்ல நல்ல மகனை எடுத்து உலகை
வென்ற தாதையார் தலையைப் பிடிக்க விரைந்து மெய்த்தாயார் 7.3.62

3722

இனிய மழலைக் கிண்கிணிக் கால் இரண்டும் மடியின் புடை இடுக்கிக்
கனிவாய் மைந்தன் கை இரண்டும் கையால் பிடிக்கக் காதலனும்
நனி நீடு உவகை உறுகின்றார் என்று மகிழ்ந்து நகை செய்யத்
தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலை அரிவார் 7.3.63

3723

பொருவில் பெருமைப் புத்திரன் மெய்த் தன்மை அளித்தான் எனப் பொலிந்து
மருவு மகிழ்ச்சி எய்த அவர் மனைவியாரும் கணவனார்
அருமை உயிரை எனக்கு அளித்தான் என்று மிகவும் அகம் மலர
இருவர் மனமும் பேர் உவகை எய்தி அரிய வினை செய்தார் 7.3.64

3724

அறுத்த தலையின் இறைச்சி திரு அமுதுக்கு ஆகாது எனக் கழித்து
மறைத்து நீக்கச் சந்தனத்தார் கையில் கொடுத்து மற்றை உறுப்பு
இறைச்சி எல்லாம் கொத்தி அறுத்து எலும்பு மூளை திறந்து இட்டு
கறிக்கு வேண்டும் பல காயம் அரைத்துக் கூட்டிக் கடிது அமைப்பார் 7.3.65

3725

மட்டு விரிபூங்குழல் மடவார் அடுப்பில் ஏற்றி மனம் மகிழ்ந்தே
அட்ட கறியின் பதம் அறிந்து அங்கு இழிச்சி வேறோர் அரும்கலத்துப்
பட்ட நறையால் தாளித்துப் பலவும் மற்றும் கறி சமைத்துச்
சட்ட விரைந்து போனகமும் சமைத்துக் கணவர் தமக்கு உரைத்தார் 7.3.66

3726

உடைய நாதர் அமுது செய உரைத்த படியே அமைவதற்கு
அடையும் இன்பம் முன்னையிலும் ஆர்வம் பெருகிக் களி கூர
விடையில் வருவார் தொண்டர் தாம் விரைந்து சென்று மெல் மலரின்
புடைவண்டு அறையும் ஆத்தியின் கீழ் இருந்த புனிதர் முன் சென்றார் 7.3.67

3727

அண்ணல் திரு முன்பு அணைந்து இறைஞ்சி அன்பர் மொழிவார் அடியேன்பால்
நண்ணி நீர் இங்கு அமுது செய வேண்டும் என்று நான் பரிவு
பண்ணினேனாய்ப் பசித்து அருளத் தாழ்த்தது எனினும் பணி சமைத்தேன்
எண்ணம் வாய்ப்ப எழுந்து அருள வேண்டும் என்று அங்கு எடுத்துரைப்பார் 7.3.68

3728

இறையும் தாழாது எழுந்து அருளி அமுது செய்யும் என்று இறைஞ்ச
கறையும் கண்டத்தினில் மறைத்துக் கண்ணும் நுதலில் காட்டாதார்
நிறையும் பெருமைச் சிறுத்தொண்டீர் போதும் என்ன நிதி இரண்டும்
குறைவன் ஒருவன் பெற்று உவந்தால் போலக் கொண்டு மனை புகுந்தார் 7.3.69

3729

வந்து புகுந்து திருமனையில் மனைவியார் தாம் மாதவரை
முந்த எதிர் சென்று அடி வணங்கி முழுதும் அழகு செய்த மனைச்
சந்த மலர் மாலைகள் முத்தின் தாமம் நாற்றித் தவிசு அடுத்த
கந்த மலர் ஆசனம் காட்டிக் கமழ் நீர்க் கரகம் எடுத்து ஏந்த 7.3.70

3730

தூய நீரால் சிறுத்தொண்டர் சோதியார் தம் கழல் விளக்கி
ஆய புனிதப் புனல் தங்கள் தலைமேல் ஆரத் தெளித்து இன்பம்
மேய இல்லம் எம்மருங்கும் வீசி விரை மென்மலர்ச் சாந்தம்
ஏயும் தூப தீபங்கள் முதல் பூசனை செய்து இறைஞ்சுவார் 7.3.71

3731

பனி வெண் திங்கள் சடை விரித்த பயில் பூங்குஞ்சி பயிரவராம்
புனிதர் தம்மைப் போனகமும் கறியும் படைக்கும்படி பொற்பின்
வனிதை யாரும் கணவரும் முன் வணங்கிக் கேட்ப மற்று அவர்தாம்
இனிய அன்னம் உடன் கறிகள் எல்லாம் ஒக்கப் படைக்க என 7.3.72

3732

ரிசு விளங்கப் பரிகலமும் திருத்தி பாவாடையில் ஏற்றித்
தெரியும் வண்ணம் செஞ்சாலிச் செழும் போனகமும் கறி அமுதும்
வரிசையினில் முன் படைத்து எடுத்து மன்னும் பரிகலக் கான் மேல்
விரி வெண் துகிலின் மிசை வைக்க விமலர் பார்த்து அங்கு அருள் செய்வார் 7.3.73

3733

சொன்ன முறையில் படுத்த பசுத் தொடர்ந்த உறுப்பு எலாம் கொண்டு
மன்னு சுவையில் கறி ஆக்கிமாண அமைத்தீரே? என்ன
அன்னம் அனையார் தலை இறைச்சி அமுதுக்காகாது எனக் கழித்தோம் என்ன
அதுவும் கூட நாம் உண்பது என்றார் இடர் தீர்ப்பார் 7.3.74

3734

சிந்தை கலங்கிச் சிறுத் தொண்டர் மனைவியாரோடும் திகைத்து அயரச்
சந்தனத்தார் எனும் தாதியார்தாம் அந்தத் தலை இறைச்சி
வந்த தொண்டர் அமுது செயும் பொழுது நினைக்க வரும் என்றே
முந்த அமைத்தேன் கறி அமுது என்று எடுத்துக் கொடுக்க முகம் மலர்ந்தார் 7.3.75

3735

வாங்கி மகிழ்ந்து படைத்து அதன் பின் வணங்கும் சிறுத் தொண்டரை நோக்கி
ஈங்கு நமக்குத் தனி உண்ண ஒண்ணாது ஈசன் அடியார் இப்
பாங்கு நின்றார் தமைக் கொணர்வீர் என்று பரமர் பணித்து அருள
ஏங்கிக் கெட்டேன் அமுது செய்ய இடையூறு இதுவோ என நினைவார் 7.3.76

3736

அகத்தின் புறத்துப் போய் அருளால் எங்கும் காணார் அழிந்து அணைந்து
முகத்தில் வாட்டம் மிகப் பெருகப் பணிந்து முதல்வர்க்கு உரை செய்வார்
இகத்தும் பரத்தும் இனி யாரைக் காணேன் யானும் திருநீறு
சகத்தில் இடுவார் தமைக் கண்டே இடுவேன் என்று தாழ்ந்து இறைஞ்ச 7.3.77

3737

உம்மைப் போல் நீறு இட்டார் உளரோ உண்பீர் நீர் என்று
செம்மை கற்பில் திருவெண்காட்டு அம்மை தம்மைக் கலம் திருத்தி
வெம்மை இறைச்சி சோறு இதனில் மீட்டுப் படையும் எனப் படைத்தார்
தம்மை ஊட்ட வேண்டி அவர் உண்ணப் புகலும் தடுத்து அருளி 7.3.78

3738

ஆறு திங்கள் ஒழிந்து உண்போம் உண்ணும் அளவும் தரியாது
சோறு நாளும் உண்பீர் முன் உண்பது என் நம் உடன் துய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையும் என
ஈறும் முதலும் இல்லாதாருக்கு இப்போது உதவான் அவன் என்றார் 7.3.79

3739

நாம் இங்கு உண்பது அவன் வந்தால் நாடி அழையும் என நம்பர்
தாம் அங்கு அருளிச் செய்யத் தரியார் தலைவர் அமுது செய்து அருள
யாம் இங்கு என் செய்தால் ஆகும் என்பார் விரைவு உற்று எழுந்து அருளால்
பூ மென் குழலார் தம் மோடும் புறம் போய் அழைக்கப் புகும் போது 7.3.80

3740

வையம் நிகழும் சிறுத் தொண்டர் மைந்தா வருவாய் என அழைத்தார்
தையலாரும் தலைவர் பணி தலை நிற்பாராய்த் தாம் அழைப்பார்
செய்ய மணியே சீராளா வாராய் சிவனார் அடியார் யாம்
உய்யும் வகையால் உடன் உண்ண அழைக்கின்றார் என்று ஓலம் இட 7.3.81

3741

பரமர் அருளால் பள்ளியின் நின்று ஓடிவருவான் போல் வந்த
தரமில் வனப்பின் தனிப் புதல்வன் தன்னை எடுத்து தழுவித் தம்
கரம் முன் அணைத்துக் கணவனார் கையில் கெடுப்பக் களி கூர்ந்தார்
புரமூன்று எரித்தார் திருத்தொண்டர் உண்ணப் பெற்றோம் எனும் பொலிவால்
7.3.82

3742

வந்த மகனைக் கடிதில் கொண்டு அமுது செய்விப்பான் வந்தார்
முந்தவே அப் பயிரவராம் முதல்வர் அங்கண் மறைந்து அருளச்
சிந்தை கலங்கிக் காணாது திகைத்தார் வீழ்ந்தார் தெருமந்தார்
வெந்த இறைச்சிக் கறி அமுதும் கலத்தில் காணார் வெருவுற்றார் 7.3.83

3743

செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழும் அஞ்சுகத்துப் பயிரவர் யாம்
உய்ய அமுது செய்யாதே ஒளித்தது எங்கே எனத் தேடி
மையல் கொண்டு புறத்து அணைய மறைந்த அவர் தாம் மலை பயந்த
தைய லோடும் சரவணத்துத் தனயரோடும் தாம் அணைவார் 7.3.84

3744

தனி வெள் விடை மேல் நெடும் விசும்பில் தலைவர் பூத கண நாதர்
முனிவர் அமரர் விஞ்சையர்கள் முதலாய் உள்ளோர் போற்றி இசைப்ப
இனிய கறியும் திரு அமுதும் அமைத்தார் காண எழுந்து அருளிப்
பனி வெண் திங்கள் முடி துளங்க பரந்த கருணை நோக்கு அளித்தார் 7.3.85

3745

அன்பின் வென்ற தொண்டர் அவர்க்கு அமைந்த மனைவியார் மைந்தர்
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதும் கண்டு பரவசமாய்
என்பும் மனமும் கரைந்து உருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்
பின்பு பரமர் தகுதியினால் பெரியோர் அவருக்கு அருள் புரிவார் 7.3.86

3746

கொன்றை வேணியார் தாமும் பாகம் கொண்ட குலக் கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும் தம் விரைப்பூங்கமலச் சேவடிக் கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியாதே இறைஞ்சி இருக்க உடன் கொண்டு ஏகினார் 7.3.87

3747

ஆறு முடிமேல் அணிந்தவருக்கு அடியார் என்று கறி அமுதா
ஊறு இலாத தனிப் புதல்வன் தன்னை அரிந்து அங்கு அமுது ஊட்டப்
பேறு பெற்றார் சே அடிகள் தலைமேல் கொண்டு பிற உயிர்கள்
வேறு கழறிற்று அறிவார் தம் பெருமையும் தொழுது விளம்புவார் 7.3.88

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

7.4 கழற்றி அறிவார் நாயனார் புராணம் (3748 - 3922)

திருச்சிற்றம்பலம்

3748

மாவீற்று இருந்த பெரும் சிறப்பின் மன்னும் தொன்மை மலை நாட்டுப்
பா வீற்றிருந்த பல்புகழார் பயிலும் இயல்பில் பழம் பதி தான்
சேவீற்று இருந்தார் திருவஞ்சைக் களமும் நிலவிச் சேரர் குலக்
கோவீற்று இருந்து முறை புரியும் குலக்கோ மூதூர் கொடுங்கோளூர் 7.4.1

3749

காலை எழும் பல் கலையின் ஒலி களிற்றுக் கன்று வடிக்கும் ஒலி
சோலை எழும் மென் சுரும்பின் ஒலி துரகச் செருக்கால் சுலவும் ஒலி

பாலை விபஞ்சி பயிலும் ஒலி பாடல் ஆடல் முழவின் ஒலி
வேலை ஒலியை விழுங்கி எழ விளங்கி ஓங்கும் வியப்பினதால் 7.4.2

3750

மிக்க செல்வம் மனைகள் தொறும் விளையும் இன்பம் விளங்குவன
பக்கம் நெருங்கும் சாலை தொறும் பயில் சட்ட அறங்கள் பல்குவன
தக்க அணி கொள் மாடங்கள் தொறும் சைவ மேன்மை சாற்றுவன
தொக்க வளங்கள் இடங்கள் தொறும் அடங்க நிதியம் துவன்றுவன 7.4.3

3751

வேத நெறியின் முறை பிறழா மிக்க ஒழுக்கம் தலை நின்ற
சாதி நான்கு நிலை தழைக்கும் தன்மைத்து ஆகி தடம் மதில் சூழ்
சூத வகுள சரள நிரை துதையும் சோலை வள நகர் தான்
கோதை அரசர் மகோதை எனக் குலவும் பெயரும் உடைத்துலகில். 7.4.4

3752

முருகு விரியும் மலர்ச் சோலை மூதூர் அதன் கண் முறை மரபின்
அருதி அழியும் கலி நீக்கி அறம் கொள் சைவத் திறம் தழைப்பத்
திருகு சின வெம் களியானைச் சேரர் குலமும் உலகும் செய்
பெருகும் தவத்தால் அரன் அருளால் பிறந்தார் பெருமாக் கோதையர் 7.4.5

3753

திருமா நகரம் திரு அவதாரம் செய் விழவின் சிறப்பினால்
வருமா களிகூர் நெய் ஆடல் எடுப்ப வான மலர் மாரி
தருமா விசும்பின் மிக நெருங்க தழங்கும் ஒலி மங்கலம் தழைப்பப்
பெருமா நிலத்தில் எவ்வுயிரும் பெருகு மகிழ்ச்சி பிறங்கினவால் 7.4.6

3754

மண் மேல் சைவ நெறி வாழ வளர்ந்து முன்னை வழி அன்பால்
கண் மேல் விளங்கு நெறியினார் கழலே பேணும் கருத்தினராய்
உள் மேவிய அன்பினர் ஆகி உரிமை அரசர் தொழில் புரியார்
தெள் நீர் முடியார் திரு வஞ்சைக் களத்தில் திருத்தொண்டே புரிவார் 7.4.7

3755

உலகின் இயல்பும் அரசு இயல்பும் உறுதி அல்ல என உணர்வார்
புலரி எழுந்து புனல் மூழ்கிப் புனித வெண் நீற்றினும் மூழ்கி
நிலவு திரு நந்தன வனத்து நீடும் பணிகள் பல செய்து
மலரும் முகையும் கொணர்ந்து மாலை சாத்த மகிழ்ந்து அமைத்து 7.4.8

3756

திரு மஞ்சனமும் கொணர்ந்து திரு அலகும் இட்டு திரு மெழுக்கு
வரும் அன்புடன் இன்பு உறச் சாத்தி மற்றும் உள்ள திருப்பணிகள்
பெருமை பிறங்கச் செய்து அமைத்துப் பேணும் விருப்பில் திருப்பாட்டும்
ஒருமை நெறியின் உணர்வு வர ஓதிப் பணிந்தே ஒழுகும் நாள் 7.4.9

3757

நீரின் மலிந்த கடல் அகழி நெடுமால் வரையின் கொடிமதில் சூழ்
சீரின் மலிந்த திரு நகரம் அதனில் செங்கோல் பொறையன் எனும்
காரின் மலிந்த கெடை நிழல் மேல் கவிக்கும் கொற்றக் குடை நிழல் கீழ்த்
தாரின் மலிந்த புயத்து அரசன் தரணி நீத்துத் தவம் சார்ந்தான் 7.4.10

3758

வந்த மரபின் அரசு அளிப்பான் வனம் சார் தவத்தின் மருவிய பின்
சிந்தை மதி நூல் தேர் அமைச்சர் சில நாள் ஆய்ந்து தெளிந்த நெறி
முந்தை மரபில் முதல்வர் திருத் தொண்டு முயல்வார் முதற்று ஆக
இந்து முடியார் திருவஞ்சைக் களத்தில் அவர் பால் எய்தினார் 7.4.11

3759

எய்தி அவர் தம் எதிரில் இறைஞ்சி இருந்தண் சாரல் மலை நாட்டுச்
செய்தி முறைமையால் உரிமைச் செங்கோல் அரசு புரிவதற்கு
மைதீர் நெறியின் முடி சூடி அருளும் மரபால் வந்தது எனப்
பொய்தீர் வாய்மை மந்திரிகள் போற்றிப் புகன்ற பொழுதின்கண் 7.4.12

3760

இன்பம் பெருகும் திருத் தொண்டுக்கு இடையூறு ஆக இவர் மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை அரசு புரக்க அருள் உண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை இடை பெற்று அறிவேன் எனப் புக்கு
முன்பு தொழுது விண்ணப்பம் செய்தார் முதல்வர் அருளினால் 7.4.13

3761

மேவும் உரிமை அரசு அளித்தே விரும்பும் காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறு இல்லாத்
தாவில் விறலும் தண்டாத கொடையும் படை வாகனமும் முதல் ஆம்
காவல் மன்னர்க்கு உரியனவும் எல்லாம் கைவந்து உறப் பெற்றார் 7.4.14

3762

ஆன அருள் கொண்டு அஞ்சலி செய்து இறைஞ்சிப் புறம் போந்து அரசு அளித்தல்
ஊனம் ஆகும் திருத் தொண்டுக்கு எனினும் உடையான் அருளாலே
மேன்மை மகுடம் தாங்குதற்கு வேண்டும் அமைச்சர்க்கு உடன் படலும்
மான அமைச்சர் தாள் பணிந்து அவ் விணைமேல் கொண்டு மகிழ்ந்து எழுந்தார்
7.4.15

3762

உரிமை நாளில் ஒரை நலன் எய்த மிக்க உபகரணம்
பெருமை சிறக்க வேண்டுவன எல்லாம் பிறங்க மங்கலம் செய்து
இருமை உலகுக்கு ஒருமை முடி கவித்தார் எல்லா உயிரும் மகிழ்
தரும நிலைமை அறிந்து புவி தாங்கும் கழறிற் அறிவார் தாம் 7.4.16

3764

தம்பிரானார் கோயில் வலம் கொண்டு திருமுன் தாழ்ந்து எழுந்து
கும்ப யானை மேல் கொண்டு கொற்றக் குடையும் சாமரையும்
நம்பும் உரிமை யவர் தாங்க நலம் கொள் நகர் சூழ் வலம் கொள்வார்
மொய்ம்பில் உவரின் பொதி சுமந்தோர் வண்ணான் முன்னே வரக் கண்டார் 7.4.17

3765

மழையில் கரைந்து அங்கு உவர் ஊறி மேனி வெளுத்த வடிவினால்
உழையில் பொலிந்த திருக்கரத்தார் அடியார் வேடம் என்று உணர்ந்தே
இழையிற் சிறந்த ஓடை நுதல் யானைக் கழுத்தின் நின்று இழிந்து
விழைவில் பெருகும் காதலினால் விரைந்து சென்று கை தொழுதார் 7.4.18

3766

சேரர் பெருமான் தொழக் கண்டு சிந்தை கலங்கி முன் வணங்கி
யார் என்று அடியேனைக் கொண்டது அடி வண்ணான் எனச்
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேன் என்று திருநீற்றின்
வார வேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும் என மொழிந்தார் 7.4.19

3767

மன்னர் பெருமான் திருத்தொண்டு கண்டு மதி நீடு அமைச்சர் எலாம்
சென்னி மிசை அஞ்சலி செய்து போற்றச் சினமால் களிறு ஏறி
மின்னு மணிப் பூண் கொடி மாட வீதி மூதூர் வலம் கொண்டு
பொன்னின் மணி மாளிகை வாயில் புக்கார் புனை மங்கலம் பொலிய 7.4.20

3768

யானை மிசை நின்று இழிந்து அருளி இலங்கும் மணி மண்டபத்தின் கண்
மேன்மை அரி ஆசனத்து ஏறி விளங்கும் கொற்றக் குடை நிழற்றப்
பானல் விழியார் சாமரை முன் பணி மாறப்பன் மலர் தூவி
மான அரசர் போற்றிட வீற்று இருந்தார் மன்னர் பெருமானார் 7.4.21

3769

உலகு புரக்கும் கொடைவளவர் உரிமைச் செழியர் உடன் கூட
நிலவு பெரு முக் கோக்களாய் நீதி மனுநூல் நெறி நடத்தி
அலகில் அரசர் திறை கொணர அகத்தும் புறத்தும் பகை அறுத்து
மலரும் திரு நீற்று ஒளிவளர மறைகள் வளர மண் அளிப்பார் 7.4.22

3770

நீடும் உரிமைப் பேர் அரசால் நிகழும் பயனும் நிறை தவமும்
தேடும் பொருளும் பெரும் துணையும் தில்லைச் திருச்சிற்றம் பலத்துள்
ஆடும் கழலே எனத் தெளிந்த அறிவால் எடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அர்ச்சனை மேல் கொண்டார் சேரர் குலப் பெருமாள் 7.4.23

3771

வாசத் திருமஞ்சனம் பள்ளித் தாமம் சாந்தம் மணித் தூபம்
தேசில் பெருகும் செழும் தீபம் முதலாயினவும் திரு அமுதும்
ஈசர்க்கு ஏற்ற பரிசினால் அர்ச்சித்து அருள எந்நாளும்
பூசைக்கு அமர்ந்த பெரும் கூத்தர் பொன் பார் சிலம்பின் ஒலி அளித்தார் 7.4.24

3772

நம்பர் தாளின் வழிபாட்டால் நாளும் இன்புற்று அமர்கின்றார்
இம்பர் உலகில் இரவலர்க்கும் வறியோர் எவர்க்கும் ஈகையினால்
செம் பொன் மழையாம் எனப் பொழிந்து திருந்து வெற்றி உடன் பொருந்தி
உம்பர் போற்றத் தம் பெருமாற்கு உரிய வேள்வி பல செய்தார் 7.4.25

3773

இன்ன வண்ணம் இவர் ஒழுக எழில் கொள் பாண்டி நல் நாட்டு
மன்னும் மதுரைத் திரு வால வாயில் இறைவர் வரும் அன்பால்
பன்னும் இசைப் பாடலில் பரவும் பாணனார் பத்திரனார்க்கு
நன்மை நீடு பெரும் செல்வம் நல்க வேண்டி அருள் புரிவார் 7.4.26

3774

இரவு கனவில் எழுந்து அருளி என்பால் அன்பால் எப்பொழுதும்
பரவும் சேரன் தனக்கு உனக்குப் பைம் பொன் பட்டு ஆடை
விரவு கதிர் செய் நவ மணிப் பூண் வேண்டிற்று எல்லாம் குறைவு இன்றித்
தர நம் ஓலைத் தருகின்றோம் தாழாது ஏகி வருக என்று 7.4.27

3775

அதிர் கழல் உதியர் வேந்தற்கு அருள் செய்த பெருமை யாலே
எதிர் இல் செல்வத்துக்கு ஏற்ற இருநிதி கொடுக்க என்று
மதிமலி புரிசை என்னும் வாசகம் வரைந்த வாய்மைக்
கதிர் ஒளி விரிந்த தோட்டு திருமுகம் கொடுத்தார் காண 7.4.28

3776

சங்கப் புலவர் திருமுகத்தைத் தலைமேல் கொண்டு பத்திரனார்
அங்கு அப்பொழுதே புறப்பட்டு மலை நாடு அணைய வந்து எய்தித்
துங்கப் பரிசை கொடுங் கோளூர் தன்னில் புகுந்து துன்னு கொடி
மங்குல் தொடக்கும் மாளிகை முன் வந்து மன்னர்க்கு அறிவித்தார் 7.4.29

3777

கேட்ட பொழுதே கை தலைமேல் கொண்டு கிளர்ந்த பேரன்பால்
நாட்டம் பொழி நீர் வழிந்து இழிய எழுந்து நடுக்கம் மிக எய்தி
ஓட்டத் தம் பொன் மாளிகையின் புறத்தில் உருகும் சிந்தை உடன்
பாட்டின் தலைமைப் பணனார் பாதம் பலகால் பணிகின்றார் 7.4.30

3778

அடியேன் பொருளாத் திருமுகம் கொண்டு அணைந்தது என்ன அவர் தாமும்
கொடிசேர் விடையார் திருமுகம் கைக்கொடுத்து வணங்கக் கொற்றவனார்
முடிமேல் கொண்டு கூத்து ஆடி மொழியும் குழறிப் பொழி கண்ணீர்
பொடியார் மார்பில் பரந்து விழப் புவிமேல் பலகால் வீழ்ந்து எழுந்தார் 7.4.31

3779

பரிவில் போற்றித் திருமுகத்தைப் பலகால் தொழுது படி எடுக்க
உரிய வகையில் எடுத்து ஓதி உம்பர் பெருமான் அருள் போற்றி
விரிபொன் சுடர் மாளிகை புக்கு மேவும் உரிமைச் சுற்றம் எலாம்
பெரிது விரைவில் கொடு போந்து பேணு அமைச்சர்க்கு அருள் செய்வார் 7.4.32

3780

தங்கள் குல மாளிகை இதனுள் நலத்தின் மிக்க நிதிக் குவையாய்ப்
பொங்கி நிறைந்த பலவேறு வகையில் பொலிந்த பண்டாரம்
அம்கண் ஒன்றும் ஒழியாமை அடையக் கண்டு புறப்பட்டுத்
தங்கும் பொதிசெய் தாளின்மேல் சமைய ஏற்றிக் கெணரும் என 7.4.33

3781

சேரர் பெருமான் அருள் செய்யத் திருந்து மதிநூல் மந்திரிகள்
சாரும் மணி மாளிகையுள்ளால் தனங்கள் எல்லாம் நிறைந்த பெரும்
சீர் கொள் நிதியும் எண்ணிறந்த எல்லாம் பொதி செய்தாளின் மேல்
பாரில் நெருங்க மிசை ஏற்றிக் கொண்டு வந்து பணிந்தார்கள் 7.4.34

3782

பரந்த நிதியின் பரப்பு எல்லாம் பாணனார் பத்திரனார்க்கு
நிரந்த தனங்கள் வேறு வேறு நிரைத்துக் கட்டி மற்று இவையும்
உரம் தங்கிய வெம் கரிபரிகள் முதலாம் உயிர் உள்ளன தனமும்
புரந்த அரசும் கொள்ளும் என மொழிந்தார் பொறையர் புரவலனார் 7.4.35

3783

பாணனார் பத்திரனாரும் பைம்பொன் மௌலிச் சேரலனார்
காணக் கொடுத்த நிதி எல்லாம் கண்டு மகிழ்வுற்று அதிசயித்துப்
பேண எனக்கு வேண்டுவன அடியேன் கொள்ள பிஞ்ஞகனார் ஆணை
அரசும் அரசு உறுப்பும் கைக் கொண்டு அருளும் என இறைஞ்ச 7.4.36

3784

இறைவர் ஆணை மறுப்ப அதனுக்கு அஞ்சி இசைந்தார் இகல் வேந்தர்
நிறையும் நிதியின் பரப்பு எல்லாம் நிலத்தை நெளிய உடன் கொண்டே
உறை மும்மதத்துக் களிறு பரி உள் இட்டன வேண்டுவ கொண்டோர்
பிறை வெண் கோட்டுக் களிற்றுமேல் கொண்டு போந்தார் பெரும்பாணர் 7.4.37

3785

பண்பு பெருகும் பெருமாளும் பாணனார் பத்திரனார் பின்
கண்கள் பொழிந்த காதல் நீர் வழியக் கையால் தொழுது அணைய
நண்பு சிறக்கும் அவர் தம்மை நகரின் புறத்து விடை கொண்டு
திண் பொன் புரிசைத் திரு மதுரை புக்கார் திருந்தும் இசைப் பாணர் 7.4.38

3786

வான வரம்பர் குலம் பெருக்கும் மன்னனாரும் மறித்து ஏகிக்
கூனல் இளம் வெண் பிறைக் கண்ணி முடியார் அடிமை கொண்டு அருளும்
பான்மை அருளின் பெருமையினை நினைந்து பலகால் பணிந்து ஏத்தி
மேன்மை விளங்கு மாளிகை மண்டபத்து உள் அரசு வீற்று இருந்தார் 7.4.39

3787

அளவில் பெருமை அகில யோனிகளும் கழறிற்று அறிந்து அவற்றின்
உளம் மன்னிய மெய்யுறு துயரம் ஒன்றும் ஒழியா வகை அகற்றிக்
களவு கொலைகள் முதலான கடிந்து கழற்றிற்று அறிவார் தாம்
வளவர் பெருமானுடன் செழியர் மகிழும் கலப்பில் மகிழும் நாள் 7.4.40

3788

வானக் கங்கை நதி பொதிந்த மல்கு கடையார் வழிபட்டுத்
தூ நல் சிறப்பின் அர்ச்சனை ஆம் கொண்டு புரிவார் தமக்கு ஒரு நாள்
தேன் அக்கு அலர்ந்த கொன்றையின் ஆர் ஆடல் சிலம்பின் ஒலி முன் போல்
மானப் பூசை முடிவின் கண் கேளாது ஒழிய மதிமயங்கி 7.4.41

3789

பூசை கடிது முடித்து அடியேன் என்னோ பிழைத்தது எனப் பொரும்
ஆசை உடம்பால் மற்று இனி வேறு அடையும் இன்பம் யாது என்று
தேகின் விளங்கும் உடைவாளை உருவித் திருமார்பினில் நாட்ட
ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஓசை மிகவும் இசைப்பித்தார் 7.4.42

3790

ஆடல் சிலம்பின் ஒலி கேளா உடைவாள் அகற்றி அங்கைமலர்
கூடத் தலைமேல் குவித்து அருளிக் கொண்டு வீழ்ந்து தொழுது எழுந்து
நீடப் பரவி மொழிகின்றார் நெடுமால் பிரமன் அருமறை முன்
தேடற்கு அரியாய் திருஅருள் திரு அருள் முன் செய்யது ஒழிந்தது என் என்றார்
7.4.43

3791

என்ற பொழுதில் இறைவர் தாம் எதிர் நின்று அருளாது எழும் ஒலியால்
மன்றின் இடை நம் கூத்து ஆடல் வந்து வணங்கி வன் தொண்டன்
ஒன்றும் உணர்வால் நமைப் போற்றி உரை சேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத் தாழ்த்தோம் என்றார் அவரை நினைப்பிப்பார் 7.4.44

3792

என்னே அடியார்க்கு இவர் அருளும் கருணை இருந்தவாறு என்று
பொன் நேர் சடையார் திருநடம் செய் புலியூர் பொன் அம்பலம் இறைஞ்சி
தன் நேர் இல்லா வன் தொண்டர் தமையும் காண்பான் என விரும்பி
நல் நீர் நாட்டுக் செல நயந்தார் நாமச் சேரர் கோமானார் 7.4.45

3793

பொன்னார் மௌலிச் சேரலன் ஆர் போற்றும் அமைச்சர்க்கு அஃது இயம்பி
நல் நாள் கொண்டு பெரும் பயணம் எழுக என்று நலம் சாற்ற
மின்னார் அயில் வேல் குல மறவர் வென்றி நிலவும் சிலை வீரர்
அந் நாட்டு உள்ளார் அடைய நிரந்து அணைந்தார் வஞ்சி அகல் நகர்வாய் 7.4.46

3794

இட்ட நல்நாள் ஓரையினில் இறைவர் திருவஞ்சைக் களத்து
மட்டுவிரியும் கொன்றையினார் தம்மை வலம் கொண்டு இறைஞ்சிப் போய்
பட்டநுதல் வெம் களியாணை பிடர்மேல் கொண்டு பனி மதியம்
தொட்ட கொடிமாளிகை மூதூர் கடந்தார் உதியர் தோன்றலார் 7.4.47

3795

யானை அணிகள் பரந்து வழி எங்கும் நிரந்து செல்லுவன
மான மலை நாட்டினில் மலிந்த மலைகள் உடன் போதுவ போன்ற
சேனைவீரர் புடைபரந்து செல்வது அங்கண் மலை சூழ்ந்த
கானம் அடைய உடன் படர்வன போலும் காட்சி மேவினதால் 7.4.48

3796

புரவித் திரள்கள் ஆ யோகப் பொலிவின் அசைவில் போதுவன
அரவச் சேனைக் கடல் தரங்கம் மடுத்து மேல் மேல் அடர்வன போல்
விரவிப் பரந்து சென்றனவால் மிசையும் அவலும் ஒன்றாக
நிரவிப் பரந்த நெடும் சேனை நேமி நெளியச் சென்றனவால் 7.4.49

3797

அந் நாட்டு எல்லை கடந்து அணைய அமைச்சர்க்கு எல்லாம் விடை அருளி
மினார் மணிப்பூண் மன்னவன் ஆர் வேண்டுவாரை உடன்கொண்டு
கொனார் அயில் வேல் மறவர் பயில் கொங்கர் நாடு கடந்து அருளி
பொன் நாட்டவரும் அணைந்து ஆடும் பொன்னி நீர் நாட்டு இடைப் போவார் 7.4.50

3798

சென்ற திசையில் சிவன் அடியார் சிறப்பினோடும் எதிர்கொள்ளக்
குன்றும் கானும் உடைக் குறும்பர் இடங்கள் தோறும் குறை அறுப்பத்
துன்று முரம்பும் கான் ஆறும் உறும் கல் சுரமும் பல கடந்து
வென்றி விடையார் இடம் பலவும் மேவிப் பணிந்து செல்கின்றார் 7.4.51

3799

பொருவில் பொன்னித் திருநதியின் கரை வந்து எய்திப் புனித நீர்
மருவு தீர்த்தம் மகிழ்ந்து ஆடி மருங்கு வடபால் கரை ஏறித்
திருவில் பொலியும் திருப்புலியூர் செம்பொன் மன்றுள் நடம் போற்ற
உருகும் மனத்தின் உடன் சென்றார் ஒழியா அன்பின் வழி வந்தார் 7.4.52

3800

வந்து தில்லை மூதூரின் எல்லை வணங்கி மகிழ்ச்சியினால்
அந்தணாளர் தொண்டர் குழாம் அணைந்த போதில் எதிர் வணங்கிச்
சந்த விரைப் பூந்திருவீதி இறைஞ்சித் தலைமேல் கரம் முகிழ்ப்பச்
சிந்தை மகிழ எழு நிலை கோபுரத்தை அணைந்தார் சேரலனார் 7.4.53

3801

நிலவும் பெருமை எழுநிலைக் கோபுரத்தின் முன்னர் நிலத்து இறைஞ்சி
மலரும் கண்ணீர்த் துளி ததும்பப் புகுந்து மாளிகை வலம் கொண்டு
உலகு விளக்கும் திருப் பேர் அம்பலத்தை வணங்கி உள் அணைந்தார்
அலகில் அண்டம் அளித்தவர் நின்று ஆடும் திருச்சிற்றம்பலம் முன் 7.4.54

3802

அளவில் இன்பப் பெரும் கூத்தர் ஆட எடுத்த கழல் காட்ட
உளமும் புலனும் ஒருவழிச் சென்று உருகப் போற்றி உய்கின்றார்
களனில் விடம் வைத்து அளித்த அமுது அன்றி மன்றில் கழல் வைத்து
வளரும் திருக்கூத்து அமுது உலகுக்கு அளித்த கருணை வழுத்தினார் 7.4.55

3803

ஆரா ஆசை ஆனந்தக் கடலுள் திளைத்தே அமர்ந்து அருளால்
சீரார் வண்ணப் பொன் வண்ணத்து திரு அந்தாதி திருப்படிக்கீழ்ப்
பாரா தரிக்க எடுத்து ஏத்திப் பணிந்தார் பருவ மழை பொழியும்
காரால் நிகர்க்க அரிய கொடைக் கையார் கழற்றிவார் தாம் 7.4.56

3804

தம்பிரானார்க்கு எதிர் நின்று தமிழ் சொல் மாலை கேட்பிக்க
உம்பர் வாழ நடம் ஆடும் ஒருவர் அதற்குப் பரிசில் எனச்
செம்பொன் மணி மன்றில் எடுத்த செய்ய பாதத்து திருச்சிலம்பின்
இம்பர் நீட எழுந்த ஒலிதாமும் எதிரே கேட்பித்தார் 7.4.57

3805

ஆடல் சிலம்பின் ஒலி கேட்பார் அளவில் இன்ப ஆனந்தம்
கூடப் பெற்ற பெரும் பேற்றின் கொள்கை வாய்ப்பக் கும்பிடுவார்
நீடப் பணியும் காலம் எலாம் நின்று தொழுது புறம் போந்து
மாடத் திரு மாளிகை வீதி வணங்கிப் புறத்து வைகினார் 7.4.58

3806

பரவும் தில்லை வட்டத்துப் பயில்வார் பைம் பொன் அம்பலத்துள்
அரவும் புனலும் சடை ஆட ஆடுவார் கூத்து ஆராமை
விரவும் காதல் மிக்கு ஓங்க வேதம் படியும் திருப்படிக்கீழ்
இரவும் பகலும் பணிந்து ஏத்தி இன்பம் சிறக்கும் அந் நாளில் 7.4.59

3807

ஆடும் பெருமான் பாடல் கேட்டு அருளித் தாழ்ந்த படி தமக்குக்
கூடும் பரிசால் முன்பு அருளிச் செய்த நாவலூர்க் கோவை
நீடும் பெரும் காதலில் காண நிறைந்த நினைவு நிரம்பாமல்
தேடும் பாதர் அருளினால் திருவாரூர் மேல் செல எழுந்தார் 7.4.60

3808

அறிவின் எல்லை ஆய திருத்தில்லை எல்லை அமர்ந்து இறைஞ்சிப்
பிறவி இலாத திருவடியைப் பெருகும் உள்ளத்தினில் பெற்று
செறியும் ஞானப் போனகர் வந்து அருளும் புகலி சென்று இறைஞ்சி
மறி சேர் கரத்தார் கோயில் பல வணங்கி மகிழ்ந்து வழிக்கொள்வார் 7.4.61

3809

வழியில் குழியில் செழுவயலின் மதகின் மலர் வாவிகளின் மடுச்
சுழியில் தரளம் திரை சொரியும் துறை நீர்ப் பொன்னி கடந்து ஏறி
வழியில் திகழும் திருநுதலார் விரும்பும் இடங்கள் இறைஞ்சி உகக்
கழிவில் பெரும் வெள்ளமும் கொள்ளக் கழனி ஆரூர் கண் உற்றார் 7.4.62

3810

நம்பி தாமும் அந் நாள் போய் நாகைக் காரோணம் பாடி
அம் பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடை சாந்தம் அடல் பரிமா
பைம் பொன் சுரிகை முதலான பெற்று மற்றும் பல பதியில்
தம்பிரானைப் பணிந்து ஏத்தித் திருவாரூரில் சார்ந்து இருந்தார் 7.4.63

3811

வந்து சேரர் பெருமானார் மன்னும் திருவரூர் எய்த
அந்தணாளர் பெருமானும் அரசர் பெருமான் வரப்பெற்றுச்
சிந்தை மகிழ எதிர் கொண்டு சென்று கிடந்தார் சேரலனார்
சந்தம் விரைத்தார் வன்தொண்டர் முன்பு விருப்பின் உடன் தாழ்ந்தார் 7.4.64

3812

முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்து முகந்து எடுத்தே
அன்பு பெருகத் தழுவ விரைந்து ஆர்வத்தொடு தழுவ
இன்ப வெள்ளத்து இடை நீந்தி ஏற மாட்டாதவர் போல்
என்பும் உருக உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றாம் என இசைந்தார் 7.4.65

3813

ஆன நிலைமை கண்ட திருத்தொண்டர் அளவில் மகிழ்வு எய்த
மானச் சேரர் பெருமானார் தாமும் வன்தொண்டரும் கலந்த
பான்மை நண்பால் சேரமான் தோழர் என்று பார் பரவும்
மேன்மை நாமம் முனைப்பாடி வேந்தர்க்கு ஆகி விளங்கியதால் 7.4.66

3814

ஒருவர் ஒருவரில் கலந்த உணர்வால் இன்ப மொழி உரைத்து
மருவ இனியார் பால் செய்வது என்னாம் என்னும் மகிழ்ச்சியினால்
பருவ மழைச் செங்கை பற்றிக் கொண்டு பரமர் தாள் பணியத்
தெருவு நீங்கிக் கோயிலினுள் புகுந்தார் சேரமான் தோழர் 7.4.67

3815

சென்று தேவ ஆசிரியனை முன் இறைஞ்சித் திருமாளிகை வலம் கொண்டு
ஒன்றும் உள்ளத்தொடும் புகுவார் உடைய நம்பி முன் ஆக
நின்று தொழுது கண் அருவி வீழ நிலத்தின் மிசை வீழ்ந்தே
என்றும் இனிய தம் பெருமான் பாதம் இறைஞ்சி ஏத்தினார் 7.4.68

3816

தேவர் முனிவர் வந்து இறைஞ்சும் தெய்வப் பெருமாள் கழல் வணங்கி
மூவர் தமக்கு முதல் ஆகும் அவரைத் திருமும் மணிக் கோவை
நாவலூரர் தம் முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்
தாவில் பெருமைச் சேரல் அனார் தம்பிரானார் தாம் கொண்டார் 7.4.69

3817

அங்கண் அருள் பெற்று எழுவாரைக் கொண்டு புறம் போந்து ஆரூரர்
நங்கை பரவையார் திருமாளிகையில் நண்ண நன்னுதலார்
பொங்கும் விளக்கும் நிறை குடமும் பூ மாலைகளும் புகை அகிலும்
எங்கும் மடவார் எடுத்து ஏத்த அணைந்து தாமும் எதிர் கொண்டார் 7.4.70

3818

சோதி மணி மாளிகையின் கண் சுடரும் பசும் பொன் கால் அமளி
மீது பெருமாள் தமை இருத்தி நம்பி மேவி உடன் இருப்பக்
கோதில் குணத்துப் பரவையார் கொழுநர்க்கும் தோழர்க்கும்
நீதி வழுவா ஒழுக்கத்து நிறை பூசனைகள் முறை அளித்தார் 7.4.71

3819

தாண்டும் புரவிச் சேரர் குலப் பெருமாள் தமக்குத் திரு அமுது
தூண்டும் சோதி விளக்கு அனையார் அமைக்கத் துணைவர் சொல்லுதலும்
வேண்டும் பரிசு வெவ்வேறு விதத்துக் கறியும் போனகமும்
ஈண்டச் சமைப்பித்து உடன் வந்தார்க்கு எல்லாம் இயல்பின் விருந்து அமைத்தார்
7.4.72

3820

அரசர்க்கு அமைத்த சிறப்பினும் மேல் அடியார்க்கு ஏற்கும் படியாக
விரவிப் பெருகும் அன்பின் உடன் விரும்பும் அமுது சமைத்து அதன்பின்
புரசைக் களிற்றுச் சேரலன் ஆர் புடை சூழ்ந்து அவரோடு அமுது செயப்
பரவைப் பிறந்த திருவனைய பரவையார் வந்து அறிவித்தார் 7.4.73

3821

சேரர் பெருமான் எழுந்து அருளி அமுத செய்யச் செய்தவத்தால்
தாரின் மலிபூம் குழல் மடவாய் தாழாது அமுது செய்வி எனப்
பாரின் மலிசீர் வன்தொண்டர் அருளிச் செய்யப் பரிகலங்கள்
ஏரின் விளங்கத் திருத்திக்கால் இரண்டில் படியாய் ஏற்றுதலும் 7.4.74

3822

ஆண்ட நம்பி பெருமாளை உடனே அமுது செய்து அருள
வேண்டும் என்ன ஆங்கு அவரும் விரைந்து வணங்கி வெரு உறலும்
நீண்ட தடக்கை பிடித்து அருளி மீண்டும் நேரே குறை கொள்ள
ஈண்ட அமுது செய்வதனுக்கு இசைந்தார் பொறையார்க்கு இறையவனார் 7.4.75

3823

ஒக்க அமுது செய்து அருள உயர்ந்த தவத்துப் பரவையார்
மிக்க விருப்பால் அமுது செய்வித்து அருளி மேவும் பரிசனங்கள்
தக்க வகையால் அறுசுவையும் தாம் வேண்டியவாறு இனிது அருந்தத்
ஒக்க மகிழ்ச்சி களி சிறப்பத் தூய விருந்தின் கடன் முடித்தார் 7.4.76

3824

பனிநீர் விரவு சந்தனத்தின் பசுங்கர்ப்பூர விரைக் கலவை
வனிதை அவர்கள் சமைத்து எடுப்பக் கொடுத்து மகிழ்மான் மதச் சாந்தும்
புனித நறும் பூ மாலைகளும் போற்றிக் கொடுத்துப் பொன்கொடியார்
இனிய பஞ்ச வாசம் உடன் அடைக்காய் அமுதும் ஏந்தினார் 7.4.77

3825

ஆய சிறப்பில் பூசனைகள் அளித்த எல்லாம் அமர்ந்து அருளித்
தூய நீறு தங்கள் திருமுடியில் வாங்கித் தொழுது அணிந்து
மேய விருப்பின் உடன் இருப்பக் கழறிற்றறிவார் மெய்த்தொண்டின்
சேய நீர்மை அடைந்தார் ஆய் நம்பி செம்பொன் கழல் பணிந்தார் 7.4.78

3826

மலை நாட்டு அரசர் பெருமானார் வணங்க வணங்கி எதிர் தழுவிக்
கலை நாள் பெருகு மதி முகத்துப் பரவையார் தம் கணவனார்
சிலை நாட்டிய வெல் கொடியாரைச் சேரத் தந்தார் எனக் கங்கை
அலை நாள் கொன்றை முடிச் சடையார் அருளே போற்றி உடன் அமர்ந்தார் 7.4.79

3827

செல்வத் திருவாரூர் மேவும் செம் புற்றில் இனிது அமர்ந்த
வில் வெற்பு உடையார் கழல் வணங்கி வீதி விடங்கப் பெருமானை
மல்லல் பவனி சேவித்து வாழ்ந்து நாளும் மனம் மகிழ்ந்து
சொல் வித்தகர் தாம் இருவர்களும் தொடர்ந்த காதலுடன் சிறந்தார் 7.4.80

3828

இவ்வாறு ஒழுகும் நாளின் கண் இலங்கு மணிப்பூண் வன்தொண்டர்
மைவாழ் களத்து மறையவனார் மருவும் இடங்கள் பல வணங்கிச்
செய்வார் கன்னித் தமிழ் நாட்டுத் திருமா மதுரை முதலான
மொய்வார் சடையார் மூதூர்கள் இறைஞ்ச முறைமையால் நினைந்தார் 7.4.81

3829

சேரர் பிரானும் ஆரூரர் தம்மைப் பிரியாச் சிறப்பாலும்
வாரம் பெருகத் தமக்கு அன்று மதுரை ஆலவாய் அமர்ந்த
வீரர் அளித்த திருமுகத்தால் விரும்பும் அன்பின் வணங்குதற்குச்
சார எழுந்த குறிப்பாலும் தாமும் உடனே செலத் துணிந்தார் 7.4.82

3830

இருவர் திரு உள்ளமும் இசைந்த பொழுதில் எழுந்து திருவாரூர்
ஒருவர் மலர்த்தாள் புக்கு இறைஞ்சி உடன்பாட்டு அருளால் போந்து அருளி
மருவும் உரிமை பெரும் சுற்றம் வரம்பில் பணிகள் வாகனங்கள்
பொருவில் பண்டாரங் கொண்டு போதுவார்கள் உடன் போத 7.4.83

3831

சேவித்து அணையும் பரிசனங்கள் சூழத் திருவாரூர் இறைஞ்சிக்
காவில் பயிலும் புறம்பு அணையைக் கடந்து போந்து கீழ்வேளூர்
மேவிப் பரமர் கழல் வணங்கிப் போந்து வேலைக் கழிக் கானல்
பூவில் திகழும் பொழில் நாகை புகுந்து காரோணம் பணிந்தார் 7.4.84

3832

திருக்காரோணச் சிவக் கொழுந்தைச் சென்று பணிந்து சிந்தையினை
உருக்கார்வச் செம்தமிழ் மாலை சாத்திச் சில நாள் உறைந்து போய்
பெருக்கார் உலவு சடைமுடியார் இடங்கள் பலவும் பணிந்து ஏத்தி
அருள் காரணர் தம் திருமறைக்காடு அணைந்தார் சேரர் ஆரூரர் 7.4.85

3833

முந்நீர் வலங்கொள் மறைக்காட்டு முதல்வர் கோயில் சென்று இறைஞ்சி
செந்நீர் வாய்மைத் திருநாவுக்கரசும் புகலிச் சிவக் கன்றும்
அந்நேர் திறக்க அடைக்க எனப்பாடும் திருவாயிலை அணைந்து
நன்னீர் பொழியும் விழியினர் ஆய் நாயன் மாரை நினைந்து இறைஞ்சி 7.4.86

3834

நிறைந்த மறைகள் அர்ச்சித்த நீடு மறைக்காட்டு அருமணியை
இறைஞ்சி வீழ்ந்து பணிந்து எழுந்து போற்றி யாழைப் பழித்து என்னும்
அறைந்த பதிகத் தமிழ் மாலை நம்பி சாத்த அருள் சேரர்
சிறந்த அந்தாதியில் சிறப்பித்து அனவே ஓதித் திளைத்து எழுந்தார் 7.4.87

3835

எழுந்து பணிந்து புறத்து எய்தி இருவர் பெரும் தொண்டரும் சில நாள்
செழுந்தண் பழனப் பதியதனுள் அமர்ந்து தென்பால் திரைக் கடல் நஞ்சு
அழுந்து மிடற்றார் அகத்தியான் பள்ளி இறைஞ்சி அவிர் மதியக்
கொழுந்து வளர் செம் கடைக் குழகர் கோடிக் கோயில் குறுகினார் 7.4.88

3836

கோடிக் குழகர் கோயில் அயல் குடிகள் ஒன்றும் புறத்து எங்கும்
நாடிக் காணாது உள்புக்கு நம்பர் பாதம் தொழுது உள்ளம்
வாடிக் கடிதாய்க் கடல் காற்று என்று எடுத்து மலர்க் கண்ணீர் வாரப்
பாடிக் காடு காள் புணர்ந்த பரிசும் பதிகத்து இடை வைத்தார் 7.4.89

3837

அங்கு வைகிப் பணிந்து அருளால் போவார் அகன் கோணாட்டு அரனார்
தங்கும் இடங்கள் வணங்கிப் போய் பாண்டி நாடுதனைச் சார்ந்து
திங்கள் முடியார் திருப்புத்தூர் இறைஞ்சி போந்து சேண் விளங்கும்
மங்குல் தவழும் மணிமாட மதுரை மூதூர் வந்து அணைந்தார் 7.4.90

3838

சேரமான் தோழரும் அச் சேரர் பிரானும் பணிப்பூண்
ஆரமார் மார்பரை ஆலவாயினில் வணங்க
வாரமா வந்து அணைய வழுதியார் மனக்காதல்
கூர மாநகர் கோடித்து எதிர் கொண்டு கொடு புக்கார் 7.4.91

3839

தென்னவர் கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன் மதுரை நகரின் கண் இனிது இருந்த சோழனார்
அன்னவர்கள் உடன் கூட அனைய அவரும் கூடி
மன்னு திரு ஆலவாய் மணிக் கோயில் வந்து அணைந்தார் 7.4.92

3840

திரு ஆலவாய் அமர்ந்த செஞ்சடையார் கோயில் வலம்
வருவார் முன் வீழ்ந்து இறைஞ்சி வன்தொண்டர் வழித்தொண்டு
தருவாரைப் போற்றி இசைத்துத் தாழ்ந்து எழுந்து வாழ்ந்த தமிழ்
பெரு வாய்மை மலர் புனைந்து பெரு மகிழ்ச்சி பிறங்கினார் 7.4.93

3841

படியேறு புகழ்ச் சேரர் பெருமானும் பார் மிசை வீழ்ந்து
அடியேனைப் பொருளாக அளித்த திருமுகக் கருணை
முடிவேது என்று அறிந்திலேன் என மொழிகள் தடுமாறக்
கடியேறு கொன்றையார் முன் பரவிக் களி கூர்ந்தார் 7.4.94

3842

செம்பியனார் உடன் செழியர் தாம் பணிந்து சேரர் உடன்
நம்பியும் முன் புறத்து அணைய நண்ணிய பேர் உவகையால்
உம்பர்பிரான் கோயிலின் இன்று உடன் கொண்டுபோய் இருவர்க்கும்
பைம்பொன் மணி மாளிகையில் குறை அறுத்தார் பஞ்சவனார் 7.4.95

3843

உளம் மகிழக் கும்பிட்டு அங்கு உறையும் நாள் உதியர் உடன்
கிளர் ஒளிப் பூண் வன் தொண்டர் தாம் இருந்த இடம் கெழுமி
வளவனார் மீனவனார் வளம் பெருக மற்றவரோடு
அளவளாவிய விருப்பால் அமர்ந்து கலந்து இனிது இருந்தார் 7.4.96

3844

அந் நாளில் மதுரை நகர் மருங்கரனார் அமர் பதிகள்
பொன்னாரம் அணி மார்பில் புரவலர் மூவரும் போதச்
செந்நாவின் முனைப்பாடித் திருநாடர் சென்று இறைஞ்சிச்
சொன்மாலைகளும் சாத்தித் தொழத் திருப்பூவணத்தை அணைந்தார் 7.4.97

3845

நீடு திருப் பூவணத்துக் அணித்தாக நேர் செல்ல
மாடு வரும் திருத்தொண்டர் மன்னிய அப் பதிகாட்டத்
தேடு மறைக்கு அரியாரைத் திருவுடையார் என்று எடுத்துப்
பாடி இசையில் பூவணம் மீதோ என்று பணிந்து அணைவார் 7.4.98

3846

சென்று திருப் பூவணத்துத் தேவர் பிரான் மகிழ் கோயில்
முன்றில் வலம் கொண்டு இறைவர் முன் வீழ்ந்து பணிந்து எழுந்து
நின்று பரவிப்பாடி நேர் நீக்கி உடன் பணிந்த
வென்றி முடி வேந்தருடன் போந்து அங்கண் மேவினார் 7.4.99

3847

அப்பதியில் அமர்ந்து இறைஞ்சிச் சில நாளில் ஆரூரர்
முப்பெரும் வேந்தர்களோடு முதன் மதுரை நகர் எய்தி
மெய்ப் பரிவில் திருவால வாயுடையார் விரை மலர்த்தாள்
எப்பொழுதும் பணிந்து ஏத்தி இன்புற்று அங்கு அமர்கின்றார் 7.4.100

3848

செஞ்சடையார் திருவாப்பனூர் திருவேடகம் முதலாம்
நஞ்சு அணியும் கண்டர் அவர் நயந்த பதி நண்ணியே
எஞ்சலிலாக் காதலினால் இனிது இறைஞ்சி மீண்டு அணைந்து
மஞ்சணையும் மதில் மதுரை மாநகரில் மகிழ்ந்து இருந்தார் 7.4.101

3849

பரமர் திருப்பரம் குன்றில் சென்று பார்த்திபர் ஓடும்
புரம் எரித்தார் கோயில் வலம் கொண்டு புகுந்து உள் இறைஞ்சிச்
சிரமலிமாலைச் சடையார் திருவடிக்கீழ் ஆட்செய்யும்
அருமை நினைந்து அஞ்சுதும் என்று ஆரூரர் பாடுவார் 7.4.102

3850

கோத்திட்டை என்று எடுத்துக் கோதில் திருப்பதிக இசை
மூர்த்தியார் தமை வணங்கி முக்கோக்கள் உடன் முன்பே
ஏத்திய வண் தமிழ் மாலை இன் இசைப் பாடிப் பரவி
சாத்தினார் சங்கரனார் தங்கு திருப்பரங்குன்றில் 7.4.103

3851

இறைவர் திருத்தொண்டு புரி அருமையினை இரு நிலத்து
முறை புரியும் முதல் வேந்தர் மூவர்களும் கேட்டு அஞ்சி
மறை முந் நூல் மணி மார்பின் வன்தொண்டர் தமைப் பணிந்தார்
நிறை தவத்தோர் அப்பாலும் நிருத்தர் பதி தொழ நினைந்தார் 7.4.104

3852

அந் நாட்டுத் திருப்பதிகள் பலவும் அணைந்து இறைஞ்சமலை
நன்னாட்டு வேந்தருடன் நம்பிதாம் எழுந்து அருள
மின்னாட்டும் பல் மணிப்பூண் வேந்தர் இருவரும் மீள்வார்
தென்னாட்டு வேண்டுவன செய்து அமைப்பார் தமை விடுத்தார் 7.4.105

3853

இரு பெரு வேந்தரும் இயல்பின் மீண்டதற் பின் எழுந்து அருளும்
பொருவருஞ் சீர் வன்தொண்டர் புகழ்ச் சேரர் உடன் புனிதர்
மருவிய தானம் பலவும் பணிந்து போய் மலைச்சாரல்
குருமணிகள் வெயில் எறிக்கும் குற்றாலம் சென்று அடைந்தார் 7.4.106

3854

குற்றாலத்து இனிது அமர்ந்த கூத்தர் குரை கழல் வணங்கிச்
சொல்தாம மலர் புனைந்து குறும் பலாத் தொழுது இப்பால்
முற்றா வெண்மதி முடியார் பதிபணிந்து மூவெயில்கள்
செற்றார் மன்னிய செல்வத் திருநெல் வேலியை அணைந்தார் 7.4.107

3855

நெல்வேலி நீற்று அழகர் தமைப் பணிந்து பாடி நிகழ்
பல்வேறு பதி பிறவும் பணிந்து அன்பால் வந்து அணைந்தார்
வில்வேடராய் வென்றி விசயன் எதிர் பன்றிப் பின்
செல் வேத முதல்வரமர் திரு இராமேச்சரத்து 7.4.108

3856

மன்னும் இராமேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்
பன்னும் தமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பு அணிந்த
சென்னியர் மாதோட்டத்துத் திருக்கேதீச்சரம் சார்ந்த
சொல்மலர் மாலைகள் சாத்தித் தூரத்தே தொழுது அமர்ந்தார் 7.4.109

3857

திரு இராமேச்சரத்துச் செழும் பவளச் சுடர்க் கொழுந்தைப்
பரிவினால் தொழுது அகன்று பரமர் பிற பணிந்து
பெருவிமானத்து இமையோர் வணங்கும் பெரும் திருச்சுழியல்
மருவினார் வன்தொண்டர் மலை வேந்தருடன் கூட 7.4.110

3858

திருச்சுழியல் இடம் கொண்ட செம்பொன் மலைச் சிலையாரைக்
கருச்சுழியில் வீழாமைக் காப்பாரைக் கடல் விடத்தின்
இருள் சுழியும் மிடற்றாரை இறைஞ்சி எதிர் இதழி மலர்ப்
பருச் சுழியத்துடன் ஊனாய் உயிர் எனும் பா மலர் புனைந்தார் 7.4.111

3859

அங்கணரைப் பணிந்து உறையும் ஆரூரர்க்கு அவ்வூரில்
கங்குல் இடைக் கனவின் கண் காளையாந் திருவடிவால்
செங்கையினில் பொன் செண்டும் திருமுடியில் சுழியம் உடன்
எங்கும் இலாத் திருவேடம் என்புருக முன்காட்டி 7.4.112

3860

கானப் பேர் யாம் இருப்பது எனக் கழறி கங்கை எனும் 3860-1
வானப் பேராறும் உலவும் மா முடியார் தாம் அகல
ஞானப் பேராளர் உணர்ந்து அதிசயித்து நாகம் உடன்
ஏனப் பேரெயிறு அணிந்தார் அருள் இருந்த பரிசு என்பார் 7.4.113

3861

கண்டு அருளும் படி கழறிற்றறிவார்க்கு மொழிந்து அருளிப்
புண்டரிகப் புனல் சுழியல் புனிதர் கழல் வணங்கிப் போய்
அண்டர் பிரான் திருக்கானப்பேர் அணைவார் ஆரூரர்
தொண்டர் அடித் தொழலும் எனும் சொல் பதிகத் தொடை புனைவார் 7.4.114

3862

காளையார் தமைக் கண்டு தொழப் பெறுவது என் என்று
தாளை நாளும் பரவத் தருவார் பால் சார்கின்றார்
ஆளை நீள் இடைக் காண அஞ்சிய நீர் நாய் அயலே
வாளைபாய் நுழைப் பழன முனைப்பாடி வள நாடார் 7.4.115

3863

மன்னு திருக்கானப் பேர் வளம் பதியில் வந்து எய்தி
சென்னி வளர்மதி அணிந்தார் செழுங் கோயில் வலம் கொண்டு
முன்னிறைஞ்சி உள்ளணைந்து முதல்வர் சேவடி தாழ்ந்து
பன்னு செழுந்தமிழ் மாலை பாடினார் பரவினார் 7.4.116

3864

ஆராத காதலுடன் அப்பதியில் பணிந்து ஏத்திச்
சீராரும் திருத்தொண்டர் சில நாள் அங்கு அமர்ந்து அருளிக்
காராரும் மலர்ச்சோலைக் கானப் பேர் கடந்து அணைந்தார்
போரானேற்றார் கயிலைப் பொருப்பர் திருப்புனவாயில் 7.4.117

3865

புனல் வாயில் பதி அமர்ந்த புனிதர் ஆலயம் புக்கு
மனம் ஆர்வம் உறச் சித்த நீ நினை என்னொடு என்றே
வின வான தமிழ் பாடி வீழ்ந்து இறைஞ்சி அப்பதியில்
சினயானை உரித்து அணிந்தார் திருப்பாதம் தொழுது இருந்தார் 7.4.118

3866

திருப்புன வாயில் பதியில் அமர்ந்த சிவனார் மகிழும்
விருப்புடைய கோயில் பல பணிந்து அருளால் மேவினார்
பொருப்பினொடு கானகன்று புனல் பொன்னி நாடு அணைந்து
பருப்பத வார் சிலையார் தம் பாம்பு அணிமா நகர் தன்னில் 7.4.119

3867

பாதாள ஈச்சரம் இறைஞ்சி அதன் மருங்கு பல பதியும் 3867-1
வேதாதி நாதர் கழல் வணங்கி மிகு விரைவின் உடன்
சூதாரும் துணை முலையார் மணிவாய்க்குத் தோற்று இரவு
சேதாம்பல் வாய் திறக்கும் திருவாரூர் வந்து அணைந்தார் 7.4.120

3868

திருநாவலூர் வேந்தர் சேரர் குல வேந்தர் உடன்
வருவாரைத் திருவாரூர் வாழ்வார்கள் எதிர்கொள்ளத்
தரும் காதலுடன் வணங்கித் தம் பெருமான் கோயிலினுள்
பெருகு ஆர்வத்தொடு விரும்பும் பெரும் பேறு பெறப் புகுந்தார் 7.4.121

3869

வாச மலர்க் கொன்றையார் மகிழ்கோயில் வலம் கொண்டு
நேசமுற முன் இறைஞ்சி நெடும் பொழுது எலாம் பரவி
ஏசறவால் திருப்பதிகம் எடுத்து ஏத்தி எழுந்து அருளால்
பாச வினைத் தொடக்கு அறுப்பார் பயில் கோயில் பணிந்து அணைவார் 7.4.122

3870

பரவையார் மாளிகையில் பரிசனங்கள் முன் எய்த
விரவு பேர் அலங்கார விழுச் செல்வம் மிகப் பெருக
வரவு எதிர் கொண்டு அடிவணங்க வன் தொண்டர் மலைநாட்டுப்
புரவலனாரையும் கொண்டு பொன் அணி மாளிகை புகுந்தார் 7.4.123

3871

பரவியே பரவையார் பரிவு உடனே பணிந்து ஏத்தி
விரவிய போனகங்கறிகள் விதம் பலவாகச் சமைத்துப்
பரிகலமும் பாவாடை பகல் விளக்கும் உடன் அமைத்துத்
திரு அமுது செய்வித்தார் திருந்திய தேன் மொழியினார் 7.4.124

3872

மங்கலமாம் பூசனைகள் பரவையார் செய மகிழ்ந்து
தங்கி இனிது அமர் கின்றார் தம்பிரான் கோயிலினுள்
பொங்கு பெரும் காலம் எலாம் புக்கு இறைஞ்சி புறத்து அணைந்து
நங்கள் பிரான் அருள் மறவா நல் விளையாட்டினை நயந்தார் 7.4.125

3873

நிலைச் செண்டும் பரிச் செண்டும் வீசி மிக மகிழ்வு எய்தி
விலக்கரும் போர்த் தகர்ப் பாய்ச் சல் கண்டு அருளி வென்றி பெற
மலைக்கு நெடு முள் கணைக்கால் வாரணப் போர் மகிழ்ந்து அருளி
அலைக்கும் அறப் பல புள்ளின் அமர் விரும்பி அமர்கின்றார் 7.4.126

3874

விரவு காதல் மீக்கூர மேவும் நாள்கள் பல செல்லக்
கரவில் ஈகைக் கேரளனார் தங்கள் கடல் சூழ் மலை நாட்டுப்
பரவையார் தம் கொழுநனார் தம்மைப் பணிந்து கொண்டு அணை
இரவும் பகலும் தொழுது இரக்க இசைந்தார் அவரும் எழுந்து அருள 7.4.127

3875

நங்கை பரவையார் உள்ளத்து இசைவால் நம்பி எழுந்து அருளத்
திங்கள் முடியார் திரு அருளைப் பரவிச் சேரமான் பெருமாள்
எங்கும் உள்ள அடியாருக்கு ஏற்ற பூசை செய்து அருளிப்
பொங்கும் முயற்சி இருவரும் போய்ப் புக்கார் புனிதர் பூங்கோயில் 7.4.128

3876

தம்பிரானைத் தொழுது அருளால் போந்து தொண்டர் சார்ந்து அணைய
நம்பி ஆரூரரும் சேரர் நன்னாட்டு அரசனார் ஆய
பைம் பொன் மணி நீள் முடிக் கழறிற்றறிவார் தாமும் பயணம் உடன்
செம்பொன் நீடு மதில் ஆரூர் தொழுது மேல் பால் செல்கின்றார் 7.4.129

3877

பொன் பரப்பி மணிவரன்றி புனல் பரக்கும் காவேரித்
தென் கரை போய்ச் சிவன் மகிழ்ந்த கோயில் பல சென்று இறைஞ்சி
மின் பரப்பும் சடை அண்ணல் விரும்பும் திருக் கண்டியூர்
அன்புருக்கும் சிந்தை உடன் பணிந்து புறத்து அணைந்தார்கள் 7.4.130

3878

வட கரையில் திருவையாறு எதிர் தோன்ற மலர்க் கரங்கள்
உடலுருக உள்ளுருக உச்சியின்மேல் குவித்து அருளிக்
கடல் பரந்தது எனப் பெருகும் காவிரியைக் கடந்து ஏறித்
தொடர்வு உடைய திருவடியை தொழுவதற்கு நினைவுற்றார் 7.4.131

3879

ஐயாறு அதனைக் கண்டு தொழுது அருள ஆரூர் தமை நோக்கி
செய்யாள் பிரியாச் சேரமான் பெருமாள் அருளிச் செய்கின்றார்
மையார் கண்டர் மருவு திரு ஐயாறு இறைஞ்ச மனம் உருகி
நையா நின்றது இவ்வாறு கடந்து பணிவோம் நாம் என்ன 7.4.132

3880

ஆறு பெருகி இரு கரையும் பொருது விசும்பில் எழுவது போல் 3880-1
வேறு நாவாய் ஓடங்கள் மீது செல்லா வகை மிகைப்ப
நீறு விளங்கும் திருமேனி நிறுத்தர் பாதம் பணிந்தன்பின்
ஆறு நெறியாச் செலவுரியார் தரியாது அழைத்துப் பாடுவார் 7.4.133

3881

பரவும் பரிசு ஒன்று எடுத்து அருளிப் பாடும் திருப்பாட்டின் முடிவில்
அரவம் புனைவார் தமை ஐயாறு உடைய அடிகளோ என்று
விரவும் வேட்கை உடன் அழைத்து விளங்கும் பெருமைத் திருப்பதிகம்
நிரவும் இசையில் வன்தொண்டர் நின்று தொழுது பாடுதலும் 7.4.134

3882

மன்றில் நிறைந்து நடமாட வல்லார் தொல்லை ஐயாற்றில்
கன்று தடை உண்டு எதிர் அழைக்க கதறிக் கனைக்கும் புனிற்றாப்போல்
ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாம் கேட்க ஓலம் என
நின்று மொழிந்தார் பொன்னி மா நதியும் நீங்கி நெறி காட்ட 7.4.135

3883

விண்ணின் முட்டும் பெருக்காறு மேல்பால் பளிக்கு வெற்பு என்ன
நண்ணி நிற்கக் கீழ்பால் நீர் வடிந்த நடுவு நல்லவழிப்
பண்ணிக் குளிர்ந்த மணல் பரப்பக் கண்டதொண்டர் பயில் மாரி
கண்ணில் பொழிந்து மயிர்ப் புளகம் கலக்கக் கை அஞ்சலி குவித்தார் 7.4.136

3884

நம்பி பாதம் சேரமான் பெருமாள் பணிய நாவலூர்
செம்பொன் முந்நூல் மணிமார்பர் சேரர் பெருமான் எதிர் வணங்கி
உம்பர் நாதர் உமக்கு அளித்தது அன்றோ என்ன உடன் மகிழ்ந்து
தம்பிரானைப் போற்றி இசைத்து தடம் காவேரி நடு அணைந்தார் 7.4.137

3885

செஞ்சொல் தமிழ் நாவலர் கோனும் சேரர் பிரானும் தம் பெருமான்
எஞ்சல் இல்லா நிறை ஆற்றின் இடையே அளித்த மணல் வழியில்
தஞ்சம் உடைய பரிசனமும் தாமும் ஏறித் தலைச்சென்று
பஞ்ச நதி வாணரைப் பணிந்து விழுந்தார் எழுந்தார் பரவினார் 7.4.138

3886

அங்கண் அரனார் கருணையினை ஆற்றாது ஆற்றித் திளைத்து இறைஞ்சித்
தங்கள் பெருமான் திரு அருளால் தாழ்ந்து மீண்டும் தடம்பொன்னித்
பொங்கு நதியின் முன் வந்த படியே நடுவு போந்து ஏறத்
துங்க வரை போல் நின்ற நீர் துரந்து தொடரப் பெருகியதால் 7.4.139

3887

ஆய செயலின் அதிசயத்தைக் கண்ட கரையில் ஐயாறு
மேய பெருமான் அருள் போற்றி வீழ்ந்து தாழ்ந்து மேல்பால் போய்த்
தூய மதிவாழ் சடையார் தம் பதிகள் பிறவும் தொழுது ஏத்திச்
சேய கொங்க நாடு அணைந்தார் திருவாரூரர் சேரர் உடன் 7.4.140

3888

கொங்கு நாடு கடந்து போய்க் குலவு மலைநாட்டு எல்லையுற
நங்கள் பெருமான் தோழனார் நம்பி தம்பிரான் தோழர்
அங்கண் உடனே அணை எழுந்து அருளா நின்றார் எனும் விருப்பால்
எங்கும் அந் நாட்டு உள்ளவர்கள் எல்லாம் எதிர்கொண்டு இன்புறுவர் 7.4.141

3889

பதிகள் எங்கும் தோரணங்கள் பாங்கர் எங்கும் பூவனங்கள்
வதிகள் எங்கும் குளிர் பந்தர் மனைகள் எங்கும் அகில் புகைக்கார்
நதிகள் எங்கும் மலர்ப் பிறங்கல் ஞாங்கர் எங்கும் ஓங்குவன
வீதிகள் எங்கும் முழவின் ஒலி நிலங்கள் எங்கும் பொலம் சுடர்ப்பூ 7.4.142

3890

திசைகள் தோறும் வரும் பெருமை அமைச்சர் சேனைப் பெருவெள்ளம்
குசை கொள் வாசி நிரை வெள்ளம் கும்ப யானை அணி வெள்ளம்
மிசை கொள் பண்ணும் பிடிவெள்ளம் மேவும் சோற்று வெள்ளம் கண்டு
அசைவில் இன்பப் பெருவெள்ளத்து அமர்ந்து கொடுங் கோளூர் அணைந்தார்
7.4.143

3891

கொடுங்கோ ளூரின் மதில் வாயில் அணி கோடித்து மருகில் உடுத்து
தொடுங்கோபுரங்கள் மாளிகைகள் குளிர் குளிர் சாலைகள் தெற்றி
நெடுங்கோ நகர்கள் ஆடல் அரங்கு நிரந்த மணித் தாமம் கமுக
விடுங்கோதைப் பூந் தாமங்கள் நிரைத்து வெவ்வேறு அலங்கரித்து 7.4.144

3892

நகர மாந்தர் எதிர் கொள்ள நண்ணி எண்ணில் அரங்கு தொறும்
மகர குழை மாதர்கள் பாடி ஆட மணி வீதியில் அணைவார்
சிகர நெடும் மாளிகை அணையார் சென்று திருவஞ்சைக் களத்து
நிகரில் தொண்டர் தமைக் கொண்டு புகுந்தார் உதியர் நெடுந்தகையார் 7.4.145

3893

இறைவர் கோயில் மணி முன்றில் வலம் கொண்டு இறைஞ்சி எதிர்புக்கு
நிறையும் காதல் உடன் வீழ்ந்து பணிந்து நேர் நின்று ஆரூரர்
முறையில் விளம்பும் திருப்பதிகம் முடிப்பது கங்கை என்று எடுத்துப்
பிறை கொள் முடியார் தமைப்பாடி பரவிப் பெருமாளுடன் தொழுதார் 7.4.146

3894

தொழுது தினைத்துப் புறம் போந்து தோன்றப் பண்ணும் பிடிமேற்பார்
முழுதும் ஏத்த நம்பியை முன் போற்றிப் பின்பு தாம் ஏறிப்
பழுதில் மணிச் சாமரை வீசிப் பைம்பொன் மணி மாளிகையில் வரும்
பொழுது மறுகில் இருபுடையும் மிடைந்தார் வாழ்த்திப் புகல்கின்றார் 7.4.147

3895

நல்ல தோழர் நம் பெருமாள் தமக்கு நம்பி இவர் என்பார்
எல்லை இல்லாத் தவம் முன்பு என் செய்தோம் இவரைத் தொழ என்பார்
செல்வம் இனி என் பெறுவது நம் சிலம்பு நாட்டுக்கு என உரைப்பார்
சொல்லும் தரமோ பெருமாள் செய் தொழிலைப் பாரீர் எனத் தொழுவார் 7.4.148

3896

பூவும் பொரியும் பொன் துகளும் பணிவார் பொருவில் இவர்
மேவும் பொன்னித் திருநாடே புவிக்குத் திலதம் என வியப்பார்
பாவும் துதிகள் எம் மருங்கும் பயில வந்து மாளிகையின்
மாவும் களிறும் நெருங்கும் மணி வாயில் புகுந்து மருங்கு இழிந்தார் 7.4.149

3897

கழறிற்றறியுந் திருவடியும் கலை நாவலர் தம் பெருமானாம்
முழவில் பொலியும் திரு நெடுந்தோள் முனைவர் தம்மை உடன் கொண்டு
விழவில் பொலியும் மாளிகையில் விளங்கு சிங்காசனத்தின் மிசை
நிழல் திக்கு ஒளிரும் பூணாரை இருத்தித் தாமும் நேர் நின்று 7.4.150

3898

செம்பொன் கரக வாச நீர் தேவிமார்கள் எடுத்து ஏத்த
அம்பொன் பாதம் தாம் விளக்கி அருளப் புகலும் ஆரூரர்
தம்பொன் தாளை வாங்கி இது தகாது என்று அருளத் தரணியில் வீழ்ந்து
எம் பெற்றிமையால் செய்தன இங்கு எல்லாம் இசைய வேண்டும் என 7.4.151

3899

பெருமாள் வேண்ட எதிர் மறுக்க மாட்டார் அன்பில் பெரும் தகையார்
திருமா நெடுந்தோள் உதியர் பிரான் செய்த எல்லாம் கண்டு இருந்தார்
அருமானம் கொள் பூசனைகள் அடைவே எல்லாம் அளித்து அதன்பின்
ஒருமா மதிவெண்குடை வேந்தர் உடனே அமுது செய்து வந்தார் 7.4.152

3900

சேரர் உடனே திருவமுது செய்த பின்பு கை கோட்டி
ஆரம் நறுமென் கலவை மான் மதச் சாந்து ஆடை அணிமணிப் பூண்
ஈர விரை மென்மலர்ப் பணிகள் இனைய முதலாயின வருக்கம்
சார எடுத்து வன் தொண்டர் சாத்தி மிகத் தமக்கு ஆக்கி 7.4.153

3901

பாடல் ஆடல் இன்னியங்கள் பயில்தல் முதலாம் பண்ணையினில்
நீடும் இனிய விநோதங்கள் நெருங்கு காலம் தொறும் நிகழ
மாடு விரைப்பூந்தருமணஞ்செய் ஆராமங்கள் வைகுவித்துக்
கூட முனைப் பாடியார் கோவை கொண்டு மகிழ்ந்தார் கோதையார் 7.4.154

3902

செண்டாடும் தொழில் மகிழ்வும் சிறு சோற்றுப் பெரும் சிறப்பும்
வண்டாடும் மலர் வாவி மருவிய நீர் விளையாட்டும்
தண்டாமும் மத கும்பத் தட மலைப்போர் சல மற்போர்
கண்டாரா விருப்பு எய்தக் காவலனார் காதல் செய்நாள் 7.4.155

3903

நாவலர் தம் பெருமானும் திருவாரூர் நகர் ஆளும்
தேவர் பிரான் கழல் ஒரு நாள் மிக நினைந்த சிந்தையராய்
ஆவியை ஆரூரானை மறக்கலுமாமே என்னும்
மேவிய சொல் திருப்பதிகம் பாடியே வெருவுற்றார் 7.4.156

3904

திருவாரூர் தனை நினைந்து சென்று தொழுவேன் என்று
மரு ஆர்வத் தொண்டர் உடன் வழி கொண்டு செல்பொழுதில்
ஒருவா நண் புள்ளுருக உடன் எழுந்து கை தொழுது
பெருவான வரம்பனார் பிரிவு ஆற்றார் பின் செல்வார் 7.4.157

3905

வன் தொண்டர் முன் எய்தி மனம் அழிந்த உணர்வினராய்
இன்று உமது பிரிவு ஆற்றேன் என் செய்கேன் யான் என்ன
ஒன்றுநீர் வருந்தாதே உமது பதியின் கண் இருந்து
அன்றினார் முனை முருக்கி அரசு ஆளும் என மொழிந்தார் 7.4.158

3906

ஆரூரர் மொழிந்து அருள அது கேட்ட அருள் சேரர்
பாரோடு விசும்பு ஆட்சி எனக்கு உமது பாதமலர்
தேரூரும் நெடும் வீதித் திருவாரூர்க்கு எழுந்து அருள
நேரூரும் மனக் காதல் நீக்கவும் அஞ்சுவன் என்றார் 7.4.159

3907

மன்னவனார் அது மொழிய வன்தொண்டர் எதிர் மொழிவார்
என்னுயிருக்கு இன் உயிராம் எழில் ஆரூர்ப் பெருமானை
வன்னெஞ்சக் கள்வனேன் மறந்து இரேன் மதி அணிந்தார்
இன்னருளால் அரசளிப்பீர் நீர் இருப்பீர் என இறைஞ்ச 7.4.160

3908

மற்றவரும் பணிந்து இசைந்தே மந்திரிகள் தமை அழைத்து
பொற்பு நிறை தொல் நகரில் இற்றைக்கு முன்புகுந்த
நற்பெரும் பண்டார நானா வருக்கம் ஆன வெலாம்
பற்பலவாம் ஆளின் மிசை ஏற்றிவரப் பண்ணும் என 7.4.161

3909

ஆங்கவரும் அன்று வரை ஆயம் ஆகிய தனங்கள்
ஓங்கிய பொன் நவ மணிகள் ஒளிர் மணிப்பூண் துகில் வருக்கம்
ஞாங்கர் நிறை விரையுறுப்பு வருக்கம் முதல் நலம் சிறப்பத்
தாங்கு பொதி வினைஞர் மேல் தலம் மலியக் கொண்டு அணைந்தார் 7.4.162

3910

மற்றவற்றின் பரப்பு எல்லாம் வன் தொண்டர் பரிசனத்தின்
முற்படவே செலவு இட்டு முனைப்பாடித் திருநாடார்
பொற் பதங்கள் பணிந்து அவரைத் தொழுது எடுத்துப் புணை அலங்கல்
வெற்புயர் தோள் உறத் தழுவி விடை அளித்தார் வன்தொண்டர் 7.4.163

3911

ஆரூரர் அவர் தமக்கு விடை அருளி அங்கு அன்று
காரூரும் மலைநாடு கடந்து அருளிக் கல் சுரமும்
நீரூரும் கான் யாரும் நெடும் கானும் பலகழிய
சீரூரும் திருமுருன் பூண்டி வழிச்செல்கின்றார் 7.4.164

3912

திரு முருகன் பூண்டி அயல் செல்கின்ற போழ்தின் கண்
பொருவிடையார் நம்பிக்குத் தாமே பொன் கொடுப்பதலால்
ஒருவர் கொடுப்பக் கொள்ள ஒண்ணாமைக்கு அதுவாங்கிப்
பெருகருளால் தாம் கொடுக்கப் பெறுவதற்கோ அது அறியோம் 7.4.165

3913

வென்றி மிகு பூதங்கள் வேடர் வடிவாய் சென்று
வன்தொண்டர் பண்டாரம் கவர அருள் வைத்து அருள
அன்றினார் புரம் எரித்தார் அருளால் வேட்டுவப் படையாய்ச்
சென்று அவர் தாம் வரும் வழியில் இருபாலும் செயிர்த்து எழுந்து 7.4.166

3914

வில் வாங்கி அலகம்பு விசை நாணில் சந்தித்துக்
கொல்வோம் இங்கு இட்டுப்போம் எனக் கோபத்தால் குத்தி
எல்லையில் பண்டாரம் எல்லாம் கவர்ந்து கொள இரிந்தோடி
அல்லலுடன் பறியுண்டார் ஆரூரர் மருங்கு அணைந்தார் 7.4.167

3915

ஆரூரர் தம்பால் அவ்வேடுவர் சென்று அணையாதே
நீரூருஞ் செஞ்சடையார் அருளினால் நீங்க அவர்
சேரூராம் திருமுருகன் பூண்டியினில் சென்று எய்திப்
போரூரு மழவிடையார் கோயிலை நாடிப் புக்கார் 7.4.168

3916

அங்கணர் தம் கோயிலினை அஞ்சலி கூப்பித் தொழுது
மங்குலுற நீண்ட திருவாயிலினை வந்து இறைஞ்சிப்
பொங்கு விருப்புடன் புக்கு வலம் கொண்டு புனித நதி
திங்கள் முடிக்கு அணிந்தவர் தம் திருமுன்பு சென்று அணைந்தார் 7.4.169

3917

உருகிய அன்பொடு கைகள் குவித்து விழுந்து உமைபாகம்
மருவிய தம் பெருமான் முன் வன்தொண்டர் பாடினார்
வெருவுறவேடுவர் பறிக்கும் வெஞ்சுரத்தில் எத்துக்கு இங்கு
அருகு இருந்தீர் எனக்கு கொடுகு வெஞ்சிலை அஞ்சொற்பதிகம் 7.4.170

3918

பாடியவர் பரவுதலும் பரம்பொருளாம் அவர் அருளால்
வேடுவர் தாம் பறித்த பொருள் அவை எல்லாம் விண்ணெருங்க
நீடு திரு வாயிலின் முன் குவித்திடலும் நேர் இறைஞ்சி
ஆடும் அவர் திருவருளால் அப்படியே கைக் கொண்டார் 7.4.171

3919

கைக்கொண்டு கொடுபோம் அக் கைவினைஞர் தமை ஏவி
மைக் கொண்ட மிடற்றாரை வணங்கிப்போய்க் கொங்கு அன்று
மெய்க் கொண்ட காலினால் விரைந்து ஏகி மென் கரும்பும்
செய்க் கொண்ட சாலியுஞ்சூழ் திருவாரூர் சென்று அணைந்தார் 7.4.172

3920

நாவலர் மன்னவர் அருளால் விடை கொண்ட நரபதியார்
ஆவியின் ஒன்றா நண்பின் ஆரூரர் தமை நினைந்து
மாவலரும் சோலை மா கோதையினில் மன்னிமலைப்
பூவலயம் பொது நீக்கி அரசு உரிமை புரிந்து இருந்தார் 7.4.173

3921

இந் நிலைமை உதியர் பிரான் எம்பிரான் வன்தொண்டர்
பொன்னி வளநாடு அகன்று மாகோதையினில் மேல் புகுந்து
மன்னு திருக் கயிலை யினில் மத வரைமேல் எழுந்து அருள
முன்னர் வயப்பரி உகைக்கும் திருத்தொழில் பின்மொழிகின்றாம் 7.4.174

3922

மலை மலிந்த திருநாட்டு மன்னவனார் மா கடல் போல்
சிலை மலிந்த கொடித் தானைச் சேரலனார் கழல் போற்றி
நிலை மலிந்த மணிமாடம் நீள் மறுகு நான் மறை சூழ்
கலை மலிந்த புகழ்க் காழிக் கணநாதர் திறம் உரைப்பாம் 7.4.175

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

7.5 கணநாத நாயனார் புராணம் (3923 - 3929)

திருச்சிற்றம்பலம்

3923

ஆழி மாநிலத்து அகிலம் ஈன்று அளித்தவள் திருமுலை அமுதுண்ட
வாழி ஞான சம்பந்தர் வந்து அருளிய வளப்பினது அளப்பு இல்லா
ஊழி மாகடல் வெள்ளத்து மிதந்து உலகினுக்கு ஒரு முதலாய்
காழி மா நகர் திரு மறையவர் குலக் காவலர் கணநாதர் 7.5.1

3924

ஆய அன்பர் தாம் அணிமதில் சண்பையின் அமர் பெரும் திருத்தோணி
நாயனார்க்கு நல் திருப்பணியாயின நாளும் அன்பொடு செய்து

மேய அத் திருத் தொண்டினில் விளங்குவார் விரும்பி வந்து அணைவார்க்குத்
தூய கைத் திருத் தொண்டினில் அவர் தமைத் துறை தொறும் பயில்விப்பார் 7.5.2

3925

நல்ல நந்தவனப் பணி செய்பவர் நறுந்துணர் மலர் கொய்வோர்
பல் பணித் தொடை புனைபவர் கொணர் திரு மஞ்சனப் பணிக்கு உள்ளோர்
அல்லும் நன் பகலும் திரு அலகிட்டு திரு மெழுக்கு அமைப்போர்
எல்லையில் விளக்கு எரிப்பவர் திரு முறை எழுதுவோர் வாசிப்போர் 7.5.3

3926

இனைய பஃதிருப் பணிகளில் அணைந்தவர்க்கு ஏற்ற அத் திருத்தொண்டின்
வினை விளங்கிட வேண்டிய குறை எலாம் முடித்து மேவிடச் செய்தே
அனைய அத்திறம் புரிதலில் தொண்டரை ஆக்கி அன்புறு வாய்மை
மனை அறம் புரிந்து அடியவர்க்கு இன்பு உற வழிபடும் தொழில் மிக்கார் 7.5.4

3927

இப் பெரும் சிறப்பு எய்திய தொண்டர் தாம் ஏறு சீர் வளர் காழி
மெய்ப் பெரும் திரு ஞான போனகர் கழல் மேவிய விருப்பாலே
முப் பெரும் பொழுது அர்ச்சனை வழிபாடு முளும் அன்பொடு நாளும்
ஒப்பில் காதல் கூர் உளங்களி சிறந்திட ஒழுகினார் வழுவாமல் 7.5.5

3928

ஆன தொண்டினில் அமர்ந்த பேர் அன்பரும் அகல் இடத்தினில் என்றும்
ஞானம் உண்டவர் புண்டரீகக் கழல் அருச்சனை நலம் பெற்றுத்
தூ நறும் கொன்றை முடியவர் சுடர் நெடும் கயிலை மால்வரை எய்தி
மான நற்பெரும் கணங்களுக்கு நாதராம் வழித் தொண்டின் நிலை பெற்றார் 7.5.6

3929

உலகம் உய்ய நஞ்சுண்டவர் தொண்டினில் உறுதி மெய் உணர்வு எய்தி
அலகில் தொண்டருக்கு அறிவு அளித்தவர் திறம் அவனியின் மிசை ஆக்கும்
மலர் பெரும் புகழ்ப் புகலியில் வரும் கண நாதனார் கழல் வாழ்த்தி
குலவு நீற்று வண் கூற்றுவனார் திறம் கொள்கையின் மொழிகின்றோம் 7.5.7

திருச்சிற்றம்பலம்

7.6 கூற்றுவ நாயனார் புராணம் (3930 - 3938)

திருச்சிற்றம்பலம்

3930

துன்னார் முளைகள் தோள் வலியால் வென்று சூலப் படையார் தம்
நன்னாமம் தம் திரு நாவில் நாளும் நவிலும் நலம் மிக்கார்
பன்னாள் ஈசர் அடியார்தம் பாதம் பரவி பணிந்து ஏத்தி
முன்னாகிய நல் திருத் தொண்டின் முயன்றார் கனந்தை முதல்வனார் 7.6.1

3931

அருளின் வலியால் அரசு ஒதுங்க அவனி எல்லாம் அடிப் படுப்பார்

பொருளின் முடிவும் காண்பரிய வகையால் பொலிவித்து இகல் சிறக்க
மருளும் களிறு பாய் புரவி மணித்தேர் படைஞர் முதல் மாற்றார்
வெருளும் கருவி நான்கு நிறை வீரச் செருக்கின் மேலார் 7.6.2

3932

வென்றி வினையின் மீக்கூர வேந்தர் முனைகள் பல முருக்கிச்
சென்று தும்பைத் துறை முடித்தும் செருவில் வாகைத் திறம் கெழுமி
மன்றல் மாலை மிலைந்தவர் தம் வள நாடு எல்லாம் கவர்ந்து முடி
ஒன்றும் ஒழிய அரசர் திரு எல்லாம் உடையர் ஆனார் 7.6.3

3933

மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணி மா மவுலி புனைவதற்குத்
தில்லை வாழ் அந்தணர் தம்மை வேண்ட அவரும் செம்பியர் தம்
தொல்லை நீடும் குல முதலோர்க்கு அன்றி சூட்டோம் முடி என்று
நல்காராகிச் சேரலன் தன் மலை நாடு அணைய நண்ணுவார் 7.6.4

3934

ஒருமை உரிமைத் தில்லை வாழ் அந்தணர்கள் தம்மில் ஒரு குடியைப்
பெருமை முடியை அருமை புரி காவல் பேணும் படி இருத்தி
இருமை மரபும் தூயவர் தாம் சேரர் நாட்டில் எய்தியபின்
வரும் ஐ உறவால் மனம் தளர்ந்து மன்றுள் ஆடும் கழல் பணிவார் 7.6.5

3935

அற்றை நாளில் இரவின் கண் அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர் பாதம் பெறவே வேண்டும் எனப் பரவும்
பற்று விடாது துயில் வோர்க்குக் கனவில் பாத மலர் அளிக்க
உற்ற அருளால் அவை தாங்கி உலகம் எல்லாம் தனிப் புரந்தார் 7.6.6

3936

அம் பொன் நீடும் அம்பலத்துள் ஆரா அமுதத் திரு நடம் செய்
தம்பிரானார் புவியில் மகிழ கோயில் எல்லாம் தனித் தனியே
இம்பர் ஞாலம் களி கூர எய்தும் பெரும் பூசனை இயற்றி
உம்பர் மகிழ அரசு அளித்தே உமையாள் கணவன் அடிசேர்ந்தார் 7.6.7

3937

காதல் பெருமைத் தொண்டின் நிலைக் கடல் சூழ் வையம் காத்து அளித்துக்
கோதங்ககல முயல் களந்தைக் கூற்றனார் தம் கழல் வணங்கி
நாத மறை தந்து அளித்தாரை நடைநூல் பாவில் நவின்று ஏத்தும்
போதம் மருவிப் பொய் அடிமை இல்லாப் புலவர் செயல் புகல்வாம் 7.6.8

3938

சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி
தேனும் குழலும் பிழைத்த திரு மொழியாள் புலவி தீர்க்க மதி
தானும் பணியும் பகை தீர்க்கும் சடையார் தூது தரும் திருநாள்
கூனும் குருடும் தீர்த்து ஏவல் கொள்வார் குலவு மலர்ப் பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்குகூன் 7.6.9

திருச்சிற்றம்பலம்

சருக்கம் 7 / வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் முற்றிற்று.

சருக்கம் 8 (பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம்)

8.1 பொய்யடிமை யில்லாத புலவர் புராணம் (3939 - 3941)
8.2 புகழ்ச் சோழ நாயனார் புராணம் (3942 .- 3982)
8.3 நரசிங்க முனையரைய நாயனார் புராணம் (3983 - 3991)
8.4 அதிபத்த நாயனார் புராணம் (3992 - 4011)
8.5 கலிக்கம்ப நாயனார் புராணம் (4012 - 4021)
8.6 கலிய நாயனார் புராணம் (4022 - 4038)
8.6 சத்தி நாயனார் புராணம் (4039 - 4044)
8.7 ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் (4045- 4054)

8. 1 பொய்யடிமை யில்லாத புலவர் புராணம் (3939 - 3941)

திருச்சிற்றம்பலம்

3939

செய்யுள் நிகழ் சொல் தெளிவும் செவ்விய நூல் பல நோக்கும்
மெய் உணர்வின் பயன் இதுவே எனத் துணிந்து விளங்கி ஒளிர்
மை அணியும் கண்டத்தார் மலர் அடிக்கே ஆளானார்
பொய் அடிமை இல்லாத புலவர் எனப் புகழ் மிக்கார் 8.1.1

3940

பொற்பு அமைந்த அரவாரும் புரிசடையார் தமை அல்லால்
சொற்பதங்கள் வாய் திறவாத் தொண்டு நெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய் அடிமை உடையாராம் பெரும் புலவர்
மற்றவர் தம் பெருமையார் அறிந்து உரைக்க வல்லார்கள் 8.1.2

3941

ஆங்கு அவர் தம் அடி இணைகள் தலை மேல் கொண்டு அவனி எலாம்
தாங்கிய வெண்குடை வளவர் குலம் செய்த தவம் அனையார்
ஓங்கி வளர் திருத்தொண்டின் உண்மை உணர் செயல் புரிந்த
பூம் கழலார் புகழ்ச் சோழர் திருத்தொண்டு புகல்கின்றாம் 8.1.3

திருச்சிற்றம்பலம்

8.2 புகழ்ச் சோழ நாயனார் புராணம் (3942 .- 3982)

திருச்சிற்றம்பலம்

3942

குலகிரியின் கொடுமுடிமேல் கொடி வேங்கைக் குறி எழுதி
நிலவு தரு மதிக்குடைக் கீழ் நெடு நிலம் காத்து இனிது அளிக்கும்
மலர் புகழ் வண் தமிழ்ச் சோழர் வளநாட்டு மாமூதூர்
உலகில் வளர் அணிக்கெல்லாம் உள்ளும் உறையூராம் உறையூர் 8.2.1

3943

அளவில் பெரும் புகழ் நகரம் அதனில் அணிமணி விளக்கும்
இள வெயிலின் சுடர்படலை இரவு ஒழிய எறிப்பனவாய்க்
கிளர் ஒளி சேர் நெடு வானப் பேர் ஆற்றுக் கொடு கெழுவும்
வளர் ஒளி மாளிகை நிரைகள் மருங்கு உடைய மறுகு எல்லாம் 8.2.2

3944

நாக தலத்தும் பிலத்தும் நானிலத்தும் நலம் சிறந்த
போகம் அனைத்தினுக்கும் உறுப்பாம் பொருவிறந்த வளத்தினவாய்
மாக நிறைந்திட மலிந்த வரம்பில் பல பொருள் பிறங்கும்
ஆகரம் ஒத்து அளவில் ஆவண வீதிகள் எல்லாம் 8.2.3

3945

பார் நனைய மதம் பொழிந்து பனி விசும்பு கொள முழங்கும்
போர் முக வெம் கறை அடியும் புடையினம் என்று அடையவரும்
சோர் மழையின் விடு மதத்துச் சுடரு நெடுமின் ஓடைக்
கார் முகிலும் பல தெரியா களிற்று நிரைகள் எல்லாம் 8.2.4

3946

படுமணியும் பரிச் செருக்கும் ஒலி கிளரப் பயில் புரவி
நெடு நிரை முன் புல்லுண் வாய் நீர்த் தரங்க நுரை நிவப்ப
விடு சுடர் மெய் உறை அடுக்கல் முகில் படிய விளங்குதலால்
தொடு கடல்கள் அனைய பல துரங்க சாலைகள் எல்லாம் 8.2.5

3947

துளைக்கை ஐராவதக் களிறும் துரங்க அரசும் திருவும்
விளைத்த அமுதும் தருவும் விழுமணியும் கொடுபோத
உளைத்த கடல் இவற்று ஒன்று பெற வேண்டி உம்பரூர்
வளைத்தது போன்று உளது அங்கண் மதில் சூழ்ந்த மலரக் கிடங்கு 8.2.6

3948

கார் ஏறும் கோபுரங்கள் கதிர் ஏறும் மலர்ச் சோலை
தேர் ஏறும் அணி வீதி திசை ஏறும் வசையில் அணி
வார் ஏறும் முலை மடவார் மருங்கு ஏறும் மலர்க்கணை ஒண்
பார் ஏறும் புகழ் உறந்தைப் பதியின் வளம் பகர் அரிதால் 8.2.7

3949

அந் நகரில் பார் அளிக்கும் அடல் அரசர் ஆகின்றார்
மன்னும் திருத் தில்லை நகர் மணி வீதி அணி விளங்கும்
சென்னி நீடு அனபாயன் திருக்குலத்து வழி முதல்வோர்
பொன்னி நதிப் புரவலனார் புகழ் சோழர் எனப் பொலிவார் 8.2.8

3950

ஒரு குடைக் கீழ் மண்மகளை உரிமையினில் மணம் புணர்ந்து
பருவரைத் தோள் வென்றியினால் பார் மன்னர் பணி கேட்ப
திருமலர்த்தும் பேருலகும் செங்கோலின் முறை நிற்ப
அருமறைச் சைவம் தழைப்ப அரசு அளிக்கும் அந்நாளில் 8.2.9

3951

பிறை வளரும் செம் சடையார் பேணும் சிவ ஆலயம் எல்லாம்
நிறை பெரும் பூசனை விளங்க நீடு திருத்தொண்டர் தமைக்
குறை இரந்து வேண்டுவன குறிப்பின் வழி கொடுத்து அருளி
முறை புரிந்து திருநீற்று முதல் நெறியே பாலிப் பார் 8.2.10

3952

அங்கண் இனிது உறையும் நாள் அரசு இறைஞ்ச வீற்று இருந்து
கொங்கரொடு குட புலத்துக் கோ மன்னர் திறை கொணரத்
தங்கள் குல மரபின் முதல் தனி நகராம் கருவூரில்
மங்கல நாள் அரசு உரிமைச் சுற்றம் உடன் வந்து அணைந்தார் 8.2.11

3953

வந்து மணி மதில் கருவூர் மருங்கு அணைவார் வானவர் சூழ்
இந்திரன் வந்து அமரர் புரி எய்துவான் என எய்தி
சிந்தை களி கூர்ந்து அரனார் மகிழ் திரு ஆன்நிலைக் கோயில்
முந்துற வந்து இறைஞ்சி மொய் ஒளி மாளிகை புகுந்தார் 8.2.12

3954

மாளிகை முன் அத்தாணி மண்டபத்தின் மணிபுனை பொன்
கோளரி ஆசனத்து இருந்து குட புல மன்னவர் கொணர்ந்த
ஒளி நெடும் களிற்றின் அணி உலப்பில் பரி துலைக் கனகம்
நீளிடைவில் விலகு மணி முதல் நிறையும் திறை கண்டார் 8.2.13

3955

திறை கொணர்ந்த அரசர்க்குச் செயல் உரிமைத் தொழில் அருளி
முறை புரியும் தனித் திகரி முறைநில்லா முரண் அரசர்
உறை அரணம் உளவாகில் தெரிந்து உரைப்பீர் என உணர்வு
நிறை மதி நீடு அமைச்சர்க்கு மொழிந்து அருளி நிகழும் நாள் 8.2.14

3956

சென்று சிவகாமியார் கொணர் திருப்பள்ளித் தாமம்
அன்று சிதறும் களிற்றை அற எறிந்து பாகரையும்
கொன்ற எறி பத்தர் எதிர் எனையும் கொன்று அருளும் என
வென்றி வடிவாள் கொடுத்துத் திருத்தொண்டில் மிகச் சிறந்தார் 8.2.15

3957

விளங்கு திரு மதிக் குடைக்கீழ் வீற்று இருந்து பார் அளிக்கும்
துளங்கொளி நீள் முடியார்க்குத் தொன் முறைமை நெறி அமைச்சர்
அளந்த திறை முறை கொணரா அரசன் உளன் ஒருவன் என
உளம் கொள்ளும் வகை உரைப்ப உறுவியப் பால் முறுவலிப்பார் 8.2.16

3958

ஆங்கவன் யார் என்று அருள அதிகன் அவன் அணித்தாக
ஓங்கு எயில் சூழ் மலை அரணத்துள் உறைவான் என உரைப்ப
ஈங்கு நுமக்கு எதிர் நிற்கும் அரண் உளதோ படை எழுந்த
பாங்கரணம் துகளாகப் பற்று அறுப்பீர் எனப் பகர்ந்தார் 8.2.17

3959

அடல் வளவர் ஆணையினால் அமைச்சர்களும் புறம் போந்து
கடல் அனைய நெடும் படையைக் கைவகுத்து மேல் செல்வார்
படர் வனமும் நெடும் கிரியும் பயில் அரணும் பொடி ஆக
மிடல் உடை நால் கருவியுற வெஞ்சமரம் மிக விளைத்தார் 8.2.18

3960

வளவனார் பெரும் சேனை வஞ்சி மலர் மிலைந்து ஏற
அளவில் அரண் அக்குறும்பில் அதிகர் கோன் அடல் படையும்
உளம் நிறை வெம் சினம் திருகி உயர் காஞ்சி மிலைந்து ஏறக்
கிளர் கடல்கள் இரண்டு என்ன இருபடையும் கிடைத்தனவால் < 8.2.19

3961

கயமொடு கயம் எதிர் குத்தின
அயமுடன் அயமுனை முட்டின
வயவரும் வயவரும் உற்றனர்
வியனமர் வியல் இடம் மிக்கதே 8.2.20

3962

மலையொடு மலைகள் மலைந்தென
அலை மத அருவி கொழிப்பொடு
சிலையினர் விசையின் மிசைத் தெரு
கொலை மதக் கரிகொலை உற்றவே 8.2.21

3963

சூறை மாருதம் ஒத்து எதிர்
ஏறு பாய் பரி வித்தகர்
வேறு வேறு தலைப் பெய்து
சீறி ஆவி செகுத்தனர் 8.2.22

3964

மண்டு போரின் மலைப்பவர்
துண்டம் ஆயிட உற்று எதிர்
கண்டர் ஆவி கழித்தனர்
உண்ட சோறு கழிக்கவே 8.2.23

3965

வீடினார் உடலில் பொழி
நீடுவார் குருதிப் புனல்
ஓடும் யாறென ஒத்தது
கோடு போல்வ பிணக் குவை 8.2.24

3966

வானிலாவு கருங்கொடி
மேனிலாவு பருந்து இனம்
ஏனை நீள் கழுகின் குலம்
ஆன ஊணொடு எழுந்தவே 8.2.25

3967

வரிவில் கதை சக்கரம் உற்கரம் வாள்
சுரிகைப் படை சத்திகழுக் கடைவேல்
எரி முத்தலை கப்பணமெற் பயில் கோல்
முரி உற்றன உற்றன மொய்க் களமே 8.2.26

3968

வடிவேல் அதிகன் படைமாள வரைக்
கடிசூழ் அரணக் கணவாய் நிரவிக்
கொடி மா மதில் நீடு குறும் பொறையூர்
முடி நேரியனார் படை முற்றியதே 8.2.27

3969

முற்றும் பொரு சேனை முனை தலையில்
கற்றிண் புரிசைப் பதி கட்டு அழியப்
பற்றும் துறை நொச்சிப் பரிந்து உடையச்
சுற்றும் படை வீரர் துணித்தனரே 8.2.28

3970

மாறுற்ற விறல் படை வாள் அதிகன்
நூறுற்ற பெரும்படை நூழில் படப்
பாறுற்ற எயில் பதி பற்று அற விட்டு
ஏறுற்றனன் ஓடி இருஞ் சுரமே 8.2.29

3971

அதிகன் படை போர் பொருதற்றதலை
பொதியின் குவை எண்ணில போயின பின்
நிதியின் குவை மங்கையர் நீள் பரிமா
எதிரும் கரி பற்றினர் எண்ணிலரே 8.2.30

3972

அரண் முற்றி எறிந்த அமைச்சர்கள் தாம்
இரணத் தொழில் விட்டு எயில் சூழ் கருவூர்
முரண் உற்ற சிறப்பொடு முன்னினர் நீள்
தரணித் தலைவன் கழல் சார் உறவே 8.2.31

3973

மன்னும் கருவூர் நகர் வாயிலின் வாய்
முன் வந்த கரும் தலை மொய் குவைதான்
மின்னும் சுடர் மா முடிவேல் வளவன்
தன் முன்பு கொணர்ந்தனர் தானை உளோர் 8.2.32

3974

மண்ணுக்கு உயிராம் எனும் மன்னவனார்
எண்ணில் பெருகும் தலை யாவையினும்
நண்ணிக் கொணரும் தலை ஒன்றின் அடுக்
கண்ணுற்றது ஓர் புன் சடை கண்டனரே 8.2.33

3975

கண்ட பொழுதே நடுங்கி மனம் கலங்கிக் கைதொழுது
கொண்ட பெரும் பயத்துடனும் குறித்து எதிர் சென்று அது கொணர்ந்த
திண்டிறலோன் கைத் தலையில் சடை தெரியப் பார்த்து அருளி
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்து இழியப் புரவலனார் 8.2.34

3976

முரசுடைத்திண் படை கொடு போய் முதல் அமைச்சர் முனை முருக்கி
உரை சிறக்கும் புகழ்வென்றி ஒன்று ஒழிய ஒன்றாமல்
திரை சரிந்த கடல் உலகில் திருநீற்றின் நெறி புரந்துயான்
அரசு அளித்தபடி சால அழகி! தென அழிந்து அயர்வார் 8.2.35

3977

தார் தாங்கிக் கடன் முடித்த சடைதாங்கும் சடை முடையார்
நீர் தாங்கும் சடைப் பெருமான் நெறிதாம் கண்டவரானார்
சீர் தாங்கும் இவர் வேணிச் சிரம் தாங்கி வரக் கண்டும்
பார் தாங்க இருந்தேனோ பழிதாங்குவேன் என்றார் 8.2.36

3978

என்று அருளிச் செய்து அருளி இதற்கு இசையும் படி துணிவார்
நின்ற நெறி அமைச்சர்க்கு நீள் நிலம் காத்து அரசு அளித்து
மன்றில் நடம் புரிவார் தம் வழித் தொண்டின் வழி நிற்ப
வென்றி முடி என் குமரன்தனைப் புனைவீர் என விதித்தார் 8.2.37

3979

அம்மாற்றம் கேட்டு அழியும் அமைச்சரையும் இடர் அதற்றிக்
கை மாற்றும் செயல்தாமே கடனாற்றும் கருத்து உடையார்
செம்மார்க்கம் தலை நின்று செந்தீ முன் வளர்ப்பித்துப்
பொய்ம்மாற்றும் திருநீற்றுப் புனை கோலத்தினில் பொலிந்தார் 8.2.38

3980

கண்ட சடைச் சிரத்தினையோர் கனகமணி கலத்து ஏந்தி
கொண்டு திருமுடித் தாங்கிக் குலவும் எரிவலம் கொள்வார்
அண்டர் பிரான் திரு நாமத்து அஞ்சு எழுத்தும் எடுத்து ஓதி
மண்டு தழல் பிழம்பின் இடை மகிழ்ந்து அருளி உள் புக்கார் 8.2.39

3981

புக்க பொழுது அலர் மாரி புவி நிறையப் பொழிந்து இழிய
மிக்க பெரு மங்கல தூரியம் விசும்பின் முழக்கு எடுப்ப
செக்கர் நெடும் சடை முடியார் சிலம்பு அலம்பு சேவடியின்
அக்கருணைத் திருநிழல் கீழ் ஆராமை அமர்ந்திருந்தார் 8.2.40

3982

முரசங் கொள் கடல் தானை மூவேந்தர் தங்களின் முன்
பிரசம் கொள் நறுந்தொடையல் புகழ்ச் சோழர் பெருமையினைப்
பரசும் குற்றேவலினால் அவர் பாதம் பணிந்து ஏத்தி
நரசிங்க முனையர் திறம் நாம் அறிந்தபடி உரைப்பாம் 8.2.41

திருச்சிற்றம்பலம்

8.3 நரசிங்க முனையரைய நாயனார் புராணம் (3983 .- 3991)

திருச்சிற்றம்பலம்

3983

கோடாத நெறி விளக்கும் குலமரபின் அரசு அளித்து
மாடாக மணி கண்டர் திருநீறே மனம் கொள்வார்
தேடாத பெருவளத்தில் சிறந்த திருமுனைப் பாடி
நாடாளும் காவலனார் நரசிங்க முனையரையர் 8.3.1

3984

இம்முனையர் பெருந்தகையார் இருந்து அரசு புரந்து போய்த்
தெம் முனைகள் பல கடந்து தீங்கு நெறிப் பாங்கு அகல
மும்முனை நீள் இலைச் சூல முதல் படையார் தொண்டுபுரி
அம் முனைவர் அடி அடைவே அரும் பெரும் பேரு என அடைவார் 8.3.2

3985

சின விடையார் கோயில் தொறுந் திருச் செல்வம் பெருக்குநெறி
யனஇடை ஆர் உயிர் துறக்க வரும் எனினும் அவை காத்து
மனவிடை ஆமைத் தொடையல் அணிமார்பர் வழித்தொண்டு
கனவிடை ஆகிலும் வழுவாக் கடன் ஆற்றிச் செல்கின்றார் 8.3.3

3986

ஆறு அணிந்த சடை முடியார்க்கு ஆதிரை நாள் தொறும் என்றும்
வேறு நிறை வழிபாடு விளக்கிய பூசனை மேவி
நீறு அணியும் தொண்டர் அணைந்தார்க்கு எல்லாம் நிகழ் பசும் பொன்
நூறு குறையாமல் அளித்து இன் அமுது நுகர்விப்பார் 8.3.4

3987

ஆன செயல் முறை புரிவார் ஒரு திருவாதிரை நாளில்
மேன்மை நெறித் தொண்டர்க்கு விளங்கிய பொன் இடும் பொழுதில்
மான நிலை அழிதன்மை வரும் காமக்குறி மலர்ந்த
ஊனம் நிகழ் மேனியராய் ஒருவர் நீறு அணிந்து அணைந்தார் 8.3.5

3988

மற்று அவர் தம் வடிவு இருந்த படி கண்டு மருங்குள்ளார்
உற்ற இகழ்ச்சியராகி ஒதுங்குவார் தமைக் கண்டு
கொற்றவனார் எதிர் சென்று கைகுவித்துக் கொடு போந்தப்
பெற்றியினார் தமை மிகவும் கொண்டாடிப் பேணுவார் 8.3.6

3989

சீலம் இலரே எனினும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம் இகழ்ந்த அருநரகம் நண்ணாமல் எண்ணுவார்
பாலணைந்தார் தமக்கு அளித்தபடி இரட்டிப் பொன் கொடுத்து
மேலவரைத் தொழுது இனிய மொழி விளம்பி விடை கொடுத்தார் 8.3.7

3990

இவ்வகையே திருத் தொண்டின் அருமை நெறி எந்நாளும்
செவ்விய அன்பினில் ஆற்றித் திருந்திய சிந்தையர் ஆகிப்
பை வளர் வாள் அரவு அணிந்தார் பாதமலர் நிழல் சோர்ந்து
மெய் வகைய வழி அன்பின் மீளாத நிலை பெற்றார் 8.3.8

3991

விட நாகம் அணிந்த பிரான் மெய்த்தொண்டு விளைந்த நிலை
உடனாகும் நரசிங்க முனையர் பிரான் கழல் ஏத்தித்
தடநாகம் மதம் சொரியத் தனம் சொரியும் கலம் சேரும்
கடனாகை அதிபத்தர் கடனாகைக் கவின் உரைப்பாம் 8.3.9

திருச்சிற்றம்பலம்

8.4 அதிபத்த நாயனார் புராணம் (3992.- 4011)

திருச்சிற்றம்பலம்

3992

மன்னி நீடிய செங்கதிரவன் வழி மரபின்
தொன்மையாம் முதல் சோழர் தம் திருக்குலத்து உரிமைப்
பொன்னி நாடு எனும் கற்பகப் பூங்கொடி மலர் போல்
நன்மை சான்றது நாகப் பட்டினத் திரு நகரம் 8.4.1

3993

தாம நித்திலக் கோவைகள் சரிந்திடச் சரிந்த
தேமலர்க் குழல் மாதர் பந்து ஆடும் தெற்றிகள் சூழ்
காமர் பொற் சுடர் மாளிகைக் கரும் கடல் முகந்த
மாமுகில் குலம் மலை என ஏறுவ மருங்கு 8.4.2

3994

பெருமையில் செறி பேரொலி பிறங்கலின் நிறைந்து
திருமகட்கு வாழ் சேர் இடம் ஆதலில் யாவும்
தருதலின் கடல் தன்னினும் பெரிது எனத் திரை போல்
கரி பரித் தொகை மணி துகில் சொரிவதாம் கலத்தால் 8.4.3

3995

நீடு தொல் புகழ் நிலம் பதினெட்டினும் நிறைந்த
பீடு தங்கிய பல பொருள் மாந்தர்கள் பெருகிக்
கோடி நீள் தனக் குடியுடன் குவலயம் காணும்
ஆடி மண்டலம் போல்வது அவ்வணி கிளர் மூதூர் 8.4.4

3996

அந்நெடும் திரு நகர் மருங்கு அலை கடல் விளிம்பில்
பன்னெடும் திரை நுரை தவழ் பாங்கரின் ஞாங்கர்
மன்னும் தொன்மையின் வலை வளத்து உணவினில் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது தட நுளைப் பாடி 8.4.5

3997

புயல் அளப்பன என வலை புறம்பு அணை குரம்பை
அயல் அளப்பன மீன் விலைப் பசும் பொனின் அடுக்கல்
வியல் அளக்கரில் விடுந்திமில் வாழ்நர்கள் கொணர்ந்த
கயல் அளப்பன பரத்தியர் கரு நெடும் கண்கள் 8.4.6

3998

உணங்கல் மீன் கவர் உறு நசைக் குருகு உடன் அணைந்த
கணம் கொள் ஓதிமம் கரும் சினைப் புன்னையங் கானல்
அணங்கு நுண்ணிடை நுளைச்சியர் அசை நடைக் கழிந்து
மணம் கொள் கொம்பரின் மருங்கு நின்று இழிய மருளும் 8.4.7

3999

வலை நெடும் தொடர் வடம் புடை வலிப்பவர் ஒலியும்
விலை பகர்ந்து மீன் குவை கொடுப்பவர் விளி ஒலியும்
தலை சிறந்த வெள் வளை சொரிபவர் தழங்கு ஒலியும்
அலை நெடுங்கடல் அதிர் ஒலிக்கு எதிர் ஒலி அனைய 8.4.8

4000

அனையதாகிய அந்நுளைப் பாடியில் அமர்ந்து
மனை வளம் பொலி நுளையர் தம் குலத்தினில் வந்தார்
புனை இளம் பிறை முடி அவர் அடித்தொண்டு புரியும்
வினை விளங்கிய அதி பத்தர் என நிகழ் மேலோர் 8.4.9

4001

ஆங்கு அன்பர் தாம் நுளையர் தம் தலைவராய் அவர்கள்
ஏங்கு தெண் திரைக் கடல் இடைப் பலபட இயக்கிப்
பாங்கு சூழ்வலை வளைத்து மீன் படுத்து முன் குவிக்கும்
ஓங்கு பல் குவை உலப்பில உடையராய் உயர்வார் 8.4.10

4002

முட்டில் மீன் கொலைத் தொழில் வளத்தவர் வலை முகந்து
பட்ட மீன்களில் ஒரு தலை மீன் படும் தோறும்
நட்டம் ஆடிய நம்பருக்கு என நளிர் முந்நீர்
விட்டு வந்தனர் விடாத அன்பு உடன் என்றும் விருப்பால் 8.4.11

4003

வாகு சேர் வலை நாள் ஒன்றில் மீன் ஒன்று வரினும்
ஏக நாயகர் தங்கழற் கென விடும் இயல்பால்
ஆகும் நாளில் அநேக நாள் அடுத்து ஒரு மீனே
மேக நீர் படி வேலையில் பட விட்டு வந்தார் 8.4.12

4004

மீன் விலைப் பெருகு உணவினில் மிகு பெரும் செல்வம்
தான் மறுத்தலின் உணவு இன்றி அரும் கிளை சாம்பும்
பான்மை பற்றியும் வருந்திலர் பட்ட மீன் ஒன்று
மான் மறிக் கரத்தவர் கழற்கு என விட்டு மகிழ்ந்தார் 8.4.13

4005

சால நாள் இப்படி வரத் தாம் உணவு அயர்த்து
கோல மேனியும் தளரவும் தம் தொழில் குறையாச்
சீலமே தலை நின்றவர் தம் திறம் தெரிந்தே
ஆலம் உண்டவர் தொண்டர் அன்பு எனும் அமுது உண்பார் 8.4.14

4006

ஆன நாள் ஒன்றில் அவ்வொரு மீனும் அங்கு ஒழித்துத்
தூ நிறப் பசும் கனக நல் சுடர் நவமணியால்
மீன் உறுப்பு உற அமைத்து உலகு அடங்கலும் விலையாம்
பான்மை அற்புதப் படியது ஒன்று இடுவலைப் படுத்தார் 8.4.15

4007

வாங்கு நீள் வலை அலைகடல் கரையில் வந்து ஏற
ஓங்கு செஞ்சுடர் உதித்து என உலகெலாம் வியப்பத்
தாங்கு பேரொளி தழைத்திடக் காண்டலும் எடுத்துப்
பாங்கு நின்றவர் மீன் ஒன்று படுத்தனம் என்றார் 8.4.16

4008

என்று மற்று உளோர் இயம்பவும் ஏறு சீர்த் தொண்டர்
பொன் திரள் சுடர் நவமணி பொலிந்தமீன் உறுப்பால்
ஒன்றும் மற்றிது என்னை ஆள் உடையவர்க்கு ஆகும்
சென்று பொன் கழல் சேர்க எனத் திரை யொடும் திரிந்தார் 8.4.17

4009

அகில லோகமும் பொருள் முதற்றாம் எனும் அளவில்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரை அற எறிந்த
இகலில் மெய்த் திருத் தொண்டர்முன் இறைவர் தாம் விடைமேல்
முகில் விசும்பிடை அணைந்தார் பொழிந்தனர் முகைப்பூ 8.4.18

4010

பஞ்ச நாதமும் எழுந்தன அதிபத்தர் பணிந்தே
அஞ்சலிக் கரம் சிரம் மிசை அணைத்து நின்று அவரை
நஞ்சு வாண்மணி மிடற்று அவர் சிவலோகம் நண்ணித்து
அஞ்சிறப்புடை அடியர் பாங்கு உறத்தலை அளித்தார் 8.4.19

4011

தம் மறம் புரி மரபினில் தகும் பெருந் தொண்டு
மெய்ம்மையே புரி அதிபத்தர் விளங்கும் தாள் வணங்கி
மும்மையாகிய புவனங்கள் முறைமையில் போற்றும்
செம்மை நீதியார் கலிக்கம்பர் திருத்தொண்டு பகர்வாம் 8.4.20

திருச்சிற்றம்பலம்

8.5 கலிக்கம்ப நாயனார் புராணம் (4012 - 4021)

திருச்சிற்றம்பலம்

4012

உரிமை ஒழுக்கம் தலை நின்ற உயர் தொல் மரபில் நீடு மனைத்
தரும நெறியால் வாழ் குடிகள் தழைத்து வனரும் தன்மையதாய்
வரும் மஞ்சு உறையும் மலர்ச் சோலை மருங்கு சூழ்ந்த வளம் புறவில்
பெருமை உலகு பெற விளங்கும் மேல் பால் பெண்ணாகட மூதூர் 8.5.1

4013

மற்றப் பதியினிடை வாழும் வணிகர் குலத்து வந்து உதித்தார்
கற்றைச் சடையார் கழற்காதலுடனே வளர்ந்த கருத்து உடையார்
அற்றைக்கு அன்று தூங்கானை மாடத்து அமர்ந்தார் அடித்தொண்டு
பற்றிப் பணி செய் கலிக்கம்பர் என்பார் மற்றோர் பற்று இல்லார் 8.5.2

4014

ஆன அன்பர் தாம் என்றும் அரனார் அன்பர்க்கு அமுது செய
மேன்மை விளங்கு போனகமும் விரும்பு கறி நெய் தயிர் தீம் பால்
தேனின் இனிய கனி கட்டி திருந்த அமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன எல்லாம் இன்பமுற அளிப்பார் 8.5.3

4015

அன்ன வகையால் திருத்தொண்டு புரியுநாளில் அங்கு ஒரு நாள்
மன்னும் மனையில் அமுது செய வந்த தொண்டர் தமை எல்லாம்
தொன்மை முறையே அமுது செயத் தொடங்கு விப்பார் அவர் தம்மை
முன்னர் அழைத்துத் திருவடிகள் எல்லாம் விளக்க முயல்கின்றார் 8.5.4

4016

திருந்து மனையார் மனை எல்லாம் திகழ விளக்கிப் போனகமும்
பொருந்து சுவையில் கறி அமுதும் புனிதத் தண்ணீர் உடன் மற்றும்
அருந்தும் இயல்பில் உள்ளனவும் அமைத்துக் கரக நீர் அளிக்க 4016-3
விரும்பு கணவர் பெருந்தவத்தாள் எல்லாம் விளக்கும் பொழுதின் கண் 8.5.5

4017

முன்பு தமக்குப் பணி செய்யும் தமராய் ஏவல் முனிந்து போய்
என்பும் அரவும் அணிந்த பிரான் அடியார் ஆகி அங்கு எய்தும்
அன்பர் உடனே திருவேடம் தாங்கி அணைந்தார் ஒருவர் தாம்
பின்பு வந்து தோன்ற அவர் பாதம் விளக்கும் பெரும் தகையார் 8.5.6

4018

கையால் அவர் தம் அடி பிடிக்கக் காதல் மனையார் முன்பு ஏவல்
செய்யாது அகன்ற தமர் போலும் என்று தேரும் பொழுது மலர்
மொய்யார் வாசக் கரக நீர் வார்க்க முட்ட முதல் தொண்டர்
மையார் கூந்தல் மனையாரைப் பார்த்து மனத்துள் கருதுவார் 8.5.7

4019

வெறித்த கொன்றை முடியார் தம் அடியார் இவர் முன் மேவு நிலை
குறித்து வெள்கி நீர் வாராது ஒழிந்தாள் என்று மனம் கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக் கை
தறித்துக் கரக நீர் எடுத்துத் தாமே அவர் தாள் விளக்கினார் 8.5.8

4020

விளக்கி அமுது செய்வதற்கு வேண்டுவன தாமே செய்து
துளக்கில் சிந்தை உடன் தொண்டர் தம்மை அமுது செய்வித்தார்
அளப்பில் பெருமை அவர் பின்னும் அடுத்த தொண்டின் வழி நின்று
களத்தில் நஞ்சம் அணிந்து அவர் தாள்நிழல் கீழ் அடியாருடன் கலந்தார் 8.5.9

4021

ஓத மலிநீர் விடம் உண்டார் அடியார் என்றுணரா
மாதரார் கை தடிந்த கலிக் கம்பர் மலர்ச் சேவடி வணங்கி
பூத நாதர் திருத்தொண்டு புரிந்து புவனங்களில் பொலிந்த
காதல் அன்பர் கலிநீதியார் தம் பெருமை கட்டுரைப்பாம் 8.5.10

திருச்சிற்றம்பலம்

8.6 கலிய நாயனார் புராணம் (4022 - 4038)

திருச்சிற்றம்பலம்

4022

பேருலகில் ஓங்கு புகழ்ப் பெரும் தொண்டை நன்னாட்டு
நீருலவும் சடைக் கற்றை நிருத்தர் திருப்பதியாகும்
காருலவும் மலர்ச் சோலைக் கன்னிமதில் புடை சூழ்ந்து
தேருலவு நெடு வீதி சிறந்த திருஒற்றியூர் 8.6.1

4023

பீடு கெழும் பெரும் தெருவும் புத்தர் உடன் பீலி அமண்
வேடம் உடையவர் பொருள் போல் ஆகாசவெளி மறைக்கும்
ஆடு கொடி மணி நெடுமாளிகை நிரைகள் அலை கமுகின்
காடனைய கடல் படப்பை என விளங்கும் கவின் காட்டும் 8.6.2

4024

பன்னு திருப்பதிக இசைப் பாட்டு ஓவா மண்டபங்கள்
அன்ன நடை மடவார்கள் ஆட்டு ஓவா அணி அரங்கு
பன் முறை தூரியம் முழங்கு விழவு ஓவா பயில் வீதி
செம் நெல் அடிசில் பிறங்கல் உணவு ஓவா திருமடங்கள் 8.6.3

4025

கெழு மலர் மாதவி புன்னை கிளைஞாழல் தளை அவிழும்
கொழு முகைய சண்பகங்கள் குளிர் செருந்தி வளர் கைதை
முழு மணமே முந் நீரும் கமழ மலர் முருகு உயிர்க்கும்
செழு நிலவின் துகள் அனைய மணல் பரப்பும் திருப்பரப்பு 8.6.4

4026

எயிலணையும் முகில் முழக்கும் எறிதிரை வேலையின் முழக்கும்
பயில் தரு பல்லிய முழக்கும் முறை தெரியாப் பதி அதனுள்
வெயில் அணி பல் மணி முதலாம் விழுப்பொருள் ஆவன விளக்கும்
தயில வினைத் தொழில் மரபில் சக்கரப் பாடி தெருவு 8.6.5

4027

அக்குலத்தின் செய்தவத்தால் அவனி மிசை அவதரித்தார்
மிக்க பெரும் செல்வத்து மீக்கூர விளங்கினார்
தக்க புகழ்க் கலியனார் எனும் நாமம் தலை நின்றார்
முக்கண் இறைவர்க்கு உரிமைத் திருத் தொண்டின் நெறி முயல்வார் 8.6.6

4028

எல்லையில் பல் கோடி தனத்து இறைவராய் இப்படித்தாம்
செல்வ நெறிப் பயன் அறிந்து திருஒற்றியூர் அமர்ந்த
கொல்லை மழவிடையார் தம் கோயிலின் உள்ளும் புறம்பும்
அல்லும் நெடும் பகலும் இடும் திருவிளக்கின் அணி விளைத்தார் 8.6.7

4029

எண்ணில் திரு விளக்கு நெடு நாள் எல்லாம் எரித்து வரப்
புண்ணிய மெய்த் தொண்டர் செயல் புலப்படுப்பார் அருளாலே
உண்ணிறையும் பெரும் செல்வம் உயர்த்தும் வினைச் செயல் ஓவி
மண்ணில் அவர் இருவினை போல் மாண்ட மாட்சிமைத்தாக 8.6.8

4030

திருமலி செல்வத்துழனி தேய்ந்து அழிந்த பின்னையுந்தம்
பெருமை நிலைத் திருப் பணியில் பேராத பேராளர்
வருமரபில் உள்ளோர் பால் எண்ணெய் மாறிக் கொணர்ந்து
தரும் இயல்பில் கூலியினால் தமது திருப்பணி செய்வார் 8.6.9

4031

வளம் உடையார் பால் எண்ணெய் கொடுபோய் மாறிக் கூலி
கொள முயலும் செய்கையும் மற்று அவர் கொடாமையின் மாறத்
தளருமனம் உடையவர் தாம் சக்கர எந்திரம் புரியும்
களனில் வரும் பணி செய்து பெரும் கூலி காதலித்தார் 8.6.10

4032

செக்கு நிறை எள் ஆட்டிப் பதம் அறிந்து தில தயிலம்
பக்கம் எழ மிக உழந்தும் பாண்டில் வரும் எருது உய்த்தும்
தக்க தொழில் பெறும் கூலி தாம் கொண்டு தாழாமை
மிக்க திரு விளக்கு இட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார் 8.6.11

4033

அப் பணியால் வரும் பேறு அவ் வினைஞர் பலர் உளராய்
எப்பரிசும் கிடையாத வகை முட்ட இடர் உழந்தே
ஒப்பில் மனை விற்று எரிக்கும் உறு பொருளும் மாண்ட அதன் பின்
செப்பருஞ் சீர் மனையாரை விற்பதற்குத் தேடுவார் 8.6.12

4034

மனம் மகிழ்ந்து மனைவியார் தமைக் கொண்டு வள நகரில்
தனம் அளிப்பார் தமை எங்கும் கிடையாமல் தளர்வு எய்தி
சின விடையார் திருக் கோயில் திரு விளக்குப் பணிமுட்டக்
கன வினும் முன்பு அறியாதார் கை அறவால் எய்தினார் 8.6.13

4035

பணி கொள்ளும் படம் பக்க நாயகர்தம் கோயிலினுள்
அணி கொள்ளும் திருவிளக்குப் பணிமாறும் அமையத்தில்
மணி வண்ணச் சுடர் விளக்கு மாளில் யான் மாள்வன் எனத்
துணிவுள்ளங் கொள நினைந்து அவ் வினை முடிக்கத் தொடங்குவார் 8.6.14

4036

திரு விளக்குத் திரி இட்டு அங்கு அகல் பரப்பிச் செயல் நிரம்ப
ஒருவிய எண் ணெய்க்கு ஈடா உடல் உதிரம் கொடுநிறைக்கக்
கருவியினால் மிடறு அரிய அக்கையைக் கண் நுதலார்
பெருகு திருக் கருணையுடன் நேர்வந்து பிடித்து அருளி 8.6.15

4037

மற்றவர் தம் முன் ஆக மழ விடை மேல் எழுந்து அருள
உற்றவூறு அது நீங்கி ஒளி விளங்க உச்சியின் மேல்
பற்றிய அஞ்சலியினர் ஆய் நின்றவரைப் பரமர் தாம்
பொற்புடைய சிவபுரியில் பொலிந்து இருக்க அருள் புரிந்தார் 8.6.16

4038

தேவர் பிரான் திருவிளக்குச் செயல் முட்ட மிடறு அரிந்து
மே வரிய வினை முடித்தார் கழல் வணங்கி வியன் உலகில்
யாவர் எனாது அரன் அடியார் தமை இகழ்ந்து பேசினரை
நாவரியும் சத்தியார் திருத்தொண்டின் நலம் உரைப்பாம் 8.6.17

திருச்சிற்றம்பலம்

8.7 சத்தி நாயனார் புராணம் (4039- 4045)

திருச்சிற்றம்பலம்

4039

களமர் கட்ட கமலம் பொழிந்த தேன்
குளம் நிறைப்பது கோல் ஒன்றில் எண் திசை
அளவும் ஆணைச் சயத் தம்பம் நாட்டிய
வளவர் காவிரி நாட்டு வரிஞ்சையூர் 8.7.1

4040

வரிஞ்சை ஊரினில் வாய்மை வேளாண் குலம்
பெரும் சிறப்புப் பெறப் பிறப்பு எய்தினார்
விரிஞ்சன் மால்முதல் விண்ணவர் எண்ணவும்
அரும் சிலம்பு அணி சேவடிக்காள் செய்வார் 8.7.2

4041

அத்தர் ஆகிய அங்கணர் அன்பரை
இத்தலத்தில் இகழ்ந்து இயம்பும் உரை
வைத்த நாவை வலித்து அரி சத்தியால்
சத்தியார் எனும் திருநாமமும் தாங்கினார் 8.7.3

4042

தீங்கு சொற்ற திருவிலர் நாவினை
வாங்க வாங்கும் தண்டு ஆயத்தினால் வலித்து
தாங்கு அயில் கத்தியால் அரிந்து அன்புடன்
ஓங்கு சீர்த் தொண்டின் உயர்ந்தனர் 8.7.4

4043

அன்னதாகிய ஆண்மைத் திருப்பணி
மன்னு பேருலகத்தில் வலி உடன்
பண்ணெடும் பெருநாள் பரிவால் செய்து
சென்னி ஆற்றினர் செந்நெறி ஆற்றினர் 8.7.5

4044

ஐயம் இன்றி அரிய திருப்பணி
மெய்யினால் செய்த வீரத் திருத்தொண்டர்
வையம் உய்ய மணிமன்றுள் ஆடுவார்
செய்ய பாதத் திருநிழல் சேர்ந்தனர் 8.7.6

4045

நாயனார் தொண்டரை நலம் கூறலார்
சாய நாவரி சத்தியார் தாள் பணிந்து
ஆய மா தவத்து ஐயடிகள் எனும்
தூய காடவர் தம் திறம் சொல்லுவாம் 8.7.7

திருச்சிற்றம்பலம்

8.8 ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் (4046- 4054)

திருச்சிற்றம்பலம்

4046

வைய நிகழ் பல்லவர் தம் குலமரபின் வழித்தோன்றி
வெய்ய கலியும் பகையும் மிகை ஒழியும் வகை அடக்கிச்
செய்ய சடையார் சைவத் திரு நெறியால் அரசு அளிப்பார்
ஐயடிகள் நீதியால் அடிப்படுத்தும் செங்கோலார் 8.8.1

4047

திருமலியும் புகழ் விளங்கச் சேணிலத்தில் எவ்வுயிரும்
பெருமையுடன் இனிது அமரப் பிற புலங்கள் அடிப்படுத்துப்
தருமநெறி தழைத்து ஓங்கத் தாரணிமேல் சைவமுடன்
அருமறையின் துறை விளங்க அரசு அளிக்கும் அந்நாளில் 8.8.2

4048

மன்னவரும் பணி செய்ய வடநூல் தென்தமிழ் முதலாம்
பன்னு கலைப் பணிசெய்யப் பார் அளிப்பார் அரசாட்சி
இன்னல் என இகழ்ந்து அதனை எழில் குமரன் மேல் இழச்சி
நன்மை நெறித் திருத்தொண்டு நயந்து அளிப்பார் ஆயினார் 8.8.3

4049

தொண்டுரிமை புரக்கின்றார் சூழ்வேலை உலகின் கண்
அண்டர் பிரான் அமர்ந்து அருளும் ஆலயங்களான எலாம்
கண்டிறைஞ்சித் திருத்தொண்டின் கடன் ஏற்ற பணி செய்த
வண் தமிழின் மொழி வெண்பா ஓரொன்றா வழுத்துவார் 8.8.4

4050

பெருத்தெழு காதலினால் வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம் பலத்து ஆடல் புரிந்து அருளும் செய்ய சடை
நிறுத்தனார் திருக்கூத்து நேர்ந்து இறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பின் உடன் செந்தமிழின் வெண்பா மென் மலர் புனைந்தார் 8.8.5

4051

அவ்வகையால் அருள் பெற்று அங்கு அமர்ந்து சில நாள் வைகி
இவ் உலகில் தம் பெருமான் கோயில்கள் எல்லாம் எய்திச்
செவ்விய அன்பொடு பணிந்து திருப்பணி ஏற்றன செய்தே
எவ்வுலகும் புகழ்ந்து ஏத்தும் இன்தமிழ் வெண்பா மொழிந்தார் 8.8.6

4052

இந்நெறியால் அரன் அடியார் இன்பமுற இசைந்த பணி
பன்னெடு நாள் ஆற்றியபின் பரமர் திருவடி நிழல் கீழ்
மன்னு சிவலோகத்து வழி அன்பர் மருங்கு அணைந்தார்
கன்னிமதில் சூழ் காஞ்சிக் காடவரை அடிகளார் 8.8.7

4053

பையரவ மணியாரம் அணிந்தார்க்குப் பாவணிந்த
ஐயடிகள் காடவனார் அடி இணைத்தாமரை வணங்கிக்
கையணிமான் மழு உடையார் கழல் பணி சிந்தனை உடைய
செய்தவத்துக் கணம் புல்லர் திருத்தொண்டு விரித்து உரைப்பாம் 8.8.8

4054

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி
உளத்தில் ஒரு துளக்கம் இலேம் உலகு உய்ய இருண்ட திருக்
களத்தர் முது குன்றர் தரு கனகம் ஆற்றில் இட்டு
வளத்தின் மலி ஏழ் உலகும் வணங்கு பெரும் திருவாரூர்க்
குளத்தில் எடுத்தார் வினையின் குழிவாய் நின்று எனை எடுத்தார் 8.8.9

திருச்சிற்றம்பலம்

பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம் முற்றிற்று.

சருக்கம் 9 - கறைக் கண்டன் சருக்கம்

9.1 கணம்புல்ல நாயனார் புராணம் (4055-4062)
9.2 காரிநாயனார் புராணம் (4063 - 4068)
9.3 நின்ற சீர் நெடுமாற நாயனார் புராணம்(4069- 4078)
9.4 வாயிலார் நாயனார் புராணம் (4079 - 4088)
9.5 முனையடுவார் நாயனார் புராணம் (4089 - 4095)

9. 1 கணம்புல்ல நாயனார் புராணம் (4055-4062)

திருச்சிற்றம்பலம்

4055

திருக்கிளர் சீர் மாடங்கள் திருந்து பெருங்குடி நெருங்கி
பெருக்கு வட வெள் ஆற்றுத் தென் கரைப்பால் பிறங்கு பொழில்
வருக்கை நெடுஞ்சுளை பொழிதேன் மடு நிறைத்து வயல் விளைக்கும்
இருக்கு வேளூர் என்பது இவ் உலகில் விளங்கும் பதி 9.1.1

4056

அப்பதியில் குடி முதல்வர்க்கு அதிபராய் அளவு இறந்த
எப்பொருளும் முடிவு அறியா எய்து பெரும் செல்வத்தார்
ஒப்பில் பெருங்குணத்தினால் உலகில் மேம்பட நிகழ்ந்தார்
மெய் பொருளாவன ஈசர் கழல் என்னும் விருப்பு உடையார் 9.1.2

4057

தாவாத பெரும் செல்வம் தலை நின்ற பயன் இது என்று
ஓவாத ஒளிவிளக்குச் சிவன் கோயிலலுள் எரித்து
நா ஆரப் பரவுவார் நல்குரவு வந்து எய்தத்
தேவதி தேவர்பிரான் திருத்தில்லை சென்று அடைந்தார் 9.1.3

4058

தில்லை நகர் மணி மன்றுள் ஆடுகின்ற சேவடிகள்
அல்கிய அன்புடன் இறைஞ்சி அமர்கின்றார் புரம் எரித்த
வில்லியார் திருப் புலீச் சரத்தின் கண் விளக்கு எரிக்க
இல்லிடை உள்ளன மாறி எரித்துவரும் அந்நாளில் 9.1.4

4059

ஆய செயல் மாண்டதற்பின் அயல் அவர் பால் இரப்பஞ்சி
காய முயற்சியில் அரிந்த கணம் புல்லுக் கொடு வந்து
மேய விலைக்குக் கொடுத்து விலைப் பொருளால் நெய்மாறித்
தூயதிரு விளக்கு எரித்தார் துளக்கறு மெய்த் தொண்டனார் 9.1.5

4060

இவ்வகையால் திருந்து விளக்கு எரித்து வர அங்கு ஒரு நாள்
மெய் வருந்தி அரிந்து எடுத்துக் கொடுவந்து விற்கும்புல்
எவ்விடத்தும் விலை போகாது ஒழியவும் இப்பணி ஒழியார்
அவ்வரிபுல் வினைமாட்டி அணி விளக்காயிட எரிப்பார் 9.1.6

4061

முன்பு திருவிளக்கு எரிக்கும் முறையாமம் குறையாமல்
மென் புல்லும் விளக்கு எரிக்கப் போதாமை மெய்யான
அன்பு புரிவார் அடுத்த விளக்குத் தம் திருமுடியை
என்புருக மடுத்து எரித்தார் இருவினையின் தொடக்கு எரித்தார் 9.1.7

4062

தங்கள் பிரான் திரு உள்ளம் செய்து தலைத் திருவிளக்குப்
பொங்கிய அன்புடன் எரித்த பொருவில் திருத்தொண்டருக்கு
மங்கலமாம் பெரும் கருணை வைத்து அருளச் சிவலோகத்து
எங்கள் பிரான் கணம் புல்லர் இனிது இறைஞ்சி அமர்ந்திருந்தார் 9.1.8

4063

மூரியார் கலி உலகின் முடி இட்ட திருவிளக்குப்
பேரியாறு அணிந்தாருக்கு எரித்தார் தம் கழல் பேணி
வேரியார் மலர்ச் சோலை விளங்கு திருக்கடவூரில்
காரியார் தாம் செய்த திருத்தொண்டு கட்டுரைப்பாம் 9.1.9

திருச்சிற்றம்பலம்

9.2 காரிநாயனார் புராணம் (4064 - 4068)

திருச்சிற்றம்பலம்

4064

மறையாளர் திருக்கடவூர் வந்து உதித்து வண் தமிழின்
துறை ஆன பயன் தெரிந்து சொல் விளங்கிப் பொருள் மறையக்
குறையாத தமிழ்க் கோவை தம் பெயரால் குலவும் வகை
முறையாலே தொகுத்து அமைத்து மூவேந்தர் பால் பயில்வார் 9.2.1

4065

அங்கு அவர் தாம் மகிழும் வகை அடுத்தவுரை நயம் ஆக்கி
கொங்கலர்தார் மன்னவர் பால் பெற்ற நிதிக் குவை கொண்டு
வெம் கண் அராவொடு கிடந்து விளங்கும் இளம் பிறைச் சென்னிச்
சங்கரனார் இனிது அமரும் தானங்கள் பல சமைத்தார் 9.2.2

4066

யாவர்க்கும் மனம் உவக்கும் இன்ப மொழிப் பயன் இயம்பத்
தேவர்க்கு முதல்தேவர் சீர் அடியார் எல்லார்க்கும்
மேவுற்ற இருநிதியம் மிக அளித்து விடையவர்தம்
காவுற்ற திருக்கயிலை மறவாத கருத்தினர் ஆய் 9.2.3

4067

ஏய்ந்த கடல் சூழ் உலகில் எங்கும் தம் இசை நிறுத்தி
ஆய்ந்த உணர்வு இடை அறா அன்பினராய் அணி கங்கை
தோய்ந்த நெடும் சடையார்தம் அருள் பெற்ற தொடர்பினால்
வாய்ந்த மனம் போலும் உடம்பும் வடகயிலை மலை சேர்ந்தார் 9.2.4

4068

வேரியார் மலர்க் கொன்றை வேணியார் அடிபேணும்
காரியார் கழல் வணங்கி அவர் அளித்த கருணையினால்
வாரியார் மதயானை வழுதியர் தம் மதி மரபில்
சீரியார் நெடுமாறர் திருத்தொண்டு செப்புவாம் 9.2.5

திருச்சிற்றம்பலம்

9.3 நின்ற சீர் நெடுமாற நாயனார் புராணம் (4069 -)

திருச்சிற்றம்பலம்

4064

தடுமாறும் நெறி அதனைத் தவம் என்று தம் உடலை
அடுமாறு செய்து ஒழுகும் அமண் வலையில் அகப்பட்டு அடைந்த
விடுமாறு தமிழ் விரகர் வினை மாறும் கழல் அடைந்த
நெடுமாறனார் பெருமை உலகு ஏழும் நிகழ்ந்ததால் 9.3.1

4070

அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே
தென்னாடு சிவம் பெருகச் செங்கோல் உய்த்து அறம் அளித்து
சொன்னாம நெறிபோற்றிச் சுரர் நகர்க்கோன் தனைக் கொண்ட
பொன்னாரம் அணி மார்பில் புரவலனார் பொலி கின்றார் 9.3.2

4071

ஆய அரசு அளிப்பார் பால் அமர் வேண்டி வந்து ஏற்ற
சேய புலத் தெவ்வர் எதிர் நெல்வேலிச் செருக் களத்துப்
பாய படைக் கடல் முடுகும் பரிமாவின் பெரு வெள்ளம்
காயும் மதக் களிற்றின் நிரை பரப்பி அமர் நடக்கின்றார் 9.3.3

4072

எடுத்துடன்ற முனைஞாட்பின் இருபடையில் பொரு படைஞர்
படுத்த நெடுங் கரித்துணியும் பாய் மாவின் அறு குறையும்
அடுத்து அமர் செய் வய்வர் கரும் தலையும் மலையும் அலை செந்நீர்
மடுத்த கடல் மீளவும் தாம் வடிவேல் வாங்கிடப் பெருக 9.3.4

4073

வயப்பரியின் களிப்பு ஒலியும் மறவர் படைக்கல ஒலியும்
கயப் பொருப்பின் முழக்கு ஒலியும் கலந்து எழு பல்லிய ஒலியும்
வியக்குமுகக் கடை நாளின் மேக முழக்கு என மீளச்
சயத்தொடர் வல்லியும் இன்று தாம் விடுக்கும் படி தயங்க 9.3.5

4074

தீயுமிழும் படை வழங்கும் செருக்களத்து முருக்கும் உடல்
தோயும் நெடும் குறுதி மடுக் குளித்து நிணம் துய்த்து ஆடி
போய பருவம் பணிகொள் பூதங்களே அன்றிப்
பேயும் அரும் பணி செய்ய உணவு அளித்தது எனப் பிறங்க 9.3.6

4075

இனைய கடுஞ் சமர் விளைய இகலுழந்த பறந்தலையில்
பனை நெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக் குடைந்து
முனை அழிந்த வடபுலத்து முதல் மன்னர் படைசரியப்
புனையும் நறும் தொடை வாகை பூழியர் வேம்புடன் புனைந்து 9.3.7

4076

வளவர் பிரான் திருமகளார் மங்கையருக்கு அரசியார்
களப மணி முலை திளைக்கும் தடமார்பில் கவுரியனார்
இளவள வெண் பிறை அணிந்தார்க்கு ஏற்ற திருத்தொண்டு எல்லாம்
அளவில் புகழ் பெற விளங்கி அருள் பெருக அரசு அளித்தார் 9.3.8

4077

திரை செய் கடல் உலகின் கண் திருநீற்றின் நெறி விளங்க
உரைசெய் பெரும்புகழ் விளக்கி ஓங்கு நெடு மாறனார்
அரசு உரிமை நெடும் காலம் அளித்து இறைவர் அருளாலே
பரசு பெரும் சிவலோகத்தில் இன் புற்று பணிந்து இருந்தார் 9.3.9

4078

பொன் மதில் சூழ் புகலி காவலர் அடிக்கீழ்ப் புனிதராந்
தென்மதுரை மாறனார் செம் கமலக் கழல் வணங்கிப்
பன்மணிகள் திரை ஓதம் பரப்பு நெடும் கடல் படப்பைத்
தொல் மயிலை வாயிலார் திருத்தொண்டின் நிலைதொழுவாம் 9.3.10

திருச்சிற்றம்பலம்

9.4 வாயிலார் நாயனார் புராணம் (4079 -)

திருச்சிற்றம்பலம்

4079

சொல் விளங்கு சீர்த் தொண்டைநல் நாட்டின் இடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெரும் குடி நீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயிலா புரி 9.4.1

4080

நீடு வேலை தன் பால் நிதி வைத்திடத்
தேடும் அப்பெரும் சேம வைப்பாம் என
ஆடு பூங்கொடி மாளிகை அப்பதி
மாடு தள்ளும் மரக்கலச் செப்பினால் 9.4.2

4081

காலம் சொரிந்த கரிக்கருங்கன்று முத்து
அலம்பு முந்நீர் படிந்து அணை மேகமும்
நலம் கொள் மேதி நல் நாகும் தெரிக்க ஒணா
சிலம்பு தெண்திரைக் கானலின் சேண் எலாம் 9.4.3

4082

தவள மாளிகைச் சாலை மருங்கு இறைத்
துவள் பதாகை நுழைந்து அணை தூமதி
பவள வாய் மடவார் முகம் பார்த்து அஞ்சி
உவளகம் சேர்ந்து ஒதுங்குவது ஒக்குமால் 9.4.4

4083

வீதி எங்கும் விழா அணிக் காளையர்
தூது இயங்கும் சுரும்பு அணி தோகையர்
ஓதி எங்கும் ஒழியா அணிநிதி
பூதி எங்கும் புனை மணிமாடங்கள் 9.4.5

4084

மன்னு சீர் மயிலைத் திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல் குல
நன்மை சான்ற நலம் பெறத் தோன்றினார்
தன்மை வாயிலார் என்னும் தபோதனர் 9.4.6

4085

வாயிலார் என நீடிய மாக்குடித்
தூய மா மரபின் முதல் தோன்றியே
நயனார் திருத்தொண்டின் நயப்புறு
மேய காதல் விருப்பின் விளங்குவார் 9.4.7

4086

மறவாமையான் அமைத்த மனக்கோயிலுள் இருத்தி
உறவாதிதனை உணரும் ஒளி விளக்குச் சுடர் ஏற்றி
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க்கு அன்பு என்னும் அமுது அமைத்து அர்ச்சனை செய்வார் 9.4.8

4087

அகம் மலர்ந்த அர்ச்சனையில் அண்ணலார் தமை நாளும்
நிகழ வரும் அன்பினால் நிறை வழிபாடு ஒழியாமே
திகழ நெடுநாள் செய்து சிவபெருமான் அடிநிழல் கீழ்ப்
புகல் அமைத்துத் தொழுது இருந்தார் புண்ணிய மெய்த் தொண்டனார் 9.4.9

4088

நீராருஞ் சடையாரை நீடுமன ஆலயத்துள்
ஆராத அன்பினால் அருச்சனை செய்து அடியவர்பால்
பேராத நெறி பெற்ற பெருந் தகையார் தமைப்போற்றிச்
சீர் ஆரும் திரு நீடூர் முனையடுவார் திறம் உரைப்பாம் 9.4.10

திருச்சிற்றம்பலம்

9.5 முனையடுவார் நாயனார் புராணம் (4089- 4095)

திருச்சிற்றம்பலம்

4089

மாறு கடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திரு நாட்டு
நாறு விரைப்பூஞ் சோலைகளின் நனைவாய் திறந்து பொழி செழுந்தேன்
ஆறு பெருகி வெள்ளம் இடும் அள்ளல் வயலின் மள்ளர் உழும்
சேறு நறுவாசம் கமழும் செல்வ நீடூர் திருநீடூர் 9.5.1

4090

விளங்கும் வண்மை மிக்குள்ள வேளாண் தலைமைக்குடி முதல்வர்
களம் கொள் மிடற்றுக் கண் நுதலார் கழலில் செறிந்த காதல் மிகும்
உளம் கொள் திருத்தொண்டு உரிமையினில் உள்ளார் நள்ளார் முனை எறிந்த
வளம் கொண்டு இறைவர் அடியார்க்கு மாறாது அளிக்கும் வாய்மையார் 9.5.2

4091

மாற்றார்க்கு அமரில் அழிந்துள்ளோர் வந்து தம்பால் மா நிதியம்
ஆற்றும் பரிசு பேசினால் அதன் நடுவு நிலை வைத்து
கூற்றும் ஒதுங்கும் ஆள்வினையால் கூலி ஏற்றுச் சென்று எறிந்து
போற்றும் வென்றி கொண்டு இசைந்த பொன்னும் கொண்டு மன்னுவார் 9.5.3

4092

இன்ன வகையால் பெற்ற நிதி எல்லாம் ஈசன் அடியார்கள்
சொன்ன சொன்ன படி நிரம்பக் கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறு நெய் கறி தயிர் பால் கனியுள்ளூறுத்த கலந்து அளித்து
மன்னும் அன்பின் நெறி பிறழா வழித் தொண்டு ஆற்றி வைகினார் 9.5.4

4093

மற்றிந் நிலை பல்நெடு நாள் வையம் நிகழச் செய்து வழி
உற்ற அன்பின் செந்நெறியால் உமையாள் கணவன் திருஅருளால்
பெற்ற சிவலோகத்து அமர்ந்து பிரியா உரிமை மருவினார்
முற்ற உழந்த முனை அடுவார் என்னும் நாமம் முன்னுடையார் 9.5.5

4094

யாவர் எனினும் இகல் எறிந்தே ஈசன் அடியார் தமக்கு இன்பம்
மேவ அளிக்கும் முனை அடுவார் விரைப் பூம் கமலக் கழல் வணங்கி
தேவர் பெருமான் சைவநெறி விளங்கச் செம்கோல் முறை புரியும்
காவல் பூண்ட கழற் சிங்கர் தொண்டின் நிலைமை கட்டுரைப்பாம் 9.5.6

4095

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி
செறிவுண்டு என்று திருத்தொண்டில் சிந்தை செல்லும் பயனுக்கும்
குறியுண்டு ஒன்றாகிலும் குறை ஒன்று இல்லோம் நிறை கருணையினால்
வெறியுண் சோலைத் திருமுருகன் பூண்டி வேடர் வழிபறிக்க
பறியுண்டவர் எம்பழவினை வேர் பறிப்பார் என்னும் பற்றாலே 9.5.7

திருச்சிற்றம்பலம்

கறைக் கண்டன் சருக்கம் முற்றிற்று.

சருக்கம் 10 (கடல் சூழ்ந்த சருக்கம்)

10.1 கழற்சிங்க நாயனார் புராணம் (4096- 4107)
10.2 இடங்கழி நாயனார் புராணம் (4108 - 4119)
10.3 செருத்துணை நாயனார் புராணம் (4120-4126)
10.4 புகழ்த்துணை நாயனார் புராணம் (4127 -4133)
10.5 கோட்புலி நாயனார் புராணம் (4134 -4146)

10. 1 கழற்சிங்க நாயனார் புராணம் (4096- 4108)

திருச்சிற்றம்பலம்

4096

படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றும் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறு ஒன்று அறிவினில் குறியா நீர்மைக்
கொடி நெடுந் தானை மன்னர் கோக் கழற்சிங்கர் என்பார் 10.1.1

4097

கடவார் குரிசிலாராங் கழல் பெருஞ் சிங்கனார் தாம்
ஆடக மேரு வில்லார் அருளினால் அமரில் சென்று
கூடலர் முனைகள் சாய வடபுலம் கவர்ந்து கொண்டு
நாடற நெறியில் வைக நல் நெறி வளர்க்கும் நாளில் 10.1.2

4098

குவலயத்து அரனார் மேவும் கோயில்கள் பலவும் சென்று
தவலரும் அன்பில் தாழ்ந்து தக்க மெய்த் தொண்டு செய்வார்
சிவபுரி என்ன மன்னும் தென் திருவாரூர் எய்திப்
பவம் அறுத்தாட் கொள் வார்தம் கோயில் உள் பணிய புக்கார் 10.1.3

4099

அரசியல் ஆயத் தோடும் அங்கணர் கோயில் உள்ளால்
முரசுடைத்தானை மன்னர் முதல்வரை வணங்கும் போதில்
விரை செறிமலர் மென் கூந்தல் உரிமை மெல் இயலார் தம் உள்
உரை சிறந்து உயர்ந்த பட்டத்து ஒருதனித் தேவி மேவி 10.1.4

4100

கோயிலை வலம் கொண்டு அங்கண் குலவிய பெருமை எல்லாம்
சாயல் மா மயிலே போல் வாள் தனித் தனி கண்டு வந்து
தூய மென் பள்ளித் தாமம் தொடுக்கு மண்டபத்தின் பாங்கர்
மேயதோர் புதுப்பூ அங்கு விழுந்தது ஒன்று எடுத்து மோந்தாள் 10.1.5

4101

புதுமலர் மோந்த போதில் செருத்துணைப் புனிதத் தொண்டர்
இதுமலர் திருமுற்றத்துள் எடுத்து மோந்தனளாம் என்று
கதும் என ஓடிச்சென்று கருவி கைக் கொண்டு பற்றி
மதுமலர் திருவொப்பாள் தன் மூக்கினைப் பிடித்து வார்ந்தார் 10.1.6

4102

வார்ந்து இழி குருதி சோர மலர்க் கருங்குழலும் சோரச்
சோர்ந்து வீழ்ந்து அரற்றும் தோகை மயில் எனத் துளங்கி மண்ணில்
சேர்ந்து அயர்ந்து உரிமைத் தேவி புலம்பிடச் செம்பொன் புற்றுள்
ஆர்ந்த பேர் ஒளியைக் கும்பிட்டு அரசரும் அணைய வந்தார் 10.1.7

4103

வந்து அணைவுற்ற மன்னர் மலர்ந்த கற்பகத்தின் வாசப்
பைந்தளிர்ப் பூங்கொம்பு ஒன்று பார்மிசை வீழ்ந்தது என்ன
நொந்து அழிந்து அரற்றுவாளை நோக்கி இவ்வண்டத்து உள்ளோர்
இந்த வெவ்வினை அஞ்சாதே யார் செய்தார் என்னும் எல்லை 10.1.8

4104

அந்நிலை அணைய வந்து செருத்துணையாராம் அன்பர்
முன் உறு நிலைமை அங்குப் புகுந்தது மொழிந்தபோது
மன்னரும் அவரை நோக்கி மற்று இதற்குத் தண்டம்
தன்னை அவ்வடைவே அன்றோ தடிந்திடத் தகுவது என்று 10.1.9

4105

கட்டிய உடைவாள் தன்னை உருவி அக்கமழ் வாசப்பூத்
தொட்டு முன் எடுத்த கையாம் முன்படத் துணிப்பது என்று
பட்டமும் அணிந்து காதல் பயில் பெரும் தேவியான
மட்டவிழ் குழலாள் செம்கை வளை ஒடும் துணித்தார் அன்றே 10.1.10

4106

ஒரு தனித் தேவி செங்கை உடைவாளால் துணித்த போது
பெருகிய தொண்டர் ஆர்ப்பின் பிறங்குஒலி புலி மேல் பொங்க
இரு விசும்பு அடைய ஓங்கும் இமையவர் ஆர்ப்பும் விம்மி
மருவிய தெய்வ வாச மலர் மழை பொழிந்தது அன்றே 10.1.11

4107

அரிய அத் திருத் தொண்டு ஆற்றும் அரசனார் அளவில் காலம்
மருவிய உரிமை தாங்கி மால் அயன் அரியார் மன்னும்
திரு அருள் சிறப்பினாலே செய்ய சே அடியின் நீழல்
பெருகிய உரிமை ஆகும் பேரருள் எய்தினாரே 10.1.12

4108

வையகம் நிகழ்க் காதல் மாதேவி தனது செய்ய
கையினைத் தடிந்த சிங்கர் கழல் இணை தொழுது போற்றி
எய்திய பெருமை அன்பர் இடம் கழியார் என்று ஏத்தும்
மெய்யருள் உடைய தொண்டர் செய்வினை விளம்பல் உற்றாம் 10.1.13

திருச்சிற்றம்பலம்

10.2 இடங்கழி நாயனார் புராணம் (4109 - 4119)

திருச்சிற்றம்பலம்

4109

எழுந்திரை மா கடல் ஆடை இரு நிலமா மகள் மார்பில்
அழுந்து பட எழுதும் இலைத் தொழில் தொய்யில் அணியினவாம்
செழுந்தளிரின் புடை மறைந்த பெடை களிப்பத் தேமாவின்
கொழுந் துணர் கோதிக் கொண்டு குயில் நாடு கோனாநாடு 10.2.1

4110

முருகுறு செங்கமல மதுமலர் துதைந்த மொய் அளிகள்
பருகுறு தெண் திரை வாவிப் பயில் பெடையோடு இரை அருந்தி
வருகுறு தண் துளி வாடை மறைய மாதவிச் சூழல்
குருகுறங்கும் கோனாட்டுக் கொடி நகரம் கொடும்பாளூர் 10.2.2

4111

அந் நகரத்தினில் இருக்கும் வேளிர் குலத்து அரசு அளித்து
மன்னிய பொன் அம்பலத்து மணி முகட்டில் பாக்கொங்கின்
பன்னு துலைப் பசும் பொன்னால் பயில் பிழம்பாம் மிசை அணிந்த
பொன் நெடும் தோள் ஆதித்தன் புகழ் மரபில் குடி முதலோர் 10.2.3

4112

இடங்கழியார் என உலகில் ஏறு பெரு நாமத்தார்
அடங்கலர் முப்புரம் எரித்தார் அடித்தொண்டின் நெறி அன்றி
முடங்கு நெறி கனவினிலும் உன்னாதார் எந்நாளும்
தொடர்ந்த பெரும் காதலினால் தொண்டர் வேண்டிய செய்வார் 10.2.4

4113

சைவ நெறி வைதிகத்தின் தரும நெறியொடும் தழைப்ப
மை வளரும் திருமிடற்றார் மன்னிய கோயில்கள் எங்கும்
மெய் வழிபாட்டு அர்ச்சனைகள் விதிவழிமேல் மேல் விளங்க
மொய் வளர் வண் புகழ் பெருக முறை புரியும் அந்நாளில் 10.2.5

4114

சங்கரன் தன் அடியாருக்கு அமுது அளிக்கும் தவம் உடையார்
அங்கு ஒருவர் அடியவருக்கு அமுது ஒரு நாள் ஆக்க உடன்
எங்கும் ஒரு செயல் காணாது எய்திய செய்தொழில் முட்டப்
பொங்கி எழும் பெரு விருப்பால் புரியும் வினை தெரியாது 10.2.6

4115

அரசர் அவர் பண்டாரத்து அந்நாட்டின் நெல் கூட்டின்
நிரை செறிந்த புரிபலவா நிலைக் கொட்ட காரத்தில்
புரை செறி நள்ளிருளின் கண் புக்கு முகந்து எடுப்பவரை
முரசு எறி காவலர் கண்டு பிடித்து அரசன் முன் கொணர்ந்தார் 10.2.7

4116

மெய்த்தவரைக் கண்டு இருக்கும் வேல் மன்னர் வினவுதலும்
அத்தன் அடியாரை யான் அமுது செய்விப்பது முட்ட
இத் தகைமை செய்தேன் என்று இயம்புதலும் மிக இரங்கிப்
பத்தரை விட்டு இவர் அன்றோ பண்டாரம் எனக்கு என்பார் 10.2.8

4117

நிறை அழிந்த உள்ளத்தால் நெல் பண்டாரமும் அன்றிக்
குறைவு இல் நிதிப் பண்டாரம் ஆன எலாம் கொள்ளை முகந்து
இறைவன் அடியார் கவர்ந்து கொள்க என எம்மருங்கும்
பறையறைப் பண்ணுவித்தார் படைத்த நிதிப்பயன் கொள்வார் 10.2.9

4118

எண்ணில் பெரும் பண்டாரம் ஈசன் அடியார் கொள்ள
உள் நிறைந்த அன்பினால் உறு கொள்ளை மிக ஊட்டித்
தண் அளியால் நெடும் காலம் திருநீற்றின் நெறி தழைப்ப
மண்ணில் அருள் புரிந்து இறைவர் மலர் அடியின் நிழல் சேர்ந்தார் 10.2.10

4119

மை தழையும் மணி மிடற்றார் வழித்தொண்டின் வழிபாட்டில்
எய்து பெரும் சிறப்பு உடைய இடங்கழியார் கழல் வணங்கி
மெய் தருவார் நெறி அன்றி வேறு ஒன்றும் மேல் அறியாச்
செய்தவராம் செருத்துணையார் திருத்தொண்டின் செயல் மொழிவாம் 10.2.11

திருச்சிற்றம்பலம்

10.3 செருத்துணை நாயனார் புராணம் (4120 - 4126)

திருச்சிற்றம்பலம்

4120

உள்ளும் புறம்பும் குலமரபின் ஒழுக்கம் வழுக்கா ஒருமை நெறி
கொள்ளும் இயல்பில் குடி முதலோர் மலிந்த செல்வக் குலபதியாம்
தெள்ளும் திரைகள் மதகு தொறும் சேலும் கயலும் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர் நாட்டு மருக நாட்டுத் தஞ்சாவூர் 10.3.1

4121

சீரின் விளங்கும் அப்பதியில் திருந்து வேளாண் குடி முதல்வர்
நீரின் மலிந்த செய்ய சடை நீற்றர் கூற்றின் நெஞ்சு இடித்த
வேரி மலர்ந்த பூங்கழல் சூழ் மெய் அன்பு உடைய சைவர் எனப்
பாரில் நிகழ்ந்த செருத் துணையார் பரவும் தொண்டின் நெறி நின்றார் 10.3.2

4122

ஆன அன்பர் திருவாரூர் ஆழித் தேர்வித்தகர் கோயில்
ஞான முனிவர் இமையவர்கள் நெருங்கு நலம் சேர் முன்றிலினுள்
மான நிலவு திருப்பணிகள் செய்து காலங்களின் வணங்கிக்
கூனல் இளவெண் பிறைமுடியார் தொண்டு பொலியக் குலவு நாள் 10.3.3

4123

உலகு நிகழ்ந்த பல்லவர் கோச் சிங்கர் உரிமைப் பெருந்தேவி
நிலவு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்தது ஒரு
மலரை எடுத்து மோந்ததற்கு வந்து பொறாமை வழித் தொண்டர்
இலகு சுடர்வாய்க் கருவி எடுத்து எழுந்த வேகத்தால் எய்தி 10.3.4

4124

கடிது முற்றி மற்றவள் தன் கருமென் கூந்தல் பிடித்து ஈர்த்து
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றி பரமர் செய்ய சடை
முடியில் ஏறும் திருப்பூ மண்டபத்து மலர் மோந்திடும் மூக்கைத்
தடிவன் என்று கருவியினால் அரிந்தார் தலைமைத் தனித்தொண்டர் 10.3.5

4125

அடுத்த திருத் தொண்டு உலகறியச் செய்த அடல் ஏறு அனையவர்தாம்
தொடுத்த தாமம் மலர் இதழி முடியார் அடிமைத் தொண்டு கடல்
உடுத்த உலகில் நிகழச் செய்து உய்ய செய்ய பொன் மன்றுள்
எடுத்த பாத நிழல் அடைந்தே இறவா இன்பம் எய்தினார் 10.3.6

4126

செங்கண் விடையார் திருமுன்றில் விழுந்த திருப்பள்ளித் தாமம்
அங்கண் எடுத்து மோந்த அதற்கு அரசன் உரிமைப் பெருந்தேவி
துங்க மணி மூக்கு அரிந்த செருத் துணையார் தூய கழல் இறைஞ்சி
எங்கும் நிகழ்ந்த புகழ்த்துணையார் உரிமை அடிமை எடுத்து உரைப்பாம் 10.3.7

திருச்சிற்றம்பலம்

10.4 புகழ்த்துணை நாயனார் புராணம் (4127 - 4133)

திருச்சிற்றம்பலம்

4127

செருவிலிபுத்தூர் மன்னும் சிவ மறையோர் திருக்குலத்தார்
அருவரை வில்லாளி தனக்கு அகத்து அடிமையாம் அதனுக்கு
ஒருவர் தமை நிகர் இல்லார் உலகத்துப் பரந்து ஓங்கிப்
பொருவரிய புகழ் நீடு புகழ்த்துணையார் எனும் பெயரார் 10.4.1

4128

தம் கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடு நாள்
பொங்கோத ஞாலத்து வற்கடமாய்ப் பசி புரிந்தும்
எம் கோமான் தனை விடுவேன் அல்லேன் என்று இராப் பகலும்
கொங்கார் பன் மலர் கொண்டு குளிர் புனல் கொண்டு அர்ச்சிப்பார் 10.4.2

4129

மால் அயனுக்கு அரியானை மஞ்சனம் ஆட்டும் பொழுது
சாலவுறு பசிப்பிணியால் வருந்தி நிலை தளர்வு எய்திக்
கோல நிறை புனல் தாங்கு குடம் தாங்க மாட்டாமை
ஆலமணி கண்டத்தார் முடி மீது வீழ்த்து அயர்வார் 10.4.3

4130

சங்கரன் தன் அருளால் ஓர் துயில் வந்து தமை அடைய
அங்கணனும் களவின்கண் அருள் புரிவான் அருந்தும் உணவு
மங்கிய நாள் கழிவு அளவும் வைப்பது நித்தமும் ஒரு காசு
இங்கு உனக்கு நாம் என்ன இடர் நீங்கி எழுந்திருந்தார் 10.4.4

4131

பெற்றம் உகந்து ஏறுவார் பீடத்தின் கீழ் ஒரு காசு
அற்றம் அடங்கிட அளிப்ப அன்பரும் மற்று அது கைக்கொண்டு
உற்ற பெரும் பசி அதனால் உணங்கும் உடம்பு உடன் உவந்து
முற்றுஉணர்வு தலை நிரம்ப முகம் மலர்ந்து களி கூர்ந்தார் 10.4.5

4132

அந்நாள் போல் எந்நாளும் அளித்த காசு அது கொண்டே
இன்னாத பசிப் பிணி வந்து இறுத்த நாள் நீங்கிய பின்
மின்னார் செஞ்சடையார்க்கு மெய் அடிமைத்தொழில் செய்து
பொன்னாட்டின் அமரர் தொழப் புனிதர் அடிநிழல் சேர்ந்தார் 10.4.6

4133

பந்தணையும் மெல் விரலாள் பாகத்தார் திருப் பாதம்
வந்தணையும் மனத் துணையார் புகழ்த்துணையார் கழல் வாழ்த்தி
சந்தணியும் மணிப் புயத்துத் தனவீரராம் தலைவர்
கொந்தணையும் மலர் அலங்கல் கோட்புலியார் செயல் உரைப்பாம் 10.4.7

திருச்சிற்றம்பலம்

10.5 கோட்புலி நாயனார் புராணம் (4134- 4146)

திருச்சிற்றம்பலம்

4134

நலம் பெருகும் சோணாட்டு நாட்டி யத்தான் குடி வேளாண்
குலம் பெருக வந்து உதித்தார் கோட்புலியார் எனும் பெயரார்
தலம் பெருகும் புகழ் வளவர் தந்திரியராய் வேற்றுப்
புலம் பெருகத் துயர் விளைவிப்பப் போர் விளைத்துப் புகழ் விளைவிப்பார் 10.5.1

4135

மன்னவன்பால் பெறும் சிறப்பின் வளம் எல்லாம் மதி அணியும்
பிஞ்ஞகர் தம் கோயில் தொறும் திரு அமுதின் படிபெருகச்
செந்நெல் மலைக் குவடு ஆகச் செய்து வரும் திருப்பணியே
பல் நெடும் நாள் செய்து ஒழுகும் பாங்கு புரிந்து ஓங்கும் நாள் 10.5.2

4136

வேந்தன் ஏவலில் பகைஞர் வெம் முனைமேல் செல்கின்றார்
பாந்தள் பூண் என அணிந்தார் தமக்கு அமுது படியாக
ஏந்தலார் தாம் எய்தும் அளவும் வேண்டும் செந்நெல்
வாய்ந்த கூடவை கட்டி வழிக் கொள்வார் மொழிகின்றார் 10.5.3

4137

தம் தமர்கள் ஆயினார் தமக்கு எல்லாம் தனித்தனியே
எந்தையார்க்கு அமுது படிக்கு ஏற்றிய நெல் இவை அழிக்க
சிந்தை ஆற்றா நினைவார் திருவிரையாக் கலி என்று
வந்தனையால் உரைத்து அகன்றார் மன்னவன் மாற்றார் முனைமேல் 10.5.4

4138

மற்றவர் தாம் போயின பின் சில நாளில் வற்காலம்
உற்றலும் அச் சுற்றத்தார் உணவு இன்றி இறப்பதனில்
பெற்றம் உயர்த்தவர் அமுது படி கொண்டாகிலும் பிழைத்துக்
குற்றம் அறப் பின் கொடுப்போம் எனக் கூடு குலைத்து அழித்தார் 10.5.5

4139

மன்னவன் தன் தெம் முனையில் வினை வாய்த்து மற்றவன்பால்
நல் நிதியின் குவை பெற்ற நாட்டியத்தான் குடித்தலைவர்
அந்நாளில் தமர் செய்த பிழை அறிந்தது அறியாமே
துன்னினார் சுற்றம் எலாம் துணிப்பன் எனும் துணிவினராய் 10.5.6

4140

எதிர் கொண்ட தமர்க்கு எல்லாம் இனிய மொழி பல மொழிந்து
மதி தங்கு சுடர் மணி மாளிகையின் கண் வந்து அணைந்து
பதி கொண்ட சுற்றத் தார்க்கு எல்லாம் பைந் துகில் நிதியம்
அதிகம் தந்து அளிப்பதனுக்கு அழைமின்கள் என்று உரைத்து 10.5.7

4141

எல்லாரும் புகுந்த அதன்பின் இருநியம் அளிப்பார் போல்
நல்லார்தம் பேரோன் முன் கடை காக்க நாதன் தன்
வல்லாணை மறுத்து அமுதுபடி அழைத்த மறக்கிளையைக்
கொல்லாதே விடுவேனோ எனக் கனன்று கொலைபுரிவார் 10.5.8

4142

தந்தையார் தாயார் மற்றுடன் பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார் பதி அடியார் மதி அணியும்
எந்தையார் திருப்படி மற்று உண்ண இசைந்தார் களையும்
சிந்த வாள் கொடு துணிந்தார் தீய வினைப் பவம் துணிப்பார் 10.5.9

4143

பின் அங்குப் பிழைத்த ஒரு பிள்ளையைத் தம் பெயரோன் அவ்
வன்னம் துய்த்து இலது குடிக்கு ஒரு புதல்வன் அருளும் என
இந்நெல் உண்டாள் முலைப்பால் உண்டது என எடுத்து எறிந்து
மின்னல்ல வடிவாளால் இரு துணியாய் விழ ஏற்றார் 10.5.10

4144

அந் நிலையே சிவபெருமான் அன்பர் எதிர் வெளியே நின்று
உன்னுடைய கை வாளால் உறுபாசம் அறுத்த கிளை
பொன் உலகின் மேல் உலகம் புக்கு அணையப் புகழோய் நீ
இந்நிலை நம்முடன் அணைக என்றே எழுந்து அருளினார் 10.5.11

4145

அத்தனாய் அன்னையாய் ஆர் உயிராய் அமிர்தாகி
முத்தனாம் முதல்வன் தாள் அடைந்து கிளை முதல் தடிந்த
கொத்து அலர் தார்க் கோட்புலியார் அடிவணங்கிக் கூட்டத்தில்
பத்தராய் பணிவார் தம் பரிசினையாம் பகருவாம் 10.5.12

4146

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி
மேவரிய பெரும் தவம் யான் முன்பு விளைத்தன என்னோ
ஆவதும் ஓர்பொருள் அல்லா என் மனத்தும் அன்றியே
நாவலர் காவலர் பெருகு நதி கிழிய வழி நடந்த
சேவடிப் போது எப்போதும் சென்னியினும் மலர்ந்தனவால் 10.5.13

திருச்சிற்றம்பலம்

கடல் சூழ்ந்த சருக்கம் முற்றிற்று.

சருக்கம் 11 பத்தராய்ப் பணிவார் சருக்கம் (4147- 4170)

11.1 பத்தாராய்ப் பணிவார் புராணம் (4147-4154)
11.2 பரமனையே பாடுவார் புராணம் (4155 - 4156)
11.3 சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம் (4157)
11.4 திருவாரூர் பிறந்தார் புராணம் (4158 - 4159)
11.5 முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம் (4160 - 4162)
11.6 முழுநீறு பூசிய முனிவர் புராணம் (4163 - 4168)
11.7 அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணம் (4169 - 4170)

11. 1 பத்தாராய்ப் பணிவார் புராணம் (4147-4154)

திருச்சிற்றம்பலம்

4147

ஈசருக்கே அன்பு ஆனார் யாவரையும் தாம் கண்டால்
கூசி மிகக் குது குதுத்துக் கொண்டாடி மனம் மகிழ்வுற்று
ஆசையினால் ஆவின்பின் கன்று அணைந்தால் போல் அணைந்து
பேசுவன பணிந்த மொழி இனியனவே பேசுவார் 11.1.1

4148

தாவரிய அன்பினால் சம்பு வினை எவ்விடத்தும்
யாவர்களும் அர்ச்சிக்கும் படி கண்டால் இனிது உவந்து
பாவனையால் நோக்கினால் பலர் காணப் பயன் பெறுவார்
மேவரிய அன்பினால் மேலவர்க்கும் மேல் ஆனார் 11.1.2

4149

அங்கணனை அடியாரை ஆராத காதலினால்
பொங்கிவரும் உவகையுடன் தாம் விரும்பிப் பூசிப்பார்

பங்கய மா மலர் மேலான் பாம்பு அணையான் என்று இவர்கள்
தங்களுக்கும் சார்வரிய சரண் சாரும் தவம் உடையார் 11.1.3

4150

யாதானும் இவ் உடம்பால் செய்வினைகள் ஏறுயர்த்தார்
பாதார விந்தத்தின் பால் ஆக எனும் பரிவால்
காதார் வெண் குழையவர்க்காம் பணி செய்வார் கருக்குழியில்
போதார்கள் அவர் புகழ்க்குப் புவனம் எல்லாம் போதாவால் 11.1.4

4151

சங்கரனைச் சார்ந்த கதை தான் கேட்கும் தன்மையராய்
அங்கணனை மிக விரும்பி அயல் அறியா அன்பினால்
கங்கை நதி மதி இதழி காதலிக்கும் திருமுடியார்
செங்கமல மலர்ப் பாதம் சேர்வதனுக்கு உரியார்கள் 11.1.5

4152

ஈசனையே பணிந்து உருகி இன்பம் மிகக் களிப்பு எய்தி
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந் தாரை
மாசிலா நீறு இழித்து அங்கு அருவி தர மயிர் சிலிப்பக்
கூசியே உடல் கம்பித்திடுவார் மெய்க் குணம் மிக்கார் 11.1.6

4153

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒரு காலும் மறவாமை
குன்றாத உணர்வு உடையார் தொண்டராம் குணம் மிக்கார் 11.1.7

4154

சங்கரனுக்காளான தவம் காட்டித் தாம் அதனால்
பங்கம் அறப் பயன் துய்யார் படி விளக்கும் பெருமையினார்
அங்கணனைத் திருவாரூர் ஆள்வானை அடிவணங்கிப்
பொங்கி எழும் சித்தம் உடன் பத்தராய்ப் போற்றுவார் 10.1.8

திருச்சிற்றம்பலம்

11.2 பரமனையே பாடுவார் புராணம் (4155 - 4156)

திருச்சிற்றம்பலம்

4155

புரம் மூன்றும் செற்றானைப் பூணாகம் அணிந்தானை
உரனில் வரும் ஒரு பொருளை உலகு அனைத்தும் ஆனானைக்
கரணங்கள் காணாமல் கண் ஆர்ந்து நிறைந்தானை
பரமனையே பாடுவார் தம் பெருமை பாடுவாம் 11.2.1

4156

தென் தமிழும் வட கலையும் தேசிகமும் பேசுவன
மன்றின் இடை நடம் புரியும் வள்ளலையே பொருள் ஆக
ஒன்றிய மெய் உணர் வோடும் உள் உருகிப் பாடுவார்
பன்றியுடன் புட்காணாப் பரமனையே பாடுவார் 11.2.2

திருச்சிற்றம்பலம்

11.3 சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம் (4157)

திருச்சிற்றம்பலம்

4157

காரண பங்கயம் ஐந்தின் கடவுளர் தம் பதம் கடந்து
பூரண மெய்ப் பரஞ்சோதி பொலிந்து இலங்கு நாதாந்தத்து
ஆரணையால் சிவத்து அடைந்த சித்தத்தார் தனி மன்றுள்
ஆரண காரணக் கூத்தர் அடித்தொண்டின் வழி அடைந்தார் 11.3.1

திருச்சிற்றம்பலம்

11.4 திருவாரூர் பிறந்தார் புராணம் (4158 - 4159)

திருச்சிற்றம்பலம்

4158

அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்ற பிரான்
மருவாருங் குழல் உமையாள் மணவாளன் மகிழ்ந்து அருளும்
திருவாரூர்ப் பிறந்தார்கள் திருத் தொண்டு தெரிந்து உணர
ஒரு வாயால் சிறியேனால் உரைக்கலாம் தகைமை அதோ 11.4.1

4159

திருக் கயிலை வீற்று இருந்த சிவபெருமான் திருக் கணத்தார்
பெருக்கிய சீர்த் திருவாரூர்ப் பிறந்தார்கள் ஆதலினால்
தருக்கிய ஐம் பொறி அடக்கி மற்றவர்தந் தாள் வணங்கி
ஒருக்கிய நெஞ்சு உடையவர்க்கே அணித்து ஆகும் உயர் நெறியே 11.4.2

திருச்சிற்றம்பலம்

11.5 முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம் (4160 - 4162)

திருச்சிற்றம்பலம்

4160

எப்போதும் இனிய பிரான் இன் அருளால் அதி கரித்து
மெய்ப் போத நெறி வந்த விதி முறைமை வழுவாமே
அப்போதைக்கு அப்போதும் ஆர்வம் மிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதல் சைவராம் முனிவர் 11.5.1

4161

தெரிந்து உணரின் முப்போதும் செல் காலம் நிகழ் காலம்
வருங்காலம் ஆனவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவ வேதியர்க்கே உரியன அப்
பெரும் தகையார் குலப் பெருமை ஆம் புகழும் பெற்றியதோ 11.5.2

4162

நாரணர்க்கும் நான் முகர்க்கும் அறிய ஒண்ணா
நாதனை எம் பெருமானை ஞானம் ஆன
ஆரணத்தின் உள்பொருள்கள் அனைத்தும் ஆகும்
அண்ணலை எண்ணிய காலம் மூன்றும் அன்பின்
காரணத்தால் அர்ச்சிக்கும் மறையோர் தங்கள்
கமல மலர்க் கழல் வணங்கிக் கசிந்து சிந்தைப்
பூரணத்தால் முழு நீறு பூசி வாழும் புனிதர் செயல்
அறிந்தவாறு புகலல் உற்றேன் 11.5.3

திருச்சிற்றம்பலம்

11.6 முழுநீறு பூசிய முனிவர் புராணம் (4163 - 4168)

திருச்சிற்றம்பலம்

4163

ஆதாரமாய் அனைத்தும் ஆகி நின்ற அங்கணன்
எம் பெருமான் நீர் அணிந்த வேணிக்
காதார் வெண் திருக் குழையான் அருளிச் செய்த
கற்பம் அநு கற்பம் உப கற்பம் தான் ஆம்
ஆகாது என்று அங்கு உரைத்த அகற்பம் நீக்கி
ஆமென்று முன் மொழிந்த மூன்று பேதம்
மோகாதி குற்றங்கள் அறுக்கும் நீற்றை மொழிவது
நம் இரு வினைகள் கழிவதாக 11.6.1

4164

அம்பலத்தே உலகுய்ய ஆடும் அண்ணல் உவந்து
ஆடும் அஞ்சினையும் அளித்த ஆக்கள்

இம்பர் மிசை அநா மயமாய் இருந்த போதில் ஈன்று
அணிய கோமய மந்திரத்தினால் ஏற்று
உம்பர் தொழ எழும் சிவ மந்திர ஓமத்தால் உற்பவித்த
சிவாங்கிதனில் உணர்வுக்கு எட்டா
எம்பெருமான் கழல் நினைந்து அங்கிட்ட தூ நீறு
இது கற்பம் என்று எடுத்து இங்கு ஏத்தல் ஆகும் 11.6.2

4165

ஆறணியத்து உலர்ந்த கோமயத்தை கைக்கொண்டு
அழகு உற நுண் பொடி ஆக்கி ஆவின் சுத்த
நீரணிவித்து தந்திர மந்திரத்தினாலே நிசயம்
உறப் பிடித்து ஓம நெருப்பில் இட்டுச்
சீரணியும்படி வெந்து கொண்ட செல்வத் திருநீறாம்
அநு கற்பம் தில்லை மன்றுள்
வாரணியும் முலை உமையாள் காண ஆடும் மாணிக்கக்
கூத்தர் மொழி வாய்மை யாலே 11.6.3

4166

அடவி படும் அங்கியினில் வெந்த நீறும்
ஆனிலைகள் அனல் தொடக்க வெந்த நீறும்
இட வகைகள் எரி கொளுவ வெந்த நீறும் இட்டி
கைகள் சுட்ட எரி பட்ட நீறும்
உடன் அன்றி வெவ்வேறே ஆவின் நீரால் உரை
திகழும் மந்திரம் கொண்டு உண்டையாக்கி
மடம் அதனில் பொலிந்து இருந்த சிவ அங்கி
தன்னால் வெந்தது மற்று உபகற்பம் மரபின் ஆகும் 11.6.4

4167

இந்த வகையால் அமைத்த நீறு கொண்டே
இரு திறமும் சுத்தி வரத் தெறித்த பின்னர்
அந்தம் இலா அரன் அங்கி ஆறு மெய்ம்மை
அறிவித்த குரு நன்மை அல்லாப் பூமி
முந்த எதிர் அணியாதே அணியும் போது முழுவதும்
மெய்ப் புண்டரம் சந்திரனில் பாதி
நந்தி எரி தீபம் நிகழ் வட்டம் ஆக நாதர்
அடியார் அணிவர் நன்மையாலே 11.6.5

4168

சாதியினில் தலை ஆன தரும சீலர் தத்துவத்தின்
நெறி உணர்ந்தோர் தங்கள் கொள்கை
நீதியினில் பிழையாது நெறியில் நிற்போர்
நித்த நியமத்து நிகழ் அங்கி தன்னில்
பூதியினைப் புதிய ஆசனத்துக் கொண்டு புலி
அதளின் உடையானைப் போற்றி நீற்றை
ஆதிவரும் மும்மலமும் அறுத்த வாய்மை அரு முனிவர்
முழுவதும் மெய் அணிவர் அன்றே 11.6.6

திருச்சிற்றம்பலம்

11.7 அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணம் (4169 - 4170)

திருச்சிற்றம்பலம்

4169

மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டுக்கு அப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நா வேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்
நல் தொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூ வேய்ந்த நெடும் சடை மேல் அடம்பு தும்பை
புதிய மதி நதி இதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல் கொடியான் அடிச்சார்ந்தாரும்
செப்பிய அப்பாலும் அடிச் சார்ந்தார் தாமே 11.7.1

4170

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி
செற்றார் தம் புரம் எரித்த சிலையார் செல்வத்
திருமுருகன் பூண்டியினில் செல்லும் போதில்
சுற்றாரும் சிலை வேடர் கவர்ந்து கொண்டதொகு
நிதியின் பரப்பு எல்லாம் சுமந்து கொண்டு
முற்றாத முலை உமையாள் பாகன் பூத முதல்
கணமே உடன் செல்ல முடியாப் பேறு
பெற்றார் தம் கழல் பரவ அடியேன் முன்னைப்
பிறவியினில் செய்த தவம் பெரியவாமே 11.7.2

திருச்சிற்றம்பலம்

பத்தராய்ப் பணிவார் சருக்கம் முற்றிற்று.

சருக்கம் 12 / மன்னிய சீர்ச் சருக்கம் (4171 - 4228)

12.1 பூசலார் நாயனார் புராணம் (4171- 4188)
12.2 மங்கையர்க்கரசியார் புராணம் (4189- 4191)
12.3 நேச நாயனார் புராணம் (4192- 4196)
12.4 கோச்செங்கட் சோழ நாயனார் புராணம் (4197 -4214)
12.5 திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம் (4215 - 4226)
12.6 சடைய நாயனார் புராணம் (4227)
12.7 இசை ஞானியார் புராணம் (4228)

12.1 பூசலார் நாயனார் புராணம் (4171- 4188)

திருச்சிற்றம்பலம்

4171

அன்றினார் புரம் எரித்தார்க்கு ஆலயம் எடுக்க எண்ணி
ஒன்றும் அங்கு உதவாது ஆக உணர்வினால் எடுக்கும் தன்மை

நன்று என மனத்தினாலே நல்ல ஆயம் தான் செய்த
நின்ற ஊர்ப் பூசலார்தம் நினைவினை உரைக்கல் உற்றார் 12.1.1

4172

உலகினில் ஒழுக்கம் என்றும் உயர் பெரும் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க நான் மறை விளங்கும் மூதூர்
குல முதல் சீலம் என்றும் குறைவுஇலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி நிகழ் திருநின்ற ஊராம் 12.1.2

4173

அருமறை மரபு வாழ அப்பதி வந்து சிந்தை
தரும் உணர்வான எல்லாம் தம்பிரான் கழல்மேல் சார
வருநெறி மாறா அன்பு வளர்ந்து எழ வளர்ந்து வாய்மைப்
பொருள் பெறு வேதநீதிக் கலை உணர் பொலிவின் மிக்கார் 12.1.3

4174

அடுப்பது சிவன்பால் அன்பர்க்காம் பணி செய்தல் என்றே
கொடுப்பது எவ்வகையும் தேடி அவர் கொளக் கொடுத்தும் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்து உறைவதற்கு ஓர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார் இரு நிதி இன்மை எண்ணார் 12.1.4

4175

மனத்தினால் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
எனைத்தும் ஓர் பொருட் பேறு இன்றி என் செய்கேன் என்று நைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதியம் எல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார் 12.1.5

4176

சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக்கு ஆலயம் செய் நலம் பெறு நல் நாள் கொண்டே
ஆதரித்து ஆகமத்தால் அடிநிலை பாரித்து அன்பால்
காதலில் கங்குல் போதும் கண்படாது எடுக்கல் உற்றார் 12.1.6

4177

அடிமுதல் உபானம் ஆதி ஆகிய படைகள் எல்லாம்
வடிவுறும் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து மான
முடிவுறு சிகரம் தானும் முன்னிய முழத்தில் கொண்டு
நெடிது நாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவால் செய்தார் 12.1.7

4178

தூபியும் நட்டு மிக்க சுதையும் நல்வினையும் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில் சூழ் மதிலும் போக்கி
வாவியும் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னும்
தாபரம் சிவனுக்கு ஏற்க விதித்த நாள் சாரு நாளில் 12.1.8

4179

காடவர் கோமான் கச்சிக் கல்தளி எடுத்து முற்ற
மாடெலாம் சிவனுக்கு ஆகப் பெரும் செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமால் அறியாதாரைத் தாபிக்கும் அந்நாள் முன்னாள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார் இரவிடைக் கனவில் எய்தி 12.1.9

4180

நின்ற ஊர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்று நீடு ஆலயத்து நாளை நாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய் என்று
கொன்றை வார் சடையார் தொண்டர் கோயில் கொண்டு அருளப் போந்தார்
12.1.10

4181

தொண்டரை விளக்கத் தூயோன் அருள் செயத் துயிலை நீங்கித்
திண்திறல் மன்னன் அந்தத் திருப்பணி செய்தார் தம்மை
கண்டு நான் வணங்க வேண்டும் என்று எழும் காதலோடும்
தண் தலைச் சூழல் சூழ்ந்த நின்ற ஊர் வந்து சார்ந்தான் 12.1.11

4182

அப்பதி அணைந்து பூசல் அன்பர் இங்கு அமைத்த கோயில்
எப்புடையது என்று அங்கண் எய்தினார் தம்மைக் கேட்கச்
செப்பிய பூசல் கோயில் செய்தது ஒன்று இல்லை என்றார்
மெய்ப் பெரு மறையோர் எல்லாம் வருக என்று உரைத்தான் வேந்தன் 12.1.12

4183

பூசுரர் எல்லாம் வந்து புரவலன் தன்னைக் காண
மாசிலாப் புசலார் தாம் யார் என மறையோர் எல்லாம்
ஆசில் வேதியன் இவ்வூரான் என்று அவர் அழைக்க ஓட்டான்
ஈசனார் அன்பர் தம்பால் எய்தினான் வெய்ய வேலான் 12.1.13

4184

தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது நீர் இங்கு
எண் திசை யோரும் ஏத்த எடுத்த ஆலயம் தான் யாது இங்கு
அண்டர் நாயகரைத் தாபித்து அருளும் நாள் இன்று என்று உம்மைக்
கண்டடி பணிய வந்தேன் கண் நுதல் அருள் பெற்று என்றான் 12.1.14

4185

மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர் தாம் மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் செய்தாரேல்
முன்வரு நிதி இலாமை மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதாம் என்று சிந்தித்து எடுத்தா வாறு எடுத்துச் சொன்னார் 12.1.15

4186

அரசனும் அதனைக் கேட்டு அங்கு அதிசயம் எய்தி என்னே
புரையறு சிந்தை அன்பர் பெருமை என்று அவரைப் போற்றி
விரை செறி மாலை தாழ நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு மீண்டு தன் மூதூர்ப் புக்கான் 12.1.16

4187

அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத்து அரனார் தம்மை
நன் பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தினோடும்
பின்பு பூசனைகள் எல்லாம் பெருமையில் பல நாள் பேணிப்
பொன் புனை மன்றுளாடும் பொன் கழல் நீழல் புக்கார் 12.1.17

4188

நீண்ட செஞ் சடையினார்க்கு நினைப்பினால் கோயில் ஆக்கி
பூண்ட அன்பிடையறாத பூசலார் பொன்தாள் போற்றி
ஆண்டகை வளவர் கோமான் உலகுய்ய அளித்த செல்வப்
பாண்டிமா தேவியார் தம் பாதங்கள் பரவல் உற்றேன் 12.1.18

திருச்சிற்றம்பலம்

12.2 மங்கையர்க்கரசியார் புராணம் (4189 - 4191)

திருச்சிற்றம்பலம்

4189

மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னிநாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
இருந்தமிழ் நாடுற்ற இடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரை போற்றுவார்
கழல் எம்மால் போற்றலாமே 12.2.1

4190

பூசுரர் சூளா மணி ஆம் புகலி வேந்தர்
போனக ஞானம் பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல் பெறும் தவத்தினாரைச் செப்புவது
யாம் என் அறிந்து தென்னர் கோமான்
மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாய்
நெடும் காலம் மன்னிப் பின்னை
ஆசில் நெறியவரோடும் கூட ஈசர் அடி நிழல்
அமர்ந்திருக்க அருளும் பெற்றார் 12.2.2

4191

வரும் நாள் ஒன்றும் பிழையாத் தெய்வப் பொன்னி
வளம் பெருக்க வளவர் குலம் பெருக்கும்தங்கள்
திருநாடு போற் செழியர் தென்னர் நாடு சீர்
விளக்கும் செய்ய சீறடிகள் போற்றி
ஒரு நாளும் தம் செயலில் வழுவாது அன்பர்க்கு
உடைகீளும் கோவணமும் நெய்து நல்கும்
பெருநாமச் சாலியர் தம் குலத்தில் வந்த பெருந்தகையார்
நேசர் திறம் பேசல் உற்றாம் 12.2.3

திருச்சிற்றம்பலம்

12.3 நேச நாயனார் புராணம் (4192 - 4196)

திருச்சிற்றம்பலம்

4192

சீர் வளர் சிறப்பின் மிக்க செயல் முறை ஒழுக்கம் குன்றா
நார் வளர் சிந்தை வாய்மை நன்மையார் மன்னி வாழும்
பார் வளர் புகழின் மிக்க பழம்பதி மதி தோய் நெற்றிக்
கார்வளர் சிகர மாடக் காம்பீலி என்பதாகும் 12.3.1

4193

அந்நகர் அதனில் வாழ்வார் அறுவையர் குலத்து வந்தார்
மன்னிய தொழிலில் தங்கள் மரபில் மேம்பாடு பெற்றார்
பல்நாக ஆபரணர்க்கு அன்பர் பணி தலைக்கொண்டு பாதம்
சென்னியில் கொண்டு போற்றும் தேசினார் நேசர் என்பார் 12.3.2

4194

ஆங்கு அவர் மனத்தின் செய்கை அரன் அடிப்போதுக்கு ஆக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்சு எழுத்துக்கு ஆக்கி
தாங்கு கைத்தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்கு ஆகப்
பாங்குடை உடையும் கீளும் பழுதில் கோவணமும் நெய்வார் 12.3.3

4195

உடையொடு நல்ல கீளும் ஒப்பில் கோவணமும் நெய்து
விடையவர் அடியார் வந்து வேண்டுமாறு ஈயும் ஆற்றால்
இடையறாது அளித்து நாளும் அவர் கழல் இறைஞ்சி ஏத்தி
அடைவுறு நலத்தர் ஆகி அரனடி நீழல் சேர்ந்தார் 12.3.4

4196

கற்றை வேணி முடியார் தம் கழல் சேர்வதற்குக் கலந்த வினை
செற்ற நேசர் கழல் வணங்கிச் சிறப்பால் முன்னைப் பிறப்பு உணர்ந்து
பெற்றம் உயர்த்தார்க்கு ஆலயங்கள் பெருக அமைத்து மண் ஆண்ட
கொற்ற வேந்தர் கோச்செங்கண் சோழர் பெருமை கூறுவாம் 12.3.5

திருச்சிற்றம்பலம்

12.4 கோச்செங்கட் சோழ நாயனார் புராணம் (4197- 4214)

திருச்சிற்றம்பலம்

4197

துலையில் புறவின் நிறை அளித்த சோழர் உரிமைச் சோணாட்டில்
அலையில் தரளம் அகில் ஒடுசந்து அணி நீர்ப் பொன்னி மணி கொழிக்கும்
குலையில் பெருகும் சந்திரத் தீர்த்தத்தின் மருங்கு குளிர் சோலை
நிலையில் பெருகும் தருமிடைந்த நெடுந் தண் கானம் ஒன்று உளதால் 12.4.1

4198

அப் பூங்கானில் வெண்ணாவல் அதன் கீழ் முன்னாள் அரிதேடும்
மெய்ப் பூங்கழலார் வெளிப்படலும் மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்து ஆட்டிக் கமழ் பூங்கொத்தும் அணிந்து இறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை நாளும் வழிபட்டு ஒழுகுமால் 12.4.2

4199

ஆன செயலால் திருவானைக்கா என்று அதற்குப் பெயர் ஆக
ஞானம் உடைய ஒரு சிலந்தி நம்பர் செம் பொன் திருமுடிமேல்
கானல் விரவும் சருகு உதிரா வண்ணம் கலந்த வாய் நூலால்
மேல் நல்திரு மேற்கட்டி என விரிந்து செறியப் புரிந்து உளதால் 12.4.3

4200

நன்றும் இழைத்த சிலம்பி வலைப் பரப்பை நாதன் அடி வணங்க
சென்ற யானை அநுசிதம் என்று அதனைச் சிதைக்கச் சிலம்பிதான்
இன்று களிற்றின் கரம் சுலவிற்று என்று மீள இழைத்ததனை
அன்று கழித்த பிற்றைநாள் அடல் வெள் யானை அழித்ததால் 12.4.4

4201

எம்பிரான் தன் மேனியின் மேல் சருகு விழாமையான் வருந்தி
உம்பர் இழைத்த நூல் வலயம் அழிப்பதே என்று உறுத்து எழுந்து
வெம்பிச் சிலம்பி துதிக்கையினில் புக்குக் கடிப்ப வேகத்தால்
கும்ப யானை கை நிலத்தில் மோதிக் குலைந்து வீழ்ந்தது ஆல் 12.4.5

4202

தறையில் புடைப்பக் கைப்புக்க சிலம்பி தானும் உயிர் நீங்க
மறையில் பொருளும் தரும் ஆற்றான் மத யானைக்கும் வரம் கொடுத்து
முறையில் சிலபி தனைச் சோழர் குலத்து வந்து முன் உதித்து
நிறையில் புவனம் காத்து அளிக்க அருள் செய்து அருள நிலத்தின் கண் 12.4.6

4203

தொன்மை தரு சோழர் குலத்து அரசனாம் சுபதேவன்
தன்னுடைய பெரும் தேவி கமலவதி உடன் சார்ந்து
மன்னு புகழத் திருத்தில்லை மன்றாடும் மலர்ப் பாதம்
சென்னியுறப் பணிந்து ஏத்தித் திருப்படிக் கீழ் வழிபடு நாள் 12.4.7

4204

மக்கள் பேறு இன்மையினால் மாதேவி வரம் வேண்டச்
செக்கர் நெடுஞ் சடைக் கூத்தர் திரு உள்ளம் செய்தலினால்
மிக்க திருப்பணி செய்த சிலம்பிகுல வேந்து மகிழ்
அக் கமலவதி வயிற்றில் அணி மகவாய் வந்து அடைய 12.4.8

4205

கழையார் தோளி கமலவதி தன்பால் கருப்ப நாள் நிரம்பி
விழைவார் மகவு பெற அடுத்த வேலை அதனில் காலம் உணர்
பழையார் ஒரு நாழிகை கழித்துப் பிறக்கு மேல் இப் பசும் குழவி
உழையார் புவனம் ஒரு மூன்றும் அளிக்கும் என் ஒள்ளிழையார் 12.4.9

4206

பிறவா ஒரு நாழிகை கழித்து என் பிள்ளை பிறக்கும் பரிசு என் கால்
உற ஆர்த்து எடுத்துத் தூக்கும் என உற்ற செயல் மற்று அது முற்றி
அறவாணர்கள் சொல்லிய காலம் அணைய பிணிவிட்டு அருமணியை
இறவாது ஒழிவாள் பெற்று எடுத்து என் கோச்செங்கண்ணனோ என்றாள் 12.4.10

4207

தேவி புதல்வர் பெற்று இறக்க செங்கோல் சோழன் சுபதேவன்
ஆவி அனைய அரும் புதல்வன் தன்னை வளர்த்து அங்கு மணி மகுடம்
மேவும் உரிமை முடி கவித்துத் தானும் விரும்பு பெரும் தவத்தின்
தாவில் நெறியைச் சென்று அடைந்து தலைவர் சிவலோகம் சார்ந்தான் 12.4.11

4208

கோதை வேலர் கோச்செம் கண் சோழர் தாம் இக் குவலயத்தில்
ஆதிமூர்த்தி அருளால் முன் அறிந்து பிறந்து மண் ஆள்வார்
பூதநாதன் தான் மகிழ்ந்து பொருந்தும் பெரும் தண் சிவ ஆலயங்கள்
காதலோடும் பல எடுக்கும் தொண்டு புரியும் கடன் பூண்டார் 12.4.12

4209

ஆனைக் காவில் தாம் முன்னம் அருள் பெற்று அதனை அறிந்து அங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார் மகிழும் கோயில் செய்கின்றார்
ஞானச் சார்வாம் வெண்நாவல் உடனே கூட நலம் சிறக்க
பால் நல் களத்துத் தம்பெருமான் அமரும் கோயில் பணி சமைத்தார் 12.4.13

4210

மந்திரிகள் தமை ஏவி வள்ளல் கொடை அனபாயன்
முந்தை வரும் குல முதலோராய முதல் செங்கணார்
அந்தமில் சீர்ச் சோனாட்டில் அகனாடு தொறும் அணியார்
சந்திர சேகரன் அமரும் தானங்கள் பல சமைத்தார் 12.4.14

4211

அக் கோயில் தொறும் சிவனுக்கு அமுதுபடி முதலான
மிக்க பெரும் செல்வங்கள் விருப்பினால் மிக அமைத்துத்
திக்கு அனைத்தும் தனிச் செங்கோல் முறை நிறுத்தித் தேர் வேந்தர்
முக்கண் முதல் நடம் ஆடும் முதல் தில்லை முன்னினார் 12.4.15

4212

திரு ஆர்ந்த செம்பொன்னின் அம்பலத்தே நடம் செய்யும்
பெருமானை அடிவணங்கி பேர் அன்பு தலை சிறப்ப
உருகா நின்று உளம் களிப்பத் தொழுது ஏத்தி உறையும் நாள்
வருவாய்மை மறையவர்க்கு மாளிகைகள் பல சமைத்தார் 12.4.16

4213

தேவர் பிரான் திருத்தொண்டில் கோச் செங்கட் செம்பியர் கோன்
பூவலயம் பொது நீக்கி ஆண்டு அருளிப் புவனியின் மேல்
ஏவிய நல்தொண்டு புரிந்து இமையவர்கள் அடி போற்ற
மேவினார் திருத்தில்லை வேந்தர் திருவடி நிழல் கீழ் 12.4.17

4214

கருநீல மிடற்றார் செய்ய கழலடி நீழல் சேர
வருநீர்மை உடைய செங்கட் சோழர் தம் மலர்த்தாள் வாழ்த்தித்
தருநீர்மை இசை கொள் யாழின் தலைவராய் உலகம் ஏத்தும்
திருநீல கண்டப் பாணர் திறம் இனிச் செப்பல் உற்றேன் 12.4.18

திருச்சிற்றம்பலம்

12.5 திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம் (4215 - 4226)

திருச்சிற்றம்பலம்

4215

எருக்கத்தம் புலியூர் மன்னி வாழ்பவர் இறைவன் தன் சீர்
திருத்தகும் யாழில் இட்டுப் பரவுவார் செழுஞ்சோணாட்டில்
விருப்புறு தானம் எல்லாம் பணிந்து போய் விளங்கும் கூடல்
பருப்பதச் சிலையார் மன்னும் ஆலவாய் பணியச் சென்றார் 12.5.1

4216

ஆலவாய் அமர்ந்தார் கோயில் வாயிலை அடைந்து நின்று
பாலை ஈர் ஏழு கோத்த பண்ணினில் கருவி வீக்கிக்
காலம் ஆதரித்த பண்ணில் கை பல முறையும் ஆராய்ந்து
ஏவலார் குழலாள் பாகர் பாணிகள் யாழில் இட்டார் 12.5.2

4217

மற்றவர் கருவிப் பாடல் மதுரை நீடு ஆலவாயில்
கொற்றவன் திருவுள்ளத்துக் கொண்டு தன் தொண்டர்க்கு எல்லாம்
அற்றைநாள் கனவில் ஏவ அருள் பெரும் பாணனாரைத்
தெற்றினார் புரங்கள் செற்றார் திரு முன்பு கொண்டு புக்கார் 12.5.3

4218

அன்பர்கள் கொண்டு புக்க பொழுதினில் அரிவை பாகன்
தன் பெரும் பணியாம் என்று தமக்கு மெய் உணர்த்தலாலே
மன் பெரும் பாணனாரும் மா மறை பாட வல்லார்
முன்பு இருந்து யாழில் கூடல் முதல்வரைப் பாடுகின்றார் 12.5.4

4219

திரிபுரம் எரித்த வாறும் தேர்மிசை நின்ற வாறும்
கரியினை உரித்த வாறும் காமனைக் காய்ந்தவாறும்
அரி அயற்கு அரிய வாரும் அடியவர்க்கு எளிய வாறும்
பரிவினால் பாடக் கேட்டுப் பரமனார் அருளினாலே 12.5.5

4220

அந்தரத்து எழுந்த ஓசை அன்பினில் பாணர் பாடும்
சந்த யாழ் தரையில் சீதம் தாக்கில் வீக்கி அழியும் என்று
சுந்தரப் பலகை முன்நீர் இடும் எனத் தொண்டர் இட்டார்
செந்தமிழ் பாணனாரும் திரு அருள் பெற்றுச் சேர்ந்தார் 12.5.6

4221

தமனியப் பலகை ஏறித் தந்திரிக் கருவி வாசித்து
உமையொரு பாகர் வண்மை உலகு எலாம் அறிய ஏத்தி
இமையவர் போற்ற ஏகி எண்ணில் தானங்கள் கும்பிட்டு
அமரர் நாடாளாது ஆரூர் ஆண்டவர் ஆரூர் சேர்ந்தார் 12.5.7

4222

கோயில் வாயில் முன் அடைந்து கூற்றம் செற்ற பெரும் திறலும்
தாயின் நல்ல பெருங் கருணை அடியார்க்கு அளிக்கும் தண் அளியும்
ஏயும் கருவியில் தொடுத்து அங்கு இட்டுப் பாடக் கேட்டு அங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார் 12.5.8

4223

மூலத் தானத்து எழுந்து அருளி இருந்த முதல்வன் தனை வணங்கிச்
சாலக் காலம் அங்கு இருந்து தம்பிரான் தன் திரு அருளால்
சீலத்தார்கள் பிரியாத திருவாரூரின் நின்றும் போய்
ஆலத்தார்ந்த கண்டத்தார் அமரும் தானம் பல வணங்கி 12.5.9

4224

ஆழி சூழும் திருத் தோணி அமர்ந்த அம்மான் அருளாலே
யாழின் மொழியாள் உமை ஞானம் ஊட்ட உண்ட எம்பெருமான்
காழி நாடன் கவுணியர் கோன் கமல பாதம் வணங்குதற்கு
வாழி மறையோர் புகலியினில் வந்தார் சந்த இசைப்பாணர் 12.5.10

4225

ஞானம் உண்டார் கேட்டு அருளி நல்ல இசை யாழ்ப் பெரும் பாணர்க்கு
ஆன படியால் சிறப்பு அருளி அமரும் நாளில் அவர் பாடும்
மேன்மை பதிகத்து இசை யாழில் இடப் பெற்று உடனே மேயபின்
பானற் களத்தார் பெருமணித்தில் உடனே பரமர் தாள் அடைந்தார் 12.5.11

4226

வரும் பான்மையினில் பெரும் பாணர் மலர்த்தாள் வணங்கி வயல் சாலிக்
கரும்பார் கழனித் திருநாவலூரில் சைவக் கலை மறையோர்
அரும்பா நின்ற அணி நிலவும் பணியும் அணிந்தார் அருள் பெற்ற
சுரும்பார் தொங்கல் சடையனார் பெருமை சொல்லல் உறுகின்றோம் 12.5.12

திருச்சிற்றம்பலம்

12.6 சடைய நாயனார் புராணம் (4227)

திருச்சிற்றம்பலம்

4227

தம்பிரானைத் தோழமை கொண்டு அருளித் தமது தடம் புயஞ்சேர்
கொம்பனார் பால் ஒரு தூது செல்ல ஏவிக் கொண்டு அருளும்
எம்பிரானைச் சேரமான் பெருமாள் இணயில் துணைவராம்
நம்பி ஆரூரைப் பயந்தார் ஞாலம் எல்லாம் குடிவாழ 12.6.1

திருச்சிற்றம்பலம்

12.7 இசை ஞானியார் புராணம் (4228)

திருச்சிற்றம்பலம்

4228

ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்து அழித்தார் ஆண்ட நம்பி தனைப் பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என் சிறுபுன்
மொழியால் புகழ முடியுமோ முடியாது எவர்க்கும் முடியாதால் 12.7.1

திருச்சிற்றம்பலம்

மன்னிய சீர்ச் சருக்கம் முற்றிற்று.

---

13. வெள்ளானைச் சருக்கம் (4229 - 4281)

திருச்சிற்றம்பலம்

4229

மூலம் ஆன திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த
ஞாலம் உய்ய எழுந்து அருளும் நம்பி தம்பிரான் தோழர்
காலை மலர்ச் செங்கமலக்கண் கழற்று அறிவார் உடன் கூட
ஆலம் உண்டார் திருக் கயிலை அணைந்தது அறிந்தபடி உரைப்பாம் 13.1.1

4230

படியில் நீடும் பத்தி முதல் அன்பு நீரில் பணைத்து ஓங்கி
வடிவு நம்பி ஆரூரர் செம் பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின் களைகட்டு எழுந்து கதிர் பரப்பி
முடிவு இலாத சிவ போகம் முதிர்ந்து முறுகி விளைந்ததால் 13.1.2

4231

ஆரம் உரகம் அணிந்தபிரான் அன்பர் அணுக்க வன் தொண்டர்
ஈர மதுவார் மலர்ச்சோலை எழில் ஆரூரில் இருக்கும் நாள்
சேரர் பெருமாள் தனை நினைந்து தெய்வப் பெருமாள் கழல் வணங்கிச்
சாரல் மலைநாடு அணைவதற்குத் தவிரா விருப்பின் உடன் போந்தார் 13.1.3

4232

நன்னீர்ப் பொன்னித் திரு நாட்டு நாதர் மகிழும் திருப்பதிகள்
முன்னி இறைஞ்சி அகன்று போய் முல்லைப் படப்பைக்கு ஒல்லைமான்
துன்னி உகைக்கும் குடக் கொங்கில் அணைந்து தூய மதிவான் நீர்
சென்னி மிசை வைத்தவர் செல்வத் திருப்புக்கு ஒளியூர் சென்று அடைந்தார் 13.1.4

4233

மறையோர் வாழும் அப்பதியின் மாட வீதி மருங்கு அணைவார்
நிறையும் செல்வத்து எதிர் மனைகள் இரண்டில் நிகழ் மங்கல இயங்கள்
அறையும் ஒலி ஒன்றினில் ஒன்றினில் அழுகை ஒலி வந்து எழுதலும் ஆங்கு
உறையும் மறையோர்களை இரண்டும் உடனே நிகழ்வது என் என்றார் 13.1.5

4234

அந்தணாளர் வணங்கி அரும் புதல்வர் இருவர் ஐயாண்டு
வந்த பிராயத்தினர் குளித்த மடுவில் முதலை ஒரு மகவை
முந்த விழுங்க பிழைத்தவனை முந்நூல் அணியும் கலியாணம்
இந்த மனை மற்று அந்தமனை இழந்தார் அழுகை என்று உரைத்தார் 13.1.6

4235

இத்தன்மையினைக் கேட்டு அருளி இரங்கும் திரு உள்ளத்தினராம்
மொய்த்த முகைத்தார் வன்தொண்டர் தம்மை முன்னே கண்டு இறைஞ்ச
வைத்த சிந்தை மறையோனும் மனைவிதானும் மகிழ் இழந்த
சித்த சோகம் தெரியாமே வந்து இருந்தாள் இறைஞ்சினார் 13.1.7

4236

துன்பம் அகல முகம் மலர்ந்து தொழுவார் தம்மை முகம் நோக்கி
இன்ப மைந்தன் தனை இழந்தீர் நீரோ என்ன எதிர் வணங்கி
முன்பு புகுந்து போனது அது முன்னே வணங்க முயல் கின்றோம்
அன்பு பழுது ஆகாமல் எழுந்து அருளப் பெற்றேம் எனத் தொழுதார் 13.1.8

4237

மைந்தன் தன்னை இழந்த துயர் மறந்து நான் வந்து அணைந்து அதற்கே
சிந்தை மகிழ்ந்தார் மறையோனும் மனைவி தானும் சிறுவனையான்
அந்த முதலையின் வாய் நின்றும் அழைத்துக் கொடுத்த அவிநாசி
எந்தை பெருமான் கழல் பணிவேன் என்றார் சென்றார் இடர் களைவார் 13.1.9

4238

இவ்வாறு அருளிச் செய்து அருளி இவர்கள் புதல்வன் தனைக் கொடிய
வெவ்வாய் முதலை விழுங்கும் மடு எங்கே என்று வினவிக் கேட்டு
அவ்வாழ் பொய்கைக் கரையில் எழுந்தருளி அவனை அன்று கவர்
வைவாள் எயிற்று முதலை கொடு வருதற்கு எடுத்தார் திருப்பதிகம் 13.1.10

4239

உரைப்பார் உரை என்று எடுத்த திருப்பாட்டு முடியாமுன் உயர்ந்த
வரைப் பான்மையில் நீள் தடம்புயத்து மறலி மைந்தன் உயிர் கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலைவாயில் உடலில்சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்தது என நிரம்ப முதலை வாயில் தருவித்தான் 13.1.11

4240

பெருவாய் முதலை கரையின் கண் கொடு வந்து உமிழ்ந்த பிள்ளைதனை
உருகா நின்ற தாய் ஓடி எடுத்துக் கொடுவந்து உயிர் அளித்த
திருவாளன் தன் சேவடிக்கீழ் மறையோன் ஒடு வீழ்ந்தாள்
மருவார் தருவின் மலர் மாரி பொழிந்தார் விசும்பில் வானோர்கள் 13.1.12

4241

மண்ணினுள்ளார் அதிசயித்தார் மறையோர் எல்லாம் உத்தரியம்
விண்ணில் ஏற விட்டு ஆர்த்தார் வேத நாதம் மிக்கு எழுந்தது
அண்ணலாரும் அவிநாசி அரனார் தம்மை அருமறையோன்
கண்ணின் மணியாம் புதல்வனையும் கொண்டு பணிந்தார் காசினிமேல் 13.1.13

4242

பரவும் பெருமைத் திருப்பதிகம் பாடி பணிந்து போந்து அன்பு
விரவு மறையோன் காதலனை வெண்ணூல் பூட்டி அண்ணலார்
முரசம் இயம்பக் கலியாணம் முடித்து முடிச் சேரலர் தம்பால்
குரவ மலர்ப் பூந்தண் சோலை குலவு மலை நாடு அணைகின்றார் 13.1.14

4243

சென்ற சென்ற குட புலத்துச் சிவனார் அடியார் பதிகள் தொறும்
நன்று மகிழ்வுற்று இன்புற்று நலம் சேர் தலமும் கானமும்
துன்று மணிநீர்க் கான் ஆறும் உறு கல் சுரமும் கடந்து அருளி
குன்ற வள நாட்டு அகம் புகுந்தார் குலவும் அடியேன் அகம்புகுந்தார் 13.1.15

4244

முன்னாள் முதலை வாய்புக்க மைந்தன் முன்போல் வரமீட்டுத்
தென்னாரூரர் எழுந்து அருளா நின்றார் என்று சேரர் பிரார்க்கு
அந்நாட்டு அரனார் அடியார்கள் முன்னே ஓடி அறிவிப்பப்
பொன்னார் கிழியும் மணிப்பூணும் காசும் தூசும் பொழிந்து அளித்தார் 13.1.16

4245

செய்வது ஒன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து களி கூர்ந்து
என் ஐயன் அணைந்தான் எனை ஆளும் அண்ணல் அணைந்தான் ஆரூரில்
சைவன் அணைந்தான் என் துணையாம் தலைவன் அணைந்தான் தரணி எலாம்
உய்ய அணைந்தான் அணைந்தான் என்று ஓகை முரசம் சாற்று வித்தார் 13.1.17

4246

பெருகு மதிநூல் அமைச்சர்களை அழைத்துப் பெரியோர் எழுந்து அருளப்
பொருவில் நகரம் அலங்கரித்துப் பண்ணிப் பயணம் புறப்படுவித்து
அருவி மத மால் யானையினை அணைந்து மிசை கொண்ட அரசர் பெரும்
தெருவு கழிய எதிர் வந்தார் சேரர் குலம் உய்ந்திட வந்தார் 13.1.18

4247

மலை நாட்டு எல்லை உள் புகுந்து வந்த வன் தொண்டரை வரையில்
சிலை நாட்டிய வெல் கொடித்தானைச் சேரர் பெருமான் எதிர் சென்று
தலை நாள் கமலப் போது அனைய சரணம் பணியத் தாவில் பல
கலை நாட்டு அமுத ஆரூரர் தாமும் தொழுது கலந்தனர் ஆல் 13.1.19

4248

சிந்தை மகிழும் சேரலனார் திரு ஆரூரர் எனும் இவர்கள்
தந்த மணி மேனிகள் வேறாம் எனினும் ஒன்றாம் தன்மையராய்
முந்த எழும் காதலில் தொழுது முயங்கு உதியர் முதல் வேந்தர்
எந்தை பெருமான் திருவாரூர்ச் செல்வம் வினவி இன்புற்றார் 13.1.20

4249

ஒருவர் ஒருவரில் கலந்து குறைபாடு இன்றி உயர் காதல்
இருவர் நண்பின் செயல் கண்ட இரண்டு திறத்து மாந்தர்களும்
பெருகு மகிழ்ச்சி கலந்து ஆர்த்தார் பெருமாள் தமிழின் பெருமாளை
வருகை வரையின் மிசை ஏற்றித் தாம் பின் மதிவெண் குடை கவித்தார் 13.1.21

4250

உதியர் பெருமாள் பெரும் சேனை ஓதம் கிளர்ந்தது என ஆர்ப்ப
கதிர் வெண் திரு நீற்று அன்பர் குழாம் கங்கை கிளர்ந்தது என ஆர்ப்ப
எதிர் வந்து இறைஞ்சும் அமைச்சர் குழாம் ஏறும் இவுளித் துகள் ஆர்ப்ப
மதி தங்கிய மஞ்சு அணி இஞ்சி வஞ்சி மணிவாயிலை அணைந்தார் 13.1.22

4251

ஆரண மொழிகள் முழங்கிட ஆடினர் குணலைகள் அந்தணர்
வாரண மத மழை சிந்தின வாசிகள் கிளர் ஒளி பொங்கின
பூரண கலசம் மலிந்தன பூ மழை மகளிர் பொழிந்திடும்
தோரண மருகு புகுந்தது தோழர்கள் நடவிய குஞ்சரம் 13.1.23

4252

அரிவையர் தெருவில் நடம் பயில் அணி கிளர் தளிர் அடி தங்கிய
பரிபுர ஒலிகள் கிளர்ந்தன பணை முரசு ஒலிகள் பரந்தன
சுரிவனை நிரைகள் முரன்றன துணைவர்கள் இருவரும் வந்து அணி
விரிதரு பவன நெடும் கடை விறல் மத கரியின் இழிந்தனர் 13.1.24

4253

தூ நறு மலர் தரளம் பொரிதூவி முன் இரு புடையின் கணும்
நான் மறை முனிவர்கள் மங்கல நாம நன்மொழிகள் விளம்பிட
மேல் நிறை நிழல் செய வெண் குடை வீசிய கவரி மருங்கு உற
வானவர் தலைவரும் நண்பரும் மாளிகை நடுவு புகுந்தனர் 13.1.25

4254

அரியணை அதனில் விளங்கிட அடல் மழ விடை என நம்பியை
வரிமலர் அமளி அமர்ந்திட மலையர்கள் தலைவர் பணிந்து பின்
உரிமை நல் வினைகள் புரிந்தன உரை முடிவில என முன் செய்து
பரிசனம் மனம் மகிழும்படி பல பட மணி நிதி சிந்தினர் 13.1.26

4255

இன்ன தன்மையில் உதியர்கள் தலைவர்தாம் இடர் கெட முனைப்பாடி
மன்னர் தம் உடன் மகிழ்ந்து இனிது உறையும் நாள் மலை நெடு நாடுஎங்கும்
பன்னகம் புனை பரமர் தம் திருப்பதி பல உடன் பணிந்து ஏத்திப்
பொன் நெடும் தட மூது எயில் மகோதையில் புகுந்தனர் வன்தொண்டர் 13.1.27

4256

ஆய செய்கையில் நாள் பல கழிந்தபின் அரசர்கள் முதல் சேரர்
தூய மஞ்சனத் தொழில் இனின் தொடங்கிடத் துணைவராம் வன்தொண்டர்
பாய கங்கை சூழ் நெடும் சடைப் பரமரைப் பண்டுதாம் பிரிந்து எய்தும்
சேய நல்நெறி குறுகிடக் குறுகினார் திருவஞ்சைக் களம் தன்னில் 13.1.28

4257

கரிய கண்டர் தம் கோயிலை வலம் கொண்டு காதலால் பெருகு அன்பு
புரியும் உள்ளத்தர் உள்ளணைந்து இறைவர் தம் பூம் கழல் இணை போற்றி
அரிய செய்கையில் அவனியில் விழுந்து எழுந்து அலைப்புறும் மனை வாழ்க்கை
சரியவே தலைக்குத் தலை மாலை என்று எடுத்தனர் தமிழ் மாலை 13.1.29

4258

எடுத்த அத்திருப் பதிகத்தின் உள் குறிப்பு இவ்வுலகினில் பாசம்
அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டும் என்று அன்பர் அன்பினில் பாடக்
கடுத்த தும்பிய கண்டர் தம் கயிலையில் கணத்தவருடன் கூடத்
தடுத்த செய்கைதான் முடிந்திடத் தங்கு அழல் சார்பு தந்து அளிக்கின்றார் 13.1.30

4259

மன்றலந் தரு மிடைந்த பூம் கயிலையில் மலை வல்லியுடன் கூட
வென்றி வெள்விடைப் பாகர் தாம் வீற்று இருந்து அருளிய பொழுதின் கண்
ஒன்று சிந்தை நம் ஊரனை உம்பர் வெள் யானையின் உடன் ஏற்றிச்
சென்று கொண்டு இங்கு வாரும் என்று அயன்
முதல் தேவர் கட்கு அருள் செய்தார் 13.1.31

4260

வான நாடர்கள் அரி அயன் முதலினோர் வணங்கி முன் விடை கொண்டு
தூ நலம் திகழ் சோதி வெள்ளானையும் கொண்டு வன் தொண்டர்க்குத்
தேன் அலம்பு தண் சோலை சூழ் மாகோதையில் திருவஞ்சைக் களம் சேரக்
கானிலங் கொள வலம் கொண்டு மேவினார் கடிமதில் திருவாயில் 13.1.32

4261

தேவர் தங்குழாம் நெருங்கிய வாய்தலில் திருநாவல் ஊரர்தம்
காவல் மன்னரும் புறப்பட எதிர்கொண்டு கயிலை வீற்று இருக்கின்ற
பூவலம்பு தண் புனல் சடை முடியவர் அருளி இப் பாடு என போற்றி
ஏவல் என்றபின் செய்வது ஒன்று இலாதவர் பணிந்து எழுந்து எதிரேற்றார் 13.1.33

4262

ஏற்ற தொண்டரை அண்டர் வெள்ளானையின் எதிர் வலம் கொண்டு ஏற்ற
நாற்றடங் கடல் முழக்கு என ஐவகை நாதம் மீது எழுந்து ஆர்ப்பப்
போற்றி வானவர் பூமழை பொழிந்திடப் போதுவார் உயிர் எல்லாம்
சாற்றும் மாற்றங்கள் உணர் பெரும்
துணைவரை மனத்தினில் கொடு சார்ந்தார் 13.1.34

4263

சேரர் தம்பிரான் தோழர் தஞ்செயல் அறிந்து அப்போதே
சார நின்றதோர் பரியினை மிசைக் கொண்டு திருவஞ்சைக் களம்சார்வார்
வீர வெண் களிறுகைத்து விண்மேல் செலும் மெய்த்தொண்டர் தமைக் கண்டார்
பாரில் நின்றிலர் சென்றதம் மனத்தொடு பரியும் முன் செலவிட்டார் 13.1.35

4264

விட்ட வெம்பரிச் செவியினில் புவி முதல் வேந்தர் தாம் விதியாலே
இட்டமாம் சிவ மந்திரம் ஓதலின் இரு விசும்பு எழப் பாய்ந்து
மட்டலர்ந்த பைந் தெரியல் வன் தொண்டர் மேல் கொண்ட மாதங்கத்தை
முட்ட எய்தி வலம் கொண்டு சென்றது மற்று அதன் முன்னாக 13.1.36

4265

உதியர் மன்னவர் தம் பெரும் சேனையின் உடன் சென்ற படைவீரர்
கதிகொள் வாசியில் செல்பவர் தம்மைத்தங்கட்புலப்படும் எல்லை
எதிர் விசும்பினில் கண்டு மின் கண்டிலர் ஆதலின் எல்லாரும்
முதிரும் அன்பினில் உருவிய சுரிகையால் முறை முறை உடல் வீழ்ந்தார் 13.1.37

4266

வீரயாக்கையை மேல் கொண்டு சென்று போய் வில்லவர் பெருமானைச்
சார முன் சென்று சேவகம் ஏற்றனர் தனித் தொண்டர்மேல் கொண்ட
வாரும் மும் மதத்து அருவி வெள்ளானைக்கு வயப் பரி முன் வைத்துச்
சேரர் வீரரும் சென்றனர் மன்றவர் திருமலைத் திசை நோக்கி 13.1.38

4267

யானை மேல் கொண்டு செல்கின்ற பொழுதினில் இமையவர் குழாம் என்னும்
தானை முன் செலத் தானெனை முன் படைத்தான் எனும் தமிழ் மாலை
மானவன் தொண்டர் பாடி முன் அணைந்தனரர் மதி நதி பொதி வேணித்
தேன் அலம்பு தண் கொன்றையார் திருமலைத் தென்திசைத் திருவாயில் 13.1.39

4268

மாசில் வெண்மை சேர் பேர் ஒளி உலகு எலாம் மலர்ந்திட வளர் மெய்ம்மை
ஆசில் அன்பர் தம் சிந்தை போல் விளங்கிய அணி கிளர் மணிவாயில்
தேசுதங்கிய யானையும் புரவியும் இழிந்து சேண் இடைச் செல்வார்
ஈசர் வெள்ளி மா மலைத் தடம் பல கடந்து எய்தினார் மணிவாயில் 13.1.40

4269

அங்கண் எய்திய திரு அணுக்கன் திரு வாயிலின் அடல் சேரர்
தங்கள் காவலர் தடை உண்டு நின்றனர் தம்பிரான் அருளாலே
பொங்கு மா மதம் பொழிந்த வெள்ளானையின் உம்பர் போற்றிடப் போந்த
நங்கள் நாவலூர் காவலர் நண்ணினார் அண்ணலார் திருமுன்பு 13.1.41

4270

சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்து எழுந்து சேண் இடை விட்டு
அகன்று கோவினைக் கண்டு அணைந்தது எனக் காதலின் விரைந்து எய்தி
நின்று போற்றிய தனிப் பெரும் தொண்டரை நேர் இழை வலப் பாகத்து
ஒன்றும் மேனியர் ஊரனே வந்தனை என்றனர் உலகுய்ய 13.1.42

4271

அடியனேன் பிழை பொறுத்து எனை ஆண்டு கொண்ட தொடக்கினை நீக்கி
முடிவிலா நெறி தரும் பெரும் கருணை என் தரத்ததோ என முன்னர்
படியும் நெஞ்சொடு பல் முறை பணிந்து எழும் பரம்பரை ஆனந்த
வடிவு நின்றது போன்று இன்ப வெள்ளத்து மலர்ந்தனர் வன் தொண்டர் 13.1.43

4272

நின்ற வன் தொண்டர் நீர் அணி வேணிய நின் மலர்க் கழல் சாரச்
சென்று சேரலன் திரு மணி வாயிலின் புறத்தினன் எனச் செப்ப
குன்ற வில்லியார் பெரிய தேவரை சென்று கொணர்க என அவர் எய்தி
வென்றி வானவர்க்கு அருளிப்பாடு என அவர் கழல் தொழ விரைந்து எய்தி 13.1.44

4273

மங்கை பாகர் தம் திரு முன்பு சேய்த்து ஆக வந்தித்து மகிழ்வு எய்திப்
பொங்கும் அன்பினில் சேரலர் போற்றிடப் புதுமதி அலைகின்ற
கங்கைவார் சடைக் கயிலை நாயகர் திருமுறுவலின் கதிர் காட்டி
இங்கு நாம் அழையாமை நீ எய்தியது என் என அருள் செய்தார் 13.1.45

4274

அரசர் அஞ்சலி கூப்பி நின்று அடியனேன் ஆரூரர் கழல் போற்றிப்
புரசை யானை முன் சேவித்து வந்தனன் பொழியும் நின் கருணைத் தொண்டு
இரை செய் வெள்ளமுன் கொடுவந்து புகுதலின் திருமுன்பு வரப் பெற்றேன்
விரைசெய் கொன்றை சேர் வேணியாய்
இனியொரு விண்ணப்பம் உளது என்று 13.1.46

4275

பெருகு வேதமும் முனிவரும் துதிப்பு அரும் பெருமையாய் உனை அன்பால்
திருஉலாப் புறம் பாடினேன் திருச்செவி சாத்திடப் பெற வேண்டும்
மருவு பாசத்தை அகன்றிட வன்தொண்டர் கூட்டம் வைத்தாய் என்ன
அருளும் ஈசரும் சொல்லுக என்றனர் அன்பரும் கேட்பித்தார் 13.1.47

4276

சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த திருஉலாப் புறம் கொண்டு
நாரி பாகரும் நலம் மிகு திரு அருள் நயப்புடன் அருள் செய்வார்
ஊரன் ஆகிய ஆலால சுந்தரன் உடன் அமர்ந்து இருவீரும்
சார நங்கண் நாதராம் தலைமையில் தங்கும் என்று அருள் செய்தார் 13.1.48

4277

அன்ன தன்மையில் இருவரும் பணிந்து எழுந்து அருள் தலை மேல் கொண்டு
மன்னும் வன்தொண்டர் ஆலால சுந்தரர் ஆகித் தாம் வழுவாத
முன்னை நல்வினைத் தொழில் தலை நின்றார் முதல் சேரர் பெருமானும்
நன்மை சேர் கண நாதராய் அவர் செயும் நயப்பு உறு தொழில் பூண்டார் 13.1.49

4278

தலத்து வந்துமுன் உதயம் செய் பரவையார் சங்கிலியார் என்னும்
நலத்தின் மிகக் கவர் வல்வினைத் தொடக்கற நாயகி அருளாலே
அலத்த மெல்லடிக் கமலினியாருடன் அனிந்தை யாராகி
மலைத் தனிப் பெருமான் மகள் கோயிலில் தம் தொழில் வழிநின்றார் 13.1.50

4279

வாழி மாதவர் ஆலால சுந்தரர் வழி இடை அருள் செய்த
ஏழிசைத் திருப்பதிகம் இவ்வுலகினில் ஏற்றிட எறி முன்நீர்
ஆழி வேந்தன் ஆம் வருணனுக்கு அளித்திட அவனும் அவ் அருள் சூடி
ஊழியில் தனி ஒருவர் தம் திருவஞ்சைக்
களத்தில் உய்த்து உணர்வித்தான் 13.1.51

4280

சேரர் காவலர் விண்ணப்பம் செய்த அத் திருஉலாப் புறம் அன்று
சாரல் வெள்ளியங்கயிலையில் கேட்ட மா சாத்தனார் தரித்து இந்தப்
பாரில் வேதியர் திருப்பிடவூர் தனில் வெளிப்படப் பகர்ந்து எங்கும்
நார வேலை சூழ் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே 13.1.52

4281

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான் புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம் 13.1.53

திருச்சிற்றம்பலம்

வெள்ளானைச் சருக்கம் முற்றிற்று.

இரண்டாம் காண்டம் முற்றிற்று.

பெரிய புராணம் முற்றிற்று.